உ

ஜாதககணிதம் மூன்றும்பாகம்

என்னும்

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

மலர் 1

(Astrological Dogmas employed in Nadi Granthas.)

இது சமஸ்கிருத சுக்கிரநாடி, கேரளநாடி, துருவநாடி, சத்தியசம்ஹிதை, பிருகு சம்ஹிதை, சர்வசங்கிரஹ நாடி, யோகநாடி முதலிய நாடிக்கிரந்தங்களில் ஜாதக பலாபலன்களை நிர்ணயஞ்செய்ய உபயோகப்படுத்தியுள்ள மூலக்கிரந்தங்களின் விதிகளின் திரட்டு.

இது சென்னை முத்தியாலுப் பேட்டை [illegible] உபாத்தியாயராயிருந்தவரும் கணித சாஸ்திரத்தில் பி. ஏ. பட்டம்வகித்தவரும், ஆனந்த போதினி சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும், இராஜ ஜோதிட கணிதம், ஜாதக கணிதம் ஓராம்பாகம் என்ற ஜோதிட கிரகசட்பலம் ஆயுள்கணிதம், ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயம், இவைகளின் ஆசிரியரும் பிருஹத்ஜாதகத்தின் பதிப்பாசிரியருமாகிய

C. G. ராஜன் B. A. (*Mathematics*)

அவர்களால் எழுதப்பட்டது.

கிடைக்கும் இடம்:—C. விஸ்வநாதம் அண்டு கம்பெனி
நெ.7, வெங்கிடேச மேஸ்திரி தெருவு, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம் சமீபம், சௌகார்பேட்டை போஸ்ட்டு, மதறாஸ்.

1939

All Rights Reserved

முதல் பதிப்பு] சென்னை [விலைரூ. **3--4--0**

ஜாதக கணிதம் மூன்றாம்பாகம

என்னும்

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

மலர் 1

(Astrological Dogmas employed in Nadi Granthas.)

இது சமஸ்கிருத சுக்கிரநாடி, கேரளநாடி, துருவநாடி, சத்தியசம்ஹிதை, பிருகு சம்ஹிதை, சர்வசங்கிரஹ நாடி, யோகநாடி முதலிய நாடிக்கிரந்தங்களில் ஜாதக பலாபலன்களை நிர்ணயஞ்செய்ய உபயோகப்படுத்தியுள்ள மூலக்கிரந்தங்களின் விதிகளின் திரட்டு.

இது சென்னை முத்தியாலுப் பேட்டை ஐஸ்கூலில் சைன்ஸ் உபாத்தியாயராயிருந்தவரும் கணித சாஸ்திரத்தில் பி. ஏ. பட்டம்வகித்தவரும், ஆனந்த போதினி சுத்த திருக் கணித பஞ்சாங்க கணிதரும், இராஜ ஜோதிட கணிதம், ஜாதக கணிதம் ஓராம்பாகம் என்ற ஜோதிட கிரகசட்பலம் ஆயுள்கணிதம், ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயம், இவைகளின் ஆசிரியரும் பிருஹத்ஜாதகத்தின் பதிப்பாசிரியருமாகிய

C. G. ராஜன் B. A. (*Mathematics*)

அவர்களால் எழுதப்பட்டது.

கிடைக்கும் இடம் :—C. விஸ்வநாதம் அண்டு கம்பெனி
நெ.7, வெங்கிடேச மேஸ்திரி தெருவு, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம் சமீபம், சௌகார்பேட்டை போஸ்ட்டு, மதருஸ்.

1939

All Rights Reserved

முதல் பதிப்பு]　　சென்னை　　[விலை ரூ. **3--4--0**

உ

கடவுள் துணை

இது

ஜாதக கணிதம் மூன்றும் பாகம்

என்னும்

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

மலர் 1.

(Astrological Dogmas employed in Nadi Granthas.)

இதில் மேஷம் முதல் மீனம் வரையிலு முள்ள ஒவ்வொரு லக்கினத்திற்கும் நூற்றருபத்தைந்து முதல் இருநூற்றறுபத்து நான்கு வரையிலுமுள்ள விதிகள் அதாவது மொத்தத்தில் இரண்டாயிரத்து ஐந்நூற்றி பதினொன்றுவித கிரக அமைப்பு விதிகளும் அவைகளால் உண்டாகக்கூடிய பலாபலன்களும் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஜாதகனுடைய சர்வபலன்களும், அவனுடைய தாய் தகப்பன், அவனுடைய சகோதர சகோதரி, அவனுடைய தகப்பனுடைய சகோதர சகோதரி, அவனுடைய அம்மான், அவனுடைய மாற்றாந்தாய், அவனுடைய மாற்றாந்தாயின் புத்திரபுத்திரிகள், அவனுடைய மாமனார் ஆகிய இவர்களுடைய பலன்களும் அந்தந்த ஆதிபத்திய காரக கிரக நிலைகளையுங் கிரக பார்வையையும் கிரக சம்மந்தத்தையும் அனுசரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பலா பலன்கள் விருத்த வசிஷ்டர், பராசர், நாரதர், காசிபர், ஜெயமுனி, கர்கர், பிருகு, சத்தியாச்சாரி, மனு, விஷ்ணு, ஈஸ்வரர், யவனர், மயன் இவர்கள் கொள்கைபடி கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இது

C. G. ராஜன் B. A., (*Mathematics*)

அவர்களால் எழுதப்பட்டது

சென்னை.

All Rights Reserved] 1939 [*Indian Edition*.

முன்னுரை.

இப்புத்தகம் என்னுடைய "ஜாதககணிதம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்" என்ற புத்தகத்தினுடைய மூன்றும் பாகம் ஆகும். மேலும் இது ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்னும் ஜாதகப் பலாபலன்கள்நிர்ணயம்" என்ற என்னுடைய புத்தகத்தில் ஏழாவது அத்தியாயம் 116-வது அயிட்டமாகிய "துவாதச லக்கின ஜாதகப் பலன்கள்" என்ற பகுதியின் துடர்ச்சியாகும். இப்போது ஜோதிட கிரந்தங்கள் அனேக கிரந்தங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளில் கிரகங்களின் நிலையை மேஷ லக்கினம் ரிஷப லக்கினம் முதலிய துவாதச லக்கினங்கள் ரீதியாய் அனுசரித்துச் சொல்லாமல் அதாவது லக்கினம் இன்ன ராசியிலிருக்கின்றதென்று குறிக்காமல் பொதுவாய் லக்கினத்திற்கு இத்தனையாவது வீட்டில் அல்லது பாவத்தில் அல்லது ராசியில் கிரகம் இருந்தால் இந்த இந்த பலன்கள் நேரிடும் என்றுசொல்லிஇருக்கின்றது. லக்கினத்தை இன்ன லக்கினம் என்று நிர்ணயித்து விட்டால் கிரகங்களின் ஆதிபத்தியமும் சுபா அசுப குணங்களும் தானகவே நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன; அப்போது கிரகங்கள் தங்கள் தங்களுடைய நிலையையும் பார்வையையும் சம்மந்தத்தையும் அனுசரித்துக் கொடுக்கும் பலன்கள் அந்தக் குறித்த லக்கினம் வரையிலும் ஸ்திரமாகவும் துல்லிபமாகவும் அமையப்படுகின்றன. இவ்விதமாக லக்கினம் இன்னராசியிலிருக்கின்றது என்பதைக் குறிக்காமல் பொதுவாய்ப் பலன் சொல்லத் துணிவோமானல் கிரகங்களின் ஆதிபத்தியமும் சுபா அசுப குணங்களும் தானகவே நிர்ணயிக்கப்படாமல் போய்விடுவதால் ஜோதிடர்கள் அந்தந்த கிரகத்தின் ஆதிபத்தியத்தையும் சுபா அசுப குணங்களையும் தாங்களே நிர்ணயஞ்செய்து அதனல் பலாபலன்களில் ஏற்படும் பேதாபேதங்களைச் சிரமப்பட்டு தாங்களே நிர்ணயஞ்செய்ய வேண்டியதாயிருக்கும். இத்தகைய சிரமத்தை நீக்கும் பொருட்டும், ஜோதிடர்கள் தாங்களே நிர்ணயஞ்செய்வதில் தவறுகள் ஏற்படக்கூடுமாகையால் அத்தவறுகள் நேரிடாமலிருக்கும் பொருட்டும் நமது மகரிஷிகள் தங்களுடைய கிரந்தங்களில் லக்கினத்தை நிர்ணயஞ் செய்தும், அப்படி நிர்ணயஞ் செய்வதாலுண்டாகும் கிரகங்களின் ஆதிபத்தியத்தையும் சுபா அசுபகுணங்களையும் அனுசரித்தும் பலாபலன்கள் சொல்லியிருக்கின்றூர்கள்.

(2) இவ்வித பலாபலன்கள் அடங்கியுள்ள கிரந்தங்களில் பெரும்பான்மையான கிரந்தங்கள் அழிந்துபோய் விட்டபடியால் இப்போது அவை ஓலையிலாவது அல்லது காகிதத்திலாவது கிடைப்பது அபூர்வ

மாகவிருக்கின்றது. மேலும் அக்கிரந்தங்களில் தற்காலம் அகப்படக் கூடிய சிற்சில கிரந்தங்கள் ஓலையில் எழுதப்பட்டு சில குடும்பங்களில் தங்களால் மாத்திரம் உபயோகப்படுத்தப்பட்டும் உபயோகப் படுத் தப்படாமல் செல்லுக்கும், பாச்சைக்கும் இறையாக இருப்பதாலும் அவை பொதுஜனங்களுக்குக்கிடைப்பது மிகவும்அரிதாயிருக்கின்றது. அழிந்து போய்விட்ட கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விதிகள் நாடிக்கிரந்தங்களில் மேற்கோளாக அதாவது பிரமாண வாக்கியங்க ளாக (Authority)க் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித நாடிகள் "சுக்கிர நாடி, கேரள நாடி, துருவ நாடி, சத்தியசம்ஹித நாடி, பிருகு சம்ஹிதை நாடி, சர்வசங்கிரஹ நாடி, யோக நாடி" என பெயரிட்டு வழங்கி வருகின்றன. இந்த நாடிகள்கூட பொது ஜனங்களுக்கு அகப் படாமல் சிலரிடத்திலிருப்பதாலும், இவைகள் சமஸ்கிருத பாஷையில் இருப்பதாலும் அனேகருக்குப் பயன்படாமல் இருக்கின்றன. இந்த நாடிகளில் விவரித்திருக்கும் பலாபலன்களுக்கு ஆதாரமாக சில மக ரிஷிகளையும் பூர்வீக கிரந்த கர்த்தர்களையும் கிரந்தங்களையும் இந்த நாடி களில் குறித்திருக்கின்றது. இப்படிக் குறிக்கப்பட்ட மகரிஷிகளும் கிரந்த கர்த்தர்களும் விருத்தவசிஷ்டர், பராசர், நாரதர், காசிபர், ஜெய முனி, கர்கர், பிருகு, சத்தியாச்சாரி, மனு, விஷ்ணு, ஈசுவரர், யவனர், மயன் முதலானவர்களாவர். இப்படிக் குறிக்கப்பட்ட கிரந்தங்கள் சூரிய நாடி, சந்திர நாடி, குஜ நாடி, புத நாடி, குரு நாடி, சனி நாடி, சாம்பசிவ நாடி, கார்கிய நாடி, ஜம்புநாதீயம், கர்மயோக பலாத்யாயம் லக்கினதிபதி நாடி, பாவநாடிகள், காலார்ணவம் முதலியவைகளாகும். ஆகையால் மேற்சொல்லிய நாடிகளில் ஆதாரமாகக் கொடுக்கப்பட் டுள்ள விதிகள் மேற்சொல்லிய மகரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டும் கிரந்த கர்த்தர்களால் தங்கள் காலங்களில் தங்களுக்குக் கிடைத்த மட்டும் திரத்தப்பட்டும் உபயோகப்படுத்தப்பட்டு வந்துள்ள விதிக ளாகும். இவ்வித விதிகள் லக்கினவாரியாக ஒன்ருய்த் திரட்டிச் சேர்க்கப்பட்டு இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது தான் நான் இப்புத்தகத்தில் புதியதாய்ச் செய்திருக்கும் என்னுடைய சொந்த விஷயமாகும். மீதி எல்லா விஷயங்களும் நமது முன்னேர்க ளால் செய்யப்பட்ட விஷயங்களே என்று அறிய வேண்டியது.

(3) இப்புத்தகத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள நாடி அம்சங் களைக் கணிக்கும் விதம் எனது "ஜாதக கணிதம் இரண்டாம் பாகமா கிய ஜாதக பலாபலன்கள் நிர்ணயம்" என்ற புத்தகத்தில் ஏழாவது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதையும் வாசிக்கவும்.

நாடிக் கிரந்தங்களில் லக்கினம், கிரகங்கள் இவைகள் இருக்கும் நாடி அம்சங்களைக் கொண்டு பலாபலன்களைத் துல்லிபமாகச் சொல்லியிருக்கின்றார்கள். நாடி அம்சங்களின் உதவியால் பெரும்பாலும் ஜாதகன் பிறந்த இடத்தின் நகரச்சிறப்பு, ஜாதகனுடைய குலத்தின் ஜாதி, ஜாதகன் இத்தனையாவது பிறவி என்பது, ஜாதகனுடைய சகோதர சகோதரியின் சங்கியை முதலிய துல்லிபமான அம்சங்கள் நாடிக்கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்தின் நாடி அம்சமும் விதிகளில் கொடுக்கப்பட்டுள்ள நாடி அம்சமும் சரிபட்டுவந்தால் ஸ்தூல பலன்களும்(broad details)அதிக விபரமான (minute details) பலன்களும் நாடிக்கிரதங்களில் உபயோகப்படுத்தப்பட்டு இந்தப் புத்தகத்தில் திரட்டிக் கொடுக்கப்பட்ட விதிகளில் சொல்லியபடி துல்லிபமாயிருக்கும். அப்படி நாடி அம்சம் சரிபடாவிட்டால் நாடி அம்சத்தில் ஏற்படும் வித்தியாசத்திற்குத் தகுந்தபடி துல்லிபமான பலாபலன்கள் கொஞ்சம் மாறுதலடையும். ஆயினும் கிரகயோகங்கள் சரியாக அமையப்பட்டு நாடி அம்சங்கள் மாத்திரம் வித்தியாசப்பட்டால் ஸ்தூலபலாபலன்கள் (i.e broad details)கூடியமட்டும் சரியாயிருக்கும் என்ற காரணத்தைக்கொண்டே நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்ட மேற்கோள்களாகிய மூலக் கிரந்தங்களின் விதிகள் இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதிகளில் சொல்லியகிரக நிலை கிரக திருஷ்டி, கிரகசம்மந்தம் முதலியவைகள் பிரகாரமே நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்தில் அமைந்தால் இவ்விதிகளில் சொல்லிய பலாபலன்கள் சரிபட்டு வரும், அப்படிக்கன்றி விதிகளில் சொல்லியதற்கு அதிகமாகக் கிரகசம்பந்தமாகிலும் அல்லது கிரகபார்வையாகிலும் இருந்தால் இந்த அதிக கிரக சம்மந்தத்தாலும் அல்லது அதிக கிரக பார்வையாலும் பலாபலன்களில் உண்டாகும் பேதங்களையும் ஆலோசித்து சரிபடுத்தி ஒழுங்கு படுத்திப் பலாபலன்களைச் சாமர்த்தியமாயும் திறமையாயும் யூகித்துச் சொல்லவேண்டும். நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்திலுள்ள கிரக அமைப்புகள் பல விதிகளில் பொருந்தி சரிபட்டு வருமாகில் அதாவது சில கிரக அமைப்பு ஒரு விதியிலும், இன்னஞ் சில கிரக அமைப்பு இன்னொரு விதியிலும், இன்னஞ்சில கிரக அமைப்பு இன்னொரு விதியிலும் பொருந்தி சரிபட்டு வருமாகில் இந்த மூன்றுவித விதிகளில் சொல்லியுள்ள பலாபலன்களை ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டு இப்பலாபலன்களை ஒன்று தட்டி ஒழுங்கு படுத்தி நிகர பலாபலன்களை யூகித்துச் சொல்லத்துணியவேண்டும். இதுதான் ஜோதிடர்களுடையத் திறமையாகும்.

இப்புத்தகத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள விஷயங்கள் பல கிரந்தங்களில் இருந்து சேகரிக்கப்பட்டு இருக்கின்றன. இக் கிரந்தங்கள் மிகவும் அருமையானதால் இவைகள் எனக்குக் கிடைப்பதற்காகச் சிலகனவான்களுடைய சகாயத்தை நான் கோரலாயிற்று. அவர்களில் எனக்கு முக்கியமாகவும் விசேஷமாகவும் கிரந்தங்கள் கிடைக்கும்படியாய் மிக்க அன்புடன் சகாயம் செய்தவர்கள் முறையே (1) கனம் பிரம்மஸ்ரீ. R. கிருஷ்ண மாச்சாரியார் அவர்கள். B. A. B. L., ரிட்டயர்ட்டு அட்வகேட், மதரூஸ். (2) கனம் பிரம்மஸ்ரீ டாக்டர். G. ஸ்ரீனிவாசமூர்த்தி அவர்கள் B. A., B. L., M. B. & CM, Vaidya Ratna, ஆனரெரி டைரெக்டர் அடையார் தியஸாபிக்கல் லைப்ரரி (3) கனம் வித்தியாசாகர வித்தியாவாஸஸ்பதி பிரம்மஸ்ரீ. P. P. சுப்பிரமண்ய சாஸ்திரியார் அவர்கள் B. A. (Oxon), M. A. Madras, சான்ஸ்கிரிட் புரொப்பெஸர் பிரசிடென்சி காலேஜ், கூரேடர், ஓரியண்டல் லைப்ரரி சென்னை. எனக்குப் புத்தகங்கள் கிடைக்கும் படியாய் உதவி செய்ததற்காக இவர்களுக்கு நான் என்னுடைய அன்பார்ந்த வந்தனத்தை மிகவும் வணக்கத்துடன் அளிக்கின்றேன். இந்தப் புத்தகத்திற்குத் தேவையான விஷயங்களைச் சேகரிப்பதிலும், எழுத்துப் பிரதி (காப்பி) எடுப்பதிலும், இப்புத்தகத்தை வெளியிடுவதிலும் என் திரவிய சகாயம் பெற்றுக் கொண்டு எனக்கு உதவி புரிந்த (1) சமஸ்கிருத பண்டிதர் ஜோஷியம் கோபாலாச்சாரியாருக்கும், (2) ஜோஷியம் ஒ. பி. லக்ஷ்மி நரசிம்மாசாரியாருக்கும் என்னுடைய வந்தனத்தை அளிக்கின்றேன். அடையார் தியசாபிக்கல் லைப்ரரி ஸ்டாப் (Staff) உத்தியோகஸ்தர்களுக்கும் ஓரியண்டல் லைப்ரரி ஸ்டாப் (Staff) உத்தியோகஸ்தர்களுக்கும் ஷை லைப்ரரிகளிலுள்ள புத்தகங்களை உபயோகஞ் செய்யும் விஷயத்தில் அவர்களுடைய அன்பிற்காக என்னுடைய வந்தனத்தை அளிக்கின்றேன்.

மேலும் எனக்குக் கிடைத்த கிரந்தங்கள் ஓலையிலும் காகிதத்திலும் எழுதப்பட்டு இருந்தன. சில கிரந்தங்கள் நல்ல ஸ்திதியில்லாமலும் எழுத்துகள் நன்ருய்த் தெரியாமலும் இருந்தன. அதனல் எழுத்துப்பேதங்களும் அர்த்தபேதங்களும் உண்டாவதற்குச் சகஜமாயிருந்தது. மேலும் சமஸ்கிருத ஜோதிடபதங்கள் ஒரு எழுத்து வித்தியாசத்தால் பற்பல அர்த்தங்கள் கொடுக்கும்தன்மையாயிருப்பதாலும், ஒரே பதத்திற்குப் பற்பல அர்த்தங்களிருப்பதாலும் விஷய அர்த்த பேதங்கள் ஏற்படுவது சகஜம். ஒறே விஷயம் நமக்குக் கிடைத்த கிரந்தங்களில் வித்தியாசம் இல்லாமலும் கொஞ்சம் வித்தியாசத்துடனும்

சொல்லப் பட்டிருக்கிறது. இவ்வித காரணங்களினால் சில மொழிப் பெயர்ப்பு தவறுதல்களும் சொன்னவிஷயத்தை இன்னொரு விடத்தில் வித்தியாசமின்றியும் வித்தியாசத்துடனும் சொல்லுதலும் நேரிட்டு விட்டன. இவ்விதத்தவறுதல்களைத் திருத்திச் சரியான மொழிபெயர்ப்பு விஷயம்"விளக்கமும் குறிப்பும் திருத்தமும் முதலியன" என்றவகுப்பில் புத்தகத்தின் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதத் தவறுதல்களையும், எழுத்துப்பிழை சொற்பிழை முதலியவைகளிருந்தால் அவைகளையும் மன்னித்து இத்தப் புத்தகத்திலுள்ள சாராம்சத்தை ஏற்றுக்கொண்டு இந்தப் புத்தகத்தை ஆமோதிக்கும்படியாய் இதை வாசிக்கும் பெரியோர்களையும் சிறியோர்களையும் மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்கின்றேன். இப்புத்தகத்தைப் படித்துப்பலா பலன்களைச் சொல்ல ஆரம்பிப்பதற்கு முந்தி சிரமத்தைப்பாராட்டாமல் இப்புத்தகத்தில் முதலில் கொடுத்துள்ள "பிழை திருத்தம்" கடைசியில் கொடுத்துள்ள "விளக்கமும் குறிப்புகளும் முதலியன" என்பவைகளில் உள்ளப் பிழைகளை முக்கியமாய்த் திருத்திக் கொள்ள வேணுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு லக்கினத்திற்கும் நூற்றருபத்தைந்து முதல் இருநூற்றறுபத்து நான்கு விதிகள் வரையிலும் அதாவது மொத்தத்தில் இரண்டாயிரத்து ஐந்நூற்று பதினொன்று விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவுமன்றி ஜாதக கணிதம் இரண்டாம் பாகத்தில் மேஷ லக்கினத்திற்குரிய விதிகள் அறுபது விதிகள் ஏழாவது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுமன்றி என்னிடத்தில் துவாதச லக்கினங்களுக்குரிய விதிகள் அனேக ஆயிரக் கணக்காக விருக்கின்றன. இந்தப் புத்தகம் ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாக விருக்கும் என்று சில நன்பர்கள் எனக்குத் தெரிவித்ததாலும் நானும் அவ்விதமாகவே அபிப்பிராயப் பட்டதாலும் இப்புத்தகத்தை அதிக திரவியஞ் செலவு செய்து வெளியிடத் துணிந்தேன். இந்த அபிப்பிராயம் பிரகாரமே இப்புத்தகம் ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாக விருக்கும் என்று இதை வாசிக்கும் ஜோதிடர்களும் மற்று முள்ளவர்களும் எனக்குத் தெரிவிக்குப் பட்சத்தில் என்னிடத்திலுள்ள மீதி விதிகளையும் நான்காவது ஐந்தாவது முதலிய பாகங்களில் அச்சிட்டு வெளியிடப்படும். மேலும் இப்புத்தகத்தை இன்னம் விருத்தி செய்வதற்காக யாராகிலும் தெரியப்படுத்தும் அபிப்பிராயங்களை மிகுந்தவந்தனத்துடன் அங்கீகாரஞ் செய்வ

துடன் அவ்வபிப்பிராயங்களுக்கிணங்க விருத்திகளை அடுத்தப் பதிப்பில் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

20—2—1939
நெ. 7. வெங்கடேச மேஸ்திரி தெருவு,
கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம் அருகில்.
சௌகார்பேட்டை போஸ்ட், சென்னை.
C. G. ராஜன் B. A.

விஷய அட்டவணை

—(***)—

விஷயம்		பக்கம்.
1. மேஷ லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	1
2. ரிஷப லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	37
3. மிதுன லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	83
4. கடக லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	127
7. சிம்மலக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	169
6. கன்னியா லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கன்	...	213
7. துலா லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	255
8. விருச்சிக லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	299
9. தனுசுலக்கின ஜாதக துவாதச பாவ பலன்கன்	...	339
10. மகரலக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	389
11. கும்பலக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	432
12. மீனலக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	480
13. கடின பதங்களின் விளக்கம் ...	...	521
14. யோக விளக்கம்	...	524
15. விளக்கமும் குறிப்புகளும் முதலியன ...	...	525

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	9	சிரகங்களுடன்	கிரகங்களுடன்
10	3	தடங்கள்	தடங்கல் [ஒரு
24	5	ஆயுளுடையவன் ஒரு	ஆயுளுடையவன். ஜாதகன்
25	7	துர்க கெதியே	துர்கெதியே
32	24	யயைந்து	யடைந்து
34	5	முடையவன்	முடையவள்
35	3	ஜீவன முடையவன்	ஜீவன முடையவள்
35	28	சுா பீதிவும்	சுா பீதியும்
36	24	ஜாதகன	ஜாதகன்
45	16	இறப்பவன்	இறப்பன்
57		தலைப்பிலுள்ள-மேஷம் அத்தியாயம் 1	"ரிஷபம் அத்தியாயம்1"
62	12, 13	சுபக்ஷேத்தித்தில்	சுப க்ஷேத்திரத்தில்
73	15	தீர்க்காளுடனும்	தீர்க்காயுளுடனும்
79	22	கூடி மூன்றுமிட	கூடி இருந்து மூன்றுமிட
79	23	சூரியனுடன் கூடி யிருக்கப்	சூரியனிருக்கப்
84	17	ஜாதகன் ஜென்ம	ஜாதகன் ஜெனித்த காலத்தில் ஜென்ம
89	20	பலனுயிருக்கப்	பலவானுயிருக்கப்
95	20	லக்கினுதியான	லக்கினுதிபதியான
98	34	க்தி முதலில்	புக்தி முதலில்
119	13	மரண மடைவான்	மரண மடைவாள்
138	12	ஸூதிகார	ஸூதிகா
141	21	பிரயக் தெசை	பிரத்தியக் தெசை
148	17	சுமமாக	சமமாக
155	22	மாமியார்	மாமனுர்
157	21	ரோகாயோக	ரேகாயோக
159	13	சிம்சுமார ஜெபம்	சிம்சுமார தானம்
162	4	மரலாம்சம்	மாலாம்சம்
168	10	சௌம்சாம்சம்	சௌம்யாம்சம்
179	7	சத்தன தாம்பூல	சந்தன தாம்பூல

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
184	19	போவவேயும்	போலவேயும்
185	19	பூர்வபாக பாவத்தில்	பூர்வ பாகத்தில்
186	33	சுபனுன	சுக
187	23	தாய் பாகமும்	தாய் பாக்கியமும்
190	15	சீமனுயிருப்பவன்	சீமானுயிருப்பவன்
190	21	ராஜ தந்திரிகளால்	ராஜ தந்திரிகளில்
218	5	பிரமையுடையவனுடனுவது	பிரமையுடையவளுடனுவது
220	2	வர்மம்	தர்மம்
221	28	சகோதர்	சகோதர
227	7	ஜாதகத்தாராதிபன்	ஸாதகத்தாராதிபன்
227	8	குருானுடைய	குரூரருடைய
228	16	பரட்டி	பாட்டி
230	3	சந்தி கேந்திரத்தில்	சந்திர கேந்திரத்தில்
232	1, 2	லக்கினத்தில்	லக்கினத்தின்
232	19	நீச்ச பாவத்தில்	நீச்ச மில்லாமல்
257	7	வைசிய	வேசி
		பக்கம் 267 முதல் 282 வரையிலுமுள்ள பக்கம் நெம்பர்களை 265, 266,...280என்று திருத்தவும்	
265	27	மாதுவம்சப்	மாதுருவம்சப்
270	16	செவ்வாயுன்	செவ்வாயுடன்
273	21	பிதுரு	பிதுருடைய
277	1	குரு	செவ்வாய்
277	3	குரு	செவ்வாய்
283	12	பலத்துடனிருக்கக் கூடியி[ருந்தால்	பலத்துடனிருந்தால்
285	26	தேவாயம்	தேவாலயம்
287	2	சனியும்	குருவும்
289	3	பிதுர்	ஜென்மாந்திர
289	5	அவனுக்கு	அவளுக்கு
291	2	சகோதரமுடையவன்	சகோதரன் சுகமுடையவன்
293	9	பரிப்பான்	மரிப்பான்
310	1	துலாம் விருச்சிகம்	விருச்சிகம்
311	15	சூரியன்	சந்திரன்
315	16	விணவி	மனைவி.
317	4	குஜனுடன் கூடி	குஜன்
317	19	எட்டம்	எட்டாம்
325	4	கூடினவள்	கூடினவன்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
325	20	புதனுடன் கூடி	புதன்
326	24, 25	புத்திரருடையன்வ	புத்திரருடையவன்
331	27	சுமங்கலியாய்	அவர்கள் சுமங்கலியாய்
342	22	பாத்தாம்	பத்தாம்
343	4	திசாந்தியத்தில்	அதன் பிறகு
344	29	கூடியவன்	கூடியவள்
347	23	அதாவது	அல்லது
350	32	வாணும்சம்	வாருணும்சம்
352	1	மாவது	த்தில்
353	1	ஜாதகன் ஜெனித்தவன் [யப்	ஜெனித்தவன் [னுக்குப்
359	2	சனிவரும் ஜாதகனுக்கு சப	சனிவருஞ் சமயம் ஜாதக
361	28	இருக்க அம்சத்தை	இருக்கும் அம்சத்தை
363	10	மாற்ருந்தாயுடையவள்	மாற்ருந்தாயுடையவன்
363	16	இதய நோயுடையவள்	இருதய நோயுடையவள்
364	24	நான்காம்	ஐந்தாம்
364	25	குரு	செவ்வாய்
364	26	மாதுரு காரகன்	புத்திர காரகன்
364	30	"புத்திரர்களுக்குச்" என் [பதை எடுத்து விடவும்.	
365	3	ஆகிப்	ஆகி
367	3	தனமுடையவன் என்பதை எடுத்து விடவும்	
368	17	அவனுடைய ஜென்ம	அவனுடைய தெசை ஜன்ம
373	10	செய்வான்	செய்வாள்
379	31	அரண்டாம்	இரண்டாம்
379	32	இத்தியாயம்	அத்தியாயம்
382	28	ஸாகாதாம்சம்	காதாம்சம்
383	4,9,13 16	,,	,,
384	20	தீர்க்காயுளுள்ளவளா யிருப்	தீர்க்காயுளுள்ளவனு யிருப் [பான்
385	17	ஜாதகனுக்கு [பாள்	ஜாதகன்
391	10	கட	கபடம்
394	6	ஜாதகனுடைய இவன்	ஜாதகனுடைய
396	28	மதாம்சத்தில்	கும்பாம்சத்தில்
397	11	சுக்கிரன்	சுக்கிரத்
397	12	இருந்தால்	பிறந்தால் [தாவது
397	28, 29	ஜர்தகன் இருபத்தோராவது	ஜாதகனுக்குப் பத்தொன்ப
398	13, 14	களத்திரகாரகனை சுக்கிரன்	புத்திரகாரகனை குரு

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
398	15	வருந்துவான்	வருந்துவாள்
398	16, 17	எட்டாமிடத்திலிருந்தால்	எட்டாமிடத்திற்குத் திரி கோணத்திலிருந்தால்
399	5	ஏழாம் பாவாதிபனைக்	ஐந்தாம் பாவாதிபனைக்
402	34	குரு சுக்கிரனுடன்	குரு சனியுடன் [ராகு
410	19	திசையாக ராகு	திசையாகக் கடகத்திலுள்ள
411	19	நதிகள் தங்கள்	நதிகள் நதங்கள்
418	26	கேந்திரத்திலிருக்கக்	கேந்திரத்தில்
422	16	முள்ளவனும்	முள்ளவளும்
429	12	புதனுடன் கூடி	புதனுடன் கூடியிருக்க
432	1, 2	ஓராம் பாவத்தில்	பூர்வ பாகத்தில்
432	11	சங்கமமுள்ள	சங்கமமுள்ளவன்
438	23	விரயாம்சத்தில்	விரையாம்சத்தில்
440	26	நாம் காம்	நான்காம்
451	18	சாக்ஷித்ய	சாஹித்ய
456	27	பஞ்சமத்தில்	பஞ்சம ஆரூடத்தில்
457	14	இரண்டாம் திசையில்	மூன்றும் திசையில்
460	2	சுக்கிரனால்	சனியால் [தாப்
467	23	ஆகி ஐந்தாம்	ஆகி ஆராம்பாவத்திற்கு ஐந்
468	17	யமன	யமள
471	9	இருவால்	குருவால்
473	13	குரு அம்சத்தில்	சனியின் அம்சத்தில்
473	13	குருவால்	சனியால்
473	20	(425)	(225) [ருந்து
473	30	சுசிராம்சத்திலிருந்து	சுக்கிரனுடைய அம்சத்தி
475	11	காலத்தில் ஜெனித்த	காலத்தில் இருக்க ஜெனித்த
475	28	மரிப்பான்	சீக்கிரம் மரிப்பான்
475	30	குருவுடன் கூடி	சனியுடன் கூடி
477	12	குருவால்	சனியால்
477	23	குருவால்	சனியால்
478	20	கூடிகுந்தாம்சத்தில்	கூடியிருக்கக் குந்தாம்சத்தில்
478	24, 25	ஐந்தாம் பாவத்தில்	ஓராம்பாவத்தில்
494	5	திசையில் நடந்தால்	திசை நடந்தால்
496	6, 7	சகோதரியில்	சகோதரியின்
499	32	முன்னம்	முன்னமே
499	33	அரிஷ்டமடைவான்	அரிஷ்டமடைவாள்
503	4	ஜீவன்	ஜீவனம்
516	25	பண்டிர்களாகவும்	பண்டிதர்களாகவும்

"ஜாதக கணிதம்" என்ற புஸ்தகத்தின்

மூன்ரும் பாகமாகிய

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

மலர் 1

இது சுக்கிர நாடி, கேரள நாடி, துருவ நாடி, சத்திய சம்ஹிதை, பிருகு சம்ஹிதை, சர்வ சங்கிரஹ நாடி, யோக நாடி முதலிய நாடிக் கிரந்தங்களில் ஜாதக பலாபலன்களை நிர்ணயஞ் செய்ய உபயோகப்படுத்தியுள்ள மூலக்கிரந்தங்களின் விதிகளின் திரட்டு.

(Astrological Dogmas employed in Nadi Granthams.)

துவாதச லக்கின ஜாதக பலன்கள்

(1) மேஷ லக்கின ஜாதகம் *

துவாதச பாவ பலன்கள்

(1) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 18-12 கலை முதல் பாகை 18-24 கலை வரையிலும்) ஆகி சுக்கிரனும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் ஜாதகன் வடக்கு தெற்கு வீதியில் மேற்குப்பாகத்திலுள்ள வீட்டில் ஜெனித்துப் பின் சகோதர சகோதரிகளுடன் கூடினவனு யிருப்பான்.

(2) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி சூரியனுக்குப் பத்தில் சனி யுக்மாம்சத்தில் இருந்தால் தகப்பன் ரோகமுள்ளவனுகவும், கருப்புநிறமுள்ளவனுகவும், மெல்லிய சரீரமுள்ளவனுகவும், ஸ்ரீமானுகவுமிருப்பான். ஜாதகன் பாலியவயதில் தரித்திர மடைந்தவன், மத்திய வயதில் பாக்கியமுடையவன், மானி, ஆசையுடையவன் பின் சகோதரமுடையவன், முன் சகோதர மில்லாதவன், இரண்டு

---

* இது எனது ஜாதக கணிதம் என்ற புத்தகத்தின் இரண்டாம் பாகமாகிய ஜாதகபலாபல நிர்ணயம் என்ற புத்தகத்தில் 7-வது அத்தியாயத்தில்117-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள மேஷ லக்கின ஜாதக பலன்களின் தொடர்ச்சி. நாடி அம்சங்களின் விவரமும் அவைகளைக் கணிக்கும் விதமும்இந்த இரண்டாம் பாகத்தில் 7-வது அத்தியாயத்தில் 110-வது முதல் 115வது வரையிலுள்ள அயிட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை வாசிக்கவும்.

சகோதரிகளையுடையவன், பூர்வபாகத்தில் ஜனித்தவனுக்கு ஒருத்தி விதவையாகிவிடுவாள், உத்தரபாகத்தில் ஜனித்தவனுக்கு இருவரும் சுமங்கலியாகவே இருப்பார்கள், பூர்வபாகத்தில் ஜனித்தவனுக்கு ஒரு சகோதரி ஆயுள் இல்லாதவளாயிருப்பாள்.

(3) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி ஆறுமிடத்திலிருந்து சூரியனிருக்குமிடத்துக்குப் பத்தாமிடத்தில் சனியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் துர்பலமான தேகமுடையவன், சாது, கோபமுடையவன், சீக்கிரத்தில் சந்தோஷத்தையடைபவன், கொஞ்சகாலம் துராசாரமுள்ளவன், தரித்திரத்தால் பீடிக்கப்பட்டவன், பச்சாதாபமுடையவன், தேவர், பிராமணர், இவர்களை ரக்ஷிப்பான். ஜாதகன் பூர்வபாகத்தில் ஜனித்தவனுனல் தன் பிதா சிவ அனுக்கிரகமடைந்தவன், தாந்திரிகனுக்குப் பிரியன், நித்தியம் சிவார்ச்சனை செய்பவன், சுகத்துடன் கூடினவன், ஒரே சகோதரனுடன் கூடினவன், மானியாக இருப்பவன் ஆவான்.

(4) ஜென்மலக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் பிறந்தவனுக்கு ஒன்பதாம் பாவாதிபதி மேஷாம்சத்திலிருந்து ஒன்பதாம் பாவத்தைக் குரு பார்த்தால் ஜாதகனுடைய பிதா பணமுடையவன், ஞான மார்கத்தில் ஆராய்ச்சியுடையவன். தாந்திரிகளுக்கு பிரியத்தைச் செய்பவன், பாலியத்தில் தாமதமான காரியத்தைச் செய்வான், மத்திய, அந்திய வயதுகளில் சாத்வீகமும் சுகமும் உள்ளவன், குளம், உத்தியானம் முதலியவற்றிற்குத் தர்மம் செய்பவன் அனேக சினேகிதர்களையுடையவன், அவர்களைத் தன் குழந்தைகளைப் போல் கொண்டாடுபவன் ஆவான்.

(5) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி உத்தராம்சத்தில் ஜெனித்தவனுக்கு ஒன்பதாம் பாவாதிபதி ஆறும்பாவத்தில் இருதால் ஜாதகன் சாத்வீக குணம் நிறம்பினவன், சுருதி, ஸ்மிருதிகளை நன்கு அறிந்தவன், யாசகனுக்குச் சந்தோஷத்தைச் செய்பவன், எப்போதும் தர்ம சாத்திரத்தைப் படிப்பவன் ஆவான்.

(6) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி சுக்கிரனுடன் சேர்ந்திருந்து நான்காம் பாவாதிபதி சனியுடன் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டம் இல்லை.

(7) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் பிறந்தவனுக்குச் சந்திரன் பாலாரிஷ்டத்தின் அம்சத்தை யடைந்

திருக்க மிருத்து பாகத்தில் ஜனித்தவனுக்கு ஜென்ம திசையில் அல்லது ஜென்ம வருஷத்தில் வைசூரி, பாந்தசுரம், இரணம் முதலியவற்ருல் பாலாரிஷ்ட கண்டமுண்டாகும்.

(8) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்குப் பதிஞோம் பாவத்தில் சந்திரனிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டு சந்திரன் சனியுடன் சேர்ந்திருந்தாலும் சனியால் பார்க்கப்பட்டாலும் பாலாரிஷ்டம் உண்டாகும்.

(9) ஜென்மலக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி சந்திரலக்கினத்திற்கு எட்டாம் பாவாதிபன் இரண்டு பாபக் கிரகங்களுடன் சேர்ந்திருந்து சுபர் திருஷ்டி இல்லாமலிருந்தால் ஜாதகனுக்கு அற்ப ஆயுசு.

(10) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி சந்திரன் சர ராசி அல்லாத ராசியில் இருந்து அல்லது அம்சத்தில் விருச்சிகத்தில் இருந்து சந்திரன் குருவுடன் சேர்ந்திருந்தாலும் குருவால் பார்க்கப்பட்டாலும் பாலாரிஷ்டமானது உண்டாகமாட்டாது.

(11) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருக்க பூர்வ பாகத்தில் ஜனித்தவனுக்கு ஜென்ம தசை செவ்வாய் தசையாஞல் ஜன்ம தசையில் மத்தியிலாவது கடைசியிலாவது அல்லது இரண்டாவது தெசையின் திசை சுய புக்தியின் ஆரம்பத்திலாவது பாலாரிஷ்டம் நேரிடும், சாந்தி செய்வதாலும் பிதுரு புண்ணிய வசத்தாலும் காலசக்ர தானத்தாலும் மிருத்தியு ஜபம் பதிஞயிரம் ஜபிப்பதாலும் வஜ்ராயுதத்தால் பிளக்கப்பட்ட மலைபோல் ஆயிரம் பாலாரிஷ்ட தோஷங்கள் விலகி சுகமுண்டாகும்.

(12) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி மூன்ரும் பாவாதிபதி இரவியுடன் கூடி சனியின் அம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு எட்டு சகோதரர்கள் உண்டு, அவர்களில் இருவர் ராஜவல்லபர்கள், பிரபலமானவர்கள்.

(13) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் ஜனித்தவனுக்குப் பத்தாம் பாவம் குருவால் பார்க்கப்பட்டிருந்து, லக்கின பாவாதிபதியும், அம்சாதிபதியும், புதனும், சுக்கிரன், அங்காரகன் இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் ஜன்மத்திலிருந்து ஸ்ரீமாஞயிருப்பவன், ஞானமுடையவன், பாக்கியமுடையவன்.

(14) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி மேஷராசியில் தனதாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் ரகஸியமனதுடையவனுகவும் சந்தோஷமுடையவனுகவும், மறைவான காரியங்களைச் செய்பவனுகவும் சுகியாயும், அந்திய காலத்தில் மனோ சுத்தி உள்ளவனுகவும் இருப்பான். ராஜாங்கமூலம் பிரசித்தி பெற்ற வன் பாலியத்தில் தரித்திரத்தை அடைந்தவன். சுயார்ஜிதயோகமு டையவன், பிதுராஜ்ஜித மில்லாதவன் இரண்டாயிரத்துக்கு அதிபதி யான யோகமுடையவனுயிருப்பான்.

(15) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி பூர்வ பாக த்தில் பிறந்தவனுக்குச் சுக்கிரன் சிம்மாம்சத்தில் நான்காம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் எழுத்து வேலையில் நிபுணனுகவும் கொஞ்சம் கொ ஞ்சம் மந்தபுத்தி யுடையவனுகியிருப்பான்.

(16) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி குரு, சனி யால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய வித்தைக்கு இடையூறு ண்டாகும். ஜாதகன் அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன். மூன் ரும் திசையில் நரவாஹனம் முதலானவற்றையுடைய யோகமுடைய வன் தன் பிதாவைக்காட்டிலும் ராசாங்கத்தில் யோகமுடையவனு யிருப்பான்.

(17) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி கன்னியா ம்சத்தில் ஜெனித்தவனுக்கு ஏழாம் பாவாதிபதி சிம்மாம்சத்தில் இருந் தால் தான் ஜெனித்த தேசத்திலேயே விவாகம் நடக்கும் அல்லது தான் பிறந்தவிடத்திற்கு வடக்கிலாவது நடக்கும். ஏழாம் பாவாதி அம்சையில் இருக்கும் இராசியிலாவது அல்லது அந்த அம்சராசிக்குத் திரிகோணத்திலாவது அல்லது அவர் பார்க்கும் ராசிகளிலாவது ஜாத கனுடைய மனைவியினுடைய ஜெனனம் நேரிடும்.

(18) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி மேஷாம் சத்தில் சிம்மத்தில் குருவும், விருச்சிகாம்சத்தில் கும்பத்தில் சனியுமி ருந்தால் ஜாதகனுடைய விவாகத்துக்குத் தடை ஏற்படும். மூன்ரும் பாவாதிபதி பலத்துடன் கூடி சுபாம்சத்திலாவது சுபக்கிரகத்துடன் கூடியாவது இருந்தால் அந்த தோஷம் நீங்கி விவாகம் நடக்கும். ஜாத கனுடைய மாமனுருக்கும் சுபம் உண்டாகும்.

(19) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஏழாம்பா வாதிபதியும் செவ்வாயும் மீனும்சத்தில் மங்களாம்சத்தில் இருந்தால்

ஜாதகனுடைய மனைவி சிவப்புநிறமுடையவளாயிருப்பாள். விவாகத்துக்குப் பிறகு சுகமுண்டாகும். ஜாதகன் எப்பொழுதும் லக்ஷ்மீ கடாக்ஷமுடையவனும் வீட்டில் பசுமாடு, தானியம் இவை விருத்தியுமுள்ளவனுகவுமிருப்பான், விவாகமானபின்பு நித்திய சம்பத்தும் எப்பொழுதும் மங்களமும் உண்டு.

(20) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் மீனம்சத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுடைய மாமனர் இரண்டு தாரமுடையவர், ஜாதகனுக்கு அம்மான் ஒருவனே, அவன் யோகமுடையவன், ஸ்ம்பத்தாராதிபன் திசையின் முடிவில் ஆரும் பாவாதிபதியின் அம்சத்திரிகோண ஸ்புடராசியைச் சனி அடையும் போது அந்த மாமன் ஒருவனுக்கும் பீடையுண்டாகும்.

(21) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி கன்யாம்சத்தில் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு பிரஹத்பீஜம் என்கிற ரோக முண்டாகும்.

(22) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஓராம்பாவாதிபதி வாருணம்சத்திலிருந்தாலும், ஏழாம்பாவாதிபதியுடன் சேர்ந்திருந்தாலும் ஜாதகனுடைய தாய் தகப்பனுக்கு நீண்ட ஆயுளுண்டாகும். ஜாதகனுக்கு இருபது வயதுக்கு மேல் நல்ல பாக்கியப் பிராப்தியும் இருபத்தைந்து வயதுக்கு மேல் நல்ல வாஹன பிராப்தியுமுண்டாகும். பிற்பாடு தரித்திரத்தை அடைகிறுன். அதிலிருந்து எட்டு வருஷத்துக்குப் பிறகு விபத்துண்டாகும்.

(23) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் சுக்கிரனும், சிம்மராசியில் குருவும் இருந்து ஒன்பதாம் பாவாதிபதியும் பத்தாம் பாவாதிபதியும் ஒருவரை யொருவர் பார்த்தால் ஜாதகன் தகப்பனர் சம்பாதிக்கப்பட்ட வாகனத்தையுடையவன் அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன் சகோதரர்களையுடையவன். மூத்த சகோதரனில்லாதவன், ஆசையுடையவன்.

(24) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஓராம்பாவாதிபதி லக்கினத்திலேயே வாருணம்சத்திலும் ஒன்பதாம் பாவாதிபதி குமாராம்சத்திலுமிருந்தால் ஜாதகன் சந்தேகமில்லாமல் பாக்கியமுடையவனுயிருப்பான். தன் பிதாவைக் காட்டிலும் அதிக பாக்கியத்தை யடைவான், விவாகத்துக்குப் பிறகு சுகமுண்டாகும். பாலியத்தில் சுகமுடையவன், குமார வயதில் கொஞ்சம் சுகத்தையுடையவன்,

யௌவன வயதில் பாக்கியத்தை அடைகிருன். மூன்ரும் திசையில் சம்பத்துடையவனுகிருன், ஜன்மதார திசையிலிருந்துசம்பத்தாரதிசை சுயபுத்தி வரையிலும் அகால மாணபயமுண்டு. அந்த தோஷம் பரிகார மாகும்படி காலசக்ரதானம் செய்யவேண்டியது.

(25) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி சக்கிரயோகத்தில் ஜெனித்தவனுக்கு மேஷாம்சத்தில், சிம்மத்தில், ஒன்பதாம் பாவாதிபதி யிருந்தால் விபத் திசையில் விசேஷ சம்பத்துண்டாகி ராஜயோகமும் உண்டாகி அரசனுகவாவது அரசனுக்கு சமமான (தன முடைய) பணக்காரனுகவாவது ஆகி, சுகமடைந்து நரவாஹன ஆபரணுதிகளடைந்து பிரபல உத்யோக ஜீவனமும், சந்தான உற்பத்தியும் சகோதரியின் சம்பத்தையும் அடைகிருன்.

(26) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி சக்கிரயோகத்தில் ஜனித்தவனுக்கு வாருணும்சத்தில் குரு இருந்து லக்கினுதிபதியின் அம்சத்திலாவது அவனுடைய திரிகோண ஸ்புடராசிகளிலாவது சனி வருங் காலம் விபத்திசையில் ஜாதகன் சேதுயாத்திரை செய்வான். க்ஷேமதிசையில் தனலாபம் உண்டாகும். தாய்க்கு மாணம் சனிபுக்தியில் உண்டாகும்.

(27) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஆருவது பாவத்தில் ராகு இருந்தால், ஜாதகன் கங்கஸ்நாநம் முதலான புண்ணியலாபத்தையும் அப்படியில்லாவிட்டால் மூன்றுதரம் சேது யாத்திரையையும் நிச்சயம் அடைகிருன்.

(28) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தைப் பத்தாம் பாவாதிபதி பார்த்தால் அவன் தெசையில் ஜாதகனுக்கு மஹாதான பலனுண்டாகும்; சுபா அசுப பலனிரண்டும் அவன் தெசையில் சமமாக நடக்கும். க்ஷேமதாரதிசையில் எட்டாம் பாவாதி புக்தியில் மிருத்யு பயமுண்டாகும் சாந்தி செய்தால் குணமுண்டாகும்.

(29) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஜெனித்தவனுக்கு ஒன்பதாம் பாவாதிபதியின் திசையில் ஒன்பதாமாதிபதியின் அந்தர காலத்தில் மாணம் உண்டாகும்.

(30) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி வாருணும்சத்திலும் ஐந்தாம் பாவாதிபதி குமாம்சத்திலுமிருந்தால் இவனுடைய முன் சென்மமானது சூத்திர ஜென்மமாகும்.

(31) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி சூரியன் கருள ஷஷ்டியம்சத்திலும் ஒன்பதாம் பாவாதிபதி வாருணம்சத்திலு மிருந்தால் ஜாதகனுக்கு புண்ணியம் பாபம் இரண்டும் சமமாயிருக்கும். ஜாதகன் புண்ணிய லோகத்தை அடைவான்.

(32) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி விரயபாவா திபன் தேவ ஷஷ்டியம்சத்திலிருந்தால் ஜாதனுக்கு அந்த விரயாதி பதிக்குரிய லோகப்ராப்தி உண்டாகும், அந்தியத்தில் ஜாதகன் ஞானத்துடன் இருப்பான்.

(33) ஜென்மலக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 24–00 கலை முதல் பாகை 24-12 கலை வரையி லும்) ஆகி பதினோராம் பாவத்தில் சுபாம்சத்தில் சுக்கிரனிருந்தாலும் தன்னுடைய உச்சத்தில் சந்திரனுடன் கூடியிருந்தாலும் ஓராம்பாவா திபதி சுக்கிரனுடன்கூடியிருந்தாலும் பிராமண காலத்தில் பிறந்தவன், பிராமண சொரூபமுடையவனு யிருப்பான் ஐந்தாவது கருப்பத்தில் அல்லது ஆறுவது கருப்பத்தில் ஜனித்தவன். மூத்த சகோதரனுடன் கூடினவன், ஸ்ரீமான் பின் சகோதரனில்லாதவன், பூர்வபாகத்தில் ஜெனனமானுல் ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் பிறந்தவன். உத்தராம் சத்தில் ஜனனமானல் ஏழாவது கருப்பத்தில், அல்லது எட்டாவது கருப்பத்தில் பெரிய கிராமத்தில் ஜனித்தவனுகிருன்.

(34) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி ஓராம் பாவத்தில் சனி யிருந்தால் பிரசவகாலத்தில் தாய் அதிகவேதனைய டைந்திருப்பாள். குருபார்வை யிருந்தால் சுகமுண்டாகும்- பூர்வபாக மானல் கொஞ்சம் வதையுண்டாகும்.

(35) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி உத்த ராம்சத்தில் பிறந்தவனுக்கு நான்காம் பாவாதிபதி பனிரெண்டாம் பாவத்திலிருந்தால் தாய்க்கு விசேஷபிரசவ வேதனையும் ஸூதிதோஷ த்தால் கொஞ்சம் பயமும் உண்டாகும்.

(36) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜபாம்சம்)ஆகி கேந்திரத் திரிகோணங்களில் பாபக்கிரகங்களிருந்தால் பாலாரிஷ்ட பயம் ரொம்ப வும் உண்டாகும் மேற்சொன்ன லக்கினத்தைக் குரு பார்த்தால் பிற் பாடு ஆரோக்கியமும் சுகமும் உண்டாகும்.

(37) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி ஓரா வது பரவாதிபதி குருவின் ராசிகளான தனுச,மீனம், இவற்றிலிருந்து

எட்டாம் பாவாதிபதியும் அப்படியே குருவின் ராசிகளிலிருந்தாலும் சனி வர்க்கோத்தமாம் சத்திலிருந்தாலும் ஜாதகன் மத்தியாயுர் யோக முடையவன், அறுபத்தைந்து வயது பூர்ணமாக வுடையவன் இரு பத்தொன்பதாவது வயதில் தாந்திரிக ஜ்வரத்தால் பீடையடைவான். முப்பத்தேழாவது வயதில் இரண உபத்திரவ பயமுடையவன் ஐம்பத் திரண்டாவது வயதிலும் இப்படியே இரண உபத்திரவ பயமுண் டாகும். சாந்தி செய்தால் சுகமுண்டாகும்.

(38) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி ஓராம் பாவத்தில் சூரியன், புதனுடன் கூடியிருந்து, ஒன்பதாம் பாவாதிபதி கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கொஞ் சமான பாக்கியத்தை யுடையவன். தகப்பனைக்காட்டிலும் ஜாதகன் மேலான குணத்தை யுடையவன், கொஞ்சம் தாமதமாக வேலைகளைச் செய்பவன். விஷ்ணு சிவன் இவர்களிடத்தில் பக்தியுடையவன், பயிர் தொழில் செய்பவன், சுகமுடையவன், பாலியத்தில் அற்ப சுகமுடை யவன். காமீ, மத்தியவயதில் சௌக்கியத்தையுடையவன், விருத்தாப் பிய காலத்தில் புத்திரன் மூலமாக பிதாசுகவடைவான். இந்தப்படி யான தகப்பன் சாது, ஜாதகனுடைய ஸம்பத் திசையில் சனி புக்தி யில் அல்லது புத புக்தியில் கோசாத்தில் துலா ராசியில் சனி வரும் சமயம் பிதா மரிப்பான் அதற்குப் பிறகு ஒன்பதாம் பாவாதிபதி எந்த ராசியில் இருக்கிறானோ அவ்விடத்தில் கோசரத்தில் சனி வரும் போதும் சந்திர லக்கினத்திலிருந்து அஷ்டமஸ்தானத்தைச் சூரிய புத் திரனான சனி எப்போது அடைகிறானோ அப்போது மேஷம் முத லான மூன்று மாதங்களிலும் ஜாதகனுடைய பிதா மரிப்பான். ஜன்ம காலத்தில் சூரியன் விருச்சிக ராசியில் துலாம்சத்தை யடைந்திருந் தால் ஜாதகன் பிதா முதலானவர்களை நாசம் செய்பவனாகிறான்.

(39) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி நான் காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்து ஜலாம்சத்தை அடைந்திருக்கும் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் அற்பாயுளுள்ளவள், குணவதி, மிகவும் நல்லவள் பந்துக்களுக்கு பிரியமானதைச் செய்பவள். ஸதீ முன் ஜன்மாந்திர பாப விசே ஷத்தால் மரித்த குழந்தைகளைப் பிரசவிப்பாள். ஜன்மதிசையில் சந்திர புக்தியில் கோசரத்தில் விருஷப ராசியை சனி அடையும்போது கும்பம் முதலான இரண்டு மாதங்களில் தாய் மரணமடைவாள்.

(40) ஜென்மலக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி எட்டாம் பாவத்தில் மூன்ரும்பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தாலும் ஓாம் பாவத்தில் சனி கூடியிருந்தாலும் ஜாதகன் பின்சகோதரமில்லாதவன்.

(41) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி பதிஞோரம் பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்தில் லக்கின பாவத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டிருந்தால் மூத்த சகோதரன் ஒருவன் ஆயுளுடையவன். எல்லோருக்கும் மூத்தவஞன தன் சகோதரன் புத்திர, புத்ரிகளுடனும் சுகத்துடனும் கூடியிருப்பான். ஏழு சகோதரர்கள் நாசமடைவார்கள்.

(42) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி சனித்திரிம்சாம்சத்தில் பிறந்தவன் ரூபமுடையவன், கருப்பு நிறமானவன் காத்திரமுடையவன் சமதேக சொரூப முடையவன், வாதம் நிறைந்த தேகி, கொஞ்சம் அதிக பித்தத்திஞல் பீடிக்கப்பட்டவன், திட்டமாய்ப் புசிப்பவன், மர்மமான மனதுள்ளவன், காமியாயிருப்பான், பால்யத்தில் மந்தமான சுபாவமுடையவன், அதிர்ஷ்டசாலி, தர்மாத்துமா, விஷ்ணு சிவபக்தியுடையவன், விசேஷ சிவபக்தியுடையவன், தியாகம் செய்யும் கம்பீர புத்திஉடையவன், ஸங்கீதப் பிரியமுடையவன், காமமுடையவன், தேவர், பிராமணர் இவர்களிடத்தில் பக்தியுடையவன்.

(43) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கொஞ்சம் எழுத்து வித்தை தெரிந்தவஞவும் சாஸ்திர ஞானமில்லாதவஞயும் ஆகின்ருன்.

(44) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்சயாம்சம்) ஆகி சனி வர்க்கோத்தமாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் கிராமாதிகாரமுள்ளவனும் பயிர்த்தொழில் செய்பவனும், க்ஷேத்திர மூலத்தால் ஜீவிப்பவனும், வியாபாரத்தால் பொருள் சேர்ப்பவனும், அரசாங்கத்தில் புகழ்பெற்றவனும், சந்தேகமில்லாத கிராமாதிகாரியாகவும் பாலியத்தில் அல்ப சுகமுடையவஞகவும், ரோகமுள்ளவஞகவும் ஆகின்ருன். மூன்ரும் வயதில் தாய் மரிப்பாள்.

(45) ஜென்ம லக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்து ஒன்பதாம் பாவாதிபதி எட்டம் பாவத்தையடைந்திருந்து குரு, சனியுடன் சேர்ந்திருந்தாலும் சனியால் பார்க்கப்பட்டிருந்தாலும் ஸீமந்த சிசு மறித்துவிடும்.

(46) ஜென்மலக்கினம் மேஷம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி ஒன்பது ஐந்து முதலிய பாவங்களில் பாபக்கிரகங்கள் இருந்தால் ஸந்ததிக்குத் தடங்கள் உண்டாகும். அந்த தோஷத்துக்குப் பரிகாரமாக நாகசாந்தி செய்தால் ஜீவிய ஸந்தானம் உண்டாகும்.

(47) ஜென்ம லக்கினம் மேஷம் (சம்பகாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சனியிருந்து யமளாம்சத்திலிருக்கப்பட்ட செவ்வாயினுல் பார்க்கப்பட்டாலும் ஆறும்பாவாதிபதி செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் இரட்டைப் பிள்ளைகள் பிறக்கும்.

(48) ஜென்ம லக்கினம் மேஷம் (திரைலோக்யாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் தாயாதியினுல் ஸ்வீகாரமாக எடுத்துக் கொள்ளப்படுவான்.

(49) ஜென்மலக்கினம் மேஷம் (திரைலோக்யாம்சம்) ஆகி லக்ன பாவாதிபதி ஆறும் பாவத்திலிருந்து நான்காம் பாவாதியுடன்கூடியிருந்தால் தாயாதியின் பூமி, தனம் இவற்றையடைந்து சிற்றப்பனுடைய உத்திரகிரிகைகளைச் செய்வான்.

(50) ஜென்ம லக்கினம் மேஷம் (திரைலோக்யாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சனி ஆறும் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும் குரு ராகு, கேது இவர்களுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுக்குக் காலாந்திரத்தில் புத்திரன் பிறப்பான். ஜாதகன் புத்திரக்கிலேசம் கொஞ்சமும், மூத்தபிள்ளை விநாசமுடையவனுமாவான்.

(51) ஜென்மலக்கினம் மேஷம் (விகடாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சனி, செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க ஆயுளுடையவன்.

(52) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி விகடாம்சத்திலிருந்து சனி, செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய பிதா தரித்ர முடையவன், ஸ்திரீ மூலம் ஜீவனம், செய்பவன். அம்மானுல் சுகமுடையவன்.

(53) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி குரு விகடாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய பிதாமஹி மர்மமாக வியபிசாரம் செய்பவள், காமத்தால் பீடிக்கப்பட்டவள், சுபமுள்ளவள். ஜாதகனுடைய தாய்ப்பாட்டன் புகழுடையவன், காமியாயிருப்பவன், விஷய லோலன். இரண்டு தாரமுடையவன், ஆசையுடையவன், விசேஷபுத்திரன், தனம் இவற்றையுடையவன். பாலியத்தில் தரித்திரத்தை யடைந்த

வன், அரசாங்க துவேஷத்தால் சோகமடைந்தவன், மத்திய வயதில் பாக்கிய விருத்தியையுடையவன், புத்திரனால் வயோதிக வயதில் சுகத்தையும், தனத்தையுமடைவான்.

(54) ஜென்ம லக்கினம் மேஷம் (கரிகாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி நீசனாகி மகா நவாம்சத்திலிருந்தாலும் ஒன்பதாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும், துர்ப்பகாவஸ்தையில் பிறந்தவனுக்குப் பின் சகோதரம் கிடையாது. தாய் தீர்க்காயுளுடையவள், சகோதரியும் ஒருத்தி, நீண்ட ஆயுளுடையவளாயிருப்பாள்.

(55) ஜென்ம லக்கினம் (மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி சனி கடகாம்சத்தில் மீனராசியில் துலாம்சக் கிரகயோகத்துடன் கூடியிருந்தால் சகோதரி மூலம் தனத்தை அடைவான். கொஞ்சம் சுயார்ச்சிதமும் சம்பாதிப்பான், பால்யத்தில் தன் பிதாவால் சம்பாதிக்கப்பட்ட பொருளுமுடையவன், தன் கோத்திர தாயாதியின் தனமும் கொஞ்சமடைவான், சகோதரியினுடைய நேசத்தால் அறுநூறு அல்லது முன்னூறு அல்லது ஐந்நூறு வரையில் தனமடைந்து வியாபாரம் செய்து நித்தியம் பத்துக்குமேல் லாபம் சம்பாதித்து அதனால் ஜீவனம் செய்வான்.

(56) ஜென்ம லக்கினம் மேஷம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினத்தில் ராகு இருந்து ஆறு எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களில் ரவியுமிருந்தால் சனிதிசை ஓரவது திசையாக வரும் சமயம் பிதா மரிப்பான்.

(57) ஜென்ம லக்கினம் மேஷம் (நிர்மலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் கேதுவும், குரு மேஷாம்சத்திலுமிருந்து ஏழாம்பாவத்தில் சனியுமிருந்தால் ஜாதகனுக்குப் புருஷக்குழந்தைகள் நாசமடையும்.

(58) ஜென்ம லக்கினம் மேஷம் (துர்தூராம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் சூரியனிருந்து அந்த பாவாதிபதி விருஷபராசியிலுமிருந்து சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும் சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் சுவல்பமான சகோதரபலனுடையவன், ஒரு சகோதரனும் இரண்டு சகோதரிகளுமுடையவன்.

(59) ஜென்ம லக்கினம் மேஷம் (துர்தூராம்சம்) ஆகி வர்க்கோத்தமாம்சத்தில் மூன்றும்பாவத்தில் புதனிருந்து குருவால்பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய பின் சகோதரன் நல்ல யோகமுடையவனாகி அரசாங்கத்தில் புகழுடையவனாயிருப்பான்.

(60) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி பதினோராம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடி ஆறும்பாவத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய மூத்த சகோதரிக்குத் தேக பீடை யும் இரண உபத்திரவமும் உண்டாகும்.

(61) ஜென்ம லக்கினம் மேஷம் (அம்புஜாம்சம்) ஆகி குரு காந் தாம்சத்தில் கடகத்திலும் நான்காம் பாவாதிபதி இரண்டாம் பாவத் திலுமிருந்தால் ஜாதகன் வேதாந்த பரிசீலனை செய்பவனும் நியாய சாஸ்திரத்தில் பிரசித்தியுடையவனுமாயிருப்பான்.

[62) ஜென்ம லக்கினம் மேஷம் (சம்பகாம்சம்) ஆகி லக்கினபா வாதிபதி இரண்டாம் பாவத்திலும் நான்காம் பாவாதிபதி கேந்திரத் திலுமிருந்தால் ஆயுஸுள்ள வரையிலும் பாக்கியவானயிருப்பான்.

(63) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸமாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதி கும்பாம்சத்திலிருந்து சூரியனால் பார்க்கப்பட்டிருந்தாலும் ராகுவுடன் சேர்ந்திருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகன் சகோதரர்களில்லாதவனாகி யிருப்பான்.

(64) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸமாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி துலாம்சத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டிருந்தால் கோசரத்தில் குரு ரிஷபராசியை அடையும்போது விவாகம் நடக்கும்.

(65) ஜென்ம லக்கினம் மேஷம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கினபா வாதிபதி பத்தாம் பாவத்திலும் அந்த பத்தாம் பாவாதிபதி ஏழாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் சிம்மாசனபதியாகி சதுரங்கசேனபலங் களுடையவனாகி யிருப்பான்.

(66) ஜென்ம லக்கினம் மேஷம் (பங்கஜாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் ரவியுடன் கூடியிருந்தால் கொஞ் சம் சகோதரத் துவேஷமுண்டாகி அதனால் ஜாதகன் வியாகூலமடை வான்.

(67) ஜென்ம லக்கினம் மேஷம் (காலகூடாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்தாலும் ஐந்தாம் பாவத்தைக் குரு பார்த்தாலும் ஜாதகன் அரைபலந்தான் யோகமுடையவன். சாஸ்தி ரத்தில் சொல்லியபடி லிங்கதானம் செய்தால் புத்திரப்ராப்த்தி யுண் டாகும்.

(68) ஜென்ம லக்கினம் மேஷம் (பாடலாம்சம்) ஆகி லக்னபா வாதிபதி தனபாவத்தில் தனபாவாதிபதி கேந்திர ராசியிலும் பதினே

ராம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்திலு மிருந்தால் ஜாதகன் புதையல் தனத்தையடைவான்.

(69) ஜெனம லக்கினம் மேஷம் (பாடலாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருந்து சுக்கிரன் பலத்துடனிருந்தால் ஜாதகன் ஒரே தாரமுடையவன். சிலர் இரண்டு தாரம் உண்டென்று சொல்லுகிறார்கள்.

(70) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸாமத்யாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி லாபபாவத்திலிருந்து சுக்கிரன் கேதுவுடன் கூடி கேந்திரத்திலிருந்து சந்திரன் செவ்வாயினால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள்' ஜாதகன் இரண்டு தாய்களைக் காப்பாற்றுவான்.

(71) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸாமத்யாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி புதனுடன் கூடியிருந்து குருவுடன் சேராமலிருந்தாலும் கூட ஜாதகன் நல்ல செய்கை, ஆச்சாரபுத்தி இவையுடையவனாகவும், ராஜசேவையால் ஜீவனம் செய்பவனாகவுமிருப்பான்.

(72) ஜென்ம லக்கினம் மேஷம் (சம்பகாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் குரு தன் உச்சத்தில் மீனம்சத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் சுகத்தையும் இருபத்தாறு வயதுக்கு மேல் விசேஷ சுகத்தையும் அடைகிறான்.

(73) ஜென்ம லக்கினம் மேஷம் (சம்பகாம்சம்) ஆகி ஏழாம்பாவாதிபதியாகிய சுக்கிரன் மிதுனம்சத்தில் மங்களாம்சத்தை யடைந்திருந்தால் ஜாதகன் சிவப்புநிறமுடைய மனைவியை அடைவான். விவாகத்திற்குப் பிறகு சுகத்தை யடைவான். எப்பொழுதும் லக்ஷ்மிகடாக்ஷத்துடன் இருப்பான்.

(74) ஜென்ம லக்கினம் மேஷம் (சம்பகாம்சம்) ஆகி குரு புஷ்காம்சத்தில் இருந்து பத்தாம் பாவாதிபதி செவ்வாயால் பார்க்கப்பட்டிருந்தாலும், நான்காம் பாவாதியுடன் கூடியிருந்தாலும் வீட்டில் தான்ய சமிர்த்தியுடனும், விவாகத்துக்குப் பிறகு நித்திய சுபத்துடனும், நித்திய சம்பத்துடனும் கூடியிருப்பான்.

(75) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி சுக்கிரன் ஒன்பாதாம் பாவத்திலிருந்து, குசன், கேது, புதன் இவர்களுடன் கூடி யிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஆபத்சன்னியாசயோகமுடையவன்.

(76) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி ஸிம்மாம்சத்தில், லக்னபாவத்தில் சந்திரனிருந்து, குருவும் லக்னபாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் மத்திப வயதுடையவள், குணவதி, பொறுமையுடையவள், கொஞ்சம் ரோகமுடையவள், அன்னதானம் செய்வதில் பிரியமுள்ளவள், சுத்தமுள்ளவள், வம்சவிருத்தியுடையவள், சுபமானவள், முன்ஜன்மாந்திர புண்ணிய வசத்தினுல் மங்கிலியத்துடனேயே மரிப்பாள்.

(77) ஜென்மலக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி புதன் பதினேராம் பாவத்திலும், நான்காம் பாவாதிபதி ஆரும்பாவத்திலுமிருக்கப் பிறந்தவன் அல்பவித்தை யுடையவனுகவும் தனத்தையுடையவனுகவும் எழுத்துவேலை கொஞ்சம் தெரிந்தவனுகவும் சாஸ்திர ஞானமில்லாதவனுகவும். வித்யாஹீனனுகி யிருந்தாலும் தனத்தைச் சம்பாதிப்பவனுகவும் க்ஷேத்திர மூலம் நல்ல சௌக்கியமுள்ளவனுகவும் நாடக அலங்கார காவிய சாஸ்திரப் பிரியனுகவும் சங்கீத லோலனுகவும் இருப்பான்.

(78) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் ராகு இருந்து அந்த பாவாதிபதியுடன் கேது கூடியிருந்தால் விருத்தாப்பிய வயதில் ஜாதகன் புத்திரயோகமுடையவன்.

(79) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி லக்கின பாவத்திலும் நான்காம் பாவத்திலும் பாபக்கிரகங்களிருந்தாலும் ஷ்டி பாவங்களைப் பாபர்கள் பார்த்தாலும் ஜாதகன் நல்ல செய்கை யுடையவனுகவும், நல்லவழியில் நல்லபுண்ணியங்களை செய்பவனுகவும், தனுட்டியனுகவும், லோகாந்திரத்திலும் சௌக்கியத்தை அடைபவனுகவும் வெகு காலம் ஆயுளுள்ளவனுகவும் இருப்பான்.

(80) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி பதினேராம் பாவத்தில் புதன், சூரியன், சுக்கிரன் இவர்களிருந்தால் ஜாதகன் அற்ப புத்திரனுடனும் அற்ப வித்தையுடனும் கூடியிருப்பான், வியாபாரத்தால் சம்பாதிக்கப்பட்ட பணத்தை யுடையவன், அந்திய வயதில் சகோதரனுடன் பாகம் செய்துக்கொள்வான்.

(81) ஜென்ம லக்கினம் மேஷம் (குந்தாம்சம்) ஆகி ஆறு எட்டு பன்னிரண்டு முதலிய பாவங்களில் சந்திரனிருந்து சந்திரன் நின்ற ராசிநாதன் தன் உச்ச ராசியிலிருந்தால் கொஞ்சம் பாலாரிஷ்ட பய

முண்டாகும். ஆயினும் சீக்கிரமாகவே ஆரோக்கியமும் உண்டாகும் சுபதிருஷ்டி யிருந்தால் விசேஷ சௌக்கியமுண்டாகும்.

(82) ஜென்ம லக்கினம் மேஷம் (குந்தாம்சம்) ஆகி குரு ஐந்தாம் பாவத்திலிருந்து அந்த பாவாதிபதி மீனராசியிலிருந்தாலும், குரு பன்னிரண்டாம் பாவத்திலிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் இங்கித மறிந்தவன் விஷ்ணுவிடத்தில் பக்தியுடையவன், தேவப்பிராமண பக்தியுடையவன், வைதிகாசாரமுடையவன், தர்மாத்துமா, பணத்தைச் சம்பாதிப்பதில் வெகு சமர்த்தன், நல்ல புத்தியுடையவன், மத்திய வயதில் பாக்கியமுடையவன், மனைவிக்குப் பிறகு யோகமுடையவன், வேறு சிலர் ஜாதகனுடைய தாய் வெகுகாலம் ஜீவித்திருப்பாள் என்று சொல்லுகிறார்கள்.

(83) ஜென்ம லக்கினம் மேஷம் (குந்தாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபன் ஐந்தாம் பாவத்திலிருந்து பதினோராம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் விபத்திசையில் சம்பத்தையும், க்ஷேமத்திசையில் விசேஷ தனத்தையும் அடைவான், ஜாதகன் தேசாந்திரத்தில் சஞ்சாரம் செய்பவனும், வித்தையையுடையவனும், நாட்டியம் செய்பவனுமாகிறான்.

(84) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சந்திரனிருந்து, செவ்வாயுடன் கூடியிருந்தாலும், செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்டமுண்டாகும்.

(85) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி பாக்கியாம்சத்தில் தன் உச்சராசியில் குரு இருந்து நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தை யடைந்து இருந்தாலும் அல்லது குரு சந்திரனுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவளாயிருப்பாள்.

(86) ஜென்ம லக்கினம் மேஷம் (ஜகத்யாம்சம்) ஆகி லக்கினபாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்து நான்காம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் வனப்பிராந்தியத்தில் பட்டிணத்தில் அல்லது கிராமத்தில் ஜெனனமானவன்.

(87) ஜென்ம லக்கினம் மேஷம் (ஜகத்யாம்சம்) ஆகி சுபாம்சத்தில் ஜனித்தவனுக்கு குரு நீசத்திலிருந்தாலும்கூட தேகசௌக்யமும் சுபமும் உண்டாகும்.

(88) ஜென்ம லக்கினம் மேஷம் (காலகூடாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி லாபபாவத்தில் இருந்தால் ஜாதகன் சகோதர சௌக்கியமுடையவன். ஜாதகன் பிதா புகழுடையவனுயிருப்பான்.

(89). ஜென்ம லக்கினம் மேஷம் (காலகூடாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி வலுத்து லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் விசேஷ சௌக்கியமுடையவளும், பதிபக்தியுடையவளுமாயிருப்பாள்.

(90) ஜென்ம லக்கினம் மேஷம் (காலகூடாம்சம்) ஆகி சனியும் ராகுவும் கூடியிருக்கப் பிறந்தவன் சுகியாகவும், மந்திர யந்திரங்களில் பிரியமுடையவனுகவும், பிறரை வஞ்சிப்பதில் சமர்த்தனுகவும், மிதமாய்ப் பேசுபவனுகவும், குருப்பிரீதியுடையனுகவும், க்ஷேத்திர கிராமாதிபதியாகவும், பிதுரார்ஜிதத்தால் சுகமாயும், அரசாங்கத்தில் புகழுடையவனுகவும், உத்யோகத்தால் தனத்தையடைபவனுகவும், பாலியத்திலிருந்து சுகத்தையுடையவனுயுமிருப்பான்.

(91) ஜென்மலக்கினம் மேஷம் (பாடலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் புதனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பாக்கியயோகமுடையவன் சமிர்த்தியாக பணத்தைச் சம்பாதிப்பவன் விசேஷமாக பிள்ளைகளை உடையவன்.

(92) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸௌமத்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தி லிருந்தாலும் குரு சனியுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் அதிருஷ்டசாலி, மேதாவி, பாக்கிய யோக அபிவிருத்தி யுடையவன், சிவ பக்த மதாசார முடையவன், விஷ்ணு சிவ பக்தியுடையவன் ஸம தேகமுடையவன், அறிவாளி, தைரியமுடையவன், அழகிய முகமுங் கண்களுமுடையவன், தேவப் பிராமணவிசுவாசி, வித்தை புத்தி இவற்றையுடைய விவேகி, எழுதுவதில் சமர்த்தன், மூன்று பாஷைகளில் வல்லவன்.

(93) ஜென்ம லக்கினம் (ஸௌமத்யாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பதினோம் பாவத்தில் பலத்துடனிருந்தால் ஜாதகன் வித்தையுடையவன், இனிமையாய்ப் பேசுபவன் நன்ருய்த் தெலுங்கு பேசுபவன், ஸங்கீதப் பிரியமுடையவன், காமியாயிருப்பான் நல்ல வித்யா நிபுணனுயு மிருப்பான்.

(94) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸௌமத்யாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதி பதியாகிய சுக்கிரன் கேந்திரத்திலிருந்து குருவால்

பார்க்கப்பட்டால் ஜாதகன் எல்லா சாமர்த்தியமும் உடையவனாகியும், வாசாலகனாகவும், யுக்தியாய்ப் பிரசங்கம் செய்பவனாகவும், மித்திரவஞ்சன புத்தியுடையவனாகவும், தியாகியாயும் போக முடையவனாகவுமிருப்பான்.

(95) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸுமத்யாம்சம்) ஆகி லாபாதிபதி தனாதிபதி பத்தாம் பாவாதிபதி இவர்களும் இவர்களில் யாராவது ஒருவரும் சந்திர கேந்திரத்திலிருந்தாலும், அல்லது தன புத்திரலாபாதிபதிகள் குருவுடன் இருந்தாலும் ஜாதகன் அகண்டசாம்ராஜ்யத்தை அடைகிறான்.

(96) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குச் சுகமுண்டாகாது.

(97) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் தன் தாயை இழந்துவிடுவான். வளர்ப்புத் தாயால் சுகத்தையடைவான்.

(98) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி மூன்றாம் பாவத்தில் சந்திரனிருந்தாலும் செவ்வாய் நீச்சத்தை அடைந்திருந்தாலும் ஜாதகன் சகோதரர்களுடன் கூடியவனாயிருந்தாலும் ஒண்டியாகவே ஆகிவிடுகிறான்.

(99) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி குருத்திரிம்சாம்சத்தில் ஜனித்தவனுக்கு நீசபங்க ராஜயோகம் உண்டானால் ஜாதகன் மஹாராஜாவாக ஆகின்றான்.

(100) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி நீச்சபங்க ராஜயோக கிரகங்கள் உச்சாம்சத்தில் நீச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் தனிகனாகவும் நல்ல போகியாகவும் யோகாம்சத்தில் பாக்கிய குலத்தில் பிரவேசிப்பவனாகவும், மானம், கிலேசம் இவற்றைவிட்டவனாகவும், நல்ல தைர்ய புஷ்டியுடையவனாகவும், ஆசையுடையவனாகவும், எப்போதும் லோபகுணத்தைப் பிரதானமாக உடையவனாகவுமிருப்பான்.

(101) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி நீச்சக்கிரகம் நீச்சராசியில் உச்சாம்சத்தில் இருந்தால்சுகியாயும், உச்சக்கிரகம் உச்சராசியில் நீச்சாம்சத்திலிருந்தால் துக்கியாயும் ஜாதகனிருப்பான். வர்க்கோத்தமாம்சத்திலிருந்தால் ஸௌக்யமும், ராஜயோகமும் உண்டாகும்.

(102) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி புதன் வர்க்கோத்தமாம்சத்தில் சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும் ராஜ்யாவஸ்தையிலிருக்கும்போது பிறந்தாலும் ராஜயோகம் உண்டாகும்.

(103) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி சுக்கிர கேந்திரத்தில் குரு இருந்தாலும் குருவின் கேந்திரத்தில் சுக்கிரன் இருந்தாலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் க்ஷேத்திரம் மாறியிருந்தாலும் ஒரே அம்சத்திலிருந்தாலும் ஜாதகன் நல்லயோகத்தை யுடையவனாக விருப்பான். அல்லது ராஜாவாகவாவது அவனுக்குக் சமமாகவாவது இருப்பான்.

(104) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி செவ்வாய் கேந்திரத்தில் சுபாம்சத்தில் இருந்து சந்திரனுக்கு இரண்டில் பலமுடையவனாக இருந்தால் உசகம் என்கிற யோகமானது உண்டாகும். ஷடி யோகத்தில் ஜனித்தவன், பலத்துடன் கூடிய சரீரத்தையுடைய ஸ்திரீ கீர்த்தி, சீலம் இவற்றுடன் கூடினவன், யோகத்தில் மந்திர ஜெப, மாந்திரீகம் முதலிய க்ஷேமத்தையுடையவன். அரசனாகவாவது, அரசனுக்குச் சமமாகவாவது இருப்பான்.

(105) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து அந்த கேந்திரத்தில் சுக்கிரனும் இருந்தால் ஜாதகன் பாக்கிய குலத்திலேயே ஜனித்தவன், ராஜயோகத்தை யடைபவன், துர்க்காரணியப் பிராந்தியத்திலாவது, கிரிப் பிராந்தியத்திலாவது ஜனித்தவன், ஜனித்த இடத்திலேயே வசிப்பவன்.

(106) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் ஜனித்தவனுக்கு லக்கினபாவத்தில் கேது இருந்தால் ஜனன காலத்தில் ஜாதகனுடைய தாய் அதிக வேதனையடைவாள், உத்தராம்சத்தில் ஜனனமானால் விசேஷ வேதனையும் சூதி தோஷமும் உண்டாகும். சிலர் அபிப்பிராயம்படி குழந்தை கொடி சுற்றிப் பிறக்கும்.

(107) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி தன் உச்சாம்சத்தில் நீசராசியில் செவ்வாயிருந்து குரு கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும் பதினோரும் பாவத்தில் சுக்கிரன்இருந்தாலும் எல்லா தோஷங்களும் விலகி சுகமுண்டாகும்.

(108) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் ராகு இருந்தால் மனைவிக்குப் பீடையுண்டாகும், அந்த ராகு

நின்ற பாவாதிபதி எந்த இடத்தில் பலவானயிருந்தாலும் பாபக்கிர கங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மூன்று மனைவிகளை படைவான். அப்படியில்லாமல் ஒரே தாரமாயிருந்தால் அவள் கிரகசேஷ்டைகளால் பீடிக்கப்பட்டோ அல்லது கர்பதோஷத்தால் பீடிக்கப்பட்டோ இருப்பாள்.

(109) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி சனியுடன் கூடி புத்திர பாவத்திற் கேழில் ராகுவும், ஐந்தாம் பாவத்திலேயே குருவுமிருந்தால் ஸந்தானம் நிலைக்காது, சாந்தி செய்தால் புத்ர சந்தானம் நிலைக்கும்.

(110) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி நீசபங்க ராஜயோகத்தில் ஜனித்தவனுக்குச் சனி திசையில் தனமும், சுகமும் உண்டாகி பத்து லக்ஷாதிபதியான ஸ்ரீமானுகவும் இருப்பான்.

(111) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்திலிருந்தாலும், தன் உச்ச ராசியை அடைந்திருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டிருந்தாலும், ஜாதகன் நல்ல செய்கையுடையவனும், புண்ணிய கர்மங்களைச் செய்பவனும், தனத்தைக் சம்பாதிப்பவனும், லோகாந்திரத்தில் கீர்த்தியுடையவனுமாயிருப்பான்.

(112) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி பன்னிரண்டில் சூரியனும், குருவும் கூடி இருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சௌக்கியம் உண்டாகாது.

(113) ஜென்ம லக்கினம் மேஷம் (பங்கஜாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 29-36கலை முதல் பாகை 29-48கலை வரையிலும்) ஆகி மாளவீ யோகத்தில் சுக்கிர திரிம்சாம்சத்தில் ஜனித்தவன் மகாராஜனுகவும், அதிருஷ்டசாலியாகவும், மேதாவியாகவும், சமதேகியாகவும், கருப்பு நிறமாகவும், ராஜலக்ஷணங்கள் நிறைந்தவனுகவும், புத்திமானுகவும், வித்தையுடையவனுகவும் இருப்பான்.

(114) ஜென்ம லக்கினம் மேஷம் (பங்கஜாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய புதன் பதினேரும் பாவத்தில் சூரியனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி வலுத்திருந்தால் லட்சுமியோகம் உண்டாகிறது. இந்த யோகத்தில் ஜனித்தவன் சுகியாகவும், வாசாலகனுகவும், நல்லசுகுமார சரீரமுள்ளவனுகவும், கம்பீர மனதுடையவனும், கொடையாளியாகவும், தேஜஸ்ஸுடையவனுகவும், நல்ல புத்தி

யுள்ளவனுகவும், அன்னிய பாஷைகள் கற்றவனுகவும், போகியாக வும், ஆயுதத்தைத் தரிப்பவனுகவும் இருப்பான்.

(115) ஜென்ம லக்கினம் மேஷம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்திலிருந்து பத்தாம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் இருந்தால் ஸிம்மாசனுதிபதியாகி சதுரங்க பலங்களுடன் கூடியும், யானை, குதிரை, தேர் முதலியவற்றுடன் கூடியும், அநேக வாகன சௌக்கியமுடையவனுகவும், சத்திர சாமராதிகளுடன் கூடியும், அரசர்களுக்கெல்லாம் மேலானவனுயு மிருப்பான்.

(116) ஜென்ம லக்கினம் மேஷம் (பங்கஜாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய புதன் பதினேராம் பாவத்தில் ரவியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குத் தன் சகோதரனுடன் கொஞ்சம் துவேஷம் உண்டாகும். அதனுல் கொஞ்சம் வியாகூலமுண்டாகும், இவர்கள் ஒருவருக்கொருவர் கலகத்தால் கஷ்டமடைவார்கள், பிதாவும் நிச்சயமாக மரணமடைவார், பந்துக்கள் மூலமாக சகோதரர்களுக்குள் கலகநிவர்த்தியுண்டாகும், முப்பத்தெட்டு வயதுக்கு மேல் ஜாதகன் நல்ல கீர்த்தியுடையவன், ராஜ்ய தந்திரத்தில் சுதந்திரமுடையவன், கொடுக்கும் கொடையாளி, போகி, ராஜ்ய லக்ஷிமியோகம் உண்டாகும், தன்ராஜ்யத்தை நல்லபுத்தியுடன் பரிபாலிப்பான், நார்பதாவது வயதில் தனம் சம்பாதிப்பான், தன் புத்திரனும் பெரிய கீர்த்தியுடையவன், ஐம்பதாவது வயதிலும் இப்படியே யோகமுண்டாகும்,ஆயுளுள்ளவரையிலும் பாக்கிய முள்ளவனுயிருப்பான்.

(117) ஜென்ம லக்கினம் மேஷம் (பங்கஜாம்சம்) ஆகி சுக்கிரன் தன்னுடைய உச்சராசியிலிருந்தால் ஜாதகன் இரண்டு அல்லது மூன்று விவாகத்தையுடையவன், விவாகத்துக்குப் பிறகு சுகமும், சுயப்பிரபலமும் உண்டாகும்.

(118) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸமாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி கும்பாம்சத்திலிருந்து சூரியனுல் பார்க்கப்பட்டாலும், ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் சகோதரர்களில்லாதவன், பாலியத்தில் ஸ்வல்ப சுகமுடையவன், யௌவன காலத்தில் ருண பீடையுடையவன், மத்தியில் சொற்ப பலனுள்ளவன், வாசாலகன் வெகுபுத்தி யுடையவன்.

(119) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸமாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி யுக்மாம்சத்தில் கேதுவுடன் கூடியிருந்து குருவால்

பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவளாவாள்.

(120) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸமாம்சம்) ஆகி சனி தனுசு ராசியில் இருபத்தாறுவது சஷ்டியம்சமாகிய அர்தாம்சத்தில் இருக்கப் பிறந்த ஜாதகனுக்கு மத்திப வயதில் பாக்கியமுண்டாகும்.

(121) ஜென்ம லக்கினம் மேஷம் (சம்பகாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் பிறந்தவனுக்குப்பதினோராம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தை அடைந்திருந்தால் ஸம்பத்தராதி திசையில் பத்தாம் பாவாதிபதி அம்சை சக்கிரத்தில் இருக்கும் இராசிக்குத் திரிகோண ராசியில் கோட்சாத்தில் குருவரும்போது ஜாதகனுக்கு விவாகம் நடக்கும்.

(122) ஜென்ம லக்கினம் மேஷம் (அம்புஜாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி கேந்திரத் திரிகோண லாப ராசிகளில் இருந்தால் ஜாதகனுடைய பின் சகோதரன் நீண்ட ஆயுளுடையவன், அவன் எப்போதும் லக்ஷ்மீ கடாக்ஷமுடையவன், தனதான்ய விர்த்தியுடையவன். ஜாதகனுக்கு ஒரு சகோதரி நீண்ட காலம் ஆயுளுடையவள், அவள் அந்திய வயதில் நல்ல புத்திரியுடையவள்.

(123) ஜென்ம லக்கினம் மேஷம் (அம்புஜாம்சம்) ஆகி சாமர யோகதஇல் குருத்ரிம்சாம்சத்தில் ஜனித்தவன் வெளுப்பு நிறமுடையவன், சமர்த்தன், திட்டமாய்ப் புசிப்பவன், பிதுரு பாக்யமுடையவன், வித்தையினுல் ஜீவிப்பவன், குணத்துடன் கூடினவன், பாலியத்தில் துஷ்டனுயிருப்பான், பதினாறு வயதில் இருந்து குணாதிகமுடையவனுவான், தாய் சௌக்கியங் குறைந்தவன், பிதா பிரபல யோகமுடையவன், கல்வியால் தினம் ஜீவிப்பவன், காமியாயிருப்பவன்.

(124) ஜென்மலக்கினம் மேஷம் (அம்புஜாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்சாராசியிலிருந்தாலும், புதன் லக்கினபாவ கேந்திரங்களிலிருந்தாலும், ஜாதகன் வித்தை மூலம் நல்ல கீர்த்தியுடையவனும், சாஸ்திர, ஞானபாராயணம் செய்பவனுமாவான்.

(125) ஜென்ம லக்கினம் மேஷம் (அம்புஜாம்சம்) ஆகி குருவர்க்கோத்தமாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் வேத சாஸ்திரபுராணமறிந்தவனுகவும், வைதிகாசார முடையவனுகவும், தர்மாத்துமாவாகவும், பல தேசங்களிலும் புகழுடையவனுகவும் இருப்பான்.

(126) ஜென்ம வக்கினம் மேஷம் (அம்புஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் சாமரயோகம் என்று பெயர். இந்த யோகத்தில் ஜனித்தவன் நல்ல பாக்கியமுடையவனுகிறுன்.

(127) ஜென்ம லக்கினம் மேஷம் (அம்புஜாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் விஷ்ணு லோகத்தை அடைகிறுன்.

(128) ஜென்ம லக்கினம் மேஷம் (திரைலோக்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி ஆறும்பாவத்திலிருந்து சுக்கிரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் எழுபது வயதுடையவனுகிறுன்.

(129) ஜென்ம லக்கினம் மேஷம் (திரைலோக்யாம்சம்) ஆகி சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும் சுய க்ஷேத்திரத்தில் பிதுரு பாவாதிபதி இருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் வெகு காலம் ஆயுசுடையவனுகவும் சுகியாயுமிருப்பான்.

(130) ஜென்ம லக்கினம் மேஷம் (திரைலோக்யாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி செவ்வாயால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் சத்துருக்களை அழிப்பவனும், பிரதாபமுடையவனுமாகிறுன்.

(131) ஜென்ம லக்கினம் மேஷம் (திரைலோக்யாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் புதன் இருந்தால் ஜாதகன் ரோகியாயும் துர்ப்பலமான தேகமுடையவனுமாகிறுன், சனி கூடியிருந்தால் செளக்கியமுண்டாகும்.

(132) ஜென்ம லக்கினம் மேஷம் (திரைலோக்யாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி விருஷபாம்சத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டாலும், தன் உச்சாம்சத்தில் ஆறும் பாவத்தில் செவ்வாயிருந்தாலும், சகோதர பலம் அற்பமாயிருக்கும், ஒரு சகோதரன் தீர்க்காயுளுடனும், நான்கு சகோதரிகளும் இருப்பார்கள். அதிகம் இருந்தாலும் நாசமடைந்துவிடுவார்கள்.

(133) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி சூரியன் பிரபாம்சத்தில் ஸ்திர ராசியிலிருந்து குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் எல்லா செளபாக்கியங்களுடன் கூடி, காமியாயும், தானத்துடன் கூடியும், சுசியுள்ளவனயும் இருப்பான்.

(134) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி சனியால் பார்க்கப்பட்ட சூரியன் பிரபாம்சத்தில், சூம்பாம்சத்தில் இருந்து

மத்தியானத்தில் ஜெனித்தவனுடைய தாய், தகப்பன் தீர்க்காயுளுடையவர்களா யிருப்பார்கள். தகப்பன் அசமந்தன், சகோதர சகோதரிகளுடன் கூடினவன், தாமதமானசுபாவமுடையவன், கல்வி சௌக்கியமில்லாதவன், அந்த கும்பாம்சத்தில் ராகு இருந்து பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய பிதாமஹி கெட்ட ஒழுக்கமுடையவள், பிதா வம்சத்தில் களங்க முண்டாகும், தாய் வம்சத்தில் விவாகம் நடக்கும்.

(135) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி, சனியுடன் கூடியிருந்து குருவால் பார்க்கப்பட்டால் பூர்வபாகத்தில் ஜனித்த ஜாதகனுடைய தாய் வம்சம் சீலமுடைய தாய் இருக்கும், ராகுவால் பார்க்கப்பட்டால் பிதாவினுடைய பாட்டியின் குணம் முன் சொல்லியபடி ஒழுக்கம் கெட்டதாயிருக்கும்.

(136) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி மீனத்தில் நீசாம்சத்தில் குரு இருந்து விகடாம்சத்தில் இருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டால் வம்சத்தில் களங்கமானது தனது பாட்டியால் உண்டாகும், தன் தகப்பனுடைய சகோதரியும் கூட பாட்டியைப் போலவே யிருப்பாள், மேலும் பிதாமஹனுடைய சகோதரனுடைய பார்யைகூட வியபிசாரியாயிருப்பாள். ஜாதகனுடைய தாய் நல்ல குணவதி, பரிசுத்தமானவள், சுப்ரபாம்சத்தில் ஆனால் பதிவிரதை என்கிற தாய் புத்திர பாக்யமுடையவள், பிராதுரு பாக்கியமுடையவள், சொற்ப புருஷ சுகத்துடன் கூடினவள், ஒரு சகோதரனையும், ஒரு சகோதரியையும் உடையவள். பேத சகோதர சகோதரியுடையவள், தாய் சௌக்யமில்லாதவள், பிதுரு சௌக்கியமுடையவள், இப்படிப்பட்ட தாய் வெகுகாலம் சுமங்கலியாயிருப்பாள்.

(137) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி விருச்சிக ராசியில் பிரபாம்சத்தில் சூரியனும் ஸிம்ம ராசியில் சனியுமிருக்க ஜனித்தவன், தன் பிதா சௌக்கியமில்லாதவன், சுயார்ஜிதமும் இல்லாதவன், பிதுரு பாக்யத்தால் அற்ப சந்தோஷி, மனைவி பாக்கியத்துடன் கூடினவன், கொஞ்சம் ரோக சரீரமுடையவன், கிரக சங்கையால் பீடிக்கப்பட்டவன், கெட்ட கனவின் பயனால் ஆபத்தை யுடையவன், அக்கிரஹாரத்தில் வசிப்பவன், சகோதரனுடைய பிரபலயோகமுலமிவனும் மத்திய காலத்தில் பாக்கியம் அபிவிர்த்தி யுடையவன், கிராமாந்தரத்தில் சகோதரியாலும், சகோதரனாலும் கொஞ்சம் சோகமடைவான்.

(138) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி ஆரும்பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகன் வாத தேகி, தனத்தைச் சம்பாதிப்பவன், தாயாதி வம்சத்தில் ஆபத்தை அடைபவன், வயோதிக வயதில் சகோதரனால் சோகமும் அடைகின்றான். அம்மான் ஒருவன் ஆயுளுடையவன், ஒரு மாற்றுந்தாய் சகோதரனையுமுடையவன்.

(139) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி ஆரும்பாவத்தில் சனி, செவ்வாய் இவர்களிருந்தால் ஜாதகனுக்கு எவ்வளவு பணமிருந்தாலும் அவன் புத்திரனில்லாதவனாகிறான். ஒரு சமயம் புத்திரன் பிறந்தாலும் இறந்துவிடும். புத்திரதோஷ முடையவனாகிறான், ஸம்பத்திசையில் அம்மானுடைய தகப்பனால் ஜாதகன் பாக்கியத்தை அடைகிறான்.

(140) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி தனுசுராசியில் குந்தாம்சத்தில் சனி இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் பூர்வபாகத்தில் ஜனித்தவனுக்குச் சகோதரர்கள் உண்டு. இவனுடைய தகப்பனுக்கும் சகோதரர்கள் உண்டு. உத்தராம்சத்தில் பிறந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குக் சகோதரனில்லை, ஜாதகனுக்கும் சகோதரனில்லை, இரு வருக்கும் சகோதரிகள் அநேகர் உண்டு.

(141) ஜென்ம லக்கினம் மேஷம் (அபலாம்சம்) ஆகி சூரியன் பிரபாம்சத்தில் விருச்சிக ராசியிலிருந்து கன்னியா ராசியில் சனி யிருந்தால் சகோதர பீடையும், தனுசு ராசியில் இருந்தால் சகோதர அரிஷ்டமும் உண்டாகும்.

(142) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி குரு தன்னுச்ச ராசியிலாவது மேஷாம்சத்திலாவது இருந்தாலும் சுக்கிரனுடன் கூடியிருந்தாலும் மதங்கயோகம் என்று சொல்லப்படுகிறது.

(143) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி நீசமடைந்த பாபியான சனி சந்திர கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் குலத்தில் ஏதோ ஒரு தோஷமுள்ளவனாகிறான்.

(144) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி காலகூடாம்சத்தில் குரு இருந்து மதங்க யோகத்தில் ஜனித்தவன் பெண்ணை விற்றுப் பணத்தையடைவான், சகோதரியினுடைய தனமும் கொஞ்சம் அடைவான்.

(145) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி ராகுவுடன் கூடி யிருந்தாலும், குரூரசஷ்டியம்சத்திலிருந்

தாலும் ஜாதகனுடைய தாய் துர்மரணமாகவே மரிப்பாள். தவிர ஜாதகனுடைய தகப்பன் பாலியத்திலேயே ஸ்திரீ காரணமாக கிலேசமடைந்து ஸந்நிபாத ஜுரத்தால் தேசத்திலிருந்து வெளிதேசத்தில் மரிப்பான்.

(146) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி மதங்காம்சத்தில் பன்னிரண்டாம் பாவத்தில் பாபக் கிரகங்களிருந்தால் ஜாதகன் துரக கெதியே நிச்சயமாக அடைவான், மறுஜென்மங்கூட தாழ்மையானதாகவே உண்டாகும்.

(147) ஜென்மலக்கினம் மேஷம்(ஜகத்யாம்சம்) ஆகிஒராவதுபாவத்தில் சூரியன் சனியுடன்கூடி இருந்தாலும், பதினொன்று, ஒன்பது முதலிய பாவங்களில் கேது இருந்தாலும், ஜாதகனுடைய தகப்பனுக்குச் சௌக்கியம் உண்டாகாது. ஜாதகனுடைய தகப்பன் அற்ப பாக்கியமுடையவன், சகோதரனால் சௌக்கியமடைவான், அற்பாயுளுடையவன்.

(148) ஜென்ம லக்கினம் மேஷம் (ஜகத்யாம்சம்) ஆகி சந்திரன் பாப ராசியை யடைந்து குருவும் பாபக்ஷேத்திரத்தை அடைந்திருந்து ஜனித்தவனுக்குப் பாபச் சகடயோகம் ஏற்படுகிறது. ஷை சகட யோகத்தில் ஜனித்தவனுக்கு வழி வழியாக யோகபங்கம் உண்டாகும். ஜாதகன் இதரனுடைய மனதைக் கெடுப்பவன், இடையூரான வேலைகளைச் செய்பவன், பாபத்தையே தேடுவான், கிராமங்களிலும், தேசங்களிலும் பிராமணர்கள், அரசர்கள் இவர்களுடைய தனத்தை அபகரிப்பவன், அழுக்கடைந்த சரீரமுடையவனும், செய்நன்றியை மறப்பவனுமாகிறான்.

(149) ஜென்ம லக்கினம் மேஷம் (துர்தாராம்சம்) ஆகி சுக்கிரன் கேதுவுடன் கூடியிருந்தால் ஜெனனகாலத்தில் ஜாதகனுடைய தாய்க்குப் பீடையுண்டாகும்.

(150) ஜென்ம லக்கினம் மேஷம் (துர்தாராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி துலாராசியில் கேந்திரத்தில் இருந்து மூன்றும் பாவத்தில் சூரியனுமிருந்தால் ஜாதகனுடைய தாய், தகப்பனுக்குச் சுகமும், ஜாதகனுக்குச் சகோதர விருத்தியுமுண்டாகும்.

(151) ஜென்ம லக்கினம் மேஷம் (துர்தாராம்சம்) ஆகி லக்கின பாவத்தின் அதிபதி இரண்டாம் பாவத்தில் புதனுடன் கூடியிருந்து

மூன்றும்பாவத்தில் பாபக்கிரகமிருந்தால் ஜாதகன் அரசாங்கமுத்திரை தரித்து அதிகாரம் செய்பவனுகவாவது அல்லது அரசனுக்குச்சம மான வைபவங்களுடையவனுகவாவது இருப்பான்.

(152) ஜென்ம லக்கினம் மேஷம் (துர்துராம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் குரு அல்லது ஒன்பதாமாதிபதி யிருந்தால் ஜாதகன் தன் புத்திரன் மூலமாகப் புகழும், அந்த கிரக திசையில் விசேஷ சுகத்தையும் அடைகிறுன்.

(153) ஜென்ம லக்கினம் மேஷம் (துர்துராம்சம்) ஆகி லக்கினம் முதல் வரிசையாக இருக்கப்பட்ட கிரகங்கள் மூலம் ஏர்ப்படும் லக்கி ஞதிபதி மாலிகாயோகத்தில் ஜனித்தவன் நல்ல பாக்கியத்தை யடை வான். சாமரயோகத்தில் ஜனித்தால் பதினுறு வருஷம் வரையில் விடாமல் தொடர்ந்து யோகமாகவே யிருந்து யோகமுடிவில் அப மிருத்துவை யடைகிறுன். அதன்படி யில்லாமல் பிழைத்திருந்தால் தீர்க்காயுளை யுடையவனுயிருப்பான்.

(154) ஜென்ம லக்கினம் மேஷம் (துர்துராம்சம்) ஆகி கடக ராசியில் லக்கிஞதிபதியிருந்து சாமரயோக முண்டானுல் (அதாவது கேந்திர திரிகோணங்களில் சுக்கிரனிருந்தால்) ஜாதகன் ராஜயோக முடையவனுவான், பாலியத்தில் கிலேசம் முதலிய தரித்திரம், அதிக பாலாரிஷ்டமும் உண்டாகும், புண்ணிய வசத்தால் ஜீவித்தால் எண் பது வயது வரையிலும் ஜீவித்திருப்பான்.

(155) ஜென்ம லக்கினம் மேஷம் (துர்துராம்சம்) ஆகி விரயபா வாதிபதி கேந்திர ராசிகளிலிருந்து லக்கின பாவாதிபதியுடன் கூடி யிருந்தாலும் லக்கின பாவாதிபனுல் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் மரணத்திற்குப் பிறகு நல்லகதி யடைவான்.

(156) ஜென்ம லக்கினம் மேஷம் (நிர்மலாம்சம்) ஆகி மதங்க யோகத்தில் ஜனித்தவனுக்குச் சந்திரன் உச்சாம்சத்திலிருந்து சுய க்ஷேத்திரத்தில் எட்டாம் பாவாதிபதியும், ஐந்தாம் பாவத்தில் குருவு மிருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டம் சம்பவிக்காது. மூன்று அல் லது ஐந்து, ஆறு வயதுகளில் பாலரோகத்தால் பீடையுண்டாகிப் பிறகு சுகமுண்டாகும்.

(157) ஜென்ம லக்கினம் மேஷம் (நிர்மலாம்சம்) ஆகி சந்திரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும், நான்காம் பாவாதிபதி அப்

படியே கேந்திரத் திரிகோணங்களி லிருந்தாலும், ஜாதகனுடைய தாய்க்குச் சௌக்யமும் விசேஷ சுகமும் உண்டாகும்.

(158) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி லக்ன பாவாதிபதி செவ்வாய் தனுசாம்சத்தில் பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் பெரிய நதிப்பிராந்தியத்தில் அக்ரஹாரத்தில் ஜனித்தவனாகிறான், தேவாலயம் சமீபத்திலிருக்கும் வாஸமும் அப்படியே உத்தராம்சத்தில் ஜனனமானால் பெரிய கிராமத்தில் தேவாலயமில்லாத இடத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு வாயிற்படியுள்ள வீட்டில் ஜனிப்பான்,

(159) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சிம்மாம்சத்தில் சத்துருராசியிலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜென்ம காலத்தில் ஜாதகனுடைய தாய்க்குப்பிரசவத்தில் வேதனை கொஞ்சமாயிருக்கும், உத்தராம்சத்தில் ஜெனனமானால் வேதனை அதிகமாகி மூன்று தினம் கஷ்டப்பட்டு பிரசவிப்பாள். தாய்க்குப் பீடையால் பயமுண்டாகும். வேறு சிலர் தாய் மரித்துவிடுவாள் என்று சொல்லுகிறார்கள். பூர்வபாகத்தில் தாய்க்கு பீடையுண்டாகி அச்சமயம் தேகசுகமுண்டாகும்.

(160) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதியால் அடையப்பட்ட ராசிநாதன் பதினோராம் பாவத்தில் மித்ரக் கிரகத்துடன் கூடியிருந்தாலும், குருவுடன் அந்த பாவத்தில் கூடி யிருந்தாலும் தாய்க்குச் சுகமும் சுபமு முண்டாகும்.

(161) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி யிருக்கப்பட்ட ராசிநாதன் சுயக்ஷேத்திரத்தில் பலத்துடனிருந்தாலும், லக்கின பாவத்துக்கெட்டில் குரு இருந்தாலும் ஜாதகன் தீர்க்காயுளுடையவன்.

(162) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தாலும் ஆறும் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய மூத்த மனைவி மரித்துவிடுவாள்.

163) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி கேது செவ்வாய் இவர்களுடன் சுக்கிரன் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்கு மூன்று தார முண்டாகும்.

(164) ஜென்ம லக்கினம் மேஷம் (ஸ்நிக்தாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் ராகு இருந்து அந்த பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்

தால் ஜாதகனுக்கு முதலில் எட்டு பெண்களும் கடைசியாகக் காலாந் தரத்தில் ஒரு புத்திரனும் உண்டாகும்.

(165) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி குஜன் பதினோராமிடத்தில் பதினோராம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் நல்ல ரூபமுள்ளவன், புத்தியுள்ளவன், பேசுந்திறமையுள்ளவன் அழகிய முகமுங் கண்களும் பொருந்தியவன். சிவப்பு நிறம் மத்திய காத்திரம் கொஞ்சம் ஸ்தூல தேகமுடையவனுவான்.

(166) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி குரு சந்திரனுடன் பத்தாமிடத்தில் இரண்டா மிடத்துக்குடைய சுக்கிரனுடன் கூடியிருந்தால் காவிய நாடக ஸார மறிந்தவன். வேத சாஸ்திர புராணங்களை அறிந்தவன் சம்ஸ்கிருதத்தைப் பிரியமாய்ப் பேசுபவன் பிரபு சிநேகமுடையவனுகிப் பணத்தைச் சம்பாதிப்பான், அயலார்களுக்கு இங்கிதம் செய்யத் தெரிந்தவன், மேதாவி, பிராமணனுல் இடையூறு அடைவான்.

(167) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி மூன்ரும் பாவாதிபதி மீனராசியில் சூரியன் ராகு இவர்களுடன் கூடியிருந்தால் மூத்த சகோதரர் இருவரையுடையவன், அவர்களில் ஒருவன் மரிப்பான், உடன் பிறந்த இளைய சகோதரன் இல்லை. கொஞ்ச காலம் சுமங்கலியான சகோதரி ஒருத்தியையுடையவன், அவள் அநேக புத்திரிகளுடன் கூடியவள், காலாந்தரத்தில் நல்ல புத்திரியை அடைவாள்.

(168) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி நாலாமிடத்திற்குடைய சந்திரன் ஏழாமிடத்தில் (காளாம்சத்தில்) இருக்கப் பிறந்தவனுடைய தாய் வெகு புண்ணியம் செய்தவள், ஜீவி, புருஷனுடன் கூடினவளாயிருப்பாள், நல்ல வாழ்வில் வாழ்பவளாகி சந்திர திசையின் முடிவில் மரிப்பாள், தவறினுல் அதற்குப் பிறகு மூன்ரும் வருஷத்தில் நிச்சயமாய் மரணமடைவாள்.

(169) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி வாகன ஸ்தானுதிபதியான சந்திரன் பத்தாமிடத்தில் குரு சுக்கிரனுடன் கூடியிருந்தால் மூன்று வாகனங்களுள்ளவன், நரவாகனம் உள்ளவன், பாக்கியமுள்ளவன், பூமிலாப, தானியலாப முள்ளவன், கொஞ்சம் வியாபாரம் செய்பவன்.

(170) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி ஐந்தா மிடத்திற்க்குடைய சூரியன் பன்னிரண்டாமிடமான மீனத்திலிருந்து புதன் ராகுவுடன் கூடி புத்திர பாவத்தில் இருந்தால் புத்திரநாசம் உண்டாகும். அல்லது பிறந்து பிறந்து மரிக்கும். ஏகாதசியில் பசு தானம் செய்து அரசமரம் வைத்துப் பிரதிஷ்டை செய்து சிம்சுமார தானம் செய்தால் வெகு காலத்திற்குப் பிறகு புத்திரன் பிறப்பான். அல்லது தாராந்தரத்தில் பிறக்கும் என்று சிலரும் சொல்கிறார்கள். தனக்கு ஒரே புத்திரனுண்டாகும், சாந்தி யந்திரதானம் முதலிய முயற்சிகளால் புத்திரர்கள் இருவர்களாவது, மூவர்களாவது முன் சொன்னபடி வெகு கஷ்டத்தால் உண்டாவர்.

(171) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி ஆறுக் குடைய புதன் பனிரெண்டாமிடத்தில் நீசமாகி சூரியன் ராகு இவர் களுடன் கூடியிருந்தால் எப்போதும் வாயுசரீர முள்ளவனும், பித்தம் உஷ்ணம் இவை அதிகமுள்ள தேகியாயுமிருப்பான், கொஞ்சம் விரை வாதம் உள்ளவனும், இருதய சூலை வியாதியால் கொஞ்சம் பீடை யுள்ளவனும் இருப்பான்.

(172) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி ஏழா மிடத்திற்குடைய சுக்கிரன் பத்தாமிடத்திலிருந்து, இரண்டாம் பாவ மானது குருவால் பார்க்கப்பட்டால் தன் தேசத்திலேயே பத்தினி லாபமும், தன் கிராமத்திலேயே விவாஹமும் நடக்கும், சிவப்பு நிற முள்ள மனைவியை யுடையவன், மறு களத்திரத்தினிடமாக புத்திர உற்பத்தியும், சனி திசையில் சுக்கிர புத்தியில் இரண்டு மனைவியரு டன் கூடி யிருப்பான் என்று சிலரும், ஒரே மனைவிதான் நிச்சயம் என்று சிலரும் சொல்லுகிறார்கள்.

(173) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி ஒன்ப திற்குடைய குரு பத்தாமிடத்தில் சுக்கிரன் சந்திரனுடன் கூடியிருந் தால் ஜாதகனுடைய தகப்பனவன் பாக்கியம் உள்ளவன், சாது, புத்திரி, புத்திரன் இவர்களுடன் கூடினவன், ராகு திசையில் பத்து பதினொன்றுக் குடையவரான சனி புத்தியில் ஜாதகனுடைய பிதா நிச்சயமாய் மரணமடைவான்.

(174) ஜென்ம லக்கினம் மேஷம் (களாம்சம்) ஆகி பத்தாமி டத்துக்கும் பதினோராமிடத்துக்குமுடைய சனி திசையில் சூரியன் ராகு, கேது, புக்திகளில் தேகபீடை மனஸ்தாபம் தனக்குச் சமமான

ஜனங்களால் அவதியும் ஷடி சனி திசையில் மூன்று, ஆறு, இரண்டு, ஏழு முதலிய ஸ்தானங்களின் அதிபதியான புதன். சுக்கிரன் புத்திக களில் கொஞ்சம் தேக, பீடை, கஷ்டம், தனதான்யகுறைவு, சத்துரு ராஜா இவர்கள் மூலம் பயம் முதலியன உண்டாகும். முன் சொன்ன தோஷங்களுக்குப் பரிகாரம் சாந்தி தானம் முதலியன செய்ய வேண்டும்.

(175) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி ஜென்மலக் கினதிபதி மேஷத்தில் இருந்து ஒன்பது பனிரெண்டுக்குடைய குரு தன் உச்சராசியான நான்காமிடத்தை யடைந்திருக்கும்போது பிறந் தவன் ரூபவான், புத்திமான், வாசாலகன் பேசுந்திறமை யுள்ளவன் தெளிந்த முகமுங் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, தர்மாத் துமா சிவப்பு நிறமுள்ளவன், நல்ல ஆகிருதி உடையவன், சாத்வீக குணம் நிறம்பினவன், ராஜயோகத்துடன், கூடினவன் சுகமுள்ளவன் சிவ பக்த குலத்தில் பிறந்தவன், போகி, ஸ்திரீ லோலன் பிராமணஸ் திரீ சேர்க்கையுள்ளவன், தாமரை இதழ்போன்ற கண்களுள்ளவன், ஸங்கீத ரஸிகன், பிராக்ஞன், கந்தமாம்ஸ ரஸப்பிரியன், ஸ்நாநாசாரத் துடன் கூடினவன், மானி, விஷ்ணு, சிவன் முதலியவர்களிடத்தில் பக்தியுள்ளவன், நீச்சப் பிரபுவினிடத்தினின்று பாக்கியத்தை யுடைய வன், உத்தியோக ஜீவனம் என்று சொல்லப்படுகிறது.

(176) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி குரு சந்திர னுடன் கூடியிருந்தால் வாக்சாதுர்ய முள்ளவன், யுக்தி உள்ளவன், பரோபகாரி, தியாகம்செய்பவன், எல்லா ஜனங்களுக்கும் பிரியமுள்ள வன்.

(177) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி இரண்டாமி டத்தைச் சனி பார்த்திருக்கப் பிறந்தவன் வைசூரி, ஜ்வரம் முதலிய கண்டம் உள்ளவன், பல்லில்வாயு பீடையுள்ளவன், பல்லிலிருந்து ரத் தம் வடிந்துக்கொண்டிருக்கும். இரண்டு பாஷைகள் அறிந்தவன், கல்வி கேள்விகளில் வல்லவன், கம்பீரத்தோற்ற முள்ளவன், தேன் போல் இனிமையாய்ப் பேசுபவன், பிரபுவைப்போல் லக்ஷண முள்ளவன், உஷ்ண காத்திரம் உள்ளவன், மேதாவி, மெல்லிய சரீரமுள்ளவன், பித்தோஷ்ணம் அதிகமுள்ள தேகி, பித்தம் நிறைந்த தேகம் உள்ள வன், காமீ, பலஜாதி ஸ்திரீகளுடன் புணருபவன், ஹிருதய ரோக முள்ளவன், கொஞ்சகாலம் ஆயிரத்துக்கு அதிகமானபணமுள்ளவன்.

(178) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி மூன்றாம் பாவாதிபதி புதன் விருச்சிகத்தில் இருந்து குருவால்பார்க்கப்பட்டால் ஜாதகன் மூத்த இளைய சகோதரர்களுடன் கூடினவனாயிருப்பான், மூன்றுசகோதரிகளாவது இரண்டு சகோதரிகளாவது இருப்பார்கள். ஜாதகனுடைய மூத்தவன் பிள்ளை உடையவன், மூன்றாம் திசையில் மரிப்பான், தன்னுடைய சகோதரிகளில் மூத்தவள் விதவையாகி இருப்பாள்.

(179) ஜென்மலக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி நான்காமிடத்துக்குடைய சந்திரன் தனுசில் சுக்கிரனுடன் கூடி செவ்வாயால் பார்க்கப்பட்டால் மாதா தீர்க்காயுள் உள்ளவளா யிருப்பாள், குணத்துடன் கூடினவள், புண்ணியவதி, பிள்ளைச்குத் திருப்தியாய் வேண்டியதை செய்வாள், ஸதியாவாள், செவ்வாய் திசையில் ராகு புக்தி, சந்திர புக்திகளிலாவது, சனி கோச்சாரத்தில் தனுசின் அந்தியத்திலாவது, மகரத்திலாவது இருக்க மாதாவுக்குப் பீடை உண்டாகும், வைகாசி மாதத்திலாவது, புரட்டாசி மாதத்திலாவது மரணம் உண்டாகும். நாற்பத்தினாலாவது வயதிலாவது, நாற்பத்தாறாவது வயதிலாவது தாயாருக்குப் பீடையும், மரணமும் உண்டாகும்.

(180) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி புத்திர ஸ்தானாதிபதி சூரியன் புதனுடன் கூடி பத்தாம் இடத்தில் இருந்தாலும், புத்திர ஸ்தானத்தில் சனியுடன் கூடினாலும் வளர்ப்புப் பிள்ளையால் சந்ததி உண்டாகும், ஏகாதசியில் கோதானமும், ஸந்தான பிரதிமை விஷ்ணு ரூபமாகவும் எண்பத்தொரு தானத்தாலும் அநேக புண்ணிய வசத்தாலும் அந்திய காலத்தில் புத்ர லாபமும் அல்லது வேறு களத்திரத்தினால் புத்ர லாபமும் உண்டாகும்.

(181) ஜென்மலக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி ஏழுக்குடையவன் சந்திரனுடன் கூடி களத்திர ஸ்தானம் சனியால் பார்க்கப்பட்டால் தன் பட்டணத்திலிருந்து வடக்குப் பாகத்தில் காட்டுக்குச்சமீபமாக களத்திர லாபம் உண்டாகும், பத்தினி மங்கின நிறம் உள்ளவள் எப்போதும் ரோக சரீரம் உள்ளவள், புத்திரருடன் கூடினவள், புண்யவதி, புருஷனிடத்தில் பக்தியுடன் கூடினவள்.

(182) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி ஒன்பதுக்குடைய குரு தன்னுடைய உச்ச ராசியான கடகத்தில் இருந்தால் முப்பத்திரண்டாவது வயதில் சித்திரை மாதத்தில் கலியாணம் நடக்

கும். சூரியன் புதனுடன் கூடியிருந்தால் தனனுடைய பிதா யோக வானுயும், குணமுள்ளவனுயுமாவான், இருபத்தொன்பதாவது வயதில் மாசி மாதத்தில் தகப்பன் மரணம் அடைவான். பித்த உஷ்ண பாண்டு ரோகத்தாலாவது அன்னத் துவேஷத்தாலாவது மரிப்பான்.

(183) ஜென்ம லக்கினம் மேஷம் (சுப்ராம்சம்) ஆகி ஜென்மலக் கினுதிபதி லாபஸ்தானத்திலிருந்து சந்திரனுடன் கூடியிருந்தால் மாதா நீண்ட ஆயுளுடையவள் சகோதரர்களுடன் கூடினவன்.

(184) ஜென்ம லக்கினம் மேஷம் (சுப்பிரபாம்சம்) ஆகி பிதரு பாவாதிபதியாகிய குரு கேந்திர திரிகோணங்களில் இருந்து சுக்கி ரன் சூரியன் இவர்களுடன் சேர்ந்திருந்தாலும், இவர்களால் பார்க்கப் பட்டாலும் ஜாதகனுடைய பிதா நீண்ட காலம் ஆயுஸுடையவன், சாத்வீகன், சாந்த குணமுடையவன் கிராம உத்தியோகத்தால் ஜீவ னம் செய்பவன் தன்தகப்பனுடைய ஜனங்களுடன் கூடினவன் பிதா வின் வம்ச விருத்தியுடையவன்.

(185) ஜென்ம லக்கினம் மேஷம் (சுப்ரபாம்சம்) ஆகி லக்கின கேந்திரத்தில் புதனிருந்து தன்னுடைய அம்சத்தில் பல முள்ளவனு யிருந்தாலும் குஜன் சந்திரனுடன் கூடி பதினோராமிடத்தில் இருந்தா லும் செவ்வாய் ரிஷபத்தில் இரண்டாம் பாவத்திலி இருந்தாலும் ஜாத கன் சகோதர பாக்கிய முடையவன், இவன் ஸீமந்த புத்திரனுவான், இரண்டு மூன்று சகோதரிகளையும் அதைப்போல சகோதரனையும் உடையவன், இவர்களில் கடைசியாகப்பிறந்தவன் ஒருவனே ராஜாங்க யோகமுடையவன்.

(186) ஜென்ம லக்கினம் மேஷம் (சுப்ராம்சம்) ஆகி எட்டுக்கு டைய செவ்வாய் லாப ராசியை யயைந்து அந்த பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் அம்புஜாம்சமேரினுல் ஜாதகன் தீர்க்காயுளுள்ளவன்.

(187) ஜென்ம லக்கினம் மேஷம் (சுராம்சம்) ஆகி சுயக்ஷேத்தி ரத்தில் சுக்கிரன் துலாம்சத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டாலும் குருவுடன் கூடியிருந்தாலும் ஐந்தாம் பாவாதியுடன் கூடியிருந்தாலும் லக்கின பாவத்தில் புதனுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் வெளுப்பு நிறம் உள்ளவன், நல்ல ஆகிருதி உடையவன், மாதுரு பிதுருக்களிடம் விசுவாசியாயிருப்பான் எழுத்து மூலம் ஜீவனம் செய்வான், சாத்வீக னுயும் இனிமையாய்ப் பேசுபவனுகவும், கணிதம் தெரிந்தவனுகவும் பயிர் பசு இவை விருத்தி யுடையவனுயு மிருப்பான்.

(188) ஜென்ம லக்கினம் மேஷம் (சுராம்சம்) ஆகி குரு பன்னிரண்டாமிடத்தில் இருந்து சூரியனும் புதனும் லக்கின கேந்திரத்திலிருக்க தர்ம வழியை கடைப்பிடித்து நடப்பவனுகவும் சிவ பக்த மதத்தை அடைந்தும் இருப்பான்.

(189) ஜென்ம லக்கினம் மேஷம் (சுராம்சம்) ஆகி ஐந்தாம்பாவத்துக்குடைய சூரியன் ஒன்பதாம் பாவாதியுடன் கூடி கர்மாதிபதியுடன் கூடியிருந்தாலும் அவனுல் பார்க்கப்பட்டாலும் ஜாதகன்யோகமுடையவன், புகழுடையவன், வெகு சிநேகிதருடையவன், ராஜாதிகாரமும், நல்லயோகமும் உள்ளவனுவான். அரசாங்க உத்யோகத்திலிருக்கும் இவனுடைய தகப்பனுக்கு இவன் பிறந்த பின்பு அரசாங்கத்தில் கலகத்தினுல் கொஞ்சம் திரவிய நஷ்டமும், மனத்துன்பமும், உண்டாகித் திரும்ப சௌக்கியமும் உண்டாகும், ஜாதகன் அநேக சிநேகிதர்களையுடையவனுகி ராஜாதிகாரத்தை அடைவான்,

(190) ஜென்ம லக்கினம் மேஷம் (சுராம்சம்) ஆகி லக்கினபாவாதிபதி முத்காரம்சத்தில் இருந்தாலும் பதினோராம் பாவத்தில் விருஷபாம்சத்தில் இருந்தாலும் ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் சிறு கிராமத்தில் தாய் வீட்டில் ஜனித்தவன், தாய் வம்சம் விருத்தியுடையவன்.

(191) ஜென்ம லக்கினம் மேஷம் (சுராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் லக்கின பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்க ஆயுசுடையவள், சகோதரப் பிராதாக்களுடன் கூடியவள்.

(192) ஜென்ம லக்கினம் மேஷம் (சுராம்சம்) ஆகி செவ்வாய் ஜென்ம தெசானுதனுகி உச்சராசியிலிருந்தால் அவனுடைய தெசையில் ஜாதகனுடைய தாய் தகப்பனுக்குச் சுகமுண்டாகும்.

(193) ஜென்ம லக்கினம் மேஷம் (சுராம்சம்) ஆகி குரு மூன்றும் தாராதிபதியாகி சுப க்ஷேத்திரத்தில் ஐந்தாம் பாவாதிபதியுடன் கூடி யிருந்து சுக்கிரனுடன் கூடி யிருந்தால் ஜாதகன் அநேக திரவியத்துக்கு நாயகனுவான்.

(194) ஜென்ம லக்கினம் மேஷம் (சுராம்சம்) ஆகி செவ்வாயும் சந்திரனும் கூடி ஒரே அம்சத்தில் பத்தாம் பாவத்தில் இருந்தாலும் அல்லது சந்திரன் பத்தாம் பாவத்திலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் யோகவானுக்வும் தனிகனுகவும் இருப்பான்.

(195) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 3-48 கலை முதல் பாகை 4–00 கலை வரையிலும்) ஆகி நான்காம் பாவாதியாகிய சந்திரன் உச்சத்தில் இருந்து ஒன்ப தாம் பாவாதிபதியாகிய குருவால் பார்க்கப்பட்டால் பிதா பிரபல யோகமுடைவன், தாய் சௌக்கிய முடையவள், வீட்டில் சுபகா முள்ளவள்.

(196) ஜென்ம லக்கினம் மேஷம் (சுதாகரியம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 1-00 கலை முதல் பாகை 1–12 கலை வரையி லும்) ஆகி ஜென்ம தெசானுதனுகிய ராகு, பதினோராம் பாவத்தி லிருந்து குருவுடன் கூடியிருந்தாலும் குருவால் பார்க்கப்பட்டாலும் அந்தத் தெசையில் பிதுர் மரணமும், சகோதரர்களின் மரணமும், தாய்க்குப் பீடையும் உண்டாகி வரவுக்குமேல் செலவுண்டாகி ஜாத கன் ஜீவனத்துக்கே கஷ்டப்படுவான்.

(197) ஜென்ம லக்கினம் மேஷம் (துருவ நாடி) ஆகி ஜென்ம தெசானுதனுகிய கேது ஜன்ம லக்ன பாவாதியுடன் கூடியிருந்தால் ஜென்ம தெசையிலாவது, ஜென்ம வருஷத்திலாவது ஜாதகனுடைய பிதுரு வர்க்கத்தில் கொஞ்சம் கஷ்டம் உண்டாகும்.

(198) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி மூன் ரும் பாவாதிபதி புதன் ஐந்தாம் பாவத்தில்சூரியனுடன் கூடி யிருக்க குருவோடு சனியும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் ஜாதகன் சகோதா சகோதரிகளை யுடையவன். மூத்த சகோதனில்லாதவன். அவனுக்குப் பின் சகோதரர் இருவர் உண்டு, ஜாதகனுடைய மூன்று சகோதரிகள் ஆயுளுடையவர்கள், இதற்கு மேல் அதிகமிருந்தாலும் இறந்துவிடும், இந்த சகோதரர்களில் எவனுவது ஒருவன் யோகமு டையவனுகி அரச சேவை செய்வான், இரண்டு தாரம் அடைவான், எழுதுவதில் சமர்த்தன், எப்பொழுதும் பணம் சம்பாதித்தபடியே யிருப்பான், தியாகி, கெம்பீர புத்தியுடையவன், வாகனம், கீர்த்தி முதலிய லாபமுடையவன், அரசாங்கத்தில் நல்ல யோகமுடையவன், வேறு ஒரு சகோதரன் நல்ல வாசாலகன், வீட்டு வேலைகளில் சுதந் திரமுடையவன், எப்பொழுதும் பயிர்த்தொழிலுடையன், மனைவி, புத்திரன் முதலிய சௌக்கியமுடையவன், பசுமாடு, எருமைமாடு, விருத்தியும், பயிர்த்தொழிலில் லாபமும் உடையவன், தானிய வியா பாரத்தில் லாபமும் கிரைய விக்ரயங்களில் ஒழுக்கமும் உடையவன்,

எப்பொழுதும் தனம் சம்பாதிப்பவன், லோப சுபாவகுணமுள்ளவன், ஜாதகனுடைய சகோதரிகளில் எவளாவது ஒருத்தி புத்திர சௌக்ய மில்லாதவள், விசேஷமாக நல்ல ஜீவனமுடையவன், புத்ர, புத்ரிகளைப் பிரசவிப்பவளாவாள்.

(199) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் கேதுவுடன் கூடி குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதக னுக்கு வேறுமனைவியால் கொஞ்சம் பலன் உண்டு. தன்னுடைய அந்தி யவயதில் யோகமுள்ள மனைவியை அடைவான், மனைவி சௌக்யமும், நல்ல யோகமும், வாகன லாபமும், கீர்த்தி லாபமும், குதிரை வாகன மும் உள்ளவன், விசேஷமாக சுயப்பிரபல மடைபவன், தன் கையால் தனம் சம்பாதிப்பான், எழுதுவதால் நல்ல ஜீவன முடையவன், விய வசாயத்தில் நல்ல பலனுடையவன்.

(200) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஜனித்தவனுக்கு லக்கின பாவாதிபதி குருவுடன் கூடி சுய க்ஷேத்திரத்தில் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனு டைய தாய் பிரசவ காலத்தில் கொஞ்சமான வேதனை யுடையவள் உத்தாம்சத்தில் ஜனித்தவனுக்குச் சந்திரன் சூரியனால் பார்க்கப்பட் டால் ஜாதகனுடைய தாய் பிரசவத்தில் அதிக வேதனையடைவாள், தாய்க்குக் கொஞ்சம் பீடையுண்டாகும், குரு திருஷ்டியிருந்தால் சுக முண்டாகும், ஜாதகனுக்குப் பாலரோகம் முதலான குழந்தைகளுக் குரிய ரோகங்களால் பீடையுண்டாகும், மாந்தசுரம் முதலியவற்றாலும் அம்மை சுரத்தாலும் ஜாதகனுக்குப் பயமுண்டாகும்.

(201) ஜென்ம லக்கினம் மேஷம் (சுமத்யாம்சம்) ஆகி லக்கினத் துக்கும் எட்டாம்பாவத்துக்குமுடைய செவ்வாய், குரு சனி இவர்க ளுடன் கூடியிருக்க லக்கினத்திற்கு அல்லது இவர்களுக்குக் கேந்திர திரிகோணங்களில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் எல்லா தோஷங்களும் விலகி சுகமடைவான், அறுபத்தேழு வயதுவரை ஜீவித்திருப்பவன், இருபத்தாறுவது வயதில் சுரபீதியும், முப்பத்திரண்டிலும் சுரபீதிவும், உண்டாகும், நாற்பத்திரண்டாவது வயதில் பித்தவாயுவால் பீடை யுண்டாகும், ஐம்பத்தாறுவது வயதில் மிக பீதியும், சன்னிபாதசுர மும் உண்டாகும், அறுபதாவது வயதில் அபமிருத்து உடையவன், சாந்தியால் சுகமுண்டாகும், எண்ணெய்க்குடம், நெய், பதினாயிரநாமத் தால் சிவார்ச்சனை, இரும்புத்தடி தானம் முதலிய தானங்கள் செய் தால் அபமிருத்து நீங்கிவிடும், அதன் பிறகு கும்பத்திரிகோணத்திலா

வது, விருஷபராசியிலாவது விருஷப ராசியின் திரிகோணத்திலாவது கோச்சாரத்தில் சனி வரும் சமயம் ஜாதகன் ரோகத்தால் பீடையடைவான், தனக்குச் சமமான ஜனங்களின் நாசமும், தாய், தகப்பன் ஜனங்களுக்கு கெடுதியும் உண்டாகும். சனி பிரீதி செய்து நீலவஸ்திர தானம் செய்தால் சுகமுண்டாகும்.

(202) ஜென்ம லக்கினம் மேஷம் (பாடலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 29-24கலை முதல் பாகை 29-36 கலை வரையிலும்) ஆகி சூரியன் மித்திர க்ஷேத்திரத்திலும், ஒன்பதாம் பாவாதிபதி குரு மீன ராசியிலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமுடையவன், தன் பிதாவைக் காட்டிலும் வெகு ஆயுளுடையவன், சிவபக்தி மதத்தை அடைபவன், எப்பொழுதும் வியாபாரத்தில் ஜீவனமுடையவன், தேவ பிராமண பக்தியுடையவன்.

(203) ஜென்ம லக்கினம் மேஷம் (பங்கஜாம்சம் அதாவது பாகை 29-36 கலை முதல் பாகை 29-48 கலை வரையிலும்) ஆகி லக்கின பாவத்தில் சனி யிருந்தாலும், லக்கினபாவத்தைச் சனி பார்த்தாலும் ஜாதகனுடைய தாய் பிரசவத்தில் அற்ப வேதனையுடையவள், உத்தராம்சத்தில் விசேஷ வேதனையும், ஸூதி தோஷபயம் கொஞ்சமும் உண்டாகும், சந்திரன், சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் பீடையும், ஜாதகனுக்கு மாந்தசுரம், வைசூரி முதலியவற்றால் பயமும் உண்டாகும்.

(204) ஜென்ம லக்கினம் மேஷம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின எட்டாம் பாவாதிபன் கேந்திரத்திலிருக்க பத்தாம் பாவாதிபதி குருவால் பார்க்கப்பட்டு சந்திரன் கேந்திர திரிகோணங்களிலிருந்தால், எல்லா தோஷங்களும் விலகி ஜாதகன் சுகமடைவான், ஜாதகன மத்தியாயுள் யோகமுடையவனு யிருந்தாலும் ஐம்பத்துமூன்று வயதுடையவனுவான், இருபது வயதுக்குமேல் கொஞ்சம் பீடையும், முப்பத்திரண்டு வயதில் தேக பீடையும், முப்பத்தெட்டாவது வயதில் மனஸ்தாபமும், நாற்பதாவது வயதில் மிக்க பயமும், சன்னிபாத சுரத்தால் பீடையும், மேகரோக பயமும் உண்டாகும், கேதுப் பிரீதியும், சனி சக்ரதானமும், நவக்கிரக ஜபமும் செய்தால் சுகமுண்டாகும்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் மேஷ லக்கினத்திற்கு இருநூற்றிநான்கு விதிகளும், ஜாதக கணிதத்தின் இரண்டாம் பாகத்தில் 7-வது அத்தியாயத்தில் மேஷ லக்கினத்திற்கு அறுபது விதிகளும் ஆக மொத்தம் மேஷ லக்கினத்திற்கு இருநூற்றியறுபத்தி நான்கு விதிகளும் இதுவரையிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னம் உள்ள சுமார் ஒரு ஆயிரத்திற்கு மேற்பட்ட மேஷலக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் மேஷலக்கின பலனின் துடர்ச்சியாக இனி கொடுக்கப்படும் என்றுஅறியவும்.

ரிஷப லக்கின ஜாதகம்.

——(*⁎*)——

(1) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 55-24 கலை முதல் பாகை 55-36 கலை வரையிலும்) ஆகி லக்கினாதிபனான சுக்கிரன் லக்கினத்திற்குப் பத்திலிருந்து பத்தாமதிபனாகியசனி லக்கினத்திலிருந்தால் ஜாதகன் பிறந்தது முதல் சம்பத்துடையவனும், வெகு போகம் அனுபவிப்பவனும், ராஜ லக்ஷ்மியின் கடாக்ஷம் பெற்றவனும், நல்ல ரூபமுடையவனுமிருப்பான், மேலும் நல்ல அறிவாளியாயும், வாசாலகனும், தெளிந்த முகமுங் கண்களுமுடையவனும், அதிருஷ்ட முடையவனும், தர்மாத்துமாவாயும், சாத்வீக குணமுடையவனும், நீதி சாஸ்திரமறிந்தவனும், பலபாஷைகளில் சமர்த்தனும், தெய்வ பக்தியுடையவனும், நல்ல புத்தி சாலியாயும், வித்துவானுமிருப்பான்.

(2) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி குரு லக்கினத்திற்குப் பாக்கியஸ்தானமாகிய மகரத்திலமர்ந்து சந்திரனுடன் கூடி ராகுவால் பார்க்கப்பட்டாலும், அல்லது ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி சூரியன் தன் உச்ச ஸ்தானமாகிய மேஷத்தில் குஜனுடன்கூடி மீனத்தில் புதன் நின்றாலும், ஜாதகன் நல்ல தேவாலயம், தடாகம், தோட்டம் முதலியவைகளை நிர்மாணம் செய்பவனும், பிராமணர், பெரியோர் முதலியோரைப் பணிபவனும், இந்திரியங்களை ஜயித்தவனும், வேதாந்த ஞானம் நிறம்பினவனும், தர்மத்தில் ஆசையுடையவனும், ஏழு அங்கங்களுடன் கூடியவனும், நல்ல சுசி உடையவனுமிருப்பான், மேலும் ஜாதகன் சதுரங்க சேனைகளையுடையவன், பலதேசத்துக்கு அரசனானவன், அனேக வித்யா பாக முடையவன், காவிய, நாடக சாரமறிந்தவன், வேத, சாஸ்திர, புராணமறிந்தவன், ஸமஸ்கிருதம் பிரியமாய்ப்பேசுபவன், முக்காலமு முணர்ந்தவன், நற்குணமுடையவன், சத்துருக்களை யழிப்பவன், புண்ணியாத்மா என ஜனங்களால் பூஜிக்கப்படுபவன், அதிக தைரியசாலி, சாது ஜனங்களால் விரும்பப்படுபவன் ஆவன்.

(3) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி ஜென்மலக்கினத்தைக் குரு பார்த்து, சனி பாராவதாம்சத்திலிருந்து, சூரியன் மேஷத்

தில் பரமோச்சத்திலிருந்தால் ஜாதகன் லக்ஷ்மி யோகமுடையவனு வான், நிலையுள்ள சம்பத்து, நிலையுள்ள மங்களம் உள்ளவன், நற்குணங் களால் அழகியவன், அனேக தேசங்களுக்கு அதிபனுவான், வித்தை அதிக புகழ் இவைகளினுல் பிரசித்தி பெற்றவன், அரசர்கள் வணங் கத்தகுந்த அரசர்க்கரசன், அனேக புத்திரரையும், மனைவியரையுமுடை யவன், தேவர், பிராமணர், சாதுக்கள் இவர்களை உபசரிப்பான், தே வாலயப் பிரதிஷ்டை செய்பவன், மகான், சிவந்த சரீரமும், தாமரை நிகர்த்த கண்களும் உடையவன், காமத்தில் விருப்பமுடையவன், உதாரத்தன்மை வாய்ந்தவன், சாஸ்திரம், வித்தை இதுகளில் வல்ல வன், தயைக்கு இருப்பிடமானவன், உயர்குலத்துதித்த அனேக பெண்களுக்கு நாயகன், சூரிய சந்திரர் உள்ளவரை குணங்களைப் பலர் கொண்டாடும் புகழுடையோன், சதுரங்க சேனையுடையவன், நற் குணவான், உலகில் உயர்ந்த உத்தமன் எனப் புகழப்பட்டவன், புத்ரீ புத்திரர்களால் உபசரிக்கப்பட்ட பாக்கியமுடையவன், சண்டைகளில் ஜயம்பெறும் தைரியசாலி.

(4) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி சூரியனுக்குக் கேந்திர ஸ்தானங்களாகிய 1, 4, 7, 10-ல் குஜன் இருக்கும்போது குருவுக்குக் கேந்திரத்தில் குஜன் இருந்தாலும், அல்லதுசந்திரனுக்குக் கேந்திரத்தில் குரு இருந்தாலும் ஜாதகனுக்கு அவதார ராஜயோக மென்பர், ஜாதகன் அம்சாவதாரமாகப் பிறந்தவன், பூவுலகில் தேவேந் திரனுக்குச் சமானமானவன், அழகிய தேஜசுடன் பாசம், அங்குசம், தாமரை, ஸ்ரீசக்கரம், தண்டம் இந்த ரேகைகளால் அடையாளம் செய்யப்பட்ட கைகால்களுடையவன், ஸ்ரீவத்ஸம் என்னும் மச்சத் தை மார்பிலுடையவன், அதிக கீர்த்தி குணங்களுடைய சீமான், தானம் செய்பவன், எதிர்த்துப் பேசுபவன், எல்லா ஆகமங்களுமறிந் தவன், தர்மத்துக்கதிகாரி, கண்களால் பார்க்க விரும்பத்தக்கவன், அயலார் இங்கித மறிந்து அவர்கள் காரியத்தைச் செய்பவன், தன் கர்மத்தில் கருத்துடையவன், விரோதியற்றவன், தடையற்றவன், விஷ்ணு அம்சம் பெற்றவன், தீர்த்த யாத்திரை செய்பவன், கலை, வே தாந்தம் இவைகளறிந்தவன், காமப்பற்றுடையவன், இந்திரியங்களை ஜெயித்தவன், வேதசாஸ்திரத்தைப் பின் பற்றுபவன், ஆத்தும ஞான முடையவன், பிரம்மத்தை அறிந்தவன், பூத தயையுடையவன், எப் போதும் தர்ம சிந்தை யுள்ளவன், பெரியோரைப் பூஜித்து அவர்களைப் பின்பற்றுபவன், காலமறிந்தவன், வாசாலகன்.

(5) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்தில் சனி இருந்தால் ஜாதகன் வாயு பீடையுடைய சரீரத்தையுடையவனுவான்.

(6) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி ஜென்மத்துக்கு மூன்றில் ராகு இருந்து மூன்றுமாதிபனுன சந்திரன் குருவுடன் கூடில் ஜாதகன் மூத்த சகோதர மற்றவனுவான், அவனுக்கு இளைய சகோதரருமில்லை, ஆனுல் மூத்த சகோதரிகள் இருவர் உண்டு, ஒருத்தி மாற்றாந்தாய் மகள், மூன்று சகோதரிகளுமிருக்கலாம், மற்றவை நாசம்.

(7) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி ஜென்மத்துக்கு நாலாமதிபனுன சூரியன் மேஷத்தில் உச்சத்திலிருந்தாலும், மாதுர் காரகனுன சந்திரன் குருவுடன் கூடினுலும் ஜாதகனுடைய தாய் நற்குணமுடையவளும், புண்ணியம் செய்தவளும், தீர்க்காயுளுடையவளுமாவாள்.

(8) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி ஜென்மத்திற்கு மூன்றில் ராகு இருந்தால் ஜாதகனுடைய தாயாரானவள் கர்ம மற்றவளாவாள், காலத்தில் புத்திர சோக முடையவள், பெரியதாயும் புத்திர சோகத்தில் ஆழ்ந்தவளாவாள், இரண்டாம் தாய்க்கு புத்திரனுண்டாவான், பெரிய தாயாரும் தீர்க்காயுளுடையவளாவாள், பெரிய தாயும் வேரிடத்தில் வசிக்கும்படி நேரிடும், பெரியவளும் இவன் மரணத்திற்குப் பிறகு வெகு காலம் வசிப்பாள், இரண்டு தாயும் பேரன்கள் பாக்யமனுபவித்து கால யோகத்தால் தாய் நேத்திர பாதையுடையவளாவாள்.

(9) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாமதிபனுன புதன் பதினென்றில் அமர்ந்து புத்திரகாரகனுன குரு ஒன்பதிலிருந்தால் ஜாதகன் ஆறு புத்திரர்களையும், இரண்டு பெண்களுக்கதிகமான மக்களையும் பெறுவான், இருவர் அல்லது மூவர் இறப்பர், ஐந்து புத்திரர்களுடனும், ஒரு பெண்ணுடனுமிருப்பன், சாந்தி தான புண்ணியத்தால் மக்களுக்கு ஆயுள் வளரும்.

(10) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஏழாமதிபனுன அங்காரகன் பதினென்றில் அமர்ந்து ஏழாமிடம் குருவால் பார்க்கப்பட்டாலும் அன்றி ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி களத்திரகாரகனுன சுக்கிரனைச் சனி பார்த்தாலும்

ஏழாமிடம் சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் மூன்று மனைவியரையுடையவனுவான், அவர்களில் இருவருக்குச் சந்ததி இல்லை. மூத்த மனைவி பாபி, சக்தியற்றவள், இரண்டாம் மனைவியோ ராஜயோகமுடையவள், அனேக புத்திரருடையவள், தன் குலத்தைப் பெருகச் செய்பவள், நித்தம் தானத்தில் விருப்பமுடையவள், மாநிற மேனியாள், வாயுபீடையுள்ள தேகமுடையவள், சமமான தேகமுடையவள், சில சமயம் தந்த வாய்வு பீடையாலும், சிலசமயம் வயிற்றுச் சூலையாலும் பீடிக்கப்படுபவள், இவள் குமாரன் அழியாத சம்பத்துடையவன், தருமாத்மா, மூன்றும் மனைவியோ புத்திர பாக்கியமற்றவளாய்த் துக்கமுடையவளாய் வாலிபத்திலேயே மரிப்பாள், ஜாதகனுக்குப் பதினைந்தாவது வயதில் விவாகம், பதினறு அல்லது இருபத்து மூன்றில் விவாகமென்பது சிலர் மதம்.

(11) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஒன்பதாமதிபனுன சனி பதினென்றில் இருந்தால் ஜாதகனுடைய பிதா அனேக தேசாதிபனுன அரசனைப் போல இருப்பான், ஜாதகன் பிறந்த பிறகு இவன் பிதா அதிக யோக முடையவனுவான். இருபத்திரண்டாவது வயதில் பிதா அரிஷ்டம், இருபத்திரண்டில் புத்திரப்பேறு மென்மேலும் விருத்தியாகும்.

(12) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகிகுருபகவான் ஜென்ம லக்கினத்தைப் பார்த்தால் ஜாதகனுடைய பிதா அதிக யோகவான். ஜாதகன் பிறந்த பிறகு இவன் பிதா அதிக யோகமுடையவனுவான்.

(13) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி லக்கினத்திற்கு பன்னிரண்டில் சூரியன், குஜன் இருவரும் கூடி இருந்தால் ஜாதகனுக்கு நாற்பத்தைந்தாவது வயதில் பிராணபயம், மூல ஜாதகத்தால் புத்திரன் எதிரில் மரணமாவான். முடிவில் ஞானம் பெற்று சுவர்க்க மெய்துவான்.

(14) ஜென்ம லக்கினம் ரிஷபம் (துருவாம்சம்) ஆகி குரு சந்திரனுடன் கூடி ராகுவால் பார்க்கப் பட்டால் நாற்பத்தைந்தாவது வயதில் பிராணபயம், மூலஜாதகத்தால் புத்திரன் எதிரில் மரணமாவான், முடிவில் ஞானம் பெற்றுச் சுவர்க்க மெய்துவான்.

(15) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்திற்கு இரண்டில் குரு சுக்கிரர் கூடி இருப்பின் ஜாதகன் வேத

சாஸ்திரார்த்தம் அறிந்தவன், மூன்று எழுத்துகளில் சமர்த்தன், பல பாஷைகள் அறிந்தவன், சங்கீத ஞானமுள்ளவன், சோதிட சாஸ்திர மறிந்தவன், அதிக தனவான், அதிக போக முடையோன், அரி, சங்கரபக்தி யுடையவன்.

(16) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஜென்மத் திற்கு மூன்றாமதிபன் பாவருடன் கூடினால் ஜாதகனுக்கு ஒரு சகோ தரி பால்யத்தில் விதவையாவாள், பின்னால் இரு சகோதாரும் ஒரு சகோதரியும் உண்டு, விஷாதிசார தோஷத்தால் இளைய சகோதரன் மரிப்பான், அக்காலத்தில் கெர்ப்பமான இளையோன் மனைவி அவனுக் குக் கொஞ்ச காலம் கழித்துப் புத்திரனைப் பிரசவிப்பாள், அதுமூலம் அனேக கலகம் உண்டாகும்.

(17) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஜென்ம லக் கினத்திற்கு மூன்றில் சூரியனிருந்தால், ஜாதகனுடைய சகோதரி ஒருத்தி பால்யத்தில் விதவையாவாள், பின்னால் இரு சகோதார் ஒரு சகோதரி உண்டு, இளையோன் விஷாதிசார தோஷத்தால் மரிப்பான், அக் காலத்தில் கர்ப்பமான இளையோன் மனைவி அவனுக்குக்கொஞ்ச காலம் கழித்து ஒரு புத்திரனைப் பிரசவிப்பாள், அது மூலம் அனேக கலகம் உண்டாகும்.

(18) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஜென்மத் திற்கு நாலாமிடத்தில் ராகு, புதன் இவர்கள் கூடி இருப்பின் ஜாதகன் மூன்று தாய்மாரை யுடையவன், இவன் இரண்டாவது தாயின்புத்திர னுவான், இவன் தாய் புத்திரி, புத்திரர்களை யுடையவளாவாள், இவன் தாய் விஷாதிசார தோஷத்தால் மரிப்பாள், தாய்க்கு சகோதரி ஒருத்தி, சகோதரன் ஒருவன் உண்டு. தாய் சகோதரன் சித்தப்பிரமை யுடையவனுவான், அவன் புத்திரன் தாரம் அற்றவன், ஜாதகனுடைய ஊருக்கு வட பக்கத்தில் அம்மான் வீடு உண்டு, அதுவும் கொஞ்ச காலத்தில் காலி ஆகும், பின்னால் அம்மான் மரிப்பான், இவன் அம் மானுக்குக் கர்மம் முதலியன செய்வான், இவன் பெரிய தாய் புத்ரீ புத்திரர் அற்றவள்.

(19) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி லக்கினத் திற்கு ஏழாமதிபனுன செவ்வாய் விருச்சிகத்தில் சந்திரனுடனும் சனி யுடனும் கூடி இருப்பின் ஜாதகனுக்கு இரண்டு களத்திரமுண்டு, மூத்த மனைவி தன் பட்டணத்துக்கு வட பாரிசத்தில் ஓர் ஊரில் பிறந்தவள்,

அவளுக்கு ஒரு பெண்ணுண்டு, மூத்த மனைவி இறந்ததும், தென் மேற்கிலாவது, மேற்கிலாவது அழகிய ஒரு ஸ்திரீயை ஜாதகன் மறுமணம் செய்வான்.

(20) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் அதிபனுன சனி கேந்திர ஸ்தானங்களாகிய ஒன்று, நான்கு, ஏழு, பத்து இந்த ஸ்தானங்களில் சந்திரனுடனும் குஜனுடனும் கூடில் ஜாதகனுடைய தகப்பன் நல்ல ராஜ யோகமுடையவனுவான், பிரபு லக்ஷணங்கள் பொருந்தியவன், தர்மாஸனுதிகாரி, அதாவது நியாயாதிபன், நீச அரசனே அடைவான், அனேக ஆயிரம் தனமுடையவனுவான், பெண்பிள்ளைகளை மிகுதியாயுடையவன். ஜாதகனே பித்த நோயுடையவன், மெலிந்தவன், சில சமயம் உலோபி, எழுத்து வித்தையில் ஜீவனம் செய்வான், சூத்திரப்பிரபுவிடம் எழுத்து வேலை செய்வான், பிதுர் பாக்கியம் நிறைந்தவன், தான் சம்பாதித்த பொருளுடையவன், நடு நடுவில் நீச அரசனிடம் நட்பு உண்டாகும், கிராமம், பூமிகளுக்கதிகாரி, வீடு, பூமி, பொருள் இதுகள் நிறைந்தவன்.

(21) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஏழாமிடமான விருச்சிகத்தில் நீசனுன சந்திரன், சனி குஜன் இவர்களுடன் கூடி இருந்தால் ஜாதகன் நீசஸ்திரீ சங்கமம் அல்லது சூத்திர ஸ்திரீ சங்கமமுடையவனுவான். சில சமயம் இரகஸியத்தில் அயலார் மனைவியையும் சங்கமம் செய்வான். இவனுக்கு இரு புத்திரரும் இரு புத்திரிகளும் தீர்க்காயுளுடையவ ராயிருப்பார். அதிக மக்களும் உண்டாகும், சாந்தியாதிகளால் மக்களுக்கு சுகமுண்டு, இவன் தகப்பன் மந்திர சாஸ்திர மறிந்தவன், இவன் தந்தைக்கு மனைவியர் மூவர் உண்டு. ஜாதகனும் மந்திர சாஸ்திர மறிந்தவன், ஜபம் தியானம் செய்வான்.

(22) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி நான்காமிடத்தில் ராகு இருந்தால் ஜாதகன் எப்போதும் துக்கப்பட்ட மனமுடையோன், பின்னல் பாபத்துக்கு பயந்து பச்சாதாபப்படுபவன், சில காலம் வைதீகாசாரங்களைக் கைக்கொள்ளுவான்.

(23) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஜென்மத்திற்குப் பத்தாமதிபன், குஜனுடனும், நீச்ச சந்திரனுடனும், கூடி கும்பாம்சத்திலிருந்தால், ஜாதகனுக்கு நற்காரியம் செய்வதில் அடிக்கடி தடையுண்டாகும்.

(24) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஜென்மத்திற்குப் பன்னிரண்டாமதிபனான குஜன், விரையஸ்தானமாகிய பன்னிரண்டில், குருவால் சம்பந்தம் அடையப்பட்டால் ஜாதகனுக்குக் கட்டிலில் படுக்கை உண்டு, தருமத்தில் தனவிரையமாகும்.

(25) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி பன்னிரண்டாமதிபன் விரையஸ்தானமாகிய பன்னிரண்டில் குருவுடன் கூடியிருக்க சனி கன்னியாம்சத்திலிருந்தால் ஜாதகன் புது வீடு கட்டுவான்.

(26) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) உத்தரபாகம் ஆகி ஜென்மத்திற்கு மூன்றுமதிபன் பன்னிரண்டிலாவது அன்றி நீச ஸ்தானத்திலாவது இருந்து சகோதர காரகனுகிய அங்காரகனு மவ்விதமே பன்னிரண்டிலாவது அன்றி தன் நீச ஸ்தானமாகிய கடகத்திலாவது அமர்ந்தால் ஜாதகன் இரண்டு அல்லது மூன்றுவது கருப்பத்தில் பிறந்தவன், ஒரு மூத்த சகோதரி பாலியத்தில் மரணமடைவாள், இளைய சகோதரர் இருவரும், சகோதரிகளிருவரும் உண்டு.

(27) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் உத்திரபாகம்) ஆகி சந்திரன் நீசஸ்தான மடைந்தால் ஜாதகனுடைய தாய் புண்ணியவதி, பதிவிரதை, யாத்திரையில் ஜனமில்லாவழியில் இறப்பள், ஜாதகனுக்கு அம்மானில்லை, இருந்தானென்று நினைவுண்டு.

(28) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் பூர்வ பாகம்) ஆகி களத்திர காரகனான சுக்கிரன் குஜனுடன் சேர்ந்திடில் ஜாதகனுக்கு வலிபத்திலேயே விவாகமுண்டு, ஏக களத்திர சுகமுடையோன், அயல் பெண்கள் சங்கம முடையோன்.

(29) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் உத்தரபாகம்) ஆகி களத்திர காரகனான சுக்கிரனும், குஜனும் சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால், ஜாதகனுக்கு இருமனைவிகள்உண்டு, வாலிபத்திலேயே விவாகமுண்டு, அயல் பெண்கள் சங்கமமுண்டு.

(30) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் உத்திரபாகம்) ஆகி ஒன்பதாமதிபனான சனி தன் சத்துரு ஸ்தானமாகிய சிம்மத்தில் குஹராம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஞானவான், விவசாயம் செய்பவன், தனவான், அனேக சகோதரருடையவன், மானமுடையவன், சகோதரிகளும் அதிகமாக உண்டு, சிற்றப்பன்மார் ஐவர் அல்லது அறுவரும், சகோதரிகளும் அவ்விதமே உண்டு. இவனுக்கு பெரிய தகப்பன்மார் இருவர், தகப்பன் சகோதரிகள் மூவர்,

மற்றவை நாசம், அவர்களில் ஒருத்தி புத்திரனுடையவள், மற்றஇரு வருக்கும் புத்திரரில்லை, ஜாதகனுடைய பாட்டன் பிரசித்தியுடையவன் யானை கட்டி வாழும் சம்பத்துடையவன், லக்ஷத்திற்கு அதிக தன முடையவன், அதிக பூதனமுடையவன், ராஜ முத்திரை தரித்து எல்லோரையும் காத்து தண்டிக்கும் அதிகாரியாவான், ஜாதகனும் அதிருஷ்டம் வாய்ந்தவன், அரசாங்க உத்தியோகம் பெற்று பொரு ளீட்டுவான், அயல் தேசத்தில் நீச்ச அரசனிடம் உத்தியோகம் பெறு வான், எழுபத்தைந்து வயதுடையனுவான்.

(31) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் உத்திரபாகம்) ஆகி ஜென்மத்திற்கு ஏழமாதிபனுன குஜன் பன்னிரண்டில் அமர்ந்து சனி பகவான், சூரியன், புதன், குஜன் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வாலிபத்திலேயே விவாகம் நடக்கும், இவன் மனைவி மலடியாவாள், சிலர் ஒரு மனைவி தான் உண்டென்பர், இரண்டு தாரா மென்பது சிலர் மதம்.

(32) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் உத்திரபாகம்) ஆகி ஜென்மத்திற்கு ஒன்பதாமதிபனுன சனி குஜனுடன் கூடி இருப்பது டன் பிதுர் ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தைக் குருபார்த்தால் ஜாதக னுடைய தந்தை வெகு பாக்கியங்களுடையவன், ராஜயோகமுடைய வன், அனேக தாயாதிகளுடையவன், அரசாங்க முத்திரை பெற்ற அதிகாரி. ஜாதகனே நற்குணம் வாய்ந்தவன், மிருதுவாய், இனிமை யாய்ப் பேசுபவன், சத்துருக்களிடத்திலும் பிரீதியை யுடையவன், வேதாந்த ஞான முடையவன், தாஸ தாஸ ஜனங்களால் சூழப்பட் டவன், பிரபலமான உத்தியோக முடையவன், வெகு சுகமுடை யோன், பிராமண ஸ்திரீ சங்கமமுடையோன், பல ஜாதிப்பெண்களை அணைந்தவன், கொஞ்சம் விதவை சங்கமமுண்டு.

(33) ஜென்மலக்கினம் ரிஷபம் (கமலாம்சம் உத்திரபாகம்) ஆகி ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாமதிபனுன சனி, குஜனுடன் கூடி ஒன்பதாமிடத்தை குரு பகவான் பார்ப்பதுடன், களத்திர காரனுன சுக்கிர பகவான் கால கூடாம்சத்திலிருந்தால் ஜாதகன் சம்சாரத்தில் வெருப்புள்ளவனுயும், ஜபம், தியானம், சமாதியுடையவனுவான்.

(34) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் உத்திரபாகம்) ஆகி லக்கினுதிபனுன சுக்கிரன் சத்துரு ராசியில் புதனுடன் துர்ப்பலனுயி ருந்து சனி பகவானுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் எப்போதும் துக்

கப் படுவான், ஞாதி சத்துரு பாதையுடையோன், வெளிக்கு உரக்கப் பேசுவான், கஷ்டமுடையோன்.

(35) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் உத்திரபாகம்) ஆகி ஜென்மத்திற்கு இரண்டா மதிபனான புதன் ஆறில் சூரியனுடன் கும்பாம்சத்தில் அமர்ந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அதிக செலவுடையவன், ஞாதிகளால் வெகு கஷ்டப்படுகிறவன், தனத்தை அழிப்பவனாவான்.

(36) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் உத்திரபாகம்) ஆகி புதன் சூரிய பகவானோடு சம்மந்தப்பட்டால் ஜாதகனுக்கு ராஜ தண்டனையால் அதிக செலவும், வீண் கர்வத்தால் பூமி, பொருளழிவும் உண்டாகும், ஆனாலும் அரசனால் மிகமதிக்கத் தக்கபிரபல உத்தியோகத்திலிருப்பான்.

(37) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம்பாகை 56-36 கலைமுதல் பாகை 56-48 கலை வரையிலும்) ஆகி ஜென்ம லக்கினத்தில் குருவும், சகோதரகாரகனான குஜனும் கூடி இருப்பின் ஜாதகனுக்கு இளைய சகோதரமில்லை, பிறந்தாலும் இறப்பவன். ஜாதகன் இரண்டு சகோதரிகளை யுடையவன், சகோதரிகளிடத்துப் பிரியமாயிருப்பான், ஒரு சகோதரனுடன் கூடியவன், தாயார் தகப்பனாருடைய சுக மற்றவனாவான்.

(38) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி லக்கினத்குப் பதினோராம் பாவத்தில் சூரியன் சனியுடன் கூடில் ஜாதகனுக்கு இரண்டாம் திசையில் பிதா நாசமுறுவான், திரவியச் செலவு அதிகமுண்டாகும்.

(39) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஏழாம் பாவமான களத்திர பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகனுக்கு மூன்று தாரயோக முண்டு என்பது சிலர் அபிப்பிராயம், மூன்று தாரமிருந்தும் ஜாதகன் தாரசுகமில்லாதவன்.

(40) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் பூர்வ பாகம்) ஆகி களத்திரபாவம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு இரண்டு தார மென்பர். மூத்த தாரம் தரித்திரம் பொருந்தியவள்.

(41) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் பூர்வபாகம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் ராகுவுடன் கூடி பதினோராம் பாவத்தில் குஜன் இருந்தால் ஜாதகனுக்குச் சந்தானத் தடையுண்டாகும்.

(42) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் உத்திராம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் ராகுவுடன் கூடி, பதினோராம் பாவத்தில் குஜனிருக்கில் ஜாதகன் மகா ரோகமுடையவன், ஜாதகனுடைய மூத்த தாரம் காகமலடியாவாள்.

(43) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் பூர்வபாகம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் ராகுவுடன் கூடி பதினோராம் பாவத்தில் குஜனிருக்கில், ஜாதகனுக்குப் புத்திரனில்லை என்கின்றனர். வேறு கிரந்தத்தில் வேறு மனைவியிடம் ஜாதகனுக்கு புத்திரனுண்டென்கின்றனர்.

(44) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் குரு இரு பாபர்களால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் உத்தம பிராமணர்களால் சபிக்கப்பட்டவன், இதற்குப் பரிகாரமாக ஸேதுஸ்நானம், சிவபூஜை, நாகேஸ்வர பூஜை இவைகளால் சந்தான முண்டாகும், ஒரு பலம் அல்லது அரைப்பலம் பொன்னினுல் சிவ வுருவுசெய்து விசேஷமாக சோமவாரப் பிரதோஷ காலத்தில் விதிப்படி உபவாசமிருந்து பூஜித்து பிரதிமையை வஸ்திரத்துடன் சாயுங்காலத்தில் தானம் செய்ய சாந்தி உண்டாகும்.

(45) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் பூர்வபாகம்) ஆகி பதினோராம் பாவத்தில் சூரியன் இருந்தால், சூரியன் விரத புண்ணியத்தால், ஜாதகன் நிச்சயமாய் சந்தானமடைவான்.

(46) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபனுன குரு ஐந்தாம் பாவாதிபனுல் பர்ர்க்கப்பட்டால், ஜாதகன் குறைந்த சந்ததி யுடையவனுவான்.

(47) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் பூர்வபாகம்) ஆகி எட்டாம் பாவாதிபனுன குரு ஐந்தாம் பாவாதிபனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு நாகேஸ்வரப் பிரசாதத்தால் காலாந்திரத்தில் (முதுமைப் பருவத்தில்) சந்தானம் சந்தேகமில்லாமல் உண்டாகும்.

(48) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி மூத்த சகோதரஸ் தானமாகிய பதினோராம் பாவத்திற்கு ஐந்தாம் பாவாதிபனுன சந்திரன் நீச்சாம்சத்தில் குஜனுல் பார்க்கப்பட்டிருந்தால், ஜாதகனுடைய மூத்த சகோதரனுக்கு புத்திரர் அரிஷ்டம், ஜலகண்டம் நேரும்.

(49) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபன் சந்திரன் நிர்மலாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு ஐந்து

அல்லது ஏழு சகோதாருண்டு, அவர்களில் இருவர் அல்லது மூவர் தீர்க்காயுளுள்ளவராய் இருப்பர்.

(50) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் உத்திரபாகம்) ஆகி மூன்றும் பாவாதிபன் சந்திரன் நிர்மலாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய சகோதரி ஒருத்தி மாங்கலியத்துடனிருப்பாள்.

(51) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் பூர்வபாகம்) ஆகி மூன்றும் பாவாதிபனுன சந்திரன் நிர்மலாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய சகோதரிகள் இருவர் விதவைகளாவார்.

(52) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி சந்திரனுக்கு ஏழாம் பாவத்தில் குஜனிருந்து சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாயாருக்கு அரிஷ்டம் உண்டு.

(53) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபனுன சனி தன்னுச்சாம்சத்திலிருந்தால் ஜாதகன் வேதாந்த தத்துவ ஞானமுடையவன், எப்போதும் குலாசாரத்திலிருப்பான், அதிதிகளிடம் பக்தியுடையவனுவான், சாத்துவீகன், குணவான், விஷ்ணு சங்கரபக்தி யுடையவன், கலகத்தால் வெளியில் சென்று பத்து வருஷத்துக்குப் பிறகு ஆபத்து நேரிடும், பன்னிரண்டு வருஷத்துக்குப் பிறகு பல தேசம் திரிந்து மாதா, பிதா நாசத்தால் அதிக துக்க மடைவான், பெரிய ஆற்றின் கரையிலுள்ள பட்டிணத்தில் இவனுக்கு வாசயோகமுண்டு.

(54) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பகை 48-36 கலை முதல் பாகை 48-48 கலை வரையிலும்) ஆகி குரு சூரியாம்சத்தில் கேந்திரத்திலிருந்து சுக்கிரன் தன்னுச்சாம்சத்தில் சந்திரனுடன் கூடியாவது, பார்க்கப்பட்டாவது இருப்பதுடன் புதனும், குருவும் சம்பந்தப்பட்டால் ஜாதகன் சிவந்த நிறமுடையவன், அழகிய தேகமுடையவனுவான்.

(55) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி சுக்கிரன் மிதுனத்தில் மீனும்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு மூத்த இளைய சகோதரன் கிடையாது.

(56) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம் பூர்வபாகம்) ஆகி சுக்கிரன் மிதுனத்தில் மீனும்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு இரு சகோதரிகள் தீர்க்காயுளுடையோரா யிருப்பர். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குக் கூட இரண்டு சகோதரிகள் தீர்க்காயுளுள்ளவராயிருப்பார்.

(57) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி சகோதர ஸ்தானாதிபனான சந்திரன் துலாம்சத்திலிருந்தால் இரு சகோதரிகள் தீர்க்காயுளுள்ளவராயிருப்பர்.

(58) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம் பூர்வபாகம்) ஆகி சகோதர ஸ்தானாதிபனான சந்திரன் துலாம்சத்திலிருப்பதுடன் குருவுடன் கூடில் பேதப்பிராதா அதாவது மாற்றாந்தாய் புத்திரனுண்டு. இவன் தகப்பனுக்கு மூன்று தாரமுண்டு, தாய் தீர்க்காயுளுள்ளவள், சகோதரி துர்நடக்கை யுடையவள், ஜாதகனுடைய மாதா, பிதா தீர்க்காயுளுள்ளவர்கள்.

(59) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி புதன் துலாம்சத்திலிருந்து தன்னுடன் சுக்கிரன் கூடி இருந்தால் ஜாதகன் நித்தம் விஷ்ணு பக்தியுடையவன், சகோதரர் இல்லாதவன்.

(60) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி ஜென்மத்திற்குப் பன்னிரண்டாம் பாவத்தில், சனி, குஜனுடன் கூடி, லக்கினத்தில் குரு இருந்தால் ஜாதகன் தைரியவான், சூரன், நல்ல புத்திமான்.

(61) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி சனி குரூரஷஷ்டி யாம்சத்திலிருந்தால் ஜாதகன் உள்ளத்தில் கபடமுள்ளவன், தாமரை மலர் போன்ற கண்களுடையவன், சீக்கிரம் கோபமுடையவன். தெளிந்த மனதுடையவன், அரசன், மந்திரி முதலியோர் நேசமுடையவன்.

(62) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சனி குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகன் வாலிபத்திலேயே தரித்திரன், ஐந்து வயதிற்குமேல் சுகமுண்டாகும்.

(63) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி தனபாவம் என்கிற இரண்டாம் பாவத்தில் சூரியன் மீனும்சத்திலிருந்தால் ஜாதகன் வாலிபத்திலேயே சக்கிர முத்திரை அடையாள முடையவன், வைணவ ஆசாரமுடையனாவான்.

(64) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி மாதுர்ஸ்தானாதிபனான சூரியன் இரண்டாம் பாவத்தில் மீனும்சத்திலிருந்து, மாதுர் காரகனான சந்திரன், சுக்கிரனுடன் கூடி இருக்கில் ஜாதகனுடைய மாதாவுக்கு தீர்க்காயுளுண்டு.

(65) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி ஜென்மத்தில் குரு இருந்து, இரண்டாம்பாவத்தில் சூரியன் மீனும்சத்திலிருந்து

சனியால் பார்க்கப்பட்டால், ஜாதகன் மூன்றெழுத்துகளில்சமர்த்தன், சங்கீத வித்தையில் தேர்ந்தவன், புகழப்பட்டவன், பிரியமாய்ப் பேசுபவன், தேவர், பிராமணர் இவர்களிடம் பக்தியுடையவன்.

(66) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம் பூர்வபாகம்) ஆகி சூரியன் மீனும்சத்திலிருந்து தன்னுடன் சுக்கிரன் கூடி இருந்தால் ஜாதகன் சில சமயம் மந்தபுத்தியுடையவன்.

(67) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் ஸ்திராம்சத்தில் சனியுடன் கூடி லாபாதிபனுன குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஏக களத்திரமுடையவன்.

(68) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபனுன செவ்வாய் ஸ்திராம்சத்தில் சனியுடன் கூடி லாபாதிபனுன குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு ஒரு தாரமுண்டு. ஜாதகனுடைய எட்டாம் பாவாதிபனுடைய அம்சராசியில் அல்லது அதன் திரிகோண ராசியில் ஜாதகனுடைய மனைவி ஜென்மம் என்பர்; அல்லது ஜாதகனுடைய ஏழாம் பாவாதிபன் பார்த்த ராசியிலாவது மனைவி ஜென்மம் என்று நிச்சயிக்கவும்.

(69) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி சுகாதிபனுன நான்காம் பாவாதிபன் இரண்டாம் பாவத்தில் மீனும்சத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குத் தன் களத்திர மூலமாய் அதிக பாக்கியமுண்டாகும், விவாகத்திற்குப் பிறகு சௌக்கியமுண்டாகும்.

(70) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில், சுக்கிரன், சனியுடன் கூடியாவது, பார்க்கப்பட்டாவதிருந்தால் ஜாதகன் ஸ்திரீ மூலமாக பாக்கியவான், சுகமுடையவன்.

(71) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம் பூர்வபாகம்) ஆகி சந்திரன் நிர்மலாம்சத்திலிருக்க ஜாதகனுக்குத் தாய் வழியில் விவாகம் நடக்கும்.

(72) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம், உத்திராம்சம்) ஆகி சந்திரன் நிர்மலாம்சத்திலிருக்க ஜாதகனுக்குத் தாய் வழியில் விவாகமாகாது.

(73) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி புத்திரஸ்தானுதிபதியாகிய ஐந்தாம் பாவாதிபன் துலாம்சத்தில் சுக்கிரனு

டன் கூடி இருந்தால் ஜாதகனுடைய மனைவி கெர்ப்ப சிராவமுடைய வள், சந்தானத் தடையுடையவள்.

(74) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி புத்திரஸ்தானமாகிய ஐந்தாம் பாவத்தில், சனி மிதுனம்சத்தில் குஜனுடன் கூடில் ஜாதகனுக்குச் சந்ததித் தடையுண்டாகும். அந்தப் பாப பரிகாரத் துக்குச் சிம்சுமாரதானம் செய்யவும், தீர்க்காயுளுடையவனுவான், சந்தானமடைவான், இதில் சந்தேகமில்லை, இருபுத்திரர், இரு பெண்கள் தீர்க்காயுளுள்ளவராயிருப்பர்.

(75) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம் பூர்வபாகம்) ஆகி சுகாதிபனுன சூரியன் மீனம்சத்தில் இருந்தால், ஜாதகன் நவவாகனமுடையவனுவான், சேனை, மந்திரி முதலானவரின் நேசமுடையவன், அருவருப்புள்ள பிரபுவைச் சேவிப்பான், விஷ்ணு கைங்கர்யம் முதலிய தர்மம் செய்பவன், ஸ்மார்த்தப் பிரீதியுள்ளவன், வைஷ்ணவாசார பாக்கியமுடையவன், இருபத்தைந்திற்குமேல் பாக்கியம் உண்டு. தன் பிரபலத்தன்மையால் பொருள் விருத்தியுண்டு. அரசாங்க ஜன நேசமுடையவன், வாகனம், வஸ்திரம் முதலிய லாபமுடையவன்.

(76) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம்) ஆகி சூரியன் காாள சஷ்டியம்சத்திலிருந்து, சந்திரன் நிர்மலாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்குப் புண்ணிய பாப பலனுண்டு, இந்த உலகில் புண்ணியாத்துமாவாயிருந்து முடிவில் சுவர்க்க மெய்துவான், ஆயுளுள்ளவரையில் பாக்கிய மனுபவிப்பான்.

(77) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சீதளாம்சம் பூர்வபாகம்) ஆகி சூரியன் காாள சஷ்டியாம்சத்திலிருந்து சந்திரன் நிர்மலாம்சத்திலிருந்தால் ஜாதகன் ஜாதிக்குத் தகுந்த உலகத்தை முடிவில் அடைவான். ஞானவானுவான்.

(78) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 42-48 கலை முதல் பாகை 43-00 கலை வரையிலும்) ஆகி மிதுனத்தில் குரு இருந்து அந்த பாவாதிபனுன புதன் சூரியனுடன் கூடி இருந்தால் ஜாதகன் கருத்த மேனியன், அழகனுவான்.

(79) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கதாம்சம்) ஆகி மிதுனத்தில் குரு இருந்து ஏழாம்பாவாதிபன் ஐந்தாம் பாவத்திலிருந்து களத்திர காரகனுன சுக்கிரன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு ஜென்ம தேசத்திலேயே விவாகம் நடக்கும்.

(80) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கதாம்சம்) ஆகி சுக்கிரன் விரையஸ்தானத்தில் அதாவது பன்னிரெண்டாவது பாவத்தில் நீச்சாம்சத்திலிருந்து பாக்யாதிபனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் புதையல் எடுப்பான், சந்தேகமில்லை.

(81) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கதாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன், பத்தாம் பாவத்தில் குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் நரவாகன யோகமுடையவனாவான்.

(82) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கதாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபன் ஹரிணாம்சத்திலிருந்து மூன்றாம் பாவாதிபன் ஸாராம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு நாலாவது திசையில் அதிக சுகமுண்டு.

(83) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கதாம்சம்) ஆகி பாக்யாதிபனான சனி ஆறாம் ராசியிலிருந்து, ஆறாம் பாவாதிபன் பன்னிரண்டாம் பாவத்திலிருந்து அல்லது பத்தாம் பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் புத்திரனுடையவன், புத்திமான்.

(84) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் பாபக்கிரகமிருந்து, குரு ராகுவுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு முன் செய்த தீவினை தோஷத்தால் இறந்த சந்ததி யுண்டாகும், அந்த தோஷ பரிகாரமாக சிம்சுமார சக்கர தானம் செய்தால் தீர்க்காயுளுள்ள சந்ததி அடைவான் என்பதில் சந்தேகமில்லை. (நவக்கிரக தோஷ சாந்திக்காக எனது ஜாதக தெசாரிஷ்ட நிவாரணி என்னும் புத்தகத்தைப் பார்க்கவும்.

(85) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கதாம்சம்) ஆகி ஜென்மத்திற்கு பன்னிரண்டாம் பாவாதிபன் தேவசஷ்டியாம்சத்திலும், சூரியன் ஹரிணாம்சத்திலும், குரு கதாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் இறுதியில் புண்ணிய லோகமடைவான். இந்த உலகில் புண்ணியாத்துமா, முடிவில் சுவர்க்க மெய்துவான், ஆயுளுள்ள வரையில் பாக்கியமனுபவிப்பான்.

(86) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 53-48 கலை முதல் பாகை 54-00 கலை வரையிலும்) ஆகி லக்கினாதிபனான சுக்கிரன் உச்சஸ்தானம் பெற்றிடில் ஜாதகன் ஆற்றின் சமீபத்தில் பிறந்தவனாவான்.

(87) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஜென்மத்திற்கு ஐந்தாம் பாவமாகிய புத்திர ஸ்தானத்தின் அதிபனுன புதன் சண்டாம்சத்தில் (அதாவது அலியாம்சத்தில்) சூரியனுடன் கூடினுல் ஜாதகனுக்கு சந்ததி க்ஷயமடையும்.

(88) ஜென்மலக்கினம் ரிஷபம்(கமலாம்சம்)ஆகி ஜென்மத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி வந்தியாம்சத்திலிருந்தால் (அதாவது மலடியம்சத்திலிருந்தால்) ஜாதகன் மலடிக்கு நாயகனுவான்.

(89) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஜென்மத்திற்கு ஐந்தாம் பாவத்திலும், ஒன்பதாம் பாவத்திலும், சனி வந்தியாம்சத்திலிருந்தால் (அதாவது மலடியாம்சத்தில் இருந்தால்) ஜாதகன் மலடிக்கு நாயகனுவான், அல்லது அவன் மனைவி மரித்த மகவைப் பெறுவாள்.

(90) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி சுக்கிரன் அங்காரகனுடன் கூடி சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அதிருஷ்டப் பிரயத்தன யோகத்தால் காலாந்தரத்தில் புத்திரனுடையவனுவான்.

(91) ஜென்ம லக்கினம் ரிஷபம்(சிவதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம்பாகை43-36கலை முதல் பாகை43-48கலை வரையிலும்) ஆகி சனி மிதுனும்சத்தில் விருச்சிகத்திலிருந்து, குஜனுல் பார்க்கப்பட்டால், ஜாதகனுடைய பிதாமகன் பிரசித்தன், சூத்திரர் மூலம் வெகு பாக்கியமுடையவன், அப்படி இல்லாவிடில் மிலேச்சனைச் சேவிப்பான்.

(92) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம்) ஆகி லக்கினுதிபன், அம்சாதிபன், குரு இவர்கள் பாபக் கிரகத்துடன் கூடில் ஜாதகனுடைய ஜென்மதிசையில் ஜென்ம வருஷத்தில் தேக ஜாட்டியமுண்டு, தனக்கு நிகரான பிராமணன் சத்துருவாவான், அவன் மூலம் அதிக வியாகூலமடைவான்.

(93) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவ்தாம்சம்) ஆகி லக்கினத்தில் பாவக்கிரகங்கள் சேர்ந்தால் ஜாதகன் அல்பர்களை உபத்திரவம் செய்வதில் பயந்தவன், தாயாதி வர்க்க விரோதத்தால் அதிகம் வருந்துவான்.

(94) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம் பூர்வ பாகம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் மங்களாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய்

தீர்க்காயுளுடையவளாவாள், தகப்பன் பால்யத்திலேயே மரண மடைவான்.

(95) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம்) ஆகி பிராதா ஸ்தானதிபனான சந்திரன் சிம்மாம்சத்தில் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பின் சகோதரமில்லாதவன்.

(96) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம்) ஆகி லக்கினதி பனான சுக்கிரனுக்குக் கேந்திரத்தில் குரு இருந்து, ஐந்தாம் பாவாதிப னுடன் கூடி இருந்து குஜனால் காணப்பட்டால், ஜாதகனுக்குப் பின் சகோதரர் அல்பாயுளுடையவராய் நாசமுறுவர்.

(97) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம்) ஆகி ஏழாம்பா வாதிபனாகிய குஜன் லக்கினத்தில் கேதுவுடன் கூடி இருந்தால் ஜாத கனுக்குக் கருப்பு நிறமுள்ள மனைவி வாய்ப்பாள்.

(98) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம் உத்திராம்சம்) ஆகி ஏழாம்பாவாதிபனாகிய செவ்வாய் லக்கினத்தில் கேதுவுடன் கூடிஇருந் தால் ஜாதகனுக்கு இரண்டு தார யோகமுண்டு.

(99) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம் பூர்வபாகம்) ஆகி ஏழாம்பாவாதிபனாகிய செவ்வாய் லக்கினத்தில் கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு ஒரே விவாகம் உண்டு. ஜாதகன் பரஸ்திரிசேர் க்கையை யுடையவன்.

(100) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம்) ஆகி புத்திரஸ் தானதிபனான புதன் நீசாம்சத்தில், நீச்ச ராசியிலிருந்தால், ஜாதகனுக் குச் சந்தானத்தடை உண்டாகும், அதிருஷ்டப் பிரயத்தனத்தால் காலாந்தரத்தில் புத்திரனுண்டாகும், கோபாலப் பிரதிமை தானம், ஞாயிற்றுக்கிழமை திரியம்பக ஜபம், வாழைத்தோட்ட தானம் இவை களால் சந்தான முண்டாகும். இல்லாவிடில் புருஷனும் மனைவியும் கர்ப்ப ரோயுடையவராவார். இவன் மனையாள் கர்ப்ப சங்கையால் பீடையடைவாள். அந்த பாப பரிகாரத்திற்கு விதிப்படி சாந்தி செய்ய வும்.

(101) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம்) ஆகி ஏழாம்பா வாதிபன்செவ்வாய் லக்கினத்தில் பாபருடன் கூடி சனியுடன் கூடி யாவது அன்றி சனியால் பார்க்கப்பட்டாவது இருந்தால், ஜாதகன் ரகஸ்யத்தில் காமம் பிடித்தவனுவான்.

(102) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபன் சோமவல்யம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய மனைவி கர்ப்பம் கலைவதால் வருந்துவாள், சந்தானத் தடையுடையவளாவாள், கொஞ்சம் கற்பம் கலையும் என்கிற பயமுண்டு. பானுவார விரதம் அனுஷ்டித்து ஏகாதசியில் பரிசுத்தனுய்க் கறுப்புப் பசு தானம் செய்து 3-பொன்னுல் கிருஷ்ணன் போல் பிரதிமை செய்து ஜென்மம் முதலிய தினத்தில் விதிப்படி தானம் செய்தால் தீர்க்காயுளுடைய சந்தானம் உண்டாகும்.

(103) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபன் சுபனுல் பார்க்கப் பட்டால் ஜாதகனுக்குப் புண்ணிய லோகப் பிராப்தி உண்டு.

(104) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம் பூர்வபாகம்) ஆகி நாலாம் பாவத்தில் சந்திரனும் பன்னிரண்டாம் பாவத்தில் சூரியனும் இருந்தால் ஜாதகன் ஆபத்சன்னியாச யோகமுடையவன், ஆயுளுள்ள வரையில் பாக்கிய மனுபவிப்பான்.

(105) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சிவதாம்சம் உத்திரபாகம்) ஆகி நாலாம்பாவத்தில் சந்திரனும் பன்னிரண்டாம் பாவத்தில் சூரியனும் இருந்தால் ஜாதகன் புண்ணிய பலனும் பாவபலனும் சமமாயுடையவன், இந்த உலகில் புண்ணியாத்மாவாயிருப்பான், முடிவில் சுவர்க்கமடைவான், ஆயுளுள்ள வரையில் பாக்கியமனுபவிப்பான்.

(106) ஜென்ம லக்கினம் ரிஷபம் (—————————) ஆகி பதினோராம் பாவத்தில் சுக்கிரன் சுபாம்சத்தில் தன் உச்சத்தில் சந்திரனுடன் கூடி யிருந்தால் ஜாதகன் இருபத்தைந்து வயதுக்கு மேல் சுகமுடையவனுவான்.

(107) ஜென்ம லக்கினம் ரிஷபம் (—————————) ஆகி சுக்கிரன் தன்னுச்ச ராசியிலிருந்து லக்ஷ்மி சஷ்டியம்சத்தை அடைந்திருக்க சந்திரனுக்கு இரண்டில் குரு இருந்தால் நதிப்பிராந்தியத்தில் ஜனிப்பான் பூர்வபாகத்தில் ஜெனனமானுல் நகரத்தில் அக்ராஹாரத்தில் ஜனித்தவன். தான் மூன்றுவதாக ஜெனித்தவன், மூத்த சகோதரன் உண்டு, இளைய சகோதரனில்லாதவன், உத்தராம்சமானுல் ஒரு சகோதரி உண்டாவாள்.

(108) ஜென்ம லக்கினம் ரிஷபம் (———————) ஆகி நான் காம் பாவாதிபதி ராகுவுடன் கூடி பதினோராம்பாவத்தில் சந்திரன் பலத்துடன் யிருந்தால் ஜெனன காலத்தில் ஜாதகனுடைய தாய் சொற்ப வேதனை யடைவாள். உத்தாராம்சமானால் ஜாதகன் நான்காவது கர்ப்பத்தில் ஜெனித்தவன், தாய் அதிக வேதனையடைவாள்.

(109) ஜென்ம லக்கினம் ரிஷபம் (———————) ஆகி சந்திரன் சுக்கிரனுடன் கூடி பதினோராம் பாவத்தில் இருந்து லக்ஷ்மி சஷ்டியம்சத்தில் ஜெனித்தவனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்ட பயமுண்டாகி சீக்கிரம் ஆரோக்யமும், சௌக்கியமுமுண்டாகும்.

(110) ஜென்ம லக்கினம் ரிஷபம் (———————) ஆகி லக்கின பாவாதிபதி இரட்டை ராசியிலிருந்து எட்டாம் பாவாதிபதியும் அப்படியே யிருந்தால் லக்ஷ்மி யோகத்தில் ஜெனித்தவன் மத்தியாயுசுடையவனுவான்.

(111) ஜென்ம லக்கினம் ரிஷபம் (———————) ஆகி லக்ஷ்மி சஷ்டியம்சத்தில் ஜெனித்தவனுக்கு ஒன்பதாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகனுடைய பிதாவுக்குச் சௌக்கியமில்லை.

(112) ஜென்ம லக்கினம் ரிஷபம் (———————) ஆகி ஒன்பதாம் பாவத்தில் செவ்வாய் இருந்து சந்திரனுக்கு ஒன்பதில் கேது இருந்தால் ஜாதகன் பிறந்த வருஷத்தில் தகப்பன் அற்பாயுளால் மரித்துவிடுவான். ஆயினும் பிதா சகோதரர்களுடன் கூடினவன். விஷ்ணு, சிவன் இவர்களிடத்தில் பக்தியுடையவன், அரசாங்கத்தில் நல்ல யோகத்தை அடைந்தவன், தனிகன், ராஜ சேவையுடன் கூடினவன், ஜென்மத்திலிருந்து ஸ்ரீமானுனவன், போகி, மஹா ராஜாவால் சந்தோஷத்தை யடைந்தவன், முன் ஜென்மாந்திர பாபவிசேஷத்தால் ஜாதகன் பிறந்த வருஷத்திலேயே மரித்துவிடுவான்.

(113) ஜென்ம லக்கினம் ரிஷபம் (———————) ஆகி பதினோராம் பாவத்தில் சுக்கிரனுடன் சந்திரன் கூடி யிருந்து, நான்காம் பாவாதிபதி புதனுடன் கூடியிருந்து லக்ஷ்மி யோகத்தில் பிறந்தவனுடைய தாய் விசேஷ சௌக்கியத்தை யுடையவள், நல்ல குணமுள்ளவள், கணவனிடத்தில் பக்தியுடையவள், முன் ஜென்மாந்திர பாப விசேஷத்தால் விதவையாகித் துக்கப்படுவாள்.

(114) ஜென்மலக்கினம் ரிஷபம் (———————) ஆகி லக்ஷ்மி சஷ்டியம்சத்தில் சுக்கிரனிருந்து செவ்வாய் பலத்துடனிருந்து

சகோதர பாவத்தில் கேது இருந்தால் ஜாதகனுடைய சகோதரருக்குச் சௌக்கியமுண்டாகாது ஒரு சகோதரி நீண்ட ஆயுளுடையவளாயிருப்பாள், சிலர் ஜாதகன் சகோதரிகளே யில்லாமலும் இருப்பான் என்று சொல்லுகிறார்கள்.

(115) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி பதினோராம் பாவத்தில் சுக்கிரன் தன் உச்ச ராசியிலிருந்து குருத்திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன் ராஜயோக முடையவன், வெளுப்பு நிறம் உள்ளவன், காத்திரமுடையவன், சமர்த்தனுயிருப்பான்.

(116) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி லாபாதிபதி லக்கின பாவத்திலிருந்து ஐந்தாம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு ராஜயோகம் உண்டாகுமென்று சொல்லப்படுகிறது, அப்படி யோகம் உண்டாயின் ஜாதகன் அரசனுகவாவது, அல்லது அரசனுக்குச் சமமானவனுகவாவது இருப்பான், ஜாதகன் அழகுடையவன், அறிவாளி, வாசாலகன், எழுத்து வித்தை நன்றாய் தெரிந்தவன், ராஜ சேவை செய்பவன், பதினேழு வயதுக்கு மேல் யோகமுடையவன், சுயமாக பிரபலமடைபவன், அரசாங்கத்தில் பிரவேசிப்பவன், அரச மந்திரி மூலம் சந்தோஷம் அடைபவன், பிரபல உத்தியோக சௌக்யமுடையவன், இருபது வயதுக்கு மேல் பணத்தைச் சம்பாதிப்பான். ஐந்தாவது வயதில் வித்தியாப்பியாசமும், ஒன்பதாவது வயதில் அல்லது பத்தாவது வயதில் விவாகமும் நடக்கும், விவாகம் தன் ஜன்ம தேசத்திலேயே நடக்கும், ஜாதகனுக்கு மேற்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள்.

(117) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி ஏழாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தால் பாக்கிய வம்சத்தில் மனைவியை அடைவான்.

(118) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி ஏழாம் பாவத்தில் கேதுவும், இரண்டாம் பாவத்தில் பாபக்கிரகங்களுமிருந்தால் ஜாதகனுக்கு பரஸ்திரீ சங்கமத்தால் தோஷம் உண்டாகும், மனைவி மறித்த பிறகு இந்த தோஷமுண்டாகும்.

(119) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி இரண்டு கிரகங்கள் உச்சராசியிலிருக்க வேறு கிரகம் நீச்சமில்லாதிருந்தால் ஜாதகனுக்குப் பாலியத்தில் கிலேசமும், முப்பத்திரண்டாவது வயதிலிருந்து ராஜயோகமும், உலகத்தில் நல்ல கீர்த்தியுமுண்டாகும்.

ஜாதகன் பிதுரார்ஜித தனமுடையவன், பிரபல உத்யோக ஜீவனமுடையவனுமாவான்.

(120) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி லக்கின பாவாதிபதி இருக்குமிடத்திற்கு இரண்டாம் பாவத்தில் குருவும் மூன்றும் பாவத்தில் ராகுவும் இருந்தால் ஜாதகன் ராஜமுத்திரையால் அதிகாரமுடையவன், ஸ்ரீமான், ராஜசபை மத்தியில் சாதுரியமாகவும், யுக்தியாகவும், வாசாலகனுகவும், எல்லா சாமர்த்தியமுள்ளவனுகவும், தெய்வானுக்கிரக யோக முடையவனுகவும், பல தேசங்களில் புகழுடையவனுகவும், பல்லக்கு முதலிய பாக்கிய முடையவனுகவு மிருப்பான்.

(121) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி இரட்டை ராசியில் சந்திரனுடன் சுக்கிரன் கூடியிருந்தால் ஜாதகன் பணக்காரன், கீர்த்தியுடையவன்.

(122) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————)ஆகி நான்காம்பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் ஐந்தாம் பாவாதிபதியுடன் கூடியிருக்க பதினோாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் மூன்று வாகனமுடையவனுவான்.

(123) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி சாமர யோகத்தில் பிறந்தவன் பன்னிரண்டு வருடம் யோக முடையவனுயிருப்பான். இருபத்தேழு வயதுக்குமேல் அநேக வாகன முடையவன், அரச சிநேகத்தால் பாக்கியத்தையும், லக்ஷத்தில் பாதியான தனத்தையும் சம்பாதிப்பான், யோகம் உண்டான பன்னிரண்டாவது வருஷக் கடைசியில் யோகபங்கமும், பிராமணனுல் அதிக விரயமும், மகாராஜ விரோதமும், சிறைச்சாலை பயமும் (விபத்தெசையில் கேது புக்தியில்) உண்டாகும், இரண்டு, மூன்று வருஷம் கடந்து யோகம் மறுபடியும் உண்டாகும்.

(124) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி சுக்கிரன் தன்னுச்சத்திலாவது, சுய க்ஷேத்திரத்திலாவது, கேந்திரங்களிலாவது பலத்துடன் கூடியிருந்தால் மாளவீ யோகம் என்று சொல்லப்படுகிறது, மேற்படி யோகத்தில் ஜெனித்தவன் யானை, குதிரை சேனை, பல்லக்குமுதலியன உடையவன். துர்க்கங்களுக்கும், பூமிக்கும் குணத்திற்கும், கூட்டத்துக்கும், சமுத்திரத்திற்கும் அதிபதியாவான்.

நல்ல மனைவியுடனும் கூடி அன்னியஸ்திரீகளை அணைய இச்சிப்பவனாக வும், என்றென்றும் போகசாலியாகவும், ராஜாவாகவும் விளங்குவான்.

(125) ஜென்ம லக்கினம் ரிஷபம் (——————) ஆகி சந்தி ரனுக்கு இரண்டிலாவது, நான்கிலாவது, ஆறிலாவது பாக்கியாம்சத்தி லாவது பாபக்கிரகங்களில்லாமலிருந்து சந்திரனுக்குப் பத்தில் குரு இருந்தால் அமலாயோகமென்று சொல்லப்படுகிறது. அமலாயோகத் தில் ஜெனித்தவன் மத்திய வயதில் பாக்கியமுடையவன், நித்யம் தர் மத்துடன் கூடினவன், பல தேசங்களில் பிரசித்தியடைவான், ஆயு ளுள்ளவரை பாக்கியவந்தனாயிருப்பவன்.

(126) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 41–36 கலை முதல் பாகை 41-48 கலை வரையி லும்) ஆகி லக்கின பாவாதிபதி மீனம்சத்தில் ஐந்தாம் பாவத்திலிருந் தால் மகா நதிப் பிராந்தியத்திலுள்ள தேசத்தில் அக்கிரஹாரத்தில் ஜாதகனுக்கு ஜெனன முண்டாகும்.

(127) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம் உத்தரபாகம்) ஆகி லக்கின பாவாதிபதி நீச்ச ராசியை அடைந்திருக்கும்போது ஜெனித்தவன் வனப்பிராந்தியத்திலுள்ள பட்டிணத்திலும், கிராமத்தி லும் வாசஞ் செய்வான். ஜாதகன் வெளுப்பான இரண்டு ஆயுளுடைய சகோதரர்களுடனும், இரண்டு சகோதரிகளுடனும் கூடினவனாயிருப் பான்.

(128) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் சந்திரன் கும்பாம்சத்தில் நீசத்தை அடைந்திருந்தால் ஜாதகனுடைய தாய்க்கு ஸூதி தோஷம் அதிகம் உண்டாகும், தாய்க்குப் பீடையும், கொஞ்சம் பயமும் உண்டாகும், பிறகு சுகமுண் டாகும்.

(129) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்திலாவது, சுய க்ஷேத்திரத்திலாவது சுபர்களு டன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குச் சௌக்யமும், ஜாதக னுடைய தகப்பனுக்கு ஆரோக்யமும் உண்டாகும்.

(130) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி சந்திர னுக்கு இரண்டு பக்கங்களிலும் பாபக்கிரகங்களிருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டத்தினால் பீடையுண்டாகும். ஜாதகன் ஜென்ம வருஷத்தி

லாவது, இரண்டாவது வயதிலாவது பாலாரிஷ்டத்தினால் பீடிக்கப்படுவான். அந்த தோஷ பரிகாரத்துக்கு வெள்ளியால் சந்திரப் பிரதிமை செய்து அர்ச்சித்து அந்த வெள்ளிப் பிரதிமையுடன் வஸ்திரம், வெண் கலப்பாத்திரம் இவைகளை குடும்பியான ஒரு ஜோதிஷனுக்குக் கொடுத்தால் ஜாதகனுக்குத் தேகாரோக்கியம் உண்டாகும்.

(131) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும், சுய க்ஷேத்திரத்தில் சுபக் கிரகங்களுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடனிருப்பான், எட்டாம் பாவாதியுடன் கூடியிருந்தால் பிதா மத்தியாயுளுள்ளவன், விஷ்ணு, சிவன் முதலியவர்களிடம் பக்தியுடையவன், பிராமணர்களிடம் பக்தி விசேஷமாயுள்ளவன், அற்ப வித்தையுடனும், அற்ப தனத்துடனும் கூடினவன், சிறிய கிராமாதிகாரி, பயிர்த்தொழிலில் கொஞ்சமான பலனுடையவன், அரசாங்க உத்தியோகஸ்தர்களுடைய சினேகத்தால் பாக்கியத்தை யடைவான்.

(132) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன்னுடைய உச்ச ராசியிலிருந்தாலும், கேந்திரத்திலிருந்தாலும், பதினோராம் பாவத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு அதிகமான சுபமும், லாபமும் உண்டாகும். ஷை ஒன்பதாம் பாவாதிபதி ஆறு, எட்டு, பன்னிரண்டிலிருந்தாலும், தன் நீச்சத்திலிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் நிதானமான பாக்கியத்தை யுடையவன். ஜாதகனுடைய விபத்தெசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்; அல்லது நான்காம் பாவாதிபதியினுடைய அம்சத் திரிகோண ஸ்புட ராசியை சனி அடையும் போதாவது நான்காம் பாவாதிபதியின் பார்வையுற்ற ராசிகளிலாவது சனி வருங்காலம் பிதா மரிப்பான்; அல்லது அதற்குப் பிறகு சந்திர லக்னஷ்டமத்தில் சனி வரும்சமயம் குரூரக் கிரக மாதத்தில் ஜாதகனுடைய பிதா மரிப்பான்.

(133) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி சந்திரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும், தன்னுச்சத்திலாவது, சுய க்ஷேத்திரத்திலாவது இருந்தாலும் ஜாதகனுடைய தாய் வெகுகாலம் ஜீவித்திருப்பாள். சந்திரன் நீசத்திலிருந்தாலும், நீசாம்சத்தை அடைந்திருந்தாலும் ஜாதகனுடைய தாய் மத்திய வயதுடையவளாவாள்.

(134) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி குருவுடன் கூடி யிருந்தால் ஜாதகனுடைய தாய் நல்ல குணவதியாயிருப்பாள், தாய் வம்சத்தில் விசேஷ சௌக்யமும், தாய்க்குச் சௌக்கியமும் உண்டாகும். விபத் தெசையில் கோசரத்தில் விருச்சிக ராசியில் சனி வருங்காலம் ஜாதகனுடைய மாதா மரணமடைவாள்; அல்லது பதினோராம் பாவாதிபதியின் அம்சத்திலாவது, அவனுடைய ஸ்புடத் திரிகோண ராசிகளிலாவது, பதினோராம் பாவாதிபதியின் திருஷ்டி ராசிகளிலாவது சனி வரும் சமயம் ஜாதகனுடைய மாதா மரிப்பாள்.

(135) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி செவ்வாய் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும், மூன்றும் பாவாதிபதி கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும் அநேக சகோதரர்கள் உண்டவார்கள்.

(136) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதியும் செவ்வாயும், ஆறிலாவது எட்டிலாவது, பன்னிரண்டிலாவது இருந்தாலும், நீசமாயிருந்தாலும் ஜாதகன் சொற்ப சகோதரர்களுடையவனுவான்.

(137) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி பதினோராம் பாவாதிபதி கேந்திர பாவங்களிலிருந்தால் ஒரு மூத்த சகோதரன் ஆயுளுடையவனுகவும், ஒரு சகோதரி தீர்க்காயுளுடன் வைதவ்வியத்தால் பீடிக்கப்பட்டவளாயும் இருப்பார்கள், மற்ற சகோதரர்கள் நாசமடைவார்கள்.

(138) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி செவ்வாய் இராசியில் நீசத்தை அடைந்து அம்சை சக்கிரத்தில் தனுசிலிருந்தால் ஜாதகன் பிதுரார்ஜிதமில்லாதவன், சுயார்ஜித சம்பத்துடையவன், அரசாங்கத்தில் பிரசித்திபெருவான்.

(139) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி மாலிகா யோகத்தில் புதத் திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன் சிவந்த காத்திரமான சரீர முடையவன், சமர்த்தன், தீரன், தியாகி, கெம்பீர புத்தியுடையவன், தன் பந்துஜனங்களை ரக்ஷிப்பவன், சிநேசிதர்களை வஞ்சிப்பதில் புத்தியையுடையவன், நாடக அலங்கார காவியங்களிலும், ஸமஸ்கிருதத்திலும் பிரியமுள்ளவன், நல்ல அறிவாளி, சங்கீதப் பிரியன், காமி, பரஸ்திரீ சேர்க்கையால் பாபத்தை யடைபவன்.

(140) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் புதன் சுயக்ஷேத்திரத்தில் சுக்கிரனுடன் கூடி யிருந்தால் ஜாதகன் எழுதுவதில் நல்ல புத்தியும், விசேஷ கல்வியுமுடையவன்.

(141) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திர ராசிகளில் எட்டாம் பாவாதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய கல்விக்கு இடையூறுண்டாகும், ஜாதகன் சாஸ்திர ஞானமில்லாதவனாக யிருப்பான்.

(142) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி ஐந்தாம்பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருக்க எட்டாம் பாவாதிபதி நீசனுடன் கூடியிருந்தாலும், குரு, ரவியுடன் கூடியிருந்தாலும், ஜாதகனுக்குக் காலாந்திரத்தில் நல்ல புத்திரன் உண்டாவான், அல்லது ஜாதகன் வேறு மனைவியிடத்திலாவது புத்திரனையடைவான். முதலில் பெண் குழந்தையும் அதன் பின் ஆண் குழந்தைகளும் ஜெனிப்பார்கள்.

(143) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி பதினோராம் பாவாதி சூரியனுடன் கூடியிருந்து ஏழாம்பாவாதிபதி நீசராசியை யடைந்திருக்க புதன் அஷ்டமாதியின் அம்சத்தை அடைந்திருந்தால் சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும். அந்த தோஷத்திற்குப்பரிகாரமாக பால கோபாலப் பிரதிமையைத் தானம் செய்வதாலும், பால் சங்கு (பாலாடை) தானம் செய்வதாலும், ஞாயிற்றுக்கிழமையில் விரதமிருப்பதாலும், சேதுஸ்நானம் அவசியம் செய்து முதலில் கோதானத்தைச் செய்து மற்ற தானங்களைப் பின்பு செய்தாலும் நல்ல தீர்க்காயுளையுடைய புத்திரன் பிறப்பான், க்ஷேம திசையில் முன் பாகத்தில் புத்திரன் பிறப்பான், இரண்டாம் பாகத்தில் விசேஷ பாக்கியயத்தை யடைவான், மூன்றும் பாகத்தில் அரச சினேகத்தால் பாக்யமடைவான்.

(144) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட கிரகமாலிகா யோகத்தில் மூன்றும்பாவத்தில் பாபக்கிரகமிருந்து ஐந்தாம் பாவமானது சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் மத்தியவயதில் சௌக்கியத்தை யடைவான்.

(145) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி லக்கின தன பாவாதிபதிகள் உச்சராசியிலிருக்க மூன்றும் பாவத்தில் பாபக்

கிரகமிருந்தால் ஜாதகன் அரசமுத்திரைதரித்து அதிகாரம் செய்வான். க்ஷேம திசையில் விசேஷ சுகமும், சுவர்ண வஸ்திர, பூஷணலாபமும், தன் வீட்டில் சுவர்ன பாத்திர முதலியனவும் உடையவனுவான், ஜாதகனுக்கு க்ஷேத்திர லாபமும், புதுவீடு லாபமும், நற்புகழும் பல வழிகளிலும் தனவரவும் உண்டாகும்.

(146) ஜென்ம லக்கினம் ரிஷபம் (மங்களாம்சம்) ஆகி பன்னி ரண்டாம் பாவாதிபதி சுபராசியை படைந்திருந்தாலும் சுபாம்சத்தில் நீசராசியிலிருந்தாலும் பாப புண்ணிய மிரண்டும் சமமாக இருக்கும். அந்தியத்தில் ஞானம் உண்டாகும்.

(147) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம் அதாவது லக் கினஸ்புடம் பாகை 35-00 கலை முதல் பாகை 35–12 கலை வரையிலும்) ஆகி லக்கினபாவாதிபதி சுபக்ஷேத்திரத்தில் அல்லது சுபக்ஷேத்தி ரத்தில் இருந்தால் ஜாதகன் பெரிய நதிப்பிராந்தியத்தில் வாசத்தையும் பிறப்பையும் அடைவான், உத்தராம்சத்தில் ஆனுல் வனப்பிராந்தியத் தில் ஜெனனம் உண்டாகும். பிரசவ காலத்தில் தாய் அதிக வேதனை யடைவாள். பூர்வ பாகமானுல் சந்திரன் நான்காம் பாவத்தில் இருந் தால் சூதிகாரிஷ்டம் கொஞ்சம் உண்டாகும். ஜென்ம திசையில் அல் லது ஜென்ம வருஷத்தில் அல்லது சம்பத் திசையில் சுய புக்தியில் கொஞ்சம் பாலாரிஷ்ட முண்டாகும். சாந்தியால் சௌக்கியமும் ஆரோக்கியமும் உண்டாகும்.

(148) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சராராசியிலிருக்க எட்டாம் பாவாதிபதி ஸ்திர ராசியிலிருக்க லக்கின கேந்திரத்தில் குரு இருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையவன், சுகமுடையவன், தாய் தகப்பன்களுக்குச் சுகமும், ஆரோக்கியமும் உண்டு. ஜாதகனுக்குத் தேகாரோக்கியமும் விசேஷ சுகமும் உண் டாகும்.

(149) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்)ஆகி ஒன்ப தாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தை அடைந்திருந்து ஒன்பதாம் பாவத்தில் குருவும் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளு டையவன், சிவ பக்தியுடையவன், தேவர், பிராம்மணர்களிடத்தில் பக்தியுடையவன், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், காமீ, மத்திய வயதில் பாக்கிய முடையவன், அரசாங்கத்தில் பிரசித்திப்பெற்றவன், தியாகம் செய்பவன், பந்துஜனங்களுக்குப் பிரியமானவன், க்ஷேத்திர

மூலம் சுகமுடையவன், சகோதரிக்குப் பிரியமானவன், தனமுடைய வன், இரண்டுதார முடையவன், போகி பணம் சம்பாதிப்பதில் சமர்த் தன் புத்திரனுல் கொஞ்சம் சுகம் அடைபவன், பயிர் செய்பவன், சுக முடையவன், பல தேசங்களிலும் புகழுடையவன், லோகத்தில் நிலே யான கீர்த்தியுடையவன், தர்ம மார்க்கப்படி நித்தியம் நடப்பவன், தர்மபுத்தியுடையவன், உதார புத்தியுடையவன், இப்படிப்பட்ட ஜாத கனுடைய பிதா ஐந்தாம் தெசையில் மரிப்பான்.

(150) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புசாம்சம்) ஆகி சந்திரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுடைய தாய் குணத்து டன் கூடினவள், கணவனுடைய மனதை அனுசரித்து நடப்பவள் மேற்படி லக்கினம் குருவால் நன்கு பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் வெகு காலம் ஜிவித்திருப்பாள், கொஞ்சம் ரோகத்தை யுடைய வள், பாக்கிய வம்சத்தி லுதித்தவள், மிக்க நல்ல நடக்கையுடையவள் பதிவிரதையானவள், இவளும் ஐந்தாம் திசையில் மறிப்பாள்.

(151) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி கேஸரி யோகத்தில் புதத் திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன் வெளுப்பு நிறமு டையவன், நல்ல ஆகிருதி உடையவன், சூத்திர ஜன்மத்தில் பிறந்த வன், நல்ல மேதாவி, சகோதரப்ராதா இல்லாதவன் பேத சகோதர னுடன் கூடியிருப்பான், வாததேகி, பிதுர்பாக்கியத்துடன் கூடியவன் தாயிடம் விசேஷ பக்தியுடையவன், தகப்பனுல் சம்பாதிக்கப் பட்ட நல்ல சம்பத்துடையவன், சுயார்ஜிதமும் சம்பாதிப்பான், தினம் பிதா வுக்குப் பிரிய மானதைச் செய்வான், கல்வியுடையவன், தெளிவான புத்தியுடையவன், எழுதுவதில் சமர்த்தன், க்ஷேத்திரமூலம் நல்லபாக் கியமுடையவன், கெம்பீர ஹிருதயமுடையவன், கொடையாளி, மத் திய அந்திய வயதுக்களில் பாக்கிய யோகமுடையவன், சகோதரியி டம் அன்புள்ளவன், தியாகம் செய்பவன்.

(152) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி ஒன்ப தாம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தடாகம் உத்தி யானம் முதலியவற்றிற்குத் தர்மம் செய்பவனுயிருப்பான்.

(153) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய சந்திரன் சனியுடன் கூடி லக்கின பாவத்தில் இருந் தால் பின் சகோதரி சௌக்கியம் உள்ளவளாயும் புத்திரன் புத்திரி யுடன் கூடியவளாயுமிருப்பாள், அவளுடைய பர்த்தா பாக்கிய யோக

முடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன். சகோதரியின் கணவன் மூலமாக ஜாதகன் கிராமம், பூமி முதலிய விசாரணையுடைய வன்.

(154) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சனியிருந்து ஐந்தாம் பாவாதிபதி தன் உச்ச ராசியை அடைந்திருந்து லக்கின கேந்திரத்தைக் குரு அடைந்திருந்தால் ஜாதகனுக்கு மத்திய வயதில் புத்திரனுண்டாவான். ஜாதகன் அர்ப ஸந்தான யோகமுடையவன், முதலில் பெண் குழந்தை உண்டாகும், சிலர் வேறு மனைவியிடம் புத்திரனுண்டாவான் என்றும், இரண்டு மனைவியிடமும் புத்திரன் பிறப்பான் என்றும், இரண்டு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு என்றும் சொல்லுகிறார்கள்.

(155) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் ராகுவுடன் சந்திரன் கூடியிருந்தால் நல்ல பாக்கியமுடையவனாக ஜாதகனிருப்பான்.

(156) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி சந்திரனுக்குப் பத்தாமிடத்தில் குரு இருந்தால் அமலாயோக மென்று சொல்லப்படுகிறது. அந்த யோகத்தில் ஜெனித்தவன் வெகு க்ஷேத்திரம் தனம் முதலியவற்றைச் சம்பாதிப்பான், புத்திரப் பிரபலயோகம் மனித வாகனம், முதலான பாக்கியமுடையவனாயிருப்பான்.

(157) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி கேந்திரத்தில் பதினோராம் பாவாதிபதியுடன் பலத்துடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் இருபதாயிரம் தனமுடையவனாவான்.

(158) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சுப பலனுடையவனாகி லக்கின பாவத்தில் இருந்தால் மத்திய வயதில் ஜாதகன் சௌக்கியத்தை அடைவான்.

(159) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதிக்கு இரண்டாமிடத்தில் புதனும், மூன்றாமிடத்தில் பாபக்கிரகமும் இருந்து, ஐந்தாம் பாவமானது சுபக்கிரகங்களால் நன்கு பார்க்கப்பட்டால், ஜாதகன் ஆயுளுள்ளவரை பாக்கியமுள்ளவனாயிருப்பான்.

(160) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்திலிருந்து குருவும் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் புத்திரனால் நல்ல பாக்கியத்தையும், அனுகூல சௌக்கியத்தையும் அடைகிறான்.

(161) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அம்புஜாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி சுபக்கிரகங்களின் ராசியிலிருந்து, குரு லக்கின கேந்திரத்தை அடைந்திருந்தால் அந்தக் கிரக ஜாதிக் கனுகுணமான உலகத்தை ஜாதகன் அடைகிறான், நல்ல கெதியும் உண்டாகும்.

(162) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சாங்கரியம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 59-00 கலை முதல் பாகை 59–12 கலை வரையிலும்) ஆகி லக்கின பாவாதிபதி பாபக்கிரக ராசிகளிலிருந்து லக்கின பாவத்தில் பாபக்கிரகங்கள் இருந்தாலும் பாபர்கள் லக்கின பாவத்தைப் பார்த்தாலும் வனப்பிராந்தியத்திலாவது, கிரிப் பிராந்தியத்திலாவது, ஜனனம் உண்டாகும். பூர்வ பாகமானால் அக்கிராரத்தில் நதிப்பிராந்தியத்தில் பிரசவிக்கப்பட்டவன், சந்திரன் பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால் தாய்க்குத் தோஷம் உண்டாகும், பிரசவ சமயத்தில் ஜாதகன் தாய் அதிக வேதனையால் கஷ்டப்படுவாள், சந்திரன் நின்ற ராசியதிபதி சுபக்கிரகத்துடன் கூடியிருந்தால் சாந்திமூலம் ஆரோக்கியமும் சௌக்கியமும் உண்டாகும்.

(163) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சாங்கரியம்சம்) ஆகி சந்திரன் ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகன் பாலக்கிரக தோஷத்தால் பீடிக்கப்படுவான்.

(164) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சாங்கரியம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் சுக்கிரன் சுபாம்சத்திலிருந்து மித்திரக்கிரகத்துடன் கூடியிருந்தாலும், மித்ரக்கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தீர்க்காயுள் யோகமுடையவனாவான், சுக்கிரன் பத்தாம் பாவத்தில் எட்டாம்பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் மத்தியாயுளுடையவன், ஜெனன காலத்தில் ஜாதகனுக்கும் தாய் தகப்பனுக்கும் சுகமும், தேக சௌக்யமும் உண்டாகும்.

(165) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சாங்கரியம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி கேந்திரபாவத்திலிருந்து சுப, மித்ரக் கிரகங்களுடன் கூடியிருந்தாலும் எட்டாம் பாவத்தில் புதனுடன் சூரியன் கூடியிருந்

தாலும் ஜாதகனுடைய தகப்பன் மத்திய வயதுடையவன், சிவபக்தி யுடையவன், விஷ்ணு பக்தியுடையவன், சுகமுடையவன், வைதீக ஆசாரமுடையவன், தர்மாத்துமா, திரவியம் சம்பாதிப்பதில் சமர்த் தன், சொற்ப வித்யா சம்பத்துடையவன், சீக்கிரத்தில் கோபிப்பவன், தெளிந்த அறிவாளி, வாதம் நிறைந்த தேகமுடையவன், தர்ம புத்தி யுடையவன், வேத சாஸ்திர புராணமறிந்தவன், இப்படிப்பட்ட தகப் பன் ஜாதகனுடைய விபத்தெசையில் மரணமடைவான்.

(166) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சாங்கரியம்சம்) ஆகி நான் காம் பாவாதிபதி லக்கினத்திற்குக் கேந்திரத்திலாவது, சந்திர லக்கி னத்திற்குக் கேந்திரத் திரிகோணங்களிலாவது இருக்கப் பிறந்தவனு டைய தாய் வெகு காலம் ஜீவித்திருப்பாள்.

(167) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சாங்கரியம்சம்) ஆகி ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களில் சூரியனிருந்து மாதுரு காரகனான சந்திரன் செவ்வாயுடன் கூடியிருந்தால், ஜாதகனுடைய தாய் அற்பாயுளுடையவள், குணத்துடன் கூடியவள், கொஞ்சம் ரோகத்தை யுடையவள், பதிவிரதையானவள், நற்புகழுடையவள், சகோதர பிராதாக்களுடன் கூடினவள், அற்ப பாக்கியத்துடன் கூடி யவள், அன்னதானம் செய்வதில் பிரீதியுடையவள், நல்லகுணமுள்ள வள், மாதுரு வம்சத்தில் சொற்ப சௌக்கிய முடையவள், வம்சபாக் யவிருத்தியுமுடையவளாவாள்.

(168) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சாங்கரியம்சம்) ஆகி பன்னி ரண்டாம் பாவாதிபதி சுபக்கிரகத்துடன் கூடியிருந்து எட்டாம் பா வாதிபதி கேந்திர ராசிகளை அடைந்திருந்தால் ஜாதகன் அந்தியத்தில் தியானத்துடனிருந்து பிறகு புண்ணிய லோகத்தை அடைவான்.

(169) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 53-24 கலை முதல் பாகை 53-36 கலை வரையிலும்) ஆகி சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சிவபக்தியுடையவன், சைவாசார மதத்தை அடைபவன், அரசாங்கத்தில் பிரசித்தியானவன், அரச மந்திரியால் சந்தோஷிக் கப்படுபவன், மத்திய வயதில் சௌக்கியமுடையவன், சூத்திரர் மூல மாக நல்ல பாக்கியமுடையவன், சுயார்ஜிதம் சம்பாதிப்பவன், தெய்வ யோகத்தால் நல்ல புண்ணியவானுயிருப்பான்.

(170) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயிருக்கப் பிறந்தவனுடைய தகப்பன் ஜாதகன் பிறந்த வருஷத்தில் வியாகூலத்தையும் கொடுக்கல் வாங்கல் மூலம் மனஸ்தாபத்தையும் கொஞ்சம் அடைகிறான், குரு திருஷ்டி யிருந்தால் பிறகு சுகமும், ஸ்வஸ்தமும் உண்டாகும்.

(171) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி லக்கின பாவத்தின் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும், சத்துரு க்ஷேத்திரத்தை அடைந்திருந்தாலும் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் பீடையுண்டாகும், ஜென்ம திசையில் மூன்றாம் வருஷத்தில் தாய்க்குப் பீடையுண்டாகும், ஜாதகன் ஜென்ம திசையில் மாந்த ஜ்வர பயத்தால் பீடிக்கப்படுவான்.

(172) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம்) ஆகி அதாவது லக்கினம் சுபருடைய க்ஷேத்திரமாகி லக்கின பாவாதிபதி கேந்திரத்தை அடைந்திருந்தால் பெரிய நதிப் பிராந்தியத்தில் சிறு கிராமத்தில் ஜாதகன் ஜெனிப்பான்.

(173) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம்) ஆகி உத்தராம்சத்தில் லக்கின பாவாதிபதி ரவியுடன் கூடியிருக்கப் பிறந்தவனுக்கு வனப் பிராந்தியத்தில் பட்டிணத்தில் பிறப்பும், வாசமும் நேரிடும்.

(174) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம்) உத்திரபாகம் ஆகி சந்திரன், ராகுவுடன் கூடியிருந்தால் குழந்தை கொடிசுற்றிப் பிறக்கும், பூர்வ பாகத்தில் ஜெனனமானால் கொடி சுற்றியிராது.

(175) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம்) ஆகி சந்திரன் பாபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்ட தோஷம் சம்பவிக்கும், ஜெனன காலத்தில் தாய்க்குப் பீடையுண்டாகி சீக்கிரத்தில் ஆரோக்யம் உண்டாகும். ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்ட தோஷமுண்டு, சாந்தி செய்தால் ஆரோக்யத்தையும், சௌக்யத்தையும் அடைவான். பத்து தினம் வரையில் அல்லது பத்து மாதம் வரையில் பாலாரிஷ்டம் உண்டு. சந்திரன் குருவால் பார்க்கப்பட்டாலும், குருவுடன் கூடியிருந்தாலும் அதற்குப் பிறகு சௌக்கியமுண்டாகும்.

(176) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம்) ஆகி லக்கின கேந்திர பாவத்தில் ஜன்ம லக்கின பாவாதிபதி இருந்து குரு தன்

உச்ச ராசியிலிருக்கப் பிறந்தவனுடைய தாய், தகப்பனுக்குச் சுகமும், ஜாதகனுக்குத் தேகசுகமும் உண்டாகும்.

(177) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம்) ஆகி சுக்கிரத் திரிம்சாம்சத்தில் பிறந்தவன் ரூப முடையவன், சுப முடையவன், அழகிய முகமுங், கண்களுமுடையவன்.

(178) ஜென்ம லக்கினம் ரிஷபம் (காலாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் கேது யிருக்கப் பிறந்தவன் மூர்க்க ஸ்வபாவமுடையவன், கோபமுடையவன், தகப்பனுடைய வார்த்தையைக் கேவலமாக நினைப்பவன், அயலார் சொற்படி நடப்பவன், கொஞ்சம் லோபகுண முடையவன், க்ஷணத்தில் கோபிப்பவன், க்ஷணத்தில் பொறுமை யடைபவன், ஸ்திரீகளிடத்தில் பிரியமுள்ளவன், நல்ல அழகான சரீர முடையவன், அற்பவித்தை யுடையவன்; தாயிடமும், சகோதரரிடமும், கொஞ்சம் பிரீதியுடையவன், ஸம்பத் தார தெசையில் பிதாவுக்குச் சௌக்யமும், பணவரவும் உண்டாகும்.

(179) ஜென்ம லக்கினம் ரிஷபம் (குந்தாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 33-36 கலை முதல் பாகை 33-48 கலை வரையிலும் ஆகிப் பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் ஐந்தாம் பாவாதிபதியுடன் கூடி யிருந்தால் நதிப் பிராந்தியத்தில் பட்டணத்திற்கு அடுத்த கிராமத்தில் ஜனனமும், வாஸமும் நேரிடும். உத்தராம்சத்திலானுல் சிறிய கிராமத்தில் ஜனனம் நேரிடும். ஜாதகன் சீமந்த புத்திரன், தீர்க்காயுளுள்ளவன், பாலியத்தில் பிதா நாசமடைவான். ஜாதகன் கருப்பான தேகமுடையவன், ஒண்டியானவன், சகோதரனில்லாதவன்,

(180) ஜென்ம லக்கினம் ரிஷபம் (குந்தாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி நீச்சத்தில் செவ்வாயுடன் கூடியிருந்தாலும், செவ்வாயால் பார்க்கப்பட்டாலும், பூர்வபாகத்தில் ஜெனித்தவன் ரோகமுடையவன், துர்ப்பலமான தேகமுடையவன், பாலியத்தில் சௌக்கியத்தையும், சுகத்தையும் அடைவான், மத்தியத்தில் கொஞ்சம் தரித்திர முள்ளவனுவான்.

(181) ஜென்ம லக்கினம் ரிஷபம் (குந்தாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் சூரியன், ஒன்பதாம் பாவாதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விஷ்ணுபக்தி யுடையவன், வைஷ்ணவாச்சார பாக்

கியமுடையவன், தன் புஜத்தால் சம்பாதிக்கப்பட்ட பொருளுடைய வன், வைதீகாசாரமுடையவன், தர்மிஷ்டன், மத்திய வயதில் பாக் கியத்தையுடையவன், புத்திர விசனத்தால் பீடிக்கப்பட்டவன், மத் திய ஆயுளுடையவன், இளைய சகோதரனுடன் கூடியிருப்பான். சூரியனால் எத்தனைப் பரல்கள் அஷ்டவர்க்கு கொடுக்கின்றதோ அத் தனைக் கணக்கான சகோதரர்கள் தகப்பனுக்கு உண்டு.

(182) ஜென்ம லக்கினம் ரிஷபம் (குந்தாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சூரியனாகி சுய க்ஷேத்திரத்தில் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய ஜென்ம திசையில் அல்லது ஜென்ம வருஷத்தில் தாய்க்கு ஜாட்டியம் உண்டாகும். மிகவும் கஷ்டமும், பீடையும் உண் டாகும். இப்படி யிருக்கும்போது சந்திரன் ஜெனன காலத்தில் கேந்திர திரிகோணங்களிலிருந்தால் தாய்க்கு முதலில் கஷ்டமும், பிறகு சௌக்யமும் உண்டாகும்.

(183) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம் அதாவது லக் கின ஸ்புடம் பாகை 56-36 கலை முதல் பாகை 56–48 கலை வரையி லும்) ஆகிப் பிறந்தவனுக்கு லக்கின பாவத்தில் செவ்வாயும், ஐந்தாம் பாவத்தில் குருவும் இருந்தால் ஜாதகனுக்குப் பின் சகோதரமில்லை, பிறந்தாலும் மரித்துவிடும், ஜாதகன் இரண்டு சகோதரிகளையுடைய வன், ஆசையுடையவன், ஒரு சகோதரனுடன் கூடி யிருப்பவன், தாய் தகப்பனுக்குச் சௌக்ய மில்லாதவனாவான், உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாயும், தகப்பனும் தீர்க்க ஆயுளுடையவர்களாவார் கள். ஜாதகன் ஜென்ம தேசத்திலேயே பாக்கியத்தை அடைவான். பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்கு மூத்த சகோதரன் தீர்க்க ஆயுளு டையவனாயிருப்பான். சிறு கிராமத்தில் பிறந்தவனாவான். ஸம்பத்தி சையில் மேற்குச் சமுத்திர நல்லப் பிராந்தியத்தில் அல்லது கோகர் ணப் பிராந்திய தேசத்தில் பாலியத்தில் சஞ்சாரத்தை அடைவான், தரித்திரத்தினால் பீடிக்கப்படுவான், உபத்திரத்தினால் அந்த திக்கையும் விட்டுவிட்டுப் பிறகு தன் இடத்துக்கே வருபவனாவான்.

(184) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகிப் பிறந்த வனுக்குப் பதினோராம் பாவத்தில் சூரியன் சனியுடன் கூடியிருந்தால் ஸம்பத் தெசையில் ஜாதகனுடைய பிதாவுக்கு அரிஷ்டமும் தேசத்தை விட்டு வேரிடம் போதலும் நேரிடும்.

(185) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகிப் பூர்வபா கத்தில் ஜனித்தவனுக்கு ஏழாம் பாவாதிபதி சனியால் பார்க்கப்பட்

டால் இரண்டு விவாகம் நடக்கும், மூத்த மனைவி புத்திரனில்லாதவள் ஆவாள்.

(186) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் இரண்டு மனைவிகளை அடைவான். சிலர் மூன்று மனைவியரை அடைவானென்றும் மனைவி சௌக்கிய மில்லாதவனென்றும் சொல்லுகிறார்கள்.

(187) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகிப் பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்கு ஐந்தாம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்து பதினோராம்பாவத்தில் சனியிருந்தால் சந்தானத்துக்கு இடைஞ்சல் உண்டாகும்.

(188) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் குரு இருந்து இரண்டு பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் முன் ஜென்மத்தில் பிராமண சாபத்தை அடைந்தவன், அந்த தோஷ நிவர்த்திக்காக சேதுஸ்நாநம், சிவார்ச்சனை, நாகப்பிரதிஷ்டை முதலியவற்றைச் செய்தால் ஸந்தானம் உண்டாகும். பூர்வபாகத்தில் ஜெனித்தவன் நாகப் பிரார்த்தனை செய்தால் காலாந்திரத்தில் சந்தேகமில்லாமல் புத்திரனையடைவான்.

(189) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்குப் பதினோராம் பாவத்தில் சூரியன் இருந்தால், சூரிய விரதம் முதலிய புண்ணியத்தைச் செய்தால் சந்தேகமில்லாமல் புத்திரன் பிறப்பான்.

(190) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு ஸந்ததி க்ஷீணமாய்விடும்.

(191) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி பூர்வபாகமாகி மூத்த சகோதரனுடைய புத்திரஸ்தானாதிபதியாகிய சந்திரன் நீச்சாம்சத்தில் இருந்து, செவ்வாயால் பார்க்கப்பட்டால் மூத்த சகோதரனுடைய பிள்ளைக்கு ஜல கண்டத்தால் அரிஷ்டம் உண்டாகும்.

(192) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி நிர்மலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் ஐந்து, அல்லது

ஏழு சகோதரர்களை யுடையவன். இரண்டு, மூன்று பேர் சௌக்யத்தை அடைவார்கள், வெகு ஆயுளுடையவர்கள், உத்தராம்சத்தில் ஜனித்த வனுக்கு ஒரு சகோதரி விதவையாவாள், ஜாதகன் பூர்வ பாகத்தில் பிறந்தாலும் சகோதரிகள் விதவையாவார்கள்,

(193) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி சந்திரனுக்கு ஏழாமிடத்தில் பாபக்கிரகங்களிருந்து சந்திரன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்டம் உண்டாகும்.

(194) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி உத்தராம் சத்தில் ஜெனித்தவனுக்குச் சந்திரன் வர்கோத்தமத்திலிருந்தால், இரண்டாந் தெசையும், மூன்றும் தெசையும் சந்திக்கின்ற காலத்தில் தாய், தகப்பன் மரணமடைவார்கள். இவ்விதமாக சந்திரன் இருந்து ஜெனனம் பூர்வபாகமானல் ஜென்ம தேசத்தை விட்டு தேசாந்தரத் தில் தாய், தகப்பனுக்கு அரிஷ்டம் உண்டாகும்.

(195) ஜென்ம லக்கினம் ரிஷபம் (அபலாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி தன் உச்சாம்சத்தில் இருந்து, நிர்மலாம்சத்தில் சந்திர னும் இருந்தால் ஜாதகன் வேதாந்த தத்துவ ஞானம் அறிந்தவன், ஆஸ்திக கர்மத்தையுடையவன் ஆவான்.

(196) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம் அதாவது லக் கினஸ்புடம் பாகை 30-12 கலை முதல் பாகை 30-24 கலை வரையி லும்) ஆகி லக்கின பாவாதிபதி சராசியிலிருந்து, மீனம்சத்தில் இருக் கிற புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் முதல் கர்ப்பத்தில் அல்லது இரண்டாவது கர்ப்பத்தில் ஜெனித்தவன், பின்சகோதரமுடையவன், சுகமுடையவன், பின் பிறப்பு சகோதரி யென்று சொல்லப்படுகிறது சிலர் இரண்டு சகோதரிகள் உண்டு என்று சொல்லுகிறார்கள்.

(197) ஜென்ம லக்கினம் (பங்கஜாம்சம்) ஆகி நான்காம் பாவா திபதி சராசியிலிருந்து மீனம்சத்திலிருக்கப்பட்ட புதனுடன் கூடி யிருக்க சந்திரன் பதினோராம் பாவத்தை யடைந்திருந்தால் தாய்க்கு ஜாதகனுடைய பிரசவம் சீக்கிரமாக உண்டாகும். ஜாத கனுடைய தாய் தகப்பனுக்குச் சுகமும், ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்ட பயமும் உண்டாகும். சந்திரன் மீனத்தின் அந்தியத்திலா வது மேஷ ராசியின் முதலிலாவது இருந்தால் பிரசவ காலத்தில் தாய்க்குக் கண்ட முண்டாகும். ஆனல் சந்திரன் சுப க்ஷேத்திரத்தில் இருந்தால் கண்டம் நிவர்த்தியாகி சுக முண்டாகும்.

(198) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பங்கஜாம்சத்திலிருந்து பத்தாம் பாவத்தில் குருவும் இருந்தால் சுபலக்கினத்தில் பிறந்தவனுக்குக் கண்ட தோஷம் கிடையாது.

(199) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி ஸ்திராவஸ்தை யுடையவனுயிருக்க பத்தாம் பாவாதிபதி தன்னுடைய உச்சராசியிலிருந்து குரு பாக்யாம்சத்தை அடைந்திருந்தால் பாலதோஷத்திலிருந்து ஜாதகனுக்குச் சுகமுண்டாகும்.

(200) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவத்திற்கு இரண்டு பக்கங்களிலும் பாபக்கிரகங்களிருந்து லக்கின பாவாதிபதியும் சூரியனுடன் கூடியிருந்தால் சந்திரன் அஸ்வணியில் இருந்தால் கேது திசையில் இரண்டு, மூன்று வாரம் பாலரோகத்தால் ஜாதகன் பீடிக்கப்படுவான்; அந்த தோஷ பரிகாரத்தின் பொருட்டு கேது பிரதிமை தானம் செய்ய வேண்டியது. சொர்ணத்தால் செய்யப்பட்ட கேதுப் பிரதிமையை பூஜித்து ஜோதிஷனுக்கே தானம் செய்யவேண்டும், அப்படிச் சாந்தி செய்தால் கேது திசையில் ஜாதகனுக்குச் சுகமுண்டாகும், சிலர் விருஷப லக்கினத்துக்கு இரண்டு பன்னிரண்டு முதலிய இரண்டு இடங்களில் பாபக்கிரகங்கள் இருந்து சந்திரன் அஸ்வணியிலிருந்தால் அந்தக் கிரக சக்கிரத்தைத் தானம் செய்தால் தேக சுகம் உண்டாகும் என்றும் ஏழுவருஷத்துத்துக்குப் பின்பு லக்கின பாவாதிபன் புக்தியிலும் சுகம் உண்டாகும் என்றும் சொல்லுகிறார்கள்.

(201) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கினாதிபதி யிருக்கிற ராசிநாதன் தன்னுடைய உச்ச ஸ்வக்ஷேத்திர மித்திர ராசிகளை அடைந்திருந்தால் எல்லா தோஷங்களும் சீக்கிரமாக விலகி ஜாதகன் ஆயுளுடன் ஜீவிப்பவனுவான்.

(202) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பங்கஜாம்சத்திலிருந்து மித்திர க்ஷேத்திரத்தை ரவி அடைந்திருந்து ஒன்பதாம் பாவாதிபதியும் உச்சராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குத் தீர்க்காயுளுண்டாகும். ஜாதகன் பிதாவைப்போலவே கொடுக்கும் குணமுடையவன், தர்ம சிந்தனையுடையவன், தர்ம பாராயணம் செய்பவன், தயையுடையவன், தர்மிஷ்டன், இருந்தாலும் பணத்தைச் சம்பாதிப்பதில் ஸமர்த்தனுவான்.

ஜாதகனுடைய தாய் சர்பத்தினால் ஆபத்தையடைவாள், தகப்பன் சௌக்கியத்துடன் கூடினவன். ஜாதகன் அற்ப வித்தை யுடையவன், திரவியத்தைச் சம்பாதித்துச் சுகமடைவான், அதிர்ஷ்டசாலி, மேதாவீ, தெய்வானுக்கிரக யோகம் அடைந்தவன், ஜாதகனுக்கு பிதாவைக்காட்டிலும் அதிகமான பாக்கியம் உண்டாகும், பயிர்த்தொழிலில் அதிக பலனுண்டாகும், சந்திர திசை சனி புக்தியில் ஜாதகனுடைய பிதா மரிப்பான்.

(203) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சந்திரன் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து லக்கின பாவத்தின் மூன்றும் பாவத்தில் புதன் இருந்தால் ஜாதகனுடைய தாய் சுகத்தையடைவாள், குணவதியாய் இருப்பாள், சுத்தமுடையவள், சாதாரண குடும்பஸ்த்தன் வீட்டில் பிறந்தவளாவாள்.

(204) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி செவ்வாய் மிதுனும்சத்தில் இருக்கப் பிறந்தவனுடைய சகோதாருக்குச் சௌக்யமுண்டாகும். ஜாதகனுக்கு இரண்டு சகோதரர்கள் தீர்க்காளுடனும், மூன்று சகோதரிகள் ஆயுளுடனும் இருப்பார்கள்.

(205) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி சந்திரன் சுபர்களுடன் கூடியோ அல்லது சுபர்களால் பார்க்கப்பட்டோ பங்கஜாம்சத்திலிருக்கும் போது பிறந்தவன் மூன்றுவதாக அல்லது நான்காவதாக ஜெனித்தவன், மூத்த சகோதரனில்லாதவன், இரண்டு சகோதரிகளையுடையவன். ஆசையுடையவன், கருப்பு நிறமான சரீரமுடையவன், மேதாவீ, அறிவாளி, போகீ, பிதுரு சௌக்யமுடையவன்.

(206) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி சந்திரன் பங்கஜாம்சத்தில் சரராசியில் இருந்து அந்த பாவாதிபதி தன்னுச்சராசியிலிருந்து லக்கின பாவத்துக்கு இரண்டாமிடத்தில் குரு இருந்தால் ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் ஜெனித்தவனாவான்.

(207) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சரராசியிலிருந்து இரண்டுபாபக்கிரங்களால் பார்க்கப்பட்டு லக்கினத்தின் ஐந்தாம் பாவத்தில் செவ்வாய் இருந்தால் சிறு கிராமத்தில் ஜாதகன் ஜெனித்தவனாவான். பந்துக்களின் வீட்டில் ஜனனமும், ஜெனன காலத்தில் தாய்க்குப் பிரசவ வேதனை கொஞ்சமாகவும் இருக்கும்.

(208) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகிச் சந்திரன் சராசியில் பாபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்ட பயம் கொஞ்சம் உண்டாகும்.

(209) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி சந்திரன் கன்யாம்சத்தில் மகர ராசியில் செவ்வாயுடன் கூடியிருந்து லக்கின பாவத்துக்கு ஐந்தில் பாபக்கிரக மிருந்தால் ஜென்ம திசையாகிய செவ்வாய் திசையில் ஜனனமான இரண்டாவது, அல்லது மூன்ருவது வயதில் ஜாதகன் பாலாரிஷ்ட பயத்தினல் மரணத்துக்குச் சமமாக இருந்து பிழைப்பவனுவான்.

(210) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி சூரியன் கேந்திரத் திரிகோணத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி தன்னுடைய உச்சராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மெல்லிய சரீர முடையவன், அரசாங்கத்தில் நல்ல புத்தியுடையவன், விஷ்ணு, சிவன் முதலியவர்களிடம் பக்தி யுடையவன், மத்திய வயதில் பாக்கிய முடையவன், பணம் சம்பாதிப்பதில் சமர்த்துடையவன், சகோதரப் பிராதா இல்லாதவன், நித்தியம் ராஜ சேவையுடன் கூடினவன், பிரபல உத்தியோக ஜீவனமுடையவனுயிருப்பான்.

(211) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சந்திரனிருந்து பாக்கியாம்சத்திலுள்ள புதனுடன் சேர்ந்திருந்தால் ஜாதகனுடைய தாய் குணமுடையவள், சுத்தமுடையவள், கணவனிடத்தில் பக்தியுடன் கூடியவள், நித்தியம் பந்துக்களுக்குப் பிரியத்தைச் செய்பவள், வம்சத்தில் பாக்கிய விருத்தியுடையவள் ஆவாள்.

(212) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி சந்திரன் பங்கஜாம்சத்திலிருக்கப் புத திரிம்சாம்சத்தில் பிறந்தவன், மூன்ருவது கருப்பத்தில் ஜெனித்தவனுவான், கருப்பு நிறமானவன், அக்கிரஹாரத்தில் வசிப்பவன், சகோதரனில்லாதவன், இரண்டு சகோதரிகளை யுடையவன், இவன் ஒருவன் வாத சிலேஷ்ம சுபாவமுடையவன், விஷ்ணு சிவ பக்தியுடன் தேவப் பிராமண பக்தியுமுடையவன், கொஞ்சம் உலோப குணம் உள்ளவன், மந்த சுபாவமுள்ளவன், குணமுள்ளவன், திரவிய சம்பாதனையில் சமர்த்துள்ளவன், உபாயத்தால் காரியசாதகம் செய்து கொள்பவன், முப்பத்தைந்து வயதுக்குமேல் சுகமுடையவன், சுயப்பிரபலம் அடைந்து சுகத்தையும் அடைவான்.

(213) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி பங்க ஜாம்சத்தில் சந்திரனிருந்து, சந்திரனுக்கு இரண்டு, நான்கு, ஆறு, ஒன்பது முதலிய ராசிகளில் பாபர்கள் இல்லாமலிருந்து, சந்திரனுக்குப் பத்தாமிடத்தில் குரு இருந்தால் அமலா யோகம் உண்டாகும். அந்த ஜாதகன் யோகமுடையவனாகவும், தனவானாகவும், சுகியாகவுமிருப்பான்.

(214) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் குரு கதாம்சத்திலிருந்து சந்திரன் பங்கஜாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய விபத்தெசையின் மத்தியில் ஜாதகனுடைய தகப்பன் அரிஷ்டமாவான்.

(215) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் பாபக்கிரக மிருந்து அந்த ஐந்தாம் பாவாதிபதி நீச்ச சத்துரு க்ஷேத்திரங்களை அடைந்து குருவும் பலக் குறைவுடையவராக இருந்தால் ஜாதகன் சந்தான நாசத்தால் சோகத்தை அடைவான்.

(216) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் குரு இருந்து ஐந்தாம் பாவத்தில் செவ்வாய் இருந்து ஐந்தாம் பாவாதிபதி பாபியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு புத்திர சந்தானத்துக்கு இடைஞ்சல் உண்டாகும். அந்த தோஷத்துக்கு விதிப்படி சாந்தி செய்ய வேண்டும். அதாவது கோபால கிருஷ்ணப்பிரதிமை தானம், பதினாயிரம் சிவார்ச்சனை, நாகப்பிரதிஷ்டை, நாகசாந்தி முதலியன செய்தால் புத்திரப் பிராப்தி உண்டாகும்.

(217) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி செவ்வாய் ஐந்தாம் பாவத்தில் இருக்க அந்த ஐந்தாம் பாவாதிபதி சுபக்கிரகத்துடன் கூடியிருக்க குரு சுபக்கிரகாம்சத்தில் இருந்தால் காலாந்தரத்தில் ஜாதகன் புத்திரனை அடைவான்.

(218) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சந்திரன் சுபாம்சத்திலிருந்து சகட யோகத்தில் பிறந்தவனுக்கு அந்திய வயதில் புத்திரன் பிறப்பான். ஜாதகன் ஒரு பிள்ளையும் அநேக பெண் குழந்தைகளையும் உடையவன், நான்காம் பரியாயத்தில் கோசாரத்தில் குரு விருஷப ராசியை அடையும் சமயம் நல்ல ஆயுளுள்ள புத்திரனைச் சந்தேகமில்லாமல் அடைவான்.

(219) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து சுக்கிரனால் பார்க்கப்பட்டால்

அவனுடைய திசையில் ஜாதகன் நல்ல பாக்கியத்தையும் தனவரவையும், சுயப்பிரபலத்தையும், நல்ல புகழையும், புண்ணிய லாபத்தையும் அடைவான்.

(220) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பங்கஜாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் சுபக்கிரகமிருந்து அந்த விரயபாவாதிபதியும் சுப ராசியை அடைந்திருந்தால் சம்பூர்ண லோகபலன் பூர்ணமாக உண்டாகும். அந்தியத்தில் ஞானமும் உண்டாகும்.

(221) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சித்திராம்சம்) ஆகி பத்து, ஒன்பது, இரண்டு, ஏழு முதலிய பாவங்களில், குரு, சுக்கிரன் இவர்களிருந்தாலும், ஒன்பது, பத்துக்குடையவர் பதினோராம் பாவத்தில் அல்லது லக்கின பாவத்தில் இருந்து, சுபக்கிரகத்துடன் கூடியிருந்தாலும், லக்கினுதி யோகம் உண்டாகும், ஷ்டியோகத்தில் ஜனித்தவன் ஸ்ரீமான், பிரசித்த வைபவமுடையவன், மகான், பல்லக்கு, குதிரை முதலிய வாகனமுடையவன், வீட்டில் எப்பொழுதும் லக்ஷ்மீ கடாக்ஷ முடையவன், நல்ல புத்திரன், மனைவி முதலிய நல்ல பாக்கியமுடையவன், வெண்மையான சந்திரனைப் போல் அழகாக பிரகாசிக்கும் கீர்த்தியுடையவன், கீர்த்திப் பிரதாபம், சௌரியம், சாகஸம் உடையவன், தேசாந்திரத்திலும் கீர்த்தியுடையவன்.

(222) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சித்திராம்சம்) ஆகி ஆறுக்குடையவன் இருக்கப்பட்ட நவாம்சாதிபதியும், ஜென்ம லக்கினுதிபதியும் பத்தாம் பாவத்தில் பலாட்டியனுயிருக்க, லக்கினத்தில் ஆறுக்குடையவனுடைய பார்வை ஏற்பட்டிருந்தால் ஸ்ரீசந்திரிகா என்கிற யோகம் உண்டாகும். இந்த யோக ஜாதகன் பிரசித்தனுகவும், சூரனுகவும், எழுத்து தனமுடையவனுகவும், ராஜ மந்திரியாயும், பெரிய கீர்த்தி யுடையவனுகவும், ஆயிரத்துக்கு அதிக தனமுடையவனுயும், ராஜயோக அபிவிருத்தி யுடையவனுகவும், அரசனுகவாவது, அவனுக்குச் சமமாகவாவது இருப்பான். அரசனுடைய அயிஸ்வர்யத்தையுடையவனுக இவன் லோகப் பிரக்யாதிபெற்று, அநேகமாக ராசாக்களுடைய நேசனுகி அநேக சிநேகிதர், தனம் முதலானவற்றுடன் அரச சபை மத்தியில் வாசாலகனுகவும், சாதுரியமான யுக்திகளால் நிறைந்த யுக்தியுள்ளவனுகவும், நாளுக்கு நாள் மென்மேலும் விருத்தியடைந்தவனுகவும், சுக்கில பக்ஷ சந்திரனைப் போலவும் இருப்பான்.

(223) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நளினியாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 46-12 கலை முதல் பாகை 46–24 கலை வரையி லும்) ஆகி ஜென்ம தாராதிபதியான செவ்வாய் இரண்டாம் பாவத்தை அடைந்திருந்தால் அவனுடைய திசை புக்தி காலங்களில் தாய் தகப் பனுக்குச் சுகமுண்டாகும். சகோதர உற்பத்தி உண்டாகும்.

(224) ஜென்ம லக்கினம் ரிஷபம்(நளினியாம்சம்) ஆகி லக்கினாதி பதியான சுக்கிரன் உச்ச ராசியிலிருந்து லக்கினத்தில் சந்திரன் சுபாம் சத்தில் இருக்கப் பிறந்தவனுக்கு லக்ஷ்மியோகம் உண்டு. ஷடியோக ஜாதகன் கீர்த்தியுள்ளவனாகவிருப்பான், ராஜ குலத்தில் (சக்ரவர்த்தி யின் குலத்தில்) பிறந்தவன். புகழுடனும், ரூபத்துடனும், உதார குணத்துடனும் கூடினவன். பிரக்கியாதி அடையப்பட்டவன், எழுது வதில் வல்லவன். பூமியை அரசாள்வான், லக்ஷ்மி யோகப் பிரபா வத்தாலும், தெய்வானுகிரகத்தாலும், ராஜயோகம் விருத்தியடைந்து மகாலக்ஷ்மியின் கடாக்ஷத்தை அடைவான். பேரிகை, மிருதங்கம், குடை, சாமரம் முதலிய வைபவத்துடன் பலப்பல தேசஆதிபத்யமும், ஜன பரிபாலனமும் நடத்துவான்.

(225) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நளினியாம்சம்) ஆகி ஜென்ம தாராதிபதியாகிய சந்திரன் லக்கினத்தில் உச்சனாக யிருந்து சுபாம்சத் திலும், சுபர்மத்தியிலுமிருந்து சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், சுபக்கிரகங்களுடன் கூடி யிருந்தாலும் அந்த தெசையானது சுப விருத்தியைக் கொடுக்கும்.

(226) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நளினியாம்சம்) ஆகி விபத் தாராதிபதியாகிய ராகு ஒன்பதாமிடத்தை யடைந்து அந்த உச்ச ஸ்தானாதிபதியாகிய செவ்வாயுடன் கூடியிருந்தால் அந்த ராகு திசை யில் நல்ல விருத்தியைக் கொடுக்கும். அந்த ராகு திசையில் மிலேச்ச ஜாதியில் பிறந்தவனுக்கு நல்ல பலனைக் கொடுப்பதும், தவிர பிதாவுக் கும், சிற்றப்பனுக்கும், அத்தியாப்த பந்துக்களுக்கும் மரணத்தைக் கொடுக்கும். மேலும் அந்த ராகு திசையில் மத்திய புக்தியில் குரு ஐந்தாமிடத்தில் வருங்காலத்தில் ராஜ்ய பட்டாபிஷேகம் நடக்கும், மந்திரிகளுடன் சேனைகளைப் பரிபாலிப்பான், தேசாந்தர சமுத்திரங் களையுடையவன், நியாயசீலன், அநேக தேச லாபம் அடைவான், அநேக ரத்ன லாபமும் அடைவான்.

(227) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சம்பகாம்சம்) ஆகி தர்ம கர்ம ஸ்தானுதிபதியாகிய சனி ஒன்பதாமிடத்தை அடைந்திருந்து லக்கினு திபதியால் பார்க்கப்பட்டிருந்தால் கொஞ்சம் மனக்கவலையால் பைத்தியம் உள்ள மனமுடையவன், சித்த விகற்பமாய் இருந்தாலும் சீக்கிரத்திலேயே குணமடைவான்.

(228) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சம்பகாம்சம்) ஆகி ஜெனித்தவனுக்கு ஜென்ம தாராதிபதி குருவாகி குரு சுப ராசியிலிருந்தால் குருவினுடைய தசாரம்ப காலத்தில் ஜாதகனுடைய பிதுர் முதலானவர்களுக்கு சுகம் உண்டாகும். ஜாதகனுக்கு சகோதர உற்பத்தி உண்டாகும், தகப்பனுக்குப் பிரபலம் உண்டாகும், தகப்பன் வாசாலகன், பணமுடையவன், அழகாய்ப் பேசுவான், தன வஸ்திர லாபமுடையவன்.

(229) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நிர்மலாம்சம்) ஆகி ஒரு ராசியில் சூரியனும், புதனும் ஒரு அம்சத்தில் லக்கினுதிபதி சுக்கிரனும் ஒன்பதுக்குடைய சனியும், குரு சுய க்ஷேத்திரத்திலும், பதினோராமிடத்திலும் இருக்கப் பிறந்த ஜாதகன் பண்டித யோகமுள்ளவன், யதீந்திரனுவான், அரசர்களுடைய சம்மதப்படி சாஸ்திரத்தைப் பார்ப்பவன், வித்துவான், சொல் திறனுடையவன், அரசர்களால் துதிக்கப்படுவான், மறைவான ஞானமுடையவன், தர்மசீலன்.

(230) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நிர்மலாம்சம்) ஆகி சனி நான்காமிடத்திலிருக்க அவனுடைய திசை, புக்தி காலங்களில் மாதா பிதாவுக்கு யோகம் உண்டாகும்.

(231) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நிர்மலாம்சம்) ஆகி பாக்கிய கர்மாதிபதியாகிய சனி, ஐந்துக்குடைய புதனுடன் கூடி யிருந்தால் நல்ல காரியத்தை யுடையவனும், தர்மாத்துமாவாகியும், ராச யோகத்தையும், மடாதிபத்தியத்தை (சன்னியாசத்தையும்,) பலதிறப்பட்ட யோகத்தையும் அடைகிறுன்.

(232) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நிர்மலாம்சம்) ஆகி ஜென்ம தாராதிபதி சனியாகி அவன் நான்காமிடத்திலிருந்து அவனுடைய தெசை வருங் காலத்தில் ஜாதகனுடைய தாய், தகப்பனுக்குச் சுகமும், ஜாதகனுக்குச் சகோதர உற்பத்தியும் உண்டாகும்.

(233) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 53-48 கலை முதல் பாகை 54-00 கலை வரையிலும்) ஆகி மூன்றும் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்தாலும்,

நீசத்திலிருந்தாலும் அல்லது சகோதரகாரகன் அப்படியிருந்தாலும், ஜாதகன் இரண்டாவது கர்பத்தில் அல்லது மூன்றுவது கர்ப்பத்தில் ஜனித்தவன். ஜாதகனுக்கு மூத்த சகோதரி ஒருத்தி பாலியத்திலேயே மரணமடைவாள், ஜாதகனுக்கு இளைய சகோதரர் இருவராவது, மூன்று சகோதரிகளாவது பிறப்பார்கள். அந்த சந்திரன் நீசத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் புண்ணியவதியாகவும், கர்புடையவளாகவும் ஆவாள், நல்ல சகவாச முடையவள், யாத்திரை வழியில் ஜனங்களால் விடப்பட்டு வழியில் மரணமடைவாள், ஜாதகனுக்கு அம்மானில்லை, இருந்தாலும் மரித்துவிடுவான்.

(234) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி பூர்வபாகத்திலும் உத்தராம்சத்திலும் சனி, சந்திரன் செவ்வாயிவர்கள் கூடி ஏழாம் பாவத்திலிருக்க ஜாதகனுடைய ஜனனமானது நான்காவது கர்ப்பமாகும்.

(235) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி இரண்டாமிடத்தில் குருவும், சுக்கிரனும் இருக்கும்போது பிறந்தவன், வேத சாஸ்திர அர்த்த மறிந்தவனும், நல்ல புத்தியுள்ளவனும், மூன்று பாஷைகளில் வல்லவனும், நானுவித பாஷைகளையும் அரிந்தவனும், ஸங்கீத ஞானியாயும், கொஞ்சம் சோதிட சாஸ்திரம் தெரிந்தவனுமிருப்பதுடன் பெரிய பணக்காரனுகவும், மஹா போகியாயும், விஷ்ணு சிவன் முதலியவர்க்களிடத்தில் பக்தி உள்ளவனும் இருப்பான்.

(236) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி லக்கினத்தின் உச்சனுதன் சந்திரன் பாபக்கிரகங்களுடன் கூடி மூன்றுமிடத்தில் சூரியனுடன் கூடியிருக்கப் பிறந்தவனுடைய சகோதரியானவள் பாலியத்திலேயே விதவையாய்விடுவாள், சந்தேகமே இல்லை என்று சிலர் சொல்லுகிருர்கள். ஜாதகன் இரண்டு சகோதரர்களை உடையவன், சகோதரி ஒருத்தி கொஞ்ச காலம் நல்ல ஸ்திதியிலிருப்பாள், விஷ அதிஸார தோஷத்தால் இளைய தம்பி நிச்சயம் மரணமடைவான். அப்போது இளையவனுடைய மனைவி கருப்பவதியாயிருப்பாள், பிறகு கொஞ்ச காலம் கருப்பவதியா யிருப்பாள், பிறகு பிள்ளை பெருவாள் ஆண் பிள்ளை தான் பிறக்கும், அந்தப் பிள்ளையால் அநேக கலகங்கள் உண்டாகும்.

(237) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் நான்காமிடத்தில் ராகு, புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு மூன்று தாயார்கள் இருப்பார்கள். ஜாதகன் இரண்டாவது தாயின்

புத்திரனுவான், பெரிய தாய் அதி பால்யத்திலேயே மரிப்பாள், புத்திரி இல்லாதவள். தன் தாயார் புத்திரன், புத்திரி இவர்களுடன் கூடியிருப்பாள், சுக்கிர திசை சுய புக்தி அந்தியத்திலாவது, சூரிய புக்தி கடைசியிலாவது ஜாதகன் பிறந்த இரண்டாவது வருஷத்தில் ஜாதகனுடைய தாய் மரிப்பாள். விஷம் அதிசாரம் ஆகிய இந்த தோஷங்களால் ஜாதகனுடைய தாய் மரணமடைவாள். தாயாருக்கு சகோதரி ஒருத்தி உண்டு, ஜாதகனுக்கு மாமன் ஒருவனே. அவனும் சித்தப் பிரமையுடன் கூடினவன், புத்திரன், மனைவி முதலியவர்களால் விடுபட்டவன். தன் மாமன் வீடு ஷெ கிராமத்தில் கொஞ்ச காலம் ஒன்றுமில்லாமல் இருந்து மாமனும் பிறகு மரிப்பான், அவனுடைய கர்மம் முதலியவற்றையும், உத்திரகிரியை யாவற்றையும் இந்த ஜாதகன் செய்வான். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு மாமன் அநேக புத்திரன் முதலிய ஜனங்களுடன் கூடி யிருப்பான்.

(238) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்கு ஏழுக்குடைய செவ்வாய், நீச்சமடைந்த சந்திரன், சனி, இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் இரண்டு தாரம் உடையவன், தன் பட்டணத்திலிருந்து வடக்கில் ஒரு கிருமத்தில் ஜேஷ்ட பத்தினி ஜெனித்தவள், அவள் ஒரு சகோதரியுடன் கூடினவள், பாலியத்தில் மரிப்பாள், சுக்கிர திசை அந்தியத்தில் மரிப்பாள், பிறகு சுக்கிர திசை சந்திர புக்தியில், ஜாதகன் தாய் மரிப்பாள், ஜாதகனுடைய பதினுலாவது வயதில் முதல் மனைவியைத் தானுகவே மணப்பான், அவள் மரித்த பின்பு ஜாதகன் தன் ஊருக்கு தென்மேற்கிலாவது, மேற்குத் திக்கிலாவது இரண்டாவது மனைவியை அடைவான், அவள் மிகவும் நல்லவள், நல்லரூப முள்ளவள், இருபத்தைந்தாவது வயதுக்குப் பிறகு இரண்டாவது விவாகம் சுபகரமாக நடக்கும். உத்தர பாகத்தில் ஜனித்த ஜாதகன் விஷ்ணுவிடத்தில் அதிக பக்தி உள்ளவனுகவும், இரண்டாவது பார்யையுடையவனுகவும், பெண்களுடனும், பிள்ளைகளுடனும் கூடியுமிருப்பான், தன்னுடைய சுக்கிர திசை கேது புக்தியில் இருபத்தாருவது வயதில் குறையுண்டாகும், மூத்த மனைவி மரிப்பாள், இரண்டாவது விவாகம் நடக்கும். ஜாதகனுடைய இரண்டாம் மனைவி பதி பக்தியுடன் கூடி மிகவும் நல்லவளாகி இருப்பாள், அவளுடன் வெகு காலம் ஜாதகன் சுகிப்பான்.

(239) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஒன்பதாமிடத்துக்குடைய சனி, கேந்திரத்தில் சந்திரன், செவ்வாய் இவர்களு

டன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ராஜ யோகத்துடன் கூடி பிரபு லக்ஷணத்துடன் இருப்பான், ஸேவகனுவான், தர்மஸ்தானுதிகாரியாகி அநேக ஆயிரம் தனம் ஸம்பாதிப்பான், பிள்ளைகள் பெண்கள் சமர்த்தியா யுள்ளவனுகவும் இருப்பான்.

(240) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் நீச்ச சந்திரனுடன், சனி, செவ்வாய் இவர்கள் ஏழாமிடத்தில் கூடியிருக்கப் பிறந்தவன் நீச்சஸ்திரீ சேர்க்கை யுள்ளவனுகவாவது சூத்திர ஸ்திரீ சங்கம முள்ளவனுகவாவது பரஸ்திரீ சேர்க்கை யுள்ளவனுகவாவது அன்னியஸ்திரீ சேர்க்கையுள்ளவனுகவாவது இருப்பான். ஜாதகன் தீர்க்க ஆயுளுள்ள இரண்டு பிள்ளைகளையும் நீண்ட ஆயுளையுடைய இரண்டு பெண்களையுமுடையவன். ஜாதகனுக்கு அதிகமாயும் குழந்தைகள் பிறக்கும். சாந்திசெய்தால் புத்திர சுகம்உண்டாகும், தன் தகப்பன் மந்திர சாஸ்திர மறிந்தவனும், மூன்று மனைவியை யுடையவனும் யிருப்பான். ஜாதகனும் மந்திரசாஸ்திரம் அறிந்தவனுகவும், ஜபம், தியானம், பாராயணம், முதலியனசெய்பவனுயு மிருப்பான்.

(241) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி நாலில் ராகு இருக்கப் பிறந்தவன் ஸதாகாலம் துக்கியாயும், பச்சாதாபியாயும், பாபம் செய்பவனுயும், கொஞ்சம் வைதீக ஆசாரம் உள்ளவனுயும் இருப்பான்.

(242) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி பத்துக்குடைய சனியும், செவ்வாயும் நீச்ச சந்திரனுடன் கூடி கும்பாம்சத்தில் சேர்ந்து இருக்க மத்தியில் நல்ல கர்மத்தைச் செய்யும்போது அதற்கு வழி வழியாக விக்கினம் (அதாவது இடையூறு) உண்டாகும்.

(243) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி பன்னிரண்டுக்குடைய செவ்வாய் சுக்கிரனுடன் கூடியிருந்தால் பன்னிரண்டில் குருயிருந்தால் கட்டிலிலேயே தனக்குப் படுக்கையும், தர்மத்தால் பணச்செலவும், பால்யத்தில் குரு திசா காலத்தில் யாத்திரை உண்டாகும்.

(244) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி மூன்றுக்குடைய சந்திரன் பன்னிரண்டிலாவது நீச்சத்திலாவது இருக்க சகோதரகாரகனும் அப்படியே இருந்தால் தான் இரண்டாவது பிறப்பாகவாவது, அல்லது மூன்றுவதாகவாவது ஜெனித்தவன். இவனுடைய மூத்த சகோதரி ஒருத்தி கொஞ்ச காலத்திலேயே மரணமடைவாள். இரண்டு இளைய சகோதரர்களாவது மூன்று சகோதரிகளாவது இருப்பார்கள்.

(245) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி சந்திரன் நீச்சத்தை அடைந்திருக்க ஜாதகனுடைய தாயானவள் புண்ணியவதியாயும், சதியாயுமிருப்பாள். நல்ல வாஸி, யாத்திரையில் ஜனங்களால் விடுபட்டு மரிப்பாள்.

(246) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி சுக்கிரன், செவ்வாய் இவர்கள் லக்கினத்திலிருந்தால் ஜாதகனுக்குப் பாலியத்தில் வெகு சுபமாகக் கலியாணம் நடக்கும். பிறந்த ஒன்பதாவது வயதில் அல்லது பத்தாவது வயதில் விவாகம் நடக்கும். பூர்வ பாகமானல் ஜாதகன் ஒரே தாரத்துடன் போகியாயும், அன்னிய ஸ்திரீ சேர்க்கையுள்ள பரஸ்திரீ லோலனுகவும் இருப்பான். உத்திர பாகத்தில் பிறந்தவனுக்கு இரண்டு தாரம் சந்தேகமில்லாமல் இருக்கும்.

(247) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி புத்திரஸ்தானுதிபதி ஸ்வக்ஷேத்திரத்தில் சூரியனுடன் மித்திர நவாம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு முதலில் அநேக ஆண் குழந்தைகளும், பிற்பாடு பெண் குழந்தைகளும் பிறக்கும். ஜாதகனுக்குப் பிள்ளைகள் ஐந்து, அல்லது ஆறும் பெண்கள் ஐந்து அல்லது ஆறும் உண்டாகும்.

(248) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி ஒன்பதாமிடத்துக்குடைய சனி சிம்மத்தில் குகராம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஞானி, விவசாயி, தனமுள்ளவன், வெகு சகோதரர்களும், சகோதரிகளுமுடையவன், ஐந்து ஆறு சகோதரர்களுடையவன், இரண்டு தமயன்மார்கள் உடையவன் ஆவான். ஜாதகனுடைய தகப்பன் எல்லோருக்கும் கடைசியில் பிறந்தவன். ஜாதகனுடைய தகப்பனுடைய சகோதரிகளில் மூவர்கள் நிச்சயமாக விருப்பார்கள், மீதி சகோதரிகள் நாசமடைவார்கள், இந்த மூன்று சகோதரிகளில் ஒருத்தி பிள்ளையையுடையவள், கொஞ்ச காலம் பூமியிலிருப்பாள், மீதி இரண்டு சகோதரிகள் பிள்ளை இல்லாதவர்கள். ஜாதகனுடைய பாட்டன் பிரசித்தன், யானை முதலான ஐஸ்வரியங்களையுடையவன், லட்சத்திற்கு மேல் பணமுள்ளவன், அனேக வீடு, பூமி. க்ஷேத்திரங்களுடனும் கூடி ராஜமுத்திரையும் தரித்து சேனுதிபதியாயுமிருப்பான். ஜாதகன் மகா பாக்கியமுள்ளவன், நீச்ச ராஜ சேவையுடையவன், நீச்ச அரசனுடைய சைன்னியத்தில் உத்தியோகம் வகிப்பான், எழுபத்தைந்து வயதுடையனுவான்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் ரிஷப லக்கினத்திற்கு 248-விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னம் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட ரிஷப லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் ரிஷப லக்கின பலனின் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்று அறியவும்.

மிதுன லக்கின ஜாதகம்.

—(***)—

(1) ஜென்ம லக்கினம் மிதுனம் (முத்காம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 79-48 கலை முதல் பாகை 80-00 கலை வரை) ஆகி குரு பத்தில் சுபாம்சத்தில் தன் சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் அரசர்க்கரசனுவான்.

(2) ஜென்ம லக்கினம் மிதுனம் (முத்காம்சம் ஆகி லக்ஷ்மி சஷ்டி அம்சத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு குரு மீனத்தில் துலாம்சத்திலிருந்தால் ஜாதகன் பாந்த முகமுடையவன்; போகமுடையவன்; மனைவியிடம் அன்பாயிருப்பான்; சுகமுடையவன்; கருநிறமும்; புகழுத்தக்க குணமும் உள்ளவன்; சமர்த்தன்; வயிற்று வலியுடையவன்; தாய் சகோதரி வம்சத்தில் பாக்கியமுடையவன்; எப்போதும் அவன் மகனிடம் அன்புடையவனுவான்; காட்டிலிடையுள்ள புரவாசமுடையவன். ஹரிசங்கர பக்தியுடையவன்; சமர்த்தன்; மந்திராலோசனை செய்பவன்; ஆசையுடைய குணமுடையவன்; தர்மமான புண்ணிய கதை அறிந்தவன்; வித்தையுடையோன்; சரஸப்பிரியன், தடாகம், உத்தியானவனம் முதலிய தர்மம் செய்பவன்; பந்துக்களிடம் பிரீதியுடையவன்; தேவப் பிராம்மண பக்தி செய்பவன்; சுசியானவன்; வேதாந்த ஞானமுடையவன்; அளவாய்ப் புசிப்பவன்; ஆழ்ந்த நெஞ்சமுங் காமமுமுடையவன்; பயந்தவன்; கம்பீர புத்தியுடையவன்; பின் சகோதர மற்றவன், அரசாங்கத்தில் அதிகாரமுடையவன்.

(3) ஜென்ம லக்கினம் (முத்காம்சம்) ஆகி குஜன் துலாத்தில் தன் உச்சாம்சத்திலிருந்தாலும் அல்லது சோராபஹ்ருத சேஷ்டையிலிருந்தாலும் ஜாதகன் திருடரால் களவாடப்படுவான்.

(4) ஜென்ம லக்கினம் மிதுனம் (முத்காம்சம்) ஆகி சனி துலாத்தில் குரு அம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு விவாக கலகமுண்டு; சத்துருபயம், மனோ துக்கம் முதலானவைகள் நேரிடும்.

(5) ஜென்ம லக்கினம் மிதுனம் (முத்காம்சம்) ஆகி லக்கினுதிபனுன புதன் ஆறிலிருந்து, ஆருமதிபனுன குஜன் ஐந்தில் எட்டாமதிபனுடன் கூடி இருந்தால் ஜாதகன் வயிற்றுச் சூலை முதலிய நோய்களால் வருந்துவான்.

(6) ஜென்ம லக்கினம் மிதுனம் (முத்காராம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஏழில் சுக்கிரனிருந்து குருவால் பார்க்கப்பட்டாவது, அன்றி கூடியாவது இருந்தால் ஜாதகன் மகா உஷ்ணவாயு நோயும், மல மூத்திர நோயுமுடையவனுவான்; அத்தோஷத்திற்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விரதமிருக்கவும். ஞாயிற்றுக்கிழமை விரதமிருந்தால் தீராத மேக நோய், பித்த நோய், மூர்ச்சை வாயு நீங்கும். சூரிய விரதம் ஆரம்பிக்குங்கால் ஜோதிடனைத் தனத்தால் திருப்தி செய்து ஆரம்பிக்கப் பலனுண்டு; சிவந்த வஸ்திர தானத்தால் சரீரசுகம்; சக்திக்குத் தக்கபடி பொன்னுல் கல்பத்தில் சொல்லிய விதிப்படி தியானம், ஆவாகனம், பூஜை தானம் இவை செய்யவும். பன்னிரண்டு ஆதித்தர் வாரமுடிவில், அல்லது மண்டல முடிவில் சூரிய பகவான் அருளால் சரீர சுகம் உண்டாகும். சந்தேகமில்லை. ஆகாரமில்லாமல் ஒரு வருஷம் பழம் புசித்து மூன்று வருஷம் விரதமிருக்கவும்.

(7) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 81-கலை 00 முதல் பாகை 81-கலை 12 வரை) ஆகி லக்கினத்திலிருந்து மூன்றில் சந்திரனிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஜென்ம தேசத்தில் அரசர்களுக்குள் கலக முண்டாகும்; பிதா பாக்கிய மற்றவன்; ஜாதகன் பிரபலத் தன்மையால் சத்துருவிட மிருந்த அரசைக் கைக்கொண்டு அரசயோக முடையவனுவான். தாய், தகப்பனும் அரசைக் கைக்கொண்ட மகனைப் பார்த்து சந்தோஷத்தால் பூரிப்பார்.

(8) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி லக்கினத்துக்கு ஒன்பதில் குஜனிருந்தால் ஜாதகனுடைய தாய் அல்லது பிதா மரணமாவார்; அப்பொழுது தேசத்தில் மழை இல்லாமல் துர்பிக்ஷ முண்டாகும்.

(9) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி ஆறுமதிபனுன குஜன் இரண்டில் கடகத்தில் நீசனுய் அமர்ந்து, ஆறில் சனி இருந்து லக்கினத்திற்கு ஏழில் ராகு இருந்து, லக்கினத்தில் சூரியனும் புதனும் கூடிஇருந்து, இம்மாதிரி கிரகங்கள் அமைந்தால் ஜாதகனுக்கு ஐம்பத்தைந்தாவது வயதில் நீச்ச அரசனுடைய நேசமுண்டாகும்; அது முதல் அவன் நீச்ச அரச யோகமுடையவன்; அநேக சேனையுடன் நீச்ச அரசனுக்குச் சகாயம் செய்து தனக்கு நிகரான அரசனுடன் கடும்போர் செய்து ஜெயிப்பான்; அது மூலமாய் நீச்ச அரசனிடமிருந்து அனேக கிராமங்களைப் பெறுவான்.

(10) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி சூரியனுக்கு இரண்டில் குஜனிருக்கில் ஜாதகன் பாபம் செய்வான்; நியாயமற்ற வழியில் சம்பாதித்த பொருளுடையவன்; ஹிம்சை செய்பவன்; ஈனர்க்குப் பிரியன்; துஷ்டன் சூதுள்ளவன்; அயலாரை நிந்திப்ப பவன்; பாவத்தில் ருசியுடையவன்; சாஸ்திரங்களைத் துர்வழியில் உபயோகிப்பவன்; விகாரமான நீண்ட உருவமுடையவன்; மங்கின புத்தியுடையவன்; வித்தை அர்த்தம் குறைந்தவன்; அபகீர்த்தியால் துக்கமடைந்த மனதுடையவன்; சுசியற்றவன்; முன் மோகத்தால் சத்துரு நாசம் செய்து யுத்தத்தில் களையால் சிரம மடைந்து பின்னுல் தவித்தவனுய்ப் பாபத்திற்குப் பயந்தவனுய் அந்தியத்தில் யாகாதி கர்மம் செய்து, மகாதானம் செய்து, புண்ணியம் செய்து, தேவப் பிராமணர் காரணமாய் மிகுந்த தனம் செலவழிப்பான்.

(11) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி மூன்றில் சந்திரனிருந்து, மூன்ருமதிபனுன ரவி லக்கின கேந்திரத்திலிருந்து, சகோதர காரகனுன குஜன் நீச்ச ராசியில் இருந்தால் ஜாதகனுக்குப் பத்துச் சகோதரர் உண்டு. ஆறு ஆண்களும், மூன்று பெண்களு முண்டு; சாந்தியாலும், புண்ணிய வசத்தாலும் அதிகமும் உண்டா கும். சிலர் ஆறு சகோதரர் என்கின்றனர். ஒன்று அல்லது இரு வர் வம்சவிருத்தி; மற்றவை நாசம்; ஜாதகன் இறப்பதன் முன்னரே சகோதரர் மரணமாவார்.

(12) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி ஏழாமதிபன் நீச்சனுய், மாதுர்காரகனுன சந்திரன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அனேக ஸ்திரீகளுக்கு நாயகன்; அல்லது இருதாரமுடையவனு வான்; ஜாதகனுக்கு முப்பத்திரண்டாவது வயதில் தாய் நாசமென்பர், சிலர் முப்பது அல்லது இருபத்தைந்தில் தாய் நாச மென்கின்றனர்.

(13) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாமதிப னுன சுக்கிரன் பதினென்றிலும், பதினோராமதிபனுன செவ்வாய் நீச்ச ராசியிலுமிருப்பின் ஜாதகனுக்கு மூன்று பெண்ணும், ஒரு புத்திரனுமுண்டு, பாபத்தால் அதிகம் பிறந்தும் மரிக்கும்; குழந்தைகள் அல்பாயுளாய் பாலியத்திலேயே மரிக்கும். மூத்த மனைவிக்கு ஒரு பெண் தீர்க்காயுளுடனுண்டு; மூத்த மனைவி வம்ச ஹீனமாயினும் ஒரு பெண் ணுடையவள்; மூத்த மனைவி இறந்த பிறகு அவள் பெண கோபத்தால் வீட்டை விட்டேகும். இரண்டாம் மனைவியின் வம்சம்

ராஜ்யம் வகிக்கும். ஜாதகன் இறந்த பிறகு இரு மனைவியரும் வெகு நாள் வசிப்பர். இரண்டாம் மனைவி கண்ணிழந்தவளாய்ப், புத்திர சோகத்தால் வாடி, பேரன் பாக்கியத்தை அனுபவிப்பாள்; அவனும் புலிபோல் அயலாரால் நெருங்க முடியாமல் தீர்க்காயுளுடையோனுயி ருப்பான்.

(14) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி எட்டாமதி பன் ஆறிலிருந்து, சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் மார்பு நோய், விஷப்பாண்டு, அதிசாரம், மூலம் முதலிய நோய்களினுல் வருந்தி புத்திரனருகில் மரிப்பான்; எழுபத்திரண்டில் மாணமடைந்து தேவலோகம் செல்வான்.

(15) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி லக்கினுதிப னுன புதன் சூரியனுடன் லக்கினத்தில் தனுசு அம்சத்திலிருந்தால் ஜாதகன் கருத்த நிறமும், மெலிந்த தேகமுமுடையவன், அதிக புத்தி மான், சூட்டுத் தேகமுடையவன், வித்தை யுடையவன்; தனவான்; எழுத்துவித்தையில் நிபுணன்; முக்கியமாய்யுக்தி விசேஷமுடையவன்; வாயுபீடையுடைய இரட்டை நாடி சரீரம் உடையவன், சங்கீதம், நாடகமறிந்தவன், கந்தம், மாலை, வஸ்திரங்களில் பிரியன்; அதிக தரு மம் செய்பவன்; மானி, வேதாந்த ஞானமுடையவன்; சுசியுடைய வன்; தீனர்களிடம் தயையுடையவன்; நல்ல வார்த்தை பேசுபவன்; தேவப் பிராமண பக்தியுடையவன், ஹரிசங்கர பக்தன்; அனேகமா யிரம் தனமுள்ளவன், கொடையாளி, எல்லா ஜனங்களுக்கும் பிரியன்; உத்தியோக ஜீவனம் செய்பவன்; சிலசமயம் பயிர்த்தொழிலும் செய் வான்.

(16) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி இரண்டா மதிபனுன சந்திரன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நான்கு வித்தைகளில் சமர்த்தன்; பல பாஷைகள் அறிந்தவன்; அவனுக்கு வைசூரி, சுர கண்டம் நேரும்.

(17) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி இரண்டா மிடத்தைச் சனி பார்த்தால் ஜாதகனுக்கு வித்தைக்குத் தடை உண் டாகும், அவன் அதிக தைரியம், அதிபோகம், குறைந்த வித்தை,முன் கோபம், தெளிந்த மனது இத்தகைய குணங்கள் அமைந்தவனுவான்.

(18) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி செவ்வாய், இரண்டாமிடமாகிய கடகத்தில் நீச்சனுய் அமர்ந்திடில் ஜாதகன் நீச்ச

ஸ்திரீ சேர்க்கை யுடையவனுவான்; அல்லது வீட்டு விலக்க முள்ள தூரமாதரைச் சேருவான்.

(19) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி பன்னிரண்டில் சுக்கிரன் ராகுவுடனிருந்தால் ஜாதகன் பிராமண ஸ்திரீகளின் சேர்க்கை உடையவனுவான், காட்டினிடையுள்ள புரத்தில் வாசம் செய்வான், அவன் தந்தவாயுவுடையவன்; தூர்ப்பலமான பற்களுடையவன், சில சமையம் விரை வாதம், வயிற்றுச் சூலை இவைகளால் வருந்துவான்.

(20) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி மூன்றுமதிபன் சூரியன் மிதுனத்தில் புதனுடன் கூடினுல் பூர்வபாகத்தில் பிறந்த ஜாதகனுக்கு மூத்த சகோதரர் இருவருண்டு, இளையவன் ஒருவனுண்டு, சகோதரி இருவர் அல்லது மூவர் நாசமுறுவர், ஜாதகன் பெண் சகோதர மற்றவன்; புருஷ சகோதர முடையவன்; அதிகம் பிறந்தாலும் மரிக்கும்; உத்திர பாகத்தில் பிறந்த ஜாதகனுக்கு மூத்த சகோதரமில்லை; மூத்த சகோதரி ஒருவள் உண்டு, இளைய சகோதரன் ஒருவனுண்டு; பூர்வபாகத்தில் ஜெனித்த ஜாதகனுக்குப் பிதாவின் பாக்கியம் அற்பம்; தன்கையால் சம்பாதிக்கப்பட்ட பூமிமூலம் தனம், பசு, தான்னியம், வாகனம் இவைகள் சமூர்த்தியாய் உண்டு.

(21) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி மாதுர்காரகனை சந்திரன் கன்னியாம்சத்தில் மீனத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுள்ளவள்.

(22) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாமதிபனுன சுக்கிரன் பன்னிரண்டில் ராகுவுடனிருந்து, திரிகோண ஸ்தானமாகிய கும்பத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்கு முதலில் ஸ்திரீ சந்தானம் உண்டு; புத்திரர் அற்பம்.

(23) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாமதிபனுன சுக்கிரன் பன்னிரண்டில் ராகுவுடனிருந்து, திரிகோண ஸ்தானமாகிய கும்பத்தில் குரு சனியால் பார்க்கப்பட்டு இருந்தால் ஜாதகனுக்குப் புருஷ சந்ததித் தடைவுண்டாகும்; சேது ஸ்நானத்தாலும், நாகப் பிரதிஷ்டையாலும் காலாந்திரத்தில் புத்திர லாபமுண்டு; சாந்தி செய்யாமல் புத்திரர் பிறக்கின் உடனே மறிக்கும். சாந்தி செய்தால் இரு புத்திரர்; இரு பெண் தீர்க்காயுளுடையவராய் இருப்பர்.

(24) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 75-00 கலை முதல் பாகை 75-12 கலை வரை) ஆகி லக்கினாதிபனான புதன் சுக்கிரனுடன் கூடி பன்னிரண்டிலிருந்து, குஜன் லக்கினத்திலும், ஏழில் குருவும் இருந்தால் ஜாதகன் ரூபவான்; புத்திமான் ; வாசாலகன் ; தெளிந்த முகமும் கண்களுமுடையவன் ; அதிருஷ்டசாலி, தருமாத்துமா, சிவந்த நிறம், அழகிய பருத்த தேகம் உடையவன் ; பொறுமையாளன் ; சீமான் ; விஷ்ணு பக்தர் குலத்தில் பிறந்தவன் ; பித்தசுபாவ தேகம், எப்போதும் சூட்டுடல், வாதநோய், சொரி, சிரங்கு, தந்த சூலை, கண், காது இவைகள் சூலம், மார்பு நோய், பல்லில் ரத்தப்பெருக்கு இத்தகைய நோய்களால் வருந்துவான்; அரசனைப்போல் தன் பாட்டன், தகப்பன் இவர்களது பாக்கிய மனுபவிப்பான் ; மூன்று வாகன யோகமுண்டு ; பிரபல உத்தியோகம் உண்டு, அனேக வியாபார பாக்கியம் உண்டு. நீச்ச அரசனால் வெகுவாக மதிக்கப்பட்டவன் ; சமுத்திர வஸ்து வியாபாரம் செய்வான் ; தீவாந்திர பொருள் வரவு உண்டு. நீலம், பஞ்சு, குதிரை துணி, பொன், ரத்தினம் முதலியன விக்கிறையம் செய்வான். அனேக லக்ஷதன முடையவனாவான், ஞானி, சாத்துவீகன் ; மிருதுவாய்ப் பேசுவான்.

(25) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி இரண்டாமதிபனான சந்திரன் பத்திலிருந்தால் ஜாதகன் நான்கு வித்தைகளில் சமர்த்தனாவான் ; பல பாஷை விசேஷமாயறிந்தவன் ; சுசியுடையோன் ; மிருதுவான அன்னம் புசிப்பவன் ; சுகமுடையவனாவான்.

(26) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி மூன்றுமதிபனான சூரியன் உச்ச ஸ்தானமாகிய மேஷத்திலமர்ந்து சகோதரகாரகனான செவ்வாய் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு மூத்த சகோதரனில்லை ; இரு இளைய சகோதரர் உண்டு. ஒரு சகோதரன் பிறந்து மறிப்பான் ; பெண் சகோதரமில்லை ; ஜாதகன் தைரியம், வீர்யம், பராக்கிரமம் இவைகளுடையவன் ; வெளிக்குத் திடவானாயினும் மனதில் பயமுடையவனாவான்.

(27) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி நான்காமாதிபன் பன்னிரண்டில் சுக்கிரனுடன் கூடி மாதுர்காரகனான சந்திரன் மீனத்திலிருந்தால் ஜாதகனுடைய மாதாவுக்கு மத்திமாயுள்; அவள் தன் புத்திரனுக்குப் பிரியம் செய்பவள்; புண்ணிய முடையவள்;

சகோதரன் ஒருவன் தாயாருக்கு உண்டு, தாய் பதிபக்தி செய்பவள், மிகவும் நல்லவள்.

(28) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி ஐந்தாமாதிபனான சுக்கிரன் புதனுடன் கூடிப் பன்னிரண்டிலிருந்து புத்திரகாரகனான குரு தன் சுய க்ஷேத்திரத்திலிருந்து ஐந்தாமிடம் சூரியன், ராகு இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் புத்திர பாவமுடையவனாயினும் ஜாதகனுக்குத் தத்துப் புத்திரனால் சந்ததி விருத்தி உண்டாகும். ஏகாதசியில் கோதானம் செய்தும், அரசமரப் பிரதிஷ்டை செய்தும், பொன் சந்தான கோபால மூர்த்தி தானம் செய்தும், மஞ்சள் லிங்கம் பூஜித்தும், பிரதிஷ்டை செய்தும், சேதுஸ்நானம் செய்தால் ஜாதகனுக்குக் காலாந்தரத்தில் புத்திர லாபம் அல்லது வேறு மனைவியிடம் புத்திரப் பேறு உண்டாகும். ஜாதகனுக்குச் சகோதரன் விரோதியாவான்; ஜாதகனுக்குச் சத்துரு பாதை உண்டு; கொஞ்சம் விஷவாத பாதையும் நேரும்.

(29) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி ஏழாமாதிபன் சுவ க்ஷேத்திரத்திலிருந்து தன் சொந்த அம்சத்தில் குஜனால் காணப்பட்டால் ஜாதகனுக்குப் பத்தொன்பதாவது வயதில் சிவந்த நிறமும், புத்திர பாக்கியமு முள்ள தாரமுண்டு.

(30) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி ஒன்பதாமதிபனான சனி சுவ க்ஷேத்திரத்தில் பலனாயிருக்கப் பிதாகாரகனான சூரியன் உச்சராசியிலிருந்து, ராகு துலாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திமாயுள் உள்ளவன், வைணவ மதம் பின் பற்றுபவன்; சகோதரனுடையவன்; வாசாலகன்; மூன்று வாகனயோகமுடையவன்; லக்ஷத்திற்கு அதிக தனமுடையவன், அதிக வியாபார பாக்கிய முடையவன்; பொன் மாணிக்கம் முதலிய நவரத்தினம் விற்பவன்; சமுத்திர வஸ்து, நீலம், பஞ்சு முதலிய வியாபாரம் செய்பவன், நீச்ச அரசனால் வெகுமதிக்கப்பட்டவன்; தீவாந்திரம் சென்று பொருள் தேடுபவன், ஜாதகனுக்கு ஒரு சிற்றப்பன் தீர்க்காயுளுடையவனாயிருப்பான்; பிதா பாக்கியம் அதிகமாக உண்டு.

(31) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி பத்தாமாதிபனான குரு ஏழிலும், பத்தில் சந்திரனுமிருந்தால் ஜாதகன் நற்கர்ம நற்செய்கையுடையனாவான்; சாது; ஜபத்தியானம் செய்வான்; தாஸ தாஸி ஜனமுடையவனாவான்; வேதாந்த மறிந்தவன்; தனவான்.

(32) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 76-36 கலே முதல் பாகை 76-48 கலை வரை) ஆகி குரு துலாத்திலிருந்து சனி குஜனுல் பார்க்கப்பட்டு விப்பிரகாலத்தில் பிறந்த ஜாதகன் கருமை நிறமும், அழகிய தேகமுடையவனுவான்.

(33) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி சந்திர லக்கி னுதிபன் சனி சுராம்சத்தில் இருக்க விப்பிர காலத்தில் பிறந்த ஜாத கன் மூத்த சகோதரமில்லாதவன்; பின் சகோதரமில்லாதவன், ஒரு சகோதரி சுமங்கலியா யிருப்பாள்.

(34) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி சந்திரன் மிதுனும்சத்தில் ஸ்திர ராசியிலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஹரி, சங்கர பக்தியுடையவனுவான்; தேவப் பிராமண பக் தன், தாய் தகப்பன்மாருக்குப் பிரியன், சுகமுடையவன், அரசாங் கத்தில் பிரசித்தன்; இருவாகன யோக முடையவன்.

(35) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி குரு ஐந்தாம் பாவத்தில் சுராம்சத்திலிருந்தால் ஜாதகன் அதிக தன முடையவன்; தாய், தகப்பன் தீர்க்காயுளுடையவர்கள், மாதாமகி ஆயுளற்றவன்.

(36) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி குரு ஐந்தாம் பாவத்தில் மிதுனும்சத்தில் குஜனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு மாதாமகி தீர்க்காயுள்; இரு அம்மான்மார்கள் நாசமுறுவர்.

(37) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி குரு துலாத் திலிருந்து சனி அங்காரகனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் புத்திரப் பேறுக்கு யோகமுடையவன்; புகழுடையவன்; சுகவான்.

(38) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி குரு துலாம் சத்திலிருந்து ஆரும் பாவாதிபனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனு டைய மூன்றுந் திசையில் புத்திரப் பேறு உண்டு. அரசாங்கத்தில் பிரவேசம்; வித்தை கிடைத்தல் முதலியவையுண்டாகும்.

(39) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி சூரியன் ஹரி ணும்சத்திலும், துலாத்தில் குருவுமிருந்தால் ஜாதகனுக்கு இரண்டு தாரயோகமுண்டு, சிலர் ஏக தாரமென்பர்.

(40) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி பத்தாம்பா வாதிபன் சுராம்சத்திலிருந்து ஐந்தாம் பாவம் சனியால் பார்க்கப்பட்

டால் ஜாதகனுக்கு நாலாம் திசையில் அதிக சுகமுண்டு; இருவாகன யோகமுண்டு, நல்ல புகழுமுண்டு.

(41) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 79–24 கலை முதல் பாகை 79–36 கலை வரை) ஆகி சந்திரன் க்ஷீண சந்திரனுயிருந்து தன்னுச்சாம்சத்தில் கேசரி யோகத்திலிருந்தால் ஜாதகன் தர்மவான், ஸ்ரீமான்; மூன்று மூத்த சகோதரருடையவன்; அம்சாதி யோகத்தில் சுபம் செய்வான்; மூன்ருவது திசையில் நர வாகனம் கிடைக்கும்; தம்பிகளுள் மூத்தவனுல் பிரசித்தனுவான்.

(42) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி சந்திரன் கும்பத்தில் திரிகோணம் பெற்று அமர்ந்து சூரியனுடன் கூடில் ஜாதகனுக்கு யோகமில்லாத ஜாதகத்திலும் கூட ராஜயோகம் உண்டாகும்.

(43) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி கும்பத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் நல்ல வாசாலகன், இருதாரமுடையவன், சுகமுடையவன்.

(44) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி லக்கினத்தில் ஐந்து கிரக யோகமிருந்தால் ஜாதகனுக்கு மரித்த சந்தான மதிகமுண்டு. மனையாள் கர்ப்ப சிராவத்தால் வருந்துவாள்; ஜாதகன் சந்தானத் தடையுடையவனுவான்.

(45) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் ஆரும் பாவம் அல்லது ஆரும் அம்சத்திலிருந்து நாலாம் பாவம் ராகுவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு இரண்டு அல்லது மூன்று சந்தானம் நாசமாகும்.

(46) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் ஆரும் பாவம் அல்லது ஆரும் அம்சத்திலிருந்து, லக்கினத்திலிருந்து மூன்ரும் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்கு இரண்டு அல்லது மூன்று சந்தானம் நாசமுண்டாகும்.

(47) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி கேது லக்கினத்திலிருந்து அல்லது ஏழாம் பாவத்திலிருந்து அந்த பாவாதிபன் ராகுவால் பாக்கப்பட்டால் ஜாதகனுடைய மனைவிக்கு வயிற்றில் பீடை உண்டாகும். கருப்பப் பையில் புழு இருக்குமென்று கருதப்

படுகிறது. அவ்விதமில்லாவிட்டால் தன் மனைவி கருப்ப சங்கை உடையவள்.

(48) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி கன்னியில் குருவிருந்து விருச்சிகத்தில் செவ்வாய் இருந்தால் ஜாதகனுக்கு முன் பின் சகோதரமில்லை.

(49) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி சரராசியில் சந்திரன் ராகுவுடன் கூடினுல் ஜாதகன் தரித்திரனுவான்.

(50) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி தன்னுச்ச ராசி நீங்கலாக இதர ராசிகளில் ராகு சந்திரனுடன் கூடில் ஜாதகன் நல்ல பாக்கியமுடையவனுவான்.

(51) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி லக்கினத்திலிருந்து மூன்றும் பாவத்தில் பாபர் இருந்து அந்த பாவாதிபன் பாபருடன் கூடில் ஜாதகனுக்கு விவாகத்துக்குப் பிறகு கிலேசமுண்டு; தார வம்சத்தில் பீடையுண்டு ; சந்தான அரிஷ்டமடைவான். சாந்தி செய்ய சந்ததி உண்டாகும்.

(52) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கினத்திலிருந்து மூன்றும் பாவத்தில் பாபர் இருந்து அந்த பாவாதிபன் பாபருடன் கூடில் ஜாதகன் இரண்டு தாரமுடையவனுவான், குணமுடையவன்.

(53) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி லக்கினத்திலிருந்து ஏழாம் பாவத்தில் பாபர் இருந்தால் ஜாதகன் தார பீடையால் விசாரமுள்ளவனுவான்.

(54) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி லக்கினத்திலிருந்து ஏழாம் பாவத்தில் பாபர் இருந்து ஏழாம் பாவாதிபன் பலவானுயிருந்து பாபருடன் கூடில் ஜாதகனுக்கு இரண்டு தாரமுண்டு, எழுத்து வித்தையில் ஜீவனம் செய்வான்.

(55) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் சனி இருந்து அந்த பாவாதிபன் ராகுவுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவளாவாள் ; அவனுக்கு தாய் வம்சத்தில் விவாகம் நடைபெறும்.

(56) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 81-00 கலை முதல் பாகை 81-12 கலை வரையிலும்)

ஆகி முற்பாகத்தில் ஜெனித்தவனுக்கு லக்கினாதிபதியான புதன் சூரிய னுடன் ஏழாமிடமான தனுர் ராசியிலிருந்தால் ஜாதகன் சாம்பல் நிற மான தேகமுள்ளவனும், மெல்லிய காத்திர தேகம் உள்ளவனும், வெகு புத்திமானும், சூட்டுத் தேகியாயும், மேதாவியாயும், வித்தை யுடையவனாகியும், பணக்காரனாகியும் இருப்பான். எழுத்து வித்தை யில் வல்லவன், விசேஷ யுக்தியுடன் கூடினவன், வாயுதேகி, யமகாத்தி ரஸ்வரூபி, சங்கீத நாடக மறிந்தவன், சந்தன, புஷ்ப, வஸ்திராலங்கா ரப் பிரியன், மஹா தர்மிஷ்டன், மானி, சுசியுள்ளவன், வேதாந்த ஞானமுள்ளவன், கொடையாளி, கீர்த்தியுடையவன், சாது, வாசால கன், தேவப் பிராமண பக்தியுள்ளவன், விஷ்ணு, சிவ பக்தி யுடைய வன், அநேகமாயிரம் தனம் சம்பாதிப்பான், தானம் செய்யும் தாதா, எல்லா ஜனங்களுக்கும் பிரியன், உத்தியோக ஜீவனம் உண்டு, தானே பயிரிடுதலும், வியாபாரஞ் செய்தலு முடையவன்.

(57) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி சந்திரனைச் சனி பார்த்தால் ஜாதகன் வைசூரி, ஜுவரம் முதலிய கண்டங்களையு டையவன். நான்கு வித்தையில் வல்லவன், பலபாஷை தெரிந்தவன்.

(58) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி இரண்டாமி டத்தைச் சனி பார்த்தால் ஜாதகனுடைய வித்தைக்கு இடையூருண்டு. ஜாதகன் மகா தைரியசாலி, மகாபோகி, கொஞ்சம் வித்தையுடைய வன், தயையுடையவன், சீக்கிரகோபி, பிரஸன்னமுகம் உடையவன்.

(59) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி செவ்வாய் நீச்சமடைந்து இரண்டாமிடத்தில் இருந்தால் ஜாதகன் நீச்சஸ்திரீ சேர்க்கையுடையவன், இல்லாவிட்டால் ருதுவுடன் கூடிய ஸ்திரீயை அனுபவிப்பான்.

(60) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி சுக்கிரன் ராகு இருவரும் கூடி பன்னிரண்டா மிடத்தில் இருக்க ஜாதகன் இர ண்டு ஜாதி ஸ்திரீகளிடம் கேளிக்கை பிரியன். ஜாதகனுக்கு பட்டண த்தில் காட்டுக்குச் சமீபத்தில் வசித்தலும், ஜெனனமும் ஏற்படும். ஜாதகன் கொஞ்சம் தந்த வாயு உடையவன், அதுவும் பல மில்லாத பல்லை உடையவன், கொஞ்சகாலம் விரைவாதத்தால் கஷ்டப்படுவான், வயிற்றில் சூலரோகத்தினால் பீடை உள்ளவன்.

(61) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி பிர்பாதி யில் ஜெனித்தவன் அனேக க்ஷேத்திரம், தனம், விவசாயம்,

விசேஷ பணத்தின் வரவு முதலானவற்றையுடையவன், தானம் செய்பவன்.

(62) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி முற்பாதியில் ஜெனித்தவனுக்கு மூன்றுமிடத்துக்குடைய சூரியன் மிதுன ராசியில் புதனுடன் சம்பந்தப்பட்டிருந்தால் அவனே மூத்தவன். ஒரு இளைய சகோதர முள்ளவன், சகோதரிகள் உண்டு. இரண்டு அல்லது மூன்று சகோதரிகள் நாசமடைவார்கள், ஸ்திரீ சகோதரம் இருக்காது, புருஷ சகோதரன் இருப்பான். அவனும் இவனும் கூடியிருப்பார்கள், அதிகம் சகோதரர் பிறந்தாலும் மறித்துப் போவார்கள்.

(63) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி பிற்பாதியில் ஜெனித்தவன் மூத்த சகோதரனில்லாதவன், மூத்த சகோதரி கொஞ்சகாலம் இருப்பாள், இளைய சகோதரி சகோதரர்களை யுடையவன். முற்பாதியில் ஜெனித்தால் பிதா பாக்கியம் கொஞ்சம் இருக்கும், சுயார்ஜித சம்பத்துடையவன், க்ஷேத்திரத்துடன் கூடினவன், பசுக்களை உடையவன், தானிய சமிருத்தி உள்ளவன், வாஹனாதிகளுடனிருப்பான்.

(64) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி சந்திரன் கன்யாம்சத்தில் மீன ராசியில் இருந்தால் பூர்வ பாகத்தில் ஜாதகனுடைய தாய் வெகு காலம் வரை ஜீவித்திருப்பாள். ஐம்பத்தைந்தாவது வயதில் சுக்கிர திசையில் சனி புக்தியிலாவது, அதற்கு முந்தியே கேது திசையில் முப்பத்து மூன்றுவது வயதிலாவது தாய் மரிப்பாள்; கேது திசை சனி, ராகு, குஜ புக்தியிலாகிலும், சுக்கிர திசையில் சனி, ராகு, செவ்வாய் புக்திகளிலாகிலும் தாய்க்கு வெகு பீடையும், ஜ்வர, அதிஸார தோஷத்தாலும் மரண நேரிடும். உத்தர பாகத்தில் பிறந்தவனுடைய தாய்க்குக் கேது திசையில் சனி, செவ்வாய், ராகு புக்திகளில் முப்பத்தாறுவது வயதில் ஆபத்து உண்டாகும்.

(65) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாமிடத்துக்குடைய சுக்கிரன் பன்னிரண்டாமிடத்தில் ராகுவுடன் கூடியிருந்தாலும் கும்பத்திரிகோணமான மிதுன துலாராசிகளில் குரு இருந்து ஸ்திரீ காலத்தில் ஜாதகன் பிறந்திருந்தாலும் முதலில் ஸ்திரீ பிரஜையே பிறக்கும், புருஷப்பிரஜை ஸ்வல்பமென்று அறியவும்.

(66) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி சனி, ராகு இவர்களால் குரு பார்க்கப்பட்டால் ஆண் குழந்தை பிறப்பதற்கு

தோஷம் ஏற்பட்டிருக்கும். இதற்கு பரிகாரம் சேதுஸ்நானமும், நாகப் பிரதிஷ்டையும் செய்தால் காலாந்தியத்தில் புத்திர லாபம் உண்டாகும். இதில் சந்தேகமில்லை. சாந்தி செய்யாவிட்டால் புத்திரன் பிறந்தாலும் மரித்துவிடும், சாந்தி செய்தால் தீர்க்காயுள் உள்ள இரண்டு புத்திரிகளும் இரண்டு, புத்திரர்களும் இருப்பார்கள்.

(67) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 75-00 கலை முதல் பாகை 75-12 கலை வரையிலும்) ஆகி பூர்வ பாகத்தில் ஜெனித்தவன் சூத்திர ஜென்மம், நித்திய சுகி, ஸீமந்த புத்திரன், இல்லாவிடில் இரண்டாவது பிறப்பு ஆவன். இவனுக்கு மூத்த சகோதரனில்லை, சமுத்திர தீரத்தில் பட்டணத்தில் தெற்கு வடக்கு வீதியில் மேற்கு முக வாசற்படி உள்ள வீட்டில் பிறந்தவன், வெகு பாக்கியம் உள்ளவன்.

(68) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி உத்தர பாகத்தில் ஜெனித்தவன் வைசிய ஜென்மம், மூன்றுவதான கர்ப்பத்தில் பிறந்தவன், பெரிய நதிப்பிராந்தியத்தில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பார்த்த வீட்டில் பிராமணுசாரம் உள்ள வீட்டில் ஜெனித்து வெகு வியாபார பாக்கியமும், வீடு, க்ஷேத்திர சமித்தியுள்ளவனுயு மிருப்பான்.

(69) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் மகராம்சத்தில் லக்கினுதியான புதன் சுக்கிரனுடன் கூடி பன்னிரண்டாமிடத்திலும், லக்கினத்தில் செவ்வாயும், குரு தனுசில் ஏழாமிடத்திலும் இருக்கப் பிறந்தவன் ரூபவான், புத்திமான், பேசும் திறம் படைத்தவன், பிரஸன்ன முகமுங் கண்களும் உடையவன், அதிர்ஷ்டசாலி, தர்மாத்துமா, சிவப்பு நிறம் உள்ளவன், சுபாகிருதி உடையவன், ஸ்தூல தேகம் உடையவன், பொறுமை உள்ளவன், பணக்காரன், விஷ்ணு பக்த குலத்தில் உதித்தவன், பித்த தேகம் உள்ளவன், எப்போதும் அதிக உஷ்ண தேகம் உள்ளவன், வாயு தேகி, இரணகண்டம், மறைவிடரோகி, பல், கண், காது, மனம் இவைகளில் வியாதி உள்ளவன், பல்லில் ரத்தம் வடிந்துகொண்டேயிருக்கும், தகப்பன், பாட்டன் முதலானவர்களுடைய பாக்கியம் உள்ளவன், அரசனைப் போல அனுபவிப்பவன், மூன்று வாகனங்களையுடையவன், பிறபல உத்யோக சம்பாத்தியம் உண்டு. அனேக வியாபார பாக்கியமும் உண்டு. நீச்ச அரசனுல் வெகுமானிக்கப்பட்

டவன், சமுத்திர வஸ்து வியாபாரம் செய்பவன், தீவாந்தரத்தில் பணவரவுடையவன், நீலம், பஞ்சு, குதிரை, வஸ்திரம், ஸ்வர்ணம், ரத்தினம் முதலியன விற்பவன், அநேக லக்ஷாதிபதி, ஞானி, ஸாத்துவீகன், மிருதுவாய்ப் பேசுபவன்.

(70) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி இரண்டாமிடத்துக்குடைய சந்திரன் மீன ராசியிலிருக்கப் பிறந்தவன், நான்கு வித்தையில் வித்துவானுகி யிருப்பான், நானுவித பாஷைகளைக் கற்றவன், சுசியுள்ளவன், மிருதுவான அன்னத்தைப் புசிப்பவன், சுகியாயிருப்பவன்.

(71) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி மூன்றுமிடத்துக்குடைய சூரியன் தன்னுடைய உச்ச ராசியிலிருக்க சகோதரகாரகன் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மூத்த சகோதரனை இழந்தவனுகவும், இரண்டு இளைய சகோதரர்களை யுடையவனும், அவர்களுடன் கூடியே யிருப்பவனும், அல்லது ஒரே சகோதரனுடையவனுயுமிருந்து அந்த சகோதரனும் மரணத்தை அடைவான். சகோதரி இல்லாதவனுகவும், தைரிய, வீரிய, பராக்கிரம முள்ளவனுகவும், மனதில் திடமான யுக்தியை யுடையவனும், மனதில் பயத்தை யுடையவனும் இருப்பான்.

(72) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி நான்காமிடத்துக்குடைய புதன் பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரனுடன் கூடி யிருந்து மாதரு காரகனுன சந்திரன் மீனத்தில் இருந்து பூர்வாம்சத்தில் பிறந்தவனுடைய ஜாதகனுடைய தாய் மத்திய வயதுடையவள், புத்திரனுக்குப் பிரியமானதைச் செய்வாள், புண்ணியவதி, சகோதரர்களுடன் கூடியிருப்பாள், கணவனிடத்தில் விசேஷ பக்தியுடையவள், சாத்விகி, சுக்கிர திசையின் கடைசியில் மரிப்பாள், சுக்கிர திசையில் புதனுடைய புக்தியில் அந்தியத்திலாவது, கேது புக்தியிலாவது, பிறந்த முப்பதாவது வயதிலாவது, சீதள வாத ஜுரத்தாலாவது, விஷ அதிசார தோஷத்தாலாவது ஜாதகனுடைய தாயாரானவள் மரணமடைவாள். ஒரு சமயம் அப்படி புண்ணிய வசத்தினுல் ஜீவித்திருந்தால் அவனுடைய சகோதரனுவது மறிப்பான். அல்லது பத்தினியாவது நாசமடைவாள், அவனுடைய சகோதர வர்க்க பீடையும், தேகபாதையும், மனேவியாதியும், வியாபாரத்தன நஷ்டமும், ராஜ மந்திரியுடன் விரோதமும். நான்கு கால் உள்ள பிராணிகளின் நாசமும்,

இவனுடைய பந்துக்களின் விரோதமும் ஏற்படும். உத்தராம்சத்தில் ஜெனித்தவனுடைய தாயார் வெகு காலம் வரை ஜீவித்திருப்பாள். ஜாதகன் உத்யானம், பூமி, கிருகம் முதலிய சமிருத்தியுள்ளவன், பசு, தான்யம் முதலானவை சமர்த்தியாய் உடையவன், தன் சொந்த வீட்டிலேயே (தன்னால் நிர்மாணிக்கப்பட்ட கிரகத்தில்) வசிப்பான். அநேகரை ரக்ஷிப்பான், மானி, ஜபம், தியானம் முதலியன செய்வான்.

(73) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி ஐந்தாமிடத்துக்குடைய சுக்கிரன், புதனுடன் பன்னிரண்டாமிடத்தை அடைந்திருந்தால் புத்திர காரகன் தன் வீட்டிலிருந்து புத்திர ஸ்தானத்தைச் சூரியன், செவ்வாய் இவர்கள் பார்த்தால் புத்திர தோஷத்துடன் கூடின ஜாதகனை இவன் தத்து புத்திரனால் சந்ததி அடைவான். ஜன்மாந்திரத்தில் செய்த தோஷத்தாலும், பத்தினியின் திரவியத்தை அபகரித்ததாலும், அன்னியருடைய தனத்தை அபகரித்த தோஷத்தாலும் இந்த ஜன்மத்தில் புத்திரனில்லாதவனுவான். ஏகாதசியில் பசுதானமும், அரசமரத்தைப் பிரதிஷ்டை செய்வதாலும், தங்கத்தால் செய்த ஸந்தான கோபாலனுடைய விக்கிரகத்தைத் தானம் செய்வதாலும், எண்பத்தொரு வித தானங்களேயும் செய்வதாலும், சிவலிங்க பூசை செய்வதாலும், நாகப்பிரதிஷ்டை செய்வதாலும், சேது ஸ்நானம் முதலிய புண்ணிய காரியங்களாலும் காலந் தப்பி புத்திரலாபமுண்டாகும்; அல்லது மறுதாரத்தினிடமாக புத்திரன் பிறப்பான். சாந்தி முதலிய தானங்கள் செய்வதால் வெகு பிரயாசையின் பலனாக புத்திரன் பிறப்பான். ஜாதகனுக்குச் சகோதரன் சத்துருவாய் விடுவான். ஜாதகன் சத்துருக்களால் அநேக துன்பப் படுவான், விரைவாதத்துடன் கூடினவன், கொஞ்சம் வயிற்று நோயும், காது நோயும், ஹிருதய நோயும் உடையவன், (மறைவிடத்தில்) மர்ம ஸ்தானத்தில் வியாதியுடையவன், இரணத்தால் கண்டம் உடையவன், எப்போதும் துர்ப்பல தேகியாயிருப்பான்.

(74) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி ஏழாமிடத்துக்குடைய குரு சுய க்ஷேத்திரத்திலிருக்க தன் அம்சத்தில் இருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டால் இருபதாவது வயதிலாவது, பத்தொன்பதாவது வயதிலாவது விவாஹம் நடக்கும். ஜாதகன் சிவப்பு நிறமான பத்தினி யடைவான், காலாந்தரத்தில் கஷ்டத்தினால் பெண் பிரஜை ஜெனிக்கும்.

(75) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி ஒன்பதாமி டத்துக்குடைய சனி தன் வீட்டில் பலத்துடன் கூடியிருக்க, பிதுரு காரகன் தன் உச்ச ராசியை அடைந்து ராகுவுடன் துலாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திய வயதுடையவன், ஸ்ரீவை ஷ்ணவ மதத்தை தழுவியவன், சோதர சோதரிகளை உடையவன், அழகாய்ப் பேசுபவன், மூன்று வாஹனங்களை யுடையவன், லக்ஷத் துக்கு அதிகமான பணத்தைச் சம்பாதிப்பவன், அநேக வியாபாரம் செய்து பாக்கியத்தை அடைபவன், பொன், மாணிக்கம், முத்து, நவ ரத்தினம் முதலியவை விற்பவன், ஸமுத்திர வஸ்து வியாபாரம் செய்ப வன், நீலம் முதலிய விற்பனை செய்பவன், நீச்சராசனுல் வெகு மானி க்கப்பட்டவன், தீவாந்திரத்தில் பணத்தைச் சம்பாதிப்பவன், சுக்கிர தெசையில் ராகு புக்தியில் இருபதாவது வயதிலாவது, பிற்பாடாவது பித்த பாண்டு முதலிய ரோகத்தால் பிதா மறிப்பான். ஜாதகனுக்கு ஒரே சிறிய தகப்பன் நீண்ட ஆயுளுள்ளவன், பிதுராச்சித சமிருத்தி உடையவன்.

(76) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகி பத்தாமிடத் துக்குடைய குரு ஏழாமிடத்திலாவது பத்தாமிடத்திலாவது சந்திர னுடன் கூடியிருந்தால் ஜாதகன் நல்ல கிரியைகளையுடையவன், ஆசார முடையவன், சாது, ஜபம், தியானம் முதலியன செய் பவன், வேலைக்காரி, வேலைக்காரன் முதலானவர்களால் கௌர விக்கப்பட்டவன், வேதாந்த மறிந்தவன், தயாளமானவன், ஒவ் வொரு தெசைகளிலும் சனி, ராகு, சூரியன், செவ்வாய், கேது இவர் கள் புக்திகளின் முதலில் தனக்குச்சமமான ஜனங்களால் மனக்கி லேசமும், அதிக பண நாசமும், திருடன், நெருப்பு, ராஜன் முதலிய வர்களால் பீடையும், விவகாரங்களில் கஷ்டமும், தாரம், புத்திரன் மூலம் பீடையும், நாற்கால் பிராணிகளின் நாசமும், பயிர், வியாபாரம் முதலானவை நாசமும் உண்டு. தன் இஷ்ட பந்துக்களால் விரோதம் உண்டாகும். இக்கிரகங்களின் புக்தி கடைசியில் சவுக்கியம், பயிர், வியாபாரம் முதலிய பாக்கியமும், நித்யதேக சுகியாகவும், மனைவி வர்க்க தனத்தால் சுகமும், ராஜப் பிரீதியும், யோகமும், நஷ்டத் திர விய லாபமும் உண்டாகும்.

(77) ஜென்ம லக்கினம் மிதுனம் (வசுதாம்சம்) ஆகிப் பிறந்தவ னுக்கு எல்லா தெசைகளிலும் குரு, சுக்கிர, சந்திர, புத புக்திகளில் க்தி முதலில் சுகமும், சோபனமும், ராஜப்பிரீதியும், பண வரவும்,

நித்தியம் தேக சுகமும், மனைவி, புத்திரன் சுகம், கீர்த்தி, பயிர், வியா பார லாபம், நாற்கால் ஜீவன லாபம், உத்தியோக செளக்கியம், பண வரவு, சிநேகிதர்களின் வரவு, பிரபு சிநேகம் இவைகளும் உண்டாகும். புக்தி கடைசியில் கஷ்ட பலனும், அதிக தன நஷ்டமும், மருபடியும் முன் போல மஹா நதிதீரத்தில் பட்டிண வாசமும், நல்ல வாஹநப் பிராப்தியும், திடசரீரமும் உண்டாகும். அழகாய்ப்பேசுபவனும், பணத்தைச் சம்பாதிப்பவனும் இருப்பான். மனைவி, மக்களுடன் கூடி ராஜயோகத்துடனும், விசேஷ புண்ணியம் சம்பாதித்தும் வாழ்வான்.

(78) ஜென்ம லக்கினம் மிதுனம் (காந்தாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 81-12 கலை முதல் பாகை 81-24 கலை வரையிலும்) ஆகி சுக்கிரன் ஒன்பதாமிடத்திலிருக்க அவனுடைய தெசை வந்தால் பிதாவுக்குப் பிரபல யோகமும் மகா செளக்கியமும் உண்டாகும்.

(79) ஜென்ம லக்கினம் மிதுனம் (சித்திராம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்தில் புதனும், சுக்கிரனும் இருக்க ஒன்று, ஒன்பது, ஐந்து முதலிய இடங்களில் எவ்விடத்திலாவது குருவும் இருக்க ஜெனித்தவன் குலத்தைப் பிரகாசிக்கச் செய்கிற நல்ல புத்திரனாக குல தீபமாய் விளங்குவான். அவன் அநேக பூமி உடையவன், அதிக பணமுடையவன், வாகனமுடையவன்.

(80) ஜென்ம லக்கினம் மிதுனம் (சித்திராம்சம்) ஆகி எட்டுக்குடையவன் இருக்கும் ராசிநாதன் லக்கின கேந்திர திரிகோணங்களிலிருந்து ஒன்பதுக் குடையவனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மத்திமாயுசுள்ளவன்.

(81) ஜென்ம லக்கினம் மிதுனம் (சித்திராம்சம்) ஆகி ஐந்தில் கேது இருந்து ஜெனன கால தெசை கேது தெசையானால் அந்த தெசையில் ஜாதகனுடைய தாய், தகப்பனுக்கு மகத்தான சுகம் உண்டாகும்.

(82) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 75-48 கலை முதல் பாகை 76-00 கலை வரையிலும்) ஆகி பூர்வ பாகத்தில் புத திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன் கருப்பு நிறமுடையவன், நல்ல ஆகிருதி உடையவன், தான் ஐந்தாவது கர்ப்பத்தில் ஜெனித்தவன் மூத்த சகோதரனுடன் கூடினவனுவான். விப்பிர காலத்தில் ஜெனித்தவன் சகோதரர்களில்லாதவன்

நான்காவது கர்ப்பத்தில் ஜெனித்தவன், ஆயுளுள்ள மூன்று சகோதரிகளையுடையவனுவான். ராஜ வம்சத்தில் ஜெனித்தவன் பால்யத்தில் ராஜ்யத்தையும், நல்ல பாக்கியத்தையும் அடைவான். வைசிய காலத்தில் பிறந்தவன் இரண்டு சகோதரர்களை யுடையவன், சுகியாயிருப்பான், பாலியத்தில் கிலேசமடைவான், பாலியத்திலேயே பிதா அரிஷ்டத்தை அடைவான், மத்திய வயதில் பாக்யத்தை அடைந்து புத்திமானுகவும், ஞானவானுகியு மிருப்பான்.

(83) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சுபராசியிலிருந்து சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் புண்ணிய க்ஷேத்திரத்தில் பெரிய நதி தீரத்தில் நகரத்தில் பிறந்தவனுவான்.

(84) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி சனி ஐந்தாம் பாவத்தில் இருக்க, சந்திரன் ஒன்பதாம் பாவத்திலிருந்து, பத்தாம் பாவாதிபதி நீச ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்டம் உண்டாகும்.

(85) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சனியுடன் கூடியிருந்து சூரியன் நான்காம் பாவத்திலிருந்தாலும், ஐந்தாம் பாவத்தில் சனியுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய தாய் ஜாதகன் பிறந்த வருஷத்திலாவது, ஜென்ம தெசையிலாவது கோசாரத்தில் துலா ராசியில் சனி வரும் சமயம் மரணமடைவாள்.

(86) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி சூரியன் வர்க்கோத்தமாம்சத்திலிருக்க, ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவனுகவும், விஷ்ணு, சிவ பக்தியுடையவனுகவும், சீக்கிரம் கோபமுடையவனுகியும், சந்தோஷம் உடையவனுகவும், சகோதர, சகோதரிகளுடன் கூடியும், கொடுக்கல் வாங்கலில் உண்மையே பேசுபவனும், தேவர், பிராமணர்களிடத்தில் பக்தியுடையவனுகவும், கொஞ்ச காலம் சுதந்தரமில்லாதவனுகவும், பிறகு சுதந்தர பாக்கிய முடையவனுகவும் இருப்பான்.

(87) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவம் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பிறந்த வருஷத்தில் ஜாதகனுடைய பிதா வியாகூலமடைவான், கொஞ்சம் பா

ஸ்திரீ சேர்க்கை அடைவான், சந்தன, புஷ்பாலங்கார, வஸ்திரப்பிரியன், பச்சாத்தாபத்தையுடையவன், பாபம் நிறைந்தவன், தெய்வானுக்கிரக மனதுடையவன், தகப்பனுடைய வம்சத்தில் பாக்கிய முடையவன்.

(88) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் பாபக்கிரகமிருந்து குரு நீசராசியிலிருந்தால் ஜாதகன் நீசவித்தையில் சமர்த்தனாகவும், மூன்று பாஷைகள் கற்றவனாகவும், கொஞ்சம் படிப்பிற்கு இடையூறுடையவனாகவும், மந்த புத்தியுடையவனாகவும் இருப்பான்.

(89) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி குரு பாபராசியிலிருந்தாலும், நீசனாகியிருந்தாலும், மற்ற புதன் முதலிய சுபக்கிரகங்கள் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் எழுத்து வேலையில் நல்ல நிபுணனாகவும், நல்ல வித்தையுடன் கூடியவனாகவும், சுகியாகவும் இருப்பான்.

(90) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் பாபக்கிரக மிருந்து அந்த பாவாதிபதி பாபக்கிரகத்துடன் கூடியிருக்க புத்திரகாரகன் நீசராசியிலிருந்தால் ஜாதகனுக்கு சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும்.

(91) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி குரு, லக்கினம், சந்திரன் இவற்றிற்கு ஐந்தில் பாபக்கிரக மிருந்தால் ஜாதகனுக்குப் புத்திர சந்தானம் நாசமடையும். ஆகையால் சாந்தி செய்ய வேண்டியது. சகடயோக மிருந்தால் அற்ப சந்தானம், அதாவது ஒரே ஒரு சந்தானம் உண்டாகும்.

(92) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி தன் உச்சத்தில் தன் நவாம்சத்திலிருந்தாலும், சுயக்ஷேத்திரத்தில் பலத்துடன் கூடி ஐந்தாம் பாவத்திலிருந்தாலும், நீச்சத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு ராஜயோகம் உண்டாகி ஜாதகன் அரசனாகவாவது, அரசனுக்கு சமமான தனமுடைய வனாகவாவது ஆகி சுகமுடையவனாயிருப்பான்.

(93) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 63-36 கலை முதல் பாகை 63-48 கலை வரையிலும்) ஆகி லக்கின பாவாதிபதி சூரியனுடன் கூடியிருக்க லக்கின பாவத்

தில் ராகு இருந்தாலும், ராகு லக்கினத்தைப் பார்த்தாலும் வனப்பி ராந்தியத்தில் பட்டிணத்தில் ஜெனனமும், வாசமும் உண்டு.

(94) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி சந்திரனுக்கு நான்கில் பாபக்கிரக மிருந்து அந்த ராசிநாதன் பாபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு வனாந்திரப் பட்டிணத்தில் ஜெனனம் நேரிடும். பாக்கிய காலத்தில் பிறந்தவன் பாக்கியத்தை யுடையவனாகியும், முன் ஜென்மாந்திர புண்ணியத்தாலும், தகப்பனுடைய புண்ணியத் தாலும் சுகமடைவான்.

(95) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி தன்னுச்சத்திலாவது, கேந்திரங்களிலாவது தன் அம்சத் திலிருந்து எட்டாம் பாவாதிபதியும் தன் உச்ச ராசியிலிருந்தால் தீர்க் காயுளுடனும், யோகத்துடனும், சுகத்துடனும் ஜாதகன் இருப்பான். ஜாதகனுடைய தகப்பனுக்குச் சுகமும், சுபமும் உண்டாகும். ஜாதகன் தனது தாயின் சுகமிழந்தவன், மாற்றாந் தாயால் ஜாதகன் சௌக்யத்தை அடைவான், தகப்பன் வம்சத்தில் அதிக சுபமுள்ளவன். தன் பிதா விஷ்ணுவிடம் பக்தியுடையவன், வைஷ்ணவ ஆசார பாக்கிய முடையவன், தானம் செய்பவன், சத்தியவாதி, கர்ப்பத்தி லிருந்தே சம்பத்துடையவன், சுகமுடையவன், நித்யம் தர்ம மார்கத் துடன் கூடினவன், பாக்கிய விருத்தியுடையவன், வாகன முடையவன், வயதின் மத்தியில் பணம் சம்பாதிப்பவன், வனாந்தர பட்டிண அதிபதியுடன் நேசமுடையவன், நல்ல பாக்யமுடையவன், மூன்று மனைவியுடையவன், போகி, சகோதரக் கிலேசத்தால் பீடிக்கப்பட்டவன், ஆயுள்வரையிலும் பாக்கியமுடையவன், தர்ம புத்தியுடையவன், இந்திரியங்களை ஜெயித்தவன், தன் பிதாவைவிட தீர்க்க காலம் ஆயுளுடையவனாவான்.

(96) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகிப் பிறந்தவனுடைய சிற்றப்பனின் புத்திரஸ்தானாதிபதியாகிய சூரியன் சந்திர கேந்திர திரிகோணங்களில் இருந்தால் ஜாதகனுடைய சிறியதகப்பனுடைய புத்திரனும் சந்ததி பாக்கியம் இவைகளை உடையவனாயிருப்பான்.

(97) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி லக்கினபாவத்தில் ராகுவும் ஐந்தாம் பாவத்தில் சனியும் ஏழாம் பாவத்தில் பாபக் கிரகங்களுமிருக்க ஜாதகனுக்கு கொஞ்சம் பாலாரிஷ்ட பயம் உண்டாகும். ஜாதகன் பிதாவினுடைய புண்ணிய வசத்தால் சுகமடைவான்,

ஜென்ம தெசையில் மூன்ரும் வருஷத்தில் அல்லது நான்காவது வய தில் ஜாதகனுக்கு பாலாரிஷ்ட பயம் உண்டாகும். சீக்கிரமாக ஆரோக் கியமும் உண்டாகும்.

(98) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி புத திரிம்சாம் சத்தில் ஜெனித்தவனுக்கு ஏழாம் பாவத்தில் பாபக்கிரகங்கள் கூடியி ருந்தால் ஜாதகனுடைய மனைவிக்குப் பீடையும், ஜாதகனுக்கு விசார மும் உண்டாகும். அந்த ஏழாம் பாவாதிபதி பலவானுன பாபக்கிர கத்துடன் கூடி ஜாதகத்தில் எவ்விடத்தில் இருந்தாலும் ஜாதகன் இரண்டு மனைவியை அடைவான்.

(99) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி சந்திரனுக்கு எட்டாமிடத்தில் குரு இருந்தால் சகட யோகமுண்டாகும். அப்ப டிப்பட்ட சகடயோகத்தில் ஜெனித்தவனுக்கு மனைவியின் சௌக்கி யம் இராது.

(100) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி சந்திரன் சுபாம்சத்தில் இருக்க குருவும் சுபாம்சத்தில் இருந்தால் சுப க்ஷேத்தி ரத்தில் பிறந்தவனுக்கு சகட யோகம் பங்கமாகும், யோகமுண் டாகும்.

(101) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி சாம்ராஜ்ய சகடயோகத்தில் பிறந்தவன் அதிகமான பாக்கியத்தை யுடையவன், ஸந்தானம் நாசமடைவதால் துக்கிப்பவன், மனைவி பீடையால் விசார முடையவன், வேறு மனைவியிடம் பலனுண்டாகும், கருத்த சரீரமுடை யவன், சகோதரனில்லாதவன், ஒண்டியானவன், இவனுக்குச் சனி ஓராவது பரியாயத்தில் மிதுன ராசியின் கடைசியிலல்லது கடக ராசி யில் கோசாரத்தில் வரும் சமயம் எட்டாம் பாவாதிபதி தெசையில் மனைவி மரிப்பாள். சீக்கிரமாகவே விவாக யோகம் உண்டாகும். குரு கடகராசியில் கோசாரத்தில் வரும் சமயம் மூன்ரும் தெசையில் இரண் டாவது விவாகம் சௌக்யமாக உண்டாகும், தெசையின் மத்தியில் விசேஷ சௌக்கியமும், பிதாவுக்குச் சௌக்யமும், பணவரவும் உண் டாகும், விபத்தார தெசையில் வீட்டில் சுபம் உண்டாகும்.

(102) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி சகடயோ கத்தில் ஜெனித்தவன் அநேக தனமுள்ள தனவானுயிருந்தாலும் சந் தானத்துக்கு இடைஞ்ச லுடையவன் ஆவான்

(103) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சனி யிருந்து, ஏழாம் பாவாதிபதி செவ்வாயுடன் சேர்ந்திருந்து லக்கின பாவத்துக்கு ஏழில் கேது இருந்தால் புத்திர சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும். அந்த தோஷ பரிகாரமாகும்படி சொர்ணத்தால் செய்யப்பட்ட கேது பிரதிமையை அர்ச்சித்து, ஜோதிஷனுக்கே தானம் கொடுக்கவேண்டியது. அப்படிச் செய்தால் முன் ஜென்மாந்திர புண்ணியப் பிரபாவத்தாலும், பால கிருஷ்ணனுடைய அனுக்கிரகத்தாலும், சூரிய புக்தியில் கர்ப்பாதானம் சந்தேகமில்லாமல் உண்டாகும்.

(104) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சனியிருக்க குரு; செவ்வாயால் பார்க்கப்பட்டாலும், செவ்வாயுடன் கூடியிருந்தாலும் துர்க்கா தானம் செய்யவேண்டியது.

(105) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் பாபக் கிரகமிருக்க அந்த பாவாதிபதியும் பாபக் கிரகத்துடன் கூடியிருந்து, குருவானது செவ்வாயுடன் கூடி யிருந்தாலும், செவ்வாயால் பார்க்கப்பட்டாலும், தங்கத்தால் சிவலிங்கம் செய்து அதைத் தானம் செய்யவேண்டும். விபத்தார தெசையில் சந்திர புக்தியில் விசேஷ தனம் உண்டாகும், புத்திரி பிறப்பாள், பிறகு புத்திர லாபமுண்டாகும்.

(106) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 76-36 கலை முதல் பாகை 76-48 கலை வரையிலும்) ஆகி லக்கின பாவாதிபதி வர்க்கோத்தமத்திலிருந்து சூத்திர காலத்தில் பிறந்தவன் சூத்திர வம்சத்தில் ஜெனனம் அடைவான், சம்பத்துடையவன், மூன்றுவது அல்லது இரண்டாவது கர்ப்பத்தில் ஜெனித்தவன். பின் சகோதரனில்லாதவன், கருப்பு நிறமுடையவனுவான்.

(107) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி லக்கின பாவாதி சுப க்ஷேத்திரத்தில், அல்லது சுப ராசியிலிருந்து, பூர்வ பாகத்தில் ஜெனித்த ஜாதகன் நதி தீரத்தில் பெரிய கிராமத்திலாவது பட்டிணத்திலாவது ஜெனித்தவனுவான். உத்தராம்சத்தில் ஜாதகனுக்கு பிறப்பிடமானது நதிப் பிராந்தியத்திலிருக்கும் சிறு கிராமத்தில் உண்டாகும்.

(108) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி லக்கினபாவத்தில் ராகு இருக்கப் பிறந்தவனுடைய தாய்க்கு பிரசவ வேதனை

கொஞ்சமாக உண்டாகும். ஜாதகனுக்குப் பாலாரிஷ்ட பயமும் கொஞ்சம் உண்டாகும். குரு திருஷ்டி லக்கினத்திற்கு இருந்தால் சுகமுண்டாகும். குரு திருஷ்டி பூரணமாக இருந்தால் பாலாரிஷ்டமும் விலகி சீக்கிரமாக ஆரோக்யமும், சௌக்யமும் உண்டாகும்.

(109) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடி சுப க்ஷேத்திரத்திரமாகிய ஜென்மலக்கினத்திலிருந்து நான்காம் பாவாதிபதி சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தன் கோத்திரத்தில் தத்து கொடுக்கப் படுபவனுவான்.

(110) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியில் சரராசியில், வர்க்கோத்தமாம்சத்தில் இருக்கப் பிறந்தவன், இரண்டு தகப்பனுடன் அதாவது சுயதகப்பன் ஒன்று ஸ்வீகாரத் தகப்பன் ஒன்று கூடி சுகியாயிருப்பான். இரண்டு தாய்களுடன் (அதாவது சுய தாயும் ஸ்வீகாரத்தாயும்) கூடி சுகமாய் இருப்பான்.

(111) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சுராம்சத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டு, ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்சராசியிலிருந்தால் தன் பிதா சிவபக்தியையுடையவன், சகோதரர்களுடன் கூடினவன், தேவப்பிராமண பக்தியுடையவன், பாலியத்தில் அற்ப சுகமுள்ளவன், காமீ, கொஞ்சகாலம் சுதந்திர மில்லாமல் இருப்பவன், பாலியத்திலிருந்து தரித்திரமுடையவன், புத்திரனுல் கொஞ்சம் சுகத்தை அடைவான்.

(112) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்சராசியிலிருந்தால் ஜாதகனுடைய பிதா வெகு காலம் ஆயுளுடையவனுவான். ஜாதகனுடைய தகப்பனுக்குத் தகப்பன் (பாட்டன்) ஜாதகனுடைய க்ஷேம தெசையில் மரிப்பான்.

(113) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி புதனுகி, இரண்டாம் பாவத்தில் வர்க்கோத்தமாம்சத்திலிருக்க, விருஷப ராசியில் கன்யாம்சத்தில் குரு இருந்தால் ஜாதகனுடைய தாய் வெகு காலம் ஆயுளுடையவள், தன் தாய் குணத்துடன் கூடியவள், சாதாரண குடும்பஸ்தன் வம்சத்தில் ஜெனித்தவள், சகோதரப் பிராதாக்களுடன் கூடினவள், தாய் வம்சத்தில் கொஞ்சம் சுகமும் உடையவள், எட்டாம் பாவாதிபதியினுடைய தெசையின் நடுவில் ஜாதகனுடைய தாய் மரித்துவிடுவாள்.

(114) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதியாகிய புதன் இரண்டாவது பாவத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தன் ஜாதிக்குகந்த வித்தையடைவான், ஊகா போகம் தெரிந்தவன், சுகமுடையவன்.

(115) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு படிப்புக்குக் கொஞ்சந்தடங்கலுண்டாகும்.

(116) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடியிருக்க சனி வக்கோத்தமாம்சத்திலிருந்தால் ஜாதகன் தன் தாயாதியின் திரவியத்தை அடைவான்.

(117) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி சந்திரன் ராகுவுடன் கூடி சரராசியிலிருந்தால் ஜாதகன் நல்ல பாக்கியமுடையவனுயிருப்பான், தன் உச்ச ராசியில் சந்திரனிருந்து ராகுவும் கூடியிருந்தாலும், அல்லது உச்ச ராசியில் ராகுவுடன் சந்திரன் கூடியிருந்தாலும் நல்ல பாக்கியமுடையவனுயிருப்பான், விபத் தெசையில் சந்திரன் புக்தியில் ஸ்வீகார பிதாவின் பாக்கியத்தை அடைவான். ஜாதகனுடைய ஸ்வீகார தகப்பன் செல்வமுடையவன், பணம் சம்பாதிப்பதில் சமர்த்தன், பிரபுவால் புகழுடையவன், தேவப் பிராமண பக்தியுடையவன், வைதீக ஆசாரமுடையவன், புண்ணியாத்துமா, நியாயமாய்ச் சம்பாதித்து நல்ல ஜீவனம் செய்பவன், நல்ல செய்கையுடையவன், எப்பொழுதும் ஆசாரமுடையவன், சுய புஜத்தால் சம்பாதிக்கப்பட்ட யோகமுடையவன், வியாபார ஜீவனமுடையவன், எப்போதும் தர்ம, புண்ணிய புராணத்தை அறிவதில் ஆசை யுடையவன், சத்தியம் உள்ளவன், தர்ம மறிந்தவன், கொடையாளி, திடமான நல்ல மனதுடையவன், ஏதாவதொரு தர்மத்தை சித்தியாய்ச் செய்வான், அன்னியர்களுக்கு உபகாரம் செய்வான், முன் ஜென்மாந்தர பாபத்தால் புத்திர சோகத்தால் பீடிக்கப் படுவான், வளர்ப்புப் பிள்ளையால் சௌக்கியமும், குணமுடைய கன்னிகையுமுடையவன், குணவான், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய க்ஷேம தெசையில் மரித்து விடுவான்.

(118) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி ராகு சந்திரனுடன் தன்னுச்ச ராசியில் இருந்தால் ஜாதகனுடைய ஸ்வீகாரத் தாய் சுகமுடையவள், ஸ்வீகாரத் தாய் சுத்த முள்ளவள், பதிவிருதை,

கணவனிடத்தில் பக்தியுடன் கூடினவள், நல்ல புகழுடையவள், அன்னதானப் பிரிய குணம் உள்ளவள், பாக்கிய வம்சத்திலுற்பவித்தவள், தன் வம்சத்தில் பாக்ய அபிவிருத்தியுடையவளாவாள்.

(119) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி லக்கினத்தில் சூரியனுடன் கூடியிருந்து, ஐந்தாம் பாவத்தில் பாபக்கிரக மிருந்தால் ஸந்தானத்துக்கு இடைஞ்சல் உண்டாகும். அந்த தோஷம் பரிகாரம் ஆகும்படி சிம்சுமார தானம் செய்ய வேண்டும்.

(120) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் குரு இருந்து, ஐந்தாம் பாவாதிபதி இரவியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு காலந்தள்ளி குழந்தைகள் விருத்தியுண்டாகும். முதலில் பெண் குழந்தை ஜெனிக்கும். அற்ப சந்தான யோகமுடையவன், ஆயுளுடைய மூன்று கன்னிகைகளை யடைவான். விபத் தெசையில் ராகு புத்தியில் கோட்சாரத்தில் கடக ராசியில் குரு வரும் சமயம் ஜாதகனுக்கு குரு தெசையில் புத்திரப் பிராப்தி யுண்டாகும்.

(121) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுராம்சம்) ஆகி ஆறும் பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்தில் தன் உச்ச ராசியிலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நல்ல காரியத்தைச் செய்பவனுகவும், புண்ணியம் செய்பவனுகவும், பணம் சம்பாதிப்பவனுகவும், கீர்த்தியுடையவனுகவும் இருப்பான் என்று முன்னோர்கள் சொல்லுகிறுர்கள்.

(122) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) அதாவது லக்கின ஸ்புடம் பாகை 81-48 கலை முதல் பாகை 82–00 கலை வரையிலும்) ஆகி க்ஷமாம்சத்தில் மிதுன லக்கினத்தில் லக்கின பாவாதிபதி யிருக்க சூத்திர காலத்தில் பிறந்தவன் சூத்திர ஜென்மத்தில் பிறந்து எப்பொழுதும் சுகியாக இருப்பான். ஜாதகன் ஓராவது அல்லது இரண்டாவது கர்ப்பத்தில் ஜெனித்தவனுவான்,

(123) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்கு லக்கின பாவத்தில் ராகு, கேது இருந்தால் துர்காரண்ணியப் பிரதேசத்தில் அல்லது பெரிய கிராமத்தில் துர்க்கமத்தியில் வடக்கு தெற்கு வீதியில், மேற்கு முகம் வாயிற்படியுள்ள வீட்டில் மிலேச்ச பட்டிணத்தில் தேவாலய சமீபத்தில் ஜாதகனுடைய ஜெனனம் பிதாவின் வீட்டில் நேரிடும். உத்தராம்சத்தில் பிறந்தவனுனல் சாதாரண கிராமத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தின் சமீபத்

தில் தேவாலய மில்லாத இடத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு முகம் வாயிற்படி உள்ள வீட்டில் பந்துவின் வீட்டில் ஜாதகனுக்கு ஜெனனம் நேரிடும். உத்தர பூர்வ பாகங்களில் பலன்கள் கொஞ்சம் வித்தியாசம் உண்டாகும்.

(124) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி சுபர்களுடன் லக்கின பாவாதிபதி கூடியிருக்க லக்கின பாவத்தில் பாபக்கிரகமிருந்தாலும், பாவர்கள் லக்கின பாவத்தைப் பார்த்தாலும் பூர்வபாகத்தில் ஜெனித்தவனுடைய தாய் பிரசவ காலத்தில் அதிக வேதனையடைவாள். உத்தராம்சத்தில் ஜெனனமானல் ஷ்டி வேதனை கொஞ்சமாயிருக்கும். லக்கினத்திற்கு குரு திருஷ்டியிருந்தால் சுகமுண்டாகும்.

(125) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி ஏழாம்பாவத்தில் பாபக்கிரகம் இருந்தால் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் பீடை யுண்டாகும். ஜாதகன் பாலாரிஷ்ட பீடையால் ஐந்து வயது வரையில் அவதியும், மாந்த ஜுரத்தினுலும், இரணத்தாலும், வைசூரியாலும், ஜுரபயத்தாலும் பீடிக்கப்படுவான்.

(126) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி லக்கினபாவாதிபதி எட்டாமிடத்தில் சுப, பாபக்கிரகங்களுடன் கூடியிருக்க எட்டாம் பாவாதிபதி சனி மித்திர ராசியை யடைந்து தன் நவாம்சத்தில் சுபக்கிரகத்துடன் கூடியிருக்க லக்கினத்தின் இரண்டாம் பாவத்தில் குருவும் இருந்தால் எல்லா தோஷங்களும் விலகி சுகமுண்டாகும்.

(127) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி சூரியன் லக்கின பாவத்தில் ராகுவுடன் கூடியிருக்க ஒன்பதாம் பாவாதிபதி மித்திர ராசியிலிருந்தால் ஜாதகனுடைய பிதா விசேஷ சௌக்கியமுடையவன். தகப்பனைப் போலவே குணமுடையவன், விஷ்ணு பக்த மதத்தில் ஆச்ரயித்தவன், ஒருவனே, சகோதரனில்லாதவன், சகோதரன் பிறந்தாலும் மரித்துவிடும், வித்தை, புத்தியுடைய விவேகீ, குணத்துடன் கூடினவன், தேவப்பிராமண விஸ்வாசி, விஷ்ணு, சிவ பக்தியுடையவன், எழுதுவதில் சமர்த்தன், வேறு பாஷையில் மிகவும் சிரமப்படுவான்.

(128) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தின் ஒன்பதாம் பாவாதிபதியாகிய சுக்கிரன் எட்டாம் பாவத்தில் மூன்று கிரகங்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சேர்க்கவுங் கலைக்கவும் ஸாமர்த்தியம் உள்ளவன்,

வாசாலகன், பிரசங்கம் செய்யும் யுக்தி யுடையவன், இரண்டு மனைவி உடையவன், யோகமுடையவன், போகி, தாமதமாகக் காரியம் செய்பவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், நியாய வாதம் புரிபவன், குருப் பிரியன்.

(129) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி சூரியன் ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் சூரியன் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய பிதா மிலேச்சனை அண்டிப் பிழைப்பவன், பூமி விவசாயத்துடன் கூடியிருப்பவன், எப்பொழுதும் பிரபுக்கள் வசியமுடையவன், பிரபுவுக்குக் கார்யம் செய்வதில் சமர்த்தன், சுயார்ஜீதமாய்ச் சம்பாதிப்பவன், அரசனால் வெகுமானிக்கப்பட்டவன், சந்தோஷத்தை யுடையவன், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், மத்திய, அந்திய வயதுகளில் யோகப்பெருக்குடையவன், அரசாங்கத்தினாலும், மிலேச்சப் பிரபுவினாலும் சுகமுண்டாகும். எப்பொழுதும் ராஜ சேவை செய்பவன், வாகனாதிகளை நடத்துபவன், வயோதிக வயதில் ரோகபீதியை யுடையவன், வாயு, சூலை, உஷ்ணம் முதலியன சம்பவிக்கும், வயோதிக வயதில் புத்திரனால் சுகமுண்டாகும், புண்ணியம் முதலிய தர்மத்தைக் கிரகித்து நடத்துவான், சாந்தமான தகப்பன் ஜாதகனுடைய மூன்றும் தெசையில் மரிப்பான்.

(130) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி எட்டாம் பாவத்திலிருந்து செவ்வாய், சுக்கிரன் இவர்களுடன் கூடியிருக்க, சந்திரன் குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தாய் விசேஷ சௌக்யமுடையவள், குணத்துடன் கூடினவள், சாந்தமுள்ளவள், கணவனிடம் பக்தி, குணம் முதலியவற்றுடன் கூடினவள், அன்னதானம் செய்வதில் பிரியமுள்ளவள், புண்ணியவதி, வம்சத்தில் பாக்கிய அபிவிருத்தியுடையவள், தகப்பனுக்குப் பிரியமானதைச் செய்பவள், சமர்த்தை, கடிந்து பேசுபவள், முன் பாப விசேஷத்தால் புத்திர சோகத்தால் பீடிக்கப் படுபவள், ஜாதகனுடைய தாய் மூன்றும் திசையில் மரிப்பாள்.

(131) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி சூரியன் ஏழாம் பாவத்தில் ராகுவுடன் கூடியிருந்து சகோதர காரகன் தன் உச்சராசியில் எட்டாம் பாவத்தில் மூன்று கிரகங்களுடன் கூடியிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு சகோதர சௌக்யம் விசேஷமாய் உண்டாகும். ஜாதகன் மூத்த சகோ

தாணில்லாதவன், பின் சகோதரர்கள் மூன்று பேர் சுகத்துடனும், இரண்டு சகோதரிகள் ஆயுளுடையவர்களாகி புத்திரன், புத்திரி இவர்களுடன் கூடியிருப்பார்கள், அதிக சகோதரம் ஜாதகனுடன் பிறந்தாலும் மரித்துவிடும், இந்த சகோதரர்களில் எவனுவது ஒருவன் வித்தை, புத்தி, விவேகம் இவையுடையவனுகி யிருப்பான், மனைவி, புத்திரன் முதலிய சுகமுடையவன், யோகவான், அரசாங்கத்தில் உத்தியோக முடையவன், வேருெரு சகோதரன் வீட்டு வேலைகளைச் சுதந்திர முடன் கவனித்துச் சுகியாவான், பயிர்த் தொழிலில் சமர்த்தன், தன, தானியம் முதலிய விருத்தியுடையவன், திரவியத்தைச் சம்பாதிப்பதில் சமர்த்தன், புத்திர, புத்திரி யுடையவன், நல்ல போகியாவான், க்ஷேத்திர மூலம் நல்ல லாபமுடையவன், அவனுடைய சகோதரன் சுகஜீவீ, அரசாங்கத்தில் புகழுடையவன், திரவியம் சம்பாதிப்பதில் சமர்த்தன், தியாகீ, கெம்பீரமுடையவன், புத்திமான், மூன்று பாஷைகளில் வல்லவன், ராஜ வசியமுள்ளவன், இரண்டு மனைவியோக முடையவன், வேறு மனைவியிடம் நல்ல புத்திரனுடையவனுவான்.

(132) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி சனி திரிம்சாம்சத்தில் கேஸரி யோகத்தில் ஜெனித்தவன் வெளுப்பு நிறமுள்ளவன், விசேஷ அறிவாளி, பித்தம் நிறைந்த தேகமுடையவன், கொஞ்சம் வாயு அதிகமுடையவன், சமதேகமுடையவன், அறிவாளி தீரன், அழகிய முகமுங்கண்களும் பொருந்தியவன், அதிருஷ்டசாலி, வாசாலகன், விஷ்ணு பக்தி மதாசார முடையவன், விஷ்ணு சிவ பக்தியுடையவன், தேவப் பிராமண விஸ்வாச முடையவன், உபாயமுள்ளவன், நான்கும் அறிந்தவன், கல்வி, புத்தி இவற்றில் விவேக முள்ளவன், இரண்டு பாஷைகளை நன்ருய்ப் பேசுவான், அன்னிய பாஷைகளை நன்கறிந்தவன், நியாயவாதம் புரிவான், தகப்பனுக்குப் பிரியமாயிருப்பான்.

(133) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி தன் உச்சராசியிலிருந்தால் ஜீவனம் அரசாங்கத்திலும், க்ஷேத்திர மூலத்தாலும், விவசாயத்தாலும் உண்டு. அதனுல் அதிக லாபமடைந்து சுகியாயிருப்பான்.

(134) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி இரண்டு, பதினெ்று முதலிய இரண்டு பாவாதிபதிகள் எட்டாம் பாவத்தில் நான்காம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் வாலிபப் பரு

வம் முதல் சௌக்கியமும், யோகமும் உடையவனுகி சுக ஜீவியாயிருப்பான், மிலேச்சப் பிரபுவால் ஜீவிப்பவன், அந்த பிரபுவால் பெருமையடைவான்.

(135) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி ஏழாம்பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து, இரண்டாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டால் மனைவி வெளுப்பு நிறமுடையவள், மனைவி தன் கணவனிடம் பக்தியுடையவளாவள்.

(136) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி ஏழாம்பாவத்தில் பாபக் கிரகமிருந்து ஏழாம்பாவாதிபதி சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வேறு மனையாளால் பலனுண்டாகும் என்று சிலரும், ஒரே தாரம் என்று சிலரும் சொல்லுகிறுர்கள்.

(137) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி சுக்கிரன் அதிமித்துராம்சத்தில் இருந்தால் நல்ல மனைவியை ஜாதகன் அடைவான், விவாகத்திற்குப் பிறகு சௌக்கியமும், வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷமும் உண்டாகும். பிதா மூலமாக ஜாதகன் பிரபலமடைவான், புகழையுமடைவான்.

(138) ஜென்ம லக்கினம் மிதுனம் (க்ஷமாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சனி செவ்வாயுடன் கூடி குருவால் பார்க்கப்பட்டால் தன் பிதா சிவ பக்தியுடையவன், தேவப் பிராமண பக்தியுடையவன், தன் ஜனங்களிடத்தில் புகழுடையவன், மத்திய அந்திய வயதுக்களில் நல்ல கீர்த்தியடைபவன், புத்திரி மூலம் சுகமுடையவன், பாலியத்தில் ஜாதகனுடைய சம்பத் தெசையில் பிதா மரணமடைவான்.

(139) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 76-48 கலை முதல் பாகை 77-00 கலை வரையிலும்) ஆகி லக்கின பாவத்தைக் குரு பார்த்தாலும், குரு லக்கினத்தில் இருந்தாலும், பூர்வ பாகத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை அற்பமாயிருக்கும். உத்தராம்சத்தில் வேதனை விசேஷமாயிருக்கும், தாய்க்குக் கொஞ்சம் சூதி தோஷ பயமுண்டாகும்.

(140) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி குரு சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய்க்குப்பீடை கொஞ்சம் உண்டாகும். ஜாதகனுக்கு மாந்த சுரத்தாலும், ரணத்தாலும், அம்மையாலும் பயமுண்டாகும்.

(141) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி உச்ச ராசியிலிருந்து, அல்லது கேந்திரத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்து லக்கின கேந்திரத்தில் குரு இருக்க, எட்டாம் பாவாதிபதி லாப ராசியை அடைந்திருந்தால் எல்லா தோஷங்களினின்றும் விலகி அறுபத்தைந்து வயதுடையவனாக ஜாதகனிருப்பான். இவனுக்கு இருபத்தோராவது வயதில் மிருக பயமும், முப்பத்திரண்டு வயதில் தேகபீடையும், நாற்பதாவதுவயதிலும் முப்பத்திரண்டாவது வயதைப் போலவேயும், ஐம்பத்திரண்டாவது வயதில் மிக பீதியும், அறுபதாவது வயது காலத்தில் அபமிருத்துவும் உண்டாகும். சாந்தி செய்தால் சுகமுண்டாகும். சாந்தி எண்ணெய்க் குடமும், நெய்யும் தானம் செய்து மிருத்துஞ்ஜய ஜபம் ஜெபித்து இரும்புத்தடி தானம் செய்து சிவார்ச்சனை பதினாயிரம் செய்து வைத்து, சனி சக்கிரத்தைத் தானம் செய்வதாலும், அபமிருத்து நிவாரணம் உண்டாகும். அந்த சாந்தி செய்தால் தேக சௌக்யம் சந்தேகமில்லாமல் உண்டாகும்.

(142) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி சூரியன், சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஒன்பதாம் பாவாதிபதி நீச ராசியிலிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சுகமுடையவனாயிருப்பான், சகோதரனில்லாதவன், ஒண்டியானவன். மாதுரு ஹீனமுள்ளவன், சகோதரி ஜனவிருத்தியுடையவன், இரண்டு, மூன்று சகோதரியை யுடையவன், சிவ பக்த மதாசாரமுடையவன், விஷ்ணு, சிவ பக்தியுடையவன், தேவப்பிராமண விசுவாச முடையவன், உபாயமுடையவன், பலவும் கற்றவன், சொற்ப கல்வியுமுடையவன், எப்போதும் வியவசாயம் செய்பவன், சுகமுடையவன், பாலிய வயதில் அற்ப சுகமுடையவன், காமீ, மத்திய, அந்திய வயதுகளில் யோகவிருத்தியுடையவனாவான்.

(143) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சூரியன் இருந்தாலும், அல்லது ஒன்பதாம் பாவத்தைச் சூரியன் பார்த்தாலும் ஜாதகனுடைய தகப்பன் மித்திர வஞ்சனை செய்யும் புக்தியுடையவன், வாசாலகன், சமர்த்துள்ளவன், யுக்தியுடையவன், கோபி, துஷ்டபுத்தியுடையவன், சீலமுடையவன், தயையுடன் கூடியவன், பரஸ்திரீ சங்கமமுடையவன், போகீ, வரவுமேல் வரவால் சந்தோஷமுடையவன், பணம் சம்பாதிப்பதில் சமர்த்தன், உபகாரீ, கெம்பீர புத்தியுடையவன், சூரியன் கின்னராம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அரசாங்கத்தில் சேவை செய்து

ஜீவிப்பான், எப்பொழுதும் விவசாயத்தில் ருசியுள்ளவன், அரசாங்கத்தில் புகழுடையவன், பிராமணப்பிரபுவால் சௌக்யமுடையவன், அரச மந்திரியால் சந்தோஷிக்கப்படுபவன், பயிர்தொழிலால் அதிக லாபமுடையவன், கிராமாதிகாரியாக ஆவான், அரசாங்க உத்யோகஸ்தரால் சுகம் அடைவான், பல கிராமங்களில் புகழடைவான்; அதன் பிறகு பாக்கியமடைவான், வாகன, உத்யோக லாபமுடையவன், அரச சன்மானத்தால் கீர்த்தியுடையவன், சில கிராமாதிகாரியாவான், குதிரை வாகனமுடையவன், வீட்டில் லக்ஷ்மிவிலாசமுள்ளவன், எப்பொழுதும் ராஜவசியமுடையவன், கிரக க்ஷேத்திரம் முதலிய சித்தியுடையவன், க்ஷேத்திர லாபமும், கீர்த்தி விருத்தியுமுண்டாகி அநேக கிராமங்களுக்கு அதிகாரியாவான், எப்பொழுதும் பணம் சாம்பாதித்தபடியே இருப்பான், வேறு அரசனாலும் சுகமடைவான், க்ஷேத்திரமூலம் அதிக சுகமுண்டாகும், தன தானிய அபிவிருத்தி உண்டாகும், நாற்கால் ஜீவ விருத்தியும் உண்டாகும், எப்பொழுதும் ராஜ ஸ்திரீயிடம் இஷ்டமுள்ளவன், வியாபாரத்தால் விருத்தி செய்யப்பட்ட பொருளுடையவன், புது வீடு கட்டுவான், மத்திய, அந்திய வயதில் கீர்த்தியுடையவன், எப்பொழுதும் தன் பிரபுவுக்கு இஷ்டமானதைச் செய்வான், வெளி தேசத்தில் கீர்த்தி சம்பிரமம் உண்டாகும், ஒன்பதாம் பாவத்தில் இரவி இருந்தாலும், பார்த்தாலும் வழி வழியாக யோக பங்கம் உண்டாய்விடும். ராஜ கோபம் உண்டாகும், விரயம் அதிகம் உண்டாகும். துன்பமும் மனோவியாதியும் உண்டாகும். அரச மந்திரி மூலம் சுகமுண்டாகும், வாகனாதிகளுடன் நல்ல யோகம் உண்டாகும், தர்ம விருத்தியுடையவன், வாவி, கிணர், குளம், நந்தவனம், பூமி முதலிய சித்தியுடையவன், சிவ கைங்கரிய சித்தியுடையவன், சொர்ண, வஸ்திர, பூஷண லாபமுடையவன், கொஞ்சம் பிராமணர்களுக்கும் தர்மம் செய்வான், வயோதிக வயதில் தர்மத்தைக் கிரகிப்பான், புத்திரனால் சுகமுடையவன், கிழ வயதிலும் தனத்தை அடைவான், தகப்பன் ஜாதகனுடைய ராகு தெசையில் மரிப்பான்.

(144) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் மூன்றும் பாவத்தில் இருந்து நவாம்சத்தில் செவ்வாய் நீசமடைந்து ராகு, கேதுவுடன் கூடியிருந்தாலும், ராகு, கேதுக்களால் பார்க்கப்பட்டு கதாம்சாவஸ்தையில் இருந்தாலும் ஜாதகனுடைய தாய்க்குச் சௌக்யமிராது, ஜாதகனுடைய மூத்த சகோதரி புத்திர, புத்திரியுடன் சுகத்துடன் கூடியிருப்பாள்,

பின் சகோதரி ஒருத்தி சுமங்கலியாகவே மரிப்பாள், அவள் ஜென் மாந்திர பாபத்தால் அற்பாயுசுடையவள்.

(145) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி குரு லக் கின கேந்திரத்திலிருக்கப் பிறந்தவன் பாலியத்தில் மந்தமான சுபாவ முடையவன், யௌவன வயதில் நல்ல தீக்ஷண்ணிய முள்ள புத்தியை யுடையவன், உபாயத்தால் கெட்டிக்காரனு யிருப்பான்.

(146) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி கேந்திர பாவத்திலிருந்தால் ஜாதகன் அரசாங்கத்தினு லும், க்ஷேத்திரத்தினுலும், பயிர்த் தொழிலாலும் பிழைப்பவனுவான்.

(147) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி செவ்வாய் ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் துராலோசனை செய்யும் புத்தியுடையவன், கெம்பீர முடையவன், தியாகியாவான்.

(148) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்து, பத்தாம் பாவாதிபதி கேந்தி ரத்திலிருந்து, ஒன்பதாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டால் ஜாத கன் சங்கீதப் பிரியன், ராஜ பக்தியுடையவன், தகப்பனிடத்திலும் அப்படியே பக்தியுடையவனு யிருப்பான்.

(149) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து இரண்டாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் இரண்டு மனைவியிடம் சுகமும், புத்திர புத்திரிகளையு முடையவனும் ஆவான், அன்றி சுயப்பிரபலமும், இரு பத்திரண்டாவது வயதில் பிதுரு மரணத்துக்குப் பின்பு கடன்காரர் கள் மூலமாகவும், சத்துருக்களாலும் தன நஷ்டமும், பயமும் உண்டு. நாற்கால் ஜீவன்கள் குறைவுண்டாகும், அரசாங்கத்தில் உபத்திரவ மும், பயமும் உண்டாகும், மூலதனத்துக்கு நாசமுண்டாவதால் வெகு வான கிலேசம் உண்டு. பயிர்த்தொழிலில் பலன் நஷ்டமும், வா வுக்கு மேல் சிலவும், அற்ப சுகமும் உண்டாகும், பிற்பாடு சுகம் உண்டாகும்.

(150) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி பன்னி ரண்டாம் பாவாதி புதனுடன் கூடியிருக்க, விரய பாவத்தில் சந்திர னிருந்தால் ஜாதகனுக்குப் புண்ணியம், பாபம் இரண்டும் சமமாயிருக் கும், ஜாதகனுக்கு ஜென்மம் க்ஷத்திரிய ஜனனமாகும்.

(151) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 79-24 கலை முதல் பாகை 79-36 கலை வரையிலும்) ஆகி லக்கின பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்து, சூத்திர காலத்தில் ஜெனித்தவன் சூத்திர ஜென்மமாகும். மஹா நதிப்பிராந்தியத் தேசத்தில் (பூர்வ பாகத்திலானல்) தேவாலயத்துடன் கூடிய இடத்தில் ஜனனமும், வாசமும் உடையவன். உத்தராம்சத்தில் நதிப்பிராந்தியத்தில் கிழக்குப் பாகத்தில் தாய் வீட்டில் ஜெனித்தவனுவான். ஜாதகன் சகோதரர்களுடன் கூடியவன்.

(152) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் சந்திரன் செவ்வாயுடன் கூடி குரு திருஷ்டி பெற்றிருந்தால் பிரசவ காலத்தில் ஜாதகன் தாய் கொஞ்சம் வேதனையடைவாள். உத்தராம்சத்தில் விசேஷ வேதனை உண்டாகும், குரு திருஷ்டி யிருந்தால் சுகமுண்டாகும்.

(153) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி சனியால் சந்திரன் பார்க்கப்பட்டால் தாய்க்குக் கொஞ்சம் பயம் உண்டாகும். ஜாதகனுக்குப் பால தோஷ பயமிருந்தாலும் தாயின் புண்ணிய வசத்தால் சுகமுண்டாகும்.

(154) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருக்க பத்தாம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் சகல தோஷங்களும் விலகி ஜாதகன் சுகமடைவான், மத்தியாயுள் யோகமுடையவன், அறுபத்தொரு வயதுடையவன், முப்பதாவது வயதில் ஜாதகனுக்கு தேக பீடையுண்டாகும்.

(155) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி சூரியன் லாப பாவத்தில் தன் உச்ச ராசியில் இருக்க ஒன்பதாம் பாவத்தில் குரு, ராகுவுடன் கூடி யிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சௌக்ய முண்டாகாது. தன் பிதா மத்திய வயதுடையவன், விஷ்ணு பக்த மதத்தை அடைபவன், தேவப்பிராமண விஸ்வாசி, தன் பிதா நடுநிலையான பாக்கியமுடையவன், பாலியத்தில் தரித்திரத்தை அடைந்தவன், மத்தியாந்தியத்தில் சௌக்யமுடையவன், பிதா சேவகத் தொழில் செய்பவன், மிலேச்சர் மூலம் சுகமுண்டாகும், எழுத்து வேலையினல் மிலேச்ச காரியார்த்தமாக தீவாந்தரத்தில் சஞ்சாரம் செய்வான். அதன் மூலம் புகழுடையவனுவான், தனம் சம்பா

திப்பதில் சமர்த்தன், வயோதிக வயதில் தர்மம் செய்வான், தகப்பன் ஜாதகனுடைய ஜென்ம தெசையில் மரிப்பான்.

(156) ஜென்ம லக்கின்ம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி சந்திரன் லக்கின பாவத்திலிருக்க நான்காம் பாவாதிபதி லாப பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் விசேஷ சௌக்கிய முடையவள், குணமுள்ளவள், சுத்தியானவள், கணவனிடம் பக்தி, குணத்துடன் கூடினவள், அன்னதானம் செய்வதில் பிரீதியுடையவள், ஜாதகனுடைய விபத் தெசையில் தாய் மரித்துவிடுவாள்.

(157) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி தன் உச்ச ராசியில் இருக்க செவ்வாய் கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் இரண்டு சகோதரர்களேயும், கொஞ்ச காலம் சுகமுடைய ஒரு சகோதரியையும் உடையவன், மூத்த சகோதரன் பிரசித்தனுகவும், பணம் சம்பாதிப்பதில் சமர்த்தனுகவும் இருப்பான். ஜாதகன் பல கிராமங்களிலும் புகழுடையவன், வியாபாரத்தால் பணம் சம்பாதிப்பவன், நர வாகனத்துடன் கூடியவன், மூத்த சகோதரன் நல்லயோக முடையவன், மத்தியாரம்ப வயதுடையவன். ஜாதகனுடைய சம்பத் தெசையில் மரிப்பவனுகிருன்.

(158) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி மங்கள யோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன் கருப்பு நிறம் உள்ளவன். சம ஆகிருதி உடையவன், சூத்திர ஜென்மத்தில் பிறந்தவன், நல்ல அறிவாளி, சூட்டுத் தேகி, நல்ல லக்ஷணமுடையவன், பித்தம் நிறைந்தவன், கொஞ்சம் பிதுரு சௌக்கியமுடையவன், விஷ்ணு பக்தி மதத்தை அடைபவன், பாலியத்தில் ஜாதகனுடைய பிதா மரித்துவிடுவான். ஜாதகன் தன் மூத்த சகோதரனுல் சுகமடைவான், தாய் சௌக்கியம் விசேஷ முடையவன், கல்வி அறிவுடைய விவேகியாவான்.

(159) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் குரு, ராகுவுடன் கூடியிருக்கப் பிறந்தவன் கொஞ்சம் அனுசாரமுடையவனுவான்.

(160) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் குரு, ராகுவுடன் கூடியிருக்கப் பிறந்தவன் பாலியத்தில் தரித்திரத்தையும், கிலேசத்தையும் அடைவான், மூத்த சகோதரனே யடையப் பட்டவன், பாலியத்தில் தரித்திர யோக முடையவன், மூத்த

சகோதரனால் சௌக்கியத்தை யடைவான், உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குச் சுகமும், பாக்கிய யோகமும் உண்டாகும்.

(161) ஜென்ம லக்கினம் மிதுனம் (துருவாம்சம்) ஆகி ஐந்தாம் பாவம் பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டிருந்து அந்த ஐந்தாம் பாவாதிபதி இரட்டைப்பட்ட ராசியிலிருந்தால் ஜாதகனுக்கு முதலில் ஸ்திரீ பிரஜையும், பிறகு புருஷப் பிரஜையும் ஜெனிக்கும்.

(162) ஜென்ம லக்கினம் மிதுனம் (சௌம்யாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 76-24 கலை முதல் பாகை 76-36 கலை வரையியிலும்) ஆகி லக்கின பாவத்தில் செவ்வாயிருந்தாலும், லக்கின பாவத்தைப் பார்த்தாலும் பிரசவத்தில் ஜாதகன் தாய்க்கு வேதனை கொஞ்சமாயிருக்கும்.

(163) ஜென்ம லக்கினம் மிதுனம் (சௌம்யாம்சம்) ஆகி சந்திரன் நீசராசியில் பாபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் பீடையும், ஜாதகனுக்கு பாலாரிஷ்ட பீடையும், நிச்சயமாக ஜென்ம தெசையில் உண்டாகும். முன் புண்ணியவசத்தால் சிறிய தகப்பனால் சுகமுண்டாகும்.

(164) ஜென்ம லக்கினம் மிதுனம் (சௌம்யாம்சம்) ஆகி லக்கின பாவாதி சுக்கிரனுடன் கூடி கேந்திரத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டாலும், குரு பதினொராமிடத்தில் இருந்தாலும் ஜாதகனுக்குச் சகல தோஷமும் நீங்கி சுக முண்டாகும். ஜாதகன் அறுபத்தைந்து வயது பூர்ணமாக வுடையவனாவான்.

(165) ஜென்ம லக்கினம் மிதுனம் (ஸௌம்யாம்சாம்) ஆகி சூரியன் கேந்திரத்தில் சுபருடன் கூடியிருந்து, ஒன்பதாம் பாவாதிபதி சுபராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சௌக்கியம் உண்டாகும்.

(166) ஜென்ம லக்கினம் மிதுனம் (ஸௌம்யாம்சம்) ஆகி சந்திரன் நீச்ச ராசியில் பாபக் கிரகத்துடன் கூடியிருந்து, நான்காம் பாவம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் சௌக்கியம் உண்டாகும், தாய் குணவதியாய் கணவனிடம் பக்தியுடன் கூடி யிருந்தாலும் கொஞ்சம் தோஷமுடையவள், சுமங்கலியாகவே மரிப்பாள்.

(167) ஜென்ம லக்கினம் மிதுனம் (சௌம்யாம்சம்) ஆகி மூன்றும் பாவமானது குருவால் பார்க்கப்பட்டு செவ்வாய் கேந்திரத் திரி

கோணங்களிலிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரனை உடையவன். வேறு சிலர் சகோதரர்கள் கிடையாது என்று சொல்லுகிறார்கள். மாற்றுந்தாய் சகோதரனிருப்பான், அவனால் சுகமுண்டாகும்.

(168) ஜென்ம லக்கினம் மிதுனம் (சௌம்யாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருக்க, குரு, செவ்வாயின் க்ஷேத்திரத்தில் இருந்து, ஐந்தாம் பாவத்தைச் செவ்வாயால் பார்த்தால் ஜாதகனுக்கு மரித்த குழந்தைகள் சில உண்டாகும். இரண்டு, மூன்று நாசமாயினும் ஜாதகனுக்கு இரண்டு புத்திரர் மூலம் சுகமுண்டாகும். பெண்களும் அப்படியே. ஆனாலும் வேறு சிலர் அதிகமும் உண்டாகலாம் என்றும் சொல்லுகிறார்கள்.

(169) ஜென்ம லக்கினம் மிதுனம் (சௌம்யாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தைக் குரு பார்த்தால் ஜாதகனுக்கு மனைவி வம்சத்தில் சுகமுண்டாகும். ஜாதகனுடைய மாமனுக்கு மூன்று மனைவிகள் உண்டாவார்கள், ஜாதகன் அந்திய காலத்தில் நற்புத்திரனை உடையவனாவான்.

(170) ஜென்ம லக்கினம் மிதுனம் (சௌம்யாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி நீச ராசியில் பாபக்கிரகத்துடன் கூடியிருந்தால் இரண்டாம் பாவாதிபதி தெசையில் பூர்வ பாகத்தில் சமபலயோகமும், உத்தரபாதியில் சுகமும் உண்டாகும், அந்த தெசை ஐந்தாம் தெசையாகி வரும்போது சகோதரர்களுக்குள் கலகம் உண்டாகி பங்குப் பிரிவினையுண்டாகும். ஜாதகன் புத்திரன் மூலமாக சுகம் அடைவான்.

(171) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 88-36 கலை முதல் பாகை 88-48 கலை வரையிலும்) ஆகி சந்திரன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும், பிரசவத்தில் ஜாதகன் தாய்க்கு வேதனை அதிகம் உண்டாகும். உத்தராம்சத்தில் வேதனையுடன் சூதி தோஷ பயமும் உண்டாகும். பூர்வ பாகத்தில் ஜனனமாகி சந்திரன் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் பாதை சிறிது கொஞ்சமாயிருக்கும். ஜென்ம தெசையில் அல்லது சந்திர தெசையில் தாய்க்குப் பீடையுண்டாகும். ஜாதகனுக்கு ஜென்ம தெசையில் பாலரோகத்தால் பீடையுண்டாகும்.

(172) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி சூரியன் இரண்டாம்பாவத்தில் சுபக்கிரகத்துடன் கூடியிருக்க, ஒன்பதாம்

பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுடைய பிதா அற்ப சுகமுடைய வன். தன் பிதா விஷ்ணு பக்தியுடையவன், உத்தியோகத்தால் ஜீவனம் செய்பவனுவான்.

(173) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அரசாங்கத்தில் புகழுடையவன், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், ஆயினும் மத்திய வயதில் கீர்த்தி உண்டாகும்.

(174) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருக்க சனியுடன் சந்திரன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் அற்ப சுகமுடையவள். தன் தாய் கணவனிடம் பக்தியுடையவள், இந்த ஜாதகனுடைய சம்பத் தெசையாகி வரும்போது சந்திர தெசையில் தாய் மரணமடைவாள் என்று சிலரும் செவ்வாய் தெசையில் மரணமடைவான் என்று வேறு சிலரும் சொல்லுகிறார்கள்.

(175) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி மூன்றும் பாவம் சுபர்களால் பார்க்கப்பட்டிருந்து மூன்றும் பாவாதிபதி அம்சத்தில் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகன் பின் சகோதரமில்லாதவன். ஜாதகனுடைய மூத்த சகோதரன் பிரசித்தியுடையவன். ஜாதகன் எட்டுபேர்கள் அல்லது பத்து பேர்கள் உடன் பிறந்தவனுவான்.

(176) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி செவ்வாய் ராகு, கேது இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் கொஞ்சம் சுகமுள்ளவனுயிருப்பான். ஜாதகன் ஒரே சகோதரியுடையவன், மற்ற சகோதரர்கள் நாசமடைவார்கள். மூத்த சகோதரன் மட்டும் அரசாங்கத்தில் புகழுடையவனுகி, நல்ல யோகமுடையவனுயிருப்பான், வாகனம் முதலிய நல்ல யோகமுடையவன், அரசனுல் சன்மானிக்கப்படுவான், வாசாலகனுகவும், பிரசங்கம் செய்பவனுகவுமிருப்பான், முன் ஜென்மாந்திர பாபவசத்தால் அற்பாயுளாய் மரிப்பான்.

(177) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி சனி பத்தாம் பாவாதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் அரசமந்திரியாவான்.

(178) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் குடும்பியாயும், ஜன ரக்ஷகனுகவும் இருப்பான்.

(179) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி ஏழா ம்பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் மனைவி மூலமாக விசாரமு டையவன். அந்த சப்தம பாவாதிபதி பலமுடையவனாகி ஜாதகத்தில் எங்கிருந்தாலும் இரண்டு மனைவியுடையவனென்று வாக்காய் சொல் லப்படுகிறது. அப்படியில்லாவிடில் தன் மனைவிக்கு கர்ப்பகாலத்தில் சங்கையால் பீடிக்கப்படுவாள்; தன் மனைவியின் சோகத்தாலும், துக் கத்தாலும் ஜாதகன் பரஸ்திரீ கமனம் செய்பவனாவான்.

(180) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி ஐந் தாம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்து குரு, ராகுவுடன் கூடியி ருந்தால் ஜாதகனுக்கு கால விளம்பத்தில் புத்திர உற்பத்தி உண்டா கும். முதலில் பெண் குழந்தை ஜெனிக்கும். பிறகு ஆண் குழந்தையும் பிறக்கும்; எப்பொழுதாவது அந்த புத்திரன் காலவசத்தால் உண்டா வான்.

(181) ஜென்ம லக்கினம் மிதுனம் (நளினி அம்சம்) ஆகி விரய பாவாதிபதி சுபக்கிரகத்துடன் கூடி குருவுடன் ராகு கூடியிருந்து ஏழாம்பாவத்தில் சனியிருந்தால் ஜாதகனுடைய புண்ணியம், பாவம் இரண்டும் சமமாயிருக்கும்.

(182) ஜென்ம லக்கினம் மிதுனம் (மீனம்சம்) ஆகி லக்கின பாவத்தை குரு பார்த்தாலும், குரு ஷஷ்டி பாவத்தில் இருந்தாலும் சந் திரனும் குருவால் பார்க்கப்பட்டு சுக்கிரன் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் ஜாதகன் எல்லா தோஷங்களினின்றும் நீங்கி சுகத்தை அடைவான்.

(183) ஜென்ம லக்கினம் மிதுனம் (மீனம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி ஸ்ரீதராம்சத்தில் இருக்க, எட்டாம் பாவாதிபதி சுபராசி யிலிருந்து நிர்மலாம்சத்தில் சனியுமிருந்தால் சம்சய மில்லாமல் ஜாத கன் ஆயுள் விருத்தியுடையவன், கொஞ்சம் குறைவான மத்தியாயுளு டையவன், ஆயினும் அறுபத்தொரு வயதுடையவனாவான்.

(184) ஜென்ம லக்கினம் மிதுனம் (மீனம்சம்) ஆகிசூரியன் மாந் தியுடன் கூடியிருந்தாலும், மாந்தியால் சூரியன் பார்க்கப்பட்டாலும் சூத்திர காலத்தில் ஜெனித்தவன் நல்ல சகோதரர்களையுடைய சூத்திர னாவான்.

(185) ஜென்ம லக்கினம் மிதுனம் (மீனம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி லாப ராசியிலிருந்தால் விஷ்ணு பக்தியுடைய குலத்தில்

ஜெனித்து வெகு காலம் நன்றாக வாழ்வான். ஜாதகனுடைய தகப்பன் விஷ்ணு பக்த மதத்தை யடைந்து மத்தியாயுளுடையவனாவான்; பாவியத்தில் தரித்திரத்தை யடைந்து மத்திய, அந்திய வயது காலத்தில் சௌக்கிய மடைபவனாயிருப்பான்.

(186) ஜென்மலக்கினம் மிதுனம் (மீனம்சம்) ஆகி தன்உச்சத்தில் இருக்கப்பட்ட ஒன்பதாம் பாவாதிபதியாகிய சனியால் சுக்கிரன் பார்க்கப்பட்டால் வயதின் மத்தியிலும், விருத்தாப்பிய வயதிலும் ஜாதகனுடைய தகப்பன் தன் பிதாவைக்காட்டிலும் பிரசித்தி அடைவான். எழுதுவதினால் ஜீவிப்பான். மிலேச்சப் பிரபுவால் தீவாந்திரங்களில் சஞ்சாரம் செய்து ஜீவிப்பான்.

(187) ஜென்ம லக்கினம் மிதுனம் (கலுஷாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 80-48 கலை முதல் பாகை 81-00 கலை வரையிலும்) ஆகி லக்கின பாவாதிபதி தன் உச்சராசியில் எட்டாம்பாவாதிபதியுடன் கூடியிருக்க சந்திரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் தோஷங்கள் விலகிச் சுகமடைவான், மத்தியாயுள் யோகமுடையவன், எழுபத்து நான்கு வயதுவரை ஜீவிப்பான்.

(188) ஜென்ம லக்கினம் மிதுனம் (கலுஷாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கொஞ்சம் பஞ்சாங்கத்தொழிலாலும், புரோகிதம் செய்துவைப்பதாலும் ஜீவனம் செய்வான், க்ஷேத்திர மூலம் ஜீவிப்பான். பலஜாதிகளாலும் சுகமடைவான், பணம் சம்பாதிப்பதில் சமர்த்தன், எப்பொழுதும் சூத்திரர்களால் ஆச்ரயிக்கப்படுபவன். சூத்திர திரவியத்தால் ஜீவிப்பான்.

(189) ஜென்ம லக்கினம் மிதுனம் (கலுஷாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஜோதிட சாஸ்திரத்தில் வெகு சிரமப்படுவான்; பரஸ்திரீ சேர்க்கையடைவான், ஆயினும் பச்சாத்தாபத்தால் சுத்தமாய் விடுவான், பல கிராமங்களிலும் புகழடைந்து பிரபு மூலமும் பிரசித்தியடைவான். ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய சம்பத் தெசையில் மரித்து விடுவான்.

(190) ஜென்ம லக்கினம் மிதுனம் (கலுஷாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்சராசியில் மூன்று கிரகங்களுடன் கூடி கேந்திர ராசியிலிருக்க சுக காரகனான சந்திரன் பாபியுடன் கூடியிருந்தாலும்

ஜாதகனுடைய தாய்க்கு விசேஷ சௌக்கியமுண்டாகும். தாய் குணவதி, சாது, தன் புருஷனிடம் பக்தியுடையவள், அன்னதானம் செய்வதில் பிரியமுள்ளவள், சாந்தமுள்ளவள், வைதவ்வியத்தால் துக்கத்தையுடையவளாவாள்.

(191) ஜென்ம லக்கினம் மிதுனம் (கலுஷாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் ராகு இருந்து இரண்டாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டு களத்திரகாரகன் சுக்கிரன் நீசராசியிலிருந்தால் விவாகத்துக்கு இடைஞ்சல் உண்டாகும். இரண்டு மூன்று தடவைகளில் பிரயத்தனப்பட்ட பின்பு விவாகயோகம் உண்டாகும். சுக்கிரன் அதி மித்திராம்சத்தில் இருந்தால் ஒரே தாரமென்று சிலர் சொல்லுகிறூர்கள்.

(192) ஜென்ம லக்கினம் மிதுனம் (சமாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 76-12 கலை முதல் பாகை 76-24 கலை வரையிலும்) ஆகி லக்கின பாவாதிபதி நீசராசியிலிருந்து நான்காம் பாவத்தில் குரு இருந்தால் நதிப்பிராந்தியத்திலும் ஜாதகனுடைய ஜெனனமானது பூர்வபாகத்திலானல் அக்கிரஹாரத்திலும், உத்தராம்சத்தில் புண்ணிய க்ஷேத்திரம் இல்லாத சிறிய கிராமத்திலும் உண்டாகும்.

(193) ஜென்ம லக்கினம் மிதுனம் (சமாம்சம்) ஆகி லக்கினபாவாதிபதி சுக்கிரனுடன் கூடி கேந்திராதிபதியுடன் கூடியிருந்தாலும், கேந்திராதிபதியால் பார்க்கப்பட்டாலும், எட்டாம் பாவாதிபதி மித்திர ராசியிலிருந்தால் ஜாதகனுக்கு எல்லா தோஷங்களும் விலகி ஜாதகன் சுகமடைவான்.

(194) ஜென்ம லக்கினம் மிதுனம் (சமாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி வாருணும்சத்தில் இருக்க எட்டாம் பாவாதிபதி கோகிலாம்சத்தில் இருந்து சனி திரிம்சாம்சத்தில் ஜெனித்தவனுக்கு எழுபத்தேழு வயதுண்டாகும்.

(195) ஜென்ம லக்கினம் மிதுனம் (ஸமாம்சப்) ஆகி சனி திரிம்சாம்சத்தில் பாபகேஸரீ யோகத்தில் ஜெனித்தவன் கருப்பு நிறமுடையவன், குணமுடையவன், பித்ததேகி, மதுப்பிரீதியுடையவன், சாத்வீகன், குணம் நிறம்பினவன், தாய்க்குப்பிரியன், தாய்க்கு ஹிதத்தைச் செய்பவன்.

(196) ஜென்ம லக்கினம் மிதுனம் (ஸமாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி நீசனுகி யிருந்தால் ஜாதகன் கல்வி சொற்ப முடையவன்,

க்ஷேத்திர மூலத்தால் ஜீவிப்பவன், சந்நியாசி மூலம் விசேஷ மடைவான்.

(197) ஜென்ம லக்கினம் மிதுனம் (சமாம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் சுக்கிரன், புதன் சேர்ந்து இருந்தால் ஜாதகன் குருவினுடைய திரவியம் கொஞ்சம் அடைவான், ரோகியாகவும் விதேச வாசியாகவும் ஆவான், மருந்து மூலம் கொஞ்சம் சுகமுடையவனாகவும் இருப்பான். குரு இருக்கப்பட்ட இடமறிந்து அவனால் கொஞ்சம் சுகமுடையவனாவான்.

(198) ஜென்ம லக்கினம் மிதுனம் (பிரபாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 78-12 கலை முதல் பாகை 78-24 வரையிலும்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ராகுவால் நன்கு பார்க்கப்பட்டால் ஜாதகன் களத்திராந்தரம் யோகமுடையவன், சந்தன, புஷ்ப, வஸ்திரப் பிரியமுடையவன், அன்னிய ஸ்திரீ சேர்க்கை யுடையவன், யுக்தி சாதுரியமுடையவன், வாசாலகனாகவும் இருப்பான், கொஞ்சம் லோப குணமுள்ளவன், வக்கீல் தொழில் செய்வான், குருவுக்குப் பிரியமானவன்.

(199) ஜென்ம லக்கினம் மிதுனம் (பிரபாம்சம்) ஆகி பிறந்த ஜாதகனுக்கு ஒன்பதாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் ராஜ துவேஷ ஜனங்களுக்கு விரோதமான காரியம் செய்வான், அரசனால் சன்மானிக்கப்படுவான், கீர்த்தியுடையவன், வாகனம் முதலிய நல்ல போகமுடையவன், அன்னிய தேசங்களிலும் புகழுண்டாகும். வெகு காரிய சமர்த்தன், தன லாபமுடையவன், நீசராஜ்யத்தில் அரசனுக்கனுகூலமான காரியம் செய்வான், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், வஸ்திர, வாஹண, பூஷணங்களுடையவன், பலவழிகளிலும் தனம் சம்பாதிப்பான், மத்திய அந்திய வயதுகளில் கொண்டாடப்பட்ட புகழுடையவன், வயோதிகவயதில் புத்திரன் மூலமாக சுகமடைவான், தர்மம் செய்வான், சாந்த குணமுடைய தகப்பன் ஜாதகனுடைய பிரத்தியத் தெசையில் மரிப்பான்.

(200) ஜென்ம லக்கினம் மிதுனம் (பிரபாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி தன்னுச்ச ராசியில் கேந்திரத்தில் இரவியுடன் கூடி சுக காரகனான சந்திரன் விரய பாவத்தில் சனி, ராகு இவர்களுடன் கூடியிருந்தாலும், இவர்களால் பார்க்கப்பட்டாலும் சந்திரன் காதாம்சாவஸ்தையிலுமிருக்க ஜாதகனுக்குத் தாய் சௌக்கியமுண்டாகாது,

ஜாதகன் வளர்ப்புத் தாயால் சௌக்கியத்தை யடைவான். தாய்ப் பாட்டி மூலம் ஜாதகனுக்கு சுகம் உண்டாகும். ஜாதகனுடைய தாய் குணவதி, பூஜிக்கத் தக்கவள், கணவனிடம் பக்தி யுடையவள், அன்னதானப் பிரியமுள்ளவள், சாது, வம்ச பாக்கிய விருத்தியுடையவள். தாய் ஜாதகன் பிறந்ததெசையில் பிரசவத்தில் மரித்துவிடுவாள்.

(201) ஜென்ம லக்கினம் மிதுனம் (பிரபாம்சம்) ஆகி ஏழாம் பாவாதி பாபக் கிரகத்துடன் கூடி யிருந்து, சந்திரனும் பாபக் கிரகத்துடன் கூடியிருந்தால் வேறு மனைவியிடம் பலன் என்று சிலரும், ஒரே தாரம் என்று சிலரும் சொல்லுகிறார்கள்.

(202) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியம்சம்) அதாவது லக்கினஸ்புடம் பாகை 75-48 கலை முதல் பாகை 76-00 கலை வரையிலும்) ஆகி நான்காம் பாவாதிபதி சனியுடன் கூடியிருந்தாலும், நான்காம் பாவத்தில் சூரியன் இருக்க ஐந்தாம் பாவத்தில் சனியிருந்தாலும் ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்டமுண்டாகும்.

(203) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாகரஷஷ்டியம்சம்) ஆகி குரு கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் பின் சகோதரர்களுடன் ஜாதகன் கூடியிருப்பான்.

(204) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாகரசஷ்டியம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பாபராசியிலிருந்து பாபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகன் வனப்பிராந்தியத்தில் பிறந்தவனாவான், அல்லது இருளடைந்த வனப்பிராந்தியத்தில் மலைப்பிராந்தியத்தில் பிறந்தவனாவான். உத்தராம்சத்திலானால் நதிப்பிராந்தியத்தில் ஜெனித்தவனாவான்.

(205) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாகரசஷ்டியம்சம்) ஆகி லக்கின பாவத்தில் சந்திரனும், தனபாவத்தில் பாபக் கிரகமும், ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயுமிருந்தால் ஜாதகனுக்கு பாலாரிஷ்ட பயம் உண்டாகும். இருந்தாலும் சீக்கிரம் ஆரோக்யமுண்டாகும்.

(206) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாகரசஷ்டியம்சம்) ஆகி ஐந்து, ஒன்பது முதலிய பாவங்களில் பாபக்கிரக மிருந்தால் ஜாதகனுக்கு கொஞ்சம் தேக பீடையுண்டாகும், பிதாவுக்கும் கொஞ்சம் பீடையுண்டாகும், ஆயினும் சீக்கிரமாக ஆரோக்கியமுண்டாகும், சுகமும் உண்டாகும்.

(207) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாகரசஷ்டியம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் செவ்வாய் இருந்தால் ஜாதகன் ஜெனித்த வரு

ஷத்தில் பிதாவுக்கு வியாகூலமுண்டாகும், கொடுக்கல் வாங்கலில் மனஸ்தாபமும், தன் பிதாவுக்குக் கிலேசமும் உண்டாகும். பிதாவுக்கு பல தேசங்களில் சஞ்சாரமும், அரச விரோதமும், சிறைச்சாலை பய மும், அரசனால் உபத்திரவமும் உண்டாகும். பிறகு சுகமுண்டாகும். இது செவ்வாயின் பலன்.

(208) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாகரசஷ்டியம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் ராகுவுடன் கூடியிருந் தால் தன் பிதா சாத்துவீக முடையவன், ஸ்ரீமானானவன், விஷ்ணு, சிவ பக்தியுடையவன், திட்டமாய்ப் புசிப்பவன், இரகசிய மனதுடை யவன், காமீ, கொஞ்ச காலம் சுதந்தரமில்லாதவன், கொஞ்சம் லோப குணமுடையவன், இவனுடைய சாதன வருஷத்துக்குப் பிறகு பிதா வுக்குக் கொஞ்சம் சுகமுண்டாகும்.

(209) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாகரசஷ்டியம்சம்) ஆகி புத்திர பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருந்து செவ்வாயால் பார்க்கப் பட்டால் ஜாதகனுக்கு முதலில் ஸ்திரீப் பிரஜை பிறக்கும். பிறகு புத்திரன் பிறந்தால் அந்த புத்திரன் மரித்துவிடுவான். அதற்குப் பிறகு இருபத்தேழாம் வயதில் அல்லது ஜாதகனுக்கு இருபத்தாரா வது வயதிலேயே புத்திரன் பிறப்பான். ஆயுள் தீர்க்கமுடைய இரண்டு புத்திரனும், மூன்று புத்திரிகளும் பிறப்பார்கள். மற்றவை மரித்துவிடும்.

(210) ஜென்ம லக்கினம் மிதுனம் (கமலாகரசஷ்டியம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதியிருக்கப்பட்ட ராசியிலிருந்து உண்டாகும் மாலிகா யோகத்தில் அல்லது எட்டாமிடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட மாலிகா யோகத்தில் எட்டாம் பாவத்தில் பாபக்கிரகமிருந்தால் ஜாத கனுக்கு இருபத்தேழு வயதுக்குப் பிறகு பாக்கியம் உண்டாகும். முப்பது வயதுக்கு மேல் இருந்து விசேஷ யோகமுண்டாகும், அர சாங்க மூலம் விசேஷ அதிக பலன் கிடைக்கும், பிரபல உத்தியோக பாக்கியமுண்டாகும்.

(211) ஜென்ம லக்கினம் மிதுனம் (ஸௌதாம்சம்) ஆகி சந்திர னுக்கு ஆறில் குருவிருந்து உண்டாகிற சகடயோக ஜாதகனுக்கு மனைவி சௌக்கியம் உண்டாகாது.

(212) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியம்சம்) ஆகி லக் கின பாவாதிபதி சுபராசியிலிருந்து சுபக்கிரகத்துடன் கூடியிருந்தால்

புண்ணிய க்ஷேத்திரத்தில் மஹாநதிப் பிராந்தியத்திலுள்ள நகரத்தில் ஜாதகனுடைய ஜெனனமானது உண்டாகும்.

(213) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் புத திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன் ரூபமுடையவன், நல்ல புகழுடையவன், அழகுடையவன், வசியமுள்ளவன், தாமரை இதழ்போன்ற கண்களுடையவன், கருப்பு நிறமுடையவன், குணத்தைக் கிரகிப்பவன், க்ஷேமமுடையவன், எல்லாவற்றையும் தூஷிப்பவன் சங்கீதப் பிரியமுடையவன், காமீ, பரஸ்திரீ கமனம் செய்வான். இரண்டு தாரமுடையவன், அன்னிய பாஷையில் வெகுவாய் சிரமப்படுவான், கொஞ்சம் மூர்க்க குண முடையவன், சீக்கிரத்தில் கோபமடைவான், சீக்கிரத்தில் சாந்தியடைவான், பரோபகாரம் உள்ளவன், தியாகம் செய்வான், பந்து ஜனங்களிடத்தில் பிரியன், எப்போதும் அநாசாரம் உடையவன், பணம்சம்பாதித்தபடியே யிருப்பான், மூத்த சகோதரனால் சுகமடைவான், தகப்பனுக்குப் பிரியத்தைச் செய்வான், நல்ல அறிவாளியாயுமிருப்பான்.

(214) ஜென்ம லக்கினம் மிதுனம் (சாங்கரியாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி நீச ராசியிலிருந்தால் ஜென்ம தெசையில் நான்காவது வருஷத்தில் அல்லது ஸம்பத் தெசையில் சுய புக்தியில் ஜாதகனுக்கு மாந்தஜுரபயமும், வைசூரி ஜுரபயமும் கொஞ்சம் உண்டாகும், சுக்கிரன் மேற்படி நீசமடைந்த குருவுடன் கூடியிருந்தால் சௌக்கியமுண்டாகும். கொஞ்சம் சாந்தியும் செய்யவேண்டும், குருப்ரீதியும் ஜெபமும் செய்து சனிப்பிரீதியும் செய்யவேண்டும், வெள்ளியால் சந்திரபிம்பம் செய்து அதை விதிப்படி பூஜித்து குடும்பியான கற்றறிந்த ஜோதிஷனுக்கே அக்குழந்தையின் ஜென்ம நக்ஷத்திரத்தில் தானம் செய்தால் பாலாரிஷ்டம் நிவர்த்தியாகி க்ஷேமம் உண்டாகும்.

(215) ஜென்ம லக்கினம் மிதுனம் (மாயாம்சம்) ஆகி பூர்வபாவத்தில், லக்கின பாவாதிபதி தன்னுடைய உச்சராசியிலிருக்க சூத்திர காலத்தில் ஜெனித்தவன் இரண்டாவது கர்ப்பத்தில் அல்லது மூன்றுவது கர்ப்பத்தில் தூர்க்காரண்ணிய மலைப் பிராந்திய சமீபத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் பெரிய கிராமத்தில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பார்த்த வீட்டில் தன் பிதா சமீபத்திலில்லாத போது சூத்திர வம்சத்தில் தேவாலயத்துடன் கூடிய கிராமத்தில் சகோதர ஹீனனாக ஜெனித்தவனாவான். உத்திராம்சத்தில் ஜெனனமானால் நதி தீரத்தில் சிறிய கிராமத்தில் வடக்கு தெற்கு வீதியில் கிழக்கு பாகத்திலுள்ள வீட்டில் தாய் வீட்டில் ஜாதகன் ஜெனித்தவனாவான்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் மிதுன லக்கினத்திற்கு 215.விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட மிதுனலக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் மிதுன லக்கின பலனின் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்றுஅறியவும்.

கடக லக்கின ஜாதகம்.

——(***)——

(1) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 92-24 கலை முதல் பாகை 92-26 கலை வரையிலும்) ஆகி லக்கினத்தில் சுக்கிரனிருந்து இரண்டில் சந்திரனிருந்தால் ஜாதகன் அதிக போகமுடையவன், அரசர்க்கரசன்; வெளுத்த, பருத்த தேகமும், பரந்த கண்களும் உடையவன், புத்திமான்; மிகுந்த பூமி பொருளுடையவன்; மூன்று வாகன யோக முடையவன், நரவாகன பாக்கியமுடையவன். நீசப் பிரபுவால் சுகமுண்டு. உத்தியோக ஜீவனம் உடையவன், வேறு பாஷைகள் அறிந்தவன்; தேசக்கிராமாதிபன்; சூட்டு தேகமுடையவன்; வித்தையுடையவன்.

(2) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி இரண்டாமதிபனான சூரியன் புதனுடன் கூடில் ஜாதகன் வாசாலகன்; சாதுர்ய யுக்தியுடையவன்; யுக்தா யுக்த விசேஷ மறிந்தவன், பல தேசத்தில் பிரசித்தியுடையவன்; காவிய நாடக சாரமறிந்தவன்; வேதசாஸ்திர புராணங்கள் அறிந்தவன்; சமஸ்கிருதம் பிரியமாய் பேசுபவன்; பிரபுக்கள் நேசத்தால் பணம் சம்பாதிப்பவன்.

(3) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி இரண்டாமிடம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வித்தைக்குத் தடையுண்டு; பல்லில் இரத்தப் பெருக்குடையவன்; தந்தவாயு பீடையுடையவன்.

(4) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி மூன்றில் ராகு இருந்து சகோதரகாரகனான செவ்வாய் பன்னிரண்டில் இருந்தால் ஜாதகனுக்கு மூத்த சகோதரமில்லை. இளைய சகோதரர் ஒருவர் அல்லது இருவருண்டு. சகோதரிகள் இருவர் அல்லது மூவர்உண்டு; இளையவன் பயிர்தொழில் முதலிய வீட்டுவேலை செய்வான்.

(5) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி மூன்றுமதிபனான புதன் செவ்வாயுடன் கூடி இருந்தால் ஜாதகன் அதிக தைரியவான்; அதிக தனவான்; பதினுயிரத்துக்கு அதிக தனமுடைய பிரபுத் தன்மையை யுடையவன்; குதிரை ஏறுவதில் சமர்த்தன்; சங்கீதப் பிரியன், குணமுடையவன்.

(6) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி நான்காமதிபனான சுக்கிரன் லக்கினத்தில் மகராம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் புண்ணியவதி; நற்குணமுடையவள்; நற்செய்கை ஆசாரமுடையவள்; வெளுத்த காந்தியுடையவள்; தீர்க்காயுளுடையவளாய் வெகு காலம் சுமங்கலியாக இருப்பாள்.

(7) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி ஐந்தாமதிபனான செவ்வாய் மிதுனத்திலிருந்து, விருச்சிகத்தில் சனி இருந்து, புத்திரகாரகனான குரு சூரியன் ராசியிலிருந்து, மகராம்சத்தில் சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகன் புத்திரனற்றவன்; தத்து புத்திரனால் சந்ததியுண்டாகும்; கஷ்டத்தால் இரண்டு அல்லது மூன்று பெண்சந்ததியுண்டாகும், துர்த்தேவதை பீடையால் புருஷ சந்ததி இல்லை, அரசமரப் பிரதிஷ்டை எண்பத்தொரு சக்கரதானம், பொன் சந்தான கோபால மூர்த்திப் பிரதிமை தானம் முதலிய சாந்திகளால் காலாந்தரத்தில் வேறு மனைவியிடம் புத்திரலாபமுண்டு; இல்லாவிட்டால் குழந்தைபிறந்தாவது மரிக்கும், அன்றி இல்லாமலாவது இருக்கும்.

(8) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி ஏழாமதிபனான சனி பன்னிரண்டில் இருந்தால் ஜாதகனுக்கு இரு மனைவிகள் உண்டு.

(9) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி லக்கினத்தில் ராகு இருந்தால் ஜாதகனுக்கு இருமனைவிகள் உண்டு.

(10) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி ஆறுமதிபனான குரு விருஷபத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வயிற்றில் குன்மக் கட்டி யுண்டாகும்; வாயு பீடையுள்ள தேகம், விரை பருத்து கொஞ்சம் அண்ட வாயு பீடையுடையோன், மார்பு நோய், வாதபீடை, புண், மூலம், அதிசாரம், சிலகாலம் மூத்திர ரோகம், பல் நோய் முதலியவைகளால் வருந்துவான்.

(11) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி ஒன்பதாமதிபனான குரு ரிஷபத்தில் மகர நவாம்சத்திலும், பிதாகாரகனான சூரியன் மிதுனத்தில் மேஷ நவாம்சத்திலும், கேது மீனத்திலும் இருந்திடில் ஜாதகனுடைய பிதா சாத்வீகன், தருமாத்மா; தேவப்பிராமண பக்தியுடையவன்; வைஷ்ணவ குலத்தில் பிறந்து வைஷ்ணவ கைங்கரியம் புரிவான், தேவப் பிராமண பக்தி யுடையவன்; அரசாங்கத்தில்

பிரசித்தன்; சிவந்த நீண்ட பருத்த சரீரமுடையவன், உஷ்ணவாயு பீடையுடையவன்; மானி; வாயுபீடை, குன்மசூலை இவைகளால் வருந்துவான்; அதிக பூமி தன முடையவன்; இவன் பாட்டனே பிரசித்தன்; அவ்விதமே முப்பாட்டனும் அதிக பிரசித்தனுய் அனேக தேசாதிபனுய் ராஜயோகத்தால் பிரசித்தமானவன்; மூன்று வாகனயோக முடையவன் ஜாதகனே; நீச்சப் பிரபுவால் தனமுடையவன்; பிதா பாக்கியம் விசேஷமாக உடையவன்; அயல் பெண்டிற் சேர்க்கையுடையவன்.

(12) ஜென்ம லக்கினம் கடகம் (மஞ்சுளாம்சம்) ஆகி இரண்டில் சந்திரன் நின்றால் ஜாதகன் புகழுடன் கூடிய கொடையாளி, அன்ன தானப் பிரியன்; அழகிய சரீரமுடைய குணவான்; அதிக மேதாவி; குளம், தோட்டம் முதலிய தர்மம் செய்வான்.

(13) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 93–00 கலை முதல் பாகை 93-12 கலை வரையிலும்) ஆகி சுக்கிரன் கும்பாம்சத்தில் ரிஷபத்தில் இருந்தால் ஜாதகனுக்கு இருபத்தேழு வயதுக்கு மேல் சுகமுண்டாகும்.

(14) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி லக்கினத்துக்கும், ஒன்பதாம் பாவத்துக்கும், பன்னிரெண்டாவது, 7-வது பாவங்களாகிய பன்னிரெண்டாவது, ஏழாவது, எட்டாவது, மூன்றாவது பாவங்களில் சுக்கிரன் இருந்தாலும், அல்லது பார்த்தாலும் ஜாதகனுக்கு ராஜயோகம் என்று சொல்லப்படுகிறது. இந்த யோகமுடையவன் அரசனாகவாவது, அல்லது அவனுக்குச் சமானமானவனாகவாவது இருப்பன்; சூரனும் தைரியவானுமாவான்; காவியம், அலங்காரம்; நாட்டியம் இவைகளில் பிரியன், உதார குணமுடையவன்.

(15) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி விருச்சிகாம்சத்தில் நீசத்தில் செவ்வாய் இருந்து லக்கினத்திலிருந்து மூன்றாம் பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகன் நோயுடையவன்; துர்ப்பல தேகமுடையவன்; இரத்தகாச, க்ஷய ரோகத்தால் யோக காலத்தில் பீடிக்கப்படுவான்.

(16) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி லக்கினாதிபன் மகராம்சத்திலிருந்தால் ஜாதகன் மூர்க்க சுபாவமுடையவனாயும், கோபமுடையவனாகவுமாவான்.

(17) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி சூரியன் சிம்மாம்சத்தில் மேஷத்தில் குரு, கேது இவர்களுடன் கூடி இருந்தால் இதற்கு விஷ்ணு யோகம் என்று பெயர். ஜாதகன் வைஷ்ணவ ஆசார பாக்கியமுடையவன்.

(18) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி சூரியன் சிம்மாம்சத்தில் மேஷத்தில் குரு, கேது இவர்களுடன் கூடி இருப்பதுடன் லக்கினத்தில் குஜனும், பன்னிரண்டாம் பாவத்தில் சனியும் இருந்தால் ஜாதகனுக்கு வாலிபத்திலேயே இருபத்தேழு வயது வரையில் கிலேசம்; தரித்திரத்தன்மைஉண்டு. மெலிந்த தேகமுண்டு, கருமை நிறமானவன்; தயவுக்கு இருப்பிடமானவன்; பிரமத்தை அறிந்தவன்; தனவான்; சூரன்; புத்திமான்; கலகப்பிரியன் ; இவனுக்குச் சகோதரர் பத்துபேர் உண்டு; அவர்களில் இருவர் பிரபலமானவர்களாகி அரசாங்கத்தில் பிரபுத் தன்மை வாய்ந்தவர்களாவார்கள். இரண்டு சகோதரிகள் தீர்க்காயுளுள்ளவராய் இருப்பர்; ஒரு இளைய சகோதரனுமுண்டு.

(19) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி சுக்கிரன், ராஜ யோகாம்சத்தில் பதினோராம் பாவத்தில் கும்ப நவாம்சத்திலிருந்தால் ஜாதகன் இளைய சகோதரனுடையவன்; ஆசையுடையவன்; மூத்த சகோதரருடன் கூடியவன்; இருபத்தேழு வயது வரையில் கஷ்ட ஜீவனம்; அதற்குமேல் ராஜயோக முண்டு; முப்பதுக்குமேல் அதிகயோகமுண்டு.

(20) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி சந்திரன் கன்னியில் ஹாஸ்யாவஸ்தையி லிருக்கவும் சூரியன் சிம்மாம்சத்தில் மேஷத்தில் குரு, கேது இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் கிலேசம் முதலிய தரித்திரத் தன்மையுடையவனுவான்; கதை சொல்லுந் தொழிலுடையவனுவான்; சந்திரன் ஹாஸ்யாவஸ்தை யிலிருப்பதால் ஜாதகன் எப்போதும் ஹாஸ்யக் கதைகள் செய்வதில் சமர்த்தன்; அயலார் இங்கித மறிந்தவன் ; சமர்த்தன்; தோழரை வஞ்சனை செய்யும் தொழிலுடையவன்; தன் காரியத்தில் சமர்த்தன்; செல்வவானுகவாவது அல்லது அழகுடையவனுகவாவது இருப்பன்; விரோதியின் காரியங்களை அழிப்பன்; தானே ராஜாவாக இருப்பவன்; லோபி; அயலார் காரியங்களை கெடுப்பவன்.

(21) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் தனுசு அம்சத்தில் நீச்ச ராசியில் இருந்து ராகுவால் பார்க்

கப்பட்டு இருந்தால் ஜாதகனுக்கு அதிகமான அவயவமுடைய புத்தி ரன் பிறப்பான்; அல்லது குறைந்த அவயவத்துடன் புத்திரன் பிறப் பான்.

(22) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி சூரியன் சிம்மாம்சத்தில் மேஷத்தில் குரு, கேது இவர்களுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் இரண்டு தாரமுடைய வன்; கர்மரோக முடையவனுவான்; மலடிக்குக் கணவனுவான்; சந்தா னத் தடையுள்ளவன். ஜாதகனுடைய இளைய சகோதரன் நல்ல தாரம் ஒருவளுடையவன்; பாக்கியவான்; சகோதரன் மூலம் பிரசித்தி யுடையவன்; அனேக புத்திர சம்பத்துடையவன்.

(23) ஜென்ம லக்கினம் கடகம் (குடிலாம்சம்) ஆகி பன்னிரண் டாம் பாவத்தில் சனி இருந்து விஷ்ணு யோகமுடைய ஜாதகனே புத்திர ஸமஸ்காரமில்லாதவன்; அந்திய காலத்தில் பிறக்கும். இவன் மகனே சிசுவாக இருப்பான்.

(24) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 95-12 கலை முதல் பாகை 95-24 கலை வரையிலும்) ஆகி லக்கினுதிபன் தனுர் அம்சத்திலிருந்தால் பூர்வ பாகத்தில் ஜெனி த்த ஜாதகன் தயையுடையவன்; புத்திமான்; வாசாலகன்; தெளிந்த முகமும் கண்களுமுடையவன்; அதிருஷ்டசாலி; தர்மாத்துமா; சிவ ந்த நிறமுடையவன்; மெலிந்த தேகமுடையவன்; சாத்துவீக குண முடையவன்; வைதீகாசாரம் கைக்கொண்டவன்; அயலார் இங்கித மறிந்தவன்; சமர்த்தன், பலவித பாஷைகளில் வல்லவன், தெய்வ பக்தியுடையவன்; விசேஷ சிவபக்தி உடையவன்; தியாகவான்; சூடும் சிறுகசப்பும், தித்திப்பும், துவர்ப்புமுள்ள வஸ்துக்களைச் சாப்பிடுவதில் பிரியன்.

(25) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம் பூர்வபாகம்) ஆகி சூரியன் மீனும்சத்திலிருந்தால் ஜாதகன் உண்மை பேசுபவன்; பெரி யோரிடம் பிரியமுடையவன்; சகோதரர் ஒன்பது அல்லது பத்துக்கு மேற்பட்டவர் உண்டு; ஐவர் அல்லது அறுவர் தீர்க்காயுளுள்ளவர், நல்ல சகோதரி ஒருத்தி புத்திரிகள், புத்திரர்களுடன் கூடியவளாயும், அதிக கிலேசமுடையவளாயும், புத்திரன் மூலம் அதிகவிசாரமுடைய வளாயும், வயிற்றில் வியாதியாலும், கர்பப்பையில் வியாதியாலும் பீடிக்கப்படுவாள், அத்தோஷத்திற்கு நாகப்பிரார்த்தனை செய்யவும். ஜாதகன் பின்னுல் சகோதரனும், நடுவயதில் பாக்கியமுடையவனும்

தேசாந்திரம் முதலிய இடங்களில் சஞ்சரிப்பவனும், அதிக புத்திரர், பொருள் முதலிய பாக்கியமுடையவனுமாவான், தம்பியின் யோகத்தால் கிராமம், பூமி இவைகளுக்கு அதிகாரமுடையவனுவான்; இறு பத்தாறு வயதுக்குமேல் பாக்கியமுண்டு; அயல் பெண்டுகளின் சேர்க்கையுடையவனுமாவான், காமீ, நல்ல புத்திரனுடையவனுவான்.

(26) ஜென்ம லக்கினம் கடகம்(சம்பகாம்சம்) ஆகி சந்திரன் தனுசில் தனுசு அம்சத்திலிருந்து எட்டாம் பாவாதிபனுடன் கூடினுல் ஜாதகனுக்குக் குஜ, புத அந்தர காலங்களில் சூரியன் சிம்மாயனத்திலிருக்கும்போது தாய்க்கு மரணமுண்டாகும்; இவன் தாய்க்குச்சகோதரிகள் எழுவர் உண்டு, மாற்றுந்தாய் அதிக யோகமுடையவளாவாள்.

(27) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம் பூர்வபாகம்) ஆகி நாலாம் பாவ அம்சமாகிய வாகன அம்சத்தில் சுகபாவாதிபன் (நாலாம் பாவாதிபன்) இருந்தால் ஜாதகன் நரவாகன யோகமுடையவன், சேனை, மந்திரி, ஜனங்கள் இவர்களிடம் நேசமுடையவனுய் இருப்பன்; மூன்று அரசரை அடைந்தவனுவான்.

(28) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம் பூர்வபாகம்) ஆகி ஸாம்ராஜ்யாம்சத்தில் சுகபாவாதிபன் இருந்தால் ஜாதகன் கேஸரிமகா யோகத்தில் பிறந்தவனுவான், சுகீ, பண்டிதன், மனைவி போகத்தில் பற்றுள்ளவன்; பெரிய (பிரசித்த) ஆறுகள் முதலிய புண்ணிய தீர்த்த யாத்திரை செய்வான், சுகவான், தித்திப்பு, துவர்ப்பு இவைகளில் பிரியன், சகோதரனுடன் கூடியவன். பெரியோர்களை உபசரிப்பவன்; தனவான், தியாகம் செய்பவன், வாகனமுடையவன், பிரசித்தமான பெருமையுடையவன், இரண்டு தாரத்திடம் பற்றுடையவன், நித்தம் அன்னதானம் செய்பவன், வெகுமானத்தால் ஜீவிப்பவன், பெருந்தன்மை, இனிமையான சொல் இவைகளால் புகழப்பட்டவன், மெலிந்த வாயு சரீரமுடையவன், நல்ல புத்திரனுடையவன், அரசசபையில் பூஜிக்கப்பட்டவன், சுமுகமுடையவன்.

(29) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம் பூர்வபாகம்) ஆகி ரந்திராதிபனுன எட்டாம் பாவாதிபன் ஆரும் ராசியிலிருந்தால் ஜாதகனுடைய மாதாமகன் பிரசித்தனுயும் உலகில் பிரசித்தமான புகழுடையவனுயும் இருப்பான், அவனுடைய புத்திரரில் எவனுவது ஒருவன் சந்நியாசியின் தனத்தை அபகரிப்பான், அபகரித்த தோஷத்தால் அவன் தரித்திரத்தால் வருந்துவான்.

(30) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி சூரியன் காந்தாம்சத்திலும், கேது காமின்யாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுடைய பிதா பாலியத்தில் யோகமுடையவனுவான்.

(31) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபன் ஐந்தாம் பாவ ராசியிலிருந்து குஜனுடன் கூடி சந்திரன் ஆரும் பாவ ஸ்தானமாகிய குரு க்ஷேத்திரத்தில் புதன், சுக்கிரன் இவர்களுடன் கூடி இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு மத்திமாயுள், தனவான், இரண்டு தாரத்துடன் கூடியவன், கிராமத்துக்கு அதிபன், பண்டிதன், தியாகம் செய்பவன், போகத்துடன் கூடியவன்; பூமியிலும், சுவர்க்கத்திலும் பரவிய புகழுடையவன்.

(32) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம் பூர்வபாகம்) ஆகி பதினோராம் பாவாதிபன் ஆரும் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்கு சகோதரர் எட்டுபேர், சமலக்ஷண முடையவராவார். சிற்றப்பன் அதிக புத்திமான், கங்கா ஸ்நானம் செய்தவன், இருதாரமுடையவன், சிறிது மனைவிக்கு அபவாதமுடையவன், புத்திரனில்லாதவன், அல்பாயுளுடையவன், ஜாதகன் இளைய சகோதரன் மூலம் கொஞ்சம் சரீர விகாரமடைந்தவன், இவன் தகப்பனுக்கு இரு சகோதரிகளில் ஒருவள் வாலிபத்தில் துக்க மடைந்தவளாயும், புத்திரனில்லாதவளுமாவள்; இவன் தகப்பன் அரிஷ்டத்திற்கு முந்தி சிற்றப்பனுக்கு அரிஷ்டமுண்டாகும்.

(33) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி சூரியன் குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகன் அரசாங்கத்தில் பிரவேசிப்பான்.

(34) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி சூரியன் குஜனுடன் ஏழாம் பாவத்தில் கூடி இருந்தால் ஜாதகன் எப்போதும் காமி, எப்போதும் போகி, ஜாரனும் திருடனுமாவான்; காவியம் நாடகம் இவைகளின் சாரமறிந்தவன்; அயல்பெண்டிர்களைச் சேரவிரும்புவான், உதாரத்தன்மை யுடையவன், உண்மையே பேசுபவன், வாசனை, புஷ்பம், வஸ்திரங்கள் இவைகளில் பிரியன், போகமாதர் சேர்க்கையில் சுற்றுபவன், தன் மனைவியின் சகோதரி சேர்க்கையுடையவன், இருபத்தைந்தாவது வயதில் ராஜ யோகமுண்டு.

(35) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி சூரியன் குஜனுடன் கூடி நாலாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் காமி;

போகி; அயல் பெண்களை விரும்புதல் முதலிய குணங்களுடையவன்; போகமாதர் பின் சுற்றுவான்; இன்னும் சூரியனும் குஜனும் ஏழாம் பாவத்திலிருப்பதற்கு மேலே சொல்லிய பலன்களுமுண்டு.

(36) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி சூரியனும் செவ்வாயும் கூடி ஏழாவது அல்லது நாலாவது பாவத்திலிருக்கும் போது சூரியன் காந்தாம்சத்தில் இருந்தால் ஜாதகன் பெண்களைக் கூடுங்காலத்தில் வினோத முடையவனுவான்; அரச சபை மத்தியில் வாக்குச்சாதுர்யமாய் பேசுவான்; புத்தி; யுக்திகளில் வல்லவன்; ஜீவானுக்கிரககாரணமாய் சோரதைச் சேர்க்க சாமர்த்தியம் வாய்ந்தவன்; லக்ஷம் குதிரைகளுக்கும், லக்ஷம் பொன்னுக்கும் அதிகாரியாவான்.

(37) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி லக்கினபாவாதிபன் வர்க்கோத்தமாம்சத்தில் கும்பாம்சத்தில் குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் அத்வைத மார்க்கத்தில் பற்றுடையவன்; வேதாந்தத்தில் நிலையாயிருந்து பரமாத்துமாவை அறிந்தவனுவான்.

(38) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி சூரியன் உத்திராயணத்தில் காந்தாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் வாதரோகத்தால் வருந்துவான்.

(39) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம் பூர்வபாகம்) ஆகி குஜன் சூரியனுடன் கூடி இருக்கில் ஜாதகனுடைய பிதா அரிஷ்ட ஸம்ஸ்கார பிரதான தினத்தை விடுவான். இருபத்திரண்டாவது வயதில் வேறு தேசத்தில் இவன் பிதா மரணமாவான், இவன் பிதா புத்திரனுக்குப் பயந்து அரசனைப்பார்க்கப் போய்போய் வருவான், இருபத்துமூன்றுவது வயதில் ஜாதகனுக்குச் சந்தான உற்பத்தி நாசமடையும்.

(40) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி லக்கினுதிபன் இரண்டாம் பாவத்திலிருந்து பதினோராம் பாவாதிபனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு முப்பது வயதிற்குமேல் பாக்கிய முண்டு, ஜாதகன் நோயற்ற திடசரீரமுடையவனுவான்.

(41) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) பூர்வபாகம் ஆகி சந்திரன் இந்திராப்ச நாடியிலிருந்தால் ஜாதகன் நல்ல ரூபமுடையவன்; புத்திமான்; வாசாலகன்; தெளிந்த முகமுங் கண்களுமுடையவன்; அதிருஷ்டவான்; தர்மவான், ராஜயோக முடையவன், சிவந்த நிறம், நடுத்தர தேகமுடையவன், குட்டையான தேக உருவமைந்த

வன், உயர்ந்தச் சந்நியாசியினிடம் பிரியமுடையவன்; தேவப்பிராம்மணர்களைப் போஷிப்பவன், தானம் செய்பவன்; அளவாய்ப் புசித்து, அளவாப் பேசி, அளவாய்த் தூங்கி, அளவாய் விழிப்பவன்; அயலார் இங்கித மறிந்த சமர்த்தன்; தூஷிப்பவன், அலங்காரங்களில் பிரியமானவன், துஷ்டர்களிடம் துஷ்ட புத்தியும், சத்துக்களிடம் கடுமையான செய்கையு முடையவன். பிதா பாக்கிய மற்றவன், தன் கையால் சம்பாதித்த பொருளுடையவன், தர்ம சாஸ்திரங்களின் பொருள் உண்மை உணர்ந்தவன்.

(42) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் ஞானம்சத்திலிருந்தால் ஜாதகன் எல்லோருக்கும் உபகாரம் செய்பவன், பராக்கிரமத்தில் சந்தோஷமும், புகழுமுடையவன், நல்ல கதைகள் கேட்பதில் விருப்பமானவன், செல்வமுடையவன், ஏழை ஜனங்களுக்குப் பிரியமானவன், சிவ விரத உபவாசமிருப்பன், விஷ்ணு, சங்கர பக்தி மிஞ்சியவன், நன் மார்க்க நற்செய்கைகளைக் கைக்கொண்டு நல்ல தர்மங்களைப் பரிபாலிப்பவன், பொன் முதலிய விசேஷ பொருளுடையவன், கிராமங்களுக்கு அதிகாரி.

(43) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி லக்கினாதிபனான சந்திரன் குஜனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் இஷ்டமான சத்கரும சித்தியுடையவன், வேறு அரசனிடம் விசேஷ பலமுடையவனும், ராஜமுத்திரை தரித்த அரசனுமிருப்பான்.

(44) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபனான புதன் லக்கினத்திலிருந்து ஆறும் பாவத்தில் அல்லது திரிகோணத்திலிருந்தால் ஜாதகனுக்கு எல்லா மூத்த சகோதரரும் நாசமுறுவர், ஆனால் இளைய சகோதர பாக்கியமுண்டு, மூன்று சகோதரிகள் தீர்க்காயுளுடையவராய் இருப்பார்கள், ஒருத்தி கிலேசமுடையவளாய் வாலிபத்திலேயே விதவைத் தன்மையடைந்து ஞான தர்ம விசார முள்ளவளாவாள். ஒருத்தி நல்லவளாய் மரிப்பாள், புத்திரி, புத்திரர்களுடன் கூடியவளாவாள்.

(45) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி மாதா ஸ்தானாதிபனான சுக்கிரன், சுதேசனான ஐந்தாம் பாவாதிபனுக்கு கேந்திரத்திலிருந்து ஏழாம் பாவாதிபனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவளாவாள், வெகு காலம் சுகமாய் வசிப்பாள், வாலிபத்திலே கிலேச முடையவளாவாள்.

(46) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் நாலாம் பாவத்திலேயே இருந்து ஐந்தாம் பாவாதிபன் தன்னுச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் யானை முதலிய ஐஸ்வரியமுடையவனுயிருப்பன்.

(47) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி லக்கினுதிபன், பதினேரும் பாவாதிபன், நாலாம் பாவாதிபன் பாக்கிய ஸ்தானத்திலாவது, கர்ம ஸ்தானத்திலாவது இருந்தால் ஜாதகன் நல்ல தர்மவான், வாகனுதிலாபமுடையவன்.

(48) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி லக்கினுதிபனை சந்திரன் பதினேராம் பாவாதிபன், நாலாம் பாவாதிபன், பாக்கியஸ்தானத்திலாவது, அன்றி கர்மஸ்தானத்திலாவது இருந்து சுக்கிரனுடன் கூடினுல் ஜாதகன் பல்லக்கேறுவான்.

(49) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி குரு குஜனுடன் கூடினுல் ஜாதகனுக்குச் சாமரமென்கிற யோகமுண்டு; இந்த யோகத்தில் பிறந்தவனுக்கு முப்பத்திரண்டு வயதுக்குமேல் சுகமுண்டு; பேரி, மிருதங்கம் முதலிய வாத்திய சுகங்களை அனுபவிப்பான்.

(50) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி பதினேராம் பாவம்; ஒன்பதாவது பாவம், எட்டாவது பாவம், ஐந்தாவது பாவம், சப்தமபாவம் இவைகளில் சூரியன் முதலிய கிரகங்கள் இருந்தால் ஜாதகனுக்கு உண்டாகும் யோகத்திற்குக் கேந்திராதி யோகம் என்று பெயர். ஜாதகன் புகழுடையவனுயும், செல்வவானுயும், பிரசித்தனுயுமிருப்பான். பல்லக்கு முதலிய வாகனமுடையவன், சதாமங்களகாமாய் நற்புத்திரர் மனைவிகளுடன் கூடி இருப்பான்.

(51) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி ராஜ்ய ஸ்தானுதிபனுன குஜன் தன்னுச்சத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் பாக்கியாதிபனுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்குக் காஹள யோகமுண்டென்பர், இதன் பலன் அதிக தனதானிய சமிர்த்தி, வாசனை, பூச்சு, மாலை முதலிய அலங்காரமுண்டு, வாகன யோகமுண்டு, ஜாதகன் சூரியனுக்குச் சமமான காந்தி, அரச குல பாக்கிய முண்டு, யௌவனத்தில் பாக்கியம், சுகம், வாலிபத்தில் அற்ப சுகம் உண்டு. ஜாதகன் வாலிபத்தில் தரித்திர மடைந்தவனுயும், நல்ல மனையாளிடம் பிரியமுள்ளவனுகவும் இருப்பன்.

(52) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி குரு கடகத்தில் குஜனுடன் கூடி இருக்கில் ஜாதகன் மகான்; யானை, குதிரை பல்லக்கு முதலியவை ஏறும் கோட்டைக்கு அதிபதி; யானை தந்தத்தால் செய்த பல்லக்கேறுபவனுயும், அனேக சிற்றரசர்களால் வணங்கப்படுகின்ற முடியுடைய மன்னவனுமாவான்.

(53) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி குரு சுவ க்ஷேத்திரத்தில் குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகன் மேல் கண்ட பலன்களை அனுபவிப்பன்.

(54) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி குரு கேந்திரத்தில் குஜனுடன் கூடி இருந்தாலும் மேல்கண்ட பலன்களை ஜாதகன் அனுபவிப்பான்.

(55) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி குரு நீச்சத்தில் தன்னுச்சாம்சத்தில் ஐந்தாம் பாவாதிபனுடன் கூடி இருந்தால் ஜாதகன் புத்திர புத்திரிகளுடன் கூடியவன், புருஷப்பிரஜை மூன்றும் தீர்க்காயுளாயிருக்கும், பெண்களில் ஒருத்தி சுக ஜீவியாக இருப்பள்.

(56) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி சுக்கிரன் ஆரும் பாவத்திலிருந்து பன்னிரண்டாம் பாவாதிபனுல் பார்க்கப்பட்டிருப்பதுடன் ஆரும் பாவாதிபன் குஜனுடன் கூடினுல் ஜாதகன் சத்துருக்களை யழிப்பவனுயும், பராக்கிரமமுடையவனுயும், அளவான தாயாதிகளுடன் கூடியவனுமாவான்.

(57) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி ஆரும் பாவாதிபன் கடகாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மூன்று சகோதரர்களுடன் கூடியவனுவான்.

(58) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி ஏழாம்பாவாதிபனுன சனி ஸ்திராம்சத்தில் ஸ்திர லக்கினத்திலிருந்து களத்திர காரகனுன சுக்கிரன் ஸ்திர ராசியிலிருந்தால் ஜாதகன் நல்ல களத்திர யோகமுடையவனுவான்.

(59) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 96-00 கலை முதல் பாகை 96–12 கலை வரையிலும்) ஆகி வர்க்கோத்தமாம்சத்தில் சந்திரன் இருந்தாலும், லக்கினத்தைக் குரு பார்த்தாலும் காட்டுக்குச் சமீபத்தில் உள்ள தேசத்தில் பூர்வ பாகத்தில் பிறந்தவனுவான்.

(60) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி லக்கின கேந்திரத்தில் சுக்கிரனிருந்து குசன், ராகு இவர்களுடன் கூடியிருந்தாலும், அல்லது சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டாலும் பூர்வ பாகத்தில் பிறந்தவனுடைய தாய் ஜாதகன் பிறந்த காலத்தில் அதிக பிரஸவ வேதனையை அடைந்திருப்பாள்; உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய் வேதனையை அடைந்திருப்பாள். ஷை லக்கினத்தில் குஜனும் அற்ப ராகுவும் கூடி இருந்தால் குழந்தை கொடிசுற்றிப்பிறக்கும். பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்குக் கொடி சுற்றப்பட்டிராது. லக்கினத்தைக் குரு பார்த்தால் சௌக்கியம் உண்டாகும். சுக்கிரன் குசனுடன் கூடியிருந்தால் தாய்க்குப் பீடை (அரிஷ்டம்) உண்டாகும், ஜென்ம தெசையில் தாய்க்கு அரிஷ்டம் சம்பவிக்கும். உத்தராம்சத்தில் பிறந்தவன் தாயினல் சோகமுடையவனுவான். ஸூதிகார கிரகதோஷத்தால் தாய் மரணத்துக்குச் சமமாகக் கிடந்து பிழைப்பாள், பிறகு தாய்க்குச் சௌக்கியமும், தகப்பனுக்குச் சௌக்கியமுமுண்டாகும். பாலாரிஷ்ட தோஷம் ஜென்ம தெசையில் விசேஷமாயிருக்கும்.

(61) ஜென்ம லக்கினம் கடகம்(கமலாம்சம்)ஆகி சந்திரன் மீனும்சத்தில் மீனத்திலும், எட்டாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலும், லக்கினத்திலிருந்து ஏழாம்பாவத்தில் குருவும் இருந்தால் ஜாதகனுக்கு பூர்ணாம்ப வயது நிச்சயம் உண்டாகும். சிலர் எழுபத்துமூன்று வயது உண்டு என்று சொல்லுகிறார்கள். சிலர் அறுபத்தைந்து வயது என்று சொல்லுகிறார்கள். ஐம்பத்து மூன்றும் வயதில் மிருக பயமும், முப்பது வயதில் கொஞ்சம் பீடையும் உண்டு. சாந்தி செய்து கொண்டால் சுகமுண்டாகும், எட்டாம் பாவாதிபதி கின்னராம்சத்தில் இருந்து சந்திரன் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் அறுபத்தைந்து வயது நிச்சயம்.

(62) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி குரு நீச்சராசியடைந்திருந்து, சூரியன் ராகுவுடன் கூடியிருந்தாலும் அல்லது ராகுவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சுகமில்லை. ஜாதகனுடைய தகப்பன் சகோதரமில்லாதவன், விஷ்ணு பக்தியுடைய மதத்தை அடைபவன். சூரியன் ராகு, குசன் இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சமர்த்தில்லாதவன், சுகி, தன் தகப்பனால் சம்பாதிக்கப்பட்ட பொருளுடையவன், பாலியத்தில் சௌக்கியத்துடனும், சுபத்துடனும் கூடியவன்; ஜாதகனுடைய பாட்டன் பிர

சித்திபெற்றவன், தனதானியாதிகமுள்ள பிரபு, வெகு இரத்தினங்களை யும் பணத்தையும், சம்பாதித்தவன்; சுகயோகமுள்ளவன், பாட்டனால் சம்பாதிக்கப்பட்ட தனத்தை ஜாதகனுடைய தகப்பன் நாசம் செய்து விடுவான், அவன் மத்திய வயதில் சௌக்கியத்தை அடைந்து பாக்கிய நாசத்தால் பீடிக்கப்பட்டவனவான், குரு, நீச்சராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஜீவனத்துக்கு வெகு கிலேசமடைவான், விருத்தாப்பிய வயதில் அற்ப சுகமுடையவன், புத்திரனால் சுகமில்லாதவன், ஜாதகனுடைய கேதுதெசையில் சூரிய புக்தியில் அல்லது ராகு புக்தியில் கோசாரத்தில் கடகத்தில் அந்தியமாக சனி வருங் காலத்தில் ஜாதகனுடைய பிதா மரிப்பான், உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு குரு புக்தியில் பிதா மரிப்பான்.

(63) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி சந்திரன் வர்க்கோத்தமாம்சத்தை அடைந்து சுகாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் தாயும் தகப்பனைப் போலவே அற்ப ஆயுளுடையவள், ஜென்ம தெசையில் விருஷப ராசியின் கடைசியில் அல்லது மிதுனத்தில் சனி கோசாரத்தில் வருங்காலம் ஜாதகனுடைய பாலிய வயதிலேயே ஸம்பத் தெசையிலாவது, அதற்கு முன்பே ஜென்ம தெசையிலாவது மரித்துவிடுவாள்.

(64) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி லக்கின கேந்திரத்தில் சூரியன் காதாம்சத்திலிருக்கப் பிறந்தவன் தாய் தகப்பனால் சௌக்கிய மிழந்தவனாகவும், தகப்பனால் சோக முடையவனாகவும் ஆவான்.

(65) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி புதன் லக்கின கேந்திரத்தில் ராகுவுடன் கூடியிருந்து, செவ்வாய் நீச்சமடைந்திருந்தால் சுவல்பமான சகோதரர்கள் உண்டு. மூத்த சகோதரன் ஒருவன் தீர்க்காயுளுடையவன், ஜாதகனுக்குப் பின் சகோதரன் கிடையாது, ஒரு சகோதரி கொஞ்சம் சௌக்கிய முள்ளவள், அவளும் விதவையாகித் துக்கியாயிருப்பாள்.

(66) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி லக்கினத்தில் ஐந்து கிரகங்களிருக்கப் பிறந்தவன் பாலியத்தில் மிகவும் துக்கமுடையவன், சந்திரன் நிர்மலாம்சத்தில் இருந்தால் அழகிய முகமும் கண்களுமுடையவன். நான்காம் பாவாதிபதி அநேக கிரகங்களுடன் சேர்ந்

இருந்தால் மூன்று பாஷையில் வல்லவன், பல பாஷை விசாரணையுள்ள வன், தன் சுய ஜாதி வித்தையில் கெட்டிக்காரன், ஸ்ரீமான், நீச்ச பாஷையில் வல்லவன் புதன், நீச்சனுடன் சம்மந்தப்பட்டிருந்தால் நீச்ச வித்தையில் தேறினவன். சுக்கிரன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் காவிய, நாடக, அலங்காரப் பிரியன், ஸங்கீத லோலன், போகத்தில் இச்சையுள்ளவன், அயலார் மனைவிகளைப் புணர இஷ்ட முள்ளவன். பல ஜாதி ஸ்திரீகளை அணைவான், வித்தையினால் நல்ல யோகமுடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியுள்ளவன், பிதா சௌக்கிய மில்லாதவன், தாய் சுகமில்லாதவன். ஜென்ம தெசையில் அற்ப சுகமும், சம்பத்தார தெசையில் அப்படியே அற்ப சுகமும் உண்டு. கேது தெசையில் அதிக கஷ்டமும், பிக்ஷான்னம் (பிச்சை எடுத்து உண்பது) கெட்ட உணவு புசிப்பதும், தன் ஜனங்களின் நாசத்தால் எற்பட்ட சோகத்தால் வேறு தேசம் போதலும், மூத்த சகோதரனுடன் மனக்கிலேசத்துடன் பல தேசங் களில் சஞ்சாரம் செய்தலும் உண்டு. ஸம்பத் தார தெசையில் பிற் பாதியில் தன்னிட ஜன சமூகத்தில் பிரபுவாயிருக்கப்பட்டவருடைய தரிசனம் உண்டாகி அவர் மூலம் விசேஷ சுப சௌக்கியங்களும், அவரால் தன் புத்திரனைப் போலவே பாவிக்கப்பட்டு போஷிக்கப்படு வான், அந்தப் பிரபு போஷகர், நல்ல தர்மாத்துமா, அனேக தேசாதி காரமுள்ளவர். அந்த தேசாதியினால் ஸர்வாத்தியக்ஷகனும், சுதந் திரம் உள்ளவனாகவும் இருப்பார், பலதேசங்களிலும் பிரசித்திபெற்ற வர், மூன்று வாகனமுடையவர், வெகு பணத்துடன் பணம் சம்பா திப்பவர், க்ஷேத்திர கிராமாதிபதி, பிரபு, அப்படிப்பட்ட பிரபுவின் கிருபையை யடைந்து ஜாதகன் யோகவானாயும், பணக்காரனாகவும் உள்ள புருஷனாகிறான். ஸம்பத்தெசையில் பிற்பாதியில் எழுத்து கியா னம் உண்டாகும். கேது தெசையில் குரு புக்தியில் உபநயனம் முத லிய பிராமண ஜாதிக்குரிய சடங்குகளை அடைகிறான். (சனி புக்தி யில்) இருந்து கேது தெசையில் சுகம் உண்டாகும். தினந்தோறும் இஷ்டமான சமிருத்தியுள்ள பலவித ஆகார, அன்ன சௌக்கியமும், புத்தியுடனும், வித்தையுடனும் கூடியிருப்பான். விபத் தெசையிலும் அப்படியே உண்டாகும். ரக்ஷிப்பவருடைய தகப்பன் சுகி, விபத் தெசையில் சுக்கிர புக்தியில் அல்லது சூரிய புக்தியில் ஜாதகனுக்கு விவாகம் நடக்கும், சிலர் சந்திர புக்தியில் அயல் தேசத்தில் நடக்கும் என்று அபிப்ராயப்படுகிறார்கள்.

(67) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாப்சம்) ஆகி சுக்கிரன் ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் இரண்டு தாரம் உடையவன் என்று சிலரும், ஒரே தாரம் என்று சிலரும், விவாகத்துக்குப் பிறகு சௌக்கியமும், தன்னுடைய பிரபுவுக்கு அதிக சுபமும் உண்டாகும் என்று சொல்லுகிறார்கள். ஜாதகன் விபத்தார தெசையில் நீச வித்தையில் வல்லவனாகவும், பிற்பாதியில் நல்ல யோகம் உள்ளவனாகவும், இருபது வயதுக்கு மேல் பணத்தை சம்பாதித்தலும், எழுத்து மூல ஜீவனமும் அரசாங்க உத்தியோகஸ்தர்களை அடைதலும், இருபத்தைந்து வயதுக்குமேல் யோகமும் அநேக கிராம அதிகாரமும் உண்டாகும். தன் ஜனப்பிரபு மூலமாக உத்தரோத்தரமான பிரபலமடைதலும், தன் பிரபுவுக்குச் சுபாதிகமும், பல்லக்கு முதலான வாகனங்களுடனும், பூஷணங்களுடனும், கூடி இருப்பான்.

(68) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம் ஆகி செவ்வாய் நீசமடைந்து குரு, கேது இவர்களுடன் கூடியிருந்தாலும், இவர்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்குக் காலாந்தரத்தில் அற்ப சந்தானம் உண்டாகும்; அல்லது வேறு மனைவியிடத்திலாவது சந்ததி உண்டாகும். குரு நீச்சமடைந்திருந்தால் பிறந்து பிறந்து மரித்து விடும். அந்த தோஷ சாந்திக்காக நாகப்பிரதிஷ்டை, நாகதானம் முதலிய சாந்தி செய்தால் காலங் கடந்து புத்திர சந்தானமுண்டாகும்; அல்லது வேறு மனைவியிடம் ஸந்ததி உண்டாகும். க்ஷேம தெசையில் மறு விவாகமும் பிரயக் தெசையில் நல்ல புத்திரன் பிறத்தலும் உண்டாகும். மூத்த மனைவி பிரஸவத்தில் மரித்த பிள்ளையைப் பிரசவிப்பாள்.

(69) ஜென்ம லக்கினம் கடகம் (காலாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 96-24 கலை முதல் பாகை 96-36 கலை வரையிலும்) ஆகி கேந்திரத் திரிகோணங்களில் சுக்கிரனிருந்து அந்த சுக்கிரனுடைய கேந்திரத்தில் குரு இருந்து சந்திரன் வர்க்கோத்தமாம்சத்தை அடைந்திருந்தால் இந்திர யோகம் உண்டாகும்.

(70) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 119-48 கலை முதல் பாகை 120-00 கலை வரையிலும்) ஆகி லக்கினாதிபதி பத்தாம் பாவத்திலிருந்து கன்யாம்சத்தில் இருக்கப்பட்ட சனியால் பார்க்கப்பட்டால் சுக்கிரத் திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன் இரண்டாவதாக அல்லது மூன்றாவதாகப், பிறந்தவன்,

பெரிய சமுத்திரத்தின் ஸமீபத்திலுள்ள பட்டிணத்தில் தேவாலயத்தின் சமீபத்தில் பிறந்தவன், தாய் பிரசவகாலத்தில் கொஞ்சம் வேதனையே அடைந்திருப்பாள்; உத்தராம்சத்தில் பிறந்தவன் நதிப் பிரதேசத்தில் ஒருசிறிய கிராமத்தில் ஜெனித்தவனுவான், தாய் பிரசவ காலத்தில் அதிக வேதனையை அடைந்திருப்பாள், சந்திரன் சனியால் பார்க்கப்பட்டால் கொஞ்சம் ஸூதி தோஷ பயமுண்டாகும்.

(71) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஐந்தாம் பாவத்தில் புதன் பாபக் கிரகத்துடன் கூடியிருந்தாலும், குரு கேந்திரத் திரிகோணங்களில் இருந்தாலும், அல்லது சந்திர கேந்திரத்திலாவது குரு தன் உச்சத்திலாவது இருந்தாலும் கொஞ்சம் பால ரோக முண்டாயிருக்கச் சந்திரனைப் புதன் பார்த்தால் சுகமும், குருவால் பார்க்கப்பட்டால் சர்வ தோஷமும் நிவர்த்தி உண்டாகி சுகியாயும், தன்னுடைய உச்சஸ்தானத்தில் துலாம்சத்தில் இருக்கப்பட்ட குருவால் தீர்க்காயுளையும், அப்படியே தனுசாம்சத்தில் இருக்கப்பட்ட எட்டாம் பாவாதிபதி மூலம் பூர்ண ஆயுளையும் அடைகிறன்.

(72) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம்) ஆகி ஒன்பது, பத்து இந்த பாவாதிபதிகள் கேந்திரத்திலாவது அல்லது துலாம்சத்தில் திரிகோணத்திலாவது இருந்தாலும், எட்டாம் பாவாதிபதி சிரசீவாம்சத்திலிருந்தாலும் ஆயுளின் முடிவு அறிய முடியாது.

(73) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதியுடன் ராகு கூடியிருந்து லக்கினத்தில் குருவுமிருந்தால் ஜாதகன் முன்னூருக்குச் சமமான ஆயுளையுடையவன்.

(74) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன்னுடைய உச்ச ராசியிலிருந்து சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுடைய பிதா பாக்கியமுள்ளவன், சிவ பக்தி செய்யும் மதத்தை யடைபவன், சோதர, பிராதாக்களுடன் கூடியிருப்பவன், க்ஷேத்திரமூலம் ஜீவன முள்ளவன்.

(75) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம்) ஆகி சூரியன் ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் கிராமத்தில் யாசிப்பவனுகவும், புரோகிதத்தில் பிரசித்தி பெற்றும், கொஞ்ச காலமே ஜீவிப்பவனுமாவான். ஜென்ம தார தெசையில் பன்னிரண்டாம் பாவாதிபதியினுடைய புக்தியில் கோசாரத்தில் சனி கடகத்தில் வரும் காலம் ஜாதகனுடைய

பிதா மரணமடைவான், அதன் பிறகு சுகாதிபதியான நான்காம் பாவாதிபதியின் தெசையில் விரய பாவாதியின் புக்தி காலத்திலாவது மரணமடைவான், பிதுரு பாவத்துக்கு பாக்கிய பாவத்திலும் அப்படியே. அந்தந்த பாவங்களின் அஷ்டம பாவத்தினுடைய தெசையையும், புக்தியையும், காரகனுடைய தெசையும், புக்தியையும் லக்கின பாவத்திலிருந்து. கிரமமாக யோசித்துச் சனியின் சஞ்சாரத்தினால் சுபா சுபங்களை அறியவும்.

(76) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம்) ஆகி சுக்கிரன் நீச்ச ஸ்தானத்தில் தன்னுடைய உச்சாம்சத்திலிருந்தாலும், சந்திர கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும் பரமேஸ்வரியம்சத்தில் ஜெனித்தவனுடைய தாய் தீர்க்காயுளுடையவள்.

(77) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம்) ஆகி புதன் நான்காம் பாவத்திலிருந்து சந்திரன் சுபரால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தாயானவள் குணவதியாயும், கொஞ்சம் ரோக சரீரமுடையவளாயும், பதிவிரதையாயும், சுபமுள்ளவளாயும், நல்லவளாயும், வம்ச விருத்தியுடையவளாயும், சுபத்துடன் கூடினவளாயுமாவாள், ஜன்மாந்தர புண்ணியத்தினால் நல்ல கீர்த்தியுள்ள புத்திரனைப் பெற்றவள், க்ஷேம தெசை, சந்திர புக்தியில் அல்லது பிரத்தியத்தாரா தெசையில் மேஷத்தின் கடைசியில் கோசாரத்தில் சனி வருங்காலம் தாயார் மரணத்தை யடைவாள், மாதுரு காரகன் இருக்கப்பட்ட ராசி நாதனுடைய தெசையிலும், தாய்க்கு மரணம் உண்டாகும். கோசாரத்தில் சந்திர லக்கினத்தில் சனி வருங்காலம் அல்லது சந்திரனுடைய திரிகோண ஸ்தானங்களில் சனி யிருக்கும்போதும் தாய்க்கு மரண சமமான அரிஷ்டம் அல்லது மரணமும், தாய்க்குச் சமமான ஜனங்களுக்கு கெடுதியும் உண்டாகும்.

(78) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம்) ஆகி சகோதர பாவத்தில் ராகு இருந்தாலும், செவ்வாய் கூட சேர்ந்திருந்தாலும் உடன் பிறந்த சகோதரர்களுக்குச் சுகமில்லை. ஜாதகன் சகோதரிகளுடன் கூடினவன். இரண்டு அல்லது மூன்று சகோதரிகள் தீர்க்காயுளுடன் இருப்பார்கள். அவர்களில் தன்னுடைய மூத்த சகோதரிஒருத்தி பாக்கியமுள்ளவளாகவும், ஆபரணலங்கிருதையாயும், கொண்டாடப்பட்டவளாயும் இருப்பாள். சகோதர பாவத்தில் ராகு இருந்

தால் ஒருத்தி விதவையாயும், மற்றொரு சகோதரி சுவல்ப பாக்கிய முள்ளவளாகவும் இருப்பார்கள்.

(79) ஜென்ம லக்கினம் கடகம் (பரமேஸ்வரியம்சம்) ஆகி லக்கினபாவத்தில் குரு இருந்தால் மதங்க யோகம் உண்டு. ஷ மதங்க யோகத்தில் ஜெனித்தவன் வெளுப்பான சரீரமுள்ளவன், சகோதரமில்லாதவன், தான் ஒருவனே ஆவான். தாமரை போன்ற கண்களுடையவன், சமதேகி, புத்திசாலி, சாது, தகப்பனால் அற்ப சுகமுள்ளவன், குரு இரண்டு அல்லது பதினொன்று, மூன்று முதலிய பாவங்களிலிருந்தால் குரு லாபமுடையவன், முன் ஜென்மாந்திர அதிருஷ்டவசத்தால் மகா புருஷனுடைய தெரிசனம் உண்டாகும்.

(80) ஜென்ம லக்கினம் கடகம் பரமேஸ்வரியம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதி கின்னராம்சத்திலாவது ஸத்யாம்சத்தில் ஐந்தாம் பாவத்திலாவது இருந்தால் சித்த புருஷருடைய அனுக்கிரகப் பாக்கியம் அடைவான், தன்னுடைய குரு பெரிய மஹாத்துமா ஆவார். விஷயத்தில் ஆசையை அகற்றியவர், மூவாசையும் வெறுத்தவர், எல்லா லோகங்களுக்கும் உபகாரியாவர், ஸ்ரீமான், ஜனங்களுக்குப் பிரியமானவர், மறைவான புதையல்போன்ற வித்தையுடையவர். ஆகாயத்தில் சஞ்சரிக்கக்கூடியபாதுகைகளை உடையவர், ஸந்துஷ்டியுடையவர், தன்னிச்சையாய்ச் சஞ்சரிப்பவர், விநாயகர் முதலிய தேவதைகளின் அனுக்கிரக மடைந்தவர், ஸித்த புருஷர்களுக் கெல்லாம் முதன்மையானவர், ஸ்ரீமான், பத்தியுடன் கூடின ஜனங்களுடையவர் அப்படிப்பட்ட குருவினுடைய கிருபையை யடைந்து ஸித்தி முதலிய சித்த வித்தையையுடைய புருஷனாகிறான். ஜாதகன் குணம் நிறைந்த அறிவாளி, பல தேசங்களிலும் சஞ்சரிப்பவன், லக்கினாதிபதி ஹாஸ்யாவத்தையிலிருந்தால் எப்போதும் ஹாஸ்யம் செய்வதிலேயே பிரியமுள்ளவன், முப்பத்திரண்டு வயதுக்குமேல் யோகியாவன், தன்னுடைய குருவினுடைய கிருபா பலத்தால் முப்பத்தைந்து வயதுக்குமேல் சித்தனாகி, மகா புருஷர்களுடைய சேர்க்கையை அடைகிறான், நானாவித தேசங்களிலும் பிரசித்தியாகி சித்தாச்சிரம வழியை யடைகிறான், சில காலம் கொஞ்சமேனும் ஆகாரமே யில்லாமலும், கொஞ்ச காலம் பழங்களைப் புசித்தும் குளிகா பாதுகையினுடைய பலத்தினாலே நானாலோகங்களிலும் சஞ்சரிக்கிறான், தேவி சக்தியினுடைய அனுக்கிரகத்தினால் அறியக்கூடாத கலைகளை அறிகிறான், பைரவருடைய அனுக்கிரகத்தையும், சாமுண்டியின் அனுக்கிரகத்தையும் பெற்றுச் சீதோஷ்ணாதிகளைச் சம

னம் செய்தும் நிக்ரஹா நுக்கிரங்கள் செய்தும், தாது வாத, ரஸ வாத வேலைகள் முதலானதும் செய்வான். வெகு காலம் ஜீவிக்கிறான். ஆயுளுள்ளவன்.

(81) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 105-36 கலை முதல் பாகை 105-48 கலை வரையிலும்) ஆகி குருத் திரிம்சாம்சத்தில் பூர்வ பாகத்தில் ஜெனித்தவன் பிராமணனாகவும், பத்தாவது கர்ப்ப ஜெனனமாகவும், நித்திய சுகியாகவும், ஆகிறான். உத்தர பாகத்தில் பிறந்தவன் சூத்திர ஜென்மமாகவும், நல்ல பாக்கிய முடையவனுமாகிறான். பூர்வ பாகத்துக்கும் உத்தர பாகத்துக்கும் பலனில் கூட கொஞ்சம் பேதமுண்டு.

(82) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி நான்காவது பாவத்தில் சனி இருந்தால் குக்கிராமத்தில் ஜெனித்தவன், நான்காம் பாவத்தில் சனியும், அந்த சனி நின்ற ராசியதிபதி எட்டாம் பாவத்திலும் இருந்தால் குக்கிராமத்தில் அக்கிரஹாரத்தில் வாசஞ் செய்வான். கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பாகத்தில் பிறந்தவன். தாய் பிரசவ காலத்தில் அதிக வேதனையை அடைந்திருப்பாள்.

(83) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் சந்திரனிருந்து சுபர், அசுபர் இவர்களால் பார்க்கப்பட்டால் தாய்க்கு அரிஷ்டமுண்டாகும், அல்லது ஒரு மாதம் வரையிலாவது, மூன்று தினங்களாவது, பத்து தினம் வரையிலாவது அரிஷ்ட தோஷம் உண்டு.

(84) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி வர்க்கோத்தமாம்சத்தில் இரண்டாம் பாவத்தில் சந்திரனிருந்து குரு, சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்ட தோஷம் சொல்லப்படுவதில்லை. தாய், தகப்பன், அம்மான் முதலானவர்கள் ஆயுள் தீர்க்க முடையவர்கள். ஜென்ம தெசையில் மூன்றாவது வயதில் கோசாரத்தில் துலா ராசியில் சனி வருங்காலம் சகோதர அரிஷ்டமுண்டாகும்.

(85) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி சனி கர்மேசனுடைய அம்சத்திலாவது, அவனுடைய திரிகோணத்திலாவது, சனி ஸ்புட ராசியிலாவது, பத்தாம் பாவாதிபதியினுடைய திருஷ்டி ராசிகளிலாவது சனி வரும் சமயம் சகோதரபீடை யுண்டாகும். ஷை குருத்

திரிம்சாம்சத்தில் ஜெனித்தவனுக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு மூத்த சகோதானும் உண்டு. ஸ்ரீமானுயும் யிருப்பான்.

(86) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி குருத் திரிம்சாப்சத்தில் பிறந்தவனுக்கு மூன்ரும் பாவாதிபதி நீசத்திலாவது, ஆரும் பாவத்திலாவது இருந்தால் இரண்டு சகோதரரும், இரண்டு சகோதரிகளும் உண்டு. மற்ற சகோதரம் நாசம் அடையும். ஜாதகன் மானி.

(87) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்கு லக்கினத்துக்கு இரண்டிலும் பன்னிரெண்டிலும் பாபக் கிரகங்கள் இருந்தாலும் சந்திரனுடன் கிரகமில்லாதிருந்தாலும் சந்திரனுக்கு இரண்டிலும், பன்னிரண்டிலும் பாபக்கிரகமிருந்தாலும், கர்த்தரியோகம் என்று சொல்லப்படும். ஷை கர்த்தரியோகத்தில் பிறந்தவனுக்கு மத்தியாயுள் என்றும் தார புத்திர விருத்தி உண்டென்றும் சுபாம்சத்தில் பூரண சந்திரன் இருந்தால் தாய், தகப்பன் தீர்க்க காலம் ஆயுள் உள்ளவர்கள் என்றும், சகோதர, சகோதரிகள், உண்டென்றும் சொல்லப்படும். பாலியத்தில் கிலேசம், தரித்திரம் முதலிய கஷ்டமும், பதினுலு வயதுவரை சமகஷ்டமும், அதன் பிறகு பாக்கியமுமுண்டு. பன்னிரண்டு வயதில் விவாகம் நடக்கும், இருபது வயதுக்குமேல் விசேஷ யோகமுண்டு, இருபத்திரண்டாவது வயதில் சம்பத் தாராதிபதியின் தெசையில் அல்லது இருபத்தோராவது வயதிலேயே பிதாவுக்கு அரிஷ்டம் உண்டாகும். அன்றியும் கர்த்தரி யோக ஜாதகனுக்கு தாயாதிகள் சத்துரு கலாபம் உண்டாகும். அதினல் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிற திரவியத்திற்கு நாசமுண்டாகும். ஜாதகன் மிகவும் மனக்கிலேசத்தை அடைவான்.

(88) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி ஒன்று, ஏழு, ஒன்பது முதலிய பாவங்களில் சுக்கிரன் இருந்தாலும், அல்லது இந்த பாவங்களைப் பார்த்தாலும் ராஜயோகம் உண்டாகும்; அல்லது அந்த ஸ்தானங்கள் இதர கிரகங்களுடன் சேர்ந்திருந்தாலும், அவர்களால் பார்க்கப்பட்டாலும் சொற்ப பாக்கிய முடையவன். குரு பார்த்தால் பூர்ண பலன் உண்டாகும். புத்தியும், வித்தையும் உடையவனுவான்.

(89) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி சந்திரன் சுபக்கிரகத்துடன் கூடியாவது, சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாவது

இருந்தாலும், வர்க்கோத்தமாம்சத்தில் சந்திரன் நான்கு கிரகங்களுடன் கூடியிருந்தாலும், பார்க்கப்பட்டாலும், லக்கினத்திலிருந்து இரண்டாம் பாவத்திலிருந்தாலும் ஸ்ரீமானும், ராஜயோக விருத்தியுடையவனும், பன்னிரண்டாவது வயதில் விவாகமும், அல்லது பதினாறுவது வயதில் விவாகமும் நடக்கும். அரசனுக்குச் சமமான கீர்த்தியும், அரசனால் வெகுமானிக்கப்பட்டும், பிரபல உத்தியோகமும், சுகமும், முப்பத்தைந்தாவது வயதில் மத்தியில் கிலேசத்தால் பீடிக்கப்பட்டும், வேறு அரசனால் சுகமும், அரசர் வழியில் சுபமும், ஸம்பத்தெசையில் நல்லயோகமும், பிரபல உத்தியோக ஜீவனமும், புத்திரன் பிறப்பதால் உண்டான சந்தோஷமும், வீட்டில் பசு, தன விருத்தியும், பல வழிகளில் தன வரவும், க்ஷேத்திர லாபமும், சுபமும் உண்டாகும்.

(90) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்கு ஏழாம் பாவாதிபதி கேந்திரத்திலாவது, ஸ்வக்ஷேத்திரத்திலாவது, தன் உச்சத்திலாவது இருந்தால் மனைவியால் சுகமுண்டாகும். பணக்கார வீட்டில் கலியாணம் நடக்கும், தகப்பனில்லாத கன்னிகை மனைவியாவாள், மனைவி சிவப்பு நிறமுள்ளவள், விவாகமான பிறகு ஜாதகனுக்குச் சுபமும் உண்டாகும்.

(91) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி சூரியனும் ராகுவும், கூடியிருந்தால் ஜாதகனுடைய மனைவி ரூபம், குணம், நிறைந்தவளாகவும், ஜென்மாந்தர பாபவிசேஷத்தால் அற்ப ஸந்தான முடையவளாகவும் இருப்பாள், அவளுக்கு ஒரே பெண் வெகுகாலம் ஆயுளுள்ளவளாயிருப்பாள். அவளுக்கு ஜென்ம தெசையில் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் தேகபீடையும் உண்டு, பிதுருபீடை கொஞ்சமும் உண்டாகும். மீனத் திரிகோணத்தில் சனி வருங்காலம் தேகபீடையும் ஜுரப் பீடையும் உண்டாகும். புத்திமான், அக்காலம் யத்தனத்தால் சாந்தி செய்து கொண்டால் சுகமுண்டாகும். கும்பத் திரிகோணத்தில் சனி வருங்காலம் தாய்க்குத் தேக ஜாட்டியமும், கொஞ்சம் பிதுரு பீடையும் உண்டாகும். ஜென்ம தெசையில் பிதாவுக்கு இரண்டு, மூன்று வாரங்கள் பீடையை உண்டு பண்ணும், ஸம்பத் தெசையில் முற்பாதியில் மிதுனத்தில் கோசாரத்தில் சனி வருங்காலம் இருபத்திரண்டாவது வயதில் பிதா மரிப்பான், விபத்தெசையில் ராஜயோகமும், (பல்லக்கு) நரவாகனம் முதலியனவும், இருபத்தைந்து வயதுக்குமேல் தன் பிரபலத்தால் பாக்கியமும் உண்டாகும்.

(92) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி லக்கினாதிபதியாவது சந்திரனாவது வர்க்கோத்தமத்திலாவது, யோககாலம்சபாகத்திலாவது, கேந்திரத் திரிகோண, உபசய ஸ்தானங்களிலாவது பலமுள்ளவர்களாயிருந்தால் ஜாதகன் அரசனாகவும், நல்ல வித்துவானாகவும், நல்ல போகியாயு மிருப்பான். புத்திமானாகவும், ராஜஸேவகனாகவும், மந்திராலோசனை செய்பவனாகவும், நல்ல குணமுள்ளவனாகவும், தன்னுடைய குலத்தில் யோகமுள்ளவனாகவும், விபத்தெசையில் நல்ல யோகவானாகவு மிருப்பான்.

(93) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி நான்காம் பாவாதியும், சரீராதிபதியும், ஒன்பதாம் பாவாதிபதியும் லக்கினத்திலாவது பத்தாம் பாவத்திலாவது இருந்து, சுக்கிரன் நான்கு, பதினொன்று முதலிய பாவங்களிலிருந்தாலும், சம்மந்தப்பட்டாலும் சதுரங்க பல சேனைகளுடன் கூடியிருப்பான்.

(94) ஜென்ம லக்கினம் கடகம் (சுப்ரபாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சந்திர கேந்திரத் திரிகோணங்களி லிருந்தாலும், சந்திரனால் பார்க்கப் பட்டிருந்தாலும் இரண்டு வாகன முடையவன். க்ஷேம தார தெசையில் சுபா சுப பலன்கள் சுமமாக இருக்கும்.

(95) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 96-00 கலை முதல் பாகை 96-12 கலை வரையிலும்) ஆகி பூர்வ பாகத்தில் பிறந்தவன் சுபக்ஷேத்திரத்திலும், சுபராசியிலும் லக்கினாதிபதி யிருந்தால் புண்ணிய பூமியில் ஜெனனமானவன். உத்தராம்சத்தில் ஜெனித்தவன் காட்டுப் பிரதேசத்தில் சமுத்திர சமீபமான பட்டிணத்தில் ஜெனித்தவன்.

(96) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் சந்திரனிருந்து பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், பத்தாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தாலும், நான்காம் பாவாதிபதி குருவுடன் கூடியிருந்தாலும், தாய்க்குச் சுகமுண்டாகும். பூர்வ பாகத்தில் கொஞ்சம் பீடையும், உத்தர பாகத்தில் சுகமுமுண்டாகும்.

(97) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகிப் பிறந்தவனுக்கு இரண்டாம் பாவத்தில் குரு இருந்தாலும், லக்கின பாவாதிபதியாவது, குருவாவது, ஒன்பதாம் பாவாதிபதியாவது இரண்டாம் பாவத்தில் பலமுடையவனாயிருந்தாலும், தேக சுகத்துடனும், வித்தை

யுடனும் கூடியவன். ஜெனன காலத்தில் தாய்க்குச் சுகமும், குழந்தைக்குச் சுகமும், தகப்பனுக்குச் சுகமும், ஜென்ம தார தெசையில் மூன்றும் வருஷத்தில் மாந்த ஜுர பயம் கொஞ்சமும், வைசூரி ஜுர பயத்தால் பீடிக்கப்பட்டும் இருப்பான்.

(98) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் சுபருடன் சேர்ந்திருந்தாலும் தாய் குணவதி, சுத்தை, ஸாத்வி, வம்ச விருத்தியுடையவள்.

(99) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி பன்னிரெண்டாம் பாவத்தில் குரு இருந்தாலும், ஒன்பதாம் பாவாதிபதி குருவுடன் சேர்ந்திருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் சகோதாருடன் கூடினவனுயிருப்பான். விஷ்ணு, சிவன் முதலியோரிடத்தில் பக்தியுடனும், மத்தியாயுளுள்ளவனுகவும், சிவ பக்தி விசேஷமுள்ளவனுகவும், நித்தியம் வியாபாரத்தால் ஜீவிப்பவனுகவும், பிரபு மூலம் பிரசித்தி பெற்றவனுகவும், எழுத்து வேலையில் சமர்த்தனுகவும், பணத்தைச் சம்பாதிப்பதில் ஆஸ்தையுள்ளவனுகவும், ஸ்ரீமானுகவும், இரண்டு தாரமுடையவனுமாகவும் ஆகிருன்.

(100) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி புதத் திரிம்சாம்சத்தில் பிறந்தவன் ரூபம், குணம், வித்தை இவை நிறைந்தவன், சுகத்துடன் கூடினவன், வாதம் நிறைந்த தேகமுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், தித்திப்பில் பிரியமுள்ளவன், அரசாங்கத்தில் பிரசித்தி உள்ளவன், தன் ஜனங்களால் பூஜிக்கப்பட்டவன், உடன் பிறந்த சகோதரமுள்ளவன், குணமுள்ளவன், மத்திய, அந்திய காலங்களில் சுகமுடையவன், பிதுரார்ச்சித தனத்துடன் கூடினவன், தன் கையினுலும் பணவிருத்தியுடையவன், வித்தையுடன் கூடினவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், திட்டமாய்ப்புசிப்பவன், மிதமாய்ப் பேசுபவன், சிநேக துரோக புத்தியுடையவன், பதினெட்டு வயதிலிருந்து சுகமுள்ளவன், சுபமுள்ளவன், தானே பிரபலமடைவான், பேத (மாற்ருந்தாய்) சகோதானுடன் கூடியிருப்பான், ஸ்ரீமான், சொந்த சகோதானுடன் துவேஷம், கலகம் உள்ளவன், சண்டையிடுபவன், ஜென்ம தாரதிசையில் பிதாவுக்குச்சுகமும், தனவரவும், வித்யாலாபமும், சகோதரவிருத்தியும், பேத சகோதர சுகமும், ஸம்பத் தெசையில், சுயபுக்தியில் பாக்யவிருத்தியும், சனிபுக்தியிலும், சுயபுக்தியைப் போலவேயும், கொஞ்சம் தேக பீடையும், சீக்கிரத்தில் ஆரோக்யமும், சுகமும், புத புக்தியில் கொஞ்சம்

சுகமும், புக்தியின் அந்தியத்தில் பிதா நாசமும், தன் தேசத்தில் பெரிய கலகமும்; அதற்க்குப் பிறகு நான்காம் பாவாதிபதியுடன் கூடியிருக்கப்பட்ட கிரகத்தினுடைய தெசையில் பிதாரிஷ்டமும், ஆரும் பாவாதிபதியின் தெசையில் விரய பாவாதிபதியின் புக்தியிலும், துலாந்திய, விருச்சிக கோசார சனி சஞ்சாரகாலேயில், வெளிதேசத்தில் பிதா மரணமும், பிதாவின் மரணத்தின் பின்பு கஷ்டமும், பலவழிகளிலும் கஷ்டமும், மிகத்துக்கமும், கலகத்தால் ஜனங்களுக்குக் கெடுதியும் உண்டாகும். கேது புக்தியிலும் இதுபோலவேயும், சுக்கிர புக்தியில் சொற்பசுகமும், சுயதேசத்தில் சௌளக்யமும் உண்டாகும். சுக்கிர புக்தியின் கடைசியில் தாரலாபமும், அல்லது ரவி புக்தியிலாவதும், இரண்டாம் பரியாயத்தில் கும்பத்தில் குரு கோசாரத்தில் வருங்காலம் விவாஹோத்ஸவமும் சம்சய மில்லாமல் நடக்கும். ஜென்ம தேசத்திலேயே விவாகமும், அற்பசுகமும், மூத்தமனைவியிடம் அற்பசுகமும் உண்டாகும். அவள் கும்பத்தில் சனி கோசாரத்தில் முதல்பரியாயத்தில் வரும்சமயம் அற்பாயுள் அடைந்து மரித்து விடுகிருள். ஜென்மபூமிக்குக் கிழக்கில், இரண்டாவது மனைவிகிடைக்கும், அவள் கிரகஸ்தனுடைய வீட்டில் பிறந்து தாய், தகப்பனருடன் உள்ளவள், அவள் பாக்ய வம்சத்திலுதித்தவள், குணம், ரூபம் நிறைந்தவள், அப்படிப்பட்டவளைச் சீக்கிரமாக மணந்து கொள்ளுகிருன். அவள் சகோதர பிராதாக்களை உடையவள், பதி பக்தியுடன் கூடினவன், சுபா சுப பலன் இந்த சம்பத்தெசையில் சமம் என்றும், விபத்தார தெசையில் முற்பாதியில் சுகம் கொஞ்சமும், வியாபாரத்தில் தனவிருத்தியும், நல்ல சௌளக்கியமும், தாரசுகமும், மனோதைரியமும், தன்வீட்டில் சுகத்தையும், அபரார்த்தத்தில் விசேஷமும், தெசைமுடிவில் தாய்நாசமடைதலும், எட்டாம் பாவாதி தெசையில் அந்தியத்தில் இரண்டாம் பரியாயத்தில்சனி கோசாரத்தில் துலாந்திய விருச்சிக ராசியில் வரும்போது தாய்க்கு அரிஷ்டமும், அதன் பிறகு வரவுக்கு மிஞ்சின செலவும் உண்டாகும். புத்தி அந்தியத்தில் பல பல வியாகூலமும், ராஜ பீதியும், க்ஷேம தெசை சுயபுக்தியில் பிற்பாதியில் சொற்ப சுகமும், கேது புக்தியில் இருந்து உத்தமமான விசேஷ சம்பத்தை அடைதலும், சுக்கிர புக்தியில் அப்படியேயும், ரவி புக்தியில் சமமாயும், க்ஷேம தெசை முதற் பாதியில் விசேஷ தனவரவும், மத்தியில் வியாகூல காரியங்களும், புத்திர விசாரமும் உண்டாகும்.

(107) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி நீசமடைந்து பாபக் கிரகங்களுடன் சேர்ந்தாலும், குரு வந்தியாம்சத்தை அடைந்திருந்தாலும் மலட்டு ஸ்திரியின் கணவனாவான்.

(102) ஜென்ம லக்கினம் கடகம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் குரு இருந்தாலும், வந்தியாம்சத்தை அடைந்திருந்தாலும், லக்கினத்திற்கு விரயபாவத்தில் சனி யிருந்தாலும், சந்ததிக்குத்தடையான யோகாம்சத்தை அடைந்திருந்தாலும், ஐந்தாம் பாவாதிபதி நீச ராசியை யடைந்திருந்தாலும், ஸந்தான பிரதிபந்தகம் உண்டாகும். அந்த தோஷ நிவர்த்திக்குச் சுப்ரமண்ய விரதமும், நாக சாந்தியும் செய்து ஹரிவாஸர நாளில் பசுதானமும் செய்து, ஞாயிற்றுக்கிழமைகளில் பாநுவார விரதமும் ஒரு வருஷம் வரை அனுஷ்டித்தால் ஜென்மாந்தர சுகிருதத்தாலும், இப்போது செய்யும் வெகு புண்ணியானுஸாரத்தாலும் சந்ததி உண்டாகும். க்ஷேம தெசையில் சேது ஸ்நானம் செய்து இச்சாந்திகளைச் செய்தால் புத்திரனுண்டாகும், சிலர் வேறு மனைவியினிடத்தில் புத்திரன் உண்டென்றும் அல்லது தத்து புத்திரன் தான் உண்டு என்றும் அபிப்ராயப்படுகிறார்கள்.

(103) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம்) ஆகி லக்கினாதிபதி லாப பாவத்தில் லாப பாவாதிபுடன் கூடியிருந்தால் பெரிய நதிப் பிராந்தியத்தில் நகரத்தில் ஜெனித்தவனாகிறான். உத்தராம்சத்தில் ஜெனித்தால் நதிப்பிராந்திய சமீபமான பட்டிண சமீப கிராமத்தில் தேவாலய சமீபத்தில் ஜெனனமும், வாசமும் என்றும், மூத்த சகோதரனில்லாதவனுமாகிறான். இரண்டு அம்சத்திலும் கொஞ்சம் பலன்கள் பேதப்படும். பிரஸவ காலத்தில் தாய்க்குச்சீக்கிரம் பிரஸவம் உண்டாயிருக்கும். பூர்வ பாகத்தில் ஜெனித்தால் தாய் அதிக வேதனையை அடைந்திருப்பாள் என்று எண்ணவும்.

(104) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் சனியிருந்து ரவியுடன் சேர்ந்திருந்தாலும், ரவியால் பார்க்கப்பட்டாலும், சுபயோகவசத்தால் சௌக்கியத்தையும், சீக்கிரம் ஆரோக்யத்தைபு மடைகிறான், கொஞ்சம் பாலாரிஷ்டம் இருந்தாலும் சுபர் யோகத்தினால் சுகமடைவான், ஸம்பத் தெசையில் மூன்றும் வயதில் கொஞ்சம் மாந்த ஜுரபயமும், லக்கினாதிபதி உச்சத்திலிருந்

தால் சீக்கிரத்தில் ஆரோக்கியமும், தாய் தகப்பனுக்குச் சுகமும் உண்டாகும். தேகபுஷ்டியும் உண்டாகும்.

(105) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம்) ஆகி லக்கின பாவ கேந்திரங்களில் சூரியன் சாபாம்சத்தில் உச்சனுயிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தகப்பன் தேவப் பிராமணர், சிவன் இவர்களிடம் பக்தியுள்ளவனுகவும், இவனுடைய பாலியத்தில் தரித்திரனுகவும், மத்திய வயதில் கொஞ்சம் சுகத்துடன் கூடியும், துர்ப்பலமுள்ள தேகமுடையவனுகவும், கொஞ்ச காலம் அற்ப யோகத்துடன் அற்ப பாக்கியமும் அடைந்து மத்திம வயதையும் அடைகிருன்.

(106) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம்) ஆகிப் பிறந்தவனுக்கு நான்காம் பாவாதிபதி ஸ்வக்ஷேத்திரத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால் தாய் வெகு காலம் ஜீவித்திருப்பாள், குணவதி, சாந்தம் உள்ளவள், பந்து ஜனங்களுக்குப் பிரியமானதைச் செய்பவள், பதிவிரதை, ஸதி, அன்னதானம் நித்தியம் செய்வதில் பிரியம் உள்ளவள், வம்சத்தில் பாக்கிய விருத்தியுடையவள், சகோதர பிராதாக்களுடன் கூடினவள், வெகு காலம் ஜீவித்திருப்பவள், தாய் வம்சத்தில் கொஞ்சம் சுகமுள்ளவள், ஜாதகன் மாதுல பிரபல முள்ளவன்; சுபமுள்ளவன்.

(107) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி பதினேராம் பாவத்தில் சுக்கிரனுடன் சேர்ந்திருந்தாலும், சந்திரனிருக்கு மிடமிருந்து மூன்றுமிடத்தில் குரு இருந்தாலும் சகோதர விருத்தி யுண்டாகும். நான்கு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் ஆயுளுடன் கூடியும் இருப்பார்கள். ஒன்று, இரண்டு, அல்லது மூன்று, சகோதரம் நாசமடையும்.

(108) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் புதனிருந்தால் சகோதர நாசமடையும். சந்திரனுக்கு மூன்றில் குருவும், அல்லது லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் செவ்வாயும் இருந்தால் சகோதர சௌக்கியமுண்டாகும். அவர்களில் எவனுவது ஒரு சகோதரன் அனேகம் மரிக்கப்பட்ட பிரஜைகளையுடையவன்.

(109) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம்) ஆகிக் குருத்திரிம்சாம்சத்தில் பிறந்தவன் ரூபமுடையவன், சுபத்துடன் கூடின

வன், பிரசன்னமான முகமுங் கண்களுமுடையவன், மெலிந்த தேகி, கருப்பு நிறமுள்ளவன், எழுத்து வித்தையில் சமர்த்தன், தன் வேலையில் கவனமுள்ளவன், ஸ்ரீமான், பிறருடைய வேலைக்கு இடையூறு செய்பவன், சீக்கிரத்தில் கோபிப்பவன், சந்தோஷ மனதுள்ளவன், கொஞ்சம் லோபகுணம் உள்ளவன், பாலியத்தில் தரித்திரத்தை அடைகிறவன், சுயார்ஜிதயோகமுள்ளவன், முப்பத்தைந்து வயதுக்கு மேல் சுகியாயும், விசேஷ சம்பத்துள்ளவனுயுமிருப்பான், இரண்டு தாரம் உடையவன், ஆசையுள்ளவன், சிவபக்தி விசேஷமுடையவன், ஸம்பத்தார தெசையில் பிதாவுக்குச் சுகமும், சுபவரவும், தாய்சௌகியமும், சகோதர விருத்தியும், சுபா சுப பலன் சமமாகவும், ஆறுவது வயதில் அக்ஷராப்பியாஸமும், ஏழாவது வயதில் தேஹபீடையும், விபத்தார தெசையில் முற்பகுதியில் சொற்பசுகமும், ஐந்தாம்பாவாதி தெசையில் சுபவரவும், சுயப்பிரபலமும், சூத்திரப்பிரபுவால் சௌக்கியமும், சேவகத்தொழிலால் ஜீவனமும், பதினுறு வயதுக்குமேல் எழுத்துவித்தையால் ஜீவனமும், சுகமும் உண்டாகும்.

(110) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் புதனுடன் சேர்ந்திருந்தால் ஜாதிக்கனுகுணமான வித்தையை அடைதலும், சுகியாயும், ஊகிப்பதிலும், விலக்குவதிலும் வல்லவனுயும் இருப்பான். க்ஷேமதார தெசையில் முன்காலத்தில் கொஞ்சம் சௌக்யமும், சுயபுக்தியில் தேகசுகமும், எஜமானப் பிரபுவுக்குச் சௌக்கியமும் உண்டாகும். இரண்டாவது பரியாயத்தில் குரு மீனத்தில் கோசாரத்தில் வரும்சமயம் க்ஷேம தெசை குருபுக்தியில் நிச்சயமாக விவாகம் நடக்கும். இரண்டு, மூன்று தடவைகள் பிரயத்தினப்பட்ட பின்பு விவாகயோகமடைவான்.

(111) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் பாபக்கிரக மிருந்தால் விவாகத்துக்கு இடையூறு உண்டாகும், கன்னிகாதானத்துக்குப் பிறகு இவனுடைய மாமனுருக்குக் கொஞ்சம் கஷ்டம் உண்டாகும். விவாஹத்துக்குப் பிறகு இவனுக்குச் சுயப்பிரபலமும், சுகமும் உண்டாகும்.

(112) ஜென்ம லக்கினம் கடகம் (ஸசிவாம்சம்) ஆகி பூர்வபாகமானுல் லக்கின பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலும் விரயபாவாதிபதி மீனராசியிலும் இருந்தால் பெரிய நதி பிராந்தியமான தேசத்தில் குக்கிராமத்தில் ஜாதகன் ஜெனிப்பான்.

(113) ஜென்ம லக்கினம் கடகம் (ஸசிவாம்சம்) ஆகி உத்தா பாகத்தில் பிறந்தவனுக்கு நான்காம் பாவாதிபதி குருவுடன் சேர்ந் திருந்தால் ஜாதகன் வனப்பிராந்தியத்தில் பட்டினத்தில் ஜெனித்த வன் ஆவான். தாய், ஜாதகன் பிறக்கும் சமயத்தில் அதிக வேதனை அடைந்திருப்பாள், கொஞ்சம் ஸூதிகாரிஷ்டம் உண்டாகும். சீக்கிர மாக ஆரோக்கியமும், சுகமும் உண்டாகும். பூர்வபாகத்தில் பிறந்த வன் தாய்க்குப் பிரஸவ வேதனை கொஞ்சமாக விருக்கும்.

(114) ஜென்ம லக்கினம் கடகம் (ஸசிவாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதியைச் சனி பார்த்தால் ஜென்ம தெசையில் இரண்டாவது வயதில் ஜாதகனுக்கு மாந்த ஜுரத்தினுல் பயமுண்டாகும்.

(115) ஜென்ம லக்கினம் கடகம் (ஸசிவாம்சம்) ஆகிக் கேந்திர பாவத்தில் குரு விருந்தாலும், நான்காம் பாவாதியுடன் கூடியிருந்தா லும் ஜாதகன் தீர்க்காயுள் யோகத்தை அடைகிறுன். தனக்கும், தாய்க்கும், தகப்பனுக்கும் தேகசுகம் உண்டாகும்.

(116) ஜென்ம லக்கினம் கடகம் (ஸசிவாம்சம்) ஆகி கேந்திரத் திரிகோணங்களில் சூரியன் இருந்து, ஒன்பதாம் பாவாதிபதி பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய பிதா தீர்க்காயுளை அடைகிறுன். ஜாதகன் பிதாவானவன் பூர்வவயதில் தரித்திரத்தினுல் பீடிக்கப்பட்ட வன், கொஞ்சகாலம் குதிரை தந்திரம்கற்று மத்திய வயதில் சௌக் கியத்தை அடைகிறுன், இரண்டு தாரம் உள்ளவன், புத்திரன் பிறந்த பிறகு போகியாயும், சுகமாயும் இருப்பான், கர்ப்பாதானத்துக்குப் பிறகே சுகத்தையும் அடைகிறுன், அரசாங்கத்தில் பிரசித்தியும், ராஜ மந்திரியின் சந்தோஷத்தையும், அன்பையும், அனுக்கிரகத்தையும் அடைகிறுன்.

(117) ஜென்ம லக்கினம் கடகம் (ஸசிவாம்சம்) ஆகி சந்திரனுக்கு நாலில் சனியிருந்தால் தாய்க்குச் சுகமில்லை என்றும், தாய் அற்பசுக முள்ளவளென்றும் சொல்லப்படுகின்றது.

(118) ஜென்ம லக்கினம் கடகம் (ஸசிவாம்ஸம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்திலிருந்தாலும், சந்திரனிருக்குமிடத்திலிருந்து நாலாமிடத்தில் சனியிருந்தாலும் மாதரு வம்சத்தில் அரிஷ்டமுண்டா கும்,மாற்றுந்தாய் மூலம் சௌக்கியம் உண்டாகும், ஜென்ம தெசையில் மூன்றும் வருஷத்தில் அல்லது நான்காம் வருஷத்தில் சனி கன்னி யாராசியில் கோசாரத்தில் வருங்காலம் தன் தாய் அரிஷ்டமாவாள்,

ஐந்தாவது வயதில் குரு சிம்மராசியில் கோசாரத்தில் வருங்காலம் இளையதாயார் (மறு தாயார்) ஏற்படுவாள், பேத சகோதரனால் சௌக்கியமும், தேகாரோக்யமும், சுகமும் உண்டாகும், ஜென்ம தெசையில் இரண்டு, மூன்று தடவைகளில் கொஞ்சம் சரீர பீடை ஏற்படும், ஜென்ம தாராதிபதி ராகுவாகி அந்த ராகு இரண்டாம் பாவத்தில் சூரியனுடன் சேர்ந்திருந்தால் அந்த ராகு தெசையில் ஜாதகனுக்குக் கொஞ்சம் தேக பீடை யுண்டாகும், அம்மை, ஜுரம் முதலியவற்றால் அற்ப பயமும், ஜன்மதார தெசையின் முடிவில் சனி ஓராம் பரியாயத்தில் கோசாரத்தில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் சமயம் வைசூரி, ஜுரம் முதலிய பீடையும், சாந்தி செய்தால் ஆரோக்கியமும் உண்டாகும், ஆறுவது வயதில் கோசாரத்தில் கன்னியா ராசியில் குரு வருங்காலம் அக்ஷராப்பியாசமும், ஜென்மத்தார தெசையின் பிற்பாதி யில் சம்பத்தும் உண்டாகும், பேதபிராதுரு அபிவிருத்தியும், தனக் குத் தேகசுகமும் உண்டாகும், ஸம்பத்தார தெசையில் சுயபுக்தியிலும் சம்பத் உண்டாகும், குரு கோசாரத்தில் இரண்டாம் பரியாயத்தில் துலா ராசியில் சஞ்சார சமயம் விவாகம் நடக்கும், ஜென்ம பூமிக்குத் தெற்கு அல்லது மேற்கில் விவாகமுண்டு, கருப்பு நிறமான மனைவி யுடையவன், விவாகத்தின் பிறகு சுகமடைவான்.

(119) ஜென்ம லக்கினம் கடகம் (சசிவாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் சனி யிருந்தால் விவாகத்திற்கு இடையூறுண்டாகும், இரண்டு மூன்று தடவை பிரயத்தனத்தால் விவாகம் நடக்கும், மூன் றும் பாவம் மாமியார் பாவமானதால் பாபக்கிரகம் மூன்றும் பாவத்தி லிருந்தால் ஜாதகனுக்குப் பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுப்பதால் மாமனுருக்குப் பெரிய ஆபத்துண்டாகும், அந்த மூன்றும் பாவமானது சுபாம்சமாகி சுபர்களால் பார்க்கப்பட்டிருந் தால் பெண்ணை கொடுக்கும் மாமனுருக்குச் சுபம் உண்டாகும்.

(120) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 119-36 முதல்பாகை 119-48 வரை) ஆகி குரு பாக்யாம்சத்தில் விருச்சிகத்தில் இருந்து அந்தக் குரு புதனுடன் சேர்ந்திருந்தாலுமல்லது புதனால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்கு இருபத்தேழு வயதுக்குமேல் சுகமுண்டாகும்.

(121) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கினாதி பதி லக்கினமாகிய சுபக்ஷேத்திரத்தில் சுக்கிரனுடன் கூடினாலும், பார்க்

கப்பட்டாலும், அல்லது லக்கினதிபதி தனுசு ராசியிலிருந்து சுக்கிரனுடன் சேர்ந்திருந்தாலும், பார்க்கப்பட்டாலும் "சுபம்" என்கிற யோகாயோகமுண்டாகும். இந்தச் சுபயோகத்தில் ஜெனித்தவன் மூன்றுவது அல்லது நான்காவது கெர்பத்தில் ஜெனித்தவனுவான், பிரசித்தனுவான், மூத்த சகோதரனில்லாதவன், இளைய சகோதர சுகமுடையவன், ஒரு சகோதரி தீர்க்காயுளை உடையவள், அவள் வைதவ்வியமடைந்துவிடுவாள்.

(122) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி மேற்சொல்லிய "சுப" யோகத்தில் ஜெனித்தவனுக்கு லக்கின பாவாதிபதி சுபராசியடைந்து குருவால் பார்க்கப்பட்டாலும், குருவுடன் சேர்ந்திருந்தாலும் ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் பூர்வபாகத்திலானுல் அக்கிரகாரத்திலும், உத்தரபாகமானுல் பட்டினத்திலும் ஜெனிப்பான், பிரசவ காலத்தில் தாய்க்குச் சுகப்பிரசவமுண்டு, உத்தாராம்சத்தில் தாய்க்குக் கொஞ்சம் தோஷமும் உண்டாகும்.

(123) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி சந்திரன் ஆறும் பாவத்தில் இருந்து பாவருடன் கூடியும், பாபரால் பார்க்கப்பட்டுமிருந்தால் பிரசவ காலத்தில் தாய் அதிக வேதனையை அடைந்தவள் ஆகிறுள், சந்திரன் சுபாம்சத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டால் பிறகு சுகம் உண்டாகும், கொஞ்சம் சூதிகாரிஷ்டம் ஜாதகன் பிறந்த ஐந்தாவது ஒன்பதாவது தினத்தில் தாய்க்கு உண்டாகும்.

(124) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சுக்கிரன் சுபக்கிரகங்களுடன் கூடி யிருந்தால் சீக்கிரமாக பாலாரிஷ்டம் நிவர்த்தியாகும். தாய் தகப்பனுக்குச் சுகமும் உண்டாகும். சூரியன் பாக்கியாம்சத்திலாவது, கேந்திரத்திலாவது இருந்தால் பிதா தீர்க்க வயதுடையவர், விஷ்ணு விடத்தில் பக்தி மிகுந்தவர்.

(125) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி ரவிபாக்கியாம்சத்திலாவது, விருச்சிகாம்சத்திலாவது இருந்தாலும், அல்லது பன்னிரண்டாம் பாவத்தில் இருந்து கேதுவுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய பிதா பாலிய வயதில் கொஞ்சமான சுகத்துடன் கூடியவன், மத்திய வயதில் சௌக்கிய முடையவன், தன் சுயார்ஜிதமாய் சம்பாதிக்கும் யோகமுடையவன், அரசாங்க ஜன சிநேகமும், வீட்டில் லக்ஷ்மிகடாக்ஷம் உள்ளவனுகவும், பிரபல உத்தியோக சித்தியும், நரவாஹன பாக்கிய முடையவனுகியும், பல வழிகளிலும் தனத்தைச்

சம்பாதிப்பவனுகியும், தன் பிதாவின் க்ஷேத்திர லாபத்தையுடையவனுகியும், பெரிய பிரபுவினுடைய வழியாக தேசத்தில் ஸர்வாதிகாரங்களும், அனுகூலமும் அடைந்தும் இருப்பான். சூரியன் புதனுடைய அம்சத்தில் துலா ராசியிலிருந்தால் ஜாதகனுடைய பிதா தர்ம சித்தியுடையவனுகியும், அக்கிரஹாரப் பிரதிஷ்டைசெய்தும்,உலகத்தில் தர்ம புத்தியுடையவனுயும், தன் மதாசாரத்தை யுடையவனுயும், நித்தியம் பிராமணுல் நல்ல பாக்கிய முடையவனுயும், எக்காலமும் சுகியாயுமிருப்பான்.

(126) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி நான் காம்பாவாதிபதியாகிய சுக்கிரன் ஐந்தாம் பாவத்தில் புதனுடன் சேர்ந்திருந்தால் குஜத்திரிம்சாம்சத்தில் ஜெனித்தவனுக்கு மாதா தீர்க்காயுளுள்ளவள்,தாய் வம்சத்தில் சொற்ப சுபமுள்ளவள், நித்தியம் அன்ன தானம் செய்வதில் பிரியமுள்ளவள், பந்துக்களுக்கு உபகாரம் செய்பவள், ஜாதகன் அழகுடையவன், புத்திமான், அழகாய்ப்பேசுபவன், (அழகிய) தெளிந்த முகமுங் கண்களுமுடையவன், மிதமாய்ப் புசிப்பவன், மிதமாய்ப் பேசுபவன், பயப்படத்தக்கவன், கம்பீர புத்தியுடையவன், கர்ப்ப ஸ்ரீமான்,மகாபோகி, தனிகன், கீர்த்தியுடையவன், சுகி, எழுதுவதில் சமர்த்தன், வித்தியா சௌக்கியத்துடன் கூடினவன்; சங்கீதப்பிரியன், காமமுடையவன், பரஸ்திரி சங்கமத்தால் பாபத்தையுடையவன், பாலியத்தில்சுகி, சுகமுடையவன்,பிறகு கொஞ்சம் சிலவுடையவன், கொஞ்சரோகாயோக பலனுடையவன், பிற்பாடு சுகமுடையவன், அதிபாலியத்தில் விவாகத்தை அடைவான், இருபத்தேழு வயதுக்குமேல் சுகமுண்டாகும், முப்பத்தைந்து வயதுக்குமேல் நல்லவாகனமடைவான், நாற்பதில் விசேஷமுடையவன், முதிர்ந்த வயதில் சுகமுடையவன், லோகத்தில் நல்ல பிரசித்தமான கீர்த்தியுடையவன்.

(127) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய செவ்வாய் லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகனுடைய பின் சகோதரன் நல்ல கீர்த்தியுடையவன், அவன் கிராமம், பூமி, அதிகாரமுடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், அரசாங்கஜன சிநேகமுடையவன், ஜன்மதாரா தெசையில் பிதாவுக்குச் சுகமும் தனவரவும், தேக சுகமும் ஜாதகனுக்குச் சகோதர விருத்தியும், கொஞ்சம் சரீர பீடையும், பிறகு சுகமும், சுபப்ராப்தியும் உண்டாகும். ஸம்பத் தெசையில் கொஞ்சமுண்டாகும். ஆறுவது வயதில்

அக்ஷராப்பியாசமும், ஏழாவது வயதில் உபநயநமும், ஸம்பத் தெசையில் சுயபுக்தியில் குரு தனுசு ராசியில் கோசாரத்தில் சஞ்சாரகாலம் பிரம்மோபதேசத்தை சந்தேகமில்லாமல் அடைகிறான். பிரம்மோபதேசகாலத்தில் விசேஷ பாக்கியவிருத்தி உண்டு. தாய், தகப்பன், ராஜனால் நன்கு கொண்டாடப்படுவார்கள். விவாக காலத்தில் ஜாதகன் மிகவும் அதிகமான சம்பத்தையும் அடைவான். மாமனாருக்குச் சம்பத் தெசையில் சௌக்கியமுண்டு.

(128) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் புதனுடன் சேர்ந்திருந்தாலும், புதனால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்கு ஸம்பத் தெசையில் சுக்கிர புக்தியில் வித்தியாலாபம் உண்டாகும், ஜாதகன் எழுதுவதில் சமர்த்தன், மூன்று பாஷைகளில் பயிற்சியுடையவன், பிரம்மவித்தை யறிந்தவன், தெளிந்தவன், சேர்க்கவும், விலக்கவும் தெரிந்தவன், சுகமுள்ளவன், ஸம்பத்தெசையில் சூரிய புக்தியில் அல்லது சுக்கிர புக்தியிலேயேயாவது குரு, மேஷ ராசியில் கோசாரத்தில் இருக்கும்போது விவாகப் பிராப்தியானது தன் ஜென்ம தேசத்திலேயே ஜென்ம பூமிக்குத் தெற்கில் அல்லது மேற்கில் மாமன், மாமி, முதலியவர்கள் சுகத்தையுடையவனாய் விவாகத்தை யடைவான். குடும்பத்திலேயே இருப்பவனுடைய வீட்டில் விவாகம் நேரிடும். மனைவி ரூபலக்ஷணத்துடன் கூடியவளாயும், சகோதர பிராதாக்களுடன் கூடினவளாயும் வம்சத்தில் விருத்தியுடையவளாயுமிருப்பாள். விவாகத்துக்குப் பின்பு சுபப் பிராப்தியும் பிதாவுக்குச் சுகமும் தனக்குச் சுகமும் உண்டாகும்.

(128) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் பாபக்கிரக மிருந்தாலும், அந்த ஏழாம் பாவாதிபதி பலமுள்ள பாபருடன் கூடியிருந்தாலும் ஜாதகனுக்குக் கொஞ்சம் தார பீடையுண்டாகும். ஜாதகன் இரண்டு தாரமுடையவன், அல்லது அவன் மனைவி சங்காதோஷத்தால் பீடிக்கப்படுவாள். சுக்கிரன் பலத்துடன் இந்தக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும், சுக்கிரனால் ஷ்டி ஏழாம் பாவாதிபதி பார்க்கப்பட்டாலும் தாரத்துக்குச் சுகமுண்டாகும்.

(129) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம் ஆகி ஏழாம் பாவாதிபதி செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கொஞ்சம் பரஸ்திரீ சங்கமம் செய்பவன், பச்சாத்தாபப்பட்டுப் பிறகு ஜீதேந்திரியனாவான், பதினாறும் வயதில் அல்லது பதினேழாம் வயதில்

மனைவியால் சௌக்கியம் உண்டாகும்; ஸம்பத்தார தெசையில் சுபா அசுப பலனிரண்டும் சமமாயிருக்கும், சேர்த்துவைக்கப்பட்ட மூல தனத்தில் செலவு அதிகமும் வரவுக்கு மிஞ்சின செலவும் ஏற்படும்.

(131) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி நீச்சராசியிலிருந்து, புத்திரகாரகன் கேதுவுடன் கூடி யிருந்தால் பெண் குழந்தை தீர்க்கமாயிருக்கும், புருஷக்குழந்தையால் சோகம் உண்டாகும். புத்திர ராசியானது சனியால் பார்க்கப்பட் டால் சந்தானப் பிரதிபந்தமுண்டாகும். ஸம்பத் தெசையில் குரு புக்தியில் குரு கோசாரத்தில் விருச்சிக ராசியில் இருக்க கற்ப்போர் பத்தி உண்டாகும். புத்திர ஸ்தானாதிபதி நீசராசியிலிருந்தால் சீமந்த சிசுவானது மரித்துவிடும். இந்த தோஷத்துக்குச் சாந்தி செய்தால் ஜீவசந்தானம் உண்டாகும். சாந்தியாகச் சேது ஸ்நானம் அவசியம் செய்து நாகசாந்தி, சிம்சுமார ஜெபம் செய்ய வேண்டியது, பின்பு இரண்டு புத்திரர்களும், இரண்டு புத்திரிகளும் தீர்க்க ஜீவியாய் இருப் பார்கள்.

(132) ஜென்ம லக்கினம் கடகம் (பங்கஜாம்சம்) ஆகி பிறந்தவ னுக்குச் சந்திரன் உபயராசியில்லாத மீதி ராசியில் ராகுவுடன் கூடி யிருந்தால் ஜாதகன் தரித்திரனாவான். உபய ராசியில் சந்திரனும் ராகுவும் கூடியிருந்தால் ஜாதகன் நல்ல பாக்கியமுடையவன், பதினாயி ரத்துக்கதிகமான பணத்தையுடையவன், அந்த சந்திராராகு தெசையில் ஜாதகன் வெகு சுகமுள்ளவன். பிரத்தியத்தார தெசையில் பிரபல உத்தியோக ஜீவனமும், ராகு தெசையில் குரு புக்தியில் கொஞ்சம் யோகபங்கமும், முன்னால் ஏற்பட்ட விரோதத்தால் சேர்த்து வைக் கப்பட்ட தன நாசமும் ஏற்படும், ராகு தெசையில் புதபுக்தியிலிருந்து கொஞ்சம் சுகமும், நானாமார்கத்திலும் சுபமும், க்ஷேத்திரமூலம் சுக மும் உண்டு. சுக்கிரபுக்தியில் விசேஷ சுகமுண்டு, ஜாதகன் தர்ம மார்கத்தில் நடந்து சுகியாகவும் விசேஷ தர்ம சித்தியுடையவனாகவும் இருப்பான், சூரிய புக்தியில் விசேஷ சுகமுண்டு. பிரத்தியத்தார தெசையில் சுகமும், கஷ்டமும் இரண்டும் கொஞ்சம் கொஞ்சம் உண் டாகும், இரண்டாம் பரியாயத்தில் கோசாரத்தில் விருஷப ராசியில் சனி வரும் சமயம் தாய்க்குப் பீடையும் உண்டாகும்.

(133) ஜென்ம லக்கினம் கடகம் (அம்புஜாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 114-48 கலை முதல் பாகை 115-00 கலைவரை) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி சுபருடன் கூடியிருந்தாலும், விரைய

பாவத்தில் குருவுடன் கூடியிருந்தாலும் அந்திய காலத்தில் ஜாதகன் கியானத்துடன் இருந்து புண்ணிய லோகப்பிராப்தி அடைவான்.

(134) ஜென்ம லக்கினம் கடகம் (வாருணும்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 112-48 கலை முதல் பாகை 113-00 கலை வரை) ஆகி குரு லக்கின கேந்திர, திரிகோணங்களில் ஷஷ்டியம்சத்திலிருந்தால் ஜாதகன் பத்தாவது கர்ப்பத்தில் ஜெனித்தவன், மூத்த சகோதாருடன் கூடினவன், பின் சகோதா மில்லாதவன், இரண்டு சகோதரிகள் நீண்ட ஆயுளுடையவர்கள். ஜாதகன் வெளுப்பு நிறமுள்ளவன், நல்ல ஆகிருதி உடையவன். லக்கினுதிபதி மேஷாம்சத்திலிருந்து பாக்கியஸ்தானுதிபதி பத்திலிருந்தால் மகோததிக்கு சமீபமான தேசத்தில் நகரத்தில் ஜெனித்தவன், உத்தராம்சமானல் வனப்பிராந்தியத்தில் சிறு கிராமத்தில் ஜெனனமானவன், பூர்வ பாகத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவகால வேதனை கொஞ்சமாயிருக்கும், உத்தராம்சத்தில் தாய் அதிக வேதனையை அடைந்திருப்பாள்.

(135) ஜென்ம லக்கினம் கடகம் (வாருணும்சம்) ஆகிப் பிறந்தவனுக்குச் சந்திரன் சுபருடன்கூடியிருந்தாலும், சுபரால் பார்க்கப்பட்டாலும், ஷஷ்டியம்சத்தில் குரு, சந்திர, சுக்கிருடன் கூடியிருந்தாலும், ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுள்ளவள், குணவதி, சுத்தமானவள், பதிவிரதை, வம்சவிருத்தியுடையவள்.

(136) ஜென்ம லக்கினம் கடகம் (வாருணும்சம்) ஆகி பிதுரு காரகனை சூரியன் பிதுருஸ்தானத்திலிருந்து, சனி காலகூடாம்சத்திலிருந்து சூரியனைப்பார்த்தால் ஜாதகனுடைய பிதாவுக்குச் சுகமில்லை என்று சொல்லப்படுகிறது, பிதா விஷ்ணு பக்தியுடையவன், வைஷ்ணவ ஆசாரத்துடன் கூடியவன், அற்ப பாக்கிய தனத்துடன் கூடினவன், அற்பாயுளுள்ளவன்.

(137) ஜென்ம லக்கினம் கடகம் (வாருணும்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் செவ்வாயிருந்தாலும், லாப பாவத்தில் ரவியுடன் கூடியிருந்தாலும் சகோதா உற்பத்தி நாசம் ஆகும். இரண்டு அல்லது மூன்று சகோதரர்கள் தீர்க்க ஆயுளுடன் இருப்பார்கள்.

(138) ஜென்ம லக்கினம் கடகம் (வாருணும்சம்) ஆகி பதினேராம் பாவாதிபதி புதனுடன் கூடியிருந்தால் புதத் திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன், மூத்த சகோதரனுடன் கூடியிருப்பான், ரூபலக்ஷணம்

நிறைந்தவன், தேஜஸுடையவன், நித்திய கர்மமுடையவன், வேறு பாஷையைப் பரிசீலனைசெய்தவன், திரவியம் சம்பாதனையில் சமர்த்தன், வாத, சிலேஷ்ம சுபாவமுள்ளவன், பரோபகாரம் செய்பவன், நல்ல அறிவாளி, அரசாங்கத்தில் பிரசித்தமுள்ளவன், தியாக குணமுடையவன், பந்து ஜனப்பிரியன், நித்தியம் தேவி ஸ்தோத்திரத்தைப் பிரியமாய்ச் செய்பவன், உபாயத்தால் காரியசாதனஞ் செய்துகொள்வான், அயல் ஸ்திரீ சேர்க்கை யுள்ளவன், காமீ, ஸதா விஷயபோகத்திலாசையுள்ளவன், ஜென்ம தெசையில் நான்காவது வயதில் மாந்தசுரத்தினாலும், பயத்தாலும் பீடிக்கப்படுவான், ஐந்தாம் வயதில் தந்தையை இழப்பவன், ஆறும் வயதில் வித்தை கற்க ஆரம்பம் செய்வான், பத்து வயதில் வைசூரி பீடை உண்டு. பன்னிரண்டாவது வயதில் சுகம் அடைகிறான். பதினைந்தாவது வயதில் தாரலாபமும், பதினெட்டில் ஸ்திரியைச் சேர்த்துக்கொள்வதும், இருபத்திரண்டாவது வயதில் புத்திரோற்பத்தியும், அல்லது இருபத்துமூன்று வயதிலாவது புத்திரபிராப்தியும், பத்தொன்பது அல்லது முப்பது வயதில் சகோதர நாசமும், முப்பத்தேழாம் வயதில் தன் மனைவிக்கு மரணமும் உண்டாகும். நாற்பது வயதில் விவாஹமும் அதற்குப் பிறகு யோகம் பங்கமாகி ஐம்பதாவது வயதில் தாய் மரணமும், ஐம்பத்தாறுவது வயதில் முதல் யோகமும், புத்திரன் மூலம் சுகப்ராப்தியும், அறுபது வயதில் தேக பீடையும் உண்டாகும். அதன் பிறகு சுகமும், தர்ம விருத்தியும் உண்டாகும். ஜென்ம தெசையில் ஐந்தாம் வயதில் தகப்பன் மரணத்தின்பின்பு மூத்த சகோதரனால் சுகத்தை அடைகிறான்.

(139) ஜென்ம லக்கினம் கடகம் (வாருணும்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி, பன்னிரண்டாம் பாவத்தில் புதனுடன் சேர்ந்திருந்தால் ஜாதிக்கனுகுணமான படிப்பை அடைவதும், ஊஹம், அபோஹம் தெரிந்தவனும், சுகியும் ஆகிறான்.

(140) ஜென்ம லக்கினம் கடகம் (வாருணும்சம்) ஆகி ஸுதாஷஷ்டியம்சத்தில் குரு யிருந்து புத்திர ஸ்தானாதிபதியால் பார்க்கப்பட்டாலும், புத்திர ஸ்தானாதிபதியுடன் கூடியிருந்தாலும், சனி, மீன ராசியிலிருந்தாலும் வெகு புத்திரயோகம் உண்டு. பிராதுருநாசத்துக்குப்பிறகு துக்கமும், பலவழிகளில் தன நஷ்டமும், பிறகு சௌக்கியமும், சுபபிராப்தியும் உண்டு. க்ஷேம தெசையில் சுகத்தையும் அடைகிறான்.

(141) ஜென்ம லக்கினம் கடகம் (வாருணும்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி சனியால் பார்க்கப்பட்டால் ஜேஷ்ட புத்திரி நாசமடைவாள், பிறகு புத்திர சுகம் உண்டாகும்.

(142) ஜென்ம லக்கினம் கடகம் (மாலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 93-48 கலை முதல் பாகை 94-00 கலைவரை) ஆகிலக்ன பாவாதிபதி இரண்டாம் பாவத்திலிருந்து சுபாம்சத்தில் பலத்துடன் கூடியிருந்தால் மஹாநதி பிராந்தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஜாதகன் பிறந்தவனுவன், சுப ஆகிருதியும், நித்திய சுகியாயும், சிவப்பு நிறம் உள்ளவனுயுமிருப்பான்.

(143) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 104-48 கலை முதல் பாகை 105-00 கலைவரை) ஆகி பூர்வபாகத்தில் ஜெனனமாகி ஜென்ம லக்கினுதிபதி சுப க்ஷேத்திரத்தில் பாக்கியாம்சத்தில் இருந்தால் பெரிய நதிப்பிராந்தியத்தில் விப்ரவமிசத்தில் புண்ய க்ஷேத்திரத்தில் ஜெனித்தவனுவான், துலாம்சத்தில் பாக்கிய பாவத்தில் சந்திரனிருந்து பாபக்கிரகங்களுடன் சேர்ந்தோ, பார்க்கப்பட்டோ இருந்தால் தாய்க்குத் சூதிகா தோஷம் உண்டாகும், சாந்தியால் சுகமுண்டாகும். பிரசவ சமயத்தில் தாய் வேதனை கொஞ்சம் உடையவளாயிருந்திருப்பாள். உத்தராம்சத்தில் ஜெனித்தால் தாய்க்குப் பிரசவ வேதனை அதிகமும், மாணத்துக்குச் சமானமாகிப் பிழைப்பாள்.

(144) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் இருந்தாலும், சுபாம்சத்தில் சுபாசியை அடைந்திருந்தாலும் மாதாவுக்கு ஸௌக்கியமுண்டாகும்.

(145) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகி எட்டாம் பாவத்தில் குரு இருந்து எட்டாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மத்தியாயுளுள்ளவன்.

(146) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சுதாம்சத்திலிருந்து காந்தாம்சத்திலிருக்கும் சனியால் பார்க்கப்பட்டாலும், பத்தாம் பாவாதிபதி குருவுடன் சேர்ந்திருந்தாலும் தீர்க்காரம்ப வயதுடையவன், அதாவது எழுபது வயதுள்ளவன், ஐம்பதிலும், ஐம்பத்தாறுவது வயதிலும் அபமிருத்து பயம் உள்ளவன், நாற்பதில் கொஞ்ச அபமிருத்துபயமுண்டு, சாந்தி

யால் சௌக்கியமும் உண்டாகும், அப்போது தனக்குச் சமமான ஜனாரிஷ்டமும், தேக பீடையும், மனோவியாதியும் உண்டாகும்.

(147) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் காந்தாம்சத்தில் இருக்கும்போது பிறந்தவன் அறுபத்தைந்து வயது வரை ஜீவித்திருப்பான் என்றும், சிலர் எழுபத்திரண்டு வயது வரைக்கும் ஜீவித்திருப்பான் என்றும் சொல்கிறார்கள்.

(148) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகிப் பிறந்தவனுக்கு ஒன்பதாம் பாவாதிபதி எட்டாம் பாவத்திலிருந்து, சூரியன் கேந்திர திரிகோணங்களிலும், புதன் வைஷ்ணவாம்சத்திலும் இருந்தால் பிதா அற்ப சுகமுடையவன், விஷ்ணு பக்தியுடையவன், மிதமான வித்யா சம்பத்துடையவன், ஸம்பத் தெசையில் ரவிபுக்தியி லல்லது குஜபுக்தியில் சனி விருச்சிக ராசியில் கோசாரத்தில் சஞ்சார காலம் பிதாமறிப்பான், அல்லது அதன் பிறகு பன்னிரெண்டாம் பாவாதிபதி தெசையில் பிதாவுக்குக்கிலேசமும், நான்காம் பாவாதிபதி யின் அம்சத்திலாவது அவனுடைய திரிகோணத்திலாவது சனி கோசாரத்திலிருக்கும் சமயமும், நான்காம் பாவாதிபதியின் திருஷ்டி ராசியிலும் சனி வரும் சமயம் அரிஷ்டமும் நேரிடும் என்றும், சிலர் தனுசுராசியில் சனி வந்ததும் அரிஷ்டம் நேரிடும் என்றும் அபிப்ரா யப்படுகிறார்கள்.

(149) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகிப் சந்திரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும், சுதாம்சத்தில் பாக்கிய ராசியில் இருந்தாலும், சுகாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருக்கப் பாபர்களால் பார்க்கப்பட்டிருந்தாலும் கூட தாய் விசேஷ சுகமுள்ள வளாகவும், சுத்தமுள்ளவளாகவும், குணவதியாயும், அன்னதானம் செய்வதில் பிரீதியுள்ளவளாயும், நற்குணங்களுடன் கூடியவளாயும், ஜென்மாந்தரத்திய பாபசேஷத்தால் விருத்தாப்பிய காலத்தில் புத்திர சோக முடையவளாயுமிருப்பாள். ஜாதகன் தன் தாயின் புண்ணியப் பிரபாவத்தால் வம்சபாக்ய விருத்தியுள்ளவன். க்ஷேம தெசையில் புத புக்தியில் அல்லது கேது புக்தியில் கோசாரத்தில் கும்ப ராசியில் சனி யிருக்கும் சமயம் மாதா மரணத்தை அடைவாள், அல்லது பதினோராம் பாவாதிபதியின் அம்சத்திலாவது அவன் திரிகோண ஸ்புடராசிகளி லாவது சனி கோச்சாரத்தில் இருக்கும் சமயம் அல்லது சனி மகர

ராசியின் கடைசியில் அல்லது கும்பத்திலிருக்கும் சமயம் சனி புக்தியிலேயே மாதாவுக்கு மரணத்தைச் சொல்லவும்.

(150) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் செவ்வாய் குருவுடன் கூடியிருந்தாலும், மூன்றும் பாவாதிபதி நீச்சனுயிருந்தாலும் அற்ப சகோதரம் உண்டு, ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், இளைய சகோதரன் அற்ப சுகி, ஒரு சகோதரி வெகு காலம் ஆயுளுடையவள், அவளுக்குச் சகோதர சௌக்கியமுண்டு. கர்மேசனுடைய அம்சத்தில் அல்லது அவனுடைய திரிகோணத்தில் கோசாரத்தில் சனி விருச்சிகராசியிலிருக்கும் சமயம் சகோதரவர்கத்தில் அரிஷ்டம் சம்பவிக்கும்.

(151) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகி புத திரிம்சாம்சத்தில் ஜெனித்த சகடயோக ஜாதகன் வெளுப்பு நிற தேகமுடையவன், அழகுடையவன், சமதேக முடையவன், அறிவாளி, தீரன், எழுத்து வித்தையில் சமர்த்தன். லக்கின பாவாதிபதி ரவியுடன் கூடியிருந்தால் உஷ்ண தேகமுடையவனுயிருப்பான், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், காமீ, பாலியத்தில் கிலேசமுடையவன், பிதா அரிஷ்டமானவள், அம்மானுல் சுகமடைவான். இருபத்தைந்து வயதுக்குமேல் சுகமுடையவன், லக்கினத்திற்கு ஏழாம் பாவாதிபதியால் சுக்கிரன் பார்க்கப்பட்டிருக்கப் பிறந்தவன் ரவியுடன் மதியும் கூடியிருந்தால் அழகுடையவன், நல்ல சுபமுடையவன், காந்தியுடையவன், அழகியமுகமுங் கண்களுமுடையவன், அதிரிஷ்டசாலி, மேதாவி, ராஜயோகத்துடன் கூடினவன், சங்கீதப் பிரியமுடையவன், காமீ, வியபிசாரம் செய்பவன், சூரன், நாடகாலங்காரப்பிரியன், காவியத்திலும் இஷ்டமுடைய லோலன், விஷயபோகத்தில் இச்சையுடையவன்.

(152) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி நீச்ச கிரகத்துடன் சம்மந்தப்பட்டிருந்தாலும், இரண்டாம் பாவத்தில் சனியிருந்தாலும், லக்னுதிபதியுடன் கூடியிருந்தாலும் அநாசாரன், தியாகி, கம்பீர புத்தியுள்ளவன், எப்போதும் அன்னதானத்துடன் கூடினவன், பரோபகாரமுடையவன், தர்மாத்துமாவாயிருப்பான், லக்னுதிபதி புதனுடன் சேர்ந்திருந்தால் விசேஷ விஷ்ணு பக்தியுடையவன். நித்தியம் அரசாங்கமூலம் சுகமுடையவன், அன்னியதேசத்தில் பாக்கியமுடையவன், செவ்வாய் மீனும்சத்தில் இருந்தால் ராஜசேவையால் ஜீவனம், முப்பது வயதில் யோகமுடைய

வன், ராஜயோகமுண்டாகும், நிச்சயமாய் உண்டாகும். இருபத்தேழு வயது வரையிலும் கிலேசத்துடன் ஜீவனம் செய்வான், அதற்குப் பிறகு பாக்கிய யோகமுடையவன், இருபத்துநான்கு வருஷம் யோக மாயிருக்கும், இதில் பாதியில் தேக பீடையும் உண்டாகும், அப்படி யில்லாவிடில் சகோதரக் கிலேசமாவது உண்டாகும், தனக்குச் சம மான ஜனங்கள் நாசமாவார்கள், அதற்குப்பிறகு ஆயுள்காலம்பூராவும் சுகவானாயிருப்பான், ஜென்ம தெசையில் அற்ப சுகமும், தகப்பனால் அற்ப சுகமும், பாலரோக பீடையும், பிதா புண்ணியத்தினால் சுகமும், ஸம்பத் தெசையில் சொற்ப சௌக்கியமும், முற்பாதியில் கெடுதியும் சுக்கிர புக்தியிலாவது, கேது புக்தியிலாவது உபநயநமும்; ரவிபுக்தியில் பிதா மரணமும், ஸம்பத் தெசையில் மத்திய பாகத்தில் தேசாந்தி ரம் போதலும், அம்மானால் சுகமும், சம்பத்தார தெசையின் முடிவில் குரு புக்தியில் விவாகமும் நடக்கும். வேறு தேசத்தில் விவாகம் நடக்கும், பார்யை பாக்கிய வம்சத்தில் பிறந்த கன்னிகையாவள். விவாகத்துக்குப்பிறகு சுகமும், சுயப்பிரபலமும், தன சம்பாத்தியமும், அரசாங்க ஜன சிநேகமும், பல வழிகளில் தனவரவும், மனைவியின் புண்ணியப்பிரபாவத்தால் விபத் தெசையில் விசேஷ சம்பத்தும், முற் பாதியில் சுகமும், புத்திரனில்லாத விசாரமும், வேசிஸ்திரீ, பரஸ்திரீ சேர்க்கையும் உள்ளவனாகி தெசையின் முடிவில் புத்திரப் பிராப்தியும், கோசாரத்தில் குரு கடகராசியில் வருங்காலம் கர்ப்பா தானமும், புத் திரோற்பத்தியும் உண்டாகும். புத்திரன் பிறந்த பிறகு ராஜயோகாதி விருத்தியும், சகடயோகத்தால் புத்திரக் கிலேசமும் உண்டாகும்.

(153) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகி செவ்வாயின் அம்சத்தில் செவ்வாயும் குருவும் கூடியிருந்தாலும், சனி யால் பார்க்கப்பட்டாலும், நான்காம் பாவத்தில் ராகு இருந்தாலும் புத்திரன் பிறந்து மரித்து விடுவதால் சோகத்தால் பீடிக்கப்பட்டவனா கவும், தேசாந்திரத்தில் சுகமுள்ளவனாகவும் இருப்பான். க்ஷேம தெசையில் ராஜயோகமும், லக்கின பாக்கியத்தில் நீச்ச கிரகம் சம்ப வித்தால் நீச்சப் பிரபுவால் சுகமும், நீச்ச அரசனுடைய ராஜியத்தில் நீச்ச பிரபுவால் ஜீவனமும், ரவி புக்தியிலிருந்து க்ஷேம தெசையில் விசேஷமும், சுயார்ஜிதமும், கிருகத்தில் லக்ஷிமி கடாக்ஷமுண்டாகும், நித்தியம் அன்னதானம் செய்பவனாகவும், சந்தோஷ முள்ளவனாகவும், புண்ணியக்ஷேத்திர வாஸமுள்ளவனாகவும் இருப்பான். சுக்கிர தெசை யில் விசேஷ பாக்கியமும், போகஸ்திரி சேர்க்கையும் உண்டாகும்.

(154) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகி பத்து, ஒன்பது, ஏழு, எட்டு, முதலிய ஸ்தானங்களில் ரவி முதலான கிரகங்களிருந்தால் கேந்திராதி யோகம் என்ற பெரிய யோகம் உண்டாகும், அந்த யோகத்தில் பிறந்தவன் ஆயுள் பூராவும் சௌக்கியமுடையவன், கீர்த்தியுடையவன், ஸ்ரீமானுயிருப்பான், பிரசித்தியுள்ளவன், பிரபு, குதிரை, பல்லக்கு முதலிய வாகனங்களுடையவன், நித்தியம் வீட்டில் வைபவத்துடன் கூடினவன், நித்திய சம்பத்துடன் கூடினவன், நல்ல மனைவி புத்திரன் பாக்கியமுடையவன், கீர்த்தி பிரபாவ சௌரிய கோபாதிகளுடன் தேசாந்தரத்தில் கீர்த்தியுடையவனுயிருப்பான், இதைப்போலவே யோகத்திலும் கொஞ்சம் வித்தியாசமானது மாளவி யோகம், அதாவது சுக்கிரன் கேந்திரத் திரிகோண ஸ்வக்ஷேத்திர உச்சத்தில் இருந்தால் யானை, குதிரை, பல்லக்கு, சமுத்திரம், நூர்க்கம், குணம், கூட்டம், நல்ல களத்திரம், அன்னிய ஸ்திரீ போகமுமுள்ள அரசனுகவும், போகசாலியாகவும், விளங்குவான்.

(155) ஜென்ம லக்கினம் கடகம் (திரைலோக்யாம்சம்) ஆகிக் குருவும், செவ்வாயும் சேர்ந்திருந்தாலும், கடக ராசியிலிருந்தாலும், சுய க்ஷேத்திரத்திலிருந்தாலும், யாதொரு கேந்திரத்திலிருந்தாலும் குதிரையின்மேலும், யானையின்மேலும், மலையிலும், துர்கங்களிலும், வெகு விரைவாக ஏறத்தெறிந்தவனுகவும், துர்க்கங்களுக்கு அதிபதியாகவும், பூர்ணயுளுடையவனுகவும், சுவர்ணம், தந்தம் முதலியவற்றுல் செய்யப்பட்ட பல்லக்குடையவனுகவும், மணி ரத்னமிழைத்த கிரீடத்தைத் தரித்த அரசர்கள் பேட்டிக்காக அதாவது சேவைக்காக வீட்டின் வாசற்படியில் காத்துக்கொண்டிருக்கக் கூடிய பெரிய அரசனுவான்.

(13) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்யாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 91–24 கலை முதல் பாகை 91-36 கலை வரை) ஆகி பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவத்தில் சனியும், செவ்வாயும் கூடியிருந்து, லக்கின பாவாதிபதி மேஷராசியை யடைந்திருந்தால் வனப்பிராந்தியமான பிரதேசங்களில் பட்டிணத்தில் ஜெனனம் சம்பவிக்கும். உத்தராம்சத்தில் ஜெனித்தவனுனல் நதிப்பிராந்தியத்தில் சிறு கிராமம் என்றும், சீக்கிரமாக பிரசவமானவன் என்றும், பூர்வ பாகமானுல் தாய் அதிகம் பிரசவ வேதனை அடைந்தவள் என்றும் ஆகும்.

(157) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்சாம்சம்) ஆகி சந்திரன் சனியுடன் சேர்ந்திருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் தாய்க்குக் கொஞ்சம் பீடையுண்டாகும், ஜென்மாந்திர புண்ணியவசத்தால் அக்காலம் மாதா சுகமடைவாள், லக்கினாதிபதி பாப ராசியை அடைந்திருந்தாலும் கொஞ்சம் பாலாரிஷ்ட தோஷமுண்டாகும்.

(158) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்சாம்சம்) ஆகி சந்திரன் கேந்திரத்திலிருந்தாலும், சந்திரனுக்கு மூன்றில் ராகு இருந்தாலும் பாலாரிஷ்டம் நிவர்த்தியாகும், ஜென்மதார தெசையில் தாய் தகப்பனுக்குக் கொஞ்சம் சுகம் உண்டாகும், ஜாதகனுக்கும் தேக சுகம் அப்படியே உண்டாகும்.

(159) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்யாம்சம்) ஆகி ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களில் ரவியிருந்தாலும், ஒன்பதாம் பாவாதிபதி பாபருடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய பிதா தரித்திர முடையவன், சிவபக்தி உள்ளவன், பாலியத்தில் கொஞ்சம் சுகத்துடன் கூடினவன், மத்திய வயதிலும் அல்ப சுகி, கொஞ்சம் அஸ்வதந்திரம் தெரிந்தவன், தாரித்ரிய வசமடைந்தவன், விபத்தெசையில் மறிப்பான்.

(160) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்யாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி லக்கின கேந்திர திரிகோணங்களிலிருந்து மாதுருகாரகன் கேந்திர ராசிகளிலிருந்தால் தாய் வம்சத்தில் கொஞ்சம் சுகமுண்டாகும், தாய் குணவதி, கிருஹஸ்தன் வீட்டில் பிறந்தவள், அற்ப பாக்கியத்துடன் கூடினவன், அற்ப காலம் ஜீவிப்பவன்.

(161) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்யாம்சம்) ஆகி குருத் திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன், ரூபவான், நல்ல காந்தியுள்ளவன், வெளுப்பு நிறமுள்ளவன், நல்ல ஆகிருதி உடையவன், சூத்திர ஜென்மம், நல்ல புத்திமான், ஸ்ரீமான், சத்ரு பீடையில்லாதவன், பரோபகாரம் செய்பவன், நியாயவாதி, இந்திரியங்களை ஜெயித்தவன், சுயார்ஜிதமாய்ச்சம்பாதிப்பவன், மத்தியவயதில் பாக்கிய முடையவன், வைதீக ஆசாரத்துடன் கூடினவன், இதற தேவதைகளினிடத்தில் பக்தியுள்ளவன், பிராமண பக்தி விசேஷமாயுள்ளவன், உண்மையே பேசுபவன், குருவுக்குப்பிரியமானவன் குருவினிடத்தில் பிரியமுள்ளவன், இளம் வயதில் தரித்திரமுள்ளவன், தேசாந்திரம் போனபின்பு சுகமடைவான், சாதுக்களுக்கு உபகாரம் செய்பவன், வயதின் கடைசியில் (கிழவயதில்)

சுகத்தையுடைய பணக்காரன், இருபத்தைந்து வயதுக்குமேல் யோக முள்ளவன், சுயமாக பிரபலமடைவான், சுகத்துடன் கூடினவன், நாற்பதுக்குமேல் நல்ல விசேஷமும் உள்ளவன், தனக்குச்சமமான ஜனங்களால் ஆச்ரயிக்கப்பட்டவன், பந்து மூலம் நல்ல பாக்கியத்தை அடைவான், கிரைய விக்கிரயத்தால் ஜீவனமுள்ளவன், பலதேசங்களிலும் பிரசித்த முடையவன், நல்ல கீர்த்தியுடையவன், விருத்தாப்பிய வயதில் புத்திர சோகமுள்ளவன், தத்து புத்திரனுல் ஸந்ததி விருத்தியுள்ளவன், இப்படிப்பட்ட சுத்தமானவன், ஏழாம் தெசையில் மரணமடைவான், இவன் எழுபது வயதுள்ளவன்.

(162) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்சாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி செவ்வாயுடன் சேர்ந்திருந்தால் அங்கக் குறைவுள்ள களத்திரம் விவாகமாகும்.

(163) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்யாம்சம்) ஆகி சந்திரன் கேந்திர திரிகோணங்களிலிருந்து அவனுடைய தெசை நான்காவது தெசையானுல் பாக்கிய விருத்தியும், சௌக்கியமும், தனவரவும், சுயப்பிரபல்யமும் உண்டாகும்.

(164) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்யாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி நீச்சனுகி சனியுடன் சேர்ந்திருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும், ஒன்பதாம் பாவாதிபதி ராகுவுடன் சேர்ந்திருந்தாலும், ஸந்தானத்துக்கு இடையூறுண்டாகும், ஐந்தாம் பாவத்தில் சுக்கிரன், இருந்தாலும், ஸ்திரீ கால ஜாதகத்தில் முதலில் பெண்குழந்தையும், கன்னிகை விருத்தியும் சொல்லவும், குரு மிருத புத்ராம்சத்தில் இருந்தாலும் பிறக்கும் புருஷ ஸந்தானம் நாசமடையும், க்ஷேமதார தெசையில் ஸ்திரீ பிரஜைகளினுடைய விருத்தியுண்டாகும், ஐந்தாவது தெசையில் சௌக்கியமும், விசேஷ சம்பத்தும் உண்டாகும். கடக லக்கினத்தில் ஜெனித்தவனுக்குச் செவ்வாய் தெசையில் சுபவிருத்தியுண்டாகும், நூதனமான புது வீடு கட்டுதலும், வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷமும் உண்டாகும், சாதனுதி தெசையில் சுயபுக்தியில் புத்திர உற்பத்தி உண்டாகும், சந்திரனுக்கு மூன்ருமிடத்தில் ராகு இருந்தால் அவனுடைய தெசையில் விசேஷ சுகமுண்டாகும்.

(165) ஜென்ம லக்கினம் கடகம் (சௌம்யாம்சம்) ஆகிப் பன்னிரண்டாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு அந்திய காலத்தில் நல்ல கதியுண்டாகும்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் கடக லக்கினத்திற்கு 165-விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட கடக லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் கடக லக்கின பலனின் துடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்றுஅறியவும்.

சிம்ம லக்கின ஜாதகம்.

——(***)——

(1) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாயாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 148-00 கலை முதல் பாகை 148-12 கலை வரையில்) ஆகி லக்கினாதிபன் பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரனுடையவன், மானி, இரு சகோதரிகள் மத்தியில் விதவைத் தன்மையால் வருந்துவர், வாலிபத்திலே பிதா நாசமடைவன், தாய் தீர்க்காயுளுடையவளாயிருப்பாள்.

(2) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாயாம்சம்) ஆகி சிற்றப்பன் ஸ்தானாதிபனான புதன் லக்கினத்திற்குக் கர்ம ஸ்தானத்திற்குத் திரிகோணத்திலிருந்தால் ஜாதகனுக்குச் சிற்றப்பனில்லை.

(3) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாயாம்சம்) ஆகி சூரியன் லக்கினத்துக்குப் பத்தாம் பாவத்தில் மிதுனாம்சத்தில் புதனுடன் இருந்தால் ஜாதகன் சீக்கிரம் தயையுடையவன், ஜாதகனுக்கு இரு தாரமுண்டு.

(4) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாயாம்சம்) ஆகி லக்கினாதிபன் ரிஷபத்திலிருந்தால் இரு சகோதரிகள் தீர்க்காயுளுடையவராயிருப்பர், மூத்த சகோதரி தீர்க்காயுளுடையவளா யிருப்பாள், இவனுக்கும் மூத்த சகோதரனுக்கும் உத்தியோக ஜீவனமுண்டு, இவன் தகப்பன் மாந்திரீகன், இங்கித மறிந்த குணவான், வித்தை சுகமில்லாதவன், ஜாதகனே கருமை நிறமுள்ளவன், புத்திமான், பரோபகாரி, இரு எழுத்தறிந்தவன், நல்ல ஆஸ்தியுடையவன்.

(5) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாயாம்சம்) ஆகி லாபாதிபன் சூரியனுடன் கூடினால் ஜாதகன் இரண்டாயிரம் தனமுடையவனாவான், மகா நதிக்கரையிலும், நகரத்திலும் வாசம் செய்வான், அவனுக்கு அரசர் வீட்டிலிருந்து அதிக தனலாபமுண்டு.

(6) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 133-36 கலை முதல் பாகை 133-48 கலை வரையிலும்) ஆகி லக்கினத்தில் குரு ராகுவுடன் கூடில் ஜாதகன் நல்ல தேகமுடையவன், தர்மாத்துமா, ராஜ பூஜிதன், புகழுடையவன், காலாந்தரத்தில் தூர்ப்பல தேகமுடையவனாவான், தாய், தகப்பனர் சுகமாயிருப்பர், தீர்க்காயுளுடையவனா யிருப்பான், மந்திரி, அரசன் இவர்களுக்குப் பிரிய

னுயிருப்பான். லக்கினம் வர்க்கோத்தம மில்லாமல் இருந்து லக்கி னத்தில் குரு, ராகுவுடன் கூடினுல் ஜாதகன் அற்பாயுளுடையவ னுவான்.

(7) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி சிம்மத்தில் சிம் மாம்சத்தில் குருவும், கன்னியாம்சத்தில் ராகுவுமிருந்தால் ஜாதகன் அரசாங்கத்தில் நல்ல புகழுடையவனும், வாலிபத்திலே பிதா புகழு டையவனுமாவான்.

(8) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி லக்கினத்தில் குரு, ராகுவுடன் சிம்மாம்சத்திலிருந்தால் ஜாதகன் ராஜபூஜிதனுவான்.

(9) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி குரு சிம்மாம் சத்திலும், கன்னியாம்சத்தில் ராகுவும் கூடி இருந்தால் ஜாதகன் எழு துவதில் நிபுணன், மூன்று எழுத்துக்களில் சமர்த்தன், தர்ம சீலன், புத்திமான், கபடமுடையவன், உள்ளில் கோபமுடையவன், கொஞ் சம் கோப சுபாவமுடையவன், இவன் தகப்பன் அரசனுக்கருகில் காரியம் செய்பவன், உள்ளத்தில் கபடமுள்ளவன், தன் அரசாங்க ஜனங்களை வஞ்சிப்பவனுவான்.

(10) ஜென்மலக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி லக்கினத்தில் கன்னியாம்சத்தில் ராகு இருந்து சூரியன் சுக்கிரனுடன் கூடியிருந் தால் ஜாதகன் பேராசையுடையவனுவான், புகழுடையவன், துக்க முடையவன், பிரசித்தன், காமி, தகப்பனைக்காட்டிலும் அதிக தன முடையவன், ஜாதகன் நடுவயதில் துக்கமுடையவனுகவும், யுக்தி யுடையவனுகவுமிருப்பான், தர்மசீலன், பொறுமையுடையவன், தன வானுகவும், ஹரிசங்கர பக்தியுடையவனுகவுமாவான்.

(11) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி சந்திரன் துலாத்தில் கும்பாம்சத்தில் இருந்தால் ஜாதகன் துஷ்டன், பாப புத்தியுடையவன்.

(12) ஜென்மலக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி சந்திரன் துலாத்தில் கும்பாம்சத்தில் இருந்து சுக்கிரனுடன் கூடினுல் ஜாதகன் ரோகி, வாதரோகமுடையவன், சமர்த்தன், ஆலோசனை சொல்பவ னுவான், நீதிமான், பரதார சம்பந்தமுடையவன், இங்கிதமறிந்தவன், எப்போதும் கோபமுடையவன்.

(13) ஜென்மலக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி துலாத்தில் சந்திரன் சுக்கிரனுடன் கூடினுல் ஜாதகனுடைய பிதா மாதா தீர்க்கா

யுளுடையவராவார். ஜாதகனுடைய தகப்பனுக்கு சகோதாருண்டு. ஜாதகனுடைய பிதாவின் சகோதரி ஒருத்தி புத்திரனுடையவளாவாள், அவள் காலாந்திரத்தில் அவள் கணவன் சகோதர துக்கமடைவான், அவள் தன் பர்த்தாவுக்குமுன் மரிப்பாள்.

(14) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி குரு சிம்மத்தில் சிம்மாம்சத்திலும், சுக்கிரன் தேவஷஷ்டியாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் யோகமுடையவன், புகழுடையவன், சுகீ, மாதா, பிதா தீர்க்காயுளுடையவராயிருப்பர். ஜாதகன் சிவகைங்கரியம் செய்பவன், மானமுடையவன், தீர்க்காயுளுடைய பாட்டனுடையவன். ஜாதகனுடைய மாற்றாந்தாய் சுமங்கிலி, அவள் இவன் பிதாமகியை போஷிப்பாள், அவள் புத்திரனுடையவள், பதிபக்தியுடையவள், மூத்த சகோதரனிடம் அன்புடையவள், அவள் சகோதரி அதிபாக்கியமுடையவள், அவள் குணவதி.

(15) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி சந்திரன் மோஹனும்சத்திலிருந்தாலும், சுக்கிரனுடன் கூடினாலும் ஜாதகனுடைய தாய்க்கு மூன்று சகோதரர் உண்டு, அவள் பர்த்தா பாக்கியத்தால் சந்தோஷமடைந்தவள், புத்திரனிடம் அன்புள்ளவள், தனக்குப்பின் வந்த மனைவி (சக்களத்தி)யின் புத்திரன் முதலியவரிடம் துவேஷமுடையவளாவாள், அவள் காலாந்திரத்தில் வீட்டில் சச்சரவு உண்டு, அவள் சகோதர நாசத்தால் துக்கமடைவாள்.

(16) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி புதன் மகரத்தில் மேஷாம்சத்திலிருந்தாலும், சுகஸ்தானமாகிய நாலாம் ஸ்தானத்தில் கும்பாம்சத்தில் குஜன் இருந்தாலும் ஜாதகனுக்கு மூன்று அம்மான்மார் உண்டு, ஜாதகன் சுகமுடையவனுவான், தாய் வம்சத்தில் தரித்திரத்தன்மையால் தாய் சகோதரி துக்கமடைவாள், தாய் சகோதரி ஒருவள் சுமங்கலி, புண்ணியசாலி, மற்றவள் துக்கமுடையவளாவாள்.

(17) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி சிற்றப்பன் ஸ்தானதிபனான புதன் சிம்மத்திற்கு ஏழில் மேஷாம்சத்திலிருந்தாலும், லக்கினதிபன் பாபருடன் கூடினாலும் ஜாதகனுக்கு இரு சிற்றப்பன்மார். இருமனைவியனாயுடையவராவார். பிதா ஞானவான், பிதா மூத்த சகோதரமற்றவர், அவருக்குச் சகோதரியுடன் மூன்று இளைய சகோதரம் தீர்க்காயுளுடையவராய் இருப்பார்கள்.

(18) ஜென்மலக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி ஐந்தாமதி பன் பாபருடன் சம்பந்தப்பட்டு மூன்றும் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுடைய சிற்றப்பன்மாரில் எவனுவது ஒருவன் இறந்த சந்தான யோகமுடையவன். ஜாதகனுடைய இருசிற்றப்பன்மார், இரு மாமன்மார்கள் மகா பாபிகளாயிருப்பர்.

(19) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி கும்பத்தில் துலாம்சத்தில் சூரியனிருந்தால் ஜாதகனுக்கு பாலரிஷ்டமில்லை. அந்த பாவாதிபன் பலவானுகில் தீர்க்காயுள்.

(20) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி சந்திரன் சுவக்ஷேத்திரத்தில் இருந்தாலும் அல்லது உச்ச க்ஷேத்திரத்திலிருந் தாலும் அல்லது சந்திரன் உச்சக் கிரகத்துடன் கூடினுலும் ஜாத கன் சுகமுடையவனுவான், மாதாபிதா தீர்க்காயுளுடையவராவார்கள்.

(21) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி சூரியனிருக் கும் ஸ்தானுதிபன் உச்சஸ்தானம் பெற்றுவது, அன்றி லக்கினத்திற்கு ஏழாம் பாவாதிபன் குருவால் பார்க்கப்பட்டாவது இருந்தாலும் ஜாதகனுடைய பிதா சிவபக்தியுடையவனுவான், சிவ கைங்கர்யம் செய்வான், சகோதர, சகோதரிகளுடன் கூடியவன், தேவப் பிராமண போஷகன்.

(22) ஜென்ம லக்கினம் சிம்மம் (சிவதாம்சம்) ஆகி சனி லக்கி னத்திற்கு மூன்றும் பாவத்தில் உச்சத்தில் பலவானுயிருக்கினும், அன்றி சனி சந்திரனுடன்கூடி இருப்பினும் ஜாதகனுக்கு மூன்று சகோதரர்களும், இருசகோதரிகளும் தீர்க்காயுளுடையவராயிருப்பர், ஒரு தாய் தீர்க்காயுளுள்ளவளாயிருப்பள்; சந்ததி உற்பத்தி நாசம். சிம்சுமார தானத்தால் புத்திரசுகமுண்டு, அறுபத்தைந்து வயது பர மாயுளாயிருப்பர்.

(23) ஜென்ம லக்கினம் சிம்மம் (மங்களாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 131-36 முதல் பாகை 131-43 வரை) ஆகி லக்கினுதிபன் சுசிராம்சத்தில் சந்திரனுடன் கூடி இருந்தால் ஜாதகன் வாலிபத்திலேயே தாயை இழப்பன்.

(24) ஜென்ம லக்கினம் சிம்மம் (மங்களாம்சம்) ஆகி சூரியன் காாளசஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய பிதா ஞானவான், குணவான், மூத்த சகோதாருடன் கூடியவன், மானி, மூன்று புத்திர ருடன் கூடியவன், சிறிய தகப்பனுக்குத் தத்துபோவான். பன்னி

ரண்டாவது வயதில் தத்து பிதாவும், இருபதாவது வயதில் ஜனக பிதாவும் மரணமடைவர். ஜனக பிதா மரணத்திற்குப் பிறகு சுவிகாரத் தாய் மரணமடைவாள். ஜாதகனே கருப்பு நிறம், அழகியமுகமுடையவனுவான், வாசாலகன், வைணவமதத்தைப் பின்பற்றுவான், காவிய, நாடக சாரமறிந்தவன், வித்தியா சுகம் குறைந்தவன், குணவான், அழகன், அதிருஷ்டசாலி, அன்ன தாதா, தேவப் பிராமணரை போஷிப்பவன், அளவாய்ப் புசிப்பவன், பிரபு லக்ஷணமுடையவன், விவசாயம் செய்வான், நீச்ச ஜனப்பிரியனுமாவான். சில சமயம் உத்தியோக ஜீவனமுண்டு, மூன்றெழுத்து, சங்கீத வித்தை இதுகள் கற்றவன், ஆசார மற்றவன், பந்துக்களைப் போஷிப்பவன், பராக்கிரமம் உடையவன், சுதந்திரமுடையவன், அயலாருக்கு உபத்திரவம் தருபவன், சீக்கிரம் கோபமுடையவன், தயையுடைய மனதும், கொஞ்சம் லோபத் தன்மையும் ஜாதகனுக்குண்டு.

(25) ஜென்ம லக்கினம் சிம்மம் (மங்களாம்சம்) ஆகி ஏழாமதிபன் கேந்திரத்தில் சுராம்சத்திலிருந்தாலும், அன்றி ஏழாம்பாவாதிபன் குஜ நவாம்சத்திலிருந்தாலும் ஜாதகனுடைய மனைவி குணமுடையவள், அனேக புத்திரி, புத்திரருடையவள், சிவந்த மேனியாள், குள்ளமானவள், இனிமையாய்ப் பேசுபவள், அயலானிடம் சம்பந்தமுடையவள், கணவனிடம் அன்புடையவள், ஜாதகனும் விஷயசுகத்தில் விருப்பமுடையவன், காமதுரன், எப்போதும் பெண்களை நாடுபவன், மகாநதிக்கரையிலுள்ள பட்டிணத்தில் வசிப்பான், அதிக தன தானிய லாபமுடையவன்.

(26) ஜென்ம லக்கினம் சிம்மம் (மங்களாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் குரூர ஷஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகன் பகலில் பெண்களைச் சேருவான், ரதிகாலத்தில் சேருவான், விலக்கப்பட்ட (நிஷித்த) திதி காலங்களில் மனையாளிடம் சேருவான், ஐந்து புத்திரர்களும், நான்கு பெண்களும் அல்லது இவைகளுக்கு அதிகமாகவும் உண்டு, சாந்தியால் புத்திர சுகமுண்டு, மூன்று புத்திரர், மூன்று பெண்கள் தீர்க்காயுளுடையவராயிருப்பர்.

(27) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 144-36கலை முதல் பாகை 144-48கலை வரையிலும்) ஆகி பிராதா ஸ்தானுதிபனுன சுக்கிரன், ரந்திர (எட்டாம்) பாவாதிபனுடன் கூடினுல் ஜாதகனுக்குச் சகோதரனில்லை, மூன்று சகோதரி

கள் தீர்க்காயுளுடையவராயிருப்பர், மிச்சம் நாசம், தன் பேத (மாற்ருந்தாய்) சகோதரி ஒருத்தி பர்த்தாவுடன் மரிப்பாள்.

(28) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபனான குஜன் மிதுனம்சத்தில் ஸ்திர ராசியிலிருந்தால் ஜாதகனுடைய இரண்டாவது திசா காலத்தில் தாய்க்கு அரிஷ்டமுண்டு.

(29) ஜென்மலக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபனான சனி லக்கினத்திலாவது, லாப, திரிகோணத்திலாவது இருந்தால் ஜாதகனுக்கு இருபத்தேழு வயதுக்கு மேல் மறு மணம் நடக்கும்.

(30) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி லக்கினத்தில் சனி இருந்தாலும், அல்லது லக்கினம் சனியால் பார்க்கப்பட்டாவது இருந்தாலும் ஜாதகனுக்குச் சிலகாலம் சுதந்திரமில்லை. பின்னால் சுதந்தரத்துடன் இருப்பான், பாலியத்தில் துஷ்ட சுபாவத்தால் பரஸ்திரீ சங்கம யோகமுடையவன், சிலகாலம் திருட்டுத் தொழிலுடையவனுவான், யௌவனத்தில் கிரந்தி நோயுடையவனுவான், பின்னால் சிவலிங்க பூஜையால் நோயற்றவனும், தருமாத்துமாவாயுமிருப்பான்.

(31) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி பிதா ஸ்தானதிபனான குஜன் குருவுடன் கூடியாவது, பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகனுக்கு சிறப்பனில்லை, இவன் பிதா யோகவான், சுகி, அரசன் வாயிலில் நரவாகன யோகமுடையவனுவான், சேனை, மந்திரி, ஜனநேசமுடையவன், அரசனுக்குப் பிரியமான சேவகன்.

(32) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி வாகனுதிபனான குஜன், குருவுடன் கூடியாவது, பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் நரவாகன யோகமுடையவனுவான்.

(33) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி புத்திர ஸ்தானதிபனான குரு குஜனுடன்கூடியாவது, பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகனுக்கு இரு புத்திரர், இரு பெண்கள் தீர்க்காயுளுடையவராயிருப்பர், மிச்சம் நாசமாகும்.

(34) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுகதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 141-24 கலை முதல் பாகை 141-36 கலை வரையிலும்) ஆகி லக்கினதிபதி பத்தாமிடத்திலிருக்க இரண்டுக்குடையவனும், குருவும் பதினோராமிடத்திலிருக்கப் பிறந்தவன் அழகாய்ப் பேசு

பவன், சாதுர்ய யுக்தி உடையவன், நன்மை, தீமைகளை அறிபவன், பல தேசங்களில் பிரஸித்தியடைவான், காவிய, நாடக, சாஸ்திர சாரமறிந்தவன், வேதம், சாஸ்திரம், புராணம் தெரிந்தவன், ஸம்ஸ்கிருதப் பிரியன், பிரபு ஸ்நேகிதன், ஜனார்த்தனன், விஷ்ணுபக்த குலத்திலுதித்தவன். வைஷ்ணவ ஆசாரமுடையவன், குணமுள்ளவன், விஷ்ணு பக்தி, சிவ பக்தி நிறைந்தவன்; பல பாஷைகளை அறிந்தவன், எழுதப் படிக்கத் தெரிந்தவன், ராஜ முத்திரை தரித்தவன், உத்தியோக ஜீவனம், தன்னுடைய தகப்பனுடைய பாக்கியம் சமர்த்தியாயுடையவன், கிருகக்ஷேத்திரம் முதலிய லாபம் உடையவன், தனதானியம் சமர்த்தியாயுடையவன், நித்தியம் புண்ணிய தீர்த்த ஸ்நானமுடையவன், சுசியுள்ளவன், நித்திய கர்மானுஷ்டானம் செய்பவன், வேதாந்த ஞானம் தெரிந்து பிரம்ம ஞான பாராயணம் செய்பவன், அயலார்களுக்கு இங்கிதம் செய்வான், இங்கிதமறிந்தவன், நாலும் அறிந்தவன், பலபாஷை விசாரம் உள்ளவன், எழுத்துவேலையில் வல்லவன், ஊகம் தெரிந்து உள்ளவன், தன் தனத்தில் உண்பவன், போகசாலி, தாதா, ஆஸ்தை உடையவன், பிரபு லக்ஷணமுடையவன், மாயி, வாகனம் மூன்று உடையவன், பத்தாயிரம் பொன் சம்பாதிப்பான், பூமி, கிராமம் முதலியவற்றிற்கு அதிகாரி.

(35) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுகதாம்சம்) ஆகி மூன்றுமிடத்துக்குடைய சுக்கிரன் பன்னிரண்டில் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மூத்த சகோதரனை இழந்தவன், இளைய சகோதரனையுமிழந்தவன், மூன்று ஸ்திரீ ஸஹோதரிகளையுடையவன், ஒரு சகோதரி மட்டும் நிலையாய் இருப்பாள். ஒரு சமயம் பிற்பாடு ஒரு சகோதரன் இருப்பான் என்று சிலர் சொல்லுகிறார்கள். அவன் விரைவாதம் உடையவன், காதில் சூலையும், மனோவியாதியையும் உடையவன்.

(36) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுகதாம்சம்) ஆகி நான்காமிடத்துக்குடைய செவ்வாய் மேஷத்தில் இருந்து, சனியால் பார்க்கப்பட்டு, மாதுருகாரகன் (சந்திரன்) குருவால் பார்க்கப்பட்டால் தாய் நீண்ட ஆயுளுள்ளவளாயிருப்பாள், தாய் குணத்துடன் கூடினவள், புண்ணியவதி, பிள்ளைகள், பெண்கள் இவர்களுடன் கூடியிருப்பவள், பித்த சுட்டுத்தேகி, பித்தவாயு பீடையுடையவள், ராகு தெசையில் சந்திர புக்தியில் அல்லது செவ்வாய் புக்தியில் நாற்பத்தினொன்காவது

வயதில் மார்கழி மாதத்தில் மரிப்பாள், மேஷத்திரிகோணத்திலாவது மரிப்பாள். வயிற்றில் கொஞ்சம் சூல வியாதி யுடையவள், கொஞ்சம் கொஞ்சம் பாரிசவாயுவும் உள்ளவள்.

(37) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுகதாம்சம்) ஆகி ஐந்துக்குடைய குரு பதினோராமிடத்தில் புதனுடன் கூடியிருந்து, நன்கு சந்திரனால் பார்க்கப்பட்டால் ஸ்திரீ பிரஜை முதலில் ஜனிக்கும், தனக்கு ஐந்து பெண்களும், இரண்டு ஆண் பிள்ளைகளும் பிறப்பார்கள். ஜாதகன் அரசனிடம் மந்திரியாயிருப்பான், ராஜ முத்திரை தரித்து அதிகாரம் செய்வான்.

(38) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுகதாம்சம்) ஆகி ஏழாமிடத்துக்குடைய சனி லக்கினத்திற்கு மூன்றுமிடத்தில் இருந்து, ஐந்தாமிடத்தில் இருக்கப்பட்ட சந்திரனைப் பார்த்தால் ஜாதகனுக்கு எட்டாவது வயதில் பாலிய விவாஹம் நடக்கும், பிரம்மோபதேச காலத்தில் விவாகம் நிச்சயம் நடக்கும். சூரிய தெசை சுக்கிர புக்தியில் விவாகத்தை அடைவான், சிவந்த மனைவி யுடையவன், தகப்பன் வர்க்கத்திலே பார்யையை யடைவான்.

(39) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுகதாம்சம்) ஆகி சுக்கிரன் லக்னத்திற்குப் பன்னிரண்டாமிடத்திலிருக்க சனி, செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டால் களத்திரத்திற்குப் பிறகு பலன் சொல்லவும், மறு தாரத்தினால் புத்திர ஸந்ததி உண்டாகும். மூத்தவளுக்கு ஒரு பெண்ணாவது, ஆண்பிள்ளையாவது நிச்சயமாய் இருக்கும், செவ்வாய் தெசையில், சனி புக்தியில் விருச்சிக மாஸத்தில் சூதிகாகிரக தோஷத்தால் தன் புக்தியில் நிச்சயமாய் மரிப்பாள். அந்த தெசையில் அந்த புக்தியில் மறு விவாகம் செய்துகொள்வான். தாய் வர்க்கத்தில் மனைவியானவள் ஏற்படுவாள், கலியாணத்திற்குப் பின்பு சுகமடைவான். மனைவிக்குக் சுகமிருக்காது, மனைவியின் சொல் விஷமாய் இருக்கும், பத்தினி கெட்ட குணம் உள்ளவள், புருஷனிடத்தில் பக்தியில்லாதவள். புத்திரன், புத்திரியுடன், இரண்டாவது மனைவி கண்டபடி சண்டைசெய்வதில் பிரியமுள்ளவள்.

(40) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுகதாம்சம்) ஆகி, ஒன்பதாமிடத்துக்குடைய செவ்வாய் மேஷத்தில் ராகுவுடன்கூடி சனியினால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் ராஜயோகம் உள்ளவன். தகப்பன் சுகதாம்சப்படி ஜீவித்திருப்பது கஷ்டம் என்று பண்டிதர்

களுடைய அபிப்பிராயம். தகப்பனுக்கு ஆடி மாதத்தில் மரணம் நேரிடும், தகப்பன் மரணகாலத்தில் ஜாதகனும் தேசாந்திரத்தில் இருப்பான். தகப்பனுடைய உத்தா கிரியைகளை வேறு மனிதன் செய்வான். அப்போது ஜாதகனுக்கு மிருகங்களால் பயமும், நாய் பயமும், விஷத்தால் பயமும், ஏற்படும். ஒவ்வொரு தெசையிலும் சனி புக்தி காலங்களிளாவது, புத புக்தியிலாவது, ராகு புக்தியிலாவது, சந்திர புக்தியிலாவது அபமிருத்யு பயம் உண்டாகும்.

(41) ஜென்ம லக்கினம் சிம்மம் (சமாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 148-36 கலை முதல் பாகை 148-48 கலை வரையிலும்) ஆகி பன்னிரண்டுக்குடைய சந்திரன் இரண்டாமிடத்தை அடைந்திருந்தால் ஜாதகன் நல்ல அழகிய முகமுள்ளவனாகவும், க்ஷேமமுள்ளவனாகவும், வேதாந்த ஞானவானாயும், சாதுவாகியும், திடவிருதமுள்ளவனாகியும், இங்கித மறிந்தவனாயும், உத்தியோக ஜீவனம் செய்பவனாயும், ஆயிரத்துக்கு அதிக தனமுள்ள பாக்கியவானாயுமிருப்பான்.

(42) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸமாம்சம்) ஆகி இரண்டாமிடத்துக்குடைய புதன் இராகு சம்பந்தத்துடனிருந்தால் ஜாதகன் பல்லில் ரத்தம் வடிந்து கொண்டிருப்பவன், உஷ்ணவாயு உடையவன், ஒழுங்கின மான பல் வரிசையுடையவன்.

(43) ஜென்ம லக்கினம் சிம்மம் (சமாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் மூன்றாமிடம் சனியுடன் கூடியிருந்து சகோதரகாரகன் தனுர்ராசியை அடைந்திருக்க ஜாதகன் இரண்டு மூத்த சகோதரர்களுடையவனாக அல்லது மூன்று மூத்த சகோதரர்களை உடையவனாக இருப்பான், இரண்டு மூத்த சகோதரிகளை உடையவன், இரண்டு சகோதரன்கள் மரணமடைவார்கள், கனிஷ்ட சகோதரனும் ஒருவனுண்டு; ஒரு தமக்கை இருப்பாள், அவள் நிச்சயமாய் ஜீவித்திருப்பாள்.

(44) ஜென்ம லக்கினம் சிம்மம் (சமாம்சம்) ஆகி நான்காமிடத்துக்குடைய செவ்வாய் தனுசில் ராகுவுடன் கூடியிருந்தால் தாய் தன்னுடைய விசேஷ குணத்தால் புண்ணியவதியாய், பதிவிருதையாய் இருப்பாள். நல்ல வாசம் உடையவள், பாலியத்தில் மரிப்பாள். ஜெனித்த ஐந்தாம் வயதில் சித்திரை மாதத்தில் தாய் மரிப்பாள், தனுசின் திரிகோணத்திலாவது தாய் மரித்துவிடுவாள். ஜாதகன் பூமி, தனம் முதலியன சம்பாதிப்பவன், நீச்சப் பிரபுவால் சுகப்படுவான், குதிரை வாஹனமுடையவன், கொஞ்சம் வாகனம் முதலிய சுகமு

டையவன், வயற்று நோய் கொஞ்சகாலமும், காதில் நோய் கொஞ்ச நாளும் உண்டாகும்.

(45) ஜென்ம லக்கினம் சிம்மம் (சமாம்சம்) ஆகி ஏழாமிடத்துக்குடையவன் மூன்றிலும், அவனுக்கு மூன்றிலும் அல்லது தனுசுக்கேழிலும் கேதுவுமிருக்க களத்திரகாரகனுகிய சுக்கிரன் மகரத்திலிருக்க, அந்த ராசியதிபதி தன்னுடைய உச்சத்திலிருக்க, அதிக சிறு வயதில் விவாகம் நடக்கும், பன்னிரண்டு வயதில் அல்லது பதினோராவது வயதில் விவாகம் நடக்கும். மூன்றுமிடத்தில் சனியிருந்தால் ஜாதகனுடைய மாமியானவள் விவாகமான பின்பு மரணமடைவாள். உத்திராம்சத்தில் பிறந்தவனுக்குச் சனி மூன்றுமிடத்திலிருந்தால் மாமியார், மாமனுர் இருப்பது கஷ்டம்.

(46) ஜென்ம லக்கினம் சிம்மம் (சமாம்சம்) ஆகி எட்டாமிடத்தில் செவ்வாய் பார்வை ஏற்பட்டிருந்தால் ஜாதகனுடைய மனைவிக்கு யோனிப்புற்று என்கிற வியாதி சம்பவித்திருக்கும். அவளால் சுகமில்லை, ஒரு சமயம் பாரியையானவள் பைசாசபாதையால் கஷ்டப்படுவாள் என்று வேறு சிலர் சொல்லுவார்கள். எப்போதும் பாரியை ரோகியாயிருப்பாள். ஜாதகன் வேறு மனைவியால் நல்ல சுகம் அனுபவிப்பான்.

(47) ஜென்ம லக்கினம் சிம்மம் (சமாம்சம்) ஆகி ஐந்துக்குடையவன் நான்காமிடத்தில் (காரகனுடன் கூடியிருந்தால்) புத்திரனில்லாமல் வெகுகாலம் இருப்பான், இதன் பரிகாரமாக ஏகாதசியில் கோதானமும், அரசமரம் நட்டுக் காப்பாற்றுவதாலும் வெகுநாளைக்குப் பிறகு காலாந்தரத்திலாவது வேறு மனைவியிடத்திலாவது புத்திரபிராப்தி உண்டாகும்.

(48) ஜென்ம லக்கினம் சிம்மம் (சமாம்சம்) ஆகி ஒன்பதாமிடத்துக்குடைய செவ்வாய் தனுசில் சூரியனுடன்கூடி இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஞானவானுயிருப்பான், சுகியாயிருப்பான், சாத்வீகமுள்ளவன், நற்குணம் நிறைந்தவன். முப்பதாவது வயதில் கார்த்திகை மாதத்தில் பிதருக்கு மரணமுண்டாகும்.

(49) ஜென்ம லக்கினம் சிம்மம் (சமாம்சம்) ஆகி பத்தாமிடத்துக்குடைய சுக்கிரன் கர்மகாரகனுன குருவால் பார்க்கப்பட்டால் நல்ல கர்மானுஷ்டமுள்ளவனும், ஆசாரமுள்ளவனும், ஞானியாயும், கொஞ்

சம் பாஸ்திரீ லோலனுகவும், விசேஷ தேவ பூஜை செய்பவனுகவும், வேதசாஸ்திர அர்த்தமறிந்தவனுகவும், ஸ்வல்ப வித்தை அடைந்தவனுகவும், எழுதவும், படிக்கவும் விசேஷமாய்த் தெரிந்தவனுயும், இரண்டு வித பாஷைகளை எழுதவதில் சமர்த்தனுயும் இருப்பான்.

(50) ஜென்மலக்கினம் சிம்மம் (சமாம்சம்) ஆகி பதினோராமிடத்தில் கேது இருந்தால் வரவுக்கு மிஞ்சின செலவுடையவன், பிரபு லக்ஷணமுடையவன், சந்தன-தாம்பூல்-புஷ்ப-வஸ்திர அலங்காரப்பிரியன், மானி, பால் குடிப்பதில் பிரியமுள்ளவன், காதில் கொஞ்சம் ரோகமுடையவன், கணிதம் சொல்பவன், பணக்காரன், தன் பூமியால் பாக்கியத்தை அடைவான், அழகான முகமுள்ளவன் கோபி, சீக்கிரத்தில் சந்தோஷியாயிருப்பான்.

(51) ஜென்ம லக்கினம் சிம்மம் (வசுதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 149-48 கலை முதல் பாகை 150-00 கலை வரையிலும்) ஆகி லக்கினத்தில் புதன் பலமுள்ள குருவுடன் கூடி இருக்கப் பிறந்தவன் போகி, நல்ல வித்தை யுடையவன், நல்ல புத்தியுடையவன், தனமுடையவன், காமி, மிருதுவான தேகமுடையவன், சத்துவ குணமே பிரதானமாக உடையவன், நல்ல சிநேகிதனையும், நல்ல இடத்தில் வாசத்தையும் உடையவன், சிலர் ஜாதகனுக்கு மத்திய வயது என்று சொல்லுகிறுர்கள்.

(52) ஜென்ம லக்கினம் சிம்மம் (வசுதாம்சம்) ஆகி லக்கினேசன், லாபேசன் இவர்களால் லக்கினம் பார்க்கப்பட்டிருந்தால் சொற்ப வியாபாரியாகியும், கல்வி போதிப்பதாலும், தானம் வாங்குதல் மூலமும் ஜீவிப்பான்.

(53) ஜென்ம லக்கினம் சிம்மம் (வசுதாம்சம்) ஆகி பூர்வாம்சத்தில் ஜெனித்தவனுக்கு லக்கினுதிபதி பன்னிரண்டாமிடத்திலிருக்க லக்கினத்தில் புதனும் குருவும் கூடியிருந்தால் ஜாதகன் சிவந்த நிறமானவன், குள்ளமான தேகமுடையவன், கொஞ்சம் உயரம் உள்ளவன், நான்கு வித்தை நிபுணன், பல பாஷை தெரிந்தவன், சிவன் விஷ்ணு இவர்களிடத்தில் பக்தி உடையவன், தேவப் பிராமணரிடத்தில் பக்தி உடையவன், நீச்ச அரசனிடம் சேவை செய்வான், பெரிய உத்யோக பாக்கியம் உள்ளவன், மூத்த சகோதரனுல் ராகு தெசையில் நல்ல யோகத்தை அடைவான், வித்தையில் விசேஷ தத்துவ மறிந்தவன், மெதுவாய்ப் பேசுபவன், மறைவாய்ப் பாவம் செய்வான்.

(54) ஜென்ம லக்கினம் சிம்மம் (வசுதாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி பாவருடன் கூடி சகோதரகாரகன் நீசனுகி விரயஸ்தானத்தில் இருந்தால் ஜாதகன் புருஷ சகோதரனை இழந்தவன், ஸ்திரீசகோதரிகளையுடையவன். பத்தினி, தாய், புத்திரன், மூத்த சகோதரனுடனும் கூடினவன்.

(55) ஜென்ம லக்கினம் சிம்மம் (வசுதாம்சம்) ஆகி சுகஸ்தானுதிபதி பன்னிரண்டில் லக்கினுதிபதியுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய தாயார் துஷ்ட நடத்தையுடன் கூடினவள், புருஷனுக்குப் பிரியத்தைச் செய்யாதவள், புத்திரனிடத்தில் துவேஷ புத்தியுடையவள், முப்பத்தாருவது வயதிலாவது, அதற்கு முன்பாவது வாயு பீடை தோஷத்தால் புரட்டாசி மாதத்திலாவது, தை, வைகாசி மாதத்திலாவது, ஆனி மாதத்திலாவது மாணத்தை அடைவாள். பசு விருத்தி, தன தானிய சமிருத்தி, மூன்று வித வாஹனங்கள் முதலியன உண்டாகி யோகம் உண்டாகும், எழுத்து வித்தையால் ஜீவனம் செய்வான், நீச்ச அரசனிடம் சேவை செய்வான், பெரிய அரசனுடைய தயவினுல் கொஞ்சம் பூமியுடன் ஜீவிப்பான்.

(56) ஜென்ம லக்கினம் சிம்மம் (வசுதாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் நான்காமிடத்துக்குடைய செவ்வாய் பன்னிரண்டாமிடத்தில் நீச்சத்தில் இருக்க ஜெனித்தவனுக்குத் தாய் குணவதியாயிருப்பாள், புண்ணியவதி, மூன்றுவது வயதில் மரிப்பாள், தாய்க்குத் துலா மாதத்தில் மாணம் உண்டாகும். தாய் அயலார்களுக்கு உபகாரம் செய்வாள், தர்மம் செய்வாள், சத்துருவை நாசம் செய்வாள், நல்ல கீர்த்தியை யுடையவள்.

(57) ஜென்ம லக்கினம் சிம்மம் (வசுதாம்சம்) ஆகி ஐந்தாமிடத்துக்குடைய குரு லக்கினத்தில் புதனுடன் கூடி மேஷாம்சத்தில் இருக்க சுக்கிரன், சனி இவர்களால் புத்திர பாவம் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் காலாந்திரத்தில் நல்ல புத்திரனை அடைவான். மூத்தவளிடம் பிள்ளை பிறக்காது, பிறந்தாலும் அந்தப் பிள்ளை மரிப்பான், மரித்த பிள்ளைக்காகச் செய்த சாந்தி முதலியவற்றாலும், புண்ணியத்தாலும் மறுபடியும் புத்திரயோகம் உடையவனுவான், மறுகளத்திரத்தினுல் புத்திர லாபமும் உண்டாகும் என்று சிலர் சொல்லியிருக்கிறுர்கள். ஒரு பிள்ளை நீண்ட ஆயுளை உடையவன், புண்ணியவசத்தால் இரண்டு பிள்ளையாவது இருக்கலாம், முன் செய்தபாபத்தால் பிள்ளையில்லாமல் பெண் சந்ததியுடனுமாவது இருப்பான்.

(58) ஜென்மலக்கினம் சிம்மம் (வசுதாம்சம்) ஆகி ஆறுமிடத்துக்குடைய சனியால் லக்கினம் பார்க்கப்பட்டால் இரணம், கண்டம், வெள்ளை, மேகநோய் முதலியவற்றால் ஜாதகன் ரோக சரீரமுடையவனாகி இருப்பான். செவ்வாய் புக்தியில் ஜுர பயத்தாலும், மூத்திர ரோகத்தாலும், குன்மம், சூலம், கண் வியாதி முதலியவற்றாலும் கொஞ்சம் பீடையும், விரைவாதத்தால் பீடையும், மர்மஸ்தான ரோகமும் ஜாதகன் அடைவான்.

(59) ஜென்மலக்கினம் சிம்மம் (வசுதாம்சம்) ஆகி ஏழாமிடத்துக்குடைய சனி சுக்கிரனுடன்கூடி மிதுனத்திலிருந்து ஏழாமிடத்தைக் குரு, புதன் இவர்கள் பார்த்தால் ஜாதகனுடைய தாரத்துக்கு அபவாதம் ஏற்படும். ஜாதகன் அதனால் மனைவியின் சிநேகத்தை விட்டு விடுவான், அநேகம் ஸ்திரீகளுக்கு நாயகனாகவும், மறுதாரம் உடையவனுமாயுமிருப்பான், பல ஜாதி ஸ்திரீகளைப்புணருபவன், நீச்சஸ்திரீ சேர்க்கையும் கொஞ்சம் இருக்கும்.

(60) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாயாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 148-00 கலை முதல் பாகை 148-12 கலை வரையிலும்) ஆகி பூர்வாம்சத்தில் பிறந்தவனுக்குச் சூரியனும் புதனுடன் கூடி ஆறுமிடத்தில் சிம்மாம்சத்தில் இருந்து சனியால் நவாம்சத்திலும் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் ரூபவான், புத்திமான், பேசுந்திறமையுடையவன், அழகான முகமுங் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, தர்மாத்துமா, கொஞ்சம் மாநிறம், நல்ல ஆகிருதியுடையவன், சாத்வீக குணம் நிறம்பினவன், கீர்த்தியுடையவன், ராஜனால் வல்லவன் என்று புகழக்கூடியவன், ராஜ சேவை செய்பவன், பிரபல உத்தியோக பாக்யம் உள்ளவன், அநேக வியாபார பாக்ய வரவுள்ளவன், விசேஷ தைரியவான், வெகுவாய்க் கொடுப்பதில் இஷ்டன், சூட்டுத்தேகி, மேதாவி, குஷ்யரோகமுள்ளவன், சமதேகமுடையவன், சம அங்கமுடையவன், அயலாருக்கு இங்கிதம் செய்பவன், நிபுணன், பல பாஷைகளில் விசாரமுள்ளவன்.

(61) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாயாம்சம்) ஆகி இரண்டுக்குடைய புதன் லக்கினாதிபதியாகிய சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் அழகாய்ப் பேசுபவனும், வாசாலகனும், சாதுர்ய யுக்தியுடையவனும், யுக்தா யுக்தம் தெரிந்தவனாகவுமிருப்பான், விசேஷமாய்த் தெரிந்தவன், பல தேசங்களில் பிரசித்தியுடையவன், நான்கு வித்தையில் வல்லவன், விஷ்ணு, சிவ பக்தியுடையவன், சிவபக்த குலத்தி

துதித்தவன், தேவ பிராம்மணர்களிடத்தில் பக்தியுடையவன், வித்தையில் இடையூறுடையவன், மானி, சனியால் புதன் பார்க்கப்பட்டால் ஜாதகன் அநேக பூமி, தனம் இவைகளுடன் கூடினவன், குரூர பார்வையுடையவன், பல்லில் ரோகமுடையவன்.

(62) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாயாம்சம்) ஆகி ஐந்தில் குஜன் சுக்கிரனுடன் கூடியிருந்து ஐந்தாவது வீட்டைக் குரு பார்த்தால் இளைய, மூத்த சகோதரம் இல்லாதவன், இரண்டு ஸ்திரீ சகோதரிகளை உடையவன், கொஞ்ச காலம் பொறுத்து அவர்களும் மரிப்பார்கள், உத்தராம்சத்தில் பிறந்தவன் சகோதர சகோதரியுடன் கூடியிருப்பான்.

(63) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாயாம்சம்) ஆகி நான்காமிடத்திபன் செவ்வாய், சுக்கிரனுடன் கூடி குருவால் பார்க்கப்பட்டால் தாய் குணவதி, புண்ணியவதி, கணவனிடத்தில் பக்தியுடன் கூடியிருப்பாள், குருதெசையில் சந்திரபுத்தியில் பிறந்தஜாதகனுக்குத் தன் முப்பத்தாறுவது வயதில் தாயாருக்கு மரணம் உண்டு. ஜாதகன் பசு, பாக்கியம் சமர்த்தியாயுடையவன், மூன்றுவித வாகன முடையவன், ராஜக்கிரகத்துக்குச் சமமான வாச ஸ்தானமுடையவன்.

(64) ஜென்ம லக்கினம் சிம்மம் (காளாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 140–24 கலை முதல் பாகை 140-36 கலை வரையிலும்) ஆகி ஐந்துக்குடைய குரு மிதுனத்திலிருந்து சுக்கிரன், செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டாலும், சுக்கிரன், செவ்வாய் இவர்கள் குருவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் மலட்டு ஸ்திரீயினுடைய நாயகனுகவும், ஒரு சமயம் புத்திரன் ஜெனித்தாலும் புத்திரன் ஈனனுகவும் ஆவான். ஜாதகனுடைய மனைவி மரிப்பவளாகவும் ஆவாள்.

(65) ஜென்ம லக்கினம் சிம்மம் (காளாம்சம்) ஆகி ஆறுக்குடைய சனியுடன் பன்னிரெண்டாமிடத்திலிருக்க, புதன், சூரியனுடன் கூடி சத்துரு ஸ்தானத்தில் இருக்க, ஐந்தாமிடத்திலிருக்கும் செவ்வாய் மூலம் ஷ்டி சனி பார்க்கப்பட்டால் சத்துருக்களை ஜாதகன் அதிகமாயுடையவனுவான், உஷ்ணவாயு பீடையால் பீடிக்கப்பட்டவன், கொஞ்சம் தண்ட விரயம் செய்பவன், வயிற்றுநோய், ஹிருதய நோய், காச ஸ்வாசத்தால் கஷ்டத்துடன் கூடினவன், மறைவிடத்தில் மர்மஸ்தானத்தில் ரோகமுடையவன், ரணம், கண்டம் முதலியன உண்டாகும், மூத்திர கிருச்சினம் முதலான கஷ்டம், தாயாதிகளால் பீடை முதலானவையுண்டாகும்.

(66) ஜென்ம லக்கினம் சிம்மம் (காளாம்சம்) ஆகி இரண்டுக்குடைய புதன், சூரியனுடன் கூடி ஆறுமிடத்தில் இருந்து சத்துருவான சனியினால் பார்க்கப்பட்டால் கண்ட காலங்களாகிய 21, 23, 27, 29, 32, 34, 40, 44, 47, 51, 53, 57, 60, 62, 65, 67, 72, 77 முதலிய வயதுகளில் கண்டம் உண்டாகும். அக்காலங்களில் சாந்திசெய்யின் சுகமுண்டாகும். சாந்தி தானம் முதலியன செய்யவேண்டியது. எழுபத்தைந்து வயதில் புததெசையில், சனி புக்தியில் தை மாதத்திலும், அல்லது வைகாசி, புரட்டாசி மாதத்திலும் சரீர வியாதி உண்டாகி, கிருஷ்ணபக்ஷ அஷ்டமியிலும், சனிக்கிழமை சாயுங்காலத்திலும் மரிப்பான். வியாழன், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மரிப்பதும் தானாகவே அறிவான், உஷ்ணவாயு, அக்கினி மந்தம், பாண்டு ரோகம், சாப்பாட்டுக்குறைவு, மூல, அதிசார ஜுர, கஷ்ட சுவாச, கபதோஷ முதலிய பல வியாதிகளால் கஷ்டப்பட்டு எழுபத்தைந்தாவது வயதில் மரணம் உண்டாகும், இவன் முன் ஜென்மம் பிராமணன், அநேக வியாபாரம் செய்து பாக்கியவானாயிருப்பான், மறு ஜென்மத்தில் வைசியனாகப் பிறந்து ஜென்மாந்திரத்தில் நிச்சயமாய் முக்தியடைவான், கடைசியில் ஞானத்துடன் கூடி யிருப்பான்.

(67) ஜென்ம லக்கினம் சிம்மம் (காலகூடாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 149–12 கலை முதல் பாகை 149-24 கலை வரையிலும்) ஆகி ஏழுக்குடைய சனி, பன்னிரண்டாமிடத்திலிருந்து இரவி, செவ்வாய், புதன் இவர்களால் பார்க்கப்பட்டால் பன்னிரண்டு வயதில் ஜாதகனுக்குப் பாலிய விவாகம் நடக்கும், ஜாதகன் மலடியான ஸ்திரீயின் கணவன், ஒரே மனைவியையுடையவன், கிரந்தத்தில் இரண்டு மனைவியுடையவனென்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். சிவந்த நிறமுள்ள பாரியை ஜாதகனுக்கு நேரிடுவாள்.

(68) ஜென்ம லக்கினம் சிம்மம் (காலகூடாம்சம்) ஆகி ஒன்பதாமிடத்துக்குடைய செவ்வாயுடன் சுக்கிரன் கூடி, குருவால் ஐந்தாமிடம் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் வெகு தனம் சம்பாதித்தவன், மஹாராஜன், நல்ல யோகத்துடனேயே இருப்பவன், அநேக தாயாதி ஜனங்களுடன் கூடினவன், ராஜமுத்திரையுடையவன், அதிகாரமுடையவன், ஜாதகனுக்கு இருபத்தொரு வயதில் உஷ்ணவாயு, அக்கினி மாந்தம் முதலியவற்றால் தகப்பன் மரணத்தை அடைவான்.

(69) ஜென்ம லக்கினம் சிம்மம் (காலகூடாம்சம்) ஆகி லக்கினாதிபதி மூன்றும் வீட்டுக்குடைய சுக்கிரன், புதனுடன் கூடி துர்ப்பலனாகி

சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் எப்போதும் துக்கம் நிறைந்த துக்க மனதுடையவனும் சத்துருக்களாலும், தாயாதிகளாலும், நன்ருக பீடிக்கப்பட்டவனுவான், வெளியில் பணத்தினுல் ஏற்பட்ட கஷ்டத்தையுடையவன், துக்கமுடைய மனதுடையவன்.

(70) ஜென்ம லக்கினம் சிம்மம் (காலகூடாம்சம்) ஆகி லக்னுதிபதி இரண்டாமிடத்துக்குடைய புதனுடன் கூடி, ஆருமிடத்தில் இருக்க, கும்பாம்சத்தில் இருக்கப்பட்ட சனியால் பார்க்கப்பட்டால் அதிக செலவுடையவன், வெகு துக்கமுடையவன், தாயாதிகளால் பணச் செலவுடையவன், புதன், சூரியன் சம்பந்தப்பட்டிருப்பதால் ராஜாக்கினையால் வெகு சிலவும், வீண் அகங்கார தோஷத்தால் வீடு, பூமி, தனம் முதலிய நஷ்டமும் ஏற்படும், கடைசியில் அப்படியிருந்தும் திரும்பவும் ராஜ பூஜிதனுகி மேலான உத்தியோக லாபமும், சனி தெசையில் பெரிய கஷ்டமும், சனி புத்தியில் அந்தியத்தில் சரீரபீடையும், சுவாஸகாஸம் முதலிய ரோகமும், புத புக்தியில் தேக பீடையும், மனைவிக்கு பீடை முதலிய கஷ்டமும், புத புக்தியில் பணவரவும் ஏற்படும், கேது புத்தியில் கஷ்ட பலமும், மிலேச்சன், நீச்சன் இவர்களால் கொஞ்சம் சுகமும், சுக்கிர புக்தியில் தனவரவும், விவகாரத்தில் ஜயமும் உண்டாகும். சனி தெசையில் சுபம், அசுபம் இரண்டும் புத தெசையில் சனியைப் போவவேயும் ஒவ்வொரு திசையிலும் சனி புக்தி, ராகு, செவ்வாய், கேது புக்தி காலங்களிலும், தனக்கு அபமிருத்து பயமும், தனக்கு சமமான ஜனங்களுக்கு அவதியும், குரு, சந்திரன், சுக்கிரன், புதன் இவர்களுடைய புக்திகளில் எல்லா தெசைகளிலும் தேக சுகமும், தனப்பிராப்தியும், எங்கும் சுகம், துக்கம், இரண்டும் கலந்தும், சனி தெசையில் சுக்கிர, செவ்வாய் புக்திகளில் மனைவிக்கு மாரணமும், வியாதியும் உண்டாகும்.

(71) ஜென்ம லக்கினம் சிம்மம் (சாமதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 129-24 கலை முதல் பாகை 129–36 கலை வரையிலும்) ஆகி லக்கினுதிபதி துலா நவாம்சத்திலிருந்து, புதன் விச்வம்பாராம்சத்திலிருக்க, ராகு, கேதுக்களுடன் சூரியனும், புதனும் கூடியிருந்தாலும், அல்லது ராகு, கேது முதலியவர்களால் சூரியனும், புதனும் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகன் இரண்டாவது கர்ப்பத்தில் ஜெனித்தவனுவான்.

(72) ஜென்ம லக்கினம் சிம்மம் சாமதாம்சம்) ஆகி மூன்ருமிடத்ததிபதியான சுக்கிரன், லக்கினத்திற்கு பன்னிரண்டில் இருந்து

நவாம்சத்தில் கும்பத்திலிருக்க சகோதரகாரகன் லக்கினகேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் சகோதர சகோதரிகளுடையவன், ஒரு சகோதரனே தீர்க்காயுளுடையவனையுடையவன், புத்ரீ, புத்ரன் உள்ளவன், வெகு பூமிக்கு அதிபதியாவான், தாயாதிகளால் அவன் சுவீகாரமாக எடுத்துக்கொள்ளப்படுவான். அரசாங்கத்தில் பிரிசித்தியுடையவன், வஸ்திர வாகன பாக்கியமுடையவனுவான், அதனுல் ஜாதகனும் சுகமடைவான், பிரபலமடைவான், தீர்க்காயுளுடைய இரண்டு சகோதரிகளையுடையவன், அவர்களில் ஒரு சகோதரி புத்திரவதியாயிருப்பாள், வெகு காலம் சுமங்கலியாயும், வீட்டுக்காரியங்களில் சுதந்திரமுடையவளுமாயிருப்பாள், மற்ற ஒரு சகோதரி சாத்துவீகமுடையவள், அவள் பாலியத்திலேயே விதவையாய்விடுவாள். மற்ற சகோதரி, சகோதரிகள் தீர்க்கச் சுமங்கலியாயிருப்பார்.

(73) ஜென்ம லக்கினம் சிம்மம் (சாமதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதியான செவ்வாய் லக்கின கேந்திரத்திலிருந்து பிதுர்காரகன் இரண்டாமிடத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திம ஆயுளுள்ளவன், சுவல்ப யோகமுடையவன், சுயார்ச்சிதம் சொல்பம் சம்பாதிப்பவன், ஜாதகனுடைய சிற்றப்பனும் அப்படியே ஆவான். ஜாதகன் தத்து ஆய்விடுவான்.

(74) ஜென்ம லக்கினம் சிம்மம் (சாமதாம்சம்) ஆகி பூர்வபாகபாவத்தில் ஜெனித்தவனுக்கு நான்காம் பாவாதிபதியாகிய செவ்வாய், ராகு, கேது அவர்களுடன் கூடி மதுர்காரகன் ஒன்பதாம் பாவமாகிய மேஷ ராசியிலிருந்தால் தாயானவள் தீர்க்க ஆயுளுடையவள், அம்மான் முதலியவர்களுடன் கூடினவள், தாய் வம்சம் குறைவடையும்.

(75) ஜென்ம லக்கினம் சிம்மம் (சாமதாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்கு சுக்கிரன் சந்திரனுக்குக் கேந்திரத்தில் சுபாம்சத்தில் இருந்தாலும், சுபக்கிரகத்துடன் கூடியாவது அல்லது சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் தீர்க்க ஆயுளும், கொஞ்சம் வெளுப்பு சரீரமும் உடையவன். அவன் வாசாலகனுகவும், யுக்தி சாதுரியமாய்ப் பேசுபவனுகவும், நாடக சாமர்த்தியம் உள்ளவனுகவும், மனதில் கபட புத்தியுடையவனும், புஷ்டியான அங்க முடையவனும், தீரனும், நல்ல புத்திமானுகவும், வித்தை வினயம் இவற்றுடன் நிறைந்த வித்யா நிபுணனுகவும் ஆகின்ருன். அன்றியும், அயலாரை வசீகரிப்பான், சிநேகிதர்களை

வஞ்சனை செய்யும் எண்ணம் உடையவன், தன் காரியத்தைக் கவனிப் பவன், பலமுள்ளவன், எப்போதும் சரசப்பிரியன், அரசனிடத்தில் உத்தியோகம் செய்பவன், கொஞ்சம் சைன்னியங்களுக்கு அதிபதி யாகிறான், வஸ்திரம், வாகனம் முதலியவை நிறைந்தவன், மத்திய யோகமுடையவன், டாம்பீகன், சலனசித்தமுடையவன், கொஞ்சம் லோபஸ்பாவமுடையவன், பாலியத்தில் கொஞ்சம் கஷ்டமும், கொஞ்சம் சுகமுமுடையவன், சுதந்திரமுடையவன், பராக்கிரமமுடை யவன், அன்னியர்களுக்கு விசனத்தை கொடுப்பவன், நித்யம் தாயா ருக்குச் சௌக்கியத்தைச் செய்பவன், பிதுரு சௌக்கியத்தைக் கவ னியாதவன், (தாது) வாத வித்தை விநோதம் அறிந்தவன், சஞ்சல புத்தியுடையவன், அரசர்களின் நேசம் வருவதும் போவதுமாயிருக் கும், தாயாதி மூலம் தனப்ராப்தியுண்டாகும், கொஞ்சம் பூமியுண்டா கும், விவாத விவகாரங்களில் வாசாலகனாகவும் இருப்பான்.

(76) ஜென்ம லக்கினம் சிம்மம் (சாமதாம்சம்) ஆகி பூர்வபாகத் தில் ஜெனித்தவனுக்கு ஏழாம் வீட்டுக்குடையவனுடைய அம்சத் தில் சுக்கிரனிருந்து, ஏழுக்குடையவன் ஐந்தாமிடத்தில் இருந்து, ஐந் துக்குடையவன் தன் உச்சராசிலிருந்தால் ஜெனித்தவனுக்கு இரண்டு தாரம் உண்டு. களத்திராந்திரம் யோகம் நடக்கும், இரு மனைவியரிடத் தில் புத்திரப்ராப்தம் உண்டாகும், வயதின் மத்தியில் நல்ல யோக முடையவன், புத்திர வர்க்கத்தில் எவனுக்காவது ஒருவனுக்கு பிரபல உத்தியோக ஜீவனம் உண்டு, அவன் அரசன் மூலம் பிரசித்திப் பெற் றுச் சைனியாதிபதியாகிறான்.

(77) ஜென்ம லக்கினம் சிம்மம் (சாமதாம்சம்) ஆகி புத்திர ஸ்தானதிபதி சுபக்கிரகத்துடன் கூடியிருந்து புத்திரஸ்தானத்தில் சனி யிருந்தால் பத்து புத்திர, புத்திரி யோகம் உண்டு, இரண்டு புத்திரிகள் தீர்க்க ஆயுளுடையவர்கள், மீதி குழந்தைகள் நாசமுறும். ஜாதகன் கொஞ்சம் பரஸ்திரீசங்கமமுள்ளவன், நல்லகளத்திரப் பிரியன், குடும்ப ரக்ஷணம் செய்யவேண்டியவன், தன் புஜபலத்தால் சம்பாதிக்கக்கூடிய யோகமுள்ளவன், நித்யம் சத்துரு விருத்தியுடையவன், சத்ருக்களைக் கொன்று நிம்மதியடைவான், பூமி, வீடு முதலிய லாபமுடையவன், எல்லாவிடத்திலும் விஜயமுடையவன்.

(78) ஜென்ம லக்கினம் சிம்மம் (————————) ஆகி ஆறும் தாராதிபதி ராகு லக்கினகேந்திரத்திலிருந்து சுபனான பாக்யேச

னுடன் கூடியிருந்து அந்த ராகு தெசை வந்தால் அந்த ஜாதகன் ஸ்ரீயோகம் என்கிற யோகசாரமுடையவன், அவனுக்கு வெகு சௌக்கியமும், புத்ரப்பிராபல்யமும் உண்டாகும், புத்திரனால் தனவரவு உண்டாகும், தேகாரோக்கியமும், மகா சௌக்கியமும், யத்தினம் செய்யப்பட்ட காரியசித்தியும் உண்டாகும்.

(79) ஜென்ம லக்கினம் சிம்மம் (—————) ஆகி எட்டாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்து சுபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகன் வேசிஸ்திரீ ரதனுமாயும், சந்தோஷ சேர்க்கையுள்ளவனுயுமிருப்பான்.

(80) ஜென்ம லக்கினம் சிம்மம் (—————) ஆகி இரண்டாம் தாராதிபதியாகி குரு எட்டாம் பாவத்தில் குஜனுடன் கூடியிருக்க குருதெசை வந்தால் முதலில் கஷ்டமும், பிறகு சுபமும் உண்டாகும். விவாகம் முதலிய சுபமும், ஸ்திரீ ஸௌக்கியமும், போக போக்யத்துடனும், உடன் பிறந்தவர்கள் முதலானவர்களுக்குச் சுகமும் உண்டாகும்.

(81) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸூகநாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 141-24 கலைமுதல் பாகை 141-36 கலை வரையிலும்) ஆகி ஜெனித்தவனுக்குத் தன லாபாதிபதிகள் பத்தாம் பாவாதியுடன் கூடி கேந்திரத்தில் இருந்தால் புததெசையில் ஜாதகனுக்கு மகா சௌக்கியமும், யத்தின காரியலாபமும் உண்டாகும். மாமனூர் மூலம் தனமும், அதனுல் சுகமும், புத்திர உற்பத்தியும் உண்டு. ஜாதகன் அநேக சிநேகிதர்களுடன் கூடியும் இருப்பான், சகோதரவர்க்கத்தில் கொஞ்சம் கஷ்டம் உண்டாகும், தாய்பாகமும் ஏற்படும். கெட்ட வழியில் தனவிருத்தியும், கிராம பூமி விருத்தியும் உண்டாகும்.

(82) ஜென்மலக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 120-00 கலை முதல் பாகை 120-12 கலை வரையிலும்) ஆகி ஓராம்பாவத்தில் சுக்கிரனும், நான்காம் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலுமிருந்தால் பெரிய நதிப்பிராந்திய தேசத்தில் பெரிய கிராமத்தில் பிறந்தவனுகிறுன், உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு நகரம் ஜென்ம தேசமாகும், தாயின் வீட்டில் ஜெனித்தவன், மற்றும் சிலர் அபிப்ராயம் தூர்க்கத்தின் மத்தியில் ஜெனித்ததாக ஆகிறது.

(83) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி பிறந்த ஜாதகனுக்கு நான்காம் பாவாதிபதி ரவியுடன் கூடியிருந்து, மூன்றும்

பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகனுடைய ஜென்ம காலத்தில் ஜாதகன் தாய் அதிகம் வேதனையை அடைவாள், சந்திரன் புதனுடன் கூடியிருந்தால் உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவ காலத்தில் வேதனை கொஞ்சமாயிருக்கும்.

(84) ஜென்ம லக்கின சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி செவ்வாய் சனியுடன் கூடியிருந்தால் தாய்க்கு அரிஷ்டமும், குரு கூடியிருந்தால் சௌக்கியமும், தோஷ நிவர்த்தியும் உண்டாகும்.

(85) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி செவ்வாயுடன் கூடியிருந்து எட்டாம் பாவாதிபதி தன பாவத்திலிருந்து குருவுடன் கூடியிருந்தால் நூறு தோஷம்வரையிலும் வஜ்ராயுதமானது மலையைப் பிளந்தாற்போல் நீங்கிவிடும். ஜாதகனுக்கு மத்திம வயது என்றும் சொல்லப்படுகிறது, ஆயினும் ஜாதகன் அறுபத்தெட்டு வயதுடையவன். ஜாதகன் பதினெட்டு, அல்லது இருபத்தெட்டு, முப்பத்தெட்டு முதலிய வயது காலங்களில் ரோகத்தால் பீடிக்கப்படுவான். அறுபதில் அபமிருத்துண்டு. சாந்தி செய்தால் சுகமுண்டாகும்.

(86) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி கும்பாம்சத்தில் தனபாவத்தில் சூரியனிருந்து ஒன்பதாம் பாவாதியுடன் சூரியன் கூடியிருந்தால் ஜாதகனுடைய பிதா சுகமுடையவன், சகோதருடன் கூடியிருப்பவன், சகோதரிகளுடனும் கூடியிருப்பவன், பணத்தை சம்பாதிப்பதில் சமர்த்துள்ளவன், வித்தை, புத்தி இவற்றையுடையவனுவான்.

(87) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி சூரியன் கின்னராம்சத்தில் இருந்து பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ராஜயோகமுடையவன், பிரபல உத்தியோக சுகத்தைச் சம்பாதித்தவன், ராஜ்ப தந்திரத்தில் பிரதானஸ்தன், நீச்ச சேவை செய்பவன், தனிகன், நீச அரசனிடம் நீச ராஜ்யத்தில் நல்ல யோகமுடையவன்.

(88) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி சனியுடன் சூரியன் சம்மந்தப்பட்டிருந்தால் பிதா கடினமான தண்டனையுடையவன், துஷ்டர்களிடத்தில் துஷ்டபுத்தியும், குரூரமானவர்களுக்கு குரூரமானபடி தண்டிப்பவனும், பாலியம் முதல் யோகம் உடையவனும், மத்திய, அந்தியத்தில் ராஜயோகத்துடன் கூடினவனும், விருத்

தாப்பியத்தில் தர்ம புத்தியுடையவனும், சிவாலயம் முதலானவற்றில் தர்மம் செய்பவனுமாவான். தேவர் பிராம்மணர் இவர்களிடம் அன்பு டையவன், விசேஷ சிவபக்தியுடையவன், பாட்டனுடைய புண்ணி யத்தால் வம்சத்தில் பாக்கியமுடையவன், க்ஷேம தெசையில் செவ் வாய் புக்தியில் அல்லது ராகு புக்தியில் ஜாதகனுடைய பிதா மரிப் பான்.

(89) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதியும் குருவும் கூடியிருந்து மூன்றும் பாவத்தில் சந்திரன் மீனும்சத்தில் இருந்தால் தாய் சௌக்கியமுடையவள், குணவதி, பொறுமையுடையவள், புருஷனுடைய மனதுபோல் நடப்பவள், சகோதாருடன் கூடினவள், வம்சத்தில் பாக்கிய விருத்தியுடையவள்.

(90) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி சூரியன் சனி, செவ்வாய் இவர்கள் கூடியிருந்தால் வீட்டில் ஜாதகனுடைய தாய் கலகம், கெடுதி, நஷ்டம், நாசம் முதலானவை செய்பவள், சந் திரன் மித்திரனுடன் மித்திரக்ஷேத்திரத்தை அடைந்திருந்தால் தாய் சுபத்துடன் கூடினவளும், சமர்த்தையாயும் இருப்பாள். தாய் வம்சத் தில் ஜாதகன் விசேஷ சுகமுள்ளவனும், அம்மான் தீர்க்க ஆயுளுள்ளவ னுமாக இருப்பான், க்ஷேம தெசையில் ரவி புக்தியில் அல்லது சந்திர புக்தியில் சனி இரண்டாம் பரியாயத்தில் கோசாரத்தில் கும்பத்தில் அல்லது மகரத்தில் இருக்கும் காலத்திலேயே தாய்க்கு மரணம் சம்ப விக்கும், அல்லது அந்த திரிகோணங்களில் சனிவரும் சமயம் தாய்க்கு பீடையும், அவளுக்கு சமமான ஜனங்களுக்குக் கெடுதியும் உண்டா கும்.

(91) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி பலத்துடன் கூடி லக்கின பாவத்திலிருக்க, செவ்வாய் குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் பின் சகோதர விருத்தியுடையவன், மூத்த சகோதரனில்லாதவன், பிறந்திருந்தாலும் மரணமடைந்துவிடுவான், பின் சகோதரம் இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களும் தீர்க்காயுளுடையவர்கள். செவ் வாய் ரவியுடன் சேர்ந்திருந்தாலும், ரவியால் பார்க்கப்பட்டாலும் மூன்று அல்லது இரண்டு சகோதரர் நாசம் ஆகிவிடும், இந்த பிராதாக் களில் எவனுவது ஒருவன் வேறு ஒருவனல் சுவீகாரமாய் எடுத்துக் கொள்ளப்படுவான்,

(92) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி குருதிரிம் சாம்சத்தில் பிறந்தவன் ஸாம்ராஜ்ய யோகமுடையவன், சகோதர, சகோதரிகளையுடையவன், நல்ல சூத்திர வம்சத்தில் பிறந்தவன், ஸ்ரீமான், கருப்பு நிறமுள்ளவன், (நற்) குணங்களுடன் கூடினவன், பித்த தேகி, சூட்டுத் தேகி, காத்திரமுடையவன், விசேஷ அறிவாளி.

(93) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சனி, சூரியன் இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் மூன்று பாஷைகளை நன்றாய்ப் பேசுபவன், எழுதுவதில் சமர்த்தன், சங்கீதப் பிரியமுடையவன், காமி, விஷயப்பிரியன்.

(94) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி லக்னபாவாதிபதி ஐந்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் நல்ல ஆசார புத்தியுடையவன், சுக்கிரன் லக்கின பாவத்தை அடைந்திருந்தாலும் விசேஷ சிவபக்தியுடன் கூடினவன், தேவி சத்தியினுடைய கிருபைக்குப் பாத்திரமானவன், நல்ல நீதிமான், ஜன்மத்திலிருந்து சீமனாயிருப்பவன், பிதுரு பாக்கியத்துடன் கூடினவன், ஜென்ம தெசையில் பாலரோகம் உண்டாகி எழுவருஷத்துக்குப் பின்பு சுகமடைவான், ஆறும் வயதில் வித்யாப்பியாசமுண்டு, வித்தை, புத்தி இவற்றுடன் கூடியும் இருப்பான். சம்பத் தெசையில் பிதாவுக்குச் சுகமும், பிரபல உத்தியோக பாக்கியமும், பல தேசங்களிலும் சஞ்சாரமும், நீச்ச பிரபுவால் சுகமும், அநேக கிராமாதிகாரமும் உண்டு. பிதா அக்காலத்தில் ராஜதந்திரிகளால் பிரதானமானவனும் ஆவான்.

(95) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி ஸம்பத்தாராதிபதியாகி குரு ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், ஒன்பதாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும் அந்த தெசையில் பிதாவுக்குச் சுகமும், ராஜயோகமும் உண்டாகும். பிதா பலதேசங்களிலும் மனிதவாகனம் முதலிய பாக்கியங்களுடன் சஞ்சாரம் செய்வான். ஸம்பத் தெசையில் கேது புத்தியில் அல்லது சுக்கிர புத்தியில் கடகத்தில் அல்லது சிம்மத்தில் கோசார குருவிருக்கும் சமயம் ஜாதகனுக்கு விவாகமாகும், பாக்கிய காலத்தில் வெளி தேசத்தில் பாணிக்கிரகணமும், தன் பந்து வர்க்கத்தில் மாதுருவம்சத்தில் விவாஹம் நடக்கும். வெளுப்பு நிறமுள்ள மனைவி வருவாள், அவள் அழகு நிறைந்தவள், விவாகத்துக்குப் பிறகு சுகமும், பிதா பிரபலமும் உத்தமமாக நடக்கும். சம்பத் தெசையில் சனி புக்தி அல்லது புத புக்தியில்

சனி விருச்சிக ராசியின் கடைசியில் அல்லது தனுர் ராசியின் முதலில் சஞ்சார காலத்தில் பிதாவுக்கு மரணம் உண்டாகும், அந்த மிருத்யு வானது ஸ்திரீயினால் உண்டாகும், சாந்தி செய்தால் அக்காலம் மரணத்தினின்றும் மீண்டு ஜீவிப்பான், காலதானத்தினால் சுகமுண்டாகும். ஜாதகனுக்குச் சம்பத்தார தெசையில் தகப்பன் மூலம் சுகமுண்டாகும், பதினாறு வயதுக்கு மேல் சுயமாகப் பிரபலமடைந்து பிரசித்தி யடைந்து திரவியத்தைச் சம்பாதிப்பான். இருபது வயதுக்கு மேல் சுகமும், சுபப்ராப்தியும் உண்டாகும், நல்ல கீர்த்தி யுண்டாகும். தகப்பனுடைய பிரபு மூலமாக மேம்பாடான உத்தியோக பாக்கிய மடைவான்.

(96) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி வாஹன, லக்கின பாவாதிபதிகளும், பாக்கிய பாவாதிபதியும், பத்தாம் பாவத்தில் அல்லது லக்கின பாவத்தில் சுக்கிரனும் கூடி இருந்தால் வாகன லாபத்துடனும், சதுரங்க சேனைகளையுடைய பிரபுவுக்குச் சமமாக இருப்பான். விபத்தார தெசையில் ரவி புக்தியில் ஜாதகனுக்குப் பீடையும், புத புக்தியிலிருந்து விசேஷ சம்பத்தும் உண்டு, ஸ்வதேசத்திலேயே அரச உத்தியோகத்திலிருந்து ஸர்வாதிகாரியாகி இருபத்தைந்து வயதுக்கு மேல் நல்ல யோகமடைந்து பதினொரு வருஷம் வரையில் துடர்ந்த யோகமும் அடைந்து, அரைலக்ஷ தனபதியாயும் இருப்பான், பிதுரார்ஜித தனமுடையவனுமாவான்.

(97) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் நான்கு கிரகமிருந்தால் ஜாதகன் ராஜ முத்திரை தரித்து அதிகாரம் செய்வான், தன் பந்து ஜனங்களை ரக்ஷிப்பவனாவான், அநேக குதிரை, சேனைகளுக்கு யஜமானனாயிருப்பான், தன் பிதாவால் அதிகயோகவான், தான் பல தேசங்களிலும் பிரசித்தி யடைவான், விபத்தார தெசையில் புத்திரனில்லாத விசாரமுடையவனாகிறான்.

(98) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி புத்திரபாவாதிபதி பாபருடன் கூடியிருந்து, குரு புத க்ஷேத்திரத்தை அடைந்திருந்தால் புருஷ ஸந்தானத்துக்கு இடைஞ்சலுண்டு. ஜாதகன் அதிகமான பெண் குழந்தைகளையுடையவனுமாகி ஆண் குழந்தையினால் சோக பீடிதனாகி காலாந்தரத்தில் பலனுண்டாகும். அந்த தோஷ நிவர்த்திக்காக அவசியம் சேது ஸ்நானம் செய்தும்,

சிவார்ச்சனை செய்தும், சக்தி ரக்ஷை தரித்தும், ஷஷ்டி திதி விரதமும், சுப்ரமணிய விரதமும், ஸந்தான கோபால பிரதிமை தானமும், நாகப் பிரார்த்தனையும் செய்தும் நாநாவிதமான புண்ணிய தீர்த்த ஸ்நாநம் செய்தும், நாகப் பிரதிஷ்டை செய்தும் நாகத்தைத் தரித்த சிவலிங்க பிரதிமையை ஸகலாபரண பூஷிதமாக தானம் செய்தலானும், காலந்தள்ளி நல்ல புத்திரனுண்டாகும். இந்த சாந்திகள் செய்தபின்பு ஒரு புத்திரன் பிறப்பான். விபத்தெசையில் குரு புக்தியில் இந்தவிதமான புத்திரன் பிறப்பான், புத்திரன் பிறந்த பிறகு வெளிதேசம் போகுதலும், விசேஷ பாக்யப்பிராப்தியும், க்ஷேம தெசையில் வெகுபாக்கியமும், வெளிதேச அரச தெரிசனமும், அந்த பிரபுவினால் நித்திய யோகமாகப் பன்னிரண்டு வருஷம் சத்திர, குடை, சாமரம் முதலியவற்றுடன் அரச முத்திரையுடன் அதிகாரம் செய்து அநேக க்ஷேத்திரமும், தனமும் சம்பாதித்து பசு, தான்யம் முதலிய சமிருத்தியுடையவனாகி, அநேக லக்ஷங்களுடைய பிரபுவாகி, யானை முதலான ஐஸ்வரியங்களுடன் கூடி நல்ல கீர்த்தியுடையவனாகி, தன பாவாதிபன் தெசையிலும் வெளிதேசத்திலேயே திரவிய லாபமுடைய வனாகி, சிவப்பு தானியம் முதலானதும், நல்ல வஸ்திரமும், வீட்டில் சுவர்ண பாத்திரம் முதலானவையுமுடையவனாகி அநேக தேசாதிகாரி யாகிறான்.

(99) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஈஸ்வரியம்சம்) ஆகி வீரய பாவாதிபதி சுபருடன் கூடியிருந்து பதினோரம்பாவத்தில் கேது இருந்தால் தேகாந்தியத்தில் ஸத்கதியை அடைந்து சிவபதத்தை யடைவான்.

(100) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவர்த்தியம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 130-12 கலை முதல் பாகை 130-24 கலை வரை யிலும்) ஆகி சந்திரன் கேந்திர திரிகோணங்களிலிருந்து சுபக் கிரகங் களால் நன்றாய் பார்க்கப்பட்டிருந்தால் பாலாரிஷ்டம் தோஷமில்லை.

(101) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவர்த்தியம்சம்) ஆகி லக்கின பாவத்தில் குருவும் அல்லது சந்திரனுக்கு பத்தில் குருவும் இருந்தா லும் பாலாரிஷ்டம் உண்டாகமாட்டாது, தாய், தகப்பனுக்குச் சுக மும், ஜாதகனுக்குத் தேகபுஷ்டியும் உண்டாகும்.

(102) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவர்த்தியம்சம்) ஆகி அமலாயோகத்தில் ஜனித்த ஜாதகனுக்கு லக்கின பாவாதிபதி தன்

உச்சத்திலும், குரு கேந்திர பாவங்களிலும் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுள்ளவன், இவர்கள் பாப திருஷ்டியுடனிருந்தால் மத்திம ஆயுளென்று சொல்லப்படுகிறது.

(103) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவிருத்தியம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சரராசியிலிருந்து எட்டாம் பாவாதிபதி ஸ்திர ராசியிலிருக்க இரண்டு ஹோரைகளிலும் பிறந்தவனுக்கு மத்திய வயது என்று சொல்லப்படுகிறது.

(104) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவிருத்தியம்சம்) ஆகி அமலா யோகத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு மூன்றும் பாவத்தில் பாபக்கிரகமிருந்தால் மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரிகள் இருவர் சுகமுடனும், தாய் ஆயுள் விருத்தியுடையவளாகவும், தாய் வர்க்கத்தில் அரிஷ்டமும், உள்ளுக்குள்ளே கலகமும்,பிதுர்வர்க்க அரிஷ்டமும், தன் பிதா மனக்கலக்கமுள்ளவனாகவும், தன, தான்ய குறைவுடனும், துக்கத்தால் பீடிக்கப்பட்டு ஜீவனம் செய்பவனாகவும் இருப்பான்.

(105) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவிருத்தியம்சம்) ஆகி ரவி நீசத்தில் தன்னுடைய உச்சாம்சத்தில் இருந்து பாபக் கிரகங்களுடன் கூடினாலும், பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் பிதா மனோவேதனை யுடையவன், சுகம் கொஞ்சம் கஷ்டம் கொஞ்சம் அனுபவிப்பவன், ராஜமந்திரியின் சிநேகமுடையவனாகி அரசாங்கத்தில் சொற்ப பலனுடையவனாவான், சகோதர வர்க்கத்தில் நாசமும், சகோதர துவேஷமும் உண்டாகும்.

(106) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவிருத்தியம்சம்) ஆகி செவ்வாய் கேந்திரங்களில் இருந்து சூரியன் நீசராசியில் தன் உச்சாம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு நீசபங்க ராஜயோகமுண்டாகும். ஜாதகனுடைய தகப்பன் இங்கித மறிந்தவனாகவும், தைரியத்தை யுடையவனாகவும், உண்மையே பேசுபவனாகவும், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவனாகவும், அரசாங்க ஜன ஸ்நேகமுடையவனாகவும், திட்டமாகப் புசிப்பவனும், மர்மமான மனதுடையவனாகவும், காமியாகவும், பரஸ்திரீ லோலனாகவும், பாலியத்தில் கிலேசம் முதலான தூக்கமுடையவனாகவும், பத்து வயது வரையில் கஷ்டமும், சீக்கிரத்தில் கோபிப்பவனும், சந்தோஷ மனதுடையவனும், தனம் சம்பாதிப்பதில் சமர்த்

தனுகவும், பித்தம் நிறைந்த தேகமுடையவனுகவும், சிநேக துரோக புத்தியுடையவனுகவும் இருப்பான்.

(107) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவிருத்தியம்சம்) ஆகி சூரியன் ராகுவுடன் கூடி நீசராசியிலிருந்து சனியுடன் சேர்ந்திருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் கொஞ்சம் லோப குணமுள்ளவன், பரஸ்திரீ சேர்க்கையால் பாபம் செய்பவன், எப்பொழுதும் திரவியம் சம்பாதிப்பவன், காதகன், பாபத்தொழிலுடையவன், மத்திய வயதில் பாக்கியமுடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், சகோதர ஹீனன், தகப்பனுக்குச் சௌக்கியம் செய்யாதவன், வயதின் கடைசியில் சௌக்கியத்தையுடையவன், சேதுஸ்நாநாதி புண்ணியங்களைச் செய்து இந்திரியங்களைச் செயித்து எப்போதும் தர்மகாரியங்களைச் செய்பவனுவான்.

(108) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவிருத்தியம்சம்) ஆகி ஜெனித்த ஜாதகனுக்கு ஐந்தாம் பாவாதிபதி கேந்திரத்தில் இருந்து மித்திராம்சத்தில் இருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய பாட்டன் கொடையாளியாயும், பணத்தைச் சம்பாதிப்பதில் சமர்த்தனுகவும், இரண்டு சகோதரர்களுடன் கூடியும், மானியாகவும், தன் ஜனங்களோடு கூடி அவர்களை அன்புடன் காப்பாற்றுபவனுகவும் இருப்பான். ஷை ஐந்தாம் பாவாதிபதி எட்டாம் பாவாதிபதியாகும் தோஷத்தால் ஜாதகனுடைய பாட்டன் அற்ப ஆயுளால் மறித்து விடுவான்.

(109) ஜென்ம லக்கினம் சிம்மம் (நிவிருத்தியம்சம்) ஆகி பிறந்த ஜாதகனுக்குச் சந்திரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்து சுக்கிரனுல் பார்க்கப்பட்டாலும், சந்திரன் தன் உச்சராசியிலிருந்து சுக்கிரனுல் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தாய் தீர்க்க ஆயுளையுடையவளாவாள்.

(110) ஜென்ம லக்கினம் சிம்மம் (தனஞ்ஜயாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை125-48 கலை முதல் பாகை 126-00 கலை வரையிலும்) ஆகிப் பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு நான்காம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருந்து பாக்யாம்சத்திலிருக்கப்பட்ட சனியால் பார்க்கப்பட்டால் பெரிய நதிப்பிராந்தியத்திலுள்ள தேசத்தில் கிழக்கு மேற்கு வீதியில் அக்கிராஹாரத்தில் தெற்குப் பார்த்த வீட்டில் ஜாதகன் ஜெனித்தவனுவான். உத்தராம்சத்தில் ஜெனித்தவனுனல்

தெற்கு வடக்கு வீதியில் கிழக்கு பாகத்தில் உள்ள வீட்டில் ஜெனித்தவனாவான்.

(111 ஜென்ம லக்கினம் சிம்மம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவாதி சனியுடன் கூடியிருந்தால் ஜென்மதார தெசையில் ஓராம் வருஷத்தில் அல்லது மூன்றாம் வருஷத்தில் ஜாதகன் கொஞ்சம் பாலாரிஷ்ட பயத்தால் மரணத்துக்குச் சமமாகக் கிடந்து பிழைப்பான்.

(112) ஜென்மலக்கினம் சிம்மம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சுபாம்சத்தில் சந்திரனிருந்து, குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டால் ஜென்ம தெசையில் ஜாதகனுக்குக் கொஞ்சம் சௌக்கியமும், ஜாதகனுடைய தகப்பனுக்குச் சுபமும், சௌக்கியமும், தாய்க்கும், சகோதரர்களுக்கும் சௌக்கியமும், அப்படியே தேகபுஷ்டியும், பின் சகோதரி சௌக்கியமும், ஜாதகனுடைய தாய்க்கு ஆயுள் விருத்தியும், தாய் வம்சத்தில் விசேஷ சௌக்கியமும், ஜாதகனுடைய அம்மானுக்கு அரிஷ்டமும் உண்டாகும்.

(113) ஜென்ம லக்கினம் சிம்மம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் சூரியன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய ஜென்ம தெசையில் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சரீரத்தில் ரோகம் உண்டாகும், ஜாதகனுடைய தகப்பன் நடுவில்கொஞ்சம் தரித்திரத்தை யடைவான், அவன் ஈகையுடையவன், குணம் நிறைந்தவன், வைதீக ஆசார புத்தி யுடையவன், பயிர்த்தொழிலில் பலன் கொஞ்சம் அடைபவன், அன்னதானம் செய்வதில் பிரியமுள்ளவன், சுகமுடையவன், ஜாதகனுடைய தாய் குணவதி, சந்தோஷ முடையவள், தன் கணவனிடம் பக்தியுடன் கூடினவள், பதிவிரதை நல்ல புகழுடையவள், வம்ச பாக்கிய விருத்தியுள்ளவள், அன்ன தானம் செய்வதில் பிரியமுள்ளவள், எப்பொழுதும் தன் பந்து ஜனங்களை ரக்ஷிப்பவள், வெகு காலம் வரையில் சுமங்கலியாகவே யிருப்பவள்.

(114) ஜென்ம லக்கினம் சிம்மம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி லக்கினம் நீங்கியமற்ற கேந்திரத்தில் செவ்வாய் இருந்து பாக்கியாம்சத்தில் இருக்கப்பட்ட சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் மத்தியாயுளுடையவன், ஜாதகனுக்கு மூத்த சகோதரன் வெகு ஆயுளுடையவன், இவர்கள் இரண்டு சகோதரர்களும் தீர்க்காயுளுடையவர்

கள், சகோதரியும் அப்படியே, வேறு சிலர் ஜாதகனுக்குத் தன்னைத் தவிற இரண்டு சகோதரர்கள் உண்டு என்று சொல்லுகிறார்கள்.

(115) ஜென்ம லக்கினம் சிம்மம் (தனஞ்ஜயாம்சம்) ஆகிக் குரு பதினோராம் பாவத்தில் இருக்கப் பிறந்தவனுக்கு மூத்த சகோதரன் நல்ல யோகமுடையவனாகவும், வைதீக ஆசாரமுடையவனாகவும், தர் மாத்துமாவாகவும், தன் பந்துஜனங்களை ரக்ஷிப்பவனாகவும், பின் சகோதரன் வெகு ஆயுளுடையவனாகவும், கொஞ்சம் தாமத காரியங்களைச் செய்பவனாகவும், பரஸ்திரீ சங்கமமுடையவனாகவும், காமியாகவும் வீணாகானத்தில் பிரியமுள்ளவனாகவும், சுகியாகவும் இருப்பான்.

(117) ஜென்ம லக்கினம் சிம்மம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி நான் காம் பாவாதிபதி சிம்மாம்சத்தில் விருச்சிக ராசியில் பதினேழாவது நக்ஷத்திரத்தில் இருந்தால் ஜாதகன் பிரபுப் பிறப்பாவான், சுயப் பிரபு விடம் ஸர்வாதிகாரியாயிருப்பான். ஸர்வ அனுகூலமும் உள்ளவன்.

(116) ஜென்ம லக்கினம் சிம்மம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் கேது விருந்தால் ஜாதகனுடைய மனைவிக்குப் பீடையுண் டாகும், மனைவியால் ஜாதகன் விசாரமடைவான், புத்திரனாலும் சஞ்சலத்தை அடைவான், முதலில் ஸ்திரீப் பிரஜை ஜெனிக்கும், அந்திய காலத்தில் நல்ல புத்திரன் பிறப்பான்.

(118) ஜென்ம லக்கினம் சிம்மம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சந்திரனிருந்து அந்த பாவாதிபதி புதனுடைய ராசியிலிருக்க ஏழாம் பாவத்தில் பாபக்கிரக மிருந்தால் ஸந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும். அந்த தோஷத்திற்கு எத்தனத்தால் ஜாதகன் சாந்தி செய்துக்கொண்டால் முன் ஜென்மாந்திர புண்ணியத்தால் அந்திய காலத்தில் நல்ல புத்திரனை அடைவான்.

(119) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸுப்பிரபாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 134-12 கலை முதல் பாகை 134-24கலை வரையிலும்) ஆகி பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி லக்கின கேந்திரத்திலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் பெரிய சமுத்திரப் பிராந்தியத்தில் அல்லது வனப்பிராந்தியத்தில் ஜாதகன் ஜெனித்தவனாவான்.

(120) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸுப்ரபாம்சம்) ஆகி வர்க் கோத்தமத்தில் லக்கின பாவாதிபதி ஐந்தாம் பாவாதிபதியுடன் கூடி

யிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விஷ்ணு பக்தி யுடையவன், தேவ பிராமண பக்தியுடையவன், அயலாருக்கு இங்கிதம் சொல்லத் தெரிந்தவன், நிபுணன், தர்ம புத்தியுடையவன், இந்திரியங்களை ஜெயித்தவன், எல்லா ஜனங்களுக்கும் உபகாரம் செய்பவன், சௌரியமுடையவன், கோபி, கீர்த்தியுடையவன், மித்திரன், தன் சொந்த பந்து இவர்களை ரக்ஷிப்பவன், கெட்டியான சொல்லுடையவன், கொஞ்சத்தில் பொறுமையுடையவன், அரசாங்கத்தில் நல்ல பெயருடன் கூடினவன், எப்போதும் ராஜ தெரிசனம் உடையவனுவான்.

(121) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸுப்பிரபாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி லக்கினம் தவிர்த்து மற்ற கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் தகப்பனைவிட மேலான குணமுடையவன், பூர்ண ஆயுள் யோகமுடையவன், சுகியாயிருப்பான்.

(122) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸுப்பிரபாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி செவ்வாயாகி ஏழாவது கேந்திரத்தில் சனியின் க்ஷேத்திரத்தில் இருந்தால் நீச அரச தேசத்தில் அரசன் மூலமாக ஜாதகன் ஸர்வாத்தியக்ஷகனுகவும், எல்லா அனுகூல முள்ளவனுமாகவும் இருப்பான்.

(123) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸுப்பிரபாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்தில் இருந்து இரண்டாம் பாவத்தில் இருக்கப்பட்ட சந்திரனைச் செவ்வாய் பார்த்தால் ஜாதகனுடைய தாய் குணவதி, சாந்தமுடையவள், எப்போதும் பந்துக்களுக்குப் பிரியமானதைச் செய்வாள், பாக்கியவம்சத்தில் பிறந்த கணவனிடத்தில் பக்தியுடன் கூடினவள், இந்த விதமான குணத்தையுள்ள தாய்சுமங்கலியாகவே மரிப்பாள்.

(124) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸுப்பிரபாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி பலத்துடன் கூடி லக்கினபாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய பின் சகோதரன் தீர்க்காயுளுடையவன், அரசாங்கத்தில் நல்ல கீர்த்தியுடையவன், பாக்கியம் முதலான விருத்தியுடையவன், உலகத்தில் கீர்த்தியுடையவன்.

(125) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸுப்ரபாம்சம்) ஆகி சூரியன் வர்க்கோத்தமாம்சத்திலிருக்கப் பிறந்த ஜாதகன் ரூப முடையவன், ஸ்ரீமான், எழுதுவதில் சமர்த்தன், வாதசிலேஷ்ம ஸ்வபாவமுள்ளவன், கொஞ்சம் தனத்தை வட்டிக்குக் கொடுத்து வாங்குவதில் சம

ர்த்தன், அன்னிய பாஷையில் சிரமப்படுபவன், கல்வியுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், நீதிமான், தர்மத்துடன் கூடினவன், பதினாறு வயதுக்குமேல் சுகமும், இருபது வயதுக்குமேல் விசேஷமுடையவனாகவும் இருப்பான்.

(126) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸூப்ரபாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்தில் இருந்து பதினோராம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதிக்கனுகுணமான வித்தையடைவான், அன்னிய பாஷைகளில் வெகு சிறமப்பட்டு அறிவான், பாலியத்தில் ஜாதகன் நிதான புத்தியுடையவன், சாது, தர்ம சீலன், ஜிதேந்திரியனுமாவான்.

(127) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸூப்ரபாம்சம்) ஆகி அமலா யோகத்தில் ஜெனித்த ஜாதகன் க்ஷேமதார தெசையில் ராஜயோகத்தை அடைவான், சொர்ணம், வஸ்திரம், நல்ல ஆபரணம் முதலியனவும், தன் வீட்டில் சொர்ண பாத்திரம் முதலானதும், உடையவனுமாயிருப்பான், தன் பிரபுவுக்கு விசேஷ சௌக்கியமும், சுபமும், பாக்கிய விருத்தியும் உண்டாகும்.

(128) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸூப்ரபாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் மனைவிக்குப் பீடையும், விசாரமும் உண்டாகும், அந்த செவ்வாயிருக்கும் ராசிநாதன் ஜாதகத்தில் பலவானாக எங்கிருந்தாலும் பாபக்கிரகத்துடன் கூடி இருந்தால் ஜாதகன் இரண்டு மனைவியுடையவன் ஆவான், அப்படி யில்லையேல் ஜாதகனுடைய மனைவிக்குக் கர்ப்ப காலத்தில் சங்காதோஷம் சம்பவிக்கும், ஷை ஜாதகனுக்குப் புத்திர சந்தானத்துக்கும் இடைஞ்சலுண்டாகும். அந்த தோஷம் விலக சிம்சுமார தானம் செய்தால் இரண்டு புத்திரர்களும், இரண்டு புத்திரிகளும் தீர்க்க ஆயுளுடையவர்களாகச் சந்தேகமில்லாமல் உண்டாவார்கள்.

(129) ஜென்மலக்கினம் சிம்மம் (ஸூப்ரபாம்சம்) ஆகி அமலாயோகத்தில் ஜெனித்த ஜாதகனுக்குத் தடாகம், உத்தியானம், கோபுரம், பிராகாரம் இவற்றைக்கட்டும் தர்மப்பிராப்தியும், சேதுஸ்நாநாதி புண்ணிய கைங்கரியங்களும் சித்தியாகி நல்ல புண்ணியத்தையடைகிறான்.

(130) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸூப்ரபாம்சம்) ஆகிப் பிறந்தவனுக்கு இரண்டாம் பாவத்தில் சந்திரனிருந்து, குருவும் ஒன்பதாம் பாவாதிபதியும் கூடி ஐந்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் ஜீர்ணோ

த்தாரணம் செய்வதால் புண்ணியங்களுண்டாகி புத்திரனால் நல்ல சந்தோஷமும், வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷமுள்ளவனுமாக இருப்பான்.

(131) ஜென்ம லக்கினம் சிம்மம் (ஸூப்ரபாம்சம்) ஆகி விரய பாவாதிபதி சுபஸ்தானத்தில் இருக்க விரய பாவத்தில் கேது இருந்தாலும், கேது விரய பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகனுக்கு அந்திய காலத்தில் தேக வியோகமான பின்பு புண்ணிய லோகப்பிராப்தியும் மறு ஜென்மம் உத்தமமானதாகவும் உண்டாகும்.

(132) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காராம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 145–00 கலை முதல் பாகை 145-12 கலை வரையிலும்) ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் மஹோததி என்கிற தென் சமுத்திரப் பிராந்திய தேசத்தில் நகரத்தில் ஜெனித்தவனுவான். உத்தராம்சத்தில் ஜெனித்தவனுக்குச் சிறிய கிராமத்தில் ஜெனனம் நேரிடும்.

(133) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காராம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்கு நான்காம் பாவாதிபதி ரவியுடன் கூடி ஐந்தாம் பாவத்தில் யிருந்து, நான்காம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை கொஞ்சமாக இருக்கும், சூதி தோஷ பயம் கொஞ்சம் உண்டாகும். உத்தராம்சத்தில் ஜெனித்தவனுடைய தாய்க்குப் பிரசவ காலத்தில் அதிக வேதனையுண்டாகும், சுப திருஷ்டியிருந்தால் சௌக்கியமுண்டாகும்.

(134) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காராம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்குத் தாய், தகப்பன் தீர்க்காயுளுடையவர்கள், சகோதர விருத்தி யுண்டாகும், ஜாதகனுடைய பிதா விஷ்ணு பக்தி யுடையவன், தெய்வப் பிராம்மண பக்தியுடையவன், அரசாங்கத்தில் புகழுடையவன், ராஜாங்க ஜன சிநேகமுள்ளவன், பரோபகாரம் செய்வதில் எண்ணமுடையவன், தன் பிதா இங்கித மறிந்தவன், எழுத்து வித்தையில் சமர்த்தன், வயோதிக வயதில் யோகமுடையவனுயிருப்பான்.

(135) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி லக்கினத்தை தவிர்த்து மற்ற கேந்திரத் திரிகோணங்களிலிருந்து லக்கினத்தின் இரண்டாம் பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகனுடைய தாய் வெகு காலம் ஜீவித்திருப்பாள், தன் தாய் குணவதி,

நல்லவ்ள், கொஞ்சம் ரோக சரீரமுடையவள், கணவனிடம் பக்தி யுடையவள், தன் குலத்திலேயே பாக்கியசாலி, தாய் வம்சத்தில் விசேஷ சௌக்கியமுடையவள், தன் தாய் ஆயுள் விருத்தியுடைய வளாவாள், ஜாதகன் ரூப முடையவன், வெளுப்பு நிறமுள்ளவன், காத்திர முடையவன், நல்ல அறிவாளி, அழகிய முகமுங் கண்களும் பொருந்தியவன், அயலாருக்கிங்கித மறிந்தவன், நிபுணன், பணம் சம் பாதிப்பதில் சமர்த்தன், திட்டமாய்ப் புசிப்பவன், கொஞ்சமாய்ப் பேசுபவன், சொற்ப நித்திரை யுடையவன், அதிக ஜாக்கிரதை யுடை யவன், எழுதுவதில் நல்ல நிபுணன், அன்னிய பாஷையில் ஆராய்ச்சி செய்வான், எப்பொழுதும் விஷ்ணு பக்தியுடையவன், வைஷ்ணவ ஆசாரமுடையவன், பாக்கிய முடையவன், தேசாந்திரத்தில் பாக்கிய யோகமுடையவன், குணமுள்ள இரண்டு தாரமுடையவன், கொடை யாளி, உண்மையே பேசுபவன், சந்தன, புஷ்ப வஸ்திரப் பிரியன், சங்கீதப் பிரியன், காம முடையவன், எப்போதும் எக்காலமும் சரசம் செய்வதில் பிரியமுள்ளவனுயிருப்பான்.

(136) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் புதன் இருக்க குரு தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் ஜாதிக்கனுகுணமான வித்தையடைவான், ஊகிக்கத் தெரிந்தவனு யிருப்பான்.

(137) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காம்சம்) ஆகிப் பிறந்தவ னுக்கு ஏழாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் கேந்திரத்தில் இருந் தால் தன் பாரியை அழகு நிறைந்தவள், கொண்டாடப்பட்டவள், நல்ல குணத்துடன் கூடினவள், குடும்பஸ்தன் வீட்டில் விவாகம் ஜாதகனுடைய மூன்றும் தெசையில் நடக்கும், கோசாரத்தில் ஓராம் பரியாயத்தில் விருச்சிக ராசியில் சனி இருக்கும் சமயம் ஜாதகனுக் குத் தேகபீடை யுண்டாகும், அபமிருத்யு பயம் உண்டாகும். தனக் குச் சமமான ஜனங்களுக்கு அரிஷ்டம் நேரிடும், அல்லது விபத்தெ சையின் கடைசியில் ஜாதகனுடைய மனைவி மரணத்தை யடைவாள்.

(138) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காம்சம்) ஆகி ஒன்ப தாம் பாவாதிபதியும் லக்கின பாவாதிபதியும் கேந்திரத்தில் அல்லது ஒருவருக்கொருவர் கேந்திரமாகி யிருந்தாலும் ஜாதகனுக்கு ராஜ யோக அபிவிருத்தி யுண்டாகும். ஜாதகன் பல்லக்கு முதலிய வாகன பாக்கிய முடையவனுவான்.

(139) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி மீன ராசியில் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் நதிப் பிராந்தியத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு பாகத்தில் உள்ள வீட்டில் ஜெனித்தவனுவான், உத்தராம்சத்தில் பிறந்தவன் தெற்கு வடக்கு வீதியில் கிழக்குப் பாகத்தில் உள்ள வீட்டில் பிறந்தவனுவான்.

(140) ஜென்மலக்கினம் சிம்மம் (மாலாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் கேது இருந்தால் பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனைகொஞ்சமாயிருக்கும். உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய் பிரசவத்தில் அதிக வேதனையால் பீடிக்கப்படுவாள், பூர்வாம்சத்திலும் உத்தராம்சத்திலும் ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்ட பயமுண்டாகும், குரு பார்த்தால் சுகமும், சீக்கிரத்தில் ஆரோக்கியமும் உண்டாகும், ஜாதகனுக்கு ஸம்பத் தெசையில் ராகு புக்தியிலாவது, சனி புக்தியிலாவது கொஞ்சம் மாந்த சுரம் முதலானவற்ருல் பயம் உண்டாகும்.

(141) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து, சூரியன் மீன ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விஷ்ணு பக்தியுடையவன், நீண்ட ஆயுளுடையவன், சகோதரர்களுடன் கூடினவன், எப்போதும் வைதீக ஆசாரமுடையவன், திரவியம் சம்பாதிப்பதில் சமர்த்தன், நல்ல செய்கை, ஆசாரம் இவைகளையுடையவன், பாலியத்தில் சுகி, மத்திய வயதில் தரித்திரத்தை அடைபவன், பிறகு சௌக்கியமடைபவன், ஜாதகனுடைய தகப்பன் பலனைப் போலவே தாய்க்கும் பலன் உண்டாகும்.

(142) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாலாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்திலிருந்து லக்கினத்தின் மூன்றும் பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகனுடைய தாய் சௌக்கியமுடையவள், குண முள்ளவள், சுத்தமுள்ளவள், கொஞ்சம் போகமுள்ளவள், அன்னதானம் செய்வதில் இஷ்ட முள்ளவள், பந்துக்களுக்கு எப்பொழுதும் உபகாரம் செய்பவள், சகோதரர்களுடன் கூடினவள், நல்ல வம்சத்தில் பிறந்தவள், தாய் வமிசத்தில் அற்ப சுகம் உள்ளவள், ஜாதகனுடைய அம்மான் சுபமுள்ளவனுகவும், பிரபல முடையவனுகவு மிருப்பான்.

(143) ஜென்மலக்கினம் சிம்மம் (மாலாம்சம்) ஆகி மூன்றும்பாவாதிபதி தன் உச்சராசியில் புதனுடன் கூடியிருந்து அமலா யோகத்தில் ஜெனித்த ஜாதகனுடைய சகோதரர், தாய் இவர்களுக்கு க்ஷேமமுண்டாகும். மூன்றும் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தால் பின் சகோதர நாசமுண்டாகும், சகோதரிகளுக்குக் கொஞ்சம் சுகமுண்டாகும், இரண்டு மூன்று சகோதரிகள் நாசமடைவார்கள்.

(144) ஜென்ம லக்கினம் சிம்மம் (மாலாம்சம்) ஆகி புதத்திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன் ரூப லக்ஷணமுடையவன், கருப்பு நிற தேகமுடையவன், சகோதரர்களுடன் கூடியவன், மூன்று சகோதரிகளை யுடையவன், வேறு சிலர் நான்கு சகோதரிகள் உண்டென்று சொல்லுகிறார்கள், சொற்ப கல்வி யுடையவன், வைதீகாசார புத்தி யுடையவன், பாலியத்தில் கொஞ்சம் சுகமுடையவன், காமமுடையவன், கொஞ்சமாய்ப் புசிப்பவன், ரகசிய மனதுடையவன், நல்ல அறிவுடையவன், இருபத்தேழு வயதுக்குமேல் சௌக்கியமுடையவன், முப்பத்தாறு வயதுக்குமேல் மத்திய வயதில் பாக்கிய முடையவன், தன் கையால் சம்பாதிக்கப்பட்ட பாக்கியமுடையவன், தன்னுடைய சிறிய தகப்பனுடைய தனம் கொஞ்சம் அடைபவன், மத்திய அந்திய வயதுகளில் சௌக்கிய மடைபவன், குணமுடையவன், பதினாறு அல்லது பதினேழாவது வயதில் விவாகமுடையவனுவான்.

(145) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகிப்பூர்வபாகத்தில் பிறந்தவனுக்குக் குருவுடன்கூடி லக்கின பாவாதிபதி கூடியிருந்து குரு லக்கினபாவத்தைப் பார்த்தாலும், லக்கினபாவத்தில் இருந்தாலும் பெரிய நதிப்பிராந்திய பூமியில் புண்ணிய தேசத்தில் தேவாலய சமீபத்தில் பிறப்பும் வாசமும் நேரிடும். உத்தராம்சத்தில் இப்படி யிருந்தால் நகரத்தில் அல்லது பெரிய கிராமத்தில் ஜெனனம் நேரிடும்.

(146) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டோ குருவுடன் கூடியோ யிருந்து லக்கின பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை கொஞ்சமாயிருக்கும். நான்காம் பாவத்தில் ராகு இருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டாலும் உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்குக் கொஞ்சம் பீடை உண்டாகும்.

(147) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி லக்கின கேந்திரத்தில் சந்திரனிருந்து உப லக்கினத்தில் (அதாவது பன்னி ரண்டாமிடத்தில்) சனியு மிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் தோஷமும், ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டமும், மாந்த சுர பயமும், இரிணபயமும் குழந்தைகளுக்குரிய வியாதிகளும் உண்டாகும்.

(148) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி குருவுடன் கூடியிருந்து, பத்தாம் பாவாதிபதி புதனுடன் கூடியிருந்து, எட்டாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகனுக்குச் சகல தோஷங்களும் விலகி ஜாதகன் சுகமடைவான், ஜாதகன் அறுபத்தெட்டு வயதுடையவனுவான்.

(149) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகிச் சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி பதினோ ராம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க ஆயுளு டையவன், விஷ்ணு பக்தியுடையவன், தேவப் பிராமண பக்தியுடை யவன், சூரியன் முகுந்தாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பாஞ்சராத்ர மதத்தை யடைபவன், நல்ல செய்கையும், ஆசாரமும் உடையவன், கொஞ்சம் விஷ்ணு பூஜை முதலியவற்றுடன் கூடினவ னுயிருப்பான்.

(150) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகிச் சூரி யன் ஐந்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப் பன் தேவத் திரவியத்தால் ஜீவிப்பான், தேவாலயத்தில் விசாரணை கர்த்தனுயிருப்பான், அரசாங்கத்தில் புகழுடையவனுயிருப்பான்.

(151) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்திற்குப் பத்தாம் பாவாதிபதி லக்கினத்திற்கு விரைய பாவத் தில்இருந்து சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஜாகனுடைய தகப்பன் தேவாலயத் திரவியத்தால் சுகத்தையுடையவனுகவும், புத்திரன், புத் திரி யுடையவனுகவும், பாலியத்தில் அற்பசுகமுடையவனுகியும், காமி யாகியும், மத்திய வயதில் பாக்கிய முடையவனுகியும், வயோதிக வய தில் புத்திரனுல் யோகமுடையவனுகியும், மந்திர தந்திரங்களில் கஷ்டப் படுபவனுகவும் இருப்பான்.

(152) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருக்கச் சந்திரன் லக்கின கேந்

திரத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் நீண்ட ஆயுளுடையவள், குணவதி, பொறுமையுடையவள், பந்துக்களுக்கு இஷ்டமானதைச் செய்வபள்.

(153) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுடைய தாய் ரோக சரீர முடையவள், ஜாதகனுடைய ஐந்தாம் தெசையில் தாய் மரிப்பாள்.

(154) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகிச் செவ்வாய் லாப பாவத்திலாவது, திரிகோண ஸ்தானங்களிலாவது இருந்து குமாராம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் சகோதர விருத்தியுடையவன், இரண்டு மூத்த சகோதரர்களுடையவன், பின் சகோதரர் இருவர்கள் உடையவன், ஜாதகனுடைய எல்லோருக்கும் மூத்த சகோதரன் விஷ்ணுவை ஆராதிப்பவன், திரவியசம்பாதனையில் அற்ப சக்தியுடையவன், இரண்டு தாரமுடையவன், செவ்வாய் லாப பாவத்தில் இருந்தால் ஒரு சகோதரன் மரிப்பான். எல்லா சகோதரருக்கும் மூத்த சகோதரனுக்கு நேரிளைய சகோதரன் அற்பாயுளுடையவனாக மரிப்பான், பின் சகோதரர்களிருவர், சௌக்கியமுடையவர்கள், இருந்தாலும் அற்ப புத்திரனையுடையவர்கள், மற்ற பின் சகோதரன் ஒருவன் வியாதியால் உபத்திரவத்தையடைவான், மூத்த சகோதரன் அப்படி யிருப்பான், அவன் காதில் நோயால் பீடிக்கப்படுவான், ஜாதகன் இரண்டு சகோதரிகளை உடையவன், ஒருத்தி விதவையாகி துக்கத்தால் பீடிக்கப்படுவாள், மற்ற ஒரு சகோதரி கிலேசமுடையவளாகி யிருப்பாள், சுக்கிரன் சுவாஸினி அம்சத்தில் இருந்தால் அவள் சுமங்கலியாகவே மரிப்பாள்.

(155) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி சனி திரிம்சாம்சத்தில் ருசக யோகத்தில் ஜெனித்தவன் கருப்பு நிறமுடையவன், மெல்லிய சரீரமுடையவன், பித்தம் நிறைந்த தேகி, சூட்டுத் தேகி, காத்திர ஸ்வரூபமுடையவன், சம அங்க முடையவன், அறிவாளி, தீரன், அழகிய முகமும் கண்களும் பொருந்தியவன்.

(156) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி ராகு நான்காம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் சாஸ்திர ஞானமில்லாதவன், வேத சாஸ்திர ஆகமங்களில் பிரீதியுடையவன், எழுதுவதில் சமர்த்தன்.

(157) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி சனி பன்னிரெண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் துர்ப்பல முடையவன், சத்துரு பீடையுடையவன், கோபமுடையவன், துஷ்ட புத்தியுடையவன், தீரன், சூரன், நல்ல புத்தியுடையவனுவான்.

(158) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகிப் பத்தாம் பாவத்தில் கேது இருக்க ஐந்தாம் பாவத்தில் ஐந்தாம் பாவாதிபதியிருந்தால் ஜாதகன் தெய்வத்தின் திரவியத்தினுல் பிழைப்பவன், தேவாலயத்தில் சுதந்திரமுடையவன், விஷ்ணு க்ஷேத்திரத்தில் புகழுடையவன், வைஷ்வ ஆசாரத்துடன் கூடியவன் ஆவான்.

(159) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி பன்னிரெண்டாம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் தியாகம் செய்பவன், கெம்பீரபுத்தியுடையவன், நல்ல வழியில் சொற்ப சிலவும், கெட்ட வழியில் அதிக செலவும் செய்பவன், சங்கீதப் பிரியமுடையவன், காமமுடையவன், எப்போதும் போகத்தில் ஆசையுடையவன், விஷயலோலனுக இருப்பான்.

(160) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் சூரியனிருந்து சுக்கிரன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் சுக்கிரன் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் பரஸ்திரீகமனம் செய்பவன், காமுகன், பல ஜாதி ஸ்திரீகளைச் சேருபவன், பல வழிகளிலும் செலவு அதிகம் செய்பவன், வேசிஸ்திரீ சேர்க்கையை அடைவான்.

(161) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகிக் குரு ஏழாம்பாவத்தில் இருந்தால் பிராமணர் சேர்க்கையுள்ளவனுகவும், புத்திமானுகவும், சம்போக காலத்தில் விநோதமானவனுகவும், சந்தன புஷ்ப வஸ்திரப் பிரியனுகவும், அயலார் மனைவிகளிடத்தில் ஆசையுடையவனுகவும், தன் மனைவியிடம் நிதான ஆசையுடையவனுகவுமிருப்பான்.

(162) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவத்துக்கு ஏழாமிடத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் காமுகனுகவும், சஞ்சலமுடையவனுகவும், துஷ்டர்களிடம் துஷ்ட புத்தியுடனும், குரூரமானவர்களுக்குக் குரூரமானவனுகவும் இருப்பான்.

(163) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி லக்கின

பாவாதிபதி செவ்வாயுடன் கூடியிருந்தால் எப்பொழுதும் ஜாதகன் அனுசாரமுடையவனுயிருப்பான்.

(164) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் சனியும், ஐந்தாம் பாவத்தில் சூரியனுமிருக்கப் பிறந்த ஜாதகன் காமியாகவும், சுருசுருப்பான காரியங்களுடையவனுகவும், மித்திரவஞ்சனை செய்யும் புத்தியுடையவனுகவும் இருப்பான்.

(165) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகிப் பத்தாம் பாவாதிபதி சனியால் நன்ருய்ப் பார்க்கப்பட்டால் ஜாதகன் கொஞ்சம் அபகீர்த்தி யுடையவனுக யிருப்பான். சகோதர விருத்தியுடையவன், தனதான்னியப் பெருக்குடையவன், சகோதரப் பிரபலமுடையவனுகவு மிருப்பவன்.

(166) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவத்துக்கு ஐந்தாமிடத்தில் ராகு இருந்து ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் குரு, செவ்வாய், வானவர், சூரியன், இவர்களுடன் கூடியுமிருந்தால் ஜாதகனுக்குச் சந்ததிக்கு இடைஞ்சலுண்டாகும். அந்த தோஷம் நிவர்த்தியாகும்படி சேதுஸ்நாநமும், ஐந்து கோதானமும், பாலகிருஷ்ணப் பிரதிமை தானமும் செய்தால் நல்ல புத்திரன் பிறப்பான்.

(167) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி சுக்கிரன் ஐந்தாம் பாவத்தில் இருந்து பாபக்கிரகங்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் துஷ்ட ஸ்திரீ சேர்க்கையால் தோஷமுண்டாகியும், புத்திர நாசத்தால் சோகமுடையவனுகவும் இருப்பான். சேதுஸ்நாநம் முதலியன செய்து நாகசாந்தியும் செய்தால் ஐந்தாம் தெசையில் நல்ல புத்திரனுண்டாவான்.

(168) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகி ஜெனித்த ஜாதகனுக்கு குரு ஐந்தாம் பாவத்தில் சூரியனுடன் கூடியிருந்தால் காலந்தள்ளி புத்திரன் பிறப்பான் என்றும், அல்லது வேறு மனைவியிடம் புத்திரனுண்டாவான் என்றும் சிலர் சொல்லுகிருர்கள், வேறு சிலர் ஜாதகன் ஒரே தாரமுடையவன். ஜாதகனுடைய ஐந்தாம் தெசையில் தோஷம் நிவர்த்தி செய்த பிறகு அந்திய காலத்தில் ஜாதகன் புத்திரனை அடைவான் என்று சொல்லுகிருர்கள்.

(169) ஜென்ம லக்கினம் சிம்மம் (சம்பகாம்சம்) ஆகிச் சந்திர லக்கினத்தில் கிரகமில்லாமலும் சந்திரனுக்கு இரண்டு பக்கங்களிலும் கிரகமில்லாதிருக்க ஜென்ம லக்கினத்துக்கிரண்டு பக்கங்களிலும் பாபக்

கிரகமிருந்தால் கர்த்தரீ யென்னும் யோகம் உண்டாகும். இக்கர்த்தரீ யோகத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு வழிவழியாக சத்துரு பீடையும், தாயாதி சத்துரு பீடையும், கலகமும், சேர்த்துவைக்கப்பட்ட பணத்துக்குச் செலவும், அந்தச்செலவினால்மிகவும் கிலேசமும் உண்டாகும். ஜாதகனுக்கு அந்த தாயாதி சத்துருக்களழியவேண்டி தன் குலதெய்வத்தை வழிப்பட்டு அதைப்பூஜிப்பதாலும், குலதெய்வப் பிரதிமையை அர்ச்சனை செய்து தானம் செய்வதாலும் சத்துருக்கள் அழிவடைவார்கள்.

(170) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காரம்சம்)ஆகிப் பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்கு லக்கின பாவாதிபதி கும்ப ராசியிலிருந்தால் காட்டுப் பிராந்தியத்தில் நதிப்பிராந்தியத்தில் சிறு கிராமத்தில் ஜெனனம் நேரிடும். ஜாதகன் பிறந்தகாலத்தில் ஜாதகனுடைய தாய் தகப்பன் ஜனங்களுக்குக்கெடுதியும், கலகமும் உண்டாகும்.

(171) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காரம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் சனி யிருந்து குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் ஜெனங்களுக்குப் பீடையும், பயமுமுண்டான காலத்தில் ஜெனித்தவன் என்று ரிஷிகள் சொல்லுகிறார்கள்.

(172) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காரம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சனியுடன் கூடியிருக்கப் பிறந்தவனுடைய தாய்க்குக் கொஞ்சம் பீடையுண்டாகும், ஜென்ம தெசையில் அல்லது ஜென்ம வருஷத்தில் பங்குனி மாதத்தில் ரொம்ப பயமுண்டாகும். முன்ஜென்மாந்தர புண்ணியத்தாலும், குருவுடன் நான்காம் பாவாதிபதி கூடியிருந்தாலும் ஜாதகனுடைய தாய்க்குச் சுகமுண்டாகும்.

(173) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காரம்சம்) ஆகிச் சந்திரன் பாபாம்சத்தில் இருந்துகுருவால் பார்க்கப்பட்டாலும், குருவுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய தாய்க்குக்கொஞ்சம் பீடையுண்டாகி சீக்கிரமாக ஆரோக்கியமும், சௌக்கியமும் உண்டாகும்.

(174) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காரம்சம்) ஆகி லக்கினம் நீங்க மற்ற கேந்திரங்களில் குரு மித்திர க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தேக சௌக்கியமுடையவனாக யிருப்பான்.

(175) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்காரம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர பாவங்களில் பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருக்கப் பிறந்தவனுக்கு பாலாரிஷ்டம் விலகி சுகமுண்டாகும்.

(176) ஜென்மலக்கினம் சிம்மம் (முத்கராம்சம்) ஆகி இரண்டு கிரகங்கள் சுய க்ஷேத்திரத்தில் இருக்கப் பிறந்த ஜாதகனுக்கு போகமும், சுக ஜீவனமும் உண்டாகும்.

(177) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்கராம்சம்) ஆகி லக்கினம் தவிர மற்றகேந்திரங்களில் சூரியனிருந்து நான்காம் பாவத்தில் ஒன்பதாம் பாவாதிபதியும் இருந்தால்ஜாதகனுடைய தகப்பன் சாத்துவீகன் ஸ்ரீமான், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், எப்பொழுதும் தேவர், பிராமணர்களிடத்தில் பக்தியுடையவன், வியாபாரத்தால் ஜீவனம் செய்பவன், சுயார்ஜிதமுடையவன், மத்திய வயதில் பாக்கியமுடையவன், நதிப்பிராந்தியத்திலுள்ள பட்டிணத்தில் வாசம் செய்பவன், குணம், புத்திரன், புத்திரீ இவற்றுடன் கூடினவன், நியாய வழியில் சம்பாதித்த பணமுடையவன், சூத்திர சிநேகிதத்தால் பாக்கியமுடையவன், சௌக்கியமும், தீர்க்காயுளுடையவனுவான்.

(178) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்கராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் குணத்துடன் கூடினவள், தகப்பனுக்குப் பிரியமுள்ளவள், சதி வம்சவிருத்தியுடையவள், பொறுமையுடையவள் ஆவாள்.

(179) ஜென்ம லக்கினம் சிம்மம் (முத்கராம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் அந்தியத்தில் ஞானமடைந்து கிரக ஜாதிக்குறிய லோகத்தை அடைந்து நற்கதியும் அடைவான்.

(180) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி லாப பாவத்தில் லாப பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் சூரியனுடன் கூடியிருந்து சூத்திர காலத்தில் சூத்திர வம்சத்தில் ஜெனித்த ஜாதகன் சுகியாயிருப்பான், பின் சகோதரனுடன் கூடியிருப்பான், இரண்டு சகோதரிகளுடையவன், ஜாதகன் மானியாகி யிருப்பான்.

(181) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி லாப பாவத்தில் லாபபாவாதிபதியுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் பெரிய நதிப்பிராந்திய தேசத்தில் சிவாலயம் சமீபத்திலுள்ள கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப் பாகத்தில்உள்ள வீட்டில் ஜெனித்தவனுவான்.

(182) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி ராகுவுடன் சந்திரன் கூடியிருந்து, சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் பிறந்த காலத்தில் ஜாதகனுடைய தாய் வெகு வேதனையடைந்தவள், ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்ட தோஷம் உண்டாகும், குரு பார்த்தால் சௌக்கியமுண்டாகும். ஜென்ம தெசையில் இரண்டாம் வருஷத்தில் அல்லது நான்காம் வருஷத்தில் ஜாதகன் பாலாரிஷ்டத்தால் மரணத்துக்குச் சமமாகக் கிடந்து பிழைப்பான்.

(183) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி லக்கின பாவாதி பதினோராம் பாவத்திலிருக்க ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்கு சந்திரதோஷமான சந்திரனால் மட்டும் கொஞ்சம் தோஷம் உண்டாகும்.

(184) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் இருக்க ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், ஜாதகனுக்குப் பின் சகோதர விருத்தியுண்டாகும், ஜாதகனுடைய தாய் குணமுள்ளவள், நல்லவள், கொஞ்சம் ரோக சரீரமுடையவள், கணவனுக்குப் பிரியமானவள், நல்ல புகழுடையவள், சகோதரர்களுடன் கூடினவளாவாள்.

(185) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருக்க ஒன்பதாம் பாவாதிபதி குமாராம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் வெகு ஆயுளுடையவன், சிவ பக்தியுடையவன், தேவப் பிராமண பக்தியுடையவன், கொடையாளி, திடகாத்திரமுடையவன், தரித்திரத்தால் பீடிக்கப்பட்டவன்; அற்பசுகமுடையவன், புத்திரன் பிறக்கும் வரையில் கஷ்டப்படுவான், பிறகு சௌக்கியமுடையவனுவான்.

(186) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி கேந்திரங்களிலாவது, பதினோராம் பாவத்திலாவது, திரிகோணங்களிலாவது இருந்து லக்கினம் தவிர்த்த மற்ற கேந்திரங்களில் செவ்வாயிருந்தால் ஜாதகனுக்குப் பின் சகோதரன் தீர்க்காயுளுடையவன், இரண்டு சகோதரிகள் ஆயுளுடையவர்களா யிருப்பார்கள், வேறு சிலர் மூன்று சகோதரிகள் இருப்பார்கள் என்று சொல்லுகிறார்கள்.

(187) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி புதன் பதினோராம் பாவத்தில் சுயக்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் தன் பன்

னிரண்டாம் வயதுக்குப் பிறகு சம்பத் தெசையில் சௌக்கியத்தை யடைவான்.

(188) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்திலிருக்க வித்யாகாரகனுகிய புதன் பலத்துடன் கூடியிருந்தால் புதத்திரிம்சாம்சத்தில் பிறந்த ஜாதகன் ரூபமுடைய வன், அறிவாளி, பளபளப்பான காந்தியுடையவன், வசியமுடைய வன், அழகிய முகமுங் கண்களும் பொருந்தியவன், அதிருஷ்டசாலி, தர்மாத்துமா, ஸமதேகமுடையவன், கொஞ்சமாய்ப் புசிப்பவன், மர் மமான மனதுடையவன், காமமுடையவன், பரஸ்திரீ சேர்க்கையுடை யவன், ஸம்பத் தெசையில் ஏழாம்பாவாதிபதியின் புக்தியில் தான் பிறந்த பூமிக்குக் கிழக்கிலாவது, தென் கிழக்கிலாவது விவாகத்தை யடைவான்.

(189) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி லக்கின பாவத்துக்கு ஏழில் பாபக்கிரக மிருந்தால் ஜாதகன் அதிக காமியாயும், பரதார கமனம் செய்பவனுகவும், பல ஜாதி ஸ்திரீகளைச் சேர்பவனுக வும், கிரந்தி ரோகத்தால் பீடிக்கப்பட்டவனுகவு மிருப்பான்.

(190) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதாம்சம்) ஆகி பன்னிரண் டாம் பாவாதிபதி சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குப் பாபம் புண்ணியம், இரண்டும் சமமாயிருக்கும். இந்த லோகத்தில் நல்ல புண் ணியாத்துமாவாகி அந்தியத்தில் ஞானமும் உண்டாகும்.

(191) ஜென்ம லக்கினம் சிம்மம் (குஹாம்சம்) ஆகிப் பூர்வ பாக த்தில் ஜெனித்தவனுக்கு லக்கின பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத் திலிருக்க லக்கின பாவத்தில் சனியுமிருந்தாலும், லக்கின பாவத்தைச் சனி பார்த்தாலும், ஜாதகனுக்கு வனப்பிராந்தியத்தில், நதிப்பிராந்தி யத்தில் ஜெனனமும், வாஸமும் நேரிடும். உத்தராம்சத்தில் ஜெனன மானல் இருண்ட காட்டில் ஜெனனம் நேரிடும்.

(192) ஜென்ம லக்கினம் சிம்மம் (குஹாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் சந்திரனிருந்து எட்டாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் ஜாதகன் பிறந்தகாலத்தில் அற்ப வேதனை அடைந்தவளாவாள்.

(193) ஜென்ம லக்கினம் சிம்மம் (குஹாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் ராகு இருந்து எட்டாம் பாவத்தில் செவ்வாயிருந்து பதி

னோரம் பாவத்தில் சனி கேதுவுடன் கூடியிருக்க செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய ஜென்ம தெசையின் இரண்டாம் வருஷத்தில் கோசாரத்தில் மிதுன ராசியிருக்கும் போது ஜாதகனுடைய தாய் மரணமடைவாள், பிறகு ஜாதகன் சகோதரன் மனைவியால் சுகமடைவான்.

(194) ஜென்ம லக்கினம் சிம்மம் (குஹாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி எட்டாம் பாவத்திலிருக்க ஐந்தாம் பாவத்தில் ராகுஇருந்தால் ஜாதகன் ஸம்பத் தெசையில் தகப்பனுடைய சகோதரனால் ஸ்வீகாரமாக எடுத்துக் கொள்ளப்படுவான். சனி ஓராம் பரியாயத்தில் சிம்ம ராசியின் அந்தியத்தில் அல்லது கன்னியா ராசியில் கோட்சாரத்தில் வரும் சமயம் ஜாதகனுடைய ஸ்வீகார தகப்பனும் மறிப்பான், பிறகு ஜாதகனுடைய தகப்பனுக்குச் சுப முண்டாகும், ஜாதகனுடைய தன் தகப்பன் சிவ பக்தியுடையவன், வியாபாரத்தினால் ஜீவனம் செய்பவன், பலதேசங்களிலும் சஞ்சாரம் செய்பவன். விறகு, வாங்கல் முதலியவற்றால் ஜீவனமுடையவன், பிராமணன் மூலமாக பணவரவுண்டாகும்.

(195) ஜென்ம லக்கினம் சிம்மம் (குஹாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி எட்டாம்பாவத்திலிருந்து பன்னிரண்டாம் பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகனுடைய மூன்றும்தெசையில் ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவான், மூன்றும் பாகத்தில் ஜாதகன் விவாகமடைவான் மனைவிகருப்பு நிறமுடையவள், ஜாதகன் மாமனார் மாமியார் மூலம் யோகமுடையவன்.

(196) ஜென்ம லக்கினம் சிம்மம் (குஹாம்சம்) ஆகி லக்கின பாவத்துக்கு ஐந்தாமிடத்தில் ராகு இருந்து அந்த பாவாதிபதி சந்திரனுடன் கூடியிருந்தால் சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும். அந்த புத்திர ஸ்தானத்துக்கு ஏழில் அதாவது பதினோராமிடத்தில் சுக்கிரனிருந்தால் வளர்ப்புப் பிள்ளையால் சந்ததி உண்டாகும், வேறு சிலர் மேலும் லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சூரியன் இருந்தால் வேறு மனைவியிடம் புத்திரனுண்டாவான் என்றும், அல்லது அந்திய வயதில் புத்திரனுண்டாவான் என்றும் சொல்லுகிறார்கள்.

(197) ஜென்ம லக்கினம் சிம்மம் (சௌம்மியாம்சம்) ஆகி நான்காம்பாவாதிபதி கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் ராஜவம்சத்தில்

பிறந்தவன், சிவபக்தமதத்தை அனுசரிப்பவன், தான் சீமந்தபுத்திரன் ஆவான், அல்லது இரண்டாவது கர்ப்பத்தில் ஜெனித்தவனுவான், மூத்த சகோதரனில்லாதவன், உடன் பிறந்த சகோதரர்களையுடையவன், மூத்தமாற்ருந்தாயிக்குப் பிறந்த சகோதர சகோதரியுடையவன்.

(198) ஜென்ம லக்கினம் சிம்மம் (சௌம்மியாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு லக்கினுதிபதியும் நான்காம் பாவாதிபதியும் கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் பெரிய நதிப்பிராந்தியத்தில் புண்ணிய பூமியில் சிவாலயம் நிறைந்தவும் அப்படியே விஷ்ணு ஆலயமும் நிறைந்தும் இருக்கப்பட்ட கிழக்கு மேற்கு வீதியில் மேற்குப் பாகத்தில் உள்ள தன் தகப்பன் வீட்டில் பிறந்தவனுவான். உத்திர பாகத்தில் பிறந்தவன் பெரிய கிராமத்தில் பெரிய நதிப்பிராந்தியத்தில் புண்ணிய பூமியில் தெற்கு வடக்கு வீதியில் தாய் வீட்டில் பிறந்தவன் ஆவான்.

(199) ஜென்ம லக்கினம் சிம்மம் (சௌம்மியாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சூரியன் கேந்திரத்தில் ஸாஸ்வதாம்சத்தில் பதினேராம் பாவாதி கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் எல்லா அரிஷ்டங்களினின்றும் சுகம் அடைவான்.

(200) ஜென்ம லக்கினம் சிம்மம் (சௌம்மியாம்சம்) ஆகி லக்கினபாவாதிபதியுடன், ஒன்பது, பத்துக்குடையவர்கள் கூடியிருந்தாலும், இரண்டு பதினென்றுக் குடையவர்கள் கூடியிருந்தாலும் ஜாதகன் யோகவானுயும், கீர்த்திமானுயுமிருப்பான்.

(201) ஜென்ம லக்கினம் சிம்மம் (சௌம்மியாம்சம்) ஆகி நான்காம் பாவாதி வர்க்கோத்தமத்தில் இரண்டு பதினென்றுக்குடையவருடனும் ஐந்து, எட்டு முதலிய பாவாதிபதியுடனும் இருந்து லக்கினத்திற்கு ஏழாம்பாவாதிபதி நவாம்சத்தில் ஜென்மலக்கினத்திற்கு ஆருமிடத்தில் தன் வீட்டிலும் இருந்து மூன்றுக்கும் பத்துக்கும் உடையவருடன் ஏழாம் பாவாதிபதி ரிஷப ராசியில் கூடியிருந்தால் ஜாதகன் அநேகமான புதயல் முதலான தனத்தை விவாகமான பின்பு அடைவான்

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் சிம்ம லக்கினத்திற்கு 201.விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட சிம்ம லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் சிம்ம லக்கின பலனில் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்று அறியவும்.

கன்னியா லக்கின ஜாதகம்.

——(***)——

(1) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம் அதாவது லக்கினஸ் புடம் பாகை 159-24 கலை முதல் பாகை 159-36 கலை வரையில் ஆகி லக்கினாதிபனான புதன் வர்க்கோத்தமத்திலிருந்து இரண்டாம் பாவாதிபன் சுராம்சத்திலிருந்தால் ஜாதகன் பிராமண ஜென்மமுடையவன், அழகன்.

(2) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபன் வர்க்கோத்தமத்திலிருந்து கர்மாதிபனான புதன் சுராம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பாக்கியவான், சாது, தன் உடன் பிறந்தவரற்றவன்.

(3) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி விருச்சிகாம்சத்தில் குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய பிதாமகன் பிரசித்தியுடையவன், சூத்திரக் கிராமத்துக்கு அதிபதியாயிருப்பன், அப்படி இல்லாவிட்டால் அற்ப புண்ணியமுண்டு, அன்ன தாதா, பிராமணப் பிரியனாயிருப்பான்.

(4) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபனிருக்கும் அம்சாதிபன் சுக்கிரன் ஆகி நீச்சாம்சத்தில் சந்திரனுடன் கூடினால் ஜாதகன் மிலேச்ச ராஜ்யத்தில் சூத்திரனைச் சேவிப்பவனாவான், இவன் தகப்பன் வலிபத்திலே யோகமுடையவனாவான், இவன் பாட்டனும் அவ்விதமே மிலேச்சக் கிராமத்தில் பிரபுத்தன்மையுடையனாவான், இவனுக்குச் சமமான பிராமணன் சத்துருவாயிருப்பான்.

(5) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபதிக்குச் சுக்கிரன் பதினோராம் பாவத்தில் நீச்சாம்சத்தில் நீச்சராசியில் இருந்தால் ஜாதகனுடைய பாட்டன் தாயாதி வர்க்கத்தின் விரோதத்தால் மிக்க கிலேசமடைவான்.

(6) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி நீச்சாம்சத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால் ஷை பாட்டன் துக்கிராமத்தில் வசிப்பவனாயும், மிலேச்ச ராஜ்யத்தில் அதிபாக்கியமுடையவனுமாவான்.

(7) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கினாதிபனான புதன் சுபாம்சத்திலிருந்தால் ஜாதகன் அதிக செல்வ முடையவன், அரசாங்கத்தில் பிரசித்தன், தகப்பனைக் காட்டிலும் அதிக யோகமுடையவனாக இருப்பான், பெருந்தன்மை வாய்ந்தவன், மூன்று சகோதரர், இரண்டு சகோதரிகள் உண்டு, சுகமுடையவன், சகோதரம் மொத்தம் எட்டு உண்டாகி மீதி நாசமடையும்.

(8) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபனுக்கு பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தில் சனி குஜனுடன் கூடி இருப்பின் ஜாதகனுக்குப் பின் சகோதரர் நாசம், ஆயுள் அற்பமாகும்.

(9) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபன் துலாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்குச் சகோதர சகோதரிகள் நால்வர் தீர்க்காயுளுடையவராயிருப்பர், மூத்த சகோதரன் வெகு கீர்த்திவாய்ந்தவனாவான்.

(10) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி பாக்கிய (ஒன்பதாம் பாவ) ஆரூடாதிபன் கர்ம (பத்தாம் பாவ) ஆரூடாதிபனுடன் கூடியிருக்கில் ஜாதகனுக்குப் பாக்கிய யோக மென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜாதகன் நற்செய்கை ஆசாரமுடையவன், புத்திமான்.

(11) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபன் சுக்கிரனம்சத்திலிருந்து சுக்கிரன் நீச்சாம்சத்திலிருந்தால் ஜாதகன் உள்ளத்தில் கோபமுடையவன், தெளிந்த ஆத்துமாவுடையவனாவான், கொஞ்சம் லோபத்தன்மையுடைய சுபாவமுண்டு.

(12) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் புதன் சுபாம்சத்திலிருந்தால் ஜாதகன் தேஜஸ்உடையவன், புத்திமான், துஷ்டன், அழகிய முகமுடையவன், சாமர்த்தியசாலி, பயந்தவன், புத்தி சொல்லுபவன், சுகமுடையவன்.

(13) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி சூரியன் துலாத்தில் துலாம்சத்திலிருந்தால் ஜாதகன் வேத சாஸ்திரங்களின் பொருள் விளக்க மறிந்தவன், தினந்தோரும் அதிதிகளுக்குப் பிரீதி செய்வான்.

(14) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி சூரியன் துலாத்தில் ஸ்வநாம்சத்திலிருந்தால் ஜாதகன் யாக சித்தியுடையவனு வான், மூத்த சகோதரன் ஒருவன், இளையசகோதரர் இருவர், சகோதரிகள் மூவர் தீர்க்சாயுளுடையவராவார்.

(15) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 171-12 கலை முதல் பாகை 171-24 கலை வரையிலும்) ஆகிப் பிறந்தவன் மாநிறம், நல்ல ஆகிருதி உடையவன், சமகாத்திரன், கொஞ்சம் ஸ்தூல சரீரம் உள்ளவன், ரூபமுள்ளவன், புத்திமான், நியாயம் உள்ளவன், தெளிவுள்ள முகமுங் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, தர்மம் செய்பவன், வாயுபீடையுடைய தேகன், சத்துவகுணம் நிறம்பினவன், அயலாருடைய காரியத்தில் சுறுசுறுப்புள்ளவன், சங்கீதப்பிரியன், தானும் கான வித்தை அறிந்தவன், விஷ்ணு, சிவன் முதலியோரிடம் பக்தியுடனிருப்பவன், தேவப் பிராமணர்களை ரக்ஷிப்பவன், பரிகாசம் செய்பவன், எப்பொழுதும் வேத சாஸ்திர தத்துவம் செய்வான், பல பாஷைகளின் விசாலம் தெரிந்தவன், மிருதுவசனி, ரசமாய்ப் பேசுபவன், தேவாலய மடங்கள் முதலானவைகளைக் கட்டுபவனும், கட்டுவிப்பவனுமாவான், தர்மகர்த்தாவாக இருப்பவன், குளம், கிணறு, நடைவாவி, சத்திரம் முதலியன கட்டுவிப்பவன், யுகாந்தம் வரையில் கீர்த்தி உடையவன், வெகு பூஜைகள் செய்வான்.

(16) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி இரண்டாமிடத்துக்குடையவன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் வித்தைக்குத் தடையுள்ளவன், கொஞ்சம் இழுத்துப்பேசுவான், மத்தியில் வார்த்தை அகப்படாது, நித்யம் ராஜயோகி, கொஞ்சம் எழுத்து மூலம் ஜீவிப்பவன்.

(17) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி மூன்றுமிடத்துக்குடையவன் பன்னிரண்டில் இருக்க ஜாதகன் சீமந்த புத்திரனாக ஜெனித்தவன், மூன்று சகோதரிகளை யுடையவன், புருஷ சகோதரமில்லாதவன்.

(18) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி நான்காமிடத்துக்குடைய குரு ஏழாமிடத்தில் சனியுடன் கூடி மீனும்சத்தில் இருந்தால் மாதா புண்ணியவதி, நல்ல குணம் உள்ளவள், முப்பதா

வது வயதில் வைதவ்வியத்தால் துக்கியாவாள், குரு தெசையில் ராகு புக்தியில் அல்லது செவ்வாய் புக்தியிலாவது விஷ அதிசார தோஷத்தாலாவது தாய் மறிப்பாள், அதற்குப்பிறகு சனி தெசையில் சுய புக்தியில் தாய் மரிப்பாள் என்று சிலரும் சொல்லுகிறார்கள். தாய் வழிப் பாட்டன் நீண்ட காலம் ஜீவித்திருப்பான். பூர்வாம்ச ஜாதகமானல் மாமன் ஒருவனே என்றும், மூன்று தாரத்தை உடையவன் என்றும், அநேகம் மனைவிகளை மரிக்கச் செய்பவன் என்றும் சொல்லுகிறார்கள், மாமனுடைய இரண்டாவதான பாரியை வித்தை சுகம் இவையில்லாதவன், மாமன் கொஞ்ச காலம் கிராமாதிகாரம் செய்வான், புத்திரனுடன் கூடினவன், பூர்வம் பிராமணஸ்திரீயால் தனத்தை அடைந்தவன், புதையல் தனத்தை அடைந்தவன், பொய், சத்தியம், துரோகம் முதலியன செய்வான், அந்த பாபத்தால் புத்திரனில்லாதவனாவான், அந்த தோஷத்திற்குப் பரிகாரமாகத்தானே சுவர்ண ஆபரணம், வஸ்திரம் முதலியவற்றால் பூசித்தால் அந்திய காலத்தில் புத்திர லாபம் உண்டாகும், தாயுடன் கூடப்பிறந்த சகோதரிகள் இருவர்களாவது, மூவர்களாவது இருப்பார்கள். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு மூன்று அம்மான்களுமுண்டு.

(19) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி ஒன்பதுக்குடையவன், கேந்திரத்தில் இருக்க ஒன்பதாம் பாவத்தைச் சனி பார்த்தால் பூர்வாம்சத்தில் பிறந்த ஜாதகனுடைய தகப்பன் ராஜயோகத்தினல் பொருள் சம்பாதிப்பான், பிரபு லக்ஷணமுடையவன், அவனுக்கு ஜீவனம் உத்தியோகம், அவன் மத்திம அல்பாயுள் உடையவன், சமுத்திரத்தில் தீவு மத்தியில் நல்ல புண்ணிய க்ஷேத்திரமான சிவக்ஷேத்திரத்தை கிராமாதிகாரி என்கிற காரணத்தால் தானே அடைவான். அவ்விடத்தில் இருக்கப்பட்ட பிராமணர், சூத்திரர்களினல் ஏவல், பில்லி, சூனியம் மற்ற பாபகர்மங்களாலும் அல்லது வினைமுடிவு வியபிசார தோஷத்தாலும், ரணதோஷத்தாலும், சூத்திரர்களால் கொடுக்கப்பட்ட விஷத்தாலும், தான் செய்யும் மாந்திரீக கிருத்தியங்களாலும் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான். இதற்குச் சம்சயமில்லை, தன் பிதாவின் மரணகாலத்தில் ஜாதகன் கிராமாந்தரத்தில் இருப்பான். ராகு தெசை சனி புக்தியில் ஜாதகனுடைய தகப்பன் நிச்சயமாய் மரிப்பான், உத்தராம்சமானல் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன்.

(20) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி உத்தராம் சத்தில் ஜனித்தவனுடைய தகப்பன் நீண்ட ஆயுளையுடையவன்.

(21) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்கு சுக்கிரன் சந்திரனுடைய அம்சத்தில் இருந்தால் ஒன்பதாவது வயதில் மிகவும் பாலியத்தில் விவாகம் நடக்கும். இந்த ஜாதகன் மூத்த மனைவி கர்ப்பிணியான ஏழாவது மாதத்தில் இறந்த பிள்ளையைப் பெறுவாள். இருபதாவது வயதில் அற்ப ஆயுளால் மரிப்பாள். ஜென்ம தேசத்திலிருந்து மேற்கு பாகத்தில் அல்லது வாயு திக்கில் பெரிய பட்டினத்தில் விவாஹம் நடக்கும். இவனுக்கு அநேக தாரங்கள் உண்டு. அவர்களால் சுக முண்டாகும்.

(22) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி ஏழில் சனியிருக்கப் பிறந்தவனுக்கு இரண்டு அல்லது மூன்று தாரங்கள் ஏற்படும். இவனுடைய மூத்த மனைவி பால்யவயதில் (பிரஸவத்துடன் கூடி) பிரஸவம் வெளிப்படாமலேயே கர்ப்பத்துடன் மரிப்பாள். பூர்வ பாகம் ஆகிப் பிறந்தவன் மனைவி விஷப் பாண்டு முதலிய ரோகத்தால் அல்லது ஜுர தோஷத்தாலாவது, ஈளை மாந்தத்தினலாவது மரிப்பாள். ஜாதகனுடைய இருபத்தைந்து வயதிலாவது அதன் பிறகாவது வேறு மனைவியை மணப்பான், அடைவான், மூத்த மனைவியின் தங்கையானவள் இரண்டாம் தாரமாக வாழ்க்கைப் படுவாள், இரண்டாவது மனைவியினுடைய காலில் சனியினுடைய பார்வை இருப்பதால் இவள் கால்வழி நல்லதாகாது.

(23) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி பன்னிரண்டுக் குடையவன் குஜ பாகத்தில் இருக்க காலில் ரண நோய் உள்ளவளாவாள், ஆயினும் அவளை மோகத்தால் தானகவே மணப்பான். நீண்ட காலாயிருக்கிற இந்த கால் ரணமானது மருந்தினல் குணமடையாது, இவளும் கர்ப்பவதியாகவே மரிப்பாள். இறந்த பிள்ளையைப் பெறுவாள். குரு திசையின் கடையிலாவது, சனி திசை சுய புக்தியிலாவது இரண்டாவது தாரத்துக்குப் பீடை யுண்டாகும் என்று சிலரும் அபிப்பிராயப் படுகிறர்கள். அநேக களத்திரங்களை அடைவான், இதில் சம்சய மில்லை.

(24) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி முற்பாதியில் ஜெனித்தவனுக்கு சுக்கிரன் சந்திரனுடைய அம்சத்தில் இருந்

தாலும், நீச்சாம்சத்தில் இருந்தாலும், பாக்கிய ராசியில் இருந்தாலும் நீச்ச ஸ்திரீ சேர்க்கை யுள்ளவனுவான், நீச்ச ஸ்திரீ அல்லது வீட்டு விலக்குமுள்ள தூர ஸ்திரீயுடனுவது, அல்லது மிலேச்ச ஸ்திரீயுடனுவது அல்லது குலஹீனமானவளுடனுவது, பிராம்மஹத்தி செய்தவளுடனுவது, பிரமையுடையவனுடனுவது, வேசி ஸ்திரீ யுடனுவது சேருவான்.

(25) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி சுக்கிரன் நீச்ச மடைந்திருந்தால் கால விநோதமான வழிகளில் நடப்பான்.

(26) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு ஒரே தாரம் தான்.

(27) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்கு ஆறுக்குடைய சனி குருவுடன்கூடி மீனத்தில் இருந்தால் ஜாதகன் எப்போதும் வாயுவால் நன்முய்ப் பீடிக்கப்பட்டவன், வயிற்று நோய் சில காலம் இருக்கும், சனி திசை சுய புக்தியிலாவது செவ்வாய் புக்தியிலாவது, யானையால் பயமும், வாகனங்களால் பயமும் ஏற்படும்.

(28) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி சனி, குருவுடன் கூடி இருந்தால் விஷ்னு, சிவன் இவர்களுக்குச் சமனுவான், ஆத்ம ஞானி, மஹா மானி, தியானம், ஜபம் செய்து கொண்டிருப்பான். விருத மிருப்பவன், தனக்கு வெகு பூமிகளும், வீடுகளும் தானுகவே சம்பாதிப்பவன்.

(29) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி ஐந்துக்குடைய சனி, கும்பாம்சத்தில் இருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டால் முன் செய்த விசேஷ பாபகாரியங்களால் புத்திர மிருதி ஏற்படும், அந்த தோஷத்திற்குப் பரிகாரமாக குரு யந்திரத்தை ரக்ஷை செய்து தரித்தலாலும், பூஜை செய்வதாலும் முதலில் அல்லது கடைசியில் ஸ்திரீ பிரஜையும், புருஷ சிசுவும் பிறக்கும், அநேக கஷ்டங்களாலும், சாந்திக்காக சுவர்ணதானம் செய்வதாலும் புத்ரனுண்டாவான், மூன்றுவது பாரியாளிடத்தில் புத்திர விருத்தி உண்டு என்று சில மஹான்களும் சொல்லி யிருக்கிருர்கள்.

(30) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி தெசைகள் ஒவ்வொன்றிலும் சனி புக்தியிலும், ராகு, குஜ, சூரிய புத்திகளிலும்

தேக பீடை, மனஸ்தாபம், தனக்குச் சமமான ஜெனங்களால் பீடையும், தனக்குச் சமமான ஜெனங்களுக்குக் கெடுதியும் உண்டாகும். சுக்கிர, புதன் இவர்கள் தன்னுடைய தெசையில் தன்னுடைய புக்திகளில் விசேஷமாகத் தனக்கு விசேஷ கஷ்டமும், பலவிதத் தொல்லைகளும் உண்டாகும், ஒவ்வொரு திசைகளிலும் செவ்வாய் புத்தி காலங்களில் அல்லது ராகு, கேது புக்தி காலங்களில் சகோதரீ வர்க்க பீடையும், அதன் மூலம் வெகு விசனமும், குரு புக்தி காலங்களில் பூமி, கிரகதான்யக் குறைவும், சனி புக்தி காலங்களிலும் அப்படியே, செவ்வாய் புக்தியிலும் தாய் வர்க்க ஜென பீடை என்றும், சுக்கிர புக்திகளில் மனைவி பீடையும், தாய் வழிப் பாட்டன் முதலிய ஜெனங்கள் மரிப்பதும், சுக்கிர, புத, குரு, சந்திர புக்தி காலங்களில் கலியாண லாபமும், ராஜ சன்மானமும், மந்திரி பதவியும், ஸ்திரீ முகவசத்தால் கிடைப்பதும், சனி, சேய், ராகு, சூரியன் புக்தி காலங்களில் பாபத சாந்தரத்திலும், ராச தண்டனையும், அதிக கஷ்டமும், வழி நடப்பில் தேக பீடையும், சோர, அக்கினி, சத்துரு, விஷ, பீதி இவைகளும் அதிகமாய் உண்டாகும்.

(31) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி பன்னிரண்டுக்குரிய சூரியன் விருச்சிகத்தில் இருந்தால் புண்ணியத்தாலும் பாபத்தாலும் விரையம் செய்வான்.

(32) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி பன்னிரண்டுக்குடைய சூரியன் விருச்சிக ராசியிலிருக்க பதினாயிரத்துக்கு அதிகமான தனத்தை அடைவான், கிருகம் க்ஷேத்திரம் முதலியவற்றுடன் கூடியும், காலாந்தரத்தில் புத்திரனை யடைபவனும், ஒரே புத்ரனுடன் கூடியும் இருப்பான், புத்திரிகள் இருவர்கள் அல்லது மூவர்கள் வெகு கஷ்டத்தால் உண்டாகும், இதுவே ஷ்டி ஜாதகனுக்கு அதிகம் சாந்தியால் புத்திர சுக முண்டாகும்.

(33) ஜென்ம லக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி எட்டாமிடத்துக்குடையவன் கேதுவுடன் கூடி யிருந்து பன்னிரண்டில் விருஷப நவாம்சத்தில் இருந்தால் வயது அறுபத்தைந்து வரை பரமாயுள் என்று நிச்சயமாய் சந்தேக மில்லாமல் கூறியிருக்கிறார்கள்.

(34) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 165-48 கலை முதல் பாகை 166-00 வரையிலும்) ஆகி லக்கினாதிபதி ஒன்பதாமிடமாகிய ரிஷபத்தில் இருந்தால்

ஜாதகன் நல்ல ரூபவான், புத்திமான், வாசாலகன், பிரசன்ன முக முக் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, வர்மம் செய்பவன், சிவப்புநிறம், நல்ல ஆகிருதி உடையவன், சம காத்திர முடையவன், அற்ப கோபி, சீக்கிரம் சந்தோஷ மடைவான்.

(35) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி வாக்கு ஸ்தானமாகிய இரண்டா மிடத்தில் ராகு யிருந்தால் தேவர், பிராமணர் இவர்களைத் தூஷிப்பான், நீச்ச ஸ்திரீ சேர்கை யுடையவன், கேது திசை சுக்கிர புக்தியிலும் இப்படியே, ராகு, சூரியன், கேது புக்திகளில் புதன் அந்தரத்தில் நீச்சனுடன் இருந்து தன்னுடைய கெட்டதானதும், எப்போதும் துக்கமுடையதுமான மனதுடன் இருந்து மத்தியானத்தில் வேசி ஸ்திரீயைப் புணர்ந்து அவளால் அவமான மடைவான், பக சும்பனம் செய்வான், வீட்டுக் குள்ளே வசிப்பதில் ருசியுள்ளவன், பாம்புபோன்ற குண முடைய வன், சத்ய வசனி, வசியமுள்ளவன், நித்தியம் வயிற்றுக்குப் பசியி னுல் குடிப்பவனுகவும், கெட்ட நடத்தையுள்ளவனுகவும், கோபத் துடன் கூடினவனுயும், கண்டிப்பான சொல்லுடையவனுகவும், நல்ல ஜனங்களைத் தூஷிப்பவனுகவும் சொல்லப்படுகிறுன். தன்னிச்சை யாய் வெளியில் சஞ்சரிப்பவன், தபம் செய்தாலும் அயலாருடைய சொல் கேளாதவன், தன் மதம், தெய்வம் இவற்றைத் தூஷிப்பான், அயலாருடைய மனதை இழுப்பவன், தன்னுல் சொல்லப்பட்ட வார்த்தையைச் சாதிப்பான், அநேக அரசனனுக்கிரக மடைந்தவன், சாத்துவிகன், ஞானம் நிறைந்தவன், சுகி, ஆசாரம் உள்ளவன், குணமுடையவன், மேதாவீ, வெகு பேரை ரக்ஷிப்பவன், ராஜாநுக்கிர கம் அடைந்தவன். (தனிஷ்டன்) பணக்காரன், சூட்டுத் தேக முடையவன், எப்போதும் அரசனை அண்டியிருக்க மாட்டான், தேவப் பிராமண பக்தி உடையவன், விஷ்ணு, சிவ பக்தியுடையவன், பெரிய தானம் செய்பவன், (கொடையாளி) மானி, தியான, ஜப, சமாதியுடையவன், சம்சார கிருத்தியத்தில் (விரக்தி) வெறுப்படைந்த வன், யோகி, வேதாந்த பாரங்கதன், சம்ஸ்கிருதத்தைப் பிரியமாய்ப் பேசுபவன், தயை யுடையவன், சத்திய வாக்குடையவன், எல்லா ஜீவன்களிடத்திலும் தயையுடன் கூடினவன், புண்ய சுலோகி, இந்திரியத்தை ஜெயித்தவன், ரசவாதம் செய்வதில் சமர்த்தன், கங் காஸ்தானம் செய்பவன், நித்தியம் லாப முடையவன், ஜன மோக னன், ஜனங்கள் மோகிக்கும்படி செய்பவன், விசேஷ தேவ பக்தி

யுடையவன், மலையிலாவது, மலைக் குகையிலாவது, காட்டிலாவது வசிப்பவன், சித்தன், ரசவாதம் செய்பவன், பின்வயதில் யோகீந்திரன் என்று புகழ்ப்படுவான். முன் பாகத்தில் குஸுமம்பம் செய்பவன், தேவாலய, மட, உத்யான, கிரக, சத்திரங்களில் தர்மம் செய்பவன், யுகத்தின் பிறகும் வெகு காலம் கீர்த்தியுடையவன், சத்ருக்களைத் துவம்சம் செய்பவன், பிரதாபம் பொருந்தியவன், கண்ணுக்குத் தென்படாதவன், ஜன வசியன், சர்ப்பம் முதலிய கொடிய விஷத்தைக் கண்ணால் பார்ப்பதாலேயே நாசம் செய்பவன். சுதந்தரமுள்ளவன், கீழ்ப் பார்வை யுள்ளவன், நித்தியம் பசியால் குடிப்பவன், வித்யா பிரதான ஜீவனம், பிறகு கொஞ்ச காலம் மிதமாயிருக்கும்.

(36) ஜென்ம லக்கினம் கன்னி (காங்கரியாம்சம்) ஆகி இரண்டுக்குடைய சுக்கிரன் விருஷபத்தில் இருந்து கும்பாம்சத்திலிருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டுப் புதனுடன் கூடி இருக்கப் பிறந்தவன் நான்கு வித்தையில் மிகவும் சமர்த்தன், ஆனால் சனி திருஷ்டி இருந்தால் கொஞ்சம் தனக்கு வித்தை இடையூறாய் கெட்டுவிடும், சங்கீதப் பிரியமுள்ளவன், ராக மறிந்தவன், கொஞ்சமாக சாப்பிடுவான், அதிக சீக்கிரம் புசிப்பவன்.

(37) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி இரண்டாமிடத்தில் ராகு கூடியிருந்தால் நீச வித்தையில் வல்லவன், பல்லில் ரத்தம் ஒழுகுபவன், தந்த வாயு பீடையுடையவன், காதில் கொஞ்சம் கொஞ்சம் ரோக முள்ளவன், பல் தேய்ப்பதில் மிருதுவான பல்லுடன் கூடினவன், அநேக ஆயிரம் பணக்காரன், வீடு, வாசல், பூமி முதலியன சமர்த்தியா யுடையவள், தன்னுடைய அன்னத்தையே புசிப்பான், நல்ல பாத்திரத்தில் புசிப்பான், கொஞ்சம் கண்ணோயுடையவன்.

(38) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி மூன்றுமிடத்ததிபதி குஜன் லக்னத்திலிருந்து, சனி சகோதர ஸ்தானத்தில் இருந்தால் ஜாதகன் சகோதரனையும், இளைய சகோதரனையும் இழந்தவனாவான். அவனுடைய மூத்த சகோதரி ஒருத்தி பாலியத்தில் விதவையாய் மரித்தவள், இரண்டு சகோதரிகள் இருந்து அவள் ஒருத்தியும் மரித்துவிடுவாள். ஜாதகன் ஒருவனாயிருந்து பத்தினியுடனும், தாயுடனும், புத்திரனுடனும், சகோதா சகோதரியுடனும் கூடியிருப்பான்.

(39) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி நான்கா மிடத்துக்குடைய குரு, சந்திரனுடன் மீன ராசியிலிருக்க ஜாதகனு டைய தாய் நல்ல வாசம் செய்தவள், க்ஷய ரோகத்தால் கஷ்டப் பட்டு இவள் ஜெனித்த பதின்மூன்ருவது வயதில் புத திசையில் சந்திர புத்தியில் தாய் சம்சயமின்றி மரிப்பாள், ஜாதகன் மாற்ருந் தாயாருடனும், மனைவியுடனும் கூட இருந்து வீடு, நிலம் முதலிய சமிருத்தியுடையவனு யிருப்பான். மூன்று யோக வாகனங்கள் உண்டு. தான்னிய சமிருத்தி, பசு சமிருத்தி உடையவன், மனதில் கபடம் விட்டு பயத்துடன் களங்கமின்றிப் பேசுபவன்.

(40) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி ஐந்துக் குடைய சனி விருச்சிகத்தில் சிம்மத்தின் நவாம்சத்தில் இருந்து புத்திர காரகனுன குரு மீனத்தில் சுய க்ஷேத்திரத்தில் சந்திரனுடன் கூட இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் இரண்டு புத்திரர்கள் வெகுகாலம் நீண்ட ஆயுளை உடையவர்களாகவும், இரண்டு புத்திரிகள் அப்படியே நீண்ட ஆயுளையுடையவர்களாகவும் இருப்பார்கள்.

(41) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி பிறந்த ஜாதகன் குரு, சந்திரன், செவ்வாய், சனி, சுக்கிரன் இவர்களுடைய புக்தி காலங்களில் சுக்கிர திசாந்திரத்தில் அல்லது இரவி, மதி இவர் கள் தெசையில் புத்திரோத்பத்தி முதலிய சுக முள்ளவன், கேது தெசையில் புத்திர லாபமும் ஏற்படும் என்று சிலர் சொல்கிருர்கள்.

(42) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி சனி யிருக்கும் அதே திரிகோணத்தில் குரு மீனத்திலும் நவாம்சத்தில் குரு கும்பாம்சத்தில் இருந்து குஜனுல் பார்க்கப்பட்டால் ஜாதக னுடைய எட்டாவது அல்லது ஒன்பதாவது வயதில் ஜாதகனுடைய தாய் மரிப்பாள் என்று அன்னிய சாஸ்திரத்தில் பண்டிதர்கள் சொல் கிருர்கள். சனி, செவ்வாய், சூரியன், ராகு புக்தி காலங்களில் மனைவி புத்திரன் முதலியவர்களுக்குப் பீடை உண்டாகும். மனைவிக்குப் பொருத்த மில்லாததால் மனைவி மிகவும் துஷ்ட சரித்திரத்தையுடைய ஸ்திரீயாவாள். மூன்று புத்திரர்களையும் இரண்டு புத்திரிகளையும் உடையவள் என்றும் சிலர் சொல்கிருர்கள். அதிகம் புத்திரனுள்ள இந்த ஜாதகன் விஷயத்தில் சாந்தியின் மூலம் புத்திர சுகம் உண் டாகும்.

(43) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி ஆறுக்குடைய சனி விருச்சிகத்தில் இருந்து, ரிஷபத்தில் உள்ள சுக்கிரன், புதன் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் வாயுவால் பீடிக்கப்பட்ட தேகியாயும், அநேகம் கர்பம் செய்பவனுயு மிருப்பான். அநேக ஸ்திரீ சேர்க்கையால் ரோகியாவான்.

(44) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி செவ்வாய் லக்கினத்தில் இருக்க ஜாதகன் அநேகம் ஸ்திரீகளைச் சேர்ந்து ரோகியாவான், ரண கண்டம் முதலிய மர்மஸ்தான ரோகியாவான், கொஞ்சம் தண்டனை யுடையவன், மூத்திர ரோகத்தால் ஒரு சமயம் கஷ்டப்படுவான், வெள்ளை மேக ஒழுக்கு வியாதியும் உண்டு, வயிற்று நோயால் சிலகாலமும், சுவாஸ க்ஷயத்தால் கொஞ்ச காலமும் கஷ்டப்படுவான். அஜீர்ண ரோகியாயும், முக ரோக முள்ளவனும் இருப்பான், வயற்றில் பாதையாலும், அக்கினி மந்தத்தாலும் ரோகியாவான்.

(45) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி ஏழுக்குடைய குரு மீன க்ஷேத்திரத்தில் சந்திரனுடன் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டு களத்திர காரகன் ஒன்பதாமிடத்தில் இருக்க ஜாதகன் தாய் வம்சத்தில் உண்டான களத்திரத்தை யுடையவன், பாலியத்தில் விவாகமானது நடக்கும், சாம்பல் நிற முள்ள மனைவியை அடைவான். பதின்மூன்றுவது வயதில் கடைசியில் ஆனி மாதத்தில் மங்களமானது நடக்கும், கலியாணமானதும் தாய் மூன்றுவது மாதத்தில் மரிப்பாள், அநேக ஸ்திரீகளுக்குப் புருஷனுயிருப்பான், பிராம்மண ஸ்திரீயைக் கொஞ்ச காலம் புணருவான், ருதுவாயிருக்கிற ஸ்திரீயையும், நீச்சப் பிரபுவினுடைய ஸ்திரீயையும் மத்தியானத்திலேயே மைதுனம் செய்பவனுவன், காமியாயிருப்பான், விதவையான ஸ்திரீயைக் கொஞ்சகாலம் சேருவான், கெட்ட செய்கையுடையவன், பச்சாத்தாப முடையவன், வைதீக ஆசார முள்ளவன், அபார புத்தியுடையவன்.

(46) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி ஒன்பதுக்குடைய சுக்கிரன் சுய க்ஷேத்திரத்தில் புதனுடன் இருந்து சனியால் பார்க்கப் பட்டால் ஜாதகன் இரண்டு சிறிய தகப்பனை யுடையவன், ஒரு சிறிய தகப்பனுக்கு ஒரு புத்திரி மட்டும் உண்டு. மற்றொருவனுக்குப் புத்திர பாவம் இல்லை. ஜாதகன் நல்ல பாக்கிய

வான், மஹா யோகி, மகா போகி, தியானம், ஜபம் முதலியன செய்து சமாதியுள்ளவனுவன்.

(47) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகி பத்தா மிடத்துக்குடைய புதன் சுக்கிரனுடன் ரிஷபத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நல்ல ஆசார செய்கை யுடையவன், கியானி, அரசனுல் அளிக்கப்பட்ட அதிகாரத்தை யுடையவன். சிம்மா சனப் பிராப்தியுள்ள யோகம் உள்ளவன், வேலைக்காரர்கள் வேலைக் காரிகளுடன் இருப்பவன், நித்யம் தண்டனை, ஆக்ஞை முதலியன செய்வான், பெரிய மேம்பாடான உத்தியோக பாக்கியவான், தம்பி மூலமும், ஸ்திரீ மூலமும், தனவிரயம் செய்வான், தர்மத்தாலும் தனவிரயம் ஏற்படும், பற்பல வியாபாரங்களால் பணப்ராப்தியும், நவ ரத்னம் முதலிய கிரயம் செய்பவனும், தீவாந்தரத்திலுள்ள வஸ்து வியாபாரத்தினுல் பூமி, தான்யம் முதலிய லாபமும் உண்டாகும்.

(48) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகிப் பிறந்த வனுக்கு ஒவ்வொரு தெசையிலும் சனி புக்தியிலும், குஜ, சூரிய, ராகு, கேது முதலான கிரகங்களின் புக்திகளிலும் கோசாரத்தில் சனி கெட்ட ஸ்தானத்தில் இருக்கும்போது அபமிருத்து பயம் உண்டாகும், மனைவிக்கும் புத்திரனுக்கும் பீடையும் தனக்குத் திருடர் களாலும், நெருப்பாலும், அரசனுலும் பீடையும் உண்டாகும், பிதா மரணமும் நேரிடும்.

(49) ஜென்ம லக்கினம் கன்னி (சாங்கரியாம்சம்) ஆகிப் பிறந்த வனுக்கு, குரு, சந்திரன் இவர்கள் சத்துரு க்ஷேத்திரத்தில் இருந்து குஜனுல் பார்க்கப் பட்டால் இதரக் கிரகங்கள் ஜாதகத்தில் எங்கிருந் தாலும், எவ்விடத்தில் யோகமோ அவ்விடத்தில் சுவல்ப கஷ்டமும், அபகீர்த்தியும் உண்டாகி சொற்ப காலம் நல்ல பெயரும், கொஞ்சம் கொஞ்சமாகத் தனப்ராப்தியும் உண்டாகும். கொஞ்ச காலமாவது ஸ்திர மில்லாத உத்தியோக முடையவனுமாவான், ராசி சந்தியில் பிறந்தவனுக்கு தெசை சந்தியில் அபமிருத்து பயம் உண்டாகும். அந்தந்த காலம் பார்த்து சாந்தி தானம் முதலியன செய்து கொண் டால் தனக்குச் சமமானவர்களின் அரிஷ்டத்தால் அந்த காலம் சுகமடையலாம்.

(50) ஜென்ம லக்கினம் கன்னி (மாலின்யம்சம்) ஆகி குரு எட்டாம் பாவத்திலிருக்க ஜெனித்தவன் தீர்க்காயுளுடையவன்.

(51) ஜென்ம லக்கினம் கன்னி (மாலின்யம்சம்) ஆகி சந்திர லக்னாதிபதியாகிய புதன் சந்திரனிருக்கு மிடத்திலிருந்து பாக்கியத்திலாவது, திரிகோண ஸ்தானமான ஒன்பது, ஒன்று, ஐந்து முதலிய ஸ்தானங்களிலாவது இருந்தாலும், லக்னாதிபதி செவ்வாயுடன் கூடியிருந்தாலும் மூன்றரை வருஷ பரியந்தம் பாலாரிஷ்ட பயமுண்டு.

(52) ஜென்ம லக்கினம் கன்னி (மாலின்யம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதியாகிய குரு மேஷத்தில் புதனுடைய அம்சத்தில் இருந்து சந்திரனால் பார்க்கப்பட்டால் தாய் மத்திம வயதுடையவள்.

(53) ஜென்ம லக்கினம் கன்னி (மாலின்யம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகிய சுக்கிரன் தன்னுடைய உச்சத்தில் சனியுடன்கூடி இருந்து லக்னாதிபதி சூரியனுடன் கூடி யிருந்தால் ஜாதகனுடைய பிதா பிரபல யோகமுடையவன், ஜாதகன் தன் தகப்பனுடைய வம்ச விருத்தியுடையவன், தன் தாய் வம்சத்தை நாசம் செய்பவன், ஜாதகன் கருப்பு நிறமுடையவன், யுக்தி யுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், கொஞ்சம் உயர்ந்த தேகமுடையவன், புஜத்திலும், கைகளிலும், தேகத்திலும் (மச்சம்) அடையாள முடையவன், கொஞ்சம் குறைவாகவே புசிப்பவன், மனதில் கபட முடையவன், காமீ, கம்பீர புத்தியுடையவன்.

(54) ஜென்ம லக்கினம் கன்னி (மாலின்யம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதியாகிய குரு எட்டாம் பாவத்தில் சௌமியாம்சத்தில் இருந்தால் ஜாதகன் வித்தியா புத்தியுடன் மானியாகி நீச்ச வித்தையுடையவன், கொஞ்சம் பாட்டு தெரிந்தவன், விசேஷ புத்தியை யுடையவன்.

(55) ஜென்ம லக்கினம் கன்னி (மாலின்யம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி எட்டாம் பாவத்தில் இருந்து களத்திர காரகன் தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் இரண்டு தார முடையவன், பாக்ய வம்சத்தில் ஜெனித்த கன்னிகையைப் பாணிக்கிரகணம் செய்வான்.

(56) ஜென்ம லக்கினம் கன்னி (மாலின்யம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் புத்திரன், மனைவியுடன் கூடி மாமியார் வீட்டில் வாசம் செய்வான்.

(57) ஜென்ம லக்கினம் கன்னி (——————) ஆகி தன பாக்யாதி கேந்திரத்திலிருந்து பத்தாம் பாவாதிபதியுடன் கூடி தேவ

குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அமோகமான ஸம்பத்தை அடைகிறான். அதிக வித்தையை அடைகிறான், மாதா பிதாவுக்குச் சுகமும், தகப்பனுக்காவது, சிறிய தகப்பனுக்காவது அதி யோகமும், ஸம்பத்தும் உண்டாகும்.

(58) ஜென்ம லக்கினத்துக்கு ஆரும் பாவத்தில் சுபாம்சத்தில் குருவும் சந்திரனும் கூடி இருந்தாலும் அல்லது ஒருவரை ஒருவர் பாத்தாலும் செவ்வாய் தெசையில் சௌக்கிய முடையவனாகவும், பிரக்யாதி யடைந்த தனவானாகவும் ஆகிறான், தேசாந்திரத்தில் நல்ல கீர்த்தி உடையவனும், அரசனுக்குப் பிரியனும், யோகாதிகமுள்ள வனாகவும், நூற்றுக்கு அதிக சம்பளம் வாங்குபவனாகவும், தேச கிராமங்களுக்கு அதிகாரியாகவும் ஆவான்.

(59) ஜென்ம லக்கினம் கன்னி (சீதளாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 176-12 கலை முதல் பாகை 176-24 கலை வரையில்) ஆகி ஜெனித்தவனுக்கு நான்காம் பாவாதி குரு சனியுடன் கூடியிருந் தால் மாதா தீர்க்காயுளுடையவள்.

(60) ஜென்ம லக்கினம் கன்னி (சீதளாம்சம்) ஆகி புதன் மீனத்தில் இருந்தால் ஜாதகன் நித்யம் சிவ பத்தியுடனும், சகோத ரன் மித்ரன் இவர்களுடன் கூடினவனாயிருப்பான்.

(61) ஜென்ம லக்கினம் கன்னி (சீதளாம்சம்) ஆகி லக்கினாதிபதி ஏழாம் பாவத்திலிருந்து, ஏழாம் பாவாதிபதி மூன்றும் பாவத்திலிருந் தால் ஜாதகன் தீரனாகவும், சூரனாகவும், நல்ல புத்தியுடனும் கூடின வனாயும் இருப்பான்,

(62) ஜென்ம லக்கினம் கன்னி (சீதளாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி ஸ்திர ராசியிலும், ஸ்திர அம்சத்திலும் இருந்து எட்டாம் பாவாதியுடனும் கூடியிருந்து களத்திரகாரகனும் ஸ்திர ராசியிலிருந் தால் ஜாதகன் ஒரே தாரம் உள்ளவன், மறைவாக பரஸ்திரீ சங்கமம் செய்வான்.

(63) ஜென்ம லக்கினம் கன்னி (சீதளாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி மூன்றும் பாவத்தில் குருவுடன் கூடியிருந்தால் இரண்டு புத்திரர்கள் தீர்காயுளுடையவர்கள், மூன்று புத்திரிகளும் ஆயுளு டையவர்களாவார்கள். மீதி இரண்டு மூன்று ஸந்தானம் நாச மடையும்.

(64) ஜென்ம லக்கினம் கன்னி (சீதளாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி மூன்றும் பாவத்தில் மூன்றும் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு மந்திரி சிநேகம், சேனைகள் சிநேகம், மனித வாஹனம் அதாவது பல்லக்கு முதலிய யோக முண்டாகும், சுவர்ணம், வஸ்திரம், ஆபரணம் அடைந்து வீட்டில் பொன் பாத்திரம் முதலியன செய்து கொண்டு ஜாதகன் வாழ்வான்.

(65) ஜென்ம லக்கினம் கன்னி (சீதளாம்சம்) ஆகி ஜாதகத் தாராதிபன் தெசையில் குரூர காலத்தில் குரூரனுடைய புக்தியில் அபமிருத்யுபயம் உண்டாகும். ஷ்டி தெசையில் எட்டாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் குருவுடன் கூடியிருந்தால் பூர்ணுயுள் உள்ளவனுயிருந்தால்கூட மரணத்தை யடைவான், அப்படி தப்பினுலும் எட்டாம் அதிபன் தெசையில் விபத்து உண்டாகும்.

(66) ஜென்ம லக்கினம் கன்னி (சீதளாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ஆறும் பாவத்தில் இருந்து, பத்தாம் பாவாதிபதி நீச்சனுயிருந்தாலும், சீதளாம்சத்தில் பூர்வபாகத்தில் ஜெனித்தவன் நல்ல பாக்கிய முடையவனுவான்.

(67) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 153-36 கலை முதல் பாகை 153-48 கலை வரையில்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதியும் சந்திரனும் பாபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும், ஐந்தாம் பாவத்திலிருந்தாலும், பார்க்கப்பட்டாலும், பிரஸவகாலத்தில் ஸூதி தோஷம் உண்டாகும்.

(68) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதியும், சுக்கிரனும் கேந்திரதிரிகோணங்களில் இருந்தால் மாதாவுக்குச் சீக்கிரம் பிரஸவ முண்டாகும், வேதனை கொஞ்சமாக இருக்கும்.

(69) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி சந்திரன் பாபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும், பார்க்கப்பட்டாலும், சுக்கிரனுக்கு ஆறு, எட்டில் சந்திரனிருந்தாலும், ராகு கேதுவுடன் சந்திரன் கூடியிருந்தாலும், மாதாவுக்கு அரிஷ்டமானது உண்டாகும்.

(70) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி தாய் வழி பாட்டனுக்கு (அதாவது 4-க்கு 9-வது பாவத்தின்) அதிபதியாகிய சூரியன் பதினோராம் பாவத்தில் ராகுவுடன் இருந்தால் பாட்டன்

பிரசித்தனுகவும், பாட்டியிறந்த பிறகு ஒரு சமயம் மூன்று பாரியாளை உடையவனுவான்.

(71) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஆறும் பாவாதிபதி சனி எட்டாம் பாவாதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் ஒன்றுவிட்ட அம்மானுக்கு ஸ்வீகார புத்திரனுவான், தாய் வழி விருத்தியடையும், தகப்பன் வம்சம் க்ஷயமடையும், தாய்க்கு இரண்டு சகோதரி உண்டு, ஒருத்தி புத்திரன்களை உடையவள், மற்ற ஒருத்தி அரசனுக்கு மனைவியாகி பதிவிருதையாகி இருப்பாள்.

(72) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் ஐந்தாம் பாவாதிபதியிருந்தாலும், ஒம்பதாம் பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகன் தத்து புத்திரனுகத் தன் பிதாவின்தாயாதி வர்க்கத்திலிருந்து விடுகிறுன்.

(73) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதி சனி ஒன்பதாம் பாவத்தில் இருந்தால், ஜாதகன் பிறப்பதற்கு முன்னுடியே தகப்பன் வழிப் பாட்டன் மரித்து விடுவான். பதினோமிடத்தில் சூரியன் இருந்தால் ஜாதகனுடைய ஷெ பாட்டி வெகு நாள் ஆயுளை யுடையவளாயிருப்பாள்.

(74) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தாலும், ஆறும் பாவத்தில்யிருந்தாலும், சந்திர கேந்திரத்தில் சூரியனிருந்து, ராகு, கேதுக்களால் பார்க்கப்பட்டாலும், பாலியத்தில் சுகவீன முண்டு, சனியுடன் சேர்ந்திருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும், ஜாதகன் ஜனனத்திற்கு முன்பே வம்சத்தில் அரிஷ்ட முண்டாகும்.

(75) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஒன்று, பத்துக்குடைய பாவாதிபதி சோமலதாம்சத்திலிருந்தாலும், ராகு, கேது, ரவி, சந்திரன் இவர்களால் பார்க்கப்பட்டாலும், இவர்களுடன் கூடியிருந்தாலும், ஜாதகன் அரசனுல் பீடிக்கப்படுவான். பாக்கியாதிபதி விரைய பாவத்தில் இருந்தாலும், ஆறும் பாவத்தில் இருந்தாலும், ஒன்பதாம் பாவத்தில் அல்லது பதினோம் பாவத்திலிருந்தாலும் முன் தனம், பூர்வசொத்து இவைகள் அபகரிக்கப்படும். சத்துருக்களாலும், தன் வீட்டில் ஏற்படும் சித்திரம் முதலியவற்றுலும், வம்சம் நாசம் உண்டாகும் என்றும், காலாந்தரத்தில் சேனுபதி, அரசன் இவர்களிடத்தில் சேவைசெய்வான்.

(76) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி நான்காம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், அவனால் பார்க்கப்பட்டாலும், பாவ லக்கினத்தில் இருந்தாலும், லக்ஷிமீ கடாக்ஷ முண்டாகும், பொருமையுடையவனுயுமிருப்பான், சிறிய தகப்பனுடைய பிரீதியை யடைந்து, வாயு திக்கில் அழகிய வாா ஸ்திரீயுடன் கூடியிருப்பான்.

(77) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி புதனுடைய அம்சத்தில் இருந்தாலும், புஷ்காாம்சத்தில் இருந்தாலும், ஜாதகன் கோபியாகியும், சீக்கிரத்தில் சந்தோஷமடைப வனுகவும், பல பாஷைகளில் பழக்க முள்ளவனுகவும், எழுதுவதில் சமர்த்தனுயும், இங்கித மறிந்தவனுகவும், குணத்தைக் கிரகிப்பவனுக வும் இருப்பான்.

(78) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி சுபாம்சத்தில் பலத்துடன் கூடியிருந்தால் ஜாதகன் ஐந்து, ஆறு அல்லது அநேக ஸ்திரீகளை அடைவான்.

(79) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்தாலும், ஒன்பதாம் பாவத்தைக் குரு பார்த் தாலும், காலாந்தரத்தில் ஜாதகனுக்குப் புத்ரப்பிராப்தி யுண்டாகும், அல்லது ஜாதகன் சுவீகாரம் செய்து கொள்ளப்பட்ட புத்திர னுடையவனுவான்.

(80) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தைச் சந்திரன் அடைந்து, சந்திரன் ராகு, கேதுக்களால் பார்க்கப்பட்டாலும், கூடியிருந்தாலும், அல்லது செவ்வாய், சனி, சூரியன் இவர்களால் பார்க்கப்பட்டாலும், பிரதிபந்த பீடையுள்ளவ னுகவும், குரு பலவானுகி வேறு இடத்தில் இருந்தாலும் போக ஸ்திரீ வர்கத்தில் அநேக கன்னிகைகளை அடைந்து கலியாணமில்லாதவனுகி, அநேக குழந்தைகள் உண்டாகும், அநேக குழந்தைகள் மரித்து விடும்.

(81) ஜென்ம லக்கினம் கன்னி (வைஷ்ணவாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 165-12 கலை முதல் பாகை 165-24 கலை வரையில்) ஆகி சந்திரன் பன்னிரண்டாம் பாவத்திலிருந்து இரண்டு பாபருடன் கூடியிருந்தாலும், அல்லது பாபர்களால் பார்க்கப்பட்டா லும், ஜாதகன் அம்பிகையின் கோபத்தால் சுதனில்லாதவனுகிறுன்.

(82) ஜென்ம லக்கினம் கன்னி (வைஷ்ணவாம்சம்) ஆகி சோமலதாம்சத்தில் புதனும், பாராவதாம்சத்தில் சுக்கிரனும், செவ்வாய் சந்தி கேந்திரத்தில் புஷ்காராம்சத்திலும் இருந்தாலும், தன்னுடைய உச்சராசியை யடைந்திருந்தாலும் ஜாதகனுக்கு இந்த தெசைகளில் ராஜயோகம் உண்டாகும்.

(83) ஜென்ம லக்கினம் கன்னி (வைஷ்ணவாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சூரியனுடனும், சுக்கிரனுடனும், புதனுடனும், சந்திரனுடனும் கூடியிருந்தாலும், பார்க்கப்பட்டாலும், ஜாதகன் லாவண்ய யோக முடையவனுகியும், அழகனுகியும், பரதாரத்தால் இச்சிக்கப்பட்டவனுகியும், பிதுரார்ச்சித முடையவனுகியும், க்ஷேத்திரம், யானை, குதிரை, ரத்தினம் முதலிய பாக்கியத்துடனும், சிவ பக்தர்களிடத்தில் பக்தியுடையவனுகியும் யிருப்பான்.

(84) ஜென்ம லக்கினம் கன்னி (வைஷ்ணவாம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் சூரியனும், ஒன்பதாம் பாவத்தில் சந்திரனும் யிருந்தால் அரசருடைய நேசத்தால் ஜெனங்களுக்கு அனுகூலமும், விசித்திர வேலையும் செய்வனும், பிராமணர்களுக்கு கெடுதி செய்பவனுமாவான்.

(85) ஜென்ம லக்கினம் கன்னி (வைஷ்ணவாம்சம்) ஆகி பதினோராம் பாவத்தில் ராகுவும், இரண்டாம் பாவத்தில் செவ்வாயும் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு அநேக காரிய சித்தியும், தூதர்களின் வரவும் உண்டு, ராஜ்ஜியத்தில் விசித்திரமான சொல் சொல்லுபவனும், வித்யா பிரசங்கம் செய்பவனும், கேளிக்கையில் சுகமுள்ளவனுகவும் இருப்பான்.

(86) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 164-36 கலை முதல் பாகை 164-48 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி தன் உச்சராசியில் சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தால் பூர்வாம்சத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு நதிக் கிராமத்தில் வடக்குத் தெற்கு வீதியில் மேற்குப் பாகத்திலுள்ள வீட்டில் ஜனனம் நேரிடும், உத்தராம்சத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு கிழக்கு மேற்கு வீதியில், வடக்குப் பாகத்திலுள்ள வீட்டில் ஜனனம் நேரிடும்.

(87) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் இருந்து பத்தாம் பாவாதிபதி

யுடன் கூடியிருந்தாலும், பத்தாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுடைய தகப்பன் பாக்கியவானுயிருப்பான், ஜாதகனுடைய பாட்டனை விட தகப்பன் மேன்மையான குணமுள்ளவன், அன்னதானம் செய்வதில் இஷ்டமுள்ளவன், சுகமுள்ளவன், வைதீக ஆசார முடையவன், தர்மாத்துமா, அரசாங்கத்தில் புகழுடையவனுயிருப்பான்.

(88) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி லக்கின பாவத்திலிருக்க புதனுடன் கூடியிருந்தாலும், புதனுல் பார்க்கப்பட்டிருந்தாலும், சூரியன் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ராஜ தரிசனமுடையவன், பாலியத்தில் கொஞ்சம் தரித்திர மடைந்தவன், பிறகு பாக்கிய மடைந்து புகழுடையவனுனவன், வைஷ்ணவனுடைய சிநேகித மூலமாக அரசாங்க அனுகூலமுடையவன், இரண்டு சகோதரர்களும், சகோதரிகளும் உடையவன், ஸ்ரீமானுனவன், மத்தியவயதுடையவன், ஜாதகனுடைய பிதா, தர்மபுத்தியுடையவன்.

(89) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி சந்திரன் சுயக்ஷேத்திரத்திலாவது, தன் உச்சத்திலாவது இருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், சகோதரருடன் கூடினவள், தாய் தகப்பன் இவர்களுடைய நல்ல சம்பத்துடையவள், தன் பந்து ஜெனங்களுக்கு இஷ்டமானதைச் செய்பவள் ஆவாள், ஸதியும் ஆவாள்.

(90) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி ஜாதகனுக்கு நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருக்க நான்காம் பாவத்தில் கேது இருந்தாலும், கேது நான்காம் பாவத்தைப் பார்த்தாலும் தாய் வம்சத்தில் காணப்படாத கஷ்டமாவது, வைதவியமாவது இருக்கும்.

(91) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு மூத்த சகோதரன் தீர்க்க ஆயுளுடையவன், ஒரு சகோதரி நீண்ட ஆயுளுடையவள், ஜாதகனுடைய பின் சகோதரன், ஒருவன் எவனுவது, தன் கோத்திரத்தில் சுவீகாரமாவான். ஜாதகன் இரண்டு மனைவியுடையவன், காமீ, பரஸ்திரீகமனத்தால் பாபத்தையுடைவான்.

(92) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி லக்கினத்தில் மூன்றாமிடத்தில் அல்லது சந்திர லக்கினத்திற்கு மூன்றாமிடத்தில் சுபக்கிரகம் இருக்க, அந்த மூன்றாம் பாவாதிபதி தன் உச்சராசியிலாவது அல்லது சுயக்ஷேத்திலாவது இருந்தால் ஜாதகன் சகோதர மூலமாக நல்ல பாக்கிய முடையவனாவான்.

(93) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி சுக்கிரன் க்ஷேமதாராதிபதியாகி நீச ராசியில் இருந்து புதனுடன் கூடியிருந்தால் அந்த சுக்கிர தெசையில் ஜாதகனுக்குப் பிற்பாதியில் சுகமுண்டாகும், சம்பத்துண்டாகும்.

(94) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி இரண்டு கிரகங்கள் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் சுகியாயும், உச்ச நீசக் கிரகங்கள் ஒன்று கூடியிருந்தால் ஜாதகன் பாக்கிய முடையவனாகவுமிருப்பான்.

(95) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகிக் குருவாவது, சுக்கிரனாவது, சந்திரனாவது உச்சத்திலிருந்தால் அல்லது இவர்களில் ஒருவர் தனபாவத்தில் பலமுடையவர்களாயிருக்கும் பக்ஷத்தில் மனிதர்கள் சம்பத்தை அடைவார்கள்.

(96) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி இரண்டு அல்லது மூன்று கிரகங்கள் நீச்ச பாவத்தில் உச்சராசியிலிருந்தால் ஜாதகன் எப்பொழுதும் கிலேசத்துடன் ஜீவனம் செய்வான். மேற்படி கிரகங்கள் அம்சத்திலும் நீச்சத்தை யடைந்திருந்தால் ஜாதகன் விசேஷ கிலேசத்தை அடைவான்.

(97) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி தன் உச்சராசியிலிருந்து, அந்த உச்ச பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து, பன்னிரண்டாம் பாவத்தில் குருவும் இருந்தால் ஜாதகனுக்குக் காலாந்தரத்தில் நல்ல புத்திரன் பிறப்பான்.

(98) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தாலும், சூரியனால் பார்க்கப்பட்டாலும், நான்காம் பாவத்தில் கேதுவும் இருக்கஜெனித்த ஜாதகனுக்குக் காலாந்தரத்தில் புத்திரன் பிறப்பான், அந்த தோஷத்திற்குப் பரிகாரமாக ஞாயிற்றுக்கிழமை விரதமும், கேதுப் பிரீதியும், நாக சாந்தியும், செய்த பிறகு ஜாதகனுடைய ஐந்தாம் தெசையில் தீர்க்காயுளுள்ள இரண்டு புத்திரர்களும், நான்கு புத்திரிகளும் பிறப்பார்கள்.

(99) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி குருவுடன் கூடியிருந்தாலும், பன்னிரண்டாம் பாவத்திலேயே சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும், தேகாந்தியத்தில் ஜாதகன் புண்ணிய லோகத்தை அடைவான்.

(100) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 170-12 கலை முதல் பாகை 170-24 கலை வரையிலும்) ஆகி பதினோராம் பாவத்தில் செவ்வாய் இருந்து, சகோதர பாவத்திலும் பாபக்கிரக மிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவனாகவும் இருப்பான். செவ்வாய் பலங் குறைவுள்ளவனாக இருந்தால் ஜாதகன் தீர்க்க ஆயுளுடைய சகோதரனுடையவனாகவும் இருப்பான்.

(101) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் மித்திரக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகன் பல பல சாஸ்திரங்களில் பூர்ண ஞானமுடையவன், வேதாந்தங்களில் வெகு சிரமப்படுபவன் ஆவான்.

(102) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவாதிபதியுடன் கூடி லக்கின கேந்திரத்திலிருந்து நான்காம் பாவாதிபதியால் நன்கு பார்க்கப்பட்டால் இந்திர யோகம் என்று சொல்லப்படுகிறது. மேற்படி இந்திர யோகத்தில் ஜெனித்தவன் வசிய முள்ளவனும், தன, தானிய முள்ளவனும், எல்லா சாஸ்திரங்களிலும் விசேஷ ஞானமுடையவனாகவும், எல்லோருக்கும் உபதேசம் செய்பவனாகவும், இருபத்தைந்து வயதுக்குமேல் சௌக்கிய முடையவனாகவும், முப்பது வயதுக்கு மேல் விசேஷ முடையவனாகவும் இருப்பான்.

(103) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி குரு பதினோராம் பாவத்தில் தன்னுடைய உச்சராசியிலிருந்து, சுபாம்சத்தில் இருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டால் வேதாந்த ஞானத்தைச் சம்பூர்ணமாக ஜாதகன் அடைவான்.

(104) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி நீசமடைந்திருக்க சந்திர லக்கினத்திலிருந்து குருவிருக்கும் ஸ்தானத்தைக் கோட்சாரத்தில் சனி ஜாதகனுடைய க்ஷேம தெசையில் எப்போது அடைகிறுனே அப்போது ஜாதகனுடைய தகப்பன் மரணத்தை யடைவான்.

(105) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி நீச்சமடைந்து இருக்க, குருவுக்கு ஐந்தாம் பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகனுக்கு அந்திய காலத்தில் புத்திர உற்பத்தியும், முதலில் பெண் பிரஜைகளும் உண்டாகும்.

(106) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்திலும், நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் தன் உச்சராசியிலுமிருந்தால் ஜாதகன் நல்ல காரியத்தைச் செய்பவன், புண்ணியமுடையவன், பணமுடையவன், லோகாந்திரத்திலும் சௌக்கிய முடையவனுவான் என்று ஆரியர்கள் சொல்லுகிறுர்கள்.

(107) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 159-24 கலை முதல் பாகை 159-36 கலை வரையிலும்) ஆகி பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்கு லக்கின பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் சுக்கிரனுடன் கூடி லக்கின கேந்திரத்திலிருந்தால் பெரிய ஆற்றுப் பிரதேசத்தில் உள்ள புண்ணிய க்ஷேத்திரத்தில் கிழக்கு மேற்கு வீதியில், தெற்குப் பாகத்தில் உள்ள வீட்டில் ஜனனம் நேரிடும். உத்தராம்சத்தில் பிறந்தவன் அக்கிராரத்தில் ஜெனித்தவனுவான்.

(108) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் சனியிருக்க, நான்காம் பாவாதிபதி நீச ராசியிலிருந்து, சந்திரன் ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் சந்திரன் பார்க்கப்பட்டாலும் பூர்வ பாகத்தில் பிறந்த ஜாதகனுடைய தாய் பிரசவத்தில் அதிக வேதனையால் பீடிக்கப்படுவாள், ஸூதிகாரிஷ்ட தோஷம் கொஞ்சமும் உண்டாகி, ஜாதகனுக்கும் தாய்க்கும் பீடை யுண்டாகும், உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவ வேதனை கொஞ்சமாயிருக்கும்.

(109) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் சனி காதாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் மரித்து விடுவாள், அல்லது ஜீவித்திருந்தால் (குழந்தைக்கு) ஜாதகனுக்குப் பீடையுண்டாகும்.

(110) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி கேந்திரத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டம் உண்டாகாது.

(111) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதியாவது, சுக்கிரனுவது, பத்தாம் பாவத்தில் சுபஸ்தானத்தில் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையவனுவான், குணமும் உடையவன்.

(112) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி ஜாதகன் ஸ்திர ஹோரையில் பிறந்தால் மத்திமாயுளுடையவன், லக்கின பாவாதிபதி எட்டாம் பாவாதியுடன் கூடியிருந்தாலும், மத்திமாயுளே, சந்திர லக்கின பாவாதிபதியும், எட்டாம் பாவாதிபதியும் கூடியிருந்தாலும் மத்திமாயுற் யோகமே உண்டாகும்.

(113) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விஷ்னு பக்தியுடையவன், சகோதரர்களுடன் கூடியவன், எப்பொழுதும் வியாபாரத்தால் ஜீவனம் செய்பவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், உடன் பிறந்த சகோதரனுல் வியாபாரத்தில் லாப மடைபவன், அற்ப வித்தை உடையவன், வெகு பணக்காரன், தன் பிதா அற்பாயுளுடையவனுவான்.

(114) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி கேந்திரத்திலிருந்து புதனுல் பார்க்கப்பட்டாலும், புதனுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் தன் தகப்பனுடைய சகோதரன் மூலமாக சரீர சுகவிருத்தியுடையவன், மாற்ருந்தாய் (சகோதரன் மூலமாகவும் சுகமடைபவன்), ஜாதகனுடைய வளர்ப்புத்தாயும் சுகமுடையவள்.

(115) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கினம் தவிர்த்த மற்றக் கேந்திரத்தில் புத நவாம்சத்தில் சந்திரன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் வளர்ப்புத் தாயினுல் சுகமுடையவன், தன் தாய் சௌக்கிய மில்லாதவனுவான்.

(116) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி ஜாதகனுடைய சிறிய தகப்பன் ஸ்தானுதிபதி, சுபாம்சத்தில் மீனராசியில் இருந்தால் ஜாதகனுடைய மனைவியின் தகப்பன் (அதாவது மாமனூர்) ஸம்பத்துடையவன், அநேக ரத்னம் முதலியவற்றுடன் கூடியவன், அரசாங்கத்தில் புகழுடையவன், வியாபாரத்தில் தனவிருத்தியுடையவன், தீபாந்திரம் முதலியவற்றிலுள்ள வஸ்திரங்களாலும், வஸ்திர வியாபாரத்தாலும் ஜீவனமுடையவன், அன்னிய தேசத்தில் பாக்கிய

விருத்தியுடையவன், கிரைய வியாபாரத்தால் ஜீவனமுடையவன், பிராமணனால் கொஞ்சம் சுகமுடையவன், பிராமணனால் செலவு அதிக முடையவன், ஒன்றரை லக்ஷத்திரவியம் சம்பாதிப்பவன், சுய தேசத்திலும் பாக்கியமுடையவன், நல்ல சுகி, கொஞ்சம் லோபகுணமுடையவன், திரவியம் சம்பாதிப்பதுடன் சுகமுடையவனும் ஆவான்.

(117) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சூரியன் சத்துருக்ஷேத்திரத்திலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய சிறிய தகப்பன் புத்திரனில்லாதவன்.

(118) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து, நான்கான் பவாத்தில் சனியிருந்தால் ஜாதகன் வளர்ப்புத் தாய் மூலம் சௌக்கியமும், அவளால் திரவியலாபமும் அடைவான், வியாபாரத்தில் தனவிருத்தியும், புத்திரனால் கொஞ்சம் சுகமும், உடையவன். வளர்ப்புத்தாய் சமர்த்தையானவள், கணவனுடைய சுகத்துடன் கூடியவள், வியாபாரத்தில் தனலாபமுடையவள், பிராமணர்மூலம் சுகத்துடன் கூடியவள், முன் ஜென்மாந்திர பாபத்தால் புத்திர சோகத்துடன் கூடியவள், மத்திய வயதுடையவள், ஜாதகனுடைய இரண்டாம் தெசையில் மரிப்பாள்.

(119) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் கேது இருந்தாலும், லக்கின பாவத்தைக் கேது பார்த்தாலும் ஜாதகன் கொஞ்சம் அனுசாரமுடையவன், பாலியத்தில் தாயை இழப்பவன், தகப்பனுடைய சௌக்கிய மில்லாதவனுமாகிறான்.

(120) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் சந்திரனிருந்து, ராகுவுடன் கூடியிருந்தாலும், இரண்டாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் இரண்டு தாரமுடையவன், இரண்டாம் பாவாதிபதியைச் செவ்வாய் பார்த்தால் ஜாதகன் பரஸ்திரீகமனம் செய்வான், மத்திய வயதில் சுகமுடையவன், சுயார்ஜிதம் சம்பாதிப்பவன், பிதுரார்ஜித தனமுடையவன், முப்பது வயதுக்குமேல் யோகமுடையவனாவான்.

(121) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு முதலில் அநேக பெண் குழந்தைகளுண்டாகும், ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன், காலாந்தரத்தில் அல்லது வேறு மனைவியிடம் நல்ல புத்திரன் உண்டாவான்.

(122) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி சந்திர லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் சனி வரும் சமயம் ஜாதகனுக்குத் தேக பீடையுண்டாகும், அல்லது தனக்குச் சமமான ஜெனங்களுக் குக் கெடுதியுண்டாகும், அதுவுமில்லாமற் போனல் மனைவிக்குப் பீடையுண்டாகும், அல்லது ஜாதகன் மனைவிக்கு மரணம் நேரிடும்.

(123) ஜென்ம லக்கினம் கன்னி (தனதாம்சம்) ஆகி மூன்ரும் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகனுடைய மாமனர் மரணமடைவார், மூன்ருமிடம் மாமியார் வீடு ஆதலால் மூன்ரும் பாவத்தில் சனி யிருக்கப் பிறந்த ஜாதகனுக்குப் பெண்ணைக் கொடுத்தால், பெண் கொடுக்கிற மாமனர் மரணமடைவான், மூன்ரும் பாவத்தில் சனி யிருப்பதால் சீமந்தம் செய்யப்பட்ட பின் பிறந்த ஜாதகனுடைய சீமந்த புத்திரன் நாச மடைவான்.

(124) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம் அதா வது லக்கின ஸ்புடம் பாகை 179-48 கலை முதல் பாகை 180-00 கலை வரையில்) ஆகி பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவாதி பதி லக்கின பாவத்தில் சுபக்ஷேத்திரத்தில் தன்னுடைய உச்சராசி யிலிருந்தால் பெரிய நதிப்பிராந்தியத்தில் ஜனனமானது நேரிட்ட தாகும்.

(125) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி சந்திரன் செவ்வாயுடன் கூடியிருந்தாலும், செவ்வாயால் சந்திரன் பார்க்கப்பட்டாலும் தாய்க்குக் கொஞ்சம் தோஷம் உண்டாகும், உத்தராம்சத்தில் ஜெனித்தவனுக்குச் செவ்வாய் லக்கின பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்டபய முண்டாகும், கொஞ்சம் தோஷமும் உண்டாகும், பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக் குக் கொஞ்சம் பாலாரிஷ்ட பயமும் உண்டாகும்.

(126) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி தன்னுடைய உச்சராசியில் இருந்து சந்திரன் லக்கின கேந்திரத்திலிருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டம் உண்டா காது.

(127) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி சூரியன் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து குரு பத்தாம் பாவத்திலி ருக்க ஜாதகன் தீர்க்க ஆயுளையுடையவன்.

(128) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி ஒன்று, பத்து, எட்டு முதலிய பாவாதிபதிகள் சுய க்ஷேத்திரம், சுய உச்சஸ்தானங்களில், அல்லது சுபக்கிரகங்களின் ராசிகளிலிருக்கும் போது ஜெனித்த ஜாதகனுக்குப் பூர்ண ஆயுள் யோக முண்டாகும்.

(129) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி சூரியன் கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும், வர்க்கோத்தமாம் சத்தை யடைந்திருந்தாலும் பூர்வபாகத்தில் பிறந்த ஜாதகனுடைய தகப்பன் பூர்ணாயுள் யோகமுடையவனுவன், ஜாதகன் பிதா சிவ பக்தியுடையவன், சகோதரர்களுடன் கூடினவன், கர்ப்பத்திலிருந்தே சீமானுனவன் ஜாதகனுடைய தகப்பன் போகி, பாலியத்தில் சௌக்கிய சுகத்துடன் கூடினவன், எழுதுவதில் சமர்த்தன், தேவர் பிராமணர்களிடம் பக்தியுடையவன், மத்திய வயதுகாலத்தில் துக்கி யானவன், பிறகு சுகமுள்ளவன். வயோதிக வயதில் பாக்ய விருத்தி யுடையவன், வியாபாரத்தால் தனலாபமுடையவன், ஜாதகனுடைய பிதாவின் மாமனுர் ஒருவர் அரசாங்கத்தில் பிரசித்திபெற்றவர், ஜாதகன் பிதாவின் மாமனுர் வேருெருவர் தன் கோத்திரத்தில் தத்து புத்திரனே அடைபவர் ஆவார்.

(130) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி தகப்பன் வழிப்பாட்டன் ஸ்தாநுதிபதி அதாவது ஐந்தாவது பாவாதிபதி பதிஞேராம் பாவத்தில் பலத்துடன் யிருந்தால் ஜாதகனு டைய மேற் சொல்லிய பாட்டன் நல்ல பாக்கியமுடையவன், அவனு டைய பாட்டனுடன் பிறந்த சகோதரனும் ஜாதகனுடைய பாட்ட னைப் போலவே லோகத்தில் தாழ்வில்லாத பாக்கிய முடையவன், பல தேசங்களிலும் பிரசித்தமானவன், மஹாராஜன் மூலமாக தயவை யடைந்தவனுயிருப்பான். ஜாதகன் பிறந்த ஐந்தாவது அல்லது ஆருவது வயதில் மேற்படி பாட்டன் மரித்து விடுவான்.

(131) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி ஜெனித்தவனுக்கு ஒன்பதாம் பாவாதிபதி கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் பிதாவின் வம்சத்தில் ஒரு வதை செய்யப்பட்டிருக்கும், கொடுக்கல் வாங்கலில் மனஸ்தாபமும், தகப்பன் வமிசத்தில் கொஞ் சம் அரிஷ்டமும், தன் பிரபுவுடன் மனஸ்தாபமும், உள்ளுக்குள்ளே கலஹமும், கலாபங்களும் உண்டாகும்.

(132) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரங்களில் அல்லது சந்திர கேந்திர திரி கோணங்களில் இருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்க ஆயுளுடைய வள், ஜாதகனுடைய தாய் குணத்துடன் கூடியவள், பாக்கியவம்சத் திலுற்பவித்தவள், பதிவிருதை, பெரிய புகழுடையவள், வம்ச விருத்தியுடையவள், சுபமுள்ளவளுமாவாள்.

(133) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி சகோதர ஸ்தானாதிபதி கேந்திரத் திரிகோணங்களிலிருக்க ஜெனித்த வன் சகோதர விருத்தியுடையவன், சுபமுடையவன், நீண்ட ஆயுளு டைய இரண்டு சகோதரரும், இரண்டு சகோதரிகளும் உடையவன், ஜாதகனுடைய பின் சகோதரன் வெகு ஆயுளுடையவன், ராஜயோ கப் பெருக்குடையவன், எவனாவது ஒரு சகோதரன் இரண்டு தார முடையவன், ஜாதகன் சந்தானத்துக்கு இடைஞ்சலுடையவனா வான்.

(134) ஜென்ம லக்கினம் கன்னி (திரைலோக்கியாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதிக்கு இரண்டாமிடத்தில் சுக்கிரனும், பத்தாம் பாவத்தில் குருவும், சுபாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் அரச முத்திரையினால் அதிகாரமுடையவன், அல்லது அரசர்களுக்குச் சம மான வைபவமுடையவன், உடன் பிறந்த சகோதரன் மூலமாக பாக்கிய யோகப் பெருக்குடையவனாவான்.

(135) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம் அதாவது லக் கினஸ்புடம் பாகை 170-12 கலை முதல் பாகை 170-24 கலை வரையில்) ஆகி பிறந்தவனுக்குச் சந்திரன் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனு டைய தாய்க்குக் கொஞ்சம் அரிஷ்டம் உண்டாகும்.

(136) ஜென்ம லக்கினம் கன்னி (சப்பகாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் மகர நவாம்சத்தில் சந்திரன் இருக்க நான்காம் பாவாதிபதி தன் உச்சராசியிலிருந்தால் ஜாதகனுக்குச் சொற்ப பாலாரிஷ்டபயம் உண்டாகும். உத்தராம்சத்தில் பாலாரிஷ்டம் அதிகம் உண்டாகும், பாலதோஷத்தால் வதையுண்டாகும், நான்காம் பாவாதி பதி சுபாம்சத்தில் இருந்தாலும், பூர்வபுண்ணியவசத்தால் ஜாதகனுக் குப் பாலாரிஷ்டம் சீக்கிரமாக நீங்கி அவன் ஜீவியாயிருப்பான்.

(137) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் உச்ச ராசியிலிருந்து, எட்டாம்

பாவாதிபதி தன் உச்சராசியிலிருந்தால் ஜாதகனுக்கு ஆயுள் தீர்க்க முண்டு, தாய்க்கும், தகப்பனுக்கும், தனக்கும் சுகம் உண்டாகும்.

(138) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் எட்டாவது அம்சம் தவிர்த்து மீதி அம்சத்திலிருந்தால் ஜாதகன் வித்தை யுடையவனாகவும், இனிமையாய்ப் பேசுபவனாகவும், விநயமுள்ளவனாகவும், தர்மம் செய்பவனாகவும் இருப்பான்.

(139) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் சூரியனிருந்து ஒன்பதாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் குரு பார்வையுடன் யிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவனாவன், ஜாதகனுடைய பிதா விஷ்ணு பக்தியுடையவன், வைணவ ஆசார முடையவன், பாக்கிய முடையவன், அரசாங்கத்தில் பிரசித்தி யுடையவன். அரச மந்திரியால் சந்தோஷப்படுபவன், பல சாஸ்திரங்கலிலும் விசேஷ கியானமுடையவன், வேதாந்தத்தில் விசேஷ புத்தியுடையவனாவான்.

(140) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி குரு பதினோரம் பாவத்தில் தன் உச்சராசியிலிருந்தால் ஜாதகன் எல்லா சாஸ்திரங்களையும் நன்கு கற்றறிபவனாவான்.

(141) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்சராசியில் பதினோரம் பாவத்திலிருந்தால் ஜாதகன் சம்பூர்ணமான வேதாந்த ஞானமுடையவன், யதிதியினிடத்தில் விசேஷ பக்தியுடையவன், மகாராஜ சபையில் வன்மையாய்ப் பேசுபவன், பிரசங்கங்களில் மிக உத்தமமானவன் ஆவான்.

(142) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சந்திரனுடன் கூடி சந்திரனுடைய அம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கொண்டாடும்படியான கீர்த்தியுடையவனாகவும், வெளிதேசங்களில் விசேஷ கீர்த்தியுடையவனாகவும், தன் பிதா சகோதரர்களுடன் கூடியவனாகவும் இருப்பான்.

(143) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி ஒராம் பாவாதிபதி பாக்கியாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவனாவான்.

(144) ஜென்ம லக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி தன்னுச்சராசியிலிருக்க பதினோராம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் வம்சத்தில் விசேஷ சௌக்கியமுள்ளவள், ஜாதகனுடைய தாய் தீர்க்க ஆயுளுடையவள், ஜாதகன் தாய் குணத்துடன் கூடியவள், கொஞ்சம் ரோகத்துடன் கூடினவள், பதிவிரதையானவள், நற்புகழுடையவள், வம்சத்தில் பாக்கிய விருத்தியுடையவளாவாள்.

(145) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 153-12 கலை முதல் பாகை 153-24 கலை வரையில்) ஆகி பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்கு லக்கினபாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து, சந்திரனுடன் குரு கூடியிருந்தாலும், சுக்கிரன் குருவால் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை கொஞ்சமாகயிருக்கும். உத்தராம்சத்தில் அதிகமான பாதை உண்டாகும், லக்கின பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் கொஞ்சம் பாலாரிஷ்ட பயமும் உண்டாகும்.

(146) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி வர்க்கோத்தமாம்சத்தில் புதன் ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்து, குரு தன் உச்சராசியிலிருந்தால் எல்லா அரிஷ்டங்களினின்றும் நீங்கி ஜாதகன் சுகமாயிருப்பான்.

(147) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் இருக்க புதன் வர்க்கோத்தமத்திலிருந்து, சந்திரனைக் குரு பார்த்தால் ஜாதகன் தீர்க்காயுளையுடையவன், எழுபத்திரண்டு வயது வரை தீர்க்காயுளுடையவனாவான்.

(148) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்து ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், ஒன்பதாம் பாவாதியால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், ஜாதகன் பிதா சகோதரருடன் கூடினவன், விஷ்ணு, சிவ பக்தியுடையவன், தன் வித்தையில் நிபுணன், ஸ்ரீமானனவன், திரவியம் சம்பாதிப்பதில் சமர்த்தன், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், காமி, மத்திய வயதில் யோகமுடையவன் ஆவான்.

(149) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம் ஆகி சூரியன் பாக்கிய ஸ்தானத்திலிருந்தால், அல்லது புத க்ஷேத்திரத்தில் காந்தாம்சத்தை யடைந்திருந்தால் ஜாதகன் சொர்ண வியாபாரத்தால் பணம் சம்பாதிப்பவன், இரண்டு தாரமுடையவன், இரண்டு பட்டினத்தில் வசிப்பவனுமாவான்.

(150) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் ஜென்ம மூடனுகவும், கோபியாகவும் இருப்பான்.

(151) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சூரியன், சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் சீக்கிரத்தில் கோபிப்பவன், தெளிவான அறிவுடையவன், தயாதாக்ஷண்யத்துடன் கூடினவன், லோபஸ்வாப முடையவன், சாந்த முடையவனுயுமிருப்பான்.

(152) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்திற்கு மூன்றுமிடத்தில் குரு இருந்தால் ஜாதகன் மணி, இரத்தின பரிக்ஷை செய்பவன், சிவப்பு தானியமுடையவன், நல்ல வஸ்திரங்களுடையவன், இன்னும் பலப்பல வியாபாரம் செய்து ஜீவிப்பவன், நடு வயதில் யோகமுடையவன், புத்திரர், புத்திரி சுகமுடையவனுவான்.

(153) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தர்ம புத்தியுடையவன், ஜாதகன் பிறந்த ஒரு வருஷத்துக்குப் பின்பு ஜாதகனுடைய தகப்பன் தன் தகப்பனுடைய பாக்கியத்தை அடைவான்.

(154) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி ஜாதகனுடைய சிற்றப்பன் ஸ்தானுதிபதியாகிய பதினோராம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்து, குருவால் பார்க்கப்பட்டால் ஒரு சிறிய தகப்பன் வெகு ஆயுளுடையவனுயிருப்பான், அவன் புத்திரனில்லாமல் விசாரத்தையடைவான், அவன் தன் முன் மனைவியைச் சந்தோஷிப்பிக்காத தோஷத்தாலும், மஹாலக்ஷ்மியின் சாபத்தாலும், புத்திரனில்லாதவன், துர்க்கா தேவியின் சாபத்தால் புத்திர அரிஷ்டமுடையவன், அதன் பொருட்டாக ஜெய துர்க்கா தேவியைப் பூஜித்து தானம் செய்வதாலும், சிவலிங்க தானம் செய்வதாலும், புத்திரனை

அடையலாம், சனி புத்திர ஸ்தானத்தில் இருந்தால் புத்திரனில்லாமல்போய் விடும், ஆகையால் சகோதரன் புத்திரனைத் தத்தாக ஜாதகனுடைய சிறிய தகப்பன் எடுத்துக் கொள்பவனுவான்.

(155) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி சந்திரன் கேந்திர திரிகோணங்களிலிருந்து குரு தன்னுச்ச ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தாய் வெகு காலம் ஜீவித்திருப்பாள், குணமுள்ளவள், குடும்பஸ்தன் வீட்டில் பிறந்தவள், பதிவிரதையானவள், சுபமுள்ளவளாயிருந்தாலும் ஜாதகனுடைய க்ஷேம தெசையில் மரித்து விடுவாள்.

(156) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் எட்டாம் பாவத்தை அடைந்திருந்தாலும் கூட ஜாதகன் சகோதர, சகோதரிகளையுடையவன், ஜாதகன் பின் சகோதரர் இருவர் அல்லது மூவர் பிறப்பார்கள், இரண்டு சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் ஆயுளுடன் கூடியிருப்பார்கள். மூன்றும் பாவத்தில் ராகு இருந்தால் மீதி சகோதரர்கள் நாசமடைவார்கள். இந்த சகோதரர்களில் ஒருவன் எவனுவது யோகவானுகவும், தனிகனுகவும், சுகியாகவும் இருப்பான், வேறு ஒரு சகோதரன் எப்பொழுதும் சுகியாயும், வீட்டு வேலைகளைச் சுதந்தரமாய்ச் செய்தும் வருபவனுமாவான், இவர்கள் புத்திரனில்லாதவர்கள், நல்ல நீதியுடையவர்களாவார்கள்.

(157) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி சந்திரன் ஐந்தாம் பாவத்திலிருந்து, அந்த ஐந்தாம் பாவாதிபதி லக்கினத்திற்கு ஆறும் பாவத்தில் இருந்து, ஐந்தாம் பாவத்தைக் குரு பார்த்தாலும், அல்லது ஐந்தாம் பாவத்தில் குரு யிருந்தாலும், புத்திர ஸந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும், சாந்தி செய்தால் இடைஞ்சல் நீங்கி ஆறும் பாவத்தில் சனி யிருந்தாலும் கர்ப்பமுண்டாகும்.

(158) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் வாதரோகத்தால் ஜாதகன் பீடிக்கப்படுபவன், பாலியத்தில் ரோகமுடையவன், எட்டு வயதுக்கு மேல் சுகத்தையடைவான்.

(159) ஜென்ம லக்கினம் கன்னி (மங்களாம்சம்) ஆகி சூரியன், புதன், சுக்கிரன் இவர்கள் ஒன்பதாம் பாவத்தில் இருந்தார்களாயின் ஜாதகன் அற்ப வித்தையுடனும், அற்ப புத்திரனுடனும், வியாபாரத்

தால் சம்பாதிக்கப்பட்ட பணத்தையுடையவனாகவும், அந்தியகாலத்தில் சகோதரனுடன் பாகம் செய்து கொள்பவனாகவும் ஆவான்.

(160) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 171-00 கலை முதல் பாகை 171-12 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி சூரியனுடன் கூடி சந்திரன், ராகுவுடன் கூடியிருக்க, பூர்வபாகத்தில் பிறந்தவனுக்கு வன துர்க்கப் பிரதேசத்தில் மகா நதி சமீபத்தில் கிழக்கு மேற்கு வீதியில், தெற்கு பாகத்திலுள்ள வீட்டில் தேவாலயம் இல்லாத சிறு கிராமத்தில், தகப்பன் வீட்டில் ஜெனனம் நேரிடும், உத்தராம்சமானால் பெரிய கிராமத்தில் தேவாலயம் சமீபமாக உள்ள தெற்கு வடக்கு வீதியில் தாய் வீட்டில் ஜாதகனுக்கு ஜெனனம் நேரிடும்.

(161) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் குரு இருந்தாலும், லக்கின பாவத்தைக் குரு பார்த்தாலும், லக்கினாதிபதி சூரியனுடன் கூடியிருக்கப் பிறந்த ஜாதகனுடைய ஜெனனகாலத்தில் தாய்க்குப் பிரசவத்தில் வேதனை கொஞ்சமாயிருக்கும், உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குச் சந்திரன், ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவத்தில் விசேஷ பாதையும், குரு, செவ்வாயால் பார்க்கப்பட்டால் தாய்க்குக் கொஞ்சம் பீடையும் உண்டாகும், குழந்தைக்குப் பாலரோகம் முதலான சிசுக்களுக்குரிய ரோகத்தாலும், மாந்த சுரத்தாலும், இரணத்தாலும், அம்மை ஜுரம் முதலானவற்றாலும் பயம் உண்டாகும். அந்த தோஷம் நிவர்த்தியாகும்படி வெள்ளியால் சந்திரப் பிரதிமை செய்து அதை அர்ச்சித்துப் பூஜித்து, கற்றுணர்ந்த ஜோதிஷனுக்கே தானம் செய்தால் ஜாதகனுக்குத் தோஷம் நீங்கிவிடும் சுகமுண்டாகும்.

(162) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர ராசிகளிலிருக்க எட்டாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்திலிருந்து, குரு கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுக்குச் சகல தோஷங்களும் விலகி, எழுபது வயது சம்பூர்ணமாயுண்டாகும்.

(163) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி சூரியன், புதனுடன் கூடி கேந்திரத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி சுக்கிரன் ஐந்தாம் பாவத்திலிருந்து, ஒன்பதாம் பாவத்தில் குருவும் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கிய முடையவனாகவும், ஜாதகனுடைய பிதா பிரசித்தி பெற்றவனாகவும், விஷ்ணு பக்தியுடனும், மகா

சாரத்துடனும் இருந்து சகோதர ஹீனனாகி, சகோதரி ஜென விருத்தியுடையவனாகவும், இரண்டு, மூன்று சகோதரிகள் வைதவ்விய மடைந்தவர்களை யுடையவனாகவும், தான் ஒருவனே சுக ஜீவியாயும் இருப்பான். மாற்றாந் தாய் சகோதரன் ஒருவன் ஆயுளுள்ளவன், தன் பிதா கல்வி, புத்தியுடையவனாகி, விவேகியாயும், தேவ பிராமண பக்தியுடனும், எழுதுவதில் சமர்த்தனும், ஊகித்துச் சேர்க்கவும், விலக்கவும், தெளிவுள்ளவனாகவும், திரவிய சம்பாதனையில் சமர்த்துடையவனாகவும், தியாகியாயும், கெம்பீர புத்தியுடையவனாகவும் இருப்பான்.

(164) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி குரு, சுக்கிரனுடன் கூடியிருந்தாலும், குருவால் சுக்கிரன் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் இரண்டு தாரமுடையவன், சத்துருக்களை அழிப்பவன், பிரதாபமுடையவன், சூரியன் ஸ்ரீதாராம்சத்தில் இருந்தால் ராஜ சேவையால் ஜீவனம் செய்பவன், க்ஷேத்திரமூலம் நல்லபடி ஜீவிப்பவன், பயிர்த்தொழில் செய்பவன், அரசாங்கத்தில் நல்ல வாக்கு வன்மையாய்ப் பேசுபவன், ராஜ வசியமுடையவன், அஸஹாய சமர்த்தன், அரச மந்திரியால் சந்தோஷமுடையவன், ராஜகாரியத்தைக் கவனிப்பவன், பலவழிகளிலும் தனத்தைச் சம்பாதிப்பவன், நடுவயதிலும், கடைவயதிலும், யோக விருத்தியுடையவன். க்ஷேத்திர மூலம் அதிக பலனுடையவனாவான்.

(165) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதியான சனி சுய க்ஷேத்திரத்திலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் வீடு, பூமி முதலிய சௌக்கிய முடையவனாகவும், வழி வழியாச் சத்துரு பீடையுடையவனாகவும், அதனால் அதிக விரயம் செய்து சத்துருவை அழிப்பவனாகவும், நியாயாதிபதி மூலம் வெளி தேசங்களில் காரிய சித்தியுடையவனாகவும், தன் ஜெனங்களிடத்தில் நல்ல புகழுடையவனாகவும், கோபியாயும், பராக்கிரமமுள்ளவனாகவும், தேவானுக்கிரக மடைந்த சித்தியுடையவனாகவும், தானே தர்ம கர்த்தாவாகவும், நல்ல வாகனம் முதலியன உடையவனாகவும், தன தானியப் பெருக்குடையவனாகவும், நந்தவனம், க்ஷேத்திர முதலிய ஆராம போகியாயும், பயிரில் அதிக லாபமுடையவனாகவும், வாவி, கிணறு, குளம் முதலிய புண்ணிய கர்மங்களைச் செய்பவனாகவும், கோயில் தர்மம் முதலியன செய்பவனாகவும், நல்ல கீர்த்தியுடை

யவனுகவும், முன் ஜென்மாந்திர பாபத்தினுல் கொஞ்சம் புத்திர சோகமுடையவனுகவும், கிழ வயதில் கொண்டாடப்பட்ட கீர்த்தி யுடையவனுகவும், பசு, எருமைமாடு முதலிய விருத்தியுடையவனுக வும், சொர்ண, வஸ்திர, பூஷணம் முதலானவை உடையதனிகனுகவும், கீர்த்திமானுகவும், தன் புத்திரன் பிரபலமுடையவனுகவும், புத்திரன் மூலம் சுகமுடையவனுகவும், எப்பொழுதும் நல்ல கதைகளைக் கேழ்ப் பவனுகவும், தேவர் பிராமணர் இவர்களை பூஜிப்பவனுகவும், நல்ல பாத்திரம் அறிந்து தானம் செய்பவனுகவும், விட்டுக்கொடுப்பவனுக வும், போகியாயும், கொடையாளியாயும், தியாகியாயும் இருப்பான். அவன் ஜாதகனுடைய ஸம்பத்தார தெசையில் மரிப்பான்.

(166) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் இருக்க, சூரியனும் புதனும்கூடி நான்காம் பாவத்திலிருக்க, தாய் காரகனுன சந்திரன், ராகுவுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய தாய்க்கு விசேஷ சுகமுண்டு, தாய் குணவதி, புண்ணியம் செய்பவள், சமர்த்தையுடையவள், கடுமை யான சொல்லுடையவள், இருந்தாலும் பிரீதியுடன் அன்னதானம் செய்பவள், கணவனுடைய மனதை அனுசரித்து நடப்பவள், தகப்ப னுக்குப் பிரியமானதைச் செய்வாள், வம்சத்தில் பாக்கியமுடையவள், முன் ஜென்மாந்திர பாபவிசேஷத்தால் புத்திர சோகத்தால் பீடிக்கப் பட்டவள், ஜாதகனுடைய மூன்றும் தெசையில் மரிப்பாள்.

(167) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டு, பதி னோராம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் சகோதர, சகோதரிகளுடையவன், ஒரு மூத்த சகோதரன் ஆயுளுடையவனு யிருந்தாலும், அல்பாயுள் யோகமுடையவன், பின் சகோதரிருவரும் சுகமுடையவர்கள், யோகமுடையவர்கள், நிலையான ஜீவனமுடைய வர்கள், மூன்று சகோதரிகள் புத்திர புத்திரிகளுடன் கூடி சுகமுள்ள வர்களாயிருப்பார்கள், அதிகம் சகோதரருண்டானுலும் ஜாதகனுக்கு இவை தவிர மற்றவை நசித்துவிடும்.

(168) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் சீக்கிரத்தில் கோபிப்பவன், தெளிந்த அறிவுடையவன், விஷ்ணு, சிவ பக்தியுடை யவன், மதாசாரமுடையவன், திட்டமாய்ப் புசிப்பவன், மர்மமன முள்ளவன், காமி, சொற்ப நித்திரையுடையவன், மிக ஜாக்கிரதையு

டையவன், தேவப் பிராமண விசுவாசி, கல்வி, அறிவுடைய விவேகி யாவான்.

(169) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் ராகு இருக்கப் பிறந்தவன், சிநேக துரோக புத்தியுடைய வன், வாசாலகன், யுக்தியாகப் பிரசங்கம் புரிவான், எழுதுவதில் சமர்த்தன், இரண்டு பாஷைகளை நன்ருய்ப் பேசுபவன், அன்னிய பாஷையில் நல்ல கியானமுள்ளவன், சந்தன புஷ்ப வஸ்திரப் பிரியனு வான்.

(170) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி சுய க்ஷேத் திரத்தில் இரண்டு கிரகங்களிருக்கப் பிறந்த ஜாதகன் போகியானவன், பாலியம் முதல் புகழுடையவன்.

(171) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்திலும், நான்காம் பாவாதிபதி ஒன்ப தாம் பாவத்திலுமிருக்க ஜெனித்தவனுக்கு எப்பொழுதும், குதிரை வாகன முண்டு, வேலையாள், சேவகர் இவர்களுடனும் ஜாதகன் கூடி யிருப்பான்.

(172) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி மித்திர க்ஷேத்திரத்திலிருந்து பதினோராம் பாவாதிபன் இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தியாக, போக சம்பத்து டையவனுகி திரவிய சம்பாதனையில் சமர்த்தனுயிருப்பான்.

(173) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் அரசாங்க மூலம் ஜீவிப்பவன், க்ஷேத்திர மூலம் ஜீவிப்பவன், பயிர்த் தொழிலில் லாப முடையவன், அரசாங்கத்தில் புகழுடையவன், அரசாங்க உத்தியோக ஸ்தர்களால் சுகி, அரசாங்க உத்தியோகத்தில் சமர்த்தன், தன் ஜெனங்களிடத்திலும் நல்ல யோகமுடையவன், ஐந்தாம் வயதில் அக்ஷராஞான மடைபவன், வித்தியாப்பியாசம், அதிக சுகம் இவற்றை யடைபவன், தாய் தகப்பனுக்கு அடங்கியவன், சகோதர விருத்தி யுடையவன், தன் பிதா யோகப் பெருக்குடையவன், அரசாங்கத்தில் நல்ல யோகமுடையவன், விசேஷ வித்தியா லாபமுடையவன், பத்து வயதுக்குமேல் விசேஷமுடையவன், தகப்பனுல் அதிக சுகமுடைய வன், பதினாலாவது வயதில் பிரசித்தியடைவான், பதினைந்து அல்லது பதினாருவது வயதில் விவாகத்தை நிச்சயம் அடைவான். தன் ஊருக்

குக் கிழக்கிலாவது, ஈசானிய திக்கிலாவது விவாகம் உண்டாகும், மனைவி வெளுப்பு நிறமானவள், பாரியை தன்னிடம் பக்தியுடையவள்.

(174) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலும், இரண்டாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலும் இருந்து சந்திரனும் குடும்ப பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்குத் தன் அம்மான் பெண் மனைவியாவாள், ஜாதகன் விவாகமான பின்பு சுகம் அடைவான், வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷமுள்ளவன், ஜாதகன் தன் தகப்பன் மூலமாக பிரசித்தியடைபவன், சுயம் பிரபலமடைபவன், சுயார்ஜிதமாக தனம் சம்பாதிப்பவன், யோகமுடையவன், அரச மந்திரியினால் சந்தோஷிக்கப்படுபவனாவான்.

(175) ஜென்ம லக்கினம் கன்னி (கமலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி ஆறும் பாவத்திலிருந்து சுய க்ஷேத்திரமாகிய விருச்சிகத்திலிருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டு, ஒன்பதாம் பாவாதிபதி சுக்கிரன், ஐந்தாம் பாவத்தில் இருக்க, ஒன்பதாம் பாவத்தில் குருவும் இருக்கப் பிறந்த ஜாதகனுக்குப் புத்திர பலமானது நாசமடைந்து விடும், விருஷப ராசித் திரிகோணங்களில் கோட்சாரத்தில் குரு வரும்சமயம் புத்திரப்ராப்தி யுண்டாகும், குருவின் பார்வையுள்ள ராசித் திரிகோணங்களில் கோட்சாரத்தில் குரு விருந்தாலும், புத்திர புத்திரிப் பிராப்தி உண்டாகும், சுப்பிரமண்ய விரதம் செய்தால் இரண்டு புத்திரன்களும், இரண்டு புத்திரிகளும் தீர்க்காயுளுடையவர்களாயிருப்பார்கள். அதிகம் பிறந்தாலும் மரித்து விடும்.

(176) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 175-24 கலை முதல் பாகை 175-36 கலை வரையில்) ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி லக்கின பாவத்தில் உச்சனாகி யிருந்து, சூரியனுடன் கூடியிருந்தால் பெரிய ஆற்றுப் பிரதேசத்தில் பட்டிணத்தில் அக்கிரகாரத்தில் கிழக்கு மேற்கு வீதியில் ஜாதகனுக்கு ஜெனனமும் வாசமும் நேரிடும். உத்தராம்சத்தில் தெற்கு வடக்கு வீதியில் ஜெனனம் நேரிடும்.

(177) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் கேது இருக்க, சந்திரன் ராகுவுடன் கூடியிருந்தால் பூர்வாம்சமானால் ஜாதகன் பிறந்தகாலத்தில் தாய்க்குப் பிரசவத்தில்

அதிக வேதனையுண்டாகும், உத்தராம்சத்தில் ஜெனித்தவனுடைய தாய்க்கு வேதனை கொஞ்சமாயிருக்கும்.

(178) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி சூரியன் லக்கின கேந்திரத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதி நீச்சராசியிலிருக்க ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்ட பீடையுண்டாகும். அது ஜென்ம தெசையில் விசேஷமாயிருக்கும்.

(179) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி ஒன்று, பத்து, எட்டு முதலிய பாவாதிபதிகள் தன் உச்ச, நீச்ச ராசிகளில் பலமுடையவர்களாயிருந்து லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் எல்லா தோஷங்களும் விலகிச் சுகமடைவான்.

(180) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி பூர்வாம்சத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவாதி சுப்பிரபாம்சத்திலும், எட்டாம் பாவாதிபதி வாருணம்சத்திலும் இருந்தால் வயது அறுபத்தெட்டாகும். உத்தராம்சத்தில் இப்படிக் கிரகமிருக்கப் பிறந்தவன், எழுபத்தேழு வயது வரை ஜீவித்திருப்பான்.

(181) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருக்க, ஒன்பதாம் பாவாதிபதி சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சௌக்கியமுடையவன், சகோதரக் குறைவுடையவன், விஷ்ணு, சிவ பக்தியுடையவன், சூரியன் குமாராம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் நல்ல குமார சரீரமுடையவன், பிதுரார்ஜித சம்பத்துடையவன், க்ஷேத்திர பாக்கிய சமிருத்தியுடையவன், சொல்ப கல்வியுடையவன், புகழுடையவன், மானி, தியாகம், தானம் முதலிய போக போக்கியமுடையவன்.

(182) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி சூரியன் லக்கின கேந்திரத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கர்ப்ப ஸ்ரீமானாயும், சுகியாயுமிருப்பான்.

(183) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி பிதுரு வழிப்பாட்டன் ஸ்தானாதிபதி சனி தன்னுடைய உச்சராசியில், சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய பாட்டன் பிரசித்தனாகவும், பட்டின கிராமத்தலைவனாகவும், அரசாங்கத்தில் புகழுடையவனாகவும்,

தன் தேசத்தில் நல்ல கீர்த்தியுடையவனுகவும் இருப்பான், ஜாதகனுடைய பாட்டனின் புண்ணிய வசத்தாலேயே ஜாதகனுடைய தகப்பனும் பாக்கியத்தை அடைகிருன்.

(184) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி விரைய பாவத்தில் காதாம்சாவஸ்தையில் இருந்தால் ஜாதகனுடைய தாய் அற்ப சௌக்கியமுடையவள், குணமுள்ளவள், பொறுமையுள்ளவள், வம்சவிருத்தியுள்ளவள், ஜென்மாந்திர பாபத்தினுல் அற்பகாலத்தில் மரிப்பாள், ஜாதகனுடைய ஜென்ம தெசையிலேயே மரித்து விடுவாள்.

(185) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி மீனும்சத்தில் சந்திரன் மீன ராசியிலேயே கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் மாற்ருந்தாயையுடையவன், அந்த கேந்திரத்திலேயே சந்திரனுடன் ராகு அல்லது கேது கூடியிருந்தால் அந்த மாற்ருந் தாய் விதவையாகித் துக்கப்படுபவள். நான்காம் பாவத்தில் கேது இருந்தால் அவள் தன் குலத்திலேயே ரகசியமாக வியபிசாரம் செய்வாள், இரண்டாம் பரியாயத்தில் ஜாதகனுக்குக் கோட்சாரத்தில் விருச்சிக ராசியில் சனி வரும் சமயம் ஜாதகனுடைய மாற்ருந் தாய் மரணமடைவாள் என்று சிலரும், தனுசு ராசியில் வரும் சமயம் மரணமடைவாள் என்று சிலரும் சொல்லுகிருர்கள். அதன் பிறகு ஜாதகன் தன் தகப்பன் வழிப் பாட்டி மூலம் சுகமடைவான், விபத்தார தெசையில் சிம்ம ராசியின் கடைசியில் அல்லது கன்னியா ராசியில் கோச்சாரத்தில் சனி வரும் சமயம், அந்த பாட்டியும் மரித்து விடுவாள், அதனுல் ஜாதகன் மிகவும் துக்கத்தை அடைவான்.

(186) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி செவ்வாய் நீச்சமடைந்து பதிஞேராம் பாவத்தை அடைந்திருந்தால் ஜாதகனுக்குச் சகோதர பலன் அற்பமாயிருக்கும், ஜாதகன் சகோதர சௌக்கிய மிழந்தவன். சகோதரிகளுடன் கூடினவன், சகோதரிகள் நால்வர் அல்லது அதிகமும் உண்டாகலாம்.

(187) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி காதாம்சத்தில் இருந்து சுக்கிரன், சனியுடன் கூடியிருந்தால் ஜாதகன் அநேக ஸ்திரீகளுக்கு நாயகன், போகி, வரத்துமேல் வரத்துண்டாகி உத்சாக முடையவனுயிருப்பான்.

(188) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகிச் சுக்கிரன் லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் அளவாய்ப் பேசுபவன், குருவிடம் பிரியமுள்ளவன், குருவுக்கும் பிரியமானவன்.

(189) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் இரண்டாம் பாவத்தில் உச்சனுயிருந்தால் ஜாதகன் விஷ்ணு, சிவன் இவர்கள் மதத்தையடைபவன், எப்பொழுதும் சிவ பத்தியுடன் கூடினவன், தேவியின் அனுக்கிரகமடைந்தவன்.

(190) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி லக்கின கேந்திரத்தில் புதன் இருந்தால் ஜாதகன் ஞானியாயும், தத்துவ விவேகியாயும், துஷ்டர்களிடம் துஷ்டபுத்தியுடனும், கொடியவர்களுக்குக் கொடூரத் தன்மையுடையவனுகவும், வாக்குச் சாதுரியமுடையவனுயும், வாசாலகனுகவுமிருப்பான்.

(191) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி சனி தன்னுச்சராசியிலிருந்து பத்தாம் பாவாதிபதியும் தன்னுச்சராசியிலுமிருந்தால் ஜாதகன் க்ஷேத்திரமுலமாகப் பிரசித்தியடைந்து, பட்டிணத்துக்காவது, கிராமத்திற்காவது தலைவனுயிருப்பவன், புதன் ஸாரஸ்வதாம்சத்தில் இருந்தால் புத்தி, வித்தை இவைகளை யுடையவனுமாவான்.

(192) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி சுக்கிரன் ராஜ்ய பூஜ்யாம்சத்தில் இருந்து, இரண்டாம் பாவாதிபன் நான்காம் பாவத்தில் இருந்து சுக்கிரன் அதிமித்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் யோகமுடையவன், பாக்கியமுடையவன், அதிக க்ஷேத்திரமுடைய பிரபு, தன் ஜெனங்களிடம் பிரசித்தியுடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், எல்லா ஜெனங்களுக்கும் ரஞ்சகனுகவுமிருப்பான்.

(193) ஜென்ம லக்கினம் கன்னி (ரௌத்ராம்சம்) ஆகி குருகாதாம்சத்திலிருக்கச் சுக்கிரன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்கு மூன்று மனைவிகள் ஏற்படுவார்கள். மூத்த மனைவி அற்ப சந்தானமுள்ளவள், பிரசவத்தில் அவள் மரிப்பாள், இரண்டாம் மனைவியும் அப்படியே ஆவாள். மூன்ரும் மனைவி சுகத்தையுடையவள், மூன்ரும் மனைவி ஸ்திரீ பிரஜைகளைப் பெறுவாள், அற்ப சந்தான முடையவளாவாள்.

(194) ஜென்ம லக்கினம் கன்னி (ஸ்நிக்தாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 173-36 கலை முதல் பாகை 173-48 கலை வரையில்) ஆகி ஜென்ம லக்கின கேந்திரத்தில் செவ்வாயிருந்து ஐந் தாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகனுடைய தாய் பிரசவத்தில் அதிக வேதனையுடையவள், கொஞ்சம் சூதி தோஷமுண்டு, ஆயினும் ஜாதகனுடைய தகப்பனின் புண்ணிய வசத்தால் அவனுக்குத் தேக ஆரோக்கியமும் சுகமும் உண்டாகும், ஜென்ம தெசையில் ஜாதகனுக் குப் பாலரோக பயம் உண்டாகும்.

(195) ஜென்ம லக்கினம் கன்னி (ஸ்நிக்தாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதியும், எட்டாம் பாவாதிபதியும் ஒன்பதாம் பாவத்தில் இருந்து சனியும் தன் உச்சராசியில் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகிச் சுகமடைவான்.

(196) ஜென்ம லக்கினம் கன்னி (ஸ்நிக்தாம்சம்) ஆகி ஒன்ப தாம் பாவாதிபதி கேந்திர ராசிகளிலிருக்க சூரியன் தன் உச்சராசியில் எட்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கொஞ்ச மான சுகமுடையவன்.

(197) ஜென்ம லக்கினம் கன்னி (ஸ்நிக்தாம்சம்) ஆகி ஒன்ப தாம் பாவாதிபதி சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப் பன் சிவபக்தியுடையவன், தேவப் பிராமண விசுவாசமுடையவன், பிதா வியாபாரத்தால் ஜீவனம் செய்பவன், கல்வியால் அற்ப சௌக் கியமுடையவன், மிதமான பாக்கியமுடையவன், மனைவி வம்சத்தால் கொஞ்சம் சௌக்கியமுடையவன், விருத்தாப்பிய வயதில் கொஞ்சம் சௌக்கியமும் உடையவன், ஜாதகனுடைய சம்பத்தார தெசையில் மரிப்பான்.

(198) ஜென்ம லக்கினம் கன்னி (ஸ்நிக்தாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி ராகுவுடன் கூடி சந்திர கேந்திரத் திரிகோணங்களில் இருந்து லக்கின கேந்திரத்தில் செவ்வாயுமிருந்தால் ஜாதகனுடைய தாய் அற்ப சௌக்கியமுடையவள், குணவதி, பரிசுத்தமுள்ளவள், சகோதரர்களுடன் கூடியவள், பாக்கியவம்சத்தில் பிறந்தவள், தாய் வம்சத்தில் அதிக சுபமுள்ளவள், ஜாதகனுடைய இரண்டாம் தெசை யில் தாய் மரித்து விடுவாள், சிலர் ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனு டைய ஜென்ம தெசையிலேயே மரித்துவிடுவான் என்று சொல்லு கிறார்கள்.

(199) ஜென்ம லக்கினம் கன்னி (ஸ்நிக்தாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி செவ்வாய் லக்கின பாவத்தில் காதாம்சத்திலிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரன் அற்ப சுக முடையவன், சகோதரியில்லாதவன், சிலர் ஒரு சகோதரி உண்டு என்று சொல்லுகிறார்கள்.

(200) ஜென்ம லக்கினம் கன்னி (ஸ்நிக்தாம்சம்) ஆகி ஜாதக னுக்கு ஏழாம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருக்க ஏழாம் பாவத் தைச் செவ்வாய் பார்த்தால் காலதாமதமான விவாகமுடையவன், சாதாரண அழகுடைய மனைவியும் உடையவன், ஜாதகனுடைய மூத்த மனைவி புத்திரனில்லாதவள், வேறு மனைவியிடம் ஜாதகன் புத்திரனை அடைவான்.

(201) ஜென்ம லக்கினம் கன்னி (ஸ்நிக்தாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் கேது இருந்து, ஐந்தாம் பாவாதிபதி தன் உச்சராசியில் இருக்க சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் சனியிருந்தால் ஜாதகனுக்கு ஸந்தானத்துக்கு இடைஞ்சல் உண்டாகும். அந்த தோஷத்துக்குப் பரிகாரமாக சேதுஸ்நாநம், சிவார்ச்சனை, நாகசாந்தி, பாலகிருஷ்ணப் பிரதிமை தானம் இவற்றில் முதலில் சேதுஸ்நாநம் செய்து, பசு தானம் செய்து பிறகு மற்ற தானம் முதலிய பரிகாரங்களைச் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு தன் மூத்த மனைவியிடம் காலாந் தரத்திலாவது, வேறு மனைவியிடத்திலாவது புத்திர சந்தானம் உண் டாகும், ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவனு யிருந்தாலும் முதலில் பெண் குழந்தைகளும், பின்பு புருஷக் குழந்தைகளும் பிறக் கும். தீர்காயுளுடைய மூன்று பெண்களும், இரண்டு புருஷப் பிள்ளை களும் பிறப்பார்கள்.

(202) ஜென்ம லக்கினம் கன்னி (கிரீசாம்சம்) ஆகி சந்திரன் மிதுன ராசியில் நீச்சாம்சத்திலிருந்து, சுதாம்சத்திலிருக்கப்பட்ட குரு வால் பார்க்கப்பட்டால் பூர்வாம்சத்தில் பிறந்த ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரனில்லாதவன், சகோதரிகளு டையவன், உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு ஒரு மூத்த சகோதரன் ஆயுளுடனிருப்பான், இரண்டு சகோதரிகளிருப்பார்கள். பூர்வபாகத் தில் பிறந்தவனுக்கு மூன்று சகோதரிகள் மட்டும் உண்டு, ஆற்றுப் பிரதேச பட்டிணத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஜாதகனுக்கு வாச மும், பிரசவமும் நேரிடும். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குச் சமுத்

திர சமீப தேசத்தில் புண்ணிய க்ஷேத்திரமில்லாத விடத்தில் ஜெனனமும், வாசமும் நேரிடும்.

(203) ஜென்ம லக்கினம் கன்னி (கிரீசாம்சம்) ஆகிச் சந்திரன் நீசாம்சத்திலிருந்து அல்லது சாதாரணமாகவேயிருந்து குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவத்தில் அற்ப வேதனையே இரண்டு அம்சத்திலும் உண்டாகும், பூர்வபாகத்தில் சந்திரனுக்குக் குரு பார்வையிருந்தால் சௌக்கியம் உண்டாகும், சூதி தோஷம் பூர்வபாக ஜாதகனுக்கு இருந்தாலும், உத்தராம்சத்தில் ஜெனித்தவனுக்கு அது அதிகமாயிருக்கும், பூர்வ பாகத்திற்கு பாலாரிஷ்ட பயமும் உண்டாகும், உத்தராம்சத்தில் ஜெனித்தவனுக்கு பாலாரிஷ்டம் உண்டாகாது, மாந்த ஜுரபயமும், வைசூரி பயமும் உண்டாகும்.

(204) ஜென்ம லக்கினம் கன்னி (கிரீசாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு ஏழாம் பாவாதிபதி சுக்கிரன் வீட்டிலிருந்து, சுக்கிரனும், சூரியனும் கூடியிருந்தால் ஜாதகன் வேறு மனைவியிடம் புத்திரனை யடைவான், ஜாதகனுடைய மூத்த மனைவி புத்திரனில்லாதவள். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு இரண்டாவது தாரம் உண்டாகாது, மூத்த மனைவியிடமே காலாந்திரத்தில் புத்திர விருத்தி உண்டாகும், பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்கு இரண்டாம் மனைவியிடத்திலும் காலம் கடந்து முதலில் பெண்கள் பிறந்து சௌக்கியம் உண்டு, பிறகு காலாந்தரத்தில் புத்திரர்கள் பிறப்பார்கள். தீர்க்காயுளுடைய இரண்டு புருஷப்பிரஜையும், மூன்று பெண் பிரஜைகளும் உண்டாகும். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு ஒரு புத்திரனும், நான்கு புத்திரிகளும் பிறப்பார்கள்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் கன்னி லக்கினத்திற்கு 204-விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட கன்னி லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் கன்னி லக்கின பலனின் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்று அறியவும்.

துலா லக்கின ஜாதகம்.

——(***)——

(1) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 181-48 கலை முதல் பாகை 182-00 கலை வரையில்) ஆகி லக்கினுதிபதியான சுக்கிரன் லக்கினத்திலிருக்க, மேஷத்தில் செவ்வாய், சூரியன் இவர்கள் இருந்து பார்த்தால் சரீரம் காந்தியான இரத்தம்போல் சிவந்தவனுகவும், நல்ல முகமுள்ளவனுகவும், பேசுபவனும், தன்னிச்சையாய் நடப்பவனும், நல்ல தைரியசாலியாயும், கண்டிப்பான சொல்லுடையவனும், மாயையுள்ளவனுகவும், கபடமாய்ப் பேசுபவனுகவும், தன் வசனத்தால் அரசர்களை மோகிக்கும்படியும் செய்வான், மனிதர்களை மோகிக்கும்படிப் பேசுவான், ஜென மோகனன்.

(2) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு இரண்டாமிடத்துக்குடைய செவ்வாய் சுயக்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் வாசாலகன், யுக்தியுடையவன், சாதுரியமுடையவன், தெலுங்கு பாஷையில் தேர்ந்தவன், நீச்சவித்தையில் விசாரமுடையவன், ஐந்து வித்தையுடையவன், நாலுவித பாஷையறிந்தவன், மந்திர சாஸ்திர மரிந்தவன், சுப்பிரமண்யன் முதலிய தேவர்களிடத்திலும், விஷ்ணுவிடத்திலும் விசேஷ பக்தியுள்ளவன், பல்லில் ரோகமுண்டாகி ரத்தம் வடிந்துகொண்டிருக்கும், சூலைரோகமுடையவன், சூலத்தைத் தரித்தவன், உஷ்ணத்தால் ரத்தம் போன்ற சிவந்த கண்களை யுடையவன், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தனம் சம்பாதிப்பான். மேலான பிரபல உத்தியோக பாக்கியமுடையவன், குதிரை ஏறுபவன், அநேக குதிரை, சேனை முதலியவற்றிற்கு நாயகன், இருபத்தொரு வயதிற்குப் பிறகு யோகமுடையவன், முப்பது வயதுக்குமேல் நல்ல யோகமுடையவன், முப்பத்து நான்காவது வயதில் அரச ஸ்திரீமூலம் விசேஷ பிரபல யோகவான், நாற்பத்து மூன்று வயதுவரையிலும் அதிக யோகம், அதன் பிற்பாடு ஏழுவருஷம் மித யோகமாயிருக்கும், ஐம்பது வயதுக்குமேல் ராஜயோகமுடையவன், பற்பல தேசங்களில் சஞ்சாரம் செய்வான், அநேக வேலைக்காரர் தனம், முதலியவற்றுடன் கூடினவன்.

(3) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி மூன்றுமிடத்துக்குடைய குரு கும்பத்தில் அல்லது சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் ஒரு மூத்த சகோதரனுடனும், ஒரு இளைய சகோதரனுடனும் இரண்டு சகோதரிகளுடனும் வெகு கஷ்டத்துடன் கூடியிருப்பான், கிரந்தத்தின் வேறு இடத்தில் இளையவர்கள் இல்லையென்று மனு சொல்லியிருக்கிறார்.

(4) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி நான்காமிடத்துக்குடைய சனி, ராகுவுடன் கூடி சந்திரனால் பார்க்கப்பட்டால் தன் தாய் நித்தியம் கோபத்துடன் இருப்பான், துர்க்குணம் உடையவளாயும், கணவனுடைய விரோதியாயும் இருப்பாள். துர்மரணமாக மரிக்க இஷ்டப்படுவாள், மூடத்தனத்தால் துக்கமடைந்த மனதுடையவள், ஜாதகனுடைய சிறிய தாய் ஒருத்தி பாலியத்தில் விதவையாகி விடுவாள், இரண்டு அல்லது மூன்று அம்மான்கள் இருப்பார்கள். சந்திர தெசையில் ராகு புக்தியிலாவது, முப்பத்திரண்டாவது வயதிலாவது விஷ அதிசார தோஷத்தால் துர்மரணத்தால் அபமிருத்துவாய் தாய் மரிப்பாள், தனக்குத் தாய்மார் இருவர் ஆவார்கள், ஜாதகன் தன் தகப்பனுடைய வைப்பாட்டிக்குப் பிறந்தவன் என்று சிலர் என்னுகின்றனர், சுக்கிர தெசையில் ராகு புக்தியில் அல்லது சனி புக்தியில் அல்லது சந்திரன், செவ்வாய் இவர்கள் புக்திகளில் ஜாதகனுடைய தாயார் துர்மரணமாக மரிப்பாள் என்று சொல்லவும்.

(5) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி ஐந்துக்குடைய சனி ராகுவுடன் கூடி புதன், சந்திரன், கேது முதலியவர்களால் பார்க்கப்பட்டால் முதலில் பெண் பிள்ளைகள் பிறக்கும், ஆண் பிள்ளைகட்கு இடையூறு உண்டாகும், மூன்று புத்திரிகளாவது, இரண்டு புத்திரிகளேயாவது உண்டாகும், ஆண் பிள்ளை இல்லை, சர்ப்ப தோஷத்தால் முதலில் இந்த ஜென்மத்தில் சபிக்கப்பட்டிருக்கிறான். தேவாலயத்தில் உள்ள மரம் முதலானதுகளை வெட்டியதாலும், தேவ சாபத்தாலும் இந்த ஜாதகனுக்குப் புத்திரனில்லை, பிறந்தாலும் மரித்துப்போகும், அந்த பாபபரிகாரத்துக்கு நாகப் பிரார்த்தனையும் செய்து கொண்டு சேது ஸ்நானவசத்தாலும், மரங்கள் வைத்து (நந்தவன நிர்மாணம்) புண்ணியமான சாந்தி தானம் முதலியவற்றைச் செய்தால் காலாந்தரத்தில் பிள்ளை பிறக்கும், வெகு பிரயாசையின் பலனாக ஒரே புத்திரன்தான் பிறப்பான்.

(6) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி ஏழுக்குடைய செவ்வாய் சுயக்ஷேத்திரத்தில் இருந்து சுக்கிரனுடன் கூடியிருந்து ராகு தெசையில் செவ்வாய் புக்தி அல்லது குரு தெசை சுப புக்தி வந்தால் இருபத்தொரு வயதிலாவது அதற்குப் பிறகாவது சித்திரை மாதத்தில் கலியாணத்தை யடைவான், சிவப்பு நிறமுள்ள மனைவி யுள்ளவன், அவளுடன் வெகுகாலம் கூடியிருப்பான், இந்த மனைவிக்குப் பிறகு குரு தெசையில் சுக்கிர புத்தியில் மறு மனைவியை விவாகம் செய்வான், அநேகம் ஸ்திரீகளுக்குப் புருஷனாக இருந்தும் வைசிய ஸ்திரீலோலனாக இருப்பான்.

(7) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி லக்கினத்துக்குடைய சுக்கிரன் ஏழாமிடத்தில் இருக்கப் பிறந்தவன் பல ஜாதி ஸ்திரீகளையும் விரும்பி கேளிக்கை நடத்துவான், மூல ரோகி, வெள்ளை மேக ஒழுக்குடையவன், மூத்திர கிருச்சனமுடையவன், விரையில் பாதையுள்ளவன், ரத்தவாந்தி செய்பவன், கொஞ்சமான தாபஜ்வரத்துடன் கூடினவன், வயிற்று நோயினாலும், சூலையினாலும் கஷ்டப் படுவான், சீக்கிரம் ஆரோக்கியம் அடைவான்.

(8) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி ஒன்பதுக் குடைய புதன் சுய க்ஷேத்திரத்தில் இருந்து பிதுருகாரகன் சர்ப்ப ராசியிலிருக்கத் தன் பிதா யோகமுடையவன், சாது, நான்கு பாஷைகளுக்கு அர்தம் தெரிந்தவன், நீச்ச அரசனுடைய ராஜ்ஜியத்தில் யோகமுடையவன், இராஜனால் வெகுமானிக்கப்பட்டவன், அநேக அரசனுடைய தயவை அடைந்தவன், அநேக தேசங்களில் கீர்த்தி யுடையவன், தன் பிதாவினுடைய மூத்த சகோதரி ஒருத்தி பாலிய விதவையாய் விட்டவள், அற்பாயுளில் மரித்து விட்டிருப்பவள், தகப்பன் பின்ன சகோதரன் (மாற்றாந்தாயின் பிள்ளை) தன் பத்தினியுடனும், பத்தினியின் தாயார் (மாமியாருடனும்), தன் பணத்துடனும், சகோதரிகளுடனும், சகோதர்களுடனும் கூடியிருப்பான், உத்தியோக மூலம் பணக்காரனுவான், வித்தை பிரபலமுள்ளவன், வித்தியா தனத்தால் ராஜ்ஜியத்தில் பிரபல உத்யோக பாக்கிய முடையவன், மந்திர சாஸ்திரம் நன்றாய்க் கற்றவன், பூஜையால் தேவி வசியத்துடன் கூடினவன்.

(9) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி பத்துக்குடைய சந்திரன் ஒன்பதாமிடத்தில் இருந்து புதனுடன் கூடியிருந்

தால் சனி, செவ்வாய், ராகு, குரு இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஆசாரமுள்ளவன், நல்ல செய்கையுடையவன், ஞானி, தியானம், ஜெபம், சமாதி முதலியவையுடையவன், இவன் சனி தெசையில் கங்காஸ்னனம் செய்பவன், நல்ல புண்ணியம் செய்பவன், இராஜனுடைய சமீபத்தில் இருந்து அநேக சேனையுடன்கூடி தண்டனை செய்கிறவன், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் இவர்களுடன் கூடினவன், பசு, தானியம் முதலிய சமிருத்தியுடையவன், பிதுரு பாக்கிய முடையவன், மானி, சுயார்ஜிதத்தால் பூஸ்திதி சம்பாதிப்பான், தேவாலயம் கட்டுவிப்பான், கீர்த்தியுடையவன், வெகு பாக்கிய முடையவன்.

(10) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 193-48 கலை முதல் பாகை 194-00 கலை வரையில்) ஆகி பத்தாம் பாவாதிபதி புதனுடன் கூடி ஐந்தாம் பாவாதிபதி லாப ராசியை யடைந்திருக்கப் பிறந்தவன் யானை முதலான ஐஸ்வரிய முள்ளவன்.

(11) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி கும்ப ராசியில் குரு இருந்து ஐந்தாம் பாவாதிபதி லாபத்தானத்தில் கூடியிருந்தால் ஜாதகனுக்கு இரண்டு புத்திரனும், இரண்டு புத்திரிகளும் இருப்பார்கள், இரண்டு கன்னிகைகளும் சுகஜீவியாய் இருப்பார்கள்.

(12) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி ஆறும் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்தும், நான்காம் பாவாதிபதி லாப ஸ்தானத்திலிருந்து ஆறும் பாவாதிபதி செவ்வாய் பார்த்தாலும், சனி பார்த்தாலும் சத்துருவை நாசம் செய்து பிரதாபத்தை அடைவான், அன்றியும் பத்தாம் பாவாதிபதி லக்கினத்திலிருக்க நல்ல செய்கையும், ஆசாரமும் உள்ளவனும், கர்ப்ப ஸ்ரீமானும், பொன் வஸ்திரம், பூஷணம் முதலிய லாபமுள்ளவனும், தன் வீட்டில் சுவர்ண பாத்திரம் முதலியன உள்ளவனும் ஆவான்.

(13) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி தன்னுச்சத்திலாவது, வர்கோத்தமாம்சத்திலாவதிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும், அத்துவைத பார்க்கத்தால் நிஜரூபமான பரமாத்துமாவை அறிந்தவனாகவும், வேதாந்த நிஷ்டையுள்ளவனாகவும் ஆகிறான்.

(14) ஜென்ம லக்கினம் துலாம் (சம்பகாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 185-12 கலை முதல் பாகை 185-24 கலை வரையில்) ஆகி இரண்டாம் பாவாதிபதியுடன் சனி கூடியிருந்தால் முகத்தில் ரோகமுள்ளவன், பால்ய வயதில் நாகப்பிரதிமை தானம் செய்தால் முகரோகமுண்டாகாது.

(15) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 193-48 கலை முதல் பாகை 194-00 கலை வரையில்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்சராசியிலிருந்து சூரியனுடன் சேர்ந்திருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சுகமுண்டாகும், தன் பிதா சிவபக்தியுடன் இருப்பவன், கொஞ்சம் விஷ்ணுபக்தியும் உண்டு, சொற்பகல்வியுடையவன், ஆசையுடையவன், க்ஷேத்திரமூலமும், குணமும், சுகமும் உடையவன். கொஞ்சகாலம் அனுசாரம் உடையவன், விருத்தாப்பிய வயதில் மனோசித்தியுடையவன், எப்பொழுதும் பயிர்த் தொழிலால் சுகமுடையவன், சொற்ப பூமி உடையவன், தனம் சம்பாதிப்பவன், அரசாங்கத்தில் சொல்ப சௌக்கியமுடையவன், தன் பிதா நேர்மையான புத்தியுடையவன், ஏதாவது கொஞ்சம் தர்மசித்தியுடையவன், விஷயபோகத்தில் விசேஷ புத்தியுடையவன், அந்திய காலத்தில் மனோசுத்தியைப் புத்திரன் மூலமாக அடைவான்.

(16) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சனி யிருந்து ராகு, கேது இவர்களுடன் கூடியிருந்து இவர்களால் சனி பார்க்கப்பட்டு ஒன்பதாம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஆபத்சந்நியாச யோகமுள்ளவன்.

(17) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி சந்திரன் நீசராசியில் இருந்து, நான்காம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் அற்பாயுசுடையவளாவாள்.

(18) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதிக்கு ஆறில் விருச்சிகத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகனுடைய பால்ய வயதிலேயே நாசமடைந்து விடுவான். கோட்சாரத்தில் பதினோராம் பாவாதிபனிருக்கும் ராசியில் சனி வரும் சமயம் ஜாதகனுடைய தாய் மரணமடைவாள்.

(19) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் ராகு இருந்து, லக்கின கேந்திரத்தில் குரு இருக்கப்பிறந்த

ஜாதகன் அற்ப சோதரசௌக்கிய முடையவன், ஒரு சகோதரன் தீர்க்க ஆயுளுடையவன், சுகமுள்ள மூன்று சகோதரிகளிருப்பார்கள், ஜாதகனுடைய மாற்றுந்தாயின் புத்திரன் சௌக்கிய முள்ளவன், மாற்றுந்தாய் தீர்க்காயுளுடையவள்.

(20) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி குருத்திரிம்சாம்சத்தில் சகட யோகத்தில் ஜெனித்தவன், வெளுப்பு நிறமுடையவன், குணமுடையவன், பிராமண ஜென்மம், புத்திமான், சகோதாருடையவன், தாய் சௌக்கிய மில்லாதவன், தன் தகப்பன் அதிக யோக முடையவன், ஜாதகன் திரவிய சம்பாதனையில் சமர்த்தன், நடுவயதில் நல்ல பாக்கியமுடையவன், அரசாங்கத்தில் நன்கு பூசிக்கப்பட்டவன், அரசாங்க ஜென சிநேகிதமுடையவன், பரோபகார முள்ளவன், சௌரிய முள்ளவன், சாகஸக்காரன், கீர்த்தியுடையவன், தேவப் பிராமண பக்தியுடையவன், விசேஷ சிவ பக்தியுடையவனுவான்.

(21) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி குரு லக்கின கேந்திரத்தில் இருக்க ஜெனித்த ஜாதகன் நல்ல சுத்தாத்துமா, இந்திரியங்களை ஜெயிப்பவன், எப்பொழுதும் அன்னதானம் செய்வதில் பிரியமுடையவன், எப்பொழுதும் தேவி சக்தியின் அனுக்கிரக முடையவனுவான்.

(22) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சனி கேதுவுடன் கூடியிருக்க ஜெனித்த ஜாதகன் ஞானியாயும், தத்துவ விவேகியாயுமிருப்பன், நடுவயதில் நல்ல தர்மாத்துமா, தெய்வானுக்கிரக மடைந்தவனுவான்.

(23) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினத்துக்கு ஏழில் செவ்வாயிருக்கப் பிறந்தவன் இருதார யோகமுடையவனுவான்.

(24) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி குரு ஸதாசிவ கலாம்சத்திலிருந்து கேந்திரத்தில் இருக்கப்பட்ட செவ்வாயால் குரு பார்க்கப்பட்டால் ஜாதகன் பரப்பிரம்மத் தியானி, யோகி, மகா புருஷ தெரிசன மடைவான்.

(25) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் பாபக்கிரகமிருந்து சுக்கிரனும், சூரியனும் கூடியிருக்கப் பிறந்தவன் இருபதாவது வயதில் விவாகமடைவான், வேறு சிலர்

சாம்பசிவ மதப்படி ஜாதகனுக்கு மூன்றும் தெசையில் விவாகமும், விவாகத்திற்குப் பிறகு சுயம் பிரபலமு மடைபவன், அரசாங்க ஜென நேச மடைபவன், கிராமங்களுக்குத் தலைவனுவன், பயிர்த்தொழில் செய்பவன், நல்ல யோகமுடையவன், திரவிய சம்பாதனை செய்வதில் சமர்த்தன், குரு தெசையில் நல்ல யோகமுடையவனென்று சொல்லு கிருர்கள்.

(26) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதியுடன் சுக்கிரன் சேர்ந்திருந்தாலும், லக்கின கேந்திரத்தில் சுக்கிரனிருந்தாலும் ஜாதகன் பல தேசங்களிலும் பிரசித்தி பெறு வான். மூன்றும் தெசையில் பிரசித்தி பெறுவான்.

(27) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருக்க ஜெனித்த ஜாதகன் அற்ப சந் தான யோகமுடையவன், முதலில் சுகமுடைய பெண் குழந்தைகளை யுடையவன், க்ஷேத்திர பிரபல யோகமுடையவன்.

(28) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி குரு லக் கின கேந்திரத்திலிருக்க ஜெனித்த ஜாதகன் உத்தமமான பிராபல்ய முடைய புத்திரனையடைவன்.

(29) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சனி, கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் ஆபத் சந்நி யாச யோகமுடையவன், இந்த லோகத்திலும் நல்ல புண்ணியாத்து மாவாகி அந்தியத்தில் நற்கதியடைவான்.

(30) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி ஆறும் பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்திலிருந்து லக்கின பாவத்தில் செவ் வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அத்வைத மார்க்கத்தால் நிஜ சொரூபமான பரமாத்துமாவை வேதாந்த நிஷ்டையுடையனுகி பரம் பொருளை அறிவான்.

(31) ஜென்ம லக்கினம் துலாம் (ஸூப்ரபாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 195-36 கலை முதல் பாகை 195-48 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்தில் உச்ச ராசியிலிருந்து, குருவாலும் பார்க்கப்பட்டால் ஜாதகன் நற்காரியங் களைச் செய்பவன், நல்ல புண்ணியமுடையவன், பணமுள்ளவன், உலகத்தில் சௌக்கியமுடையவன் என்றும் சொல்லுகிருர்கள்.

(32) ஜென்ம லக்கினம் துலாம் (ஸூப்ரபாம்சம்) ஆகி ஜென்ம லக்கின கேந்திரத்தைச் செவ்வாய் அடைந்திருக்க ஜாதகனுடைய தாய் பிரசவத்தில் அதிக வேதனையுடையவள். உத்தராம்சத்தில் ஜெனித்தவனுடைய தாய்க்கு வேதனை கொஞ்சமாயிருக்கும், சந்திரன் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் பீடை உண்டாகும். ஜாதகனுக்குப் பாலரோகத்தால் பீடையுண்டாகும்.

(33) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 209-36 கலை முதல் பாகை 209-48 கலை வரையில்) ஆகிச் செவ்வாய் லக்கின கேந்திரத் திரிகோணங்களிலிருந்து இரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் அற்ப சகோதரமுடையவன், பின் சகோதரன் ஒருவன் தீர்க்காயுளையுடையவன், மூத்த சகோதரர்கள் இருவர் சுகமுடையவர்கள், ஒரு சகோதரி நீண்ட ஆயுளுடையவள், மற்றும் சிலர் ஜாதகன் இரண்டு சகோதரிகளுடையவன் என்றும், அதிக மிருந்தால் நாசமடைவார்கள் என்றும் சொல்லுகிறார்கள், எல்லோரிலும் மூத்த சகோதரன் அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், ராஜயோகப் பெருக்குடையவன், பிரபல உத்தியோக பாக்கியமுடையவன், வாகனம் முதலியன உடையவன், பல தேசங்களிலும் புகழுடையவன், பிரசித்தியுடையவன், முன் பாப விசேஷத்தால் மத்தியால்பாயுசுடையவன், ஜாதகனுடைய மூத்த முதல் சகோதரனுக்கு அடுத்தவன் தீர்க்காயுளுடையவன், புத்திரனையுடையவன், பின் சகோதரன் எப்பொழுதும் சுகமுடையவன், வீட்டு வேலைகளைக் கவனிப்பவன், எப்பொழுதும் க்ஷேத்திர வியாபாரம் உடையவன், பசு, தானிய சமிருத்தியுடையவன்.

(34) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் சாகசக்காரன், பராக்கிரமமுடையவன்.

(35) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் புதனிருந்தால் ஜாதகன் வாசாலகன், சாதுரிய யுக்தியுடையவன், ஸாரஸ்வதாம்சத்திலிருந்தால் கல்வி, அறிவு முதலியவையும், விவேகம் உடையவன், மூன்று பாஷைகளில் வல்லவன், பல பாஷைகளும் கற்றவன், நாடக அலங்கார காவியங்களைப் பிரியமாய்ச் சொல்லுபவன், தெளிவுள்ளவன், பல சாஸ்திரங்களிலும் நல்ல அறிவுடையவன், சமஸ்கிருதப் பிரியன், நல்ல புத்திமான்.

(36) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி செவ்வாய் லக்கின கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் ஜென்ம மூர்க்கன், கோபியாவான்.

(37) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி செய்வாய் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் எப்பொழுதும் கடினமான தண்டனையிடுபவன், வித்தை மூலம் நல்ல யோகமுடையவன், உத்தியோகத்தில் சாமர்த்தியம் வாய்ந்த நிபுணன், நல்ல அறிவாளியாவான்.

(38) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி சனி உச்சனாகி யிருந்து அவன் தெசை இரண்டாவதாக வந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் நல்ல யோகமுடையவன், சகோதரனுக்கு ராஜ யோகம் உண்டாகி அரசாங்க மூலம் ஆதிபத்ய மடைவன், பெரிய மேம்பாடான உத்தியோக லாபமுடையவன், எப்பொழுதும் திருப்தியான சமிருத்தியுள்ள போஜனமுடையவன், அரச மந்திரியின் அனுக்கிரகத்தினால் யோகப் பிரபல மடைபவன் ஆவான்.

(39) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி சுபாம்சத்தில் சனி துலா ராசியிலிருக்க சூரியன் கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுடைய சகோதரனுக்குப் பிரபலம் உண்டாகும். அதற்குப் பிறகு ஜாதகன் பிரபலமடைவன், அரச சந்தோஷ வெகுமானாதி திரவிய வஸ்திர லாபமும், உடன் பிறந்த சகோதரனுக்கு நல்ல யோக காலமும், வெளி தேசாந்திர காலத்தில் யோகமும் உண்டாகும். இது சாரம்சநாடி பலன் என்று முன்னோர்கள் சொல்லுகிறார்கள்.

(40) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடியிருக்க இரண்டாம் பாவாதிபன் கேதுவுடன் கூடியிருந்து, பன்னிரண்டாம் பாவத்தில் குருவும் இருந்தால் ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன், குரு மிருதபுத்ராம்சத்தில் இருந்தால் குழந்தைகள் பிறந்து பிறந்து மரித்து விடும், ஒரு புத்திரன் ஆயுளுடன் இருப்பான் என்று சிலரும், வேறு சிலர் இரண்டு புத்திரிருப்பார்கள் என்றும் சொல்லுகிறார்கள், இப்படியே பெண் குழந்தைகளும் இருப்பார்கள், அவசியம் சாந்தி செய்ய வேண்டும், சாந்தி செய்தபின்பு இந்த புத்திர புத்திரிகள் இருப்பார்கள்.

(41) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி புதன் சாரஸ்வதாம்சத்தில் இருந்தால் ராஜயோகமுடைய ஜாதகன், தன்

குலத்தில் பிரசித்தனுகவும், அறிவாளியாகவும், நல்ல போகியாயும், ராஜாதிராஜர்களால் வெகுமானிக்கப்பட்டும், பூஜிக்கப்பட்டும், கீர்வாண பாஷையில் பிரசண்ட கவியாயும், அரச சேவிதனுகவுமிருப்பான்.

(42) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கினம், பத்தாமிடம், ஏழாமிடம், ஒன்பதாமிடம், எட்டாமிடம் முதலிய இடங்களில் சூரியன் முதலிய கிரகங்கலிருந்தால் கேந்திராதியோகமென்று சொல்லப்படுகிறது, மேற்படி யோகத்தில் பிறந்தவன் ஆயுளுள்ளவரையிலும் யோகமுடையவனுயிருப்பான்.

(43) ஜென்ம லக்கினம் துலாம் (பங்கஜாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி சுப ராசியிலிருந்து பன்னிரண்டாம் பாவம் குருவால் பார்க்கப்பட்டாலும், குரு பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தாலும் ஜாதகன் தேகாந்தியத்தில் நற்கதி அடைவான், பின் ஜென்மம் பிராமணனுகப் பிறப்பான்.

(44) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 198-36 கலை முதல் பாகை 198-48 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி சர ராசியிலிருந்து சராம்சத்தில் கேந்திரத்திலுமிருந்தால் பெரிய ஆற்றுப் பிராந்திய தேசத்தில் பட்டிணத்தில் ஜாதகனுக்கு ஜெனனம் நேரிடும்.

(45) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் ஐந்தாம் பாவாதிபதி சர ராசியிலிருந்தால் ஜாதகனுக்குத் தேவாலய சமீபத்தில் பட்டிணத்தில் ஜெனனம் சம்பவிக்கும். உத்தராம்சத்தில் ஜெனித்தவனுக்குப் பெரிய நதிப்பிராந்திய தீரத்தில் அக்கிரகாரத்தில் ஜெனனம் நேரிடும்.

(46) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகி ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களில் சந்திரனிருக்க, சனியுடனுவது, ராகுவுடனுவது கூடியிருந்து கேந்திரங்களிலும் பாபக்கிரகமிருந்தால் ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்டமுண்டாகும்.

(47) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகிப் பூர்வபாகத்தில் நான்காம் பாவாதிபதி நீச ராசியிலிருக்க சந்திரன் பாபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும், பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுடைய ஜெனனகாலத்தில் தாய் கொஞ்சம் சீக்கிர வேதனையுடையவள், கொஞ்சம் பாலாரிஷ்டபயம் உண்டாகும், சாந்தியால்

265 , 266 PAGES MISSING IN BOOK

சுகமும், ஆரோக்கியமும் லக்கினாதிபதி கேந்திரத்திலிருந்தால் உண்டாகும். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குக் கொஞ்சம் சௌக்கியமுண்டாகும். தாய்க்கும், தகப்பனுக்கும், ஜாதகனுக்கும் தேகாரோக்கியமுண்டாகும்.

(48) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகி சூரியன் சுயக்ஷேத்திரத்தில் இருந்து சுபாம்சத்தில் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சௌக்கியமுண்டாகும், தன் தகப்பன் வைஷ்ணவ ஸ்ரீமான், சகோதரர்களுடன் கூடினவன், எப்பொழுதும் வைதீக ஆசாரமுடையவன், சுகமுடையவன், வேதாத்தியானம் பூர்ணமாகச் செய்தவன், பூர்ணமான வைதீக ஆசாரமுடையவன், பிராமணர்களால் பூஜித்துக் கொண்டாடப்பட்டவன், அற்ப கல்வி தனமுடையவன், எப்பொழுதும் மிக்க நல்லவர்களிடம் அளவளாவிப் பழகுதலும், தர்மசாஸ்திரத்தின் அர்த்தம் தெரிந்தவனாகவுமிருப்பான்.

(49) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் தன் உச்சாம்சத்தில் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் நல்ல சுத்தாத்துமா, சாதுக்களுக்கு உபகாரம் செய்பவன், அதிதியிடம் விசேஷ பக்தியுடையவன், பந்துக்களால் பூஜிக்கப்படுபவன், தகப்பன் சுக முடையவன்.

(50) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம் ஆகி நான்காம் பாவாதிபதி புதாம்சத்தில் கேந்திர ராசியை அடைந்திருந்தால் ஜாதகனுடைய தாய் குணவதி, பொறுமையுள்ளவள், பாக்கியவம்சத்தில் பிறந்தவள், பாலியத்தில் தாய் சௌக்கியமுள்ளவள், கொஞ்சம் ரோகத்தால் பீடிக்கப்பட்டவள், எப்பொழுதும் அன்னதானம் செய்வதில் பிரியமுள்ளவள், பந்துக்களுக்கு உபகாரம் செய்பவள், பதிவிரதை, பெரிய புகழுடையவள், கணவனுடைய மனதை அனுசரித்து நடப்பவள், மாதுவம்சப் பெருக்குடையவள், மத்திய வயதுடையவளாவாள்.

(51) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன்னுச்சாம்சத்தில் பதினோராம் பாவத்தில் சூரியனுடன் கூடியிருந்தால் அந்த புதனுடைய தெசையின் மத்தியில் ஜாதகனுக்கு நல்ல செய்கை, ஆசாரவிருத்தி, விசேஷ சௌக்கியம், வைஷ்ணவ ஜென சிநேகிதம், கல்வியால் சுகம், எப்பொழுதும் நல்ல கதைகளை

கேழ்ப்பதும், பஞ்சமகா எக்கிய பாராயணம் செய்தலும், தனலாப மும், விசேஷ சுகமும், நற்கீர்த்தியும், நல்ல சேர்க்கையும், விப்பிரர் மூலம் தனத்துடன் கூடியும், புத தெசையில் மூன்றும் பாகத்தில் கொஞ்சம் வதையும், இரண்டாம் பரியாயத்தில் கோட்சாரத்தில் சனி இடபராசியை அடைந்தபோது ஜாதகனுடைய மனைவிக்கு மரணமும் நேரிடும்.

(52) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகி ஏழாம் பாவத் தில் சனியிருந்து ஏழாம் பாவாதிபன் சத்துரு க்ஷேத்திரத்தில் நீச்ச ராசியை அடைந்திருந்து சுக்கிரன் சுபக்கிரகங்களின் பார்வையுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய மனைவி நாசமடைவாள், ஏழாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் இரண்டாவது விவாக யோகத்தைச் சீக்கிரமாக அடைவான், இரண்டாம் விவாகத் துக்குப் பிறகு ஜாதகனுக்குச் சுபமும், யோகமும் உண்டாகும், மூன் றும் தெசையில் வைஷ்ணவ சிநேகத்தால் பலவழிகளிலும் தனவரவும், பெரிய நதிப்பிராந்தியத்தில் நிலையான வாசமும், இருப்பும் அடை வான், மூன்றும் தெசையிலேயே வீடு லாபமும், கிரமமாக தனலாப மும், சௌக்கியமும், அந்த மூன்றும் தெசையின் நான்காம் பாகத் தில் ஜாதகனுடைய தாய்க்கு மரணமும் நேரிடும்.

(53) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகி பன்னிரண் டாம் பாவத்தில் குரு இருந்தாலும், பன்னிரண்டாம் பாவத்தைக் குரு பார்த்தாலும் ஜாதகன் அந்தியத்தில் ஞானமுடையவனாக இருப்பான்.

(54) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஜெனனமாகி லக்கின பாவத்தில் சுபக்ஷேத்திரத்தில் குரு இருந்தாலும், லக்கின பாவத்தைக் குரு பார்த்தாலும் ஜாதகனுக்குப் பெரிய ஆற்றுப் பிராந்திய தேசத்தில் ஜெனனமும், வாசமும் ஜாதக னுக்கு நேரிடும். உத்தராம்சத்தில் காடு சமீப தேசத்தில் சிறிய கிராமத்தில் ஜெனனம் நேரிடும்.

(55) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபன் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவ காலத்தில் பூர்வபாகத்தில் அற்ப பீடையும், உத்தராம்சத்தில் வெகு பீடையும், ஸூதிகாரிஷ்டமும் உண்டாகி சீக்கிரமாக ஆரோக்கி யமும், சௌக்கியமும் உண்டாகும்.

(56) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி குரு லக்கின கேந்திரத்தில் இருந்து லக்கினாதிபதி தன் உச்சராசியில் இருந்தால் ஜாதகன் எல்லா தோஷங்களினின்றும் விலகி சுகமடைவான்.

(57) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி சந்திரனுக்குக் கேந்திரத்தில் சுக்கிரனிருந்து குரு சந்திரனுக்குப் பதினொன்றில் இருந்து செவ்வாயால் குரு பார்க்கப்பட்டு சந்திரன் சிர ஜீவாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் அறுபத்தேழு வயது வரை ஜீவிப்பான்.

(58) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதி சூரியனுடன் கூடி குருவால் சூரியன் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் கொஞ்சமான பாக்கியமுடையவன், தன் பிதா பாலியவயதில் சொற்ப பாக்கியத்துடன் சுகியாயிருப்பவன், மத்தியவயதில் பாக்கியம் சம்பாதிப்பவன், பிராமண மூலம் சுகமுண்டாகும். க்ஷேத்திரமூலம் ஜீவிப்பவன், தன் தகப்பன் சிநேக துரோகமுடையவன், சிநேகத்துரோக மிருந்தாலும், அற்ப வயதில் மரிப்பவன், விஷாக்கியாம்சத்தில் சூரியனிருந்தால் தன் பிதா துரோகபுத்தியுடையவன், மித்திரத் துரோக பாபத்தினால் வழி நடுவில் தகப்பனுக்கு ஆபத்துண்டாகும், கிராமாந்திரத்தில் பிதா மரிப்பான், புத்திரனால் (சம்ஸ்காரம்) கர்மம் செய்யப் பெறாதவன், புத்திரியினால் கர்மம் (உத்தரகிரியைகள்) செய்யப் பெறுபவன், முன் ஜென்மாந்திர பாபத்தால் இப்படி உண்டாகும். ஜாதகனுடைய ஜென்ம தெசையில் மூன்றாம் வருஷத்தில் அல்லது நான்காவது வருஷத்தில் சந்திர லக்கினத்தில் கோட்சாரத்தில் சனி வந்த பிறகு ஜாதகனுடைய பிதா மரணமடைவான்.

(59) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி குருவின் வீட்டில் தனுசு ராசியில் சந்திரனிருந்து சுக்கிரன் தன் உச்சராசியில் மீனத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் வெகு காலம் ஜீவித்திருப்பவள், தாயும் நல்லவள், சாந்தமுள்ளவள், சுத்த பாவ சொரூபமுடையவள், திரவிய சம்பாதனையில் சமர்த்தையானவள், பிரியத்துடன் வாதம் செய்பவளாவாள்.

(60) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி ராகு சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் விதவையாய் துக்கப்படுபவள், புத்திரனுக்குப் பிரியமானதைச் செய்பவள், புத்திரனால் பிறகு தான் ரக்ஷிக்கப்படுபவள், ஜாதகனுடைய ஐந்தாம் தெசையில் தாய் மரணமடைவாள்.

(61) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி சுய க்ஷேத்திரத்தில் செவ்வாயிருந்து லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் சுகமுடையவனு யிருப்பவன், ஒரு சகோதரி வெகு ஆயுளுடையவள், நடுவில் விதவை யாய் விடுவள், மூத்த சகோதரன் புத்திர புத்திரியுடையவன், நல்ல யோகமுடையவன், ஜாதகனுக்கு பின் சகோதரம் கிடையாது, கின்ன ராம்சத்தில் ஜெனித்தவனுக்கு புருஷ சகோதரன் ஒருவனே.

(62) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி தன் உச்சராசியில் இருக்க குரு திரிம்சாம்சத்தில் பிறந்த வன், கருப்புநிறமுடையவன், குணமுடையவன், சமதேகமுடைய வன், தெளிந்த மனதுடையவன், அழகிய முகமும், கண்களும் பொருந்தியவன், அதிரிஷ்டசாலி, மேதாவி, பாலியத்தில் முதலில் தகப்பன் அரிஷ்டம் அடைபவன், தாய் சௌக்கிய முள்ளவன், பிதா விஞல் சம்பாதிக்கப்பட்ட பொருளுடையவன், க்ஷேத்திரமூலம் ஜீவிப் பவன், வியாபாரத்தில் விசேஷ லாபமுடையவன், திரவிய சம்பாதனை யில் சமர்த்தன், தெய்வானுக்கிரக யோகமுள்ளவன், பதினெட்டா வது வயது முதல் யோகமுடையவன், முப்பத்தைந்து வயதுக்கு மேல் நல்ல யோகமுடையவன், பாக்கிய யோகப் பெருக்கானது கிரமமாக உண்டாகும், விஷ்ணு, சிவபக்தியுடையவன், தேவப் பிராம் மண பக்தியுடையவன். இரட்டைப் பெயருடையவன், உண்மையே பேசும் சத்தியவாதி, அளவாய்ப் பேசுபவன், சங்கீதப் பிரியன், காமி, இரண்டு தாரமுடையவன், பரஸ்திரீ சேர்க்கையால் போகமுடைய வன், மறுமனைவியிடம் நல்ல போகமுடையவன், சம்போக காலத்தில் விநோதமானவன், வரவுமேல் வரவுடையவன், விலக்கான நாளில் விலக்கான காலங்களில் கொஞ்சம் ஸ்திரீ சேர்க்கை யுடையவன், அந்திய காலத்தில் சித்த (மனோ) சுத்தியுடையவன், பல தேசங்களி லும், பிரசித்தியை பெறுபவன், அற்ப சந்தான யோகமுடையவன், ஆயுளுள்ள வரையில் பாக்கியவானுயிருப்பான்.

(63) ஜென்ம லக்கினம் துலாம் (காலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 186-24 கலை முதல் பாகை 186-36 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தால் பெரிய ஆற்றுப் பிராந்திய தேசத்தில் பட்டிணத்தில் ஜாதகனுக்கு ஜெனனம் நேரிடும். உத்தராம்சத்தில் பிரந்தவனுக்கு நதி தீரத்தில் குக்கிராமத்தில் ஜெனனம் நேரிடும், பூர்வ பாகத்

தில் பிரசவகாலத்தில் ஜாதகனுடைய தாய்க்கு வேதனை கொஞ்சமாயிருக்கும், குருவினுடைய பார்வை ஷஷ்டி லக்கினத்திற்கிருந்தால் சுகமுண்டாகும். உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவ வேதனை அதிகமாயிருக்கும். பூர்வபாகத்தில் பாலாரிஷ்ட பயமிருந்தாலும் சீக்கிரமாக ஆரோக்கியமும், சுகமும் உண்டாகும், ஜாதகனுடைய தாய், தகப்பனுக்கும், ஜாதகனுக்கும் தேக சுகமுண்டாகும். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குப் பாலாரிஷ்டத்தால் அதிக வதை உண்டாகும், ஜாதகனுடைய ஜென்ம தெசையில் மூன்றும் வருஷத்தில் அல்லது நான்காம் வருஷத்தில் மாந்த சுரம் முதலிய பயத்தால் ஜாதகன் பீடையடைந்து முன் ஜென்மாந்திர புண்ணிய வசத்தாலும் சுபர்களின் பார்வையாலும் ஜாதகன் சுகமடைவான்.

(64) ஜென்ம லக்கினம் துலாம் (காலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதியாவது, குருவாவது பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையவனாவான்.

(65) ஜென்ம லக்கினம் துலாம் (காலாம்சம்) ஆகிப் பிறந்தவனுக்குச் சூரியன் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் தன் பிதா விஷ்ணு பக்தியுடையவன், தேவபிராமண பக்தியுடையவன், எப்பொழுதும் வியாபாரத்தால் ஜீவிப்பவன், அற்ப பாக்கிய முடையவன், அவனுக்கு மத்தியாயுள் என்று எண்ணப்படுகிறது, கொஞ்சகாலம் தான் ஜீவிப்பவனாவன்.

(66) ஜென்ம லக்கினம் துலாம் (காலாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்ச க்ஷேத்திரத்தில் லக்கின பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் வழிப்பாட்டன் பிரசித்தன், லோகத்தில் மேன்மையான தனிகன், ஜாதகன் தாய்வம்சத்தில் சுகமுள்ளவன், ஜாதகனுடைய அம்மான் பிரபலமுடையவன், சுபமுள்ளவன், ஜாதகனுடைய தாய் குணவதி, நல்லவள், கொஞ்சம் ரோகத்துடன் கூடியவள், சகோதரர்களுடன் கூடியவள், விதவையாய்த் துக்கிப்பவளையுடையவனாக ஜாதகனிருப்பான்.

(67) ஜென்ம லக்கினம் துலாம் (காலாம்சம்) ஆகி நான்காம் பாவத்துக்கு ஏழாமிடத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் தாய்வம்சத்தில் விசேஷ சுகமுடையவன், மாதாவின் வம்ச தனத்தை யடைபவன், தகப்பன் சம்பாதித்த பொருளை விட்டு விடுவான்.

(68) ஜென்ம லக்கினம் துலாம் (காலாம்சம்) ஆகி ஜாதகனுடைய அம்மான் ஸ்தானத்திற்குப் புத்திர பாவத்தில் குருவும், சுக்கிர

னும் கூடியிருந்தாலும், குருவும் சுக்கிரனும் கூடி ஷடி புத்திர ஸ்தானத்தைப் பார்த்தாலும், அம்மானுடைய புத்திரர்கள் பாக்கிய வந்தர்களாயிருப்பார்கள்.

(69) ஜென்ம லக்கினம் துலாம் (காலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சௌக்கியம் உண்டாகாது, ஜாதகனுக்குத் தகப்பன் வம்சத்தில் சொற்ப பாக்கியம் உண்டாகும், தகப்பனுடைய மேன்மையால் ஜாதகன் தனத்தையடைவான்.

(70) ஜென்ம லக்கினம் துலாம் (காலாம்சம்) ஆகி ஆறாம் பாவாதிபதி லக்கின பாவாதியுடன் கூடியிருக்கப்பட்ட ஜாதகனுக்கு அம்மானால் சுகமுண்டாகும், மனைவி கருப்பு நிறமுடையவள், விவாகத்துக்குப் பிறகு ஜாதகன் சுகமடைவான், எப்பொழுதும் லக்ஷ்மீ கடாக்ஷ முடையவன், ஜாதகனுடைய மூன்றாம் தெசையில் சுகமடைவான்.

(71) ஜென்ம லக்கினம் துலாம் (காலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி சனி செவ்வாயுடன் கூடியிருந்து அல்லது செவ்வாயால் சனி பார்க்கப்பட்டு புத்திரஸ்தானத்திற்கு ஏழாம் இடத்தில் ராகு இருந்தால் ஜாதகன் புத்திர நாசத்தால் சோகமுடையவன், அந்த தோஷத்துக்குப் பரிகாரமாக ஸேது ஸ்நாநம் முதலியன செய்து, நாக சாந்தியும், துர்க்காதேவி ஜெபமும் செய்தால் புத்திரப்பிராப்தியுண்டாகும்.

(72) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 186-12 கலை முதல் பாகை 186-24 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி சுப க்ஷேத்திரத்தில் லக்கின பாவத்தில் இருந்தால் பெரிய நதிப் பிராந்திய தேசத்தில் அக்கிரகாரத்தில் ஜாதகனுக்கு ஜெனனம் நேரிடும். உத்தராம்சத்தில் நதிதீரத்தில் பட்டிணத்தில் ஜாதகனுடைய ஜெனனம் நேரிடும். ஜாதகன் நான்காவதான கர்ப்பத்தில் பிராமண வம்சத்தில் ஜெனிப்பவன், பூர்வபாகத்துக்கும் உத்தராம்சத்துக்கும் பலாபலன்களில் கொஞ்சம் வித்யாசம் உண்டாகும், பூர்வபாகத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை கொஞ்சமாயிருக்கும். உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்கு விசேஷ வேதனையும், மூன்று தினம் வரையில் பிரசவ வேதனையும் உண்டாகும். கொஞ்சம் பாலாரிஷ்டபயம் உண்டு, ஆயினும் சீக்

கிரமாக ஆரோக்கிய முண்டாகும். ஜாதகன் ஜெனித்த தெசையில் மூன்றும் வருஷத்தில் மாந்த சுரத்தினால் பயமுண்டாகும்.

(73) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம்) ஆகி சந்திரன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் பாலாரிஷ்டத்தால் பீடிக்கப்படுவான், முன்ஜென்மாந்தர புண்ணியத்தால் சுப க்ஷேத்திரத்தில் சந்திரனிருந்து லக்கின பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்தால் சாந்தி செய்தால் பாலாரிஷ்டம் நீங்கி ஜாதகனுக்குச் சுகமுண்டாகும்.

(74) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் சூரியனுடன் கூடியிருக்க ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சுகமுண்டாகும், தன் பிதா விஷ்ணு பக்தியுடையவன், வைதீக ஆசார தர்மமுடையவன், ஆஸ்திகன், உண்மையான தர்ம மறிந்தவன், நல்ல செய்கை, ஆசார முதலியன உடைய அறிவாளி, சுக்கிரனும் ஒன்பதாம் பாவாதிபதியும் சுபாம்சத்தில் சுபருடன் கூடி இருந்தால் ஜாதகனின் தகப்பன் வேதசாஸ்திர புராண மறிந்தவன், எப்பொழுதும் தர்ம சாஸ்திரப் பிரியன், நியாயமாய்ச் சம்பாதிக்கப்பட்ட நல்ல ஜீவனமுடையவன், அற்ப பாக்கியதனத்துடன் கூடினவன். உடன் பிறந்த சகோதாருடன் கூடினவன், மத்திம ஆயுளுடையவனுவான்.

(75) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்திலிருந்து அந்த பாவாதிபதி பத்தாம் பாவத்தில் இருக்க மாதுருகாரகன் சுபராசியில் இருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், சந்திரன், ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் வம்சத்தில் தரித்திரமுண்டாகும், ஜாதகனுடைய தாய் குணமுள்ளவள், சுத்தமானவள், கொஞ்சம் ரோக சரீரமுடையவள், தாய் வம்சத்தில் எப்பொழுதும் சொல்ப சௌக்கியமுள்ள நிலையான தரித்திரமுண்டாகும்.

(76) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி எட்டாம் பாவத்திலிருந்து செவ்வாய் நீசமடைந்திருந்தால் ஜாதகனுக்கு சகோதர சௌக்கிய மில்லை, ஜாதகன் மூத்த சகோதரன் இல்லாதவன், ஜாதகனுக்கு பின் சகோதரம் பிறந்தாலும் மரித்துவிடும், வேறு சிலர் ஒரு சகோதரி தீர்க்காயுளுடையவளாயிருப்பாள் என்று சொல்லுகிறார்கள்.

(77) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம்) ஆகி புதனுடைய அம்சத்தில் லக்கின பாவத்தில் சனியிருந்து லக்கின பாவாதிபதி நீசனுடன் கூடியிருந்தால் ஜாதகன் மனைவியின் (பின்) பிற்காலத்தில் யோகமுடையவனுவான்.

(78) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சர ராசியிலிருந்து ஜாதகனுடைய ஜென்ம நக்ஷத்திராதிபதியும் சர ராசியிலிருந்தால் ஜாதகன் ஜென்ம பூமியை விட்டு வேறு கிராமத்தில் நல்ல பாக்கியத்தை அடைவான்.

(79) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி எந்த நவாம்சத்தில் இருக்கிறனே அந்தராசியின் அம்சத் திரிகோண ஸ்புடராசியை குரு அடையும்போது ஜாதகன் விவாகத்தையடைவான்.

(80) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி நீசராசியிலிருக்க குரு ஆறு, பன்னிரண்டு, எட்டு முதலிய பாவங்களில் இருந்தால் ஜாதகனுக்கு புத்திர சந்தானத்துக்குக் கெடுதலுண்டாகும்.

(81) ஜென்ம லக்கினம் துலாம் (காந்தாம்சம்) ஆகி லக்கின பாவத்துக்கு ஏழில் சனியிருந்து ஏழாம் பாவாதிபதி நீசராசியிலிருந்தால் ஜாதகனுக்குப் புத்திர சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும், முதலில் பெண் பிரஜைகள் பிறக்கும், சாந்தி செய்தால் நல்ல புத்திரன் பிறப்பான். சேதுஸ்நாநம் முதலிய புண்ணிய தீர்த்த ஸ்நாநம் செய்து பாலகிருஷ்ணப் பிரதிமை தானம் செய்தால் அந்திய வயதில் அற்ப புத்திர சந்தான முண்டாகும், கிழவயதில் புத்திரன் பிறப்பான்.

(82) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி எட்டாம் பாவத்தில் ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்து, பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், பத்தாம் பாவாதிபதியால் பார்க்கப் பட்டிருந்தாலும் ஜாதகன் வனப் பிராந்தியத்தில் ஜெனனமானவன். உத்தராம்சத்தில் பிறந்தவன் பெரிய சமுத்திர சமீபத்தில் பிறந்தவனுவான்.

(83) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் சனியிருந்து ஒன்பதாம் பாவத்தில் பதினேராம் பாவாதிபதியிருந்தால் பூர்வபாகத்தில் ஜெனித்த ஜாதகனுக்குத் தாய் அரிஷ்டமடைவாள். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு சூதிகாரிஷ்ட தோஷ

மானது சொல்லப்படுவதில்லை, குரு பார்வை யிருந்தால் பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்குத் தாய் சுகமுடையவளாவாள்.

(84) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் பாபக்கிரகமிருக்க ஜெனித்த ஜாதகனுடைய தகப்பன் ஜாதகன் பிறந்த வருஷத்தில் கொடுக்கல் வாங்கலில் மனக்கிலேசமும், மனஸ்தாபமும் அடைந்து சகோதரக் கிலேசத்தினல் பீடிக்கப்பட்டவனுகவும், பிறகு சுகமடைபவனுகவும், பிதா பாக்கிய யோகமுள்ளவனுகவும், ஜாதகனுடைய ஜென்மதார தெசையில் பிதுரு சௌக்கியமும், தன வரவும், ஜாதகனுக்கு ஜென்ம தெசையில் இரண்டு, மூன்று வாரம் பாலரோகத்தால் பீடையும் உண்டாகும்.

(85) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபன் பதினோராம் பாவாதிபனுடைய அம்சத்தில் எட்டாம் பாவத்தில் ஒன்பதாம் பாவாதிபனுடன் கூடி பத்தாம் பாவாதிபனுடனும் கூடியிருந்தால் இந்திர யோகம் உண்டாகும். இந்திர யோகத்தில் துலா லக்கினத்தில் ஜெனித்த ஜாதகன் சுகி, வெளுப்பான நிறமுடையவன், மெல்லிய தேகி, மகா அறிவாளி, ராஜலக்ஷணத்துடன் கூடினவன், தேஜஸுடையவன், அறிவாளி, சண்டித்தனம் உள்ளவன், கல்வியுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், பாலியத்தில் துஷ்ட சுபாவமுடையவன், எழுதுவதில் சமர்த்தன், ஸ்ரீமான், இருபத்தைந்து வயதுக்குமேல் சுகமுடையவன், தாய் சௌக்கியமில்லாதவன், பிதுரு சுகமுடையவனுவான்.

(86) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி லக்கினத்திலிருந்தால் ஜாதகன் பாக்கியவம்சத்தில் விவாகத்தையடைவன், ஜாதகனுடைய மாமனர் விசேஷ சுகமுடையவனுகி விசேஷ ராஜயோகப் பெருக்குடையவனுவான்.

(87) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி சுக்கிரன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தத்துவ ஞானியாயும், விவேகியாயும் இருப்பான்.

(88) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி ஆறு, ஒன்பது, எட்டு, ஏழு முதலிய பாவங்களில் சூரியன் முதலான கிரகங்களிருந்தால் கேந்திராதியோகம் என்று சொல்லப்படுகிறது, அந்த அதியோகத்தில் பிறந்த ஜாதகன் ஸ்ரீமான், பிரசித்தியுடைய பிரபு, குதிரை, பல்லக்கு முதலான வாகன வைபவங்களுடன் எப்பொழு

தும் வீட்டில் லக்ஷ்மீகரம் உடையவன், நல்ல புத்திரன், மனைவி முதலிய பாக்கிய சரிதமுடையவன், சந்திரனுடைய காந்தியைப் போல் பிரகாசிக்கிற கீர்த்தியுடையவன், பிரபாவமுள்ளவன், சௌரியம் உள்ளவன், சாகஸமுடையவன், (கோபி) ஜாதகன் தேசாந்திரத்திலும் கீர்த்தியுடையவனுவான்.

(89) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி சந்திரனுக்கு எட்டு, பன்னிரண்டு, ஆறு முதலிய விடங்களில் குரு இருந்தால் சகடயோகமென்று சொல்லப்படுகிறது, சகடயோகத்தில் ஜெனித்த ஜாதகன் யோகவானுயும், யோக பங்கமுடையவனுயும் இருப்பான்.

(90) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி சந்திரன் சுபாம்சத்தில் இருந்து குருவும் சுபாம்சத்தில் இருந்து சுபலக்கினத்தில் பிறந்தவனுக்கு சகடயோக மிருந்தால் அந்தச் சகடம் சுப சகடமாக ஆகும். சாம்ராஜ்ப சகடயோகத்தில் துலா லக்கினத்தில் பிறந்தவனுக்கு அற்ப சந்தான யோகமும், தன வரவும், ஒன்று அல்லது இரண்டு, மூன்று புத்திரர்கள் தீர்க்காயுளுடன் இருந்தாலும் ஸ்திரீ பிரஜை தீர்க்கமும், இரண்டு புருஷப் பிள்ளைகள் தீர்க்க ஆயுளுடனும் இருப்பார்கள்.

(91) ஜென்ம லக்கினம் துலாம் (சுமத்யாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் பாபக்கிரக மிருந்தாலும், பன்னிரண்டாம் பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகன் தேகாந்தியத்தில் நரகத்தை அடைவான்.

(92) ஜென்ம லக்கினம் துலாம் (சாங்கரியம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 180-48 கலை முதல் பாகை 181-00 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி சுபக்ஷேத்திரத்தில் சுபருடன் கூடி லக்கின பாவத்திலிருந்து நான்காம் பாவாதிபதியால் நன்ருய் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஆற்றுக்குச் சமீபக் கிராமத்தில் பிறந்தவனுவான். உத்தராம்சத்தில் ஜெனித்தவன் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஜெனித்தவனுவான்.

(93) ஜென்ம லக்கினம் துலாம் (சாங்கரியம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சந்திரனிருந்து பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டிருந்தாலும், பாபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும், ஸூதிகாரிஷ்ட தோஷமானது உண்டாகும். ஜாதகனுடைய ஜென்ம தெசையில் தாய் மரித்து

விடுவாள், தாய் வம்சத்தில் கொஞ்சம் சௌக்கிய முண்டாகும், அம் மான் சுபமுள்ளவனும், பிரபலமுள்ளவனுமாக இருப்பான்.

(94) ஜென்ம லக்கினம் துலாம் (சாங்கரியம்சம்) ஆகி சந்திரன் பாபாம்சத்தில் பாபராசியில் இருந்து பாபக்கிரகங்களுடன் கூடியிருந் தாலும், பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தாயினல் சௌக்கியமில்லாதவன், கொஞ்சம் பிதுரு சௌக்கியமுடையவஞ வான்.

(95) ஜென்ம லக்கினம் துலாம் (சாங்கரியம்சம்) ஆகி ஒன்ப தாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் லக்கினுதிபதியுடன் கூடியிருந் தால் ஜாதகனுடைய தகப்பன் மத்தியாயுள் யோகமுடையவன், சகோதரர்களுடன் கூடியவன், விஷ்ணு, சிவபக்தியுடையவன், பாக் கியவம்சத்தில் பிறந்தவன், பிதுரார்ஜித தனமுடையவன், சூரியன் சனியால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய சம்பத் தெசையில் தகப்பன் மரிப்பான்.

(96) ஜென்ம லக்கினம் துலாம் (சாங்கரியம்சம்) ஆகி மூன்ரும் பாவாதிபதி எட்டாம் பாவத்தில் பாபருடன் கூடிய சந்திர கேந்திர, கேந்திரத் திரிகோணங்களிலிருக்க விருச்சிகாம்சத்தில் பதினேராம் பாவத்தில் செவ்வாயுமிருந்தால் ஜாதகன் சகோதர க்ஷீனனுவன்.

(97) ஜென்ம லக்கினம் துலாம் (சாங்கரியம்சம்) ஆகி சந்திர னுக்குச் சந்திரன் இருக்கும் ராசியை தவிர்த்த மற்ற கேந்திரத்தில் குரு இருந்தால் ஜாதகன் மாற்ருந் தாய் பிள்ளைகளுடன் கூடினவன், மேற்படி சகோதர்களால் கொஞ்சம் சுகமுடையவன், ஜாதகன் தன் னுடைய ஸம்பத் தெசையில் விவாகத்தையடைவான், இரண்டு பேத சகோதரர்களில் எவனுவது ஒருவன் இரண்டு தாரமடைபவன், குரு குடிலாம்சத்திலிருந்தால் கலஹம் செய்பவர்களும் பாபத்தொழிலுடை யவர்களுமான மேற்படி பேத சகோதரர்களில் ஒருவன் முன்ஜென் மாந்தர பாபத்தால் புத்திரப் பேறில்லாதவன் ஆவன், மற்ற ஒருவன் எப்பொழுதும் கலஹமும் (சண்டை), சிநேக துரோகம் செய்பவனுக வும், அவமானத்தை அடைவதால் பாப கெட்ட புத்தியுடையவனுக வும், பிசுநியாகவும், கலஹப் பிரியனுகவே சண்டையிலே பிரீதியுடைய வனுகவும், சேர்த்து வைக்கப்பட்ட தனத்தை அழித்துவிட்டு கடை சியில் தரித்திரத்தை அடையப்பட்ட சகோதரனை யுடையவனுக ஜாத கனுவான்.

(98) ஜென்ம லக்கினம் துலாம் (சாங்கரியம்சம்) ஆகி சுக்கிரன் வர்க்கோத்தமாம்சத்தில் இருக்கப் பிறந்த ஜாதகன் ரூபமுடையவன், புகழுடையவன், வசியமுடையவன், அழகிய முகமும், கண்களும் பொருந்தியவன், நல்ல செய்கை, ஆசாரம் முதலியன உடையவன், தர்ம புத்தியுடன் உதார புத்தியுடையவன், சாத்துவீகன், குணம் நிறைந்தவன், நியாய வழியில் சம்பாதித்த ஜீவனமுடையவன், பித்த சுபாவ தேகி, மெதுவாய்ப் பேசுபவன், குருவுக்குப் பிரியமானவன். பரோபகார முடையவன், தர்மாத்துமா, கல்வி, சௌக்கியத்துடன் கூடியவன், ஜென்மாந்தர பாபத்தினால் புத்திரக் கிலேசத்தினால் பீடிக் கப்பட்டுத் துக்கியாவான்.

(99) ஜென்ம லக்கினம் துலாம் (சாங்கரியம்சம்) ஆகிக் குரு மிருத புத்திராம்சத்திலிருந்தால் ஜாதகனுக்குக் குழந்தைகள் பிறந்து பிறந்து மரிக்கும், வேறு மனைவியிடம் ஜாதகன் சந்தானம் அடைவான், அல்லது முதல் மனைவியினிடமே அந்திய காலத்தில் அற்ப சந்தான மடைவான், ஒரு புத்திரி வெகு ஆயுளுடையவளாயிருப்பாள்.

(100) ஜென்ம லக்கினம் துலாம் (சாங்கரியம்சம்) ஆகி பன்னி ரண்டாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்து விரைய பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் தேகாந்தியத்தில் நற்கதி யடைந்து மறு ஜென்மம் உத்தமமானதாக அடைவான்.

(101) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி சூரி யன் குருவுடன் கூடி சுயக்ஷேத்திர, உச்ச நவாம்சத்திலிருந்தாலும் அன்றி, ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி லக்கி னாதிபனான சுக்கிரன் நாலில் இருந்தாலும் ஜாதகன் அரசனுக்குச் சம மான யோக முடையவன்.

(102) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி மீனத் தில் புதன் குஜனுடன் கூடி இருந்து லக்கினத்தில் சனி உச்சமாகி இருந்தால் ஜாதகன் கொஞ்சம் பலமுள்ள சரீரமும், வாயு பீடையு முடையவனுமாவான், சீக்கிரம் புசிப்பான், நடுத்தர தேகமுடையவனு வான், அழகன், அற்ப நித்திரையுடையவன், சந்தோஷத்துடன் சீதோஷ்ணங்களைச் சகிப்பான், தேவப் பிராமணர் பக்தியுடையவனு வான், தேவகாரியம் செய்வதில் ஊக்கமுள்ளவன், சிவபூஜா விசேஷங் களை அறிந்து விஷ்ணு பக்தி செய்வான், சத்துருக்களின் தந்திர மறிந்தவன், சமர்த்தன், பல பாஷைகளில் வல்லவன்.

(103) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி குரு புதனுடன் கூடி இருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி குரு சிம்மாம்சத்தில் ராகுவுடன் இருந்தாலும் ஜாதகன் காவியங்கள், நாடகங்கள் இவைகளின் ரசமறிந்தவனுவான். வேத சாஸ்திர புராணமறிந்தவன், ஸமஸ்கிருதத்தைப் பிரியமாய் சொல்லுபவன், நீச்ச வித்தையில் தேர்ந்தவன், எழுத்து எழுதுவதில் விசேஷமா யறிந்தவன், தயாள குணமுடையவன், அரசனுகவாவது அல்லது அரசர்க்குச் சமானமாகவாவது இருப்பான்.

(104) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி ஜென்மத்துக்கு நாலில் ராகு இருந்தால் ஜாதகன் சில சமயம் தந்தவாயுவு உள்ளவனுயும், கர்ன சூலே, கொஞ்சம் கஷ்டமான வாயு பீடையுடையவனுவான்.

(105) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி ஜென்மத்துக்கு மூன்றில் மாந்தி என்னப்பட்ட குளிகன் இருந்தால் ஜாதகன் விரை வாதமுள்ளவனுவான், கொஞ்சம் பருத்த பீஜமுடையவனுயும் சில சமயம் வற்றுச் சூலேயாலும் வருந்துவன்.

(106) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி மூன்றுமதிபனுன குரு சூரியனுடன் கூடி இருந்து மூன்றுமிடம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மூத்த சகோதர மற்றவனும், இளைய சகோதரம் குறைந்தவனுமாவான், ஐந்து அல்லது ஆறு சகோதரர்கள் உண்டாகி இருவர் அல்லது மூவர் நாசமுறுவர், இவன் ஒருவனே தாய்க்குப் புத்திரனுக இருப்பன், பெண் சகோதரம் அதிகமாக உண்டு.

(107) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி நாலாமதிபனுன சனி உச்ச, ஸ்வக்ஷேத்திரத்தில் இருந்து ரிஷபாம்சத்தில் சந்திரனுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய தாய் குணவதி, புண்ணிய முடையவளுமாவாள், புத்திரன், புத்திரிகளுடன் கூடியவளும், பர்த்தாவிடம் பக்தியுடையவளும், பதிவிருதையும், தன் தகப்பனுக்குப் பிரியமானவளும், தேவப் பிராமண பூஜையில் பக்தியுடையவளும், புண்ணியமுடையவளுமாவாள். முதலில் தகப்பன் மரணமும், பின்னல் தாயின் மரணமும் நேரிடும்.

(108) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி ஐந்தாமதிபனுன சனி துலாத்தில் ரிஷப நவாம்சத்திலிருந்து கும்பத் திரிகோ

ணத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்கு முதலில் பெண் சந்ததியுண்டாகும், புருஷப் பிரஜை சுவல்பம், பெண் சந்ததி இரண்டு அல்லது மூன்று உண்டாகும், சாந்தி தானம் இதுகளால் புத்திரன் உண்டாகும், இருபத்திரண்டு அல்லது இருபத்துமூன்ருவது வயதில் பெண் பிறக்கும், ஜாதகன் இனிப்பான வஸ்துக்களில் பிரியனும், பித்தவாயு நோயுடையவனும், சத்துருக்களை யழிப்பவனும், பீனிச ரோகமுடையவனும், சில சமயம் மூத்திர கிருச்சின ரோகமுடையவனுமாவான்.

(109) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி எழாமதிபனான குஜனும், லக்கினாதிபனான சுக்கிரனும் உச்ச, சுயக்ஷேத்திரத்திலிருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி லக்கினத்தில் குரு இருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி சுக்கிரன் சிம்மாஸனாம்சத்திலிருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி குஜன் கோபுராம்சத்திலிருந்தாலும் ஜாதகன் அனேக பெண்களுக்கு நாயகனாவான், மூன்று மனைவியருடன் கூடியவனாவான், தன் மூத்த சகோதரியின் பெண்ணை மணப்பான், மனையாள் குணமுள்ளவள், பர்த்தாவிடம் பக்தியுடையவள், கொஞ்சம் வாத சரீரமும், பருத்த சரீரமுடையவளாயும், அழகிய கண்களுடையவளாயும், பொன்னிற மேனியாளும், இனிமையாய்ப் பேசுபவளாயும் இருப்பாள், மற்ற இருவரும் எல்லா லக்ஷணங்களும் பொருந்தியவர்களாக இருப்பார்கள்.

(110) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி ஒன்பதாமதிபனான புதன் நீச்சனாய் உச்சாம்சத்திலிருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி பிதுர்காரகனான சூரியன் குருவுடன் கூடியாவது இருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி பிதா காரகனான சூரியன் உச்சாம்சத்தில் பலவானாயிருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி சூரியன் சிம்மாஸனாம்சத்திலிருந்தாலும் ஜாதகனுடைய பிதா அரசன் அல்லது அரசனுக்குச் சமமான பூமிக்கு நாயகனாவான்; தகப்பன் பாட்டன் முதல் பரம்பரையாய் வந்த பூமியைக் கிரமப்படி அனுபவிப்பான்.

(111) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி மாதுர்காரகனான சந்திரன் லக்கினத்துக்கு எட்டில் பாபருடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய தாய்க்கும், ஜாதகனுக்கும் விரோதம் நேரும், சில

சமயம் சினேகமாயிருப்பர், கோபத்தால் இவனுடைய தாய் இவனிருக்கும் ஊரைவிட்டுப்போய் சண்டையால் தனியாக வசிப்பாள்.

(112) ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 186-00 கலை முதல் பாகை 186-12 கலை வரையில்) ஆகி லக்கினத்தில் கேதுவும், பத்தில் சனியுமிருந்தால் ஜாதகன் சமாதியோகத்தால் சுத்தமான சரீரமுடையவனுவான், சம்சாரத்தில் விரக்தியுடையவனுவான், பரப்பிரம்மத்தியான முடையவனுயும் புண்ணியம் செய்பவனுயும் இருப்பான்.

(113) ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம்) ஆகி லக்கினுதிபனுன சுக்கிரன் பன்னிரண்டில் நீச்சனுய் இருந்து சனி, சந்திரரால் பார்க்கப்பட்டாலும் அன்றி, ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம்) ஆகி லக்கினத்தில் கேது, சூரியன், செவ்வாய் இருந்து குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் அழகுடையவன், புத்தியுடையவன், வாசாலகன், தெளிந்த முகமுங் கண்களுமுடையவன், அதிரிஷ்டமுள்ளவன், தர்மவான், கருநிறமுடையவன், அழகிய தேகமுடையவன், சாத்துவீக குணமுள்ளவன், தயையுடையவன், மிருதுவான சொல்லுடையவன், விஷ்ணு பக்தி செய்யும் குலத்துதித்தவன், தேவப்பிராமண பக்தன், ஜெனிக்கும்போது கொடி சுற்றிப் பிறந்தவனுவான், வாலிபத்திலே அனேக நோயுடையவனுவான், மகாதானம் செய்வான், மானமுடையவன், பிரபுக்களுக்குள்ள லக்ஷணம் பொருந்தியவனுவான்.

(114) ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம்) ஆகி இரண்டாமதிபனுன செவ்வாய், சூரியனுடன் கூடி இருந்து குரு, ராகு இவர்களால் பார்க்கப்பட்டாலும் அன்றி, ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம்) ஆகி இரண்டில் புதனிருந்தாலும் ஜாதகன் வேதாந்த ஞானமுடையவன், நீச்சவித்தையில் தேர்ந்தவன், ஜோதிஷ சாஸ்திரமறிந்தவன், ஸம்ஸ்கிருதம் பிரியமாய் பேசுபவன், மூன்றெழுத்துக்கள் நன்ருக அறிந்தவன், பலபாஷைகளின் விசேஷமறிந்தவன், முக்கியமாய்ச் சாதுர்யமான யுக்தியுடையவன், யுக்தாயுக்த விசேஷமறிந்தவன், பல தேசங்களில் பிரசித்தியுடையவன், சீக்கிரமாய் புசிப்பவன், சீக்கிரம் போகமுடையவன், சில சமயம் தந்தவாயு பீடையுடையவன், சிலசமயம் பல் விளக்கும்போது பல்லில் ரத்தப் பெருக்குண்டாகும், சில சமயங்களில் இடது கண் காதுகளில் பீடையுண்டாகும்.

(115) ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம்) ஆகி மூன்றுமதிபனுன குரு ஒன்பதில் இருந்தோ அன்றி ஒன்பதாமதிபனைப் பார்த்தோ இருப்பதுடன் பிராதா காரகனுன செவ்வாய், சூரியன், கேது இவர்களுடன் கூடினுல் ஜாதகனுக்கு மூத்த சகோதரனில்லை, ஒரு இளைய சகோதரனுண்டு, இரண்டு அல்லது மூன்று சகோதரிகள் உண்டு.

(116) ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம்) ஆகி நாலாமதிபனுன சனி பத்திலிருந்து மாதாகாரகனுன சந்திரன் மீனத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவளாயும், புண்ணியவதியாயும், பதிவிருதையாயுமிருப்பள்.

(117) ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம்) ஆகி நாலாமதிபனுன சனி பலவானுயிருந்து வாகன காரகனுன சுக்கிரன் துர்ப்பலனுய் பன்னிரண்டிலிருந்தால் ஜாதகன் சிலகாலம் துரபிமானியாயும், சில சமயம் நிலையற்ற வாகனமுடையவனுயும், வீடு, பூமி, சந்தோஷம் இதுகள் கொஞ்சமாக உடையவனுகவும், பிதுரார்ஜித மற்றவனுயும், உத்தியோகத்தில் ஜீவனம் செய்பவனுயும், தன் கையால் சம்பாதித்த பொருளுடையவனுயும், சமுத்திரத்தின் அருகிலுள்ள நகரில் நித்திய வாசம் செய்பவனுயும், நீச்சப்பிரபுவால் சுகமுடையவனுயும், எழுத்து வித்தையில் ஜீவனம் செய்பவனுயுமிருப்பன், சில இடத்தில் வியாபாரத்தால் பாக்கியமும், அதிக சிரமத்தால் தனவானுமாவான்.

(118) ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாமதிபனுன சனி கடகத்தில் இருந்து புத்திரகாரகனுன குரு மிதுனத்தில் கும்பாம்சத்திலிருந்து புத, சூரியர்களால் பார்க்கப்பட்டாலும், அன்றி ஜென்ம லக்கினம் துலாம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாமதிபனுன சனி தனுசிலிருந்து புத்திரகாரகனுன குரு மிதுனத்தில் கும்பாம்சத்திலிருந்து புத, சூரியர்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் புத்திரனற்றவனுய் தத்துபுத்திரனுல் சந்ததியுற்பத்தி செய்வான். பிள்ளை பிறந்தாலும் மரிக்கும், ஸ்திரீப் பிரஜை தீர்க்காயுளுடனிருக்கும், ஏகாதசியில் கோதானம் செய்து அரசமரப் பிரதிஷ்டை செய்து சந்தான கோபாலப் பிரதிமை தானம் செய்தாலும், சிம்சுமார தானம் செய்தாலும் புத்திரனுண்டாவான். அதுவும் காலாந்தரத்தில் உண்டாகும், வேறு மனைவியிடமாவது உண்டாகும், இரு பெண், இரு புத்திரர் நிலைக்கும்.

முதுமைக் காலத்தில் பிரபலமான உத்தியோக அதிரிஷ்ட முடைய வனுமாவான்.

(128) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகி ஏழாமதிபனை செவ்வாய் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குப் பால்யத்திலேயே விவாகம் நடக்கும், மனையாள் ஒரு கண்தான் பார்வையுள்ளவள், காலயோகத்தால் அம்மை ஜுர தோஷத்தால் ஒரு கண் பார்வைபோகும், மனைவி புண்ணிய சீலையாயும், பர்த்தாவிடம் பக்தியுடையவளாயும், நற்செய்கை யுடையவளாயும், மிருதுவான வார்த்தைகளுடையவளாயும், புத்திரி, புத்திரர்களுடன் கூடியவளாயும், அவர்களுடன் வெகுகாலம் சுகபோக மனுபவிப்பவளாயுமிருப்பாள்.

(129) ஜென்ம லக்கினம் துலாம் (சுதாம்சம்) ஆகி ஐந்தாமதிபனை சனி ஒன்பதிலிருந்து குரு பலத்துடனிருக்கக் கூடியிருந்தால் ஜாதகன் பால்யத்திலேயே நல்ல புத்திரனுடையவனுயுமாவான், அனேக தன, பூமியுடையவனுவான், சத்புத்திரன் பிறந்த பின் யோக முடையவனுயும், வெகு பாக்கியமுடையவனுமாவான், எட்டு புத்திரர்களுடனும், ஐந்து பெண்களுடனும் கூடியவனுவான், மக்கள் வளர் பிறைச் சந்திரன் போல் வளர்வர்.

(130) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 181-48 கலை முதல் பாகை 182-00 கலை வரையில்) ஆகி லக்கினுதிபன் மேஷத்திலிருந்து இரண்டில் குஜன் சூரியனுல் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் சிவந்த தேகமுடையவன், தெளிவான சொல்லுடையவன், தன் விருப்பப்படி நடப்பவன், கண்டிதமான வாக்குடையவன், தைரியமுடையவன், கபடமாய் தன் சொல்லால் அரசர்களையும் மயங்கச் செய்வான்.

(131) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி இரண்டாமதிபனுன குஜன் இரண்டில் சுவக்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் வாசாலகன், சாதுர்ய யுக்தியுடையவன், ஸமஸ்கிருதம், நீச்ச வித்தை முதலிய ஐந்து பாஷைகளில் சமர்த்தனுவான், பலபாஷைகளையும் மந்திரங்களையும் அறிந்தவன், தேவி, சுப்பிரமண்ணியம் இவர்களின் பக்தனுயினும் விஷ்ணுவிடம் விசேஷ பக்தியுடையவன், பல்லில் ரத்தப் பெருக்கும், கண்களில் சூடும் உடையவனுவான், பதினுயிரத்துக்கும் அதிகமான தனமுடையவன், பிரபலமான உத்தியோக பாக்கிய முடையவன், குதிரை ஏறுவதில் சமர்த்தன், அனேக பணியாளருடனும் ,பொருளுடனும் கூடியவனுவான்.

(132) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி மூன்றுமதி பன் தனுசு ராசியிலாவது அல்லது கும்பத்திலாவது இருந்து சகோதர காரகனுன செவ்வாய் சுயக்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகனுக்கு ஒரு மூத்த சகோதரனும், ஒரு இளைய சகோதரனும் கஷ்டத்தினுல் உண்டாவர், இரு சகோதரிகளும் அதிகக் கஷ்டத்தினுல் உண்டாவர், வேறு கிரந்தத்தில் இளையோர் கிடையாதென்கின்றனர்.

(133) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி நாலாமதிப னுன சனி ராகுவுடன் கூடி சூரியனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் தினந்தோறும் கோபமுடையவளாவாள், தூர்க்குணமுடையவள், பர்த்தாவை விரோதிப்பாள், கெடுபுத்தியால் மரிக்க விரும்புவாள், மூட புத்தியை யுடையவளாய் துக்கமடைவாள், இவனுடைய மாதாவின் சகோதரி ஒருத்தி பால்யத்திலேயே விதவையாவாள்.

(134) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி ஐந்தாமதிப னுன சனி ராகுவுடன் கூடி புதன், சூரியன், கேதுக்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு முதலில் பெண் ஜெனனமும், புருஷப் பிரஜைக்குத் தடையுமுண்டாகும், இரண்டு அல்லது மூன்று பெண்கள் உண்டாகும். புருஷ சந்ததிகிடையாது, முன்னுல் சர்ப்பதோஷத்தால் இச்ஜென்மத்தில் இவ்விதம் நேருமாதலால் நாகவிரதமிருந்து நாகப் பிரார்த்தனை செய்தல், ஸேதுஸ்நானம் செய்து, அரசமரப் பிரதக்ஷிணம் செய்தல் முதலான சாந்தியாதிகளால் காலாந்தரத்தில் புத்திரன் உண்டாகும், ஒரு புத்திரன், இரண்டு பெண்கள் உண்டாகும், சிலர் வேறு மனைவியிடம் புத்திரன் உண்டென்று உரைக்கின்றனர்.

(135) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி ஏழாமதிப னுன குஜன் சுயக்ஷேத்திரத்திலிருந்து ஏழில் சுக்கிரனிருந்தால் ஜாதகனுக்குச் சிவந்த நிறமுடைய மனையாள் வாய்ப்பாள், அனேக ஸ்திரீகளுக்கு நாதனுவான், தாசி சங்கமமுண்டு.

(136) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி சுக்கிரன் ஜென்மத்துக்கு ஏழில் இருந்தால் ஜாதகன் பல ஜாதி ஸ்திரீகளை அனுபவிப்பான், மூலரோகம், வெள்ளை, மேகப் பெருக்கு, மூத்திர கிருச்னம், விரையில் பாதை, ரத்த நோய், தாப சுரம் இவைகள் சில காலங்களில் வரும், வயிற்று நோய் முதலிய கஷ்டங்களும் வந்து உடனே தீரும்.

(137) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி ஒன்பதாமதிபனான புதன் சுயக்ஷேத்திரத்திலிருந்து புதனும், பிதுர்காரகனான சூரியனும் கூடி நாசராசியாகிய எட்டாம் ராசியிலிருந்தால் ஜாதகனுடைய பிதா யோகமுடையவனுவான், சாது, பலபாஷைகள், கலைகள், அர்த்தசாஸ்திரங்கள் இதுகள் அறிந்தவனுவான், நீச்ச பூபாலனருகில் யோகமுடையவனாய் வெகுமானிக்கப்பட்டிருப்பான், அனேக அரசர் தயையுடையவனுவான், அனேக தேசங்களில் புகழுடையவன், தகப்பனுக்கு மூத்த சகோதரி ஒருத்தி பாலியத்திலேயே விதவையாய் அற்பாயுளாய் மரிப்பாள், ஜாதகனுடைய பிதாவுக்கு மாற்றுந்தாய் வயிற்றில் பிறந்த பின் சகோதரமுண்டு, ஜாதகனுடைய மாற்றுந்தாயின் பொருளுடனுடன் சகோதரன் மனையாளின் பொருளுடனும், சகோதரன் மனைவியுடனும் கூடியவனுவான், உத்தியோக மூலம் இவன் பிதா தனவானுவான், வித்தை பிரபலமாகவுடையவனுவான், அரசர்களிடம் வித்தியாதனத்தால் பிரபலமான உத்தியோகமுடையவனுவான், பாக்கியமுடையவனுவான், மந்திரசாஸ்திரங்களை நன்கறிந்தவனுவான், தேவி பூஜையில் பற்றுடையவனும், பசியையும், இந்திரியங்களையும் அடைக்கியவனுவான்.

(138) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம்) ஆகி பத்தாமதிபனான சந்திரன் பாக்கிய ஸ்தானமாகிய மிதுனத்தில் புதனுடன் கூடி இருந்து சனி, குஜன், ராகு, குரு இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நற்செய்கை, ஆசாரமுடையவன், வாசாலகன், ஜபம், தியானம், சமாதி முதலான யோகமுடையவன், நல்ல புண்ணியம் செய்தவன், அனேக சேனையுடன் கூடி அரசன் அருகில் தண்ட நாயகனுயிருப்பன், வேலைக்காரர்களுடன் கூடியவனாய் பசு, தானியம், நிறையவுடையவனுய்ப் பிதுர் பாக்கியத்துடன் கூடியவன், பெருந்தன்மையுடையவன், தான் சம்பாதித்த பூஸ்திதி, வீடுடையவன், தேவாயம் முதலியன கட்டுபவன், புகழுடையவன், அதிக சம்பத்துடையவன்.

(139) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 199-36 கலை முதல் பாகை 199-48 கலை வரையில்) ஆகி மூன்றுமதிபனான குரு ஜென்மத்துக்கு எட்டில் இருந்தாலும் அன்றி, ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி மூன்றுமதிபனான குரு திரிகோணத்திலிருந்தாலும், ஜாதகனுக்கு இரண்டு சகோதரர் அழிவார்கள்.

(140) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி சனி, சூரியன், ராகு இவர்கள் ஒன்ருய்க் கூடி ஒரு ராசியிலிருந்து அந்த ராசிநாதன் புத்திரஸ்தானமாகிய ஐந்தாம் ஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்கு பாலாரிஷ்ட யோகமுண்டு.

(141) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி ஜென்ம லக்கினுதிபனுன சுக்கிரன் ஒன்பதில் இருந்தால் ஜாதகனுக்கு பாலாரிஷ்ட நிவாரண முண்டு.

(142) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி பத்தாமதிபனுன சந்திரன் பன்னிரண்டிலிருந்தால் ஜாதகனுக்குச் சகோதானுல் சுகமுண்டு, இவன் பிதா அதியோகமுடையவனுவான், தடாகம் முதலிய தர்மகாரியம் செய்வான், இஷ்டர் தோழர்களிடம் அன்புள்ளவன், மூன்றெழுத்தில் சமர்த்தன், எழுத்து வித்தையில் சமர்த்தன், காமீ, தேவாலயம் பரிபாலனம் செய்வான்.

(143) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி ஐந்தாமதிபனுன சனி புதனுடன் கூடி இருப்பதுடன், குருவுடன் சேர்ந்தாவது அல்லது பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகனுடைய பிதா தீர்க்காயுளுள்ளவனுயிருப்பன், இரு சிற்றப்பன்மாரும் கருநிறமுள்ளவாாவார், பாட்டி தீர்க்காயுளுடையவாாவாள், பிதா அரிஷ்டத்துக்குப் பிறகு பாக்கியமும், மாதா அரிஷ்டத்துக்குப் பிறகு சுகமும் ஜாதகனுக்கு உண்டாகும்.

(144) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி ஏழாமதிபனுன குஜன் ஐந்திலிருந்தால் ஜாதகனுக்கு இரண்டு அல்லது மூன்று தடவை விவாகத்தடை ஏற்பட்டு காலாந்தாத்தில் விவாகம் நடக்கும்.

(145) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி ஐந்தாமதிபனுன சனி இரண்டினிலிருந்தால் ஜாதகனுக்கு மூன்று புத்திரரும், மூன்று புத்திரிகளுமுண்டாகும்.

(146) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி பதிேனோமதிபனுன சூரியன் புதனுடன் கூடினுல் ஜாதகனுக்கு ரத்தினம், தானியம், வஸ்திரம் முதலிய பலவித வியாபாரத்திஞல் விருத்தியுண்டு, பிராமணர் மூலம் சம்பத்து சேரும், தகப்பன் ஞானவான், சுகமுடையவன், ராஜத்துவாரத்தில் பிரசித்தியுடையவன், சத்கர்மம், ஆசாரமுடையவனுவான், சத்களத்திர முடையவன்.

(147) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி மாதுலாதிபனான சனியும், மாதுலகாரகனான புதனும் மகரத்தில் சூரியனுடன் கூடினால் ஜாதகனுடைய அம்மான் க்ஷயரோகத்தால் வருந்துவான்.

(148) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி நாலாமதிபனான சனி விருஷப அம்சத்திலிருந்து லக்கினாதிபனான சுக்கிரனுடன் கூடினால் ஜாதகனுடைய தாய் வம்சத்தில் க்ஷயரோகமுண்டு, இரண்டு அம்மான்கள் நாசமுறுவர்.

(149) ஜென்ம லக்கினம் துலாம் (நிவிருத்தியாம்சம்) ஆகி ஏழாமதிபனான செவ்வாய் சூரியனுடன் கூடி ஏழில் சந்திரனிருந்தால் ஜாதகனுக்கு இருமனைவியருண்டு, சிலர் மூன்று மனைவியர் என்று சொல்கின்றனர், மூவாயிரம் தனமுடையவன், பதினாயிரத்துக்கு அதிக தனமுடையோன், பிரபு லக்ஷணமுடையவன்.

(150) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி சூரியன் கும்பத்தில் குருவுடன் இருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி சூரியன் உச்ச சுவக்ஷேத்திரத்திலிருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி லக்கினாதிபனான சுக்கிரன் நாலில் இருந்தாலும், ஜாதகன் அரசனாகவாவது, அல்லது அரசனுக்குச் சமமானவனாகவாவது இருப்பன்.

(151) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி புதன் குஜனுடன் கூடி மீனத்திலிருந்தாலும், ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மிகாம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்தில் சனி உச்சனாயிருந்தால் ஜாதகன் கொஞ்சம் பருத்த சரீரமுடையவனாயும், வாயுபீடையுள்ள தேகமுடையவனாயும் இருப்பான், சீக்கிரம் புசிப்பவனாயும், அற்ப நித்திரையுடையவனாயும், சந்தோஷத்துடன் சீதோஷ்ணத்தைப் பொறுப்பவனுமாவான்.

(152) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 193-48 கலை முதல் பாகை 194-00 கலை வரையில்) ஆகி தனபாவமாகிய இரண்டாம் பாவத்தில் மகராம்சத்தில் சந்திரன் நீச்சனாய் ராகுவுடன் கூடி இருந்து லக்கினாதிபன் சனியுடன் கூடி இருந்தால் ஜாதகன் காட்டுப் பிராந்தியத்தில் பிறந்தவனாவான்.

(153) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி சந்திரன் இரண்டாம் பாவத்தில் ராகுவுடன் கூடி இருந்து அந்த இரண்டாம்

பாவாதிபன் ஒன்பதாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்குச் சந்திராரிஷ்டதோஷமுண்டு, இதற்குச் சாந்தியாக வெள்ளியால் சந்திரன் செய்து பூஜை செய்யவும், பொன்னுல் செய்த நாகதானம் முதலானவைகள் செய்தால் மனைவி அரிஷ்டமில்லை, இந்த தோஷம் முன்பாகத்தில் ஜெனித்தவர்க்கில்லை. உத்தராம்சத்தில் ஜெனித்தவர்க்கு மூன்று மாதம் அதிக தோஷமும், பூர்வபாகத்தில் கொஞ்சம் தோஷமும், சாந்தியாதிகளால் சாந்தியுமாகும்.

(154) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி மேஷத்தில் மேஷாம்சத்தில் குரு இருந்தால் ஜாதகன் தனவான், சுகமுடையவன், புத்திமான், இவன் தந்தை சிவபக்தன், தேவப்பிராமண பக்தியுடையவன், காலந்திரத்தில் தாய் சோகமடைவான், அவள் புத்திரத்துவேஷமுடையவள், செல்வப் பெருக்குடையவள், ஆசையுடையவள், தர்மம், புண்ணியம் புராணமறிந்தவள்.

(155) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் முன்பாகம்) ஆகி மேஷத்தில் மேஷாம்சத்தில் குரு இருந்தால் ஜாதகன் தர்மமூலமாக அதிக சௌக்கிய முடையவன், பிதாமகன் பாக்கியம் கிடைக்கும், தாயாதி வர்க்கத்துடன் கூடியவன், குளம், தோட்டம் முதலிய தர்மம் செய்பவன், வைதீகாசார முடையவன்.

(156) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினத்திலிருந்து பாக்கிய பாவமாகிய ஒன்பதாம் பாவத்தில் குஜனிருந்தால் ஜாதகன் கபடமுடையவன், இவன் தந்தை கோபமுடையவன், சகோதர விரோதமுடையவன், கொஞ்சகாலம் சுதந்திரமில்லாதிருந்து பின்னுல் சுதந்திரமடைவான், வாலிபத்திலே துஷ்ட சுபாவமுடையவன், அயல் பெண்கள் போகமுடையவன், சிலகாலம் திருடும் குணமுடையவன், யௌவனத்தில் கிரந்திரோகமுடையவனுய் பின்னுல் தவிப்பான், சிவலிங்க பூஜை செய்பவன்.

(157) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் முன்பாகம்) ஆகி லக்கினத்திற்கு பாக்கிய பாவமாகிய ஒன்பதாம் பாவத்தில் குஜனிருந்தால் ஜாதகனுக்கு நடுவயதில் அதிக சுகமுண்டு, தர்மகாரியத்தில் எப்போதும் விருப்பமுடையவன், தாயாதி வர்க்க விரோதமுண்டு, முதுமைப்பருவத்தில் புத்திரன் மூலம் அதிக பாக்கியவிருத்தி உண்டு, சுகவான், ஜாதகனுடைய தகப்பனுக்கு பத்து அல்லது பன்னிரண்டு சகோதரர்களுண்டு, ஒரு சகோதரனுடன் மாத்திரம் கூடி சுகமாயிருப்

ஜாதகனுக்கு இரண்டு சிற்றப்பன்மார்கள், புத்திரனுடையவர்கள். ஜாதகனுடைய சிற்றப்பன் ஒருவன் புத்திரனில்லாதவன், முன் பிதுர் தோஷத்தால் பெரிய நோயால் வருந்துவான், சிற்றப்பனுக்கும் இரண்டு தாரமுண்டு, தத்து புத்திரனுடன் கூடியவன், பிதாவின் சகோதரி ஒருத்தி சுகமுடையவளாவாள், அவனுக்குப் புத்திருண்டு, சுமங்கலியாயிருப்பள், ஒரு தகப்பன் சகோதரியின் மகன் மாற்ருந் தாய் யோகமுடையவனுவான், வெகு பாக்கியம், செல்வம் இவைகள் நிரம்பியவன், பேதப் பிராதாவின் அதாவது மாற்ருந்தாய் மகனது விரோதம் இவனுக்குண்டு.

(158) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கினத்திற்குப் பாக்கிய பாவமாகிய ஒன்பதாம் பாவத்தில் செவ்வாய் இருந்தால் ஜாதகனுடைய பிதாவின் சகோதரியின் புத்திரன் ராஜயோகமுடையவன், பிரசித்தன், உலகில் உயர்ந்த பாக்கியமுடையவன், ஜாதகன் பிதாவினுடைய இளைய சகோதரிக்கும், அவள் மகனுக்கு மட்டுந்தான் இந்த பலனுண்டு, ஜாதகன் பிதாவின் மூத்த சகோதரியின் மகன் அதிக தரித்திரன், ஜாதகன் பிதாவின் மூத்த சகோதரியின் மகனுக்கு இரண்டு தாரமுண்டு, மூத்த சகோதரியும் விதவைத்தன்மையால் வருந்துவாள்.

(159) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் பூர்வபாகம்) ஆகி லாப பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுடைய சிற்றப்பனுக்கு மக்கள் இருவருண்டு, தன் கோத்திரத்திலேயே தத்துபுத்திரனுடையவனுவான், ஒருவித கெட்டவழியில் பிரீதியுடையவன், துஷ்டர்களுக்குப் பிரியன், தன் மாற்ருந் தாயின் சாபத்தால் புத்திரோற்பத்தி இல்லாதவனுவான், அதிருஷ்டயத்தினத்தால் புத்திரப்பேறு உண்டு, நடுவில் கண்டம் நேரும், மாற்ருந்தாய் மகனுடைய மகனுக்கும் இவனுக்கும் விரோதமுண்டு, புத்திரபலன் கொஞ்சம், இரு தாரம் மணப்பான், பாக்கியவான், பாபபுத்தியுடையவன்.

(160) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி சிற்றப்பன் பாவமாகிய பதினேரும் பாவத்திற்கு ஐந்தாம் பாவஸ்தானமாகிய தனுசுக்குத் திரிகோணத்தில் சனி இருந்தால் ஜாதகனுடைய சிற்றப்பன் மகன் ஒருவன் கிரகபீடையால் வருந்துவான், எப்போதும் திருட்டுத்தொழில் செய்வான், தாயாதிகளின் பொருளை அபகரித்த தோஷத்தினலே அவனும் சந்தான ரிஷ்ட சோகமுடையவனுவான்,

சூரியவிரத மிருத்தல் முதலிய புண்ணியத்தால் தேகாரோக்கிய முண்டாகி சந்தானமடைவான், ஒரு புத்திரனுடன் கூடியவனுகி சுகவானுக இருப்பான்.

(161) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி சனி லாப பாவமாகிய பதினோராம்பாவத்தில் தன் உச்சாம்சத்திலிருந்து சுக்கிரனுடன் கூடினுல் ஜாதகனுடைய சிற்றப்பன் மகன் ஒருவன் அரசாங்கத்தில் செல்வாக்குடையவனும், உத்தியோகமுடையவனுமாவான், இரு தாரமுடையவன், ஆசையுடையவன், புத்திரசோகத்தால் வருந்துகிறவன், சிற்றப்பன் விரோதபாவத்தால் புத்திரோற்பத்தி நாசம், காலாந்திரத்தில் புத்திரப்பிராப்தி உண்டு, ராஜ ஸகுணமுடையவன், சுகமுடையவன், நடுவயதில் வருந்துவான், வாதநோயால் பீடிக்கப்படுவான், தாயாதி வர்க்கவிரோதத்தால் அதிக கிலேசமடைவான், முன் பாகத்தில் ஜெனித்த ஜாதகனுடைய சிற்றப்பன் மகனுக்கு லாப பாவத்தில் சனி இருந்த தோஷத்தால் சிற்றப்பன் மகன் ஜென்ம தெசையில் துலாத்தில் சனி கோட்சார ரீதியாயிருந்தால் மரணமடைவான், இவன் தகப்பனுடைய இளைய சகோதரி சுமங்கலியாய் மரிப்பாள், அப்படி பிழைத்திடில் ஜென்ம தெசைமுடிவில் பிரபலமான தாயாதி நாசமடைவான்.

(162) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி பிதா மகாதிபனுன சனி தன் உச்சாம்சத்தில் புதனுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய பிதா மகன் அதிக பிரசித்தியுடையவன், அதிக சகோதரிகளுடையவனுவான்.

(163) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் ராகு இருந்து பத்தாம் பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் வாலிபத்தில் பிதா மகனுக்குக்கிலேசம், தரித்திரத்தால் வருந்துவான், இவன் பிதாமகனுகிய பாட்டன் வடக்கு, தெற்கு தேசங்களில் சஞ்சாரம் செய்துக்கொண்டு வருந்துவான், விவாகத்துக்குப் பிறகு பாக்கியமுண்டாகும், புத்திரன் பிறந்த பிறகு சௌக்கியமுண்டாகும், இவன் பிதா மகன் ஞானியாவான், யௌவன பருவத்தின் முடிவில் நற்பாக்கியமுண்டாகும், காட்டுப் பிரதேசத்தை அடைந்து சுகப்படுவான்.

(164) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் முன்பாகம்) ஆகி பிதா மகாதிபனுன சனி இரண்டு சுபருடன் கூடி இருந்தால்

ஜாதகன் பிதாமகன் (பாட்டன்) பரிசுத்தனுயிருப்பன், நித்தம் மூத்த சகோதரமுடையவன், நல்ல மனைவியை யுடையவன், விவேகமுடையவன், பந்துவர்க்கத்தில் மிகவும் மதிக்கத்தக்கவன், பூஜிக்கத்தக்கவன், தன்னுடன் பிறந்த சகோதரரைப் போஷிப்பவன், ஒரு சகோதரனுடன் கூடியவன், நற்புத்திரனுடையவன், பெருந்தன்மையுடையவன், தன தான்யம் நிரம்பப் பெற்றவன்.

(165) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் முன்பாகம்) ஆகி குரு லக்கின பாவத்தையாவது அல்லது பத்தாம் பாவத்தையாவது பார்த்தால் ஜாதகனுடைய பிர பிதாமகன் (இரண்டாம் பாட்டன்) செய்த புண்ணியத்தினுலேயே அவனுடைய வமிசத்திலே பாக்கிய விருத்தியுண்டாகும். அதிக பாக்கிய முண்டாகும், மூத்த சகோதரனைக்காட்டிலும் இவனுக்கு அதிகமான சுகமுண்டு.

(166) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் முன்பாகம்) ஆகி லாப பாவமாகிய பதினோம் பாவத்தில் சனி, புதன், சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் அதிக யோகமுடையவன், ஈரெழுத்துக்களில் சமர்த்தன், சிவந்த நிறமும், அழகிய மேனியுமுடையவன், இருதாரமுடையவன், சுகமனுபவிப்பவன், அதிக சகோதரிகளுடையவன், மூத்த சகோதரன் வியாபாரத்தால் அதிக தனப்பெருக்குடையவன், நித்தம் மகன் சொல்லைக்கேட்பான், தேவப் பிராமண பூஜை செய்பவன், அற்பபுத்திரர் சந்தோஷமுடையவன், மூன்று பட்டணங்களில் வசிப்பான், தீவாந்தரங்களிலுள்ள பொருள் முதலிய பொன் வியாபார ஜீவனமுடையவன், ஜாதகனுக்கு இரண்டாம் தெசையில் மூத்த சகோதரனுக்கு செல்வப் பெருக்கு, அவனுக்கு விசேஷ பிரபல யோகமுண்டு, வீட்டில் லக்ஷ்மி கடாட்சமுண்டு, பின் பாகத்தில் பிறந்த ஜாதகனுக்கு நடுவயதில் மூத்த சகோதரன், மூத்த சகோதரி பிரிவால் அதிக துக்க மடைவான்.

(167) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலம்சம்) ஆகி சிம்மத்தில் சனி யிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரி பிரிவுடையவனுவான், லக்கினத்தைப் பாபர் பார்த்தால் இந்தபலனில்லை.

(168) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி மூன்ரும் பாவாதிபன் சனி வர்க்கோத்தமத்திலிருந்து ஏழாம் பாவத்தில் பாபர் இல்லாமல் இருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் அதிக தீர்க்

காயுளுடையவனுயிருப்பன், அதிக பாக்கியமுடையவன், சுகமுடையவன், ஒரு சகோதரி துக்கப்படுவாள், பிறந்து நாசமடையும், சந்தானமுடையவளாயினும் புத்திரபாவமுடையவளாவாள், அவளுக்கு அதிக பெண் சந்ததியுண்டு.

(169) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி மாதாஸ்தானுதிபனுன (நாலாம் பாவாதிபனுன) சனி தன்னுச்சாம்சத்தில் குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவளாயிருப்பள்.

(170) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் சூரியனும், பதினோராம் பாவத்தில் சுக்கிரனும் இருந்து மூன்று, ஆறு, பதினொன்று இந்த பாவங்களில் சனி இருந்தால் ஜாதகனுடைய தாய்வமிசம் நாசமடையும், இவன் தாய் நற்குணமுடையாள், சகோதர சகோதரி பாக்கிய முடையவள், தாய் தகப்பன் சுகமற்றவள், மாற்றுந்தாய் சகோதரனுடையவள், புத்திர பாக்கிய சுகமுடையவள். உத்திராம்ச ஜாதகனுக்குத் தகப்பனுக்கு முன் தாய் மரணமாவாள், முன் பாகத்தில் பிறந்த ஜாதகனுடைய தகப்பன் அரிஷ்டத்துக்குப் பிறகு தாய்க்கு அரிஷ்டம் உண்டாகும்.

(171) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் சந்திரன் ராகுவுடன் கூடி இருக்கும் சகடயோக ஜாதகன் அதிக வித்தை, பொருள் நிறம்பப் பெற்றவன்; ஊகித்து விளக்கவல்ல ஞானமுடையவன்.

(172) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி வித்தைஸ்தானுதிபனுன (நாலாம் பாவாதிபனுன) சனி, தன் உச்சாம்சத்தில் சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகன் தன் ஜாதிக்கேற்ற வித்தையுடையவன், மணி, ரத்தினம் முதலியவைகளைப் பரீட்சை செய்பவன்.

(173) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம் முன் பாகம்) ஆகி ஏழாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் தினந்தோறும் நல்ல கதை கேள்விகளில் பிரியமுடையவன், தர்ம சாஸ்திரங்கள், புராணங்கள் அறிந்தவன். இஷ்டம் பூர்த்தியாகும் வரையில் தர்மம் செய்வான், தியாகம் செய்வான், நல்ல ஜெனங்களுக்கும் பிரியவான், பிதாமக (பாட்ட) னைக்காட்டிலும் அதிக பாக்கிய முடையவன், அதிக தானம் செய்பவன், ஞானவான், ஐந்தாம் வயதில் வித்தை

ஆரம்பம், மூன்றில் ஜுரவியாதி, வாலிபத்தில் மாந்தம், ஜுரம் முதலிய கண்டங்களுண்டாகும், அந்த தோஷத்திற்குப் பரிகாரமாக சந்திரப் பிரார்த்தனை, நாகப்பிரதிமை தானம் முதலிய சாந்தியாதிகளால் தேக ஆரோக்கிய முண்டாகும், அதிக சுகமுண்டு.

(174) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி குரு ஏழாம் பாவத்தில் வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகன் தீர்க்காயுள், வஜ்ஜிராயுதத்தால் அடிபட்ட மலைபோல் அனேக பாலாரிஷ்டமிருந்தாலும் நாசமடையும். உத்திராம்சத்தில் பிறந்தவன் பாலாரிஷ்டத்தால் பரிப்பான், பிழைத்திருக்கில் தீர்க்காயுள், முன் பாகத்தில் பிறந்தவன் தாமரை போன்ற பறந்த கண்களுடையவன், மிருதுவானவன், அழகிய தேகமுடையவன், சாதுவானவன், தித்திப்பு, துவர்ப்பு ரசத்தில் பிரியன், வாத சிலேஷ்ம சுபாவமும், பித்த தேகமு முடையவனுவான், இரண்டு பெயருடையவன், சத்தியவான், ஆசையுடையவன், கொஞ்சம் பெண் சேர்க்கையாகிய பாவச் செய்கையையுடையவன்.

(175) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி சுக்கிரன் சனியுடன் கூடி எந்த ராசியிலாவது இருந்தால் ஜாதகன் அதி போகமுடையவன், அரசாங்கத்தில் பிரபுத் தன்மை வாய்ந்தவன், போக மாதர் சம்பந்தமுடையவன், காமீ, பின்னால் வருந்துவான், இந்திரியங்களை ஜெயித்தவன், மூத்த சகோதரிகளிடம் சந்தோஷமடைந்த மனதுடையவன், சொஞ்சமான நேசருடையவன், மெலிந்து நீண்ட தேகமுடையவன், சுசியானவன், மிகுந்த அறிவாளி, அதிகம் பயந்த சுபாவமுடையவன், நல்ல தர்மவான், எப்போதும் தர்மத்திலேயே புத்தியுடையவன், தினந்தோறும் எல்லா சாஸ்திரங்களையும் பிரியமாய்ப்பார்ப்பான், ஞானமுடையவன், தத்துவங்களறிந்தவன், அடக்கமுள்ளவன், ஆசாரமுடையவன், மூர்க்கன், வாசாலகன், நல்ல புகழுடையவன், கொஞ்சம் நோயுடையவன், தெளிவடைந்த மனமுடையவன், பொக்கிஷம் சேர்ப்பான்.

(176) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி சந்திரன் இரண்டாம் பாவத்தில் கமலாம்சத்தில் நீச்சராகுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் மனதில் கொஞ்சம் சஞ்சலமுடையவன், மந்த சுபாவமுடையவுருவுடையவன்.

(177) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி சந்திரன் ராகுவுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு அரசன், திருடர் இவர்களால் பயமுண்டு, நடுவயதில் சகோதர விரோகமுண்டாகும்.

(178) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினத்திற்குப் பத்தாம்பாவத்தில் சூரியன் இருந்தால் ஜாதகன் ஸேதுஸ்நானம் செய்வான், புண்ணியவான், கங்கா ஸ்நானம் அல்லது மூன்று முறை ஸேதுஸ்நானம் செய்து கங்காஸ்நான பலனை அடைவான், முதுமையில் வாலிபத்தில் யௌவனத்தில் மும்முறை ஸேதுவைக் காண்பான், நடுவயதில் தடாகம், உத்தியாவனம் முதலிய பிரதிஷ்டை செய்து தர்ம பலனை அடைவான், அந்த காலத்தில் ஸேதுக்கரையில் கோதான ஸ்நான புண்ணியமடைவான், கங்கைக்கரையில் நல்ல தர்மம் உண்டாகும். நல்ல தார்மீகன், கங்காயாத்திரை தீபப்பிரதிஷ்டை முதலிய தர்ம சித்தியுடையவன், சுகமுடையவன்.

(179) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினத்திற்கு பத்தாம் பாவத்தில் துலாம்சத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையவனுவான், கர்ம பாவாதிபன் திசா காலத்தில் இந்த பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

(180) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் மேஷாம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு ஜென்ம தேசத்தில் கீழ் பாகத்தில் நகரத்தில் விவாகமுண்டு, சிலர் மேஷத்திரிகோண ராசி மனைவியின் ஜென்ம ராசியென்கின்றனர், கிரகஸ்தன் வீட்டில் விவாகம் நடக்கும், வேறு தாரயோகமுண்டு, ஜென்மலக்கினுதிபன் திசாகாலம் அல்லது இருபத்துநான்கு, முப்பது இந்த வயதுகளில் தாரநாசமுண்டு, சீக்கிரம் விவாக யோகமுண்டு.

(181) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினுதிபன் ஒன்பதாம் பாவ அம்சத்திலும் லாப (பதினோராம்) பாவாதிபன், பாக்கிய பாவாதிபன் சுக (நாலாம்) பாவாதிபன் இவர்கள் கூடி இருந்தால் 'இந்திரயோக' மென்று பெயர். போகமுடையவன், அரசாங்கத்தில் பிரபுத்தன்மை வாய்ந்தவன், எப்போதும் தர்ம மார்க்கத்திலிருப்பான், பதினுயிரத்துக்கு அதிக தனமுண்டு, மதில், கோபுரம், தோட்டம் முதலியவை ஏற்படுத்தும்படியான புண்ணிய காரியங்கள் செய்வான், சுகமுடையவன்.

(182) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி லாப பாவமாகிய பதினோராம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் இரண்டாவது களத்திரத்தினுல் நல்ல புத்திரனுடையவனுவான், மூன்று பெண்கள் தீர்க்காயுளுடையவராயிருப்பர், நாலு புத்திரர் உண்டு முதுமையில் புத்திர சோகத்தால் அதிகம் வருந்துவான்.

(183) ஜென்ம லக்கினம் துலாம் (நிர்மலாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபன் சுக்கிரனுடன் கூடி லாபபாவமாகிய பதினோராம் பாவத்தில் புதன் சனியுடன் கூடினால் ஜாதகன் தேகமுடிவில் புண்ணியலோகம் சேர்வான், பின்னால் உத்தமகுலத்தில் பிறப்பான்.

(184) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி லக்கினாதிபன் ஒன்பதாம் பாவ அம்சத்திலும், லாப பாவாதிபன் பாக்கிய பாவாதிபன், நாலாம் பாவாதிபன் இவர்கள் கூடி இருந்தலோடு, சுக்கிரனும் சனியும் கூடி இருந்தால் இந்திர யோகமாகும், இதில் ஜாதகன் செல்வவான், அதிக தனவான், அதிக புத்திமான் பரந்த கண்களுடையவன், தனிகன், புத்திர மித்திரருடையவன், தீர்க்காயுள், கல்வியுடையவன், புகழுடையவன் பெருந்தன்மை வாய்ந்தவன், சபலன், பொறுமையுடையவன், இனிமையாய்ப் பேசுவான், தர்மவான், பண்டிதன்.

(185) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி சந்திரன் தன் நீச்சஸ்தானமாகிய விருச்சிகத்தில் இருந்து ஜாதகன் இந்திர யோகமுடையவனானால் அதாவது லக்கினாதிபன் ஒன்பதாம் பாவ அம்சத்திலும், லாப பாவாதிபன் ஒன்பதாம் பாவாதிபன், நாலாம் பாவாதிபன் இவர்களும் கூடி இருந்தால் ஜாதகன் நீச்சர்களை அண்டியவனாவான், எப்போதும் நீச்ச ராஜ்யத்தில் நல்ல பாக்கிய முடையவன்.

(186) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி சந்திரன் நீச்சமடைந்து மகராம்சத்திலிருந்து ஜாதகன் இந்திர யோகமுடையவனானால் அதாவது லக்கினாதிபன் ஒன்பதாம் பாவ அம்சத்திலும், லாபம், ஒன்பது, நான்கு இந்த பாவாதிபர்கள் ஒன்று கூடி இருந்தால் ஜாதகன் போகமுடையவன், சங்கீதப் பிரியன், அதிக காமுகன், காலாந்தரத்தில் தர்மசிந்தை, தேவப் பிராமண போஷகன், பந்து மூத்தவரிடம் சந்தோஷ முடையவன், கொஞ்சம் தோழருண்டு, மெலிந்த நீண்ட தேகம், சுசியானவன், அதிக புத்தி வாய்ந்தவன், மிகப் பயந்தவன், சிரத்தையுடையவன், தர்மத்திலேயே புத்தி செலுத்துவான்.

(187) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தில் கேது எட்டாம் அம்சத்தில் இருந்

தால் ஜாதகனுக்கு அந்த திசா அந்தரகாலங்களில் திருடர் பய முண்டு.

(188) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி லக்கினாதி பன் ஒன்பதாம் பாவ அம்சத்திலும், லாபபாவாதிபன், ஒன்பதாம் பாவாதிபன், நாலாம் பாவாதிபன் இவர்கள் ஒன்றாய்க் கூடி இருக்த லோடு, பதினோரம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் மூன்றாவது அல் லது நான்காவது திசா காலத்தில் புதையல் எடுப்பான்.

(189) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி பதினோ ராம் பாவத்தில் சுக்கிரன், நீச்சாம்ச மில்லாமலிருந்து சனியுடன் கூடி யாவது அன்றி பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் புதையலறிந் தவன், அயற் பெண்டிர் சம்பந்தமுடையவன்.

(190) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி லக்கினாதி பன் ஒன்பதாம் பாவ அம்சத்திலும், லாபபாவாதிபன் ஒன்பதாம் பாவாதிபன், நாலாம் பாவாதிபன் இவர்கள் ஒன்றாய்க் கூடியிருக்த லோடு இரண்டாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் போக முடையவன், புகழுடையவன், நீச்ச ஸ்திரி சம்பந்தமுடையவன், வாலிபத்தில் சரீரத்தில் நோய், நடுவயதில் பிரபலயோகம், முதுமை யில் கொஞ்சம் கூனுடையவன், அயலார் பொருளை அபகரிப்பான், குலத்தில் அபிமான முடையவன், தன் குலத்தில் பிரசித்தன், நோயால் வருந்துவான், நல்ல தர்மிஷ்டர்களை அடைந்தவன், அரசாங் கத்தில் நல்ல அதிகாரமுடையவன், வெகுமதிக்கத்தக்கவன், வைத்தி யர்களால் பூஜிக்கப்பட்டவன், நல்ல புகழுடையவன்.

(191) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி ஜாத கன் இந்திரயோகமுடையவனாகி சுக்கிரன், சனி, புதன் இவர்களு டன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு ஆயிர மரிஷ்ட நாசமுண்டு.

(192) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி சுக்கிரன் சிம்மத்தில் சனியுடனிருக்கும் இந்திரயோக ஜாதகனுக்கு வாலிபத் தில் கண்ணோய் உண்டாகும், நாகதானம் செய்யத் தீரும், தலைப்பக் கம், முழங்கால் அல்லது மார்பில் புண் முதலியவை உண்டாகும்.

(193) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி ராகு லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்குப் பொறுக்கமுடியாத முகநோயுண்டாகும், வாலிபத்தில் நாகதானம்

செய்தால் முக ரோகமில்லை. பாலாரிஷ்டபயமில்லை, கண்களுக்கு ஆரோக்கியமுண்டு, சுகமுண்டு.

(194) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி சுக்கிரன் ஐந்திராம்சத்திலிருந்து குருவுடன் கூடினால் ஜாதகனுடைய ஒரு சகோதரி சுக முடையவள், ஜாதகனும் சுக முடையவனும், தத்துப் புத்திரனுடையவனுமிருப்பான்.

(195) ஜென்ம லக்கினம் துலாம் (இந்திராம்சம்) ஆகி ஐந்திராம்சத்தில் சிம்மத்தில் சுக்கிரன், சனி பாக்கியாதிபன் இவர்கள் கூடி இருக்கும் இந்திரயோக ஜாதகனுக்கு நரவாகனமுண்டு, தனிகன், ஆசையுடையவன், புகழுடையவன், சுகமுடையவன்.

(196) ஜென்ம லக்கினம் துலாம் (சம்பகாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 185-12 கலை முதல் பாகை 185-24 கலை வரையில்) ஆகி மாதுர்ஸ்தானாதிபனான சனி சூரியனுடன் கூடியாவது, பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகனுடைய வாலிபத்திலேயே தாய்க்குப் பீடை உண்டாகும், உத்திராம்சம் ஆகில் தாய் தீர்க்காயுளாயிருப்பாள்.

(197) ஜென்ம லக்கினம் துலாம் (சம்பகாம்சம்) ஆகி பிதாஸ்தானாதிபனான புதன் மீனத்தில் சூரியனுடன் கூடி குருவுடன் கூடியாவது, பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகனது மூன்றாவது திசையில் தகப்பன் மரணம்.

(198) ஜென்ம லக்கினம் துலாம் (சம்பகாம்சம்) ஆகி லக்கினம், நான்கு, மூன்று, ஒன்பது, பத்து இந்த அதிபர் ஒன்றுகூடி இருந்தால் ஜாதகனுக்கு வாகன லாபமுண்டு, கவி, பல்லக்கு உடையவன், ஸ்ரீமான், அதிக தனமுடையவன், பொன்னாலான ஆபரணம், வஸ்திரம், பாத்திரம் இவைகளுடையவன்.

(199) ஜென்ம லக்கினம் துலாம் (சம்பகாம்சம்) ஆகி புத்திரஸ்தானாதிபனான சனி, மிதுனாம்சத்திலிருந்து புதனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குச் சந்தானத்தடையுண்டு, அந்தபாப பரிகாரத்துக்குப் 'பாலகிருஷ்ணப் பிரதிமை' தானம் செய்யவும், இரு புத்திரர் இரு பெண்கள் தீர்க்காயுளாய் இருப்பர், உத்திராம்சத்தில் புத்திரனில்லை, ஆனால் தத்துப் புத்திரனுண்டு.

(200) ஜென்ம லக்கினம் துலாம் (சம்பகாம்சம்) ஆகி சூரியன் காாள ஷஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகன் தன் ஜாதிக் கேற்ற லோகத்தை இறுதியில் அடைவான் பின்னுல் உத்தம ஜென்ம முண்டு.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் துலாம் லக்கினத்திற்கு 200-விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட துலாம் லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங் களில் துலாம் லக்கின பலனின் துடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்று அறி யவும்.

விருச்சிக லக்கின ஜாதகம்.

——(*_*)——

(1) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 215-24 கலை முதல் பாகை 215-36 கலை வரையில்) ஆகி சனி ஜென்ம லக்கினத்தில் குஜனுடன் கூடி இருந்து, சூரியன் புதனுடன் நான்கில் இருந்தால் ஜாதகனுடைய ஜென்ம காலத்தில் கஷ்டப் பிரசவமுண்டாகும்.

(2) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்திற்கு ஒன்று, நான்கு, பத்து இந்த ஸ்தானாதிபர்கள் லக்கினத்திலாவது அல்லது வாஸவ ஷஷ்டியாம்சத்திலாவதிருந்தாலும், ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஒன்பதாமதிபன் பத்தில் குருவால் பார்க்கப்பட்டிருந்தாலும், ஜாதகனுக்குச் சிம்மாஸனப் பிராப்தி யோகமுண்டு. அரச சபையில் வெகு மதிப்புடன் ஜீவிப்பான், ஜெனங்களைத் திருத்தி அடக்குவான், தெளிவான சொல்லுடையவன், பிரசித்தியுடையவன், புத்திசாலி, தயையுடையவன், வேத தருமமறிந்தவன், நற்காரியம் செய்வான், அயலார் மனைவியரை விரும்புவான், ராஜ்ஜியாதிகார முடையவன், இனிமையாய்ப் பேசுவான், தனவான், எப்பொழுதும் அன்னதானம் செய்வான், வாகன முடையவன், சங்கீத, சாஹித்திய சந்தோஷமுள்ளவன், காம முடையவன், மகாராஜாவுக்குச் சமமான யோக முடையவன்.

(3) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபன் ஸ்திர ராசியிலிருந்து நாலாமதிபன் ஒன்பதில் இருந்தால் ஜாதகன் தான் பிறந்த இடத்துக்குத் தென் தேசத்தில் ராஜயோக முடையவனாவான்.

(4) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி இரண்டாமதிபனான குரு, குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகன் வாசாலகன், சாதுர்யமான யுக்தியுடையவன், யுக்தாயுக்த விசேஷ மறிந்தவன், பல தேசங்களில் பிரசித்தியுடையவன்.

(5) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி மூன்றில் சுக்கிரனிருந்து, மூன்றாமதிபன் குருவுடன் கூடி இருந்தாலும், அன்றி சீதளாம்சத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு நான்கு சகோதரர்கள்

உண்டு, அவர்களில் ஒருவன் அற்பாயுளுடையவனாய் புத்திரனற்றவனாய் மரணமடைவான், சகோதரி ஒருத்தி பெண் பிரசவத்துடன் யௌவனத்தில் மரிப்பாள்.

(6) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி நாலாமதிபனான சனி, குஜனுடன் கூடி காரள ஷஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய வித்தைக்குத் தடங்கல்களுண்டாகும். கொஞ்சம் வித்தைதான் உண்டு, வேறு பாஷை அறிவான், நீச்ச வித்தையில் சமர்த்தன்.

(7) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி நாலாமதிபனான சனி, செவ்வாயுடன் கூடி லக்கினத்திலிருந்தாலும், வஸுதாம்சத்திலிருந்தாலும் ஜாதகன் பிறந்த இடத்திலிருந்து தென்தேசத்தில் அரசர் இருக்கத்தக்க நகரத்தில் பெரிய ஆற்றின் அருகில் தெற்கு வடக்கு வீதியில் மேற்குப் பக்கம் வாசலுள்ள வீட்டில் ஆலய சமீபத்தில் நித்திய வாஸம் செய்யும் ராஜயோகமுண்டு.

(8) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஐந்தாமதிபனான குரு குஜனுடனும் சனியுடனும் கூடினாலும், ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஏழாமதிபன் கேந்திரத்திலிருந்து குஜன் லக்கினத்தைப் பார்த்தாலும் ஜாதகனுக்கு இரு மனைவியருண்டு, மூத்த மனையாள் துர்நடவடிக்கையுடையவள், மூத்த மனையாளுக்கு புத்திரன் ஒருவன், புத்திரி ஒருவளுண்டு, மூத்த மனையாள் புதல்வன் களத்திர சோகமுடையவன், மறு மனைவியை அடைவான், அவனுக்கு ஒரே மகன்தான் உண்டு, மூத்த மனைவி வாலிபத்திலேயே மரிப்பாள், மேற்கிலாவது அன்றி, தென் மேற்கிலாவது இளைய மனைவி வாய்ப்பாள், இவள் அழகானவள், பர்த்தாவிடம் பிரியமுடையவள், இனிமையாப் பேசுவாள், புத்திரி, புத்திரர்களுடன் கூடியவள், இரண்டு புத்திரர், இரண்டு புத்திரிகள் தீர்க்காயுள். அதிகமும் உண்டாகும், சாந்திகளால் மக்களுக்குச் சுகமுண்டு.

(9) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி நாலாமதிபனான சனி குஜனுடனும், குருவுடனும் கூடி இருந்தால் ஜாதகனுடைய தாய் குணவதி, புருஷ சகோதரர் உண்டு, நற்குணமுடையவள், பெண்ணுக்கு இஷ்டத்தைச் செய்வாள்.

(10) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஒன்பதாமதிபனான சந்திரன், பிதுர்காரகனான சூரியன், புதன் இவர்கள்

ஒன்றாய்க் கூடி இருந்தால் ஜாதகனுடைய பிதா மகான், பித்த நோயால் வாடுவான், பரஸ்திரீ சங்கமமுடையவன் அல்லது வேறு தாரம் கொள்வான்.

(11) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வசுதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 239-48 கலை முதல் பாகை 240-00 கலை வரையில்) ஆகி இரண்டாமதிபன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வித்யா விக்கினம் நேரும், யுக்தாயுக்த பகுத்தறிவுள்ளவன், பல தேசத்தில் பிரசித்தியுள்ளவன், தந்த ரோகமுள்ளவன், பல்லில் சில சமயம் ரத்தம் பெருகும், பிதிரார்ஜித மற்றவன், வைசூரி, சுர கண்டம் நேரும்.

(12) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வசுதாம்சம்) ஆகி மூன்றில் சனி, சந்திரனிருந்து சகோதர காரகனான செவ்வாய் எட்டினில் இருந்தால் ஜாதகனுக்கு முன் பின் சகோதரமில்லை, ஒரே ஒரு இளைய சகோதரி உண்டு, இரு சகோதரிகளுடன் கூடியவன், மற்றவை நாசமடையும். சிலசமயம் கர்ணசூலம், அண்டவாயு பீடையுடையவன், (உத்தராம்சமாகில் ஜாதகன் சகோதர, சகோதரிகளுடன் கூடியவனாவான்.)

(13) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வசுதாம்சம்) ஆகி நாலாமதிபன் குஜனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுள்ளவளாயிருப்பாள், முதலில் தகப்பனும், பின்னால் தாயும் மரணமுமாவார்கள். வீடு, பூமி முதலிய பாக்கியங்கள் தானே சம்பாதிப்பான், உஷ்ணவாயு தேகமுடையவனாகவாவது அன்றி மார்பு நோய் பீடை உடையவனாகவாவது ஆவான், நல்ல வாகன யோகமுண்டு.

(14) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வசுதாம்சம்) ஆகி ஐந்தாமதிபனான குரு துலாத்திலிருந்து சுக்கிரனால் காணப்பட்டிருந்தால் ஜாதகனுக்கு வேறுமனைவியிடம் காலாந்தரத்தில் மக்கள் உண்டாகும், இரு புத்திரர்களாவது அல்லது புத்திரிகளாவது தீர்க்காயுளாயிருப்பர், சாந்தியால் புத்திர சுகமுண்டு, குஹ்யரோகம், மூத்திர கிருச்ரம், பீனிசரோக பீடை இதுகளால் வருந்துவான்.

(15) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 235-24 கலை முதல் பாகை 235-26 கலை வரையில்) ஆகி சூரியன் சத்துரு ராசியிலிருந்தால் ஜாதகனுக்குச் சத்துரு மூலம் தனவிரைய முண்டாகும், தித்திப்பு, துவர்ப்பு வஸ்துக்

களில் பிரியமானவன், பெருந்தன்மையுடையவன், தான் சொன்ன சொல்லைக்காப்பான்.

(16) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம்) ஆகி மூன்றுமதிபனான சனி மிதுனத்திலிருந்து சகோதரகாரகனான செவ்வாய் தன் உச்சராசியாகிய மகரத்திலிருந்தால் ஜாதகனுக்கு மூத்தவன் ஒருவன் உண்டு, இளைய சகோதரம் குறைந்தவன், இவனுக்கு மூத்த சகோதரிகளிருவர், இளையவள் ஒருத்தியாவாள், மூத்த சகோதரன் பலமுள்ள தேகமுடையவனாய் அனேக புத்திர புத்திரீகளுடன் கூடியவனாய் இருப்பான், மேலும் சாதுவாய் அடங்கியவனாய் வீட்டு வேலை செய்வான், நற்குணமுடையவன், இளைய சகோதரியும், அனேக பாக்கியங்களுடன் நன்றாய் வாழ்வாள், மூத்த சகோதரி, புத்திர புத்திரிகளுடனும் கூடியவளாய் ஏழ்மையாய் இருப்பாள், ஒருத்தி இறப்பாள், ஒருத்தி புத்திர புத்திரிகளுடன் கூடியவளாய் விதவையாவாள், எல்லோருக்கும் மூத்த ஒருவன் ஒரு புத்திரன் இரண்டு பெண்களுடன் கூடியவனாய் நாற்பத்தாறு அல்லது ஐம்பதில் மரிப்பான். முப்பத்தாறுவது வயதில் மூத்த சகோதரம் மரணமடையும்.

(17) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம்) ஆகி நாலாமதிபனான சனி மிதுனத்தில் மீனம்சத்திலிருந்தால் ஜாதகன் தாய் குணமுள்ளவள், சாதுத்தன்மையானவள், புத்திர புத்திரிகளுடன் கூடியவள்.

(18) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம்) ஆகி ஐந்தாமதிபனான குரு கடகத்திலும், சூரியன் ரிஷபத்திலுமிருந்தால் ஜாதகன் பிதா புகழுடையவன், சாது, அனேக சகோதரர்களுடன் கூடியவனாவான்.

(19) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம்) ஆகி ஏழாமதிபனான சுக்கிரன் தன் சுயக்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் அனேக மனைவியரையுடையவன், இருபத்தொன்றுவது வயதில் விவாகம் நடக்கும், இரு புத்திரர்களுடன் கூடிய அவள் ஜாதகனது முப்பதாவது வயதில் மரிப்பாள், முப்பத்திரண்டில் மறு விவாகம் நடக்கும், அவளுடன் வெகு நாள் சுகமாய் வாழ்வான், அதிக பெண் பிள்ளைகளுடன் கூடியவனாய் முதுமைப்பருவத்தில் அதிக பாக்கிய முடையவனாவான், மூன்றும் மனைவிக்குப் புத்திர பாக்கியமுண்டு, நடு மனைவியின் சாயலாக இருக்கும்.

(20) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வாருண்யம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 217-00 கலை முதல் பாகை 217-12 கலை வரையில்) ஆகி லக்கினாதிபன் கன்னியிலாவது அன்றி மிதுனத்திலாவது இருந்து அந்த ராசிகளின் அதிபனான புதன் சந்திரனுடன் சிம்மத்திலிருந்தாலும், மீனம்சத்தில் குருவால் பார்க்கப்பட்டு சூரியன் பலத்துடனிருந்தாலும் ஜாதகன் கருத்த மேனியன், புத்திமான், உஷ்ண தேகமுடையவன், வித்தையுடையவன், கொஞ்சம் பருத்த தேகமுடையவன், கொஞ்சம் உயர்ந்த சரீரமுடையவன், பிறவியிலிருந்தே தனவான், அதிக மறிந்தவன், நல்ல தர்மங்கள் செய்வான், சிவந்த கண்களும், பித்தச் சூட்டு தேகமு முடையவனாவான், எப்போதும் நோயுடையவனாயும், சில காலம் மூத்திர கிருச்ர நோயுமுடையவனாவான், குணவான், இனிமையாய்ப் பேசுவான், விஷ்ணு, சங்கர பக்தி மிஞ்சியவன், வேதாந்த ஞானமுடையவன், சமய மறிந்தவன், நிலையுள்ள விரதமுடையவன், இடது விரையில் கொஞ்சம் வாதரோக பீடை யுடையவன், சில சமயம் வயிற்றுவலி, வெள்ளை, மேகப் பெருக்கு இதுகளுமுண்டாகும்.

(21) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வாருண்யம்சம்) ஆகி இரண்டாமதிபனான குரு உச்சனாய் கடகத்திலிருந்து ஒன்பதில் சூரியன், சுக்கிரன் இருந்தாலும், இரண்டாமிடத்தைச் செவ்வாய் பார்த்தாலும், அன்றி ஜென்ம லக்கினத்தைச் சனி பார்த்தாலும், ஜாதகன் நான்கு வித்தைகளில் வல்லவன், பல பாஷைகளறிந்தவன், நீச்ச பாஷையில் அதிக நிபுணன், சாஹித்திய ரசம், கானம் இதுகளறிந்தவன், சமஸ்கிருதம் பிரியமாய்ச் சொல்வான், அனேக லக்ஷதனங்களுக்கு அதிபன், அனேக பூ தனம் நிறைந்தவன், அரசனாகவாவது, தண்ட நாயகனாகவாவது இருப்பான்.

(22) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வாருண்யம்சம்) ஆகி மூன்றாமதிபனான சனி இரண்டு அல்லது பதினொன்று இந்த ஸ்தானங்களில் இருந்து லக்கினாதிபனான செவ்வாய் சிம்மத்திலிருந்து, புதன், சூரியனுடன் கூடி மிதுனம்சத்திலிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரம் குறைந்தவன், தான் ஸ்ரீமந்த புத்திரனாவான், இளையவன் ஒருவன் உண்டு, பெண் சகோதரமில்லை, இவனுக்கு இளையவன் தன் தாய் வமிசத்தில் பெரிய தாயாருக்கு சுவீகாரம் செய்துக் கொள்ளப் படுவான். இவன் ஒருவன் சகோதர, சகோதரி யற்றவனாவான்.

தைரிய வீரியங்களுடன் கூடியவனும் அரசனுக்கு வேண்டியவனும் அவன் குணமறிந்து நடப்பான்.

(23) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வாருண்யம்சம்) ஆகி நாலாமதிபன் குஜனுடனும், சூரியனுடனும் கூடி தன் அம்சத்தில் பலமாய் இருந்தால ஜாதகனுடைய தாய் புண்ணியவதி, அனேக சகோதரிகளுடன் கூடியவள், மாதாவுடன் பிறந்தவர் ஏழுவர், இதில் இருவர் அல்லது மூவர் மரிப்பர், ஜாதகன் பிறப்பதன் முன்னமே தாய் குருடாவாள், ஜாதகன் பெரிய தாய் அரசனுக்குச்சமமான தன வதி, அவளால் தன் வர்க்கத்துக்குத் தனப் பெருக்குண்டாகும், புத் திரனுள்ள சிறிய அம்மான் அல்பாயுளாய் விஷப்பாண்டு ரோகத்தால் மரிப்பான், மூத்த அம்மான் புத்திசாலியாய் அரசனாகவாவது, தண்ட நாயகனாகவாவது இருப்பன், நீச்ச அரசனை அடைந்து அவன் தயவுடையவனுவான்.

(24) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம் அதாவது லக் கின ஸ்புடம் பாகை 222-48 கலை முதல் பாகை 223-00 கலை வரை யில்) ஆகி லக்கினதிபனை குஜன் பதினொன்றில் சனி, சூரியன், புதன் இவர்களுடன் கூடி இருந்து லக்கின கேந்திரத்தில் கேது இருந்தால் ஜாதகன் கருமை நிறமாகவோ அல்லது சிகப்பும், கருப்பும் கலந்த நிறமாகவோ இருப்பான், இடையிடை விலக்கமான பருத்த பற்களும், பருத்த கண்களும், உஷ்ண தேகமு முடையவனுவான், ராஜயோக முடையவன், நீச்சர்களை அண்டுவான், பிரபலமான உத்தியோக முடையவன், சில காலம் மந்த புத்தியுடையவன், தேவப் பிராம்மணரைத் துவேஷிப்பான், பசி, தாகம் சகிப்பான், மானமுடையவன், நீச்சவித்தையில் சமர்த்தன், நீச்ச சேர்க்கை யுடையவன், எப்போதும் காம முடையவன், நீச்ச ஸ்திரீகளை அனேவதில் பற்றுள்ளவன், பலஜாதி பெண்களைச் சேருவான், மகா கோபமுடையவன், பராக்கிரமமுடையவன், புகழுடையவன், சத்தியமான சொல்லுடையவன், பந்துக்களிடம் பற்றுடையவன், எப்போதும் துக்கமடைந்த மனதுடையவன், சண்டாள யோகத்தில் பிறந்தவன், தன் ஆசாரத்தினின்று வழுவி வேறு மதத்தைப் புகழு வான், தன் மதத்தை துவேஷிப்பான், தன் தெய்வத்தை இகழு வான், வாசாலகன்.

(25) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி லக்கினத் தைச் சனி பார்த்தால் ஜாதகன் பிதாவைத் துவேஷிப்பான், சகோத

மருக்கு விரோதி, மனைவி விரோதி என்று தடுக்கப்பட்டவன், பகலில் சம்போகம் செய்பவன்.

(26) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம் ஆகி இரண்டா மதிபனான குரு பத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டு, இரண்டா மிடம் குரு, சந்திரன் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய வித்தைக்குத் தடையுண்டாகும், சொற்ப வித்தையுடையவன், நன் ருய்பேசுவான், படிப்பான், நான்கு வித்தைகளில் சமர்த்தன், பல பாஷைகளில் தேர்ச்சியுடையவன், விஷ்ணு பக்தகுலத்துதித்தோனு வான், தேவி பூஜை செய்வான், மந்த, சிலேஷ்மரோகமும், சுவாஸ காஸ ரோகமும், சில சமயம் தந்த சூலே, கர்ணசூலே, வயிறு, மார்பு, கண்கள் இவைகள் சூலே நோயுமுடையவனுவான், மனைவி, மக்கள் முதலியவரால் வெறுக்கப்படுவான், அதிக காமீ, வயிறு நிரப்புவதி லேயே முக்கியமாய்க் கருதுவான், சில சமயம் குலாசாரத்திலிருந்து தன் தெய்வத்திடம் பக்தி செலுத்துவான், தன்னிஷ்டப்படி நடப் பான், மோக்ஷத்திலும், வேதாந்தத்திலும் ஞானமுடையவன், குண முடையவன், தன் பலத்தால் பரோபகாரம் செய்வான், தானே வீடு, பூமி, தனம் சம்பாதிப்பான், பிதுர்பாக்கியமற்றவன், பலதேசங்களில் சஞ்சரிப்பான், வித்தை மூலமாக நல்ல யோகமுண்டு, மூன்று வாகன யோகமுடையவன், நீச்ச அரசனைப் பணிவான்.

(27) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி மூன்ரு மதிபனான சனி பதினொன்றில் ரவி, குஜன், புதன் இவர்களுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு மூத்த சகோதரமில்லே, இளைய சகோதர முண்டு, சகோதரர் இருவரும் அல்லது மூவரும் சகோதரிகள் இரு வரும் உண்டாவர், அதிகமும் உண்டாகும். ஆனல் நாசமடையும், இளையவனே இவனுக்குச் சத்துரு ஆவான், சகோதர ஒற்றுமை இல்லே, மனைவி அபவாதத்தால் துக்கமுடையவனுய் மனைவியை நீக்கி விடுவான்.

(28) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி நாலாமதி பன் பதினொன்றில் இருந்தால் ஜாதகனுடைய தாய் கருத்த நிறத்தி னள், கொஞ்சம் பர்த்தாவிடத்தில் துவேஷ முடையவள், வாயாடுப வள், கலகத்தில் பிரியமுடையவள், கணவனுடன் தர்க்கிப்பாள், மூட புத்தியுடையவள், மானங்கெட்டவள், துஷ்டத்தனமாய் நடப்பாள், மந்தமான காரியங்களுடையவள், ரூபமற்றவள், துர்மரணமாய்

இறக்க விரும்புவாள், இவனுக்கு இரண்டு அல்லது மூன்று தாய்மார் அக்கினி சாக்ஷி இல்லாமல் இவன் தந்தையை மணப்பர், தாய்ப் பாட்டி தீர்க்காயுளுடையவள், இவனுக்கு இரு அம்மான்களுண்டு, தாய் சகோதரி ஒருவள் வாலிபத்திலேயே விதவையாவாள்.

(29) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி ஐந்தாம் வீட்டதிபன் எட்டினில் மேஷாம்சத்திலிருந்து சனியால் பார்க்கப் பட்டால் ஜாதகன் புத்திரனில்லாதவன், தத்துபுத்திரனால் சந்ததி விருத்தி உண்டு. விப்பிர சாபத்தினால் சந்ததி இல்லையாகையினால் சிம்சுமாரதானத்தாலும், பொன் சந்தான கோபாலமூர்த்தி தானத் தாலும், ஏகாதசியில் கோதானத்தாலும், அரச மரப்பிரதிஷ்டையா லும், மஞ்சள் லிங்க பூஜை இத்தகைய சாந்தியாதிகளால் காலாந்தரத் தில் புத்திரனுண்டானாலும் உண்டாகும். அனேக புண்ணிய வசத் தால் ஒரு புத்திரன் தீர்க்காயுளுடையவன், குஹ்ய ரோகம், மூத்திர கிருச்ரம், மேக பாண்டு, சுவாச ரோகம், சுர பீடை, காது செவிடு, முதலிய பீடைகளுடையவன், நிலையான சொல்லுடையவன், மந்த மான செய்கையுடையவன், வைசூரி, சுரம் முதலிய கண்ட முண்டு, விரையில் கொஞ்சம் வாதநோய், புண், தினவுள்ள குஹ்ய பீடை யுடையவன்.

(30) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி ஏழாமதி பனை சுக்கிரன் பத்தில் இருந்து ஏழில் ராகு இருந்தால் ஜாதகனுக்கு இரண்டு அல்லது மூன்று தடவை பிரயத்தனம் செய்து பின்னால் விவாகம் நடக்கும், மனையாள் மாநிற மேனியை யுடையாள், மந்த புத்தியுடையவள், பிசாசம் போல் காரியா காரிய மறியாதவள், துர்க் குணமுடையவள், கணவனை விரோதிப்பாள், சிலர் இருபத்தைந்தா வது வயதில் விவாக மென்பர், இவனுக்கு இரண்டு அல்லது மூன்று மனைவியருண்டு. உத்திராம்சம் ஆகில் ஜாதகன் ஏக களத்திரமுடைய வன், பரஸ்திரீ சேர்க்கையுடையவன்.

(31) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி ஒன்பதா மதிபனை சந்திரன் குருவுடன் கூடி பிதுர்காரகன் பதினோராம் ராசி யில் இருந்தால் ஜாதகனுடைய பிதா யோகமுடையவன், சாது, கொஞ்சம் குறுகிய சிவந்த தேகி, குணத்தைக் கிரகிப்பவன், பல பாஷைகள் தெரிந்தவன், நீச்ச அரசன் அருகில் யோகமுடையவன், அனேக சாஸ்திர மறிந்தவன், ஐந்துவித வித்தைகளில் தேர்ச்சி பெற்

றவன், சூதில்லாமல் தெளிவாய்ப் பேசுவான். வேசி சங்கமமுடைய, வன், ஞானி, ஜபம், தியானம், சமாதி இவைகளுடையவன், அனேக அரசர்களையண்டுபவன், பிரபலமான உத்தியோக பாக்கியமுடைய வன், ஜாதகன் மிக்க காமீ, வேலைக்காரி, வேலைக்காரன் முதலிய அனேக ஜனங்களுடன் பசு, தானிய சமர்த்தியுடையவன், தேசாந்த ரம் சஞ்சரிப்பான். ஆக்ஞை செய்யும் தண்ட நாயகன், மகா யோக முடையவன், எப்போதும் தியானம், ஜபம் செய்வான், நீச்ச அரச னிடம் சேர்க்கையுண்டு, தகப்பன் யோகமுடையவன், மந்தமான செய்கை யுடையவனுய் சில சமயம் துக்கிப்பான், மூன்று வாகனங் களுடன் கூடியவனுய் பொருள் சம்பாதிப்பான்.

(32) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம் அதா வது லக்கின ஸ்புடம் பாகை 239-36 கலை முதல் பாகை 239-48 கலை வரையில்) ஆகி லக்கினுதிபனுன குஜன், நீச்சத்தில் இருந்து பத் தாமதிபன் புதனுடன் கூடி ரிஷபத்திலிருந்தால் ஜாதகன் சிவந்த நிறத்தினன், நடுத்தர தேகமுடையவன், சமமான தேகமும், உஷ்ண வாயு பீடையுமுடைய தேகத்தினன், எப்போதும் நோயுடையோன், சொரி, தினவுடைய சரீரி, விரைவாத நோயுடையவன், வைத்தியத் தொழிலுடைய குலாசாரமுடையவன், சூத்திரப்பிரபுவால் தனவரவு, காடுகளின் மத்தியில் பட்டணத்தில் வசிப்பான், அவ்விடம் பொருள் பூமி யுடையவன், பிதுராஜ்ஜிதப் பொருள் இல்லை.

(33) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி இரண்டாமதிபனுன குரு, குஜனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் வாக்கு சாதுர்யமுடையவன், சாதுர்யமான யுக்தியுடையவன், யுக்தாயுக்த மறிந்த தன்மையாளன், பல தேசங்களில் பெயரெடுத்தவன், இரண்டு வித்தைகளில் சமார்த்தியன், வித்தைக்குத் தடையுண்டு, பருத்த பற் களுடையவன், பல் நோயுடையவன், மாந்தம், ஜுரம் உடையவன்.

(34) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி மூன்றுமதிபனுன சனி ராகுவுடன் கூடினுல் ஜாதகன் முன்பின் சகோதர மற்றவன், தன்னந்தனியனுவன், தைரியமில்லாதவன், இவ னுக்கு வைத்தியத் தொழில் மூலம் ஜீவனம்.

(35) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி நாலில் குரு இருந்து நாலாமதிபன் ராகுவுடன் கூடி மீனத்திலிருந்தால்

ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், ஜாதகன் தன் அம்மா னுல் வளர்க்கப்படுவான்.

(36) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஐந்தாமதிபன் சூரியனுல் பார்க்கப்பட்டு கும்பத்தில் பாபருடன் கூடி இருந்தால் ஜாதகனுக்குச் சர்ப்ப சாபத்தாலும், துர்த்தேவதை யின் சாபத்தாலும் புத்திரனில்லை. தத்துபுத்திரனுல் சந்ததியுண்டா கும், சாந்தி தானுதி செய்தால் காலாந்தரத்திலாவது வேறு மனைவி யிடமாவது வெகு சிரமத்தால் சந்ததியுண்டாகும்.

(37) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஆறுமதிபனுன செவ்வாய் நீசராசியாகிய கடகத்திலிருந்தால் ஜாதகன் ரத்த, வாத சுரம், கட்டி, மேகவாயு இத்தகைய நோய் பீடைகளுடை யவன், பித்த தேகமுடையவன்.

(38) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஏழாமதிபனுன சுக்கிரன் எட்டிலிருந்தால் ஜாதகனுக்கு வாலிபத்திலே விவாகம் நடக்கும், சிவந்த நிறமுடைய தாரம் வாய்ப்பாள், முதல் மனைவியை விரோதித்து அவளை நீக்கிவிட்டு மருமண முடிப்பன், அம் மான் மகள் இவனுக்கு மனைவியாவள், சிலர் ஜாதகன் ஏக களத்தி ரமே யுடையவனென்றும், மானமுடையவனென்றும், சீக்கிர கோப முடையவனென்றும், தயையுடையவனென்றும் சொல்லுகின்றனர்.

(39) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 215-24 கலை முதல் பாகை 215-36 கலை வரையில்) ஆகி லக்கினுதிபன் உச்சத்திலிருந்து சனியால் பார்க்கப்பட் டாலும், எட்டாமதிபன் குருவுடன் லக்கினத்திலிருந்தாலும் ஜாதக னுடைய ஜென்ம காலத்தில் கஷ்டப்பிரசவம். உத்திராம்ச ஜாதகனு டைய தாய் சுகம், புத்தியுடையோன், தயையுள்ளவன், வேததர்ம மறிந்தவன், நற்செய்கையுடையவன், மனைவியிடம் கூடியவனுய் நற் செய்கைகள் செய்வான், தேவாலயம், உத்தியாவனம், தடாகம் முத லிய தர்மகாரியங்கள் செய்வான், அதிக சம்பத்துடன் கூடிய ஜென நாயகன், சுசியுள்ளவன், உதாரகுணமுள்ளவன், அனேக பணியாளரு டன் கூடியவன், கற்பகாலம்வரை புகழுடையவன், தைரிய முடைய வன்.

(40) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கி னத்தில் புதனும், குருவும் இருந்தால் ஜாதகன் யோகி, எப்போதும்

தியானம் செய்வான், பூஜை முதலியவற்றில் பற்றுடையவன், சம்சாரத்தில் விரக்தியுள்ளவன், தியானத்தால் பரப்பிரம்மத்திலாழ்ந்தவன், புண்ணிய செய்கையுடையவன்.

(41) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபனான குஜன் உச்சனாய் மகரத்திலிருந்தாலும், ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம் முன்பாகம்) ஆகி எட்டாமதிபனான புதன், குருவுடன் கூடி லக்கினத்திலிருந்தாலும் ஜாதகன் வெளுத்த தேகமுடையவன், அழகன், புத்திமான், வாசாலகன், தெளிவுள்ளமுகம், கண்களுடையவன், அதிருஷ்டமுடையவன், தர்மவான், ராஜயோகமுடையவன், சிவபக்தர் குலத்துதித்தவன், ஹரி, ஹர பக்தியுடையவன், சுசியானவன், ஆசாரமுடையவன், ஞானவான், இங்கித மறிந்தவன், தயைக்கு இருப்பிடமானவன், வாலிபத்தில் அற்பசுகமுண்டு, விவாகத்துக்குப் பிறகு சுகமுண்டு.

(42) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபனான குஜன் சர ராசியாகிய மகரத்தில் உச்சனாயிருந்தால் ஜாதகன் வேறு தேசத்தில் அரசர்களுடன் பாக்கிய முடையவனாவான்.

(43) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஒன்பதில் கேது இருந்து ஐந்தாமதிபன் குரு புதனுடன் கூடி இருந்தால் ஜாதகன் நீச்சவித்தையில் சமர்த்தன், பலபாஷைகள் கற்றவன், அக்கிராரம், கிணர், வாவி முதலியன ஏற்பாடு செய்து தர்மம் செய்வான்.

(44) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் வித்தைக்குத் தடங்கலுண்டாகும், ஸமஸ்கிருதம் பிரியமாய் பேசுவான், ஜோதிட சாஸ்திரத்தின் வாக்கிய மறிந்தவன், நீச்ச அரசன் சமீபத்தில் பிரபலமான உத்தியோகம் வகிக்கும் பாக்கியமுடையவனாவான்.

(45) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி மூன்றுமதிபனான சனி ஒன்பதிலிருந்து சகோதரகாரகனான செவ்வாய் உச்சனாக இருந்தால் ஜாதகனுக்கு ஒரு மூத்த சகோதரி, புத்திர புத்திரிகளுடன் கூடியவள், எல்லோருக்கும் மூத்த கர்ப்பம் நாசமடையும், இவன் மூன்றுவது கர்ப்பம், நான்கு சகோதரர்கள், இளைய சகோதரி ஒருத்தி உண்டு, தன் தம்பிகளில் ஒருவன் தாய் வமிசத்திற்குத் தத்தாவான்.

(46) ஜென்ம லக்கினம் துலாம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி நாலாமதிபன் ஒன்பதிலிருந்து மாதாகாரகனான சந்திரன் சூரியன், சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் குணமுடையவள், புண்ணியவதி, புத்திர புத்திரிகளுடன் கூடியவள், தீர்க்காயுளுடையவள், ஜாதகன் தாய் விதவையான பின்பு தன் சகோதரியுடன் கூடியவள்.

(47) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஏழாமதிபனான சுக்கிரன் பத்தில் பலவானுயிருந்து குஜனால் காணப்பட்டால் ஜாதகனுக்குத் தன் ஜென்ம தேசத்திலேயே பாக்கியமுள்ள வம்சத்திலேயே விவாகம் நடக்கும், மனையாள் குணமுடையவள், புண்ணியமுடையவள், தாய் தகப்பனுடையவள், ரூபலக்ஷணங்கள் நிறைந்தவள், வெளுத்த நிறமுடையவள், பர்த்தாவுக்கு இனியாள், அனேக சகோதர சகோதரிகளுடன் கூடியவள், ராஜயோகமுடையவள், சிலகாலம் புத்திரத்தடையுண்டாகும், காலாந்திரத்தில் அவளுக்குப் புத்திரனுண்டாகும், ஏக களத்திரமுடையவன். உத்திராம்ச ஜாதகனுக்கு வேறு மனைவி யோகமுண்டு, பூர்வாம்சத்தில் அதாவது முன் பாகத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு இருமனையாள் யோகமில்லை என்று சிலர் சொல்லுகிறுர்கள்.

(48) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஐந்தாமதிபனான குரு புதனுடன் கூடி லக்கினத்திலிருந்து, ஐந்தில் கேது இருந்து அதற்குப் பதினேருமிடத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்குப் புத்திர தோஷமுண்டு, ஏகாதசியில் கோதானம் செய்து அரசமரப் பிரதக்ஷணம் செய்து, பொன்னால் சந்தான கோபால மூர்த்தி தானம் செய்ய தோஷம் தீரும், காலாந்தரத்தில் இரு புத்திரரும் மூன்று பெண்களும் தீர்க்காயுளாயிருப்பர்.

(49) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஒன்பதாமதிபனான சந்திரன் மேஷத்திலிருந்து, சூரியனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய பிதா மத்திமாயுளுடையவன், அனேக தாயுடன் கூடியவன், நீச்ச அரசனருகில் பிரபலமான உத்தியோக பாக்கியமுடையவன், அனேக பெண்கள் பிள்ளைகளுடன் கூடியவன், சிலகாலம் கஷ்டமனுபவிப்பான், வீடு, பூமி, தனம் இதுகளற்றவன், பல தேசங்களில் திரிவான்.

(50) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம் பூர்வாம்சம்)

ஆகி சூரியன் பன்னிரண்டினிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அற்பாயுளுடையவன்.

(51) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம் பூர்வாப்சம்) ஆகி பதினென்றில் ராகு இருந்தால் ஜாதகனுக்கு நீச்சப் பிரபுவால் தன வரவுண்டு.

(52) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினும்சத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் பிதுரு பாக்கியமற்றவன், தன் கையால் சம்பாதித்த பொருளுடையவன், வாலிபத்திலேயே பிதாவை இழப்பான்.

(53) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி விருச்சிக அம்சத்தில் சுக்கிரனும், ரிஷப அம்சத்தில் குஜனும் இருந்தால் ஜாதகனுக்கு அதிக வாலிபத்திலேயே விவாக முண்டு.

(54) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி குரு, புதன் கடகாம்சத்திலிருந்து, சனியால் குரு பார்க்கப்பட்டு, புத்திராம்சம் சூரியன், சனி இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் புத்திரனற்றவளும், மலடியும், தத்துபுத்திரனெடுபவளுமான மனையாள் ஒருத்தியை மணப்பான்.

(55) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி மீனும்சத்தில் கேது இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குச் சாந்தி தானத்தால் காலாந்தரத்தில் புத்திரலாப முண்டு.

(56) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சந்திரனும், சனியும் துலாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், தன்னுடன் பிறந்த சகோதரமற்றவன்.

(57) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபனான செவ்வாய் உச்சராசியிலிருந்தால் ஜாதகனுக்கு இருபத்தைந்து வயதுக்குமேல் பிரபலமான உத்தியோக பாக்கியமுண்டு.

(58) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி நாலாமதிபன் உச்சாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு மூன்று வாகன யோகமுண்டு.

(59) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ரோகஸ்தானமாகிய ஆறும் வீட்டில் சந்திரன் இருந்தால் ஜாதகனுக்கு ஜலபீனிசரோகமுண்டு.

(60) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினுதிபன் சனியால் பார்க்கப்பட்டு, சனி லக்கினுதிபனுல் பார்க்கப்பட்டு, லக்கினத்தில் குரு, புதனிருந்தால் ஜாதகன் ஆபத் சன்னியாஸ யோகமுடையவனுவான், மரணகாலத்தில் முக்தியடைவான், மறு பிறப்பில்லை.

(61) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி மூன்றுமதிபனுன சனி நீச்சனுய் மேஷத்திலிருக்கவும், சகோதர காரகனுன செவ்வாய் பதினென்றிலுமிருந்தால் ஜாதகன் ஒருவனுய், சகோதரனற்றவனுயாவது, சகோதரிகளுடன் கூடியவனுகவாவது, மாற்றுந்தாய் சகோதர சகோதரிகளுடன் கூடியவனுகவாவது இருப்பான், அரசனுக்குச் சகாயமாக இருப்பான்.

(62) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சூரியன், சனி புதனுடன் கூடினுல் ஜாதகனுடைய பிதா பிரசித்தனுய் மகானுயிருப்பான், ஜாதகனுடைய தகப்பனுக்கு மூன்று தாரங்களுண்டு, நீச்சவித்தையில் சமர்த்தன், கொஞ்சம் சங்கீத ரசமுள்ளவன், ஜாதகனுடைய பாட்டன் பிரசித்தி பெற்ற பிரபலமான உத்தியோக பாக்கிய முடையவன்.

(63) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சுக்கிரன் கன்னியாம்சத்தில் புதனுடன் கூடி இருந்தால் ஜாதகன் சங்கீதமறிந்தவன், பிரபு, பரோபகாரம் செய்பவன், பூமிகளுக்கு அதிபன், பல தேசங்களில் பெயரெடுத்தவன், எதையும் ஊகிக்கவல்லவன், சாமார்த்தியம் வாய்ந்தவன், வாசாலகன், அதிக தானம் செய்பவன். அதி வாலிபத்திலேயே விவாகம் நடக்கும், பெண்கள் பிள்ளைகளுடன் கூடியவன், எப்போதும் அரச சேவை செய்வான், நீச்ச வித்தையில் தேர்ச்சி பெற்றவன், பலபாஷை விசேஷமறிந்தவன், விஷ்ணு சங்கர பக்தியுடையவன், அறிவாளி, இனிமையாய்ப் பேசுவான், அனேகம் வேதியர்களைக் காப்பான்.

(64) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சுக்கிரன் அம்சத்தில் புதனுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய இல்லாள் வெளுத்த அழகிய மேனியாள், பாக்கியமுடையவள், வீட்டுவேலைகளில் சாமார்த்தியசாலி, அனேக புத்திரிகளுடன் கூடியவள், அன்னதானம் முதலிய தர்மம் செய்வாள்.

(65) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி பத்தாமதிபன் சனியுடன் கூடினுல் ஜாதகன் தாஸீ தாஸ ஜெனங்கள் நிறை

யப் பெற்றவன், ராஜலக்ஷணங்களுடன் கூடியவன், செல்வவான், தீனர்களைப் பாதுகாப்பான், எப்போதும் வித்தைக்குத் தடையுண்டு, சத்கர்மங்களுக்குத் தடையுடையவன், தேவப் பிராமணபக்தன், குளம், தோட்டம் முதலிய தர்மம் செய்வான், வீடு, பூமி முதலிய பாக்கியங்களுடையவன். உத்திராம்சத்தில் ஜெனித்த ஜாதகனுக்கும் இவ்விதமேயாகும், ஆனால் பாக்கியம் கொஞ்சம் வித்தியாசமுண்டு.

(66) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (உரகாம்சம்) ஆகி சந்திரன் குருவுடன் கூடி இருந்தால் ஜாதகன் விப்பிரகாலத்தில் பிறந்தவன், பிராமண ஜன்மம், சுகவான், பாலாரிஷ்டம் இல்லை.

(67) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (உரகாம்சம் முன்பாகம்) ஆகி உரகாம்சத்தில் சந்திரனிருந்து பத்தாம்பாவம் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கொடி சுற்றிப் பிறப்பான், உத்தரபாகத்தில் கொடிசுற்றுதல் இல்லை; கொஞ்சம் பாலாரிஷ்டபயமுண்டு, பூர்வபாகத்தில் சிலசமயம் சுகமுண்டு, பாலாரிஷ்டபயமில்லை.

(68) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (உரகாம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் ராகு சிம்மாம்சத்தில் பத்தாம் பாவாதிபனுடன் கூடியும், ஏழாம் பாவாதிபனால் பார்க்கப்பட்டுமிருந்தால் ஜாதகனுக்குத் தார கிலேசமுண்டு, தரித்திரத்தன்மையால் வருந்துவான்.

(69) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (உரகாம்சம்) ஆகி சந்திராம்சாதிபன் குரு ஆகி, அவர் தன் சுயக்ஷேத்திரத்தில் சுய நவாம்சத்தில் சனியுடன் கூடினால் ஜாதகன் பாவச் செய்கையுடையவன், தாமஸ சுபாவமுடையவன்.

(70) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (உரகாம்சம்) ஆகி சந்திரன் பாபனுடன் கூடி சுபரால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் உள்ளத்திற் கோபமுடையவன், தெளிந்த மனதுடையவன், இதமான சத்துரு போன்ற காரியமுடையவன்.

(71) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (உரகாம்சம்) ஆகி சந்திரன் குருவுடன் கூடியாவது அன்றி பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் சாந்தபுத்தி, நல்ல வித்தை, ஜெனக்கட்டு, ரசிகன், சுகமுடையவனுவான்.

(72) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸர்பாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 221-12 கலை முதல் பாகை 221-24 கலை

வரையில்) ஆகி குரு பத்தாம் பாவத்திலிருந்து குஜன் சனியுடன் கூடியாவது பார்க்கப்பட்டாவது இருந்து புதன், தன் உச்சாம்சத்திலிருந்து அதன் திரிகோணத்தில் சந்திரன் இருந்து, ராகு வக்கிரமாய் இருக்கும் ஸாம்ராஜ்ய சகடயோக ஜாதகன் பிராமண ஜென்மம், அழகன்.

(73) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸூமத்யம்சம் பூர்வபாகம்) ஆகி புதன் குஜனுடன் கூடியாவது, பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் தன்னந்தனியன், சகோதரனற்றவன்.

(74) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸ்ூமத்யம்சம் பூர்வபாகம்) ஆகி சந்திரன் மகரத்தில் புதன் அம்சத்திலிருந்தால் ஜாதகன் வாலிபத்திலேயே பிதா நாசமடைவான், சந்தேகமில்லை.

(75) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸூதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 221-12 கலை முதல் பாகை 221-24 கலை வரையில்) ஆகி லக்கினத்திலிருந்து பத்தாம் பாவத்தில் குரு இருக்கும் சகட யோக ஜாதகனுக்கு பிழைத்திருக்கும் வரையில் நல்ல சௌக்கியமுண்டு.

(76) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸூமத்யம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபனான சனி லக்கினத்திற்கு நான்கு கேந்திரங்களில் ஒன்றிலிருந்து ஜாதகன் பூர்வாம்சத்தில் ஜெனித்தவனானால் அவனுக்கு ஒரு சகோதரியுண்டு. உத்திராம்சத்தில் ஜெனித்தவனானால் அவனுக்கு இரு சகோதரிகளுண்டு.

(77) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸூமத்யம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபனான சனி, மிதுனத்தில் கும்பநவாம்சத்திலிருந்தால் பூர்வபாகத்தில் ஜெனித்த ஜாதகன் தாய் தீர்க்காயுளுடையவள்.

(78) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸூமத்யம்சம்) ஆகி மாதுலாதிபனான குஜன் பதினோராம் பாவத்தில் மேஷ நாவாம்சத்திலிருந்தால் ஜாதகன் இரு அம்மான்கள் யோகமுடையவன்.

(79) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸூமத்யம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் தனுசு அம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு ஜென்ம தேசத்திலேயே விவாகமுண்டு, தென் கிழக்கில் ஜாதகனுக்குத் தாரம் வாய்ப்பள். உத்திராம்சத்தில் பிறந்த ஜாதகனுக்கு பதினைந்தாவது வயதில் நடக்கும், பூர்வபாகத்தில் பிறந்தவனுக்கு பதின்மூன்றாவது

வயதில் செல்வம் நிறைந்த வீட்டில் விவாகம் நடக்கும், மாமனார், மாமியாருடன் கூடியவன், சுகவான்.

(80) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸமத்யம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் நவாம்சத்தில் கும்பராசியில் இருந்து, சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டு ஏழாம் பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகன் தார வமிசத்தில் பாக பாக்கிய முடையவன், விவாகத்திற்குப் பிறகு சௌக்கியம்.

(81) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸமத்யம்சம்) ஆகி பதிஞோமிடத்தில் சுக்கிரனிருந்து சனியுடன் கூடினுல் ஜாதகனுக்கு ஸ்திரீ மூலம் பாக்கியமுண்டு.

(82) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸமத்யம்சப் பூர்வபாகம்) ஆகி ஏழாம் பாவம் பாபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மாமனுருக்கு இருதாரமுண்டு, அம்மான் ஒரு தாரமுடையவன். உத்திராம்சம் ஆனுல் ஜாதகனுக்கு இருதாரமுண்டு.

(83) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸமத்யம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் கதாம்சத்தில் இருந்தால் ஜாதகன் வினைவி கர்ப்ப நஷ்டமுடையவள், இறந்த சந்ததி பெறுவாள், அந்த தோஷ பரிகாரத்துக்குச் சாந்தி செய்ய, சாந்தி:— வேதமறிந்தவனும், குடும்பஸ்தனுமான ஒருவனுக்கு பூஷணிக்காய் தானம் செய்திடில் கர்ப்ப புஷ்டி உண்டாகும்.

(84) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸமத்யம்சம்) ஆகி நாலாம்பாவ ஸ்தானதிபனை சனி, ஸ்திராம்சத்தில் சுக்கிரனுல் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஜாதிக்குத்தகுந்த வித்தையுண்டாகும், மணி, ரத்தினம் முதலியன பரீட்சை செய்வான்.

(85) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸமத்யம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் குரு மேஷாம்சத்திலிருந்தால் ஜாதகன் நித்தம் ஸத்கதையில் பிரியன், தர்ம சாஸ்திர புராணமறிந்தவன், இஷ்டம் பூர்த்தியாகும் வரை தர்மம் செய்வான், தியாகம் செய்வான். எல்லா ஜெனங்களுக்கும் பிரியன், வாத ஸ்லேஷ்ம சுபாவமுடையவன், பித்ததேகம், இரு பெயருடையவன்; சத்தியவான், கொஞ்சம் ஸ்திரீ சேர்க்கையில் பாபமுடையவன்.

(86) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸமத்யம்சம்) ஆகி சுக்கிரன் சனியுடன் கூடியாவது, சனியால் பார்க்கப்பட்டாவது இருந்தால்

ஜாதகன் போகமுடையவன், அரசனை எஜமானனாகவுடையவன், தர்ம மார்க்கத்திலிருப்பவன், பதினாயிரத்துக்கும் அதிகமான தனமுடையவன்.

(87) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸூதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 221-12 கலை முதல் பாகை 221-24 கலை வரையில்) ஆகி சனி, சுக்கிரனால் பார்க்கப்பட்டாலும், அன்றி கூடியாவது இருந்தால் ஜாதகன் கோச முடையவன், தனவான், பூர்வபாகத்தில் ஜெனித்த ஜாதகன் ஞானி, கொஞ்சம் நோயுடையவன்.

(88) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸூதாம்சம்) ஆகி சந்திரன் குடிலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் கொஞ்சம் மனசஞ்சல முடையவன்.

(89) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸூதாம்சம்) ஆகி லக்கினத்திற்கு கர்ம பாவமாகிய பத்தாம் பாவத்தில் குரு இருந்தால் நல்ல புண்ணியவான், ஸேதுஸ்நானம் செய்வான், கங்காஸ்நானம் அல்லது மும்முறை ஸேதுஸ்நானம் செய்வான், பூர்வ புண்ணிய விசேஷத்தால் அறுபத்தொன்பதாவது வயதில் மரணமடைவான், வாலிபம், யௌவனம், முதுமைப் பருவங்களில் மும்முறை ஸேதுஸ்நானம் செய்வான்.

(90) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 222-48 கலை முதல் பகை 223-00 கலை வரையில்) ஆகி மூன்றும் பாவாதிபனான சனி, லக்கினத்திலாவது, லாபத்திரிகோணத்திலாவது இருந்தால், ஜாதகன் இளைய சகோதரமில்லாதவன், பிறந்தாலும் இறக்கும்.

(91) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபனான சனி, லாபத்தில் நீச்சாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய வாலிபத்திலேயே தாய் நாசமடைவாள், சுபபலன்களுமுண்டு.

(92) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி லக்கினாதிபன் ஆரும் பாவாரூடத்தில் இருந்து அவரால் பார்க்கப்பட்டு, ஏழு அல்லது பத்து இந்த பாவாதிபர்கள் பலவானாயிருந்தால் ஜாதகன் மகாதானம் முதலியன செய்வான், புத்திரபாக்கியமில்லை.

(93) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி தனபாவ அம்சத்தில் சந்திரனிருந்து, சூரியன் பாக்கியத்திரிகோணத்தில் இருந்

தால் அவர்களின் அந்தர, திசா காலங்களில் ஜாதகனுக்கு மகாதான பலன் சித்திக்கும்.

(94) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி லக்கினத்திற்குப் பாக்கிய ஸ்தானமாகிய ஒன்பதில் குஜனுடன் கூடி இருந்து, புத்திரகாரகனுன குரு ராகுவுடன் சேர்ந்திருந்தால் ஜாதகன் புத்திர சோகமடைவான், அத்தோஷத்திற்குப் பரிகாரமாக பொன்னுல் கிருஷ்ணப் பிரதிமை தானம் செய்து, ஷஷ்டி விரதம் இருக்கவும், விதிப்படி நாகப் பிரதிஷ்டை செய்து ஸேதுஸ்நானம் செய்யவும், மஞ்சள் லிங்கம் பூஜிக்கவும், நல்ல புத்திரனை அடைவான், சிம்சுமார தானத்தால் தீர்க்காயுளுடைய குமாரனை அடைவான்.

(95) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி சிம்மத்திலாவது அன்றி விருச்சிகத்திலாவது சூரியனிருந்தால் ஜாதகன் இறந்த புத்திரனடைவான், ஜீவபுத்திரனுமுண்டு, அதிக பாக்கியமுடையவன், உதாரத் தன்மையுடையவன், பராக்கிரமமுடையவன், சாமார்த்தியமான வாக்குடையவன், குலத்தைப் பரிப்பவனுவான்.

(96) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி சகடயோக ஜாதகத்தில் குரு ராகுவுடன் கூடினுல் ஜாதகனுக்குச் சந்தானத் தடையுண்டு, தாரம், புத்திரர் இவர்கள் விசாரமுடையவன்.

(97) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி எட்டம் பாவாதிபன் ஆறும் பாவத்திலும், பன்னிரண்டாம் பாவாதிபன் ஐந்தாம் பாவத்திலும் இருந்தால் ஜாதகன் வேறுதாரத்திடம் காலாந்தரத்தில் புத்திரனடைவான்.

(98) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம்) ஆகி சுக்கிரன், இரண்டாம் பாவத்தில் எட்டாம் பாவாதிபன் அம்சத்தில் இருந்தால் ஜாதகன் கெட்டபெயருடையவனுவான்.

(99) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கதாம்சம் பூர்வபாகம்) ஆகி எட்டாம் பாவாதிபன் புதன் ஆகி ஐந்தாம் பாவாதிபனுடன் கூடினுல் ஜாதகன் அறுபத்தைந்தாவது வயதில் மரணமடைவான்.

(100) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (ஸுப்ரமாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 224-12 கலை முதல் பாகை 224-24 கலை வரையில்) ஆகி பாக்கியாதிபன் லக்கின கேந்திரத்திலும், லக்கினுதிபன் பாக்கியத்தில் அதாவது ஒன்பதில் நாலாமதிபனுடன் கூடினுல் ஜாதகன் ஹரிசங்கர பக்தியுடையவன், எப்போதும் தேவியைத்

துதிப்பதில் பிரியன், உபாயத்தால் காரியத்தைச் சாதிப்பான், அழகிய ஸ்திரீகளுக்கு நாயகனானவன், ஜாரன், சூரன், காவிய, நாடக, நாட்டிய, அலங்காரம் இவைகளின் தத்துவம் அறிந்தவன், காமாதி விஷயங்களில் பற்றுடைய மனதுடையவன், அயல் பெண்டுகளை அனுபவிப்பதில் பிரியன், ருதுவான பெண்களை அணைபவன், சதா காம விஷயங்களில் அலைவான், வாகனத்திலிருந்து விழுவான், வாவிபத்தில் பிராணபயமுண்டு, யௌவனத்தில் நோயடைவான், முதுமையில் ஆயுதகண்டம் அல்லது யோகபங்கமுண்டு.

(101) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கின ஸ்புடம் பாகை 215-24 கலை முதல் பாகை 215-36 கலை வரையில்) ஆகி சனி லக்கினத்தில் குஜனுடன் கூடியும், சூரியன் புதனுடன் கூடி நாலாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் பிரசவகாலத்தில் தாய்க்கு அதிக பிரசவ நோயுண்டு, உத்திராம்சமாகில் அதிக சுகமுண்டு.

(102) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபன், ராஜ்ஜியாதிபனான பத்தாமதிபன், சுகாதிபனான நாலாமதிபன் லக்கினத்தில் வாஸவ ஷஷ்டியாம்சத்திலிருந்து, பாக்கியாதிபனான ஒன்பதாமதிபன், ராஜ்ஜிய கிரகத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குச் சிம்மாஸனம் கிட்டுமென்று சொல்லுகிறார்கள், அரசாங்கத்தில் வெகுமானத்துடன் ஜீவிப்பான், ஜெனங்களையடக்குவான், தெளிவான சொல்லுடையவன், பிரசித்தன், புத்திமான், தயையுடையவன், வேததர்மம் அறிந்தவன், நற்கர்மம் செய்வான், அயல்தாரங்களை அணைவான், அரசாங்கத்தில் அதிகாரமுடையவன், மெதுவான சொல்லுடையவன், செல்வம் நிறைந்தவன், எப்போதும் அன்னதானம் செய்வான், நரவாகன யோகமுடையவன், சங்கீத, சாஹித்யம், விநோதங்களில் பிரியன், காமீ, மகாராஜாவுக்குச் சமமான யோகமுடையவன்.

(103) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினாதிபன் ஸ்திரராசியிலிருந்து நாலாம் பாவாதிபனுடன் கூடினால் ஜாதகன் பிறந்த இடத்திலிருந்து தெற்குத்தேசத்தில் ராஜயோகமடைவான்.

(104) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம் பூர்வபாகம்) ஆகி சந்திரன் இந்திராப்ச நாடியிலிருந்தால் ஜாதகன் அழகன், புத்தி

மான், வாசாலகன், தெளிந்த முகம் கண்களுடையவன், அதிருஷ்ட சாலி, தருமாத்மா, சிவந்தநிறம், அழகிய தேகம், சங்கீதத்தில் பிரியன், பூச்சு, புஷ்பம், வஸ்திரங்களில் பிரியன், பரஸ்திரீ சங்கமமுடையவன், தேவாலயம், தடாகம், தோட்டம் முதலிய தர்மகாரியங்கள் செய்வான், எப்போதும் தர்மவான், ராஜயோக முடையவன், லட்சக் கணக்கான தனமுள்ளவன், மூன்றுவாகன யோகமுடையவன், சிம்மாஸனத்தில் அமரும் அதிகாரி.

(105) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கினுதிபன் சனியுடன் கூடினுல் ஜாதகன் வைசூரி கண்டமுடையவன், எப்போதும் சுகசரீரம், அற்ப நித்திரை, நிலையுள்ள விரதமுடையவன், ஆயுளுள்ளவரையில் சுகமுடையவன், உண்மை பேசுவான், மிகுந்த அறிவாளி, பந்துக்களைப் போஷிப்பான், எல்லோருக்கும் உபகாரம் செய்வான்.

(106) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபன் குஜனுடன் கூடினுல் ஜாதகன் வாசாலகன், சாமார்த்தியம் வாய்ந்த யுக்தியுடையவன், நல்லது, கெட்டது இவைகளின் விசேஷமறிந்தவன், பலதேசத்தில் பிரசித்தியுடையவன்.

(107) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சகோதரஸ்தானமாகிய மூன்ரும் பாவத்தில் சுக்கிரனிருந்து, அந்த மூன்ரும் பாவாதிபன் குருவுடன் கூடியாவது, சீதளாம்சத்திலாவது இருந்தால் ஜாதகனுக்கு நான்கு சகோதரர்களென்று சொல்வர், அவர்களில் ஒருவன் நாசமடைவான், அற்பாயுளுடையவன், பிள்ளையில்லாதவன், சகோதரி ஒருத்தி பெண்களைப் பெற்று அற்பாயுளுடையவளாய் யௌவனத்தில் மரிப்பாள்.

(108) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி வித்யாஸ்தானுதிபனுன சனி, குஜனுடன் கூடி காளை ஷஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகன் வித்தைக்குத் தடையுடையவன், கொஞ்சம் வித்தையில் சாமர்த்தியமுடையவன்.

(109) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் குஜனுடன் கூடி வஸுதாம்சத்தில் விருச்சிகத்தில் இருந்தால் ஜாதகன் பிறந்த இடத்திலிருந்து தென்தேசத்தில் அரசாங்கத்தார் நிறைந்த நகரத்தில் பெரிய ஆறு சமீபத்திலுள்ள தேசத்தில்

தெற்கு வடக்கு வீதியில், மேற்குவாயிலுள்ள வீட்டில் லக்ஷ்மி கோவில் நித்தியவாச யோக்கியமுண்டு, ராஜயோக முண்டாகும்.

(110) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி புத்திர ஸ்தாநாதிபனான குரு குஜனுடனும், சனியுடனும் கூடி, ஏழாம்பாவ ஆரூடாதிபன் கேந்திரத்திலிருந்து, ஏழாம்பாவாரூடம் குஜனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் இருதாரயோக முடையவன், மூத்தமனைவி பதிவிரதையானவள், மூத்தவளே புத்திர புத்திரீகளுடன் கூடியவள், மூத்தமனைவியின் புத்திரன் மானமுடையவன், தாரசோகமுடையவன், வேறு மனைவியுடன் கூடியவன், ஜாதகன் மூத்தமனைவியின் புத்திரி வாலிபத்திலேயே விதவையாவாள், தன்னிருப்பிடத்திற்கு மேற்குத்திக்கிலாவது, வடமேற்குத் திசையிலாவது நிச்சயமாய் இளைய மனைவிவாய்ப்பாள், இளையமனைவி அழகானவள், கணவனிடம் அன்புடையவள், நல்ல குணமுடையவள், இனிமையாய்ப் பேசுபவள், இருபுத்திரர், மூன்றுபெண்கள் தீர்க்காயுளுள்ளவளாயிருப்பர், சாந்தி செய்ய இன்னமும் அதிக முண்டாகும்.

(111) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபனான சனி, குஜனுடனும், குருவுடனும் கூடினால் ஜாதகன் தாய் குணமுடையவள், புண்ணியவதி, சகோதர சகோதரிகளுடன் கூடியவள், புத்திரனுக்குப் பிரியம் செய்வாள், நல்லதன்மையுடையவள்.

(112) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி பிதா ஸ்தாநாதிபனான சந்திரன், பிதாகாரகனான சூரியன், புதன் இவர்கள் ஒன்றாய்க் கூடினால் ஜாதகன் தகப்பன் மகான், ஞானி, பித்தநோய் பீடையுடையவன், பரஸ்திரீ சங்கமமுடையவன் அல்லது வேறு மனைவியுடனிருப்பான்.

(113) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வசுதாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் வித்தைக் குத்தடையுண்டாகும். யுக்தாயுக்த விசேஷமறிந்தவன், பலதேசங்களில் பிரசித்தியுடையவன், தந்தவாயு பீடை, பல்லில் ரத்தப் பெருக்கு இதுகளுடையவன், பிதுரார்ஜ்ஜிதமில்லாதவன், வைசூரி, ஜ்வரகண்டமுடையவன்.

(114) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சகோதர பாவமாகிய மூன்றாம்பாவத்தில் சனியும், சந்திரனுமிருந்து சகோ

தாகாரகனுன செவ்வாய் எட்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு முன் பின் சகோதரமில்லே, இவன் ஒருவனே, மூத்த சகோதரி ஒருத்தி, இளேய சகோதரி ஒருத்தி இவ்விருவரே உயிருடனிருப்பார், மற்றவர் நாசமுறுவர், உத்திராம்சம் ஆகில் ஜாதகன் சகோதர சகோதரிகளுடன் கூடியவன், சிலகாலம் காதுசூலே, அண்டவாத பீடை இவைகளால் வருந்துவான்.

(115) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் தீர்க்கா யுளுள்வளாயிருப்பாள், முதலில் தகப்பனும், பின்னுல் தாயும் மரண மடைவாள், பூமி பாக்கியங்கள் தானே சம்பாதிப்பான், உஷ்ணவாயு சரீரம், மார்புநோய் பீடையுடையவன், வாகன யோகமுடையவன்.

(116) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஐந் தாம் பாவாதிபன் குரு ஆகி துலாத்திலிருந்து சுக்கிரனுல் பார்க்கப் பட்டால் ஜாதகனுக்கு வேறு தாரத்திடம் புத்திர லாபமுண்டு, சில சமயம் காலாந்தரத்திலுண்டாகும், இரு புத்திரர், இருபுத்திரிகள் தீர்க்காயுளுடையவராயிருப்பர், சாந்தியால் புத்திரசுகமுண்டு, புத்திரர் சாந்தியாதிகளால் அதிகமுண்டாவர், குஹ்யரோகம், மூத்திர கிருச்ர பீடை இதுகளுடையவன்.

(117) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஏழா மாரூடாதிபன், பன்னிரண்டினில் இருந்தாலும், ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஏழாமாரூடம் சனியால் பார்க்கப்பட் டாலும், ஜாதகனுக்கு உபநயன காலத்திலேயே விவாகம் நடக்கும், அம்மான் மகள் மனேவியாக வாய்ப்பாள், அற்பாயுளுடையவள், தார சுகமில்லாதவன், வேறு தாரயோகமுண்டு, ருதுவான பெண்கள், பலஜாதி பெண்கள் இவர்கள் சேர்க்கையுடையவன், சிலர் மூன்று தாரமுடையவனென்கின்றனர், அனேக பெண்கள் சேர்க்கையுடை யவன்.

(118) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி பிதா ஸ்தானுதிபனுன (ஒன்பதாம் பாவாதிபனுன) சந்திரன் மகரத்தில் சனியுடன் கூடினுல் ஜாதகன் வாலிபத்திலேயே பிதா மரணமடை வான், இரண்டாயிரம் தனமுடையவன், பிரபு லக்ஷணமுடையவன், நித்தம் அன்னதானம் செய்வதில் பிரியன், நித்திய சடங்கைச் செய் வான், சுசியானவன்.

(119) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 235-24 கலை முதல் பாகை 235-36 கலை வரையில்) ஆகி லக்கினுதிபனுன குஜன் உச்சத்தில் மகாத்திலிருந்தால் ஜாதகன் ஜெனங்களை சிக்ஷிப்பான், ரக்ஷிப்பவன், பராக்கிரமமுடைய வன், சுதந்தரமுடையவன், சத்துருக்களுக்குத் துக்கம் தருவன், சீக்கிர கோபமுடையவன், தெளிந்த மனமுடையவன், வேதாந்த ஞான முடையவன், சூட்டுத் தேகமுடையவன், அறிவாளி, தர்ம புண்ணிய மார்க்கங்கள் அறிந்தவன், புராணங்களறிந்தவன், தேவப்பிராமண பக்தி செய்பவன், தோட்டம், உத்தியாவனம் முதலிய தருமகாரியம் செய்வான், கிராமத்தைக் காப்பாற்றி அதிக செலவு செய்வான், சுசி யானவன், ஆசாரமுடையவன், வாசாலகன், அதிகதானம் செய்ப வன், தகப்பனை காட்டிலும், கீர்த்திவாய்தவன், சிவபக்த குலத்துதித் தவன், செக்கு முதலிய பாக்கியமுடையவன், பத்தாயிரத்துக்கு அதிக தனமுடையவன், ஜாதியிலுயர்ந்தவன், அரசாங்கத்தில் பிரசித்தன், ராஜலக்ஷண முடையவன், பெருத்த விரையுடன் வாத நோயுடைய வன், எப்போதும் தருமம் செய்வதிலேயே சிந்தையுடையவன்.

(120) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம்) ஆகி இரண் டாம் பாவாதிபன் சத்துரு ராசியிலிருந்தால் ஜாதகன் சத்துருக்கள் மூலம் தனச்செலவு உடையவன், இனிப்பு, துவர்ப்பு வஸ்துக்களில் பிரியன், பெருந்தன்மை வாய்ந்தவன், சொன்ன சொல் தவறுதவன்.

(121) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம்) ஆகி சகோ தர பாவாதிபனுன சனி மிதுனத்திலிருந்து சகோதர காரகனுன செவ்வாய் தன்னுச்ச ராசியாகிய மகாத்திலிருந்தால் ஜாதகனுக்கு மூத்த சகோதரர் இருவர் உண்டு, இளைய சகோதரமில்லை, மூத்த சகோதரிகள் இருவர், இளையவள் ஒருத்தி, அல்லது மூத்த சகோதரி கள் நால்வராகும், நடு மூத்தசகோதரன் அதிக மக்களையுடையவன், சாத்வீக குணமுடையவன், சுதந்தரத்தில் இருப்பான், வீட்டுவேலை செய்பவன், குணவான், இளையசகோதரி நல்லவாசமும், பாக்கியம் உடையவள், புத்திரி புத்திரர்களுடையவள், மூத்த சகோதரி தரித் திரத்தால் வருந்துவாள், ஒருத்தி மரிப்பாள், ஒருத்தி புத்திரி புத்திரர் களுடன் கூடியவளாகவாவது இருப்பாள், அல்லது மூத்த சகோதரன் ஒரு புத்திரன் இரு புத்திரிகளுடன் கூடியவன்.

(122) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபனுன சனி மிதுனத்தில் மீனும்சத்திலிருந்தால் ஜாதகன்

தாய் குணமுடையவள், நல்லாள், புத்திரபுத்திரிகளுடன் கூடியவள்.

(123) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம் ஆகி ஒன்பதாமதிபனான சந்திரன் தன் சுவக்ஷேத்திரமாகிய கடகத்தில் இருந்து, சூரியன் ரிஷபத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் புகழுடையவன், சாது, அனேக சகோதரர்களுடன் கூடியவன்.

(124) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (துருவாம்சம்) ஆகி சுக்கிரன் ரிஷபத்தில் இருந்தால் ஜாதகன் அதிக மனைவிகளுடன் கூடியவன்.

(125) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 239-36 கலை முதல் பாகை 239-48 கலை வரையில்) ஆகி லக்கினாதிபதியான செவ்வாய் ஒன்பதாமிடத்தில் நீச்சராசியில் இருந்து பத்துக்குடைய சூரியனுடன் கூடி அல்லது ரிஷபராசியில் இருந்து, லக்கினத்தைப் பார்க்கும் பொழுது பிறந்தவன் சிவந்த நிறமுள்ளவன், மத்தியமான தேகத்தையுடையவன், சமமானதேகி, நல்ல ரூபத்துடன் மத்திய காத்திர முடையவன், சூட்டுத்தேகி, வாயுசரீரம் உள்ளவன், எப்போதும் ரோகமுடையவன், இரண கண்டாதி ரோகமுடையவன், விரைவாதத்தால் கஷ்டப்படுவான், வைத்தியத்தொழில் செய்வான், வைத்திய வியாபாரம் செய்வான், குலாச்சாரம் தப்பாதவன், சூத்திரப்பிரபுவால் பணக்காரனுவான், வனாந்தரத்திலாவது, பட்டினத்திலாவது வாசம் செய்பவன், இருப்பிடத்தில் பூமி, வாஹன, தனம் முதலியன உடையவன், பிதுராஜ்ஜித சொத்தில்லாதவன், பாட்டனுடைய க்ஷேத்திர தனம் இருக்கும்.

(126) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி இரண்டாமிடத்துக்குடைய குரு, செவ்வாயால் பார்க்கப்பட்டால் வாசாலகன், சாதுரிய யுக்தியுடையவன், யுக்தா யுக்தம் தெரிந்தவன், அனேக தேசங்களில் பிரசித்தி பெற்றவன், இரண்டு வித்தையில் கெட்டிக்காரன், படிப்புக்கு இடையூறுடையவன், ஸ்தூல சரீர பிராமணன், பல்லில் வியாதியுடையவன், மாந்த ஜ்வரவிசேஷ முள்ளவன்.

(127) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி மூன்றாமிடத்துக்குடைய சனி, ராகுவுடன் கூடியிருந்தால் முன் பின் சகோதரமில்லாதவனும், தான் ஒருவனே தைரியஹீனனாகவும், வைத்திய வியாபாரத்தால் ஜீவனமும் செய்வான்.

(128) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி குரு நான்காமிடத்தை அடைந்து, நாலுக்குடைய சனி, ராகுவுடன் கூடி மீனத்தில் இருந்தால் மாதா தீர்க்காயுள் உள்ளவள், ஜாதகன் மாமனுல் காப்பாற்றப்படுவான், ராகு திசையில் தாய்ப் பீடையும், குரு திசையின் கடைசியில் மரணமும் உண்டாகும்.

(129) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஐந்துக்குடைய குரு செவ்வாயால் பார்க்கப்பட்டு, கும்பத்தில் இருக்க புத்திரஸ்தானம் பாபியுடன் கூடி இருந்தால் ஜாதகன் புத்திரனில்லாதவன், தத்து எடுப்பதால் சந்ததி விருத்தி, முன் ஜென்மத்தில் சர்ப்ப சாபத்தினுலும், துர்த்தேவதையாலும் சபிக்கப்பட்டு புத்திரனில்லாதவனுக ஆகி இந்த ஜென்மத்தில் தத்து மூலம் சந்ததியும், காலாந்திரத்தில் சாந்தியாவது அல்லது மறுதாரத்தினிடத்திலாவது புத்திரனை அடைவான்.

(130) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஆறுக்குடைய செவ்வாய் நீச்சனுகியிருந்தால் ரத்தவாந்தி செய்வான், ஜுரத்தாலும், மேகவாயுவாலும், பித்தத்தாலும் கஷ்டமடைவான்.

(131) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஏழுக்குடைய சுக்கிரன் எட்டாமிடத்தில் இருந்தால் பாலியத்தில் கலியாணம் நடக்கும், சந்திராந்திரத்தில் ஏழாவது வயதில் விவாக லாபமும், ரத்த சிவப்பு நிறமான களத்திரம் கிடைத்தாலும் அவளைத் தியாகம் செய்துவிடுவான், ஜாதகன் தன் மனைவிக்குத் தானே சத்துரு, வேறு மனைவியை விவாகம் செய்வான், மாமன் மகள் இவனுக்கு மனைவியாவாள், ராகு தெசையின் பிற்பாதியில் சுக்கிர புக்தியில் பணவரவுண்டாகும், மனைவியின் கடைசிகாலத்திலாவது, அவளுக்குப்பிறகாவது தனத்தை யடைவான், கொஞ்சகாலம் சுகியாகியிருப்பான்.

(132) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஒன்பதுக்குடைய சந்திரன் குருவுடன் சனி ராகு இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் விஷாதிசார தோஷத்தால் சுகக்குறைவடைந்து, ஒவ்வொரு திசையிலும், சந்திரன், புதன், ராகு, சூரியன், செவ்வாய் புக்திகாலங்களில் கோசாரத்தில் சனி கெட்டஸ்தானத்தில் இருக்கும்போது அபமிருத்து பயமும் உண்டாகும்.

(133) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (காந்தாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 233-36 கலை முதல் பாகை 233-48 கலை

வரையில்) ஆகி நான்காம்பாவத்துக்குடைய சனி ஏழாம்பாவத்தில் இருந்து மாதுருகாரகன் பதினோராம்பாவத்தில் இருந்தால் தான் ஒருவனே ஜெனித்தவன், அல்லது ஸ்திரீ சகோதரியுடன் பிறந்தவன், மாற்றுந்தாய் பிள்ளைகளுடன் கூடினவள், தான் ராஜனுக்கு உதவியாயிருப்பான்.

(134) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (காந்தாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபன் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பிரபலனாயிருப்பான், இரண்டு அல்லது மூன்று தாரமுடையவன், நீச்சவித்தையில் வல்லவன், சங்கீத ரசமறிந்தவன், கவித்துவமுடையவன், பாட்டன் பிரசித்தியுடையவன், உத்தியோகத்தால் பிரபல்லியமடைந்தவன்.

(135) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (காந்தாம்சம்) ஆகி சுக்கிரன் ஏழாம்பாவாதிபதியாகி கடகாம்சத்தில் புதனுடன் கூடியிருந்தால் தான் சங்கீதவித்வான், பிரபு, வெகு பாலியத்தில் விவாகமடைவான், ஸந்ததி சமிருத்தியுடையவன், ராஜசேவை செய்பவன், பல பாஷைகளில் விசேஷமாய்த் தெரிந்தவன், விஷ்ணு, சிவபூஜை செய்பவன், பக்தியுள்ளவன், புத்திமான், இனிமையாய்ப்பேசுபவன், அநேக பிராமணர்களை ரக்ஷிப்பவன்.

(136) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (காந்தாம்சம்) ஆகி சுக்கிரனுடைய அம்சத்தில் ரிஷபத்தில் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய மனைவி கருப்பு நிறமுள்ளவள், பாக்கியவம்சத்தில் பிறந்தவள், வீட்டுவேலையில் தாரந்தரையாயிருப்பாள், வெகு புத்திர புத்திரிகளை உடையவள், சதா அன்னம் முதலியவைகளைத் தானம் செய்பவள்.

(137) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (காந்தாம்சம் ஆகி பத்தாம் பாவாதிபதியாகிய சூரியனுடன், சனி கூடி யிருந்தால் ஜாதகன் அதிகமான வேலைக்கார ஜெனங்களையுடையவன், ராஜலக்ஷணமுடையவன், சீமான், தீன ஜெனங்களிடம் பிரியன், படிப்புக்கு இடையூறுடையவன், நல்ல கர்மங்களுக்கும் இடையூறு செய்வான், கிரகக்ஷேத்திர, பூமி பாக்கியம் முதலிய உண்டாகும்.

(138) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (—— ——) ஆகி எட்டாம் பாவாதிபதியும், பதினோராம் பாவாதிபதியும், நவாம்சத்தில் தன்

னுச்சத்தில் இருந்து குருவுடன் கூடியாவது, குருவால் பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் தீர்க்காயுஸுடையவன்.

(139) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (———————) ஆகி நான்காம்பாவாதிபதி தன் உச்சத்தில் இருந்து நவாம்சத்தில் மகரத்தில் இருந்து வித்யாகாரகன் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகன் வித்தையும், புத்தியும் உடையவனுகிறுன், தந்திரத்தில் பிரியனுயும், நித்யம் சிவபூஜை செய்பவனுகவும் இருப்பான். விஷ்ணுபக்தியுடையவனுகியும், தேவப்பிராமணனிடத்தில் பக்தி உள்ளவனுகவும், துஷ்டர்களுக்கு துஷ்டனுகவும், குரூர புத்தியுள்ளவர்களிடத்தில் குரூரபுத்தியுடனும், ஸ்வதந்திரனுகவும், பராக்கிரமமுள்ளவனுகவும், சீக்கிரத்தில் கோபிப்பவனுகவும், சத்ருக்களுக்கு விசனத்தைக் கொடுப்பவனுகவும், பிரசன்ன மனதுடையவனுகவும் இருப்பான்.

(140) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (———————) ஆகி நான்காம்பாவாதிபதி பலமுடையவனுகி ரிஷப நவாம்சத்தில் இருக்க நான்காம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் பல்லக்கு முதலியவாகனமுடையவன், வியாபாரம் அநேகம் செய்வான், வெகு புத்திரனையுடையவன், அநேக ஸதிரீகளுக்கு நாயகன்.

(141) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (சசிவாம்சம்) ஆகி சுக்கிரனும், சூரியனும், விச்வம்பராம்சத்திலும் அல்லது பாக்கியஸ்தானத்திலும் இருந்தாலும், சந்திரன் பாக்கியாதிபதியாகிய வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தாலும் லக்ஷிமீ கடாக்ஷம் உள்ளவனுகவும், ராஜசேவகனுகி ஜீவனம் செய்பவனுகவுமாகிறுன்.

(142) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (———————) ஆகி ஐந்தாம்பாவாதிபதி வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகன் புத்திரி புத்ரருடையன்வ.

(143) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (சசிவாம்சம்) ஆகி புத்திரஸ்தானத்திற்கு ஐந்தில் சந்திரனிருந்து லக்கினத்திற்கிரண்டாமிடத்திலிருக்கும் செவ்வாய் சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு இரண்டு புருஷப்பிள்ளைகள் ஆயுளையுடையவர்களும், ஒரு புத்திரியும் தீர்க்காளுடையவளுமாக இருப்பார்கள், மற்றவை நாசமுறும்.

(144) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (சசிவாம்சம்) ஆகி தனபாவாதிபதி லாப பாவாதியுடன் கூடி குருவால் பார்க்கப்பட்டால் தனமுள்ளவனுயும், கீர்த்தி உள்ளவனுயுமிருப்பான்.

(145) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (சசிவாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதி குருவால் பதினோராம் பாவாதிபதி பார்க்கப்பட்டால் ஜாதகன் தனவானாயும், கீர்த்தியுடையவனாகவுமிருப்பான், ஷை குரு லக்கினத்திற்கு ஆறிலும், குருவுக்கு ஆறில் சந்திரனுமிருந்தால் ஜாதகன் பதினாயிரத்துக்குமேற்பட்ட தனத்தையடைவான் என்று ஈசுவரன் சொல்லுகிறார்.

(146) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி பாக்யாதிபன் தனபாவத்தில் தனாதிபதியுடன் கூடியிருக்க அவர்களுடைய திசைபுக்தி இவை வந்தால் ஜாதகனுக்கு உத்தியோக லாபமும், தன் இனஜன பந்துக்களுக்குச் சுகமும், ராஜனிடத்தில் சௌக்கியமும் உண்டாகும்.

(147) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி செய்வாய் லக்கின கேந்திர திரிகோணங்களிலிருந்து அல்லது ஆறு அல்லது எட்டாம் பாவத்தில் அந்த பாவாதிகளுடன் கூடியிருந்தாலும் அந்த திசையில் சுகமும், கிராம, பட்டண அதிகாரியாயும், அரச உத்தியோகத்தில் சுகமும், கல்யாண போகபாக்கியமும் உண்டாகும்.

(148) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (சசிவாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி சுபக்கிரகத்துடன் கூடி அல்லது சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், பாக்கிய பாவத்தில் இருந்தாலும் நல்ல களத்திரமும், அதிலும் ஒரேதாரமுடையவனாகியும், அன்னிய ஸ்திரீ அல்லது வேசி ஸ்திரீ சங்கமமுள்ளவனாகவும், விலக்கு விதியுள்ள நாட்களில் தன் ஸ்திரீயுடன் சேருபவனுமாவான், பகலில் ஸ்திரீசங்கமம் செய்வான்.

(149) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சந்திரன் சுயக்ஷேத்திரத்தில் சுபவர்க்கத்தில் பத்தாம்பாவாதிபதியுடன் கூடியிருந்தால் யோகவானாயும், கீர்த்தி உள்ளவனாகவும். ராஜமுத்திரை தரித்து அதிகாரமுள்ளவனாகவும், விசேஷ பணவரவு உடையவனாகவும் ஆகிறான்.

(150) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (சித்ராம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 227-24 கலை முதல் பாகை 227-36 கலை வரையில்) ஆகி நான்காம்பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் இருந்தாலும், நான்காம் பாவாதிபதி துர்த்தராம்சத்தில் லக்கின பாவத்தில் இருந்தாலும் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுள்ளவள், குணவதியா

யிருப்பாள், வீட்டுவேலைகளில் தூரந்தரையானவள், வெகுகாலம் சுமங்கலியாயிருப்பவள்.

(151) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (நிர்மலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 226-00 கலை முதல் பாகை 226-12 கலை வரையில்) ஆகி இரண்டாம் பாவாதிபதி உச்சத்தில் ஆரோகனத்திலிருக்க ஏழாம் பாவாதிபதி கடகாம்சத்திலிருக்கத் தன வாகன சம்பத்துடையவனுகவும், பந்து ஜெனங்களை சம்ரக்ஷிப்பவனுகவும், அம்மான் மகளை விவாகம் செய்துகொள்பவனுகவுமாவான், ஒரே ஒரு விவாகம்தான் செய்துகொள்வான், ஜாதகன் நல்லமனைவியாயும் யோகமுள்ளவளாயும் இருப்பவளுடன் கூடியிருப்பான்.

(152) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (——————) ஆகி லக்கினத்திலிருந்து ஏழாம்பாவத்தில் ராகு இருந்து அந்தராசினுதன் உச்சராசியை யடைந்து இருந்தால் ஜாதகன் ராகு திசையில் சுபத்தையும், மகாசம்பத்தையும் அடைவான், பிரபல்ய யோகமுடையவனுகவும், சுகியாயும், வஸ்திரம், ஆபரணம் முதலிய சம்பத்து உள்ளவனுகவும், வாகனம் முதலான சுபமுள்ளவனுகவுமிருப்பான்.

(153) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (——————) ஆகி ஐந்தாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஐந்தாம் பாவாதியின் திசையில் ஜாதகன் வெகு பணத்துக்கு அதிகாரியாகி புத்திரப்பிராபல்ய முடையவனுகியும், கிராமம், பூமி முதலான லாபமுடையவனுயுமிருப்பான்.

(154) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (திரைலோக்யாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 225-00 கலை முதல் பாகை 225-12 கலை வரையில்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் சுப ரம்சத்திலிருந்தாலும், ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், பார்க்கப்பட்டாலும், விஷ்ணு பக்தியுடையவனுகி பாராயணம் செய்பவனுகியும், ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் விசேஷ பக்தி உண்டாகியும், அவருக்கு உத்ஸவாதிகளை விசேஷமாகச் செய்வதாலும், நித்யம் பக்தர்களால் சூழப்பட்டும், திவ்விய தேசங்களில் அலைந்து துதிப்பதும் பாலியவயதில் கொஞ்சம் தரித்திரமும், மத்திய, அந்திய வயதுகளில் யோகமும், சுகமும் உண்டாயிருப்பான்.

(155) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (திரைலோக்யாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி தேவ சஷ்டியம்சத்திலிருந்தாலும், பன்

னிரண்டாம் பாவத்தில் கேதுவுடன் கூடியிருந்தாலும், நித்தியம் பக்திவழிகளிலிருந்து ஸ்ரீராமமந்திரத்தை எப்போதும் ஜபித்தபடியே யிருப்பான், நித்தியம் கொஞ்சம் பத்தியமான ஆகாரத்தைப் புசிப்பவனும், விஷ்ணுவின் விரதம் முதலான உபவாசத்துடனும் உஞ்சவிருத்தி செய்து உண்பவனும் இருப்பான்.

(156) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (திரைலோக்யம்சம்) ஆகி பத்தாம்பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருந்தாலும், அல்லது பத்தாம் பாவத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்தாலும், சுக்கிரனால் பத்தாம் பாவம் பார்க்கப்பட்டாலும் நல்ல செய்கையையுடையவன், எல்லா லோகத்தையும் அலக்ஷியம் செய்பவனும் இருப்பான்.

(157) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (திரைலோக்யம்சம்) ஆகி ஏழாம்பாவாதிபதி லக்கின கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும், சந்திரன் ஏழாம் பாவத்தில் இருந்தாலும் ஒரே களத்திரமுடையவன், அவளும் நல்ல மனைவியாவாள், புத்திர புத்திரீயுடன் கூடினவன், ஒரே ஒரு புத்திரன் வெகு காலம் ஆயுளுடையவன், எந்த பாவாதிபதியும் அவனவன் பாவத்தில் இருந்தால் சொற்ப பலனையே கொடுப்பார்கள்.

(158) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (திரைலோக்யம்சம்) ஆகி லக்கின பாவாதி எட்டாம் பாவத்திலிருந்தாலும், இரண்டாம் பாவத்தைப்பார்த்தாலும், அதில் இருந்தாலும் கொஞ்சம் கடனாளியாயிருப்பான், வரவுக்கு மிஞ்சின செலவு உண்டாகும், பிற்காலத்தில் சுகமுண்டாகும், கடனிலிருந்து விடுபடுவான், தனலாபமும், விசேஷசுகமும், பிரயத்தினப்படுகிற காரிய சித்தியும், உலகத்தில் பூஜிக்கப்பட்டு மகாபோகியாயும், கொடையாளியாயும், பந்து ஜெனங்களிடத்தில் அன்புடையவனாகவும், பிதுரார்சிதமில்லாதவனாகவும், தன் சுயார்ஜிதம் விசேஷமாக சம்பாதிப்பவனுமாகிறான்.

(159) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 215-24 கலை முதல் பாகை 215-36 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி துலாம்சத்தில் சந்திர கேந்திரதிரிகோணத்தில் அல்லது லக்கினத்திற்குக் கேந்திரத்தில் இருந்து பூர்வ பாகத்தில் ஜெனித்த ஜாதகனுக்குக் கிழக்கு மேற்கு வீதிகளில் குக்கிராமத்தில் அக்கிரஹாரத்தில் வடக்குப் பாகத்திலுள்ள வீட்டில் ஜன

னம் நேரிடும். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குப் பாக்கியகாலத்தில் புண்ணிய தீர்த்தமில்லாத இடமான (நகரத்தில்) பட்டணத்தில் பிறப்பு நேரிடும்.

(160) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு நான்காம் பாவாதிபதி பாபக்கிரகத்துடன் கூடியிருக்கச் செவ்வாயுடன் கூடி பார்க்கப்பட்டால் ஜாதகன் பிறந்த சமயம் தாய்ப்பிரசவத்தில் அதிகவேதனையடைவாள். உத்தராம்சத்தில் கொஞ்சம் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டபயம் உண்டு.

(161) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சந்திரன் கேந்திர திரிகோண லாபராசிகளிலிருந்து, அசுபரால் பார்க்கப் பட்டிருந்தால் ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டபயமுண்டாகும்.

(162) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சந்திரனிருக்குமிடத்திற்குக் கேந்திரத்தில் குரு இருந்து சந்திரனுக்கு ஏழாமிடத்திலிருந்து அல்லது சந்திரனைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டம் உண்டாகாது, தாய், தகப்பன், மூத்தசகோதரன் இவர்கள் சுகத்துடனும், தீர்க்காயுளுடனும் இருப்பார்கள், ஜாதகன் ஜென்ம திசையில் ஜென்மவருஷத்தில் அல்லது இரண்டாவது வருஷத்தில் மாந்த சுரத்தால் பீடிக்கப்பட்டு சீக்கிரமாகவே சுகத்தையும், ஆரோக்கியத்தையும் அடைவான்.

(163) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் சனியுடன் ராகு கூடியிருந்து செவ்வாயால் பார்க்கப் பட்டால் ஜாதகனுக்குப் பின் சகோதர விருத்தியுண்டாகும், மூத்த சகோதரன் நாசமடைவான்.

(164) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஆறும் பாவாதிபதி துலாம்சத்தில் எட்டாம் பாவத்தை அடைந்திருந்தால் ஜாதகனுடைய அம்மான் பிரசித்தனாகவும், அக்கிரகாரத்தில் வாசம் செய்பவனாகவும், பயிர்த்தொழில் செய்பவனாகவும், ஸ்ரீமானாகவும், இரண்டு சகோதரர்களுடன் கூடினவனாகவும், முன்ஜென்மாந்திர புண்ணியத்தால் புத்திரனுடையவனாகவும், கொண்டாடப்பட்ட பாக்கியவானாகவும் இருப்பான், ஜாதகனுடைய அம்மானுடைய மாமனாருக்கு ஒருவர் சகோதரர் உண்டு, இரண்டாவது மாமனார் புத்திரனில்லாதவர், ஜாதகனுடைய அம்மானுடைய புத்திரனையடைபவர், அப்புத்திரன் பாக்கிய விருத்தியுடையவன், சுபமுடையவன், தன் அம்மான்

புத்திரன் ஒருவன் அரசாங்கத்தில் பிரசித்தியானவன், பாக்கியம் முதலான அதிக புத்திமான், ஆசையுடையவன், முன் புண்ணியவசத்தால் இவ்வைபவங்களை அடைவான்.

(165) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து சூரியன் கேந்திரதிரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், பின் சகோதரனுடையவன், மானி, மூத்த சகோதரனில்லாதவன், கர்ப்பத்திலிருந்தே ஸ்ரீமானானவன், போகி, தனிகன், கீர்த்தியுடையவன், சுகமுடையவன், பிதுரார்ஜித தனமுடையவன், அரசாங்கத்திலும் புகழுடையவனாயிருப்பான்.

(166) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சந்திரனிருக்குமிடத்தினின்றும் கேந்திரத்தில் சூரியனிருந்து சிம்மாம்சத்தில் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அரசாங்கத்தில் பிரசித்தனாகவும், ராஜ தரிசனமுடையவனாகவும், தன் பிதாவைவிட அதிக பூமி லாபமுடையவனாகவும், தன் பந்து ஜெனங்களை ரக்ஷிப்பவனாகவும், எப்பொழுதும் அன்னதானம் செய்யும் புண்ணியாத்துமாவாகவும், தடாக உத்தியானங்களுக்குத் தர்மம் செய்பவனாகவும், தேவாலய பிரதிஷ்டை செய்விப்பவனாகவும், மித்திரஜெனங்களை ரக்ஷிப்பவனாகவும், நடு வயது காலத்தில் பக்கியமுடையவனாகவும், அந்திய வயதில் கொஞ்சம் மனோவியாதி உடையவனாகவும் இருப்பான், சில பிராமணர்களால் தன்னால் சேர்த்து வைக்கப்பட்ட தன நாசம் நேரிடும், ரோகாயோகம் கொஞ்சகாலமும், பிறகு ஸ்வஸ்தமும் உண்டாகும்.

(167) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகிப் பூர்வபாகத்தில் பிறந்தவனுக்குப் பதினோராம் பாவாதிபன் ஐந்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பனுடைய சகோதரிகள் இருவர் சுமங்கலியாய் மரிப்பார்கள்.

(168) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சந்திரன் இருக்குமிடம் தவிர்த்து மற்றகேந்திரத்திலாவது அல்லது லக்கினத்திற்கு கேந்திரத்திலாவது செவ்வாயிருந்தால் அந்த செவ்வாய் திசையில் ஜாதகனுக்குத் தனமும், பாக்கியமும் உண்டாகும். மித்திரர், தாய் இவர்களுக்குச் சுகமும், ஜாதகனுக்குத் தேகசுகமும், தனவரவும், பலவழிகளிலும் தனவரவும், வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷமும், சகோதரனுடைய லாபமும், விசேஷ சௌக்கியமும், ஐந்தாம்

வயதில் விசேஷ சௌக்கியமும், தன் பிதாவுக்குப் பிரபுக்கள் மூலம் சன்மானமும், பூமிலாபமும், தன் பிதாவுக்குச் சுகமும் உண்டாகும்.

(169) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டு குருவும் பாக்கியாம்சத்தில் இருந்தால் ஜாதகன் நல்ல பாக்கியவம்சத்தில் பிறந்த பெண்ணை விவாகம்செய்து கொள்வான், பாக்கியவம்சத்தினுல் மன சந்துஷ்டியடைபவன். அற்பசிநேகித முடையவன், மெல்லிய உயரமான தேகமுடையவன், சுத்தியுடைய வன், மகா அறிவுடையவன், மிகபயங்கரமானவன், நன்மையுடன் கூடியவன், தர்ம பாராயணம் செய்பவனுவான்.

(170) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகிப் பூர்வபாகத்தில் பிறந்தவனுக்குக் குரு பாக்கியாம்சத்தை அடைந் திருந்தால் ஜாதகன் பாக்கிய வம்சத்துப் பெண்ணை மணப்பான், தன் மனைவி பதிபக்தியுடையவள், நல்லரூப குணம் நிறைந்தவள், கண வனுக்குப் பிரீதியைச்செய்பவள், சுபமானவள், சகோதாருடன் கூடி னவள், தகப்பனுடைய பாக்கியத்துடனும் கூடினவள், தன் மனை வியின் தகப்பன் ஸ்ரீமானுனவன், அவனுடைய சகோதானும் தனி கன், மூன்று மனைவியையுடையவன், போகி, கொஞ்சம் லோப குணமுடையவன், உடன்பிறந்த சகோதான் மூலமாக கிராமம், பூமி விசாரணையுடையவன், ஜாதகனுடைய விவாகத்துக்குப் பிறகு மாமனர் மனோவியாதியடைவர்.

(171) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக் கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சனியிருந்து ராகுவுடனும் கூடி செவ்வாயால் பாக்கப்பட்டால் ஜாதகனுக்குப் பெண்ணைக் கொடுத்த பிறகு ஜாதகனுடைய மாமனர் கிலேசமடைவர்.

(172) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி பதி னோம் பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து செவ்வாயின் அம்சத்தில் சூரியனுடன் பதினோம் பாவாதிபதி கூடியிருந்தால் ஜாதகனுடைய மாமனரின் சகோதாருடைய மனைவியும் தன் பர்த்தாவையே அனு சரிப்பவள், ஜாதகனுடைய மனைவியின் வம்சத்தில் கெடுதலும், கன் னிகாதானத்திற்குப் பிறகு உண்டாகும்.

(173) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி மூன் ரும் பாவாதிபதி சனி விருஷபாம்சத்தில் சுயக்ஷேத்திரத்தில் இருந்

தால் ஜாதகனுடைய மாமனருக்கு விசேஷ சௌக்கியமுண்டாகும், அவருக்குப் புத்திரமூலமாக பாக்கியமுண்டாகும்.

(174) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சூரியனிருக்குமிடத்தில் வேறு கிரகமில்லாதிருந்தால் நீசபங்கம் உண்டாவதுடன் சந்திர கேந்திரத்தில் குருவிருந்தால் கேஸரீயோகமும், ராஜயோகமும் உண்டாகும், ஜாதகன் மூன்றும் திசையில் விசேஷ சௌக்கியமும், இருபத்தைந்து வயதுக்குமேல் சுகமும் அடைவான்.

(175) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி சூரியன், சுக்கிரன், புதன் இவர்கள் ஒரே ராசியிலிருந்து குருவும் கூடியிருந்தால் இருந்த பாக்கியத்துக்கு அழிவுண்டாகி, மறுபடியும் பாக்கியமடைந்து மறுபடியும் சுகமடைவான்.

(176) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி தைவயோகத்தில் பிறந்தவனுக்கு ஷ்டி சுக்கிர, புத, சூரியர்கள் ஒன்று கூடி குருவுடனும் கூடி ஏழாம் பாவாத்திற்குப் பதினொன்றில் அல்லது பதினோராம் பாவத்திற்கு ஏழிலாவது இருக்கின்ற ஜாதகனுக்குப் பாக்கியலாபமும், விபத்தார திசையில் விசேஷசுகமும், இருபத்தேழுவயதுக்கு மேல் சுகமும் உண்டாகும்.

(177) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஏழாம்பாவத்தில் அல்லது அதற்கு ஏழில் சனியிருந்து ராகுவுடன் கூடி செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஏழாம்பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் மனைவி பீடையால் விசாரமுடையவன், தன் மனைவிக்கு வயிற்றில் வியாதியால் கர்ப்பகோளத்தில் கிருமிகளிருக்கும் என்று எண்ணப்படுகிறது, அப்படியில்லாதிருக்கின் தன்மனைவி கர்ப்பகாலத்தில் தன் (வீட்டு தூர்த்தேவதை) அல்லது சங்கரதோஷத்தினால் பீடிக்கப்பட்டு முன் பாபவிசேஷத்தினால் கஷ்டப்படுவாள்.

(178) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் புதன், சூரியன், சுக்கிரன் இருந்து சனியால் பார்க்கப்பட்டால் அற்பவித்தையும், அற்பபுத்திரனும் உடைய ஜாதகனாகி வியாபாரத்தில் சம்பாதித்த தனமுடையவனாகி தாயாதிகளாலும், வேறு சிநேகமில்லாதவர்களாலும் பீடிக்கப்பட்டவனாவான்.

(179) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் அல்லது லக்கினத்தில் சனியிருந்து, சூரியன் ஐந்தாம் பாவத்தில் இருந்து லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவத்தில் பாபக்கிரக

மிருந்தால் ஜாதகனுக்கு ஸந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும், சிம்சுமாரதானம், ஆடு தானம், (செவ்வாய் பிரீதி) ஹரிவாஸர தினத்தில் கோதானமும், திங்கட்கிழமையில் சனிப்பிரீதியும் செய்து ஸ்வர்ணத்தால் சூரியப் பிரதிமை செய்து நன்ருக அதைப்பூஜித்து, பிராமணனுக்குக் கொடுத்தால் ஸகலதோஷங்களும் சூரியனுலேயே விலகி சீக்கிரமாக நல்ல புத்திரன் பிறப்பான்.

(180) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருக்க லக்கினத்துக்கு ஒன்பதாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் வேறு மனைவியிடமாவது அல்லது முதல் மனைவியிடமாவது அந்தியகாலத்திலாவது புத்திரப் பிராப்த்தியடைவான்.

(181) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி சுயக்ஷேத்திரத்தில் ஐந்தாம்பாவத்தில் சுயக்ஷேத்திரத்தில் குரு இருந்து சுக்கிரனுடனும் கூடியிருந்தால் ஜாதகன் ஐந்தாவது கர்ப்பத்தில் அல்லது நான்காவது கர்ப்பத்தில் ஜெனித்தவன், மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரருடன் கூடினவன், ஸ்ரீமான், மூன்று சகோதரிகளுடையவன், தனமுடையவன்.

(182) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி ஸ்வதாம்சத்தில் மீனத்தில் குரு இருந்து தன் அம்சத்தில் இருந்து பதினொன்றில் இருக்கப்பட்ட சந்திரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் பாக்கியவம்சத்தில் ஜெனித்தவன், தாய் தகப்பன் வெகு ஆயுளுடையவர்கள், ஜாதகன் சகோதர சகோதரிகளுடையவன்.

(183) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி லக்கினபாவாதிபதி எட்டாம்பாவத்தில் இருந்து அந்த பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்தால் ஜென்மத் திரிகோணங்களில் பாபக்கிரகமிருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டமுண்டாகும், ஜாதகனுடைய ஜென்ம திசையில் மூன்றும் வருஷத்தில் பாலாரிஷ்டத்தினுல் மரணசமானமாக இருந்து பிழைப்பான்.

(184) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி மீனம்சத்தில் மீனத்தில் குரு இருந்து ஒன்பதாம் பாவாதிபன் லாப பாவத்தில் இருந்து நவாம்சத்தில் குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டம் உண்

டாகாது, பின் சகோதரவிருத்தியுடையவன் சகோதரிகளும், தீர்க்காயுளுடையவர்கள்.

(185) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி மூன்றும் பாவாதிபதி மகரத்தில் சுயக்ஷேத்திரத்திலும், செவ்வாய் பாக்கியாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் பின் சகோதரர்கள் வெகு ஆயுளுள்ளவர்கள், ஜாதகனுக்கு மூன்று தாரமுண்டாகும், பாக்கியம் முதலான விருத்தியுள்ளவன், அரசாங்கத்தில் புகழுள்ளவன், உடன் பிறந்தசகோதரனால் கிராமம், பூமி, விசாரணை செய்பவன், பின்சகோதரன் வெகு ஆயுளையுடையவன், மத்தியவயதில் பாக்கியமுள்ளவன், பாக்கிய விருத்தியுடையவனுயிருந்தாலும் கொஞ்சம் மூர்க்க சுபாவமுள்ளவன், பின்சகோதரிகள் இருவர் சுகமுடையவர்கள், தன் மூத்த சகோதரியும் அப்படியே ஆவாள்.

(186) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சனியிருந்து ராகுவுடன் கூடி எட்டில் இருக்கும் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய மூத்த சகோதரி சௌக்கியமுள்ளவள், ஸந்தானத்துக்கு இடைஞ்சலுள்ளவள், பின் சகோதரிகள் இருவர்கள், தன் சகோதரிகள் புத்திர புத்திரிகளுடன் கூடினவர்கள்.

(187) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி குரு சுதாம்சத்தில் இருந்து மீனராசியில் சூரியன் சிம்மாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய பிதா, நேர்மையான புத்தியுடையவன், சாத்துவீகன், அறிவாளி, பயங்கரமுள்ளவன், அநியாயமாய்ச் சம்பாதிக்கப்பட்ட தனமுடையவனுகி நல்ல ஜீவனமுடையவன், பின் சகோதருடன் கூடினவன், கர்ப்ப ஸ்ரீமானுன பிதாவையுடையவனுவான்.

(188) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி பதிஞேராம்பாவத்தில் சந்திரனிருந்து குரு, சுக்கிரன் இவர்களால் சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பனுக்கு மாமனர் ஸ்ரீமான், வம்சபாக்கிய விருத்தியுடையவன்.

(189) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி பதிஞேராம் பாவத்துக்கு ஐந்தாம் பாவத்தில் சனி ராகுவுடன் கூடியிருக்க தன் சிற்றப்பனுடைய பிள்ளைகள் சிலர் அற்பாயுள் யோகமுடையவர்கள், முன் ஜென்மாந்திர புண்ணியத்தாலும் கிரகங்கள் சுயக்ஷேத்திர முதலான பலத்தாலும் தன் சிற்றப்பன் பிள்ளைகள்

இரண்டு பேர் பூர்ணாயுள் யோகமுடையவர்களாவார்கள், விருஷபாம்சத்தில் சனி சுயக்ஷேத்திரத்திலிருந்தால் ஸ்திரீ பிரஜைகளும், புருஷப் பிள்ளைகளைப்போல அப்படியே இருப்பார்கள்.

(190) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி சுய க்ஷேத்திரத்தில் மீனத்தில் ஸூதாம்சத்தில் குரு விருக்கப்பிறந்தவன் ரூபமுடையவன், நல்ல சமர்த்தன், அழகிய முகமுங் கண்களும் பொருந்தியவன், அதிருஷ்டசாலி தர்மாத்துமா, மத்தியவயதில் பாக்கியமுடையவன், சுயகாரிய நிபுணன், ஸ்ரீமான், சத்துருக்களின் காரியங்களைக் கெடுப்பவன், கொஞ்சம் ரோகசரீரமுடையவன், அற்ப கல்வி தனமுடையவன், சம்போககாலத்தில் விநோதமான நடத்தையுடையவன், உபாயத்தினால் காரியங்களை சாதித்துக்கொள்வான்.

(191) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி லக்கின பாவாதி எட்டாம் பாவத்திலிருந்து அந்த பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் பித்த வாயு பீடை முதலான உஷ்ணவாயு பீடையுடையவன்.

(192) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி மூன்றும் பாவத்தில் ராகு இருந்து சனியுடன் கூடியிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் அந்த திசையில் ஜாதகனுக்கு முதலில் சுகமும், சுபமும், மத்தியில் சௌக்கியமும், அதன் பிறகு யோக பங்கமும், மனோவியாதியும் உண்டாகும்.

(193) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி ஸூதாம்சத்தில் மீனராசியில் குருவிருக்க ஏழாம்பாவாதிபதி சூரியனுடனும், எட்டாம்பாவாதியுடனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய மனைவியானவள் ரோகத்தால் பீடிக்கப்படுவாள்.

(194) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (————) ஆகி ஏழாம்பாவத்திற்கதிபதியிருக்கும் ராசியினின்றும் பதினொன்றில் சனியும், ராகு, செவ்வாய் முதலியவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய மனைவி ரோகபீடையுள்ளவளாவாள், கர்ப்பகாலத்தில் சங்கா தோஷத்தால் பீடிக்கப்படுபவள், முன் பாபவிசேஷத்தால் ரோக பீடையும், துஷ்டதேவதா பீடையும் உண்டாகும், மனோபிராந்தியும், ரோகமும், பிசாச பீடையும், பாபகாரியங்களும் நேரிடும், தோஷ பரிகாரத்திக்காக துர்க்காதேவி ஜெபமும், ராகு பிரீதியும் செய்து சாந்திசெய்தால் மரணத்தினின்று மீண்டு நன்றாய் ஜீவித்திருப்பாள்.

(195) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கமலாம்சம் பூர்வபாகம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 233-48 கலை முதல் பாகை 234-00 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்து, பத்தாம் பாவத்தில் குருவும் இருக்கப்பிறந்தவன் நதிப்பிராந்தியத்தில் ஜெனனமும், பட்டினவாசமும் அடைவான், உத்தராம்சத்தில் பிறந்த ஜாதகன் குக்கிராமத்தில் வாசம் செய்வான், பிரசவகாலத்தில் ஜாதகனுடைய தாய் கொஞ்சம் வேதனையடைவாள், சுபர்பார்வையிருந்தால் சௌக்கியமும் உண்டாகும். உத்தராம்சத்தில் அதிக வேதனை உண்டாகும், முன் சென்மாந்திர புண்ணியவசத்தால் அக்காலம் மாதாவுக்குச் சௌக்கிய முண்டாகும்.

(196) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கமலாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபன் ஐந்தாம்பாவத்தில் இருந்து பத்தாம் பாவாதிபனுடன் கூடி சந்திரனும் பாபராசியில் இருந்தால் ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டத்தால் பயமுண்டாகும், சுபதிருஷ்டிமூலம் சுகமுண்டாகும், ஜென்ம திசையில் இரண்டாவது வயதில் மாந்த சுரம் முதலிய ரிணபயமும், ஸம்பத் திசையில் பிதாவுக்குச் சுபமும், தனக்குத் தேகசௌக்கியமும் உண்டாகும்.

(197) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கமலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபன் ஒன்பதாம் பாவத்தில் நீச்சராசியில் தன் உச்சாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் சௌக்கியத்தையடைவான்.

(198) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கமலாம்சம்) ஆகி சூரியன் கேந்திரதிரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் பிதா வைதீகன், சாது, ரோகி, துர்ப்பல தேகி, எப்பொழுதும் வைதீக ஆசாரமுடையவன், சகோதர சௌக்கியத்துடன் கூடினவன், பாலியத்தில் தரித்திரத்தை யடைபவன், மத்தியவயதில் பாக்கியமுடையவன், அந்தியத்தில் சௌக்கியமும், சுகமும், சகோதரன் மூலமாக நல்ல பாக்கியத்தையும் அடைவான்.

(199) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கமலாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபன் குளீராம்சத் திரிகோணத்தில் இருந்து லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகனுடைய தாய் சௌக்கியமுடையவள், தன் தாய் குணமுள்ளவள், பொறுமையுள்ள

வள், பதிபக்தியுள்ளவள், தாய் வம்சத்தில் கொஞ்சம் சௌக்கிய முடையவள், பால்லியத்தில் தரித்திரத்தால் பீடிக்கப்படுபவள், அற்ப மான தன பாக்கியத்துடன் கூடினவள், அற்ப ஆயுளுடையவள் ஆவாள்.

(200) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கமலாம்சம்) ஆகி நீச்ச ராசியில் தன் உச்சாம்சத்தில் செவ்வாயிருக்க மூன்றும் பாவாதிபன் பலத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் வெகு ஆயுளுடன் கூடினவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தனுவான்.

(201) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கமலாம்சம்) ஆகி சராம் சத்தில் மீனராசியில் சனியிருந்தால் ஜாதகன் உடன் பிறந்த சகோதா னில்லாதவனுவான்.

(202) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கமலாம்சம்) ஆகி புத னும், சுக்கிரனும், சூரியனும் ஒரே ராசியிலிருந்து சனியுடன் கூடி யிருந்தால் உடன்பிறந்த சகோதரர்களால் நல்ல பாக்கியமும் பிதுரார்ஜ ஜித க்ஷேத்திரதனமும், குதிரைவாகனம் முதலியன வுடையவனுமாக ஜாதகனிருப்பான்.

(203) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (கமலாம்சம்) ஆகி லக்கி னத்துக்குப் பன்னிரண்டில் ராகு இருந்து செவ்வாயுடன் கூடியிருந் தாலும், செவ்வாயால் ராகு பார்க்கப்பட்டாலும், ஜாதகனுக்கு ராகு திசையில் கேது புக்தியில் தேகபீடையுண்டாகும், அந்த தோஷத்துக் குப் பரிகாரமாக நெய் தானம் செய்தால் குணமுண்டாகும். அது செய்யும் விதம்:— வெண்கலப்பாத்திர பெரிதாகச் செய்து நாலு படி நெய் அந்த பாத்திரத்தில் விட்டு நிஷ்க மாத்திர (அதாவது ஒரு விராகனிடையுள்ள) சுவர்ணத்தை தானமாகவும், தக்ஷிணையாகவும், கொடுத்து நெய்யைப் பாத்திரத்துடன், அதிலும் ஷை சொர்ண நாணயத்தைப் போட்டுத் தானம் செய்து ராகுப் பிரீதியும் செய்து முதலில் ராகு ஜெபம் செய்து அதற்குப் பிறகு மேல் சொன்ன தானத்தைச் செய்தால் சுபமும், சுகமும் உண்டாகும்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் விருசிகம் லக்கினத்திற்கு 203-விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட விருசிக லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங் களில் விருசிக லக்கின பலனின் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்று அறியவும்.

தனுசு லக்கின ஜாதகம்.

——(*⁎*)——

(1) ஓராவது பாவம் தனுசு ஆகில் ஜாதகன் நான்கு வித்தைக ளில் சமர்த்தன், தேவபிராமணர்களையும், சிநேகிதர்களையும் பூஜிப்ப வன், வாகனம் முதலிவைகளுடன் கூடியவன்.

(2) இரண்டாவது பாவம் மகரமாகில் ஜாதகனுக்கு ஜெனங்க ளால் தனப்பிராப்தி, பயிர்த்தொழிலில் வல்லவன், ஜலத்திலுண்டான வைகளில் அதிகப்பிரீதியுடையோன்.

(3) மூன்றாவது பாவம் கும்பமாகில் ஜாதகன் நன்றியுள்ளவன், பொறுமையுடையவன், உண்மையே பேசுபவன், நல்லநடவடிக்கை யுடையவன், பண்டிதன்.

(4) நான்காவது பாவம் மீனமாகில் ஜாதகன் பணவரவு உடை யோன், பூமியில் நல்ல வஸ்திரமணிந்து மெது மெதுவாய் நடப்பவன்.

(5) ஐந்தாவது பாவம் மேஷமாகில் ஜாதகன் சுபரிருக்கில் நல்ல புத்திரன் பிறப்பான், பாபியிருக்கில் கெட்டபுத்தியுடையவனும், வணக்கமில்லாதவனும் பிறப்பான்.

(6) ஆறாவது பாவம் ரிஷபமாகில் ஜாதகன் திருடர் சேர்க்கை யால் நாற்கால் ஜீவன்கள் கிடைக்கும், வழியில் பொருட் செலவு நேரும்.

(7) ஏழாவது பாவம் மிதுனமாகில் ஜாதகன் தனத்துடன் கூடியமனையாளுடையவனும், அழகு குணத்துடன் கூடியதும், தெளிவு, நற்சாகசமுடைய களத்திரமுடையவன்.

(8) எட்டாவது பாவம் கடகமாகில் ஜாதகன் அயல் தேசத்தில் மரணம், ஜலத்தில் சஞ்சரிப்பவையாலும் அன்றில், தேள் முதலிய விஷக்காலிகளாலும், அயலான் கையில் மரிப்பான்.

(9) ஒன்பதாவது பாவம் சிம்மமாகில் ஜாதகன் வாகனம் முத லிய சுகமுடையவன், விலை உயர்ந்த வஸ்திரபூஷணங்களணிவான், (வணக்கம், தர்மமில்லாதவன்.)

(10) பத்தாவது பாவம் கன்னியாகில் ஜாதகன் வீடும், மனையா ளும் பிரதானமாக உடையவன், அற்ப பலமுள்ள சரீரமுடையவன், ஒரு சமயம் உலக நிந்தைக்கு ஆளாவான்.

(11) பதினோராவது பாவம் துலாமாகில் ஜாதகன் வியாபாரத் தொழிலில் நல்ல லாபம் பெறுவான், பொறுமையுடையவன், இனிமையானவாக்குடையவன், புத்திரன், மனைவி, தனத்துடன் கூடியவன்.

(12) பன்னிரண்டாம் பாவம் விருச்சிகமாகில் ஜாதகன் எப்போதும் கொடிய செய்கையையே செய்பவன், உண்மை பேசுவான், கோபமுடையவன்.

(13) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 241-12 கலை முதல் பாகை 241-24 கலை வரையில்) ஆகி குரு வர்க்கோத்தமாம்சத்தில் சுயக்ஷேத்திரத்தில் கேது கூடியிருந்தால் விப்பிரகாலத்தில் ஜெனித்த ஜாதகன் தான் சீமந்த கர்ப்பத்தில் ஜெனித்தவனுவன், அல்லது மூன்றுவது கர்ப்பத்தில் பிறந்தவன், மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரனுடன் கூடியவன், சகோதரிகளுடன் கூடியவன், பூர்வபாகத்தில் நதிக்கிராமத்தில் ஜெனித்தவன். உத்தராம்சத்தில் சிறு கிராமத்தில் அக்கிரகாரத்தில் ஜெனனம் நேரிடும், பிரசவகாலத்தில் ஜாதகனுடைய தாய்க்கு உத்தராம்சத்தில் அதிக வேதனையும், பாலாரிஷ்ட பயமும் உண்டாகும், பூர்வபாகத்தில் தாய்க்கு கொஞ்சமான வேதனையும், நான்காம் பாவாதிபன் கேதுவுடன் கூடியிருந்தால் பாலாரிஷ்டமிருந்தாலும், ஜாதகனுக்கு சீக்கிரமாக ஆரோக்கியமும். சௌக்கியமும் உண்டாகும்.

(14) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி லக்கினுதிபதி பத்தாம் பாவாதிபதி, எட்டாம் பாவாதிபதி இவர்களில் லக்கின பாவாதிபன் நான்காம்பாவத்திலும், பத்தாம் பாவாதிபன் விரயபாவத்திலும், எட்டாம் பாவாதிபன் பதினோராம் பாவத்திலும், இருக்கப் பிறந்த ஜாதகன் குரு வர்க்கோத்தமாம்சத்திலிருந்தால் சுகியாயும், பூர்ணுயுளுமுடையவனுயும், தாய் தகப்பன்மார் சுகமுடையவனுயும், தேகபுஷ்டியுடையவனுமாவான்.

(15) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி சுக்கிரன் பதினோம்பாவத்தில் இருந்து மாளவி யோகத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு எழுபத்தேழுவயதுண்டாகும்.

(16) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி நிர்மலாம்சத்தில் பன்னிரண்டாம் பாவாதிபதியுடன்

கூடியிருந்தாலும், ஜாதகனுடைய தகப்பன் பூர்ணாயுளுடையவனாவான், ஜாதகன் பிதா சிவபக்தியுடையவன், தேவப்பிராமண பக்தியுடையவன், பாலிய சௌக்கிய சுகமுடையவன், மத்தியவயதில் யோகமுடையவன், அரசாங்கத்தில். புகழுடையவன், அரசாங்க ஜென சினேகிதமுடையவன், பூமிமூலம் பிரசித்தியுடையவன், வியாபாரத்திலும், விசேஷ சுகமுடையவன், பிரபல உத்தியோக சௌக்கியமுடையவன், ஜாதகன் பிதா பெரிய கீர்த்தியுடையவன், எப்பொழுதும் நல்ல ஆசார செய்கைவுடையவன், விசேஷ சிவபக்தி யுடையவனாவான்.

(17) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி சூரியன் மகா நவாம்சத்தில் லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவத்தில் பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் பிதா எப்பொழுதும் சித்தவித்தையில் பிரீதியுடையவன், தேவி சக்தியின் அருளுடையவன், தெய்வயோகத்தால் தனமடைபவன், விசேஷ சிவ பக்தியுடையவன், சூரியன் நிர்மலாம்சத்திலிருந்தால் ஞானியாயும், தத்துவ விவேகியாயும், விருத்த வயதில் சௌக்கியமடைபவனும், தன் பிதாவின் புண்ணிய வசத்தால் தடாகம், உத்யானம் முதலிய தர்மம் செய்து மத்தியவயதில் சூரியனுடன் சனி சேர்க்கை யிருந்தால் தரித்திரம் அடைவான். சிவ கைங்கரிய தருமம் செய்து அக்கிரகாரப் பிரதிஷ்டை முதலானதும் செய்து தெய்வயோகத்தால் சௌக்கியமடைந்து ஜாதகனுடைய விபத்தார திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(18) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஆபத் சன்னியாசயோக மடைவன்.

(19) ஜென்ம லக்கினம் தனுசு (வதாம்சம்) ஆகி குரு வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பிரம்ம லோகத்தை அடைவான்.

(20) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி தன் உச்சாம்சத்தில் சந்திரன் ஜென்மலக்கினத்திற்குப் பதினோராம் பாவத்திலிருந்து குரு வர்க்கோத்தமாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், குணவதி, பொறுமையுடையவள், பந்துக்களுக்குப் பிரியமானதைச் செய்வாள். ஸதி, தாய்வம்சத்தில் கொஞ்சம் சுகமுடையவள், தாயினுடைய அம்மான் பிரபலமானவன், ஜாதக

னுடைய சம்பத் திசையில் குரு புக்தியில் அல்லது விபத் திசையில் தாய் மரிப்பாள்.

(21) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி செவ்வாய் தன்னுச்ச ராசியிலிருந்து லக்கினத்திற்கு பன்னிரண்டாம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவன் பின் சகோதரனில்லாதவன் ஆவான்.

(22) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி நாலாம் பாவத்தில் குரு இருந்து ராகு, கேதுக்களில் ஒருவருடன் கூடியிருந்தாலும், ராகு கேதுக்களில் ஒருவனுல் குரு பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்குக் கல்விக்கு இடையூறுண்டாகும், சாஸ்திர ஞானமில்லாதவனுவன், நாடக அலங்கார காவியப்பிரியன், சங்கீதலோலன், விஷய போகத்தில் இச்சையுடையவன், அயலார் மனைவிகளிடம் ரதிகேளிக்கையில் பிரியமுள்ளவன் ஆவான்.

(23) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் தன் உச்சராசியிலிருக்க குரு வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் ஜாதகன் விசேஷ சிவபக்தியுடையவன், தேவி சக்தியின் அனுக்கிரகமடைவன், பிதுரார்ஜ்ஜித தனமுடையவன், க்ஷேத்திர மூலம் ஜீவிப்பவன், அரசாங்கத்தில் புகழுடையவன், மேம்பாடான உத்தியோக ஜீவனமுடையவன் ஆவான்.

(24) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி சனி இரண்டாம் திசைக்கு அதிபனுக வந்து சனி வர்க்கோத்தமாம்சத்தில் ஒன்பதாம் பாவத்தில் பாத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் அந்த சனி திசையில் விசேஷ சுகமும், இருபத்தேழு வயதுக்குமேல் ஜாதகன் பாக்கியம், பல்லக்கு அநேக கிராமாதிகாரம், ராஜாங்கப் பிரசித்தி முதலியன அடைவன், தோஷ நிவர்த்தி மூலம் இருபத்தெட்டாவது வயதில் புத்திரனுண்டாவான்.

(25) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் மேஷாம்சத்தில் தன்னுச்ச ராசியிலிருக்க குரு கேதுவுடன் கூடியிருந்தாலும், கேதுவால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுக்கு சந்தானத்துக்கு இடைஞ்சல் உண்டாகும், அந்த தோஷ பரிகாரமாக அவசியம் சேதுஸ்நானம் செய்தால் புத்திரோற்பத்தியுண்டாகும்.

(26) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி மாளவி யோக ஜாதகனுக்கு க்ஷேம திசையாக கேது திசைவந்தால் ஜாதகனுக்கு ஆறு வருஷம் வரையில் நல்ல யோகமும், பாக்கிய விருத்தியுண்டாகும். திசாந்தியத்தில் மூன்று வருஷம் அவதியும், யோக பங்கமும் உண்டாகும்.

(27) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி ஐந்தாம் தாராதிபன் சுக்கிரனாகி அவன் சுயக்ஷேத்திரத்தில் பதினோராம் பாவத்தில் இருந்தால் அந்த சுக்கிர திசையில் வாகனம் முதலிய நல்ல யோகமும், விசேஷ சௌக்கியமும், சொர்ண வஸ்திர பூஷணமும், வீட்டில் சொர்ண பாத்திரமும் முதலானவை உடையவனாகியும், எப்பொழுதும் தர்மவழியில் நடப்பவனாகவும், சேதுஸ்நானம் முதலிய புண்ணிய முள்ளவனாகவும், (தடாகம்) குளம், உத்தியானம், அக்கிரஹாரப் பிரதிஷ்டை முதலான தர்மமும் செய்து அத்திசை முடியுமளவும் நல்லயோக முடையவனாயிருப்பான்.

(28) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி குரு வர்க்கோத்தமாம்சத்தில் பத்தாம் பாவத்தில் ராகுவுடன் கூடியிருக்க தேக அந்தியத்தில் ஜாதகன் ஆபத் சன்னியாச மடைந்து புண்ணிய லோகத்தை அடைவான்.

(29) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 243-36 கலை முதல் பாகை 243-48 கலை வரையில்) ஆகி லக்கின பாவாதிபதி சுபராசியிலிருக்க நான்காம் பாவத்தில் சுக்கிரன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் பெரிய நதிப்பிராந்திய தேசத்தில் அக்கிரகாரத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப் பாகத்திலுள்ள வீட்டில் பூர்வபாகத்தில் ஜெனித்தவனாவான், உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குச் சமுத்திரப் பிராந்திய பட்டிணத்தில் ஜெனனமும் வாசமும் என்று சொல்லப்படுகிறது, ஜாதகன் கொஞ்சம் பாலாரிஷ்டமுடையவன், ஆயினும் சீக்கிரமாக ஆரோக்கியமும், சௌக்கியமும் அடைவான்.

(30) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் ராகு இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கொடி சுற்றிப்பிறப்பான், லக்கினத்திற்குக் குரு பார்வையிருந்தால் ஜாதகனுக்கு ஆரோக்கியமும், சௌக்கியமும் உண்டாகும்.

(31) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகி சந்திரன் பத்தாம்பாவத்திலிருந்து, குரு, சுக்கிரன் இவர்களால் சந்திரன்

கப்பட்டால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், தாய் குண முடையவள், பொறுமைசாலி, பந்துக்களுக்கு மிகவும் பிரியமானவள், தாய்வம்சத்தில் விசேஷ சௌக்கியமும், அம்மான் பிரபலமுள்ளவளும், சகோதரர்களுடன் கூடினவளும், வம்சபாக்கிய விருத்தியுடைய வளுமாவாள்.

(32) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் சூரியனிருந்து பத்தாம் பாவாதிபனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுள் யோகமுடையவன், ஜாதகன் பிதா விஷ்ணு பக்தியுடையவன், பணம் சம்பாதிப்பதில் நல்ல புத்திமான், பாலியத்தில் கிலேசம் முதலான தரித்திரமுடையவன், மத்திய வயதில் சௌக்கியமுடையவன், கொஞ்சகாலம் அனுசாரன், அயல் ஸ்திரீ சேர்க்கையால் தோஷமுடையவன்.

(33) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் சனியிருந்து ஒன்பது, பத்து முதலிய பாவாதிபதிகளுடன் கூடியிருந்தால் ஜாதகன் பிதா குணம் நிறைந்தவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், பிராமண பிரபுமூலம் சௌக்கியமுடையவன், சிநேகவஞ்சனை செய்யும் புத்தியுடையவன், மத்தியவயதில் பாக்கியமுடையவன், சூத்திரமூலம் கொஞ்சம் சுகமும், லோப சுபாவமும், பொறுமையுமுடையவனாகவும், கிராமத் தலைவனாகவும், பயிர்த் தொழில் செய்பவனாகவும், ஏதோ கொஞ்சம் தர்மசித்தியுடையவனாகவும், வயோதிகவயதில் சௌக்கியமும், தன் தகப்பன் தன முடையவனும், பாக்கியமுடையவனும், சகோதரருடன் கூடினவனும், சுயார்ஜித யோகம் உடையவனுமாவான்.

(34) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபன் சுயக்ஷேத்திரத்தில் இருக்க லக்கினம் தவிர்த்த கேந்திரத்தில் செவ்வாய் இருந்தால் ஜாதகனுக்குச் சகோதர விருத்தியும், சௌக்கியமும், இரண்டு சகோதரருடன் கூடியும் இருப்பன், ஜாதகனுக்கு ஒரு சகோதரி தீர்க்காயுளுடையவள், புத்திர புத்திரியுடன் கூடியவன், ஜாதகனுடைய சகோதரர்களில் எவனுவது ஒருவன் மூன்று தாரமுடையவன், பின் சகோதரன் தீர்க்காயுளும், அரசாங்கத்தில் புகழுடையவனும், பாக்கிய விருத்தியடைபவனும், தன் குலத்திலேயே தனிகனுகவும், பாக்கியமுள்ளவனுகவுமாவான், சிலர் ஒருவன் இரண்டு தாரமுடையவன் என்றும், சந்தான அரிஷ்டத்தால் சோகமுடையவன் என்றும் சொல்லுகிறுர்கள்.

(35) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் பாபக்கிரகமிருந்தால் ஜாதகன் மனைவிமூலம் விசாரமுடையவன், அந்த ஏழாம் பாவாதிபன் பலவானாக எவ்விடத்திலிருந்தாலும் பாபருடன் கூடியிருந்தால் ஜாதகன் இரண்டு தாரமுடையவனாவான், இல்லையேல் ஜாதகனுடைய மனைவி கர்ப்பகாலத்தில் (துஷ்டகிரக) தோஷத்தால் பீடிக்கப்படுவாள், கர்ப்பம் அடிக்கடி (நழுவுதல்) நஷ்டமடைதல் மூலம் சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும்.

(36) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகி ஐந்தாம்பாவாதிபன் ராகு, கேதுக்களுடன் கூடியிருந்து ராகு கேதுக்களால் பார்க்கப்பட்டு குரு ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களிலிருந்தால் ஜாதகனுக்கு சந்தான நாசத்தால் சோகமுண்டாகும்.

(37) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் கேந்திரத்திலிருந்து பாபர்களுடன் கூடி சுதாம்சத்திலிருக்க, சந்திரனுக்கு ஒன்பதாமிடத்தில் குருவிருந்தால் ஜாதகனுக்கு குழந்தை பிறந்தாலும் மரித்து விடும், அல்லது மரித்துப் பிறக்கும், அந்த தோஷத்துக்குப் பரிகாரம் செய்தால் நற்சந்ததி உண்டாகும். சாந்தி நிஜமான ஆடு தானம், செவ்வாய்ப் பிரீதி, ஹரிவாஸதினத்தன்று கோதானம் முதலியனவும் செய்து சொர்ண கேதுப்பிரதிமையைப் பூஜித்து, அர்ச்சித்து, நாகசாந்தி செய்து, ஜோதிஷனுக்குத் தானம் செய்தால் சந்ததி உண்டாகும். முதலில் சேதுஸ்நாநம் செய்து பிறகு சாந்தி தானம் முதலியவற்றைச் செய்யவேண்டும். அப்படித் தானம் செய்தால் நல்ல தீர்க்காயுளுடைய இரண்டு புத்திரன்களும், மூன்று புத்திரிகளும் உண்டாவார்கள். அப்படி இந்தவிதமாகச் சாந்தி செய்யாவிடில் சந்தானம் எத்தனை பிறந்தாலும் மரிந்துவிடும், ஆதலால் சந்தானத்தை விரும்புகிறவன் இந்தப்படி சாந்தி செய்யவேண்டும். குரு மூன்றும் பரியாயத்தில் கோட்சாரத்தில் விருஷபராசியில் வரும்சமயம் முன் ஜென்மாந்திர புண்ணியவசத்தாலும் நல்ல ஜீவசந்தான முடையவனாவான். வேறு சிலர் மாளவீ யோக ஜாதகத்திற்கு காலாந்திரத்தில் அல்லது வேறு மனைவியிடத்தில் நல்ல புத்திரனுண்டாவான் என்று சொல்லுகிறார்கள்.

(38) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகி ஒன்பது, பத்து முதலிய பாவத்துக்குடையவர்கள் கேந்திரத்தில் ஒரு இடத்தில் இருந்தால் மாளவீ யோகத்தில் ஜெனித்தவன், நல்லவாஹனம் முதலிய யோகமுடையவனாவான்.

(39) ஜென்ம லக்கினம் தனுசு (சுதாம்சம்) ஆகிச் சுக்கிரன் தன்னுச்சத்திலாவது, சுயக்ஷேத்திரத்திலாவது, கேந்திரத்திலாவது பலமுடையவனாகியிருந்தால் ஜாதகனுக்கு மாளவீ யோகம் என்று சொல்லப்படுகிறது. ஷை யோகத்தில் பிறந்தவன் யானை, குதிரைகளுடன் கூடி பல்லக்கு முதலிய உடையவனும், பூமிக்கும், துர்க்கங்களுக்கும் அதிபதியாகி குணம், கூட்டம், சமுத்திரம் முதலியவற்றிற்கு நாதனுமாகி நல்லமனைவியுடன் கூடி அன்னியஸ்திரீகளுடன் கூட இச்சையுடையவனாகி பாக்கியசாலியான அரசனாகவும் விளங்குவான்.

(40) ஜென்ம லக்கினம் தனுசு (முத்க்காம்சம்) அதாவது லக்கினஸ்புடம் பாகை 259-48 கலை முதல் பாகை 260-00 வரையில்) ஆகி பூர்வபாகத்தில் லக்கின பாவாதிபன் சூரியனுடன்கூடி லக்கினபாவாத்தில் செவ்வாயும், சனியும் கூடியிருந்தால் பெரிய நதிப்பிராந்திய தேசத்தில் சிறிய கிராமத்தில் ஜாதகனுடைய ஜெனனம் நேரிடும். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குச் சமுத்திர சமீப பட்டணத்தில் ஜெனனமும், வாசமும் நேரிடும்.

(41) ஜென்ம லக்கினம் தனுசு (முத்க்காம்சம்) ஆகி பூர்பாகத்தில் லக்கின பாவாதிபன் சூரியனுடன் கூடியிருக்க சந்திரன் பாபசம்பந்தம் பெற்றிருந்தால் ஜாதகன் பிறந்தகாலத்தில் தாய்க்குப் பிரசவ வேதனை கொஞ்சமாயிருக்கும். உத்தராம்சத்தில் அதிக வேதனையுடன் மூன்று நாள் கஷ்டப்பட்டுப் பிரசவித்தும் குழந்தை பிறக்கும்போது கொடிசுற்றிப் பிறக்கும். பூர்வபாகத்தில் சீக்கிரம் பிரசவமாகும், ஆயினும் கொஞ்சம் பாலாரிஷ்டமுண்டாகும், கொடிசுற்றாமல் குழந்தை பிறக்கும், ஜாதகனுடைய சம்பத் திசையில் மூன்றாவது அல்லது நான்காவது வயதில் மாந்த சுரம், இரணம் இதுகளால் மிகவும் பீடிக்கப்படுவான், தாய் தகப்பனுக்குச் சுகமும், தேகபுஷ்டியும் உண்டாகும்.

(42) ஜென்ம லக்கினம் தனுசு (முத்க்காம்சம்) ஆகி லக்கினத்திற்கு மூன்றாம்பாவத்தில் சூரியன் இருந்து குருவுடன் கூடி அல்லது குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் சிவபக்தியுடையவன், அரசாங்கத்தில் வசிப்பவன், ஜாதகன் தகப்பன் பாலியவயதில் தரித்திரத்தால் பீடிக்கப்படுபவன், மத்திய வயது காலத்தில் சௌக்கியமுடையவன், சுயார்ஜித பாக்கியமும் உடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியடைபவன், அரசாங்க ஜெனங்களால் அடையப்படுப

வன், பொருள் சம்பாதிப்பதில் சமர்த்தன், கல்விமான், தெளிந்த அறிவுடையவன், தனக்குச் சமமான மனிதர்களிடம் சிநேகமுடைய வன், அவர்களாலும் கொஞ்சம் சுகமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் விருத்தாப்பிய வயதில் விசேஷ தனலாபமுடையவன், ஏதோ கொஞ்சம் தர்மம் செய்வான், கீர்த்தியுடையவனுவான்.

(43) ஜென்ம லக்கினம் தனுசு (முத்காம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் சுக்கிரன் இருந்து, அந்த பாவாதிபதி சூரியனுடன் கூடி யிருந்து சந்திரன் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய் தீர்க் காயுளுடையவள், தாய் குணவதி, தீரமுடையவள், சமர்த்தை, பலத் துடன் கூடியவள், தாய்வம்சத்தில் விசேஷ சௌக்கியமுடையவள், ஜாதகனுடைய அம்மான் கொஞ்சம் பிரபலமுடையவன், உடன் பிறந்த சகோதரர்களுடன் கூடியவள், வம்சத்தில் பாக்கிய விருத்தி யுடையவள், தாய் புண்ணியத்தினுல் தன் தகப்பனுக்கும் பாக்கிய முண்டாகும்.

(44) ஜென்ம லக்கினம் தனுசு (முத்காம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் குரு இருக்கச் செவ்வாய் லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் சகோதர விருத்தியுடையவன், இரண்டு சகோதரர்களையுடை யவன், ஒரு சகோதரி தீர்க்காயுளுடையவள் உண்டு.

(45) ஜென்ம லக்கினம் தனுசு (முத்காம்சம்) ஆகி சூரியன் சகோதர பாவத்திலிருந்து செவ்வாய் சனியுடன் கூடியிருந்தால் இரண்டு அல்லது மூன்று சகோதரர்கள் நாசமடைவார்கள்.

(46) ஜென்ம லக்கினம் தனுசு (முத்காம்சம்) ஆகி சந்திரனி ருக்குமிடம் தவிர்த்து கேந்திரத்தில் அதாவது லக்கினத்திற்குக் கேந் திரத்தில் சுக்கிரனிருந்து அந்த சுக்கிர திசைவந்தால் அந்த சுக்கிர திசையில் ஜாதகன் சௌக்கியத்தையடைவான்.

(47) ஜென்ம லக்கினம் தனுசு (முத்காம்சம்) ஆகி சுக்கிரன் நான்காம்பாவத்தில் தன்னுச்சராசியிலிருக்க, குரு ஒன்பதாம் பாவாதி பனுடன் கூடி பூமிஸ்தானத்தை கோட்சாரத்தில் அடையும்போது ஜாதகன் கிராம லாபத்தையடைவான்.

(48) ஜென்ம லக்கினம் தனுசு (முத்காம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் சனியுடன் கூடியல்லது சனியால் பார்க்கப்பட்டாலும், ஏழாம் பாவாதிபன் ராகுவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் சந்தான நாசத்தால் சோகத்தையடைவான்.

(49) ஜென்ம லக்கினம் தனுசு (முத்காாம்சம்) ஆகி குரு சூரிய னுடன் கூடியிருக்க சகடயோகத்தில் பிறந்த ஜாதகனுக்குச் சந்தா னத்துக்கு இடைஞ்சல் உண்டாகும்.

(50) ஜென்ம லக்கினம் தனுசு (முத்காாம்சம்) ஆகி சகடயோ கத்தில் குரு பாபராசியில் பாபாம்சத்தில் இருந்து சந்திரன் கேந்திரத் திலிருந்தால் ஜாதகனுக்குப் (புத்திர) சந்தானத்துக்கு இடைஞ்சலுண் டாகும், தோஷத்துக்குச் சாந்தி செய்யவேண்டியது, சந்தான கோபாலப் பிரதிமை தானமும், பதினாயிரம் முதலான சிவார்ச்சனை யும், சிம்சுமார தானமும் செய்தால் புத்திரப்பிராப்தியுண்டாகும்.

(51) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணாம்சம்) ஆகிச் சனி லக் கின கேந்திரத்தில் இருக்க பூர்வபாகத்தில் பிறந்தவனுக்குத் துர்க்கா ரண்ணியப் பிரதேசத்தில் நகரத்தில் தேவாலயத்துடன் கூடிய ராஜஸ் தானத்தில் ஜெனனம் நேரிடும். உத்தாாம்சத்தில் பிறந்தவனுக்குப் பெரிய கிராமத்தில் ஜெனனம் நேரிடும். அல்லது நதி தீரத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரத்திலாவது ஜெனனம் நேரிடும்.

(52) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணாம்சம்) ஆகிச் சனியால் சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய்க்குப் பீடையும், பிர சவகிரக தோஷத்தால் பயமும், உத்தாாம்சத்தில் ஜெனனமானால் விசேஷ பிரசவ வேதனையும் உண்டாகும், ஜாதகன் மாற்றாந்தாய் உடையவனாவான்.

(53) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணாம்சம்) ஆகிப் புதன் எட்டாம் பாவத்தில் இருக்கச் சூரியனுடன் சேது கூடி இருந்தால் ஜாதகன் உஷ்ணவாயு, சூலைரோகம் முதலியவற்றால் பீடிக்கப்படு வான், சந்திரன் கதாம்சாவஸ்தையிலிருந்தால் ஜாதகனுடைய தாய் இருபத்தெட்டு நாளில் மரிப்பாள், ஜாதகன் வளர்ப்புத்தாயால் சௌக் கியமடைவான், பாலரோகபயமுண்டாகும், மாந்த சுர, ரிணம் முத லானவற்றாலும், வைசூரியாலும் சுரமுண்டாகி ஐந்து வயதுவரையில் பாலதோஷத்தால் கஷ்டப்பட்டு ஐந்து வயதுக்குப் பிறகு சுகமடை வான்.

(54) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி விரயபாவத்திலிருந்து லக்கின பாவத்தில் சனி கூடி லக்கி னத்திற்கு ஏழில் சுக்கிரனிருந்து எட்டாம் பாவாதிபதி சனியால் பார்க்கப்பட்டு புதன் ஆயுள் ஸ்தானமான எட்டாமிடத்தில் இருந்

தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகப்பெற்றுச் சுகமடைவான், ஜாதகன் மத்தியாயுள் யோகமுடையவனாயினும் நாற்பத்தாறு வயது டையவனே, முப்பத்திரண்டாவது வயதில் தேக ஜாட்டியமும், இருபத்துநாலாவது வயதிலும் அப்படியே தேக ஜாட்டியமும், முப்பத்தெட்டில் விசேஷ பயமும் உண்டாகும், சாந்தி செய்தால் சுகமுண்டாகும், லக்ஷ மிருத்துஞ்ஜெய ஜபம், ஈஸ்வரசன்னிதியில் ஜெபித்து ஆயுள் ஹோமம் செய்து சனி சக்கிரதானமும் செய்து ஆடு தானமும் செய்தால் மரணத்தினின்றும் மீண்டு தேகசுக மடைவான்.

(55) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணம்சம்) ஆகிச் சூரியன் புதனுடன் கூடி ஒன்பதாம் பாவத்திற்குப் பாக்கியாதிபன் லாப பாவத்தில் பூர்ணபலத்துடன் கூடி பாக்யாவஸ்தையிலிருக்கப் பிறந்த ஜாதகனுடைய தகப்பன் ராஜயோகமுடையவன், சிம்மாதனபதியாவான், சதுரங்க பலத்துடன் கூடினவன், குடை, சாமரமுடையவனாகி பட்டணத்தலைவனாகி, சேவகர்களால் கொண்டாடப்பட்டு வணக்கம் செய்யப்பெற்று, யானை, குதிரை, தேர், வாகனம் முதலிய அநேக (வேலைக்காரர்கள்) ஏவலாளர்களுடன் கூடிப் பெரிய உதார குணமுடையவனும், விசேஷ பாக்கியமுடையவனும், அநேக சேனை, குதிரைகளுக்கு நாயகனாகியும், கல்வியுடையவனும், இனிமையாய்ப் பேசுபவனும், விணயமுள்ளவனும், தர்மத்தைப் பரிபாலிப்பவனும், விஷ்ணு, சிவ பக்தியுடையவனும், தேவர் பிராமணர்களை ரக்ஷிப்பவனுமாவான்.

(56) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சக்தி தேவி (சக்தி) யினுடைய அருளடைந்தவன், சாஸ்திர, ஆகம புராணங்களைப் பிரியமாய்ச் சொல்பவனும், நன்கு அறிந்தவனும் ஆவான்.

(57) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணம்சம்) ஆகி ராகுவுடன் சூரியன் கூடி அல்லது சூரியன ராகுவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் அயலாருடைய ரகசியங்களை வெளிப்படுத்துபவன், சத்துருக்களை அழிப்பவன், பிரதாபமுடையவன், கோபமும், சௌரியமும், கீர்த்தியுமுடையவன், மூன்று மனைவிகளை மணக்கும் யோகமுடையவன், போக ஸ்திரீகளிடத்தில் சரசம் செய்வதில் பிரியமுள்ளவன், சந்தன, புஷ்ப, வஸ்திர பிரியமுடையவன், சங்கீதப்பிரியன், பல தேசங்களிலும் கொண்டாடப்படுபவன், தேசாந்திரத்திலும் கீர்த்தி

யுடையவன், கர்ப்பத்திலிருந்தே ஸ்ரீமானனவன், வெகு போகமுள்ள வன், மத்திய, அந்திய காலங்களில் வெகு யோகமுடையவன், ராஜ்ய தந்திரத்தில் வெகு சமர்த்தன், தன தானியப் பெருக்குடைய வன், யானை, குதிரை, பசு முதலிய விருத்தியுடையவன், பழைய வற்றை புதுப்பித்தல் முதலிய தர்மம் செய்பவன், நடைவாவி, குளம், கிணறு முதலிய அநேக தர்மங்களைக் காப்பாற்றுபவன், புத்திரமூலம் சுகமுடையவனாயினும், தன, ரத்னாதிக முள்ளவன், எப்பொழுதும் அன்னதானம் செய்யும் புண்ணியாத்துமா, நல்ல அறிவாளியாய் தன் ராஜ்பத்தைப் பரிபாலிப்பவன், தேவாலயம் முதலிய தர்மசித்தி களைத் தள்ளாதவயதில் செய்வான், ஜாதகனுடைய மூன்றும் திசை யில் நல்ல லோகத்தை அடைவான்.

(58) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபன் இரண்டாம் பாவத்தில் இருந்து சந்திரன் சனியுடன் கூடி அல்லது சனியால் சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய்க்குச் சுகமில்லை. தாய் குணமுள்ளவள், பொறுமையுள்ளவள், கணவனுடைய மனம்போல் அனுசரணையுடன் நடப்பவள், எப்பொழு தும் அன்னதானம் செய்வதில் பிரீதியுடையவள், தர்மசிந்தையுடைய வள், ஜாதகனுடைய ஜென்ம திசையில் அதி பாலியத்தில் பிரசவத்தில் ஜாதகனுடைய தாய் மரிப்பாள். ஜாதகன் இரண்டு தாய்களை ரக்ஷிப் பான், மாற்றுந்தாயால் செளக்கியமுடையவன் ஆவான்.

(59) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபன் சனி லக்கின பாவத்தில் இருந்து சுக்கிரனால் பார்க்கப் பட்டுச் சகோதரகாரகன் பதினோராம்பாவத்தில் இருந்தால் சகோதரர் செளக்கியமுடைய ஜாதகனவான், இரண்டு பேத சகோதரர்களு டையவன், இரண்டு சகோதரிகள் அப்படியே உடையவன், அதிகம் இருந்தாலும் நஷ்டமடையும், இரண்டு சகோதரர்கள் நல்லயோக முடையவர்கள், மேன்மையான யோகமுடையவர்கள், ஜாதகன் ராஜ யோக விருத்தியுடன் தேசாந்தரத்லும் கீர்த்தியுடையவன், அஸஹாய சமர்த்தன், ராஜ்ஜிய தந்திரத்தில் நல்லபுத்தியுடையவன், தியாகபோக செளக்கிய முடையவன், ஆஸ்தானங்களில் சுதந்திர முடையவனாவான்.

(60) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணாம்சம்) ஆகி லக்கினபாவத் தில் சனி இருந்தாலும், சனி லக்கின பாவத்தைப் பார்த்தாலும், ஜாத

கன் காமியாயும், சம்போக புத்தியுடையவனும், மகாபாக்கியமுடையவனும், மானியாயும், தியாகியாயும், ஆயுதங்களைத் தரிப்பவர்களுக்குத் தலைவனுகவுமிருப்பான்.

(61) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி ராகு இரண்டாம் பாவத்தில் இருந்தால் மருந்து செய்வதில் அல்லது பிரயோகிப்பதில் நல்ல புத்திமானுகவும், நல்ல நிபுணனுகவுமிருப்பான், சங்கீதப் பிரியன், சந்தன, புஷ்ப, வஸ்திர அலங்காரப்பிரியன், நாடக, காவிய, அலங்கார சாஸ்திரங்களிலும், நல்ல ஸம்ஸ்கிருத ஞானமுமுடையவனுகவுமிருப்பன், மூன்று பாஷைகளில் கெட்டிக்காரன், பலவித்தைகளில் வெகு சிரமப்படுபவன், மனைவியை மணந்த பிறகு யோகமுடையவன், போக ஸ்திரீ சௌக்கியமுடையவன், சுக்கிரன் காமினியம்சத்திலிருந்தால் ஜாதகன் பல ஜாதி ஸ்திரீகளைச்சேருவான், குதிரையேறுவதில் வல்லவன், அநேக வேலைக்காரர்களையுடையவன், அநேக வாகன சம்பத்துடையவன், யானை யேறுவதில் சௌக்கியமுடையவன், டங்கா, தப்பட்டை, படக வாத்தியங்களுடையவன், புள்ளாங்குழல் வாசிப்பதிலும், வீணைப்பாட்டிலும் ரஸமறிந்தவன், அநேக குதிரைச் சேனைகளுக்கு நாயகனுவான், மந்திர சாஸ்திரப்பிரியன், எப்பொழுதும் சக்தி தேவியின் அருளுடையவன், விசேஷ குரு பக்தியுடையவன், வேதாந்த ஞானசீலமுள்ளவன், ஆயுளுள்ளவரையில் கீர்த்தியுடையவன். தேசாந்தரங்களில் நற்கீர்த்தியுடையவனுவான்.

(62) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் இருக்கப்பட்ட நவாம்சத்தைக் கோசாரத்தில் குரு எப்போது அடைகிறுனே அப்போது ஜாதகனுக்கு மனைவி லாபம் (விவாகம்) உண்டாகும்.

(63) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் லாப பாவத்திலிருந்து தன் அம்சத்தில் இருக்கப்பட்ட சனியால் பார்க்கப்பட்டு ஒன்பதாம் பாவாதிபன் எட்டாம் பாவத்திலிருக்க ராகு, கேது இவர்களுடன் கூடியாவது, ராகு கேதுக்களால் ஐந்தாம் பாவாதிபதி பார்க்கப்பட்டாவதிருந்து புத்திரகாரகன் விரய பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு அற்பசந்தானம் உண்டாகும். அதற்கு நாகசாந்தியாலும், சுப்ரமணிய விரதத்தாலும், நல்ல தீர்க்க ஆயுளையுடைய புத்திரன் பிறப்பான், ஜென்மகாலத்தில் குருவின் பார்வையுள்ள ராசித் திரிகோணங்களில் கோட்சாரத்தில் குரு வருங்கால

மாவது புத்திர புத்திரீ ஜெனனம் உண்டாகும், இரண்டு புத்திரனும், இரண்டு புத்திரிகளும் தவிர அதிகம் ஜெனித்தாலும் நஷ்டமடையும், சந்ததியுடையவனுவான்.

(64) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி பன்னிரெண்டாம் பாவாதிபன் சுப ராசியிலிருந்து விரயபாவத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்கு தேகாந்தியத்தில் புண்ணிய லோகப்பிராப்தியும், பாபம், புண்ணியம் இரண்டும் சமமுடையவனுயும் இருப்பான்.

(65) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி லக்கின பாவத்தில் சூரியன் இருக்கப் பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்குத் தாய் ஜாதகன் பிரசவகாலத்தில் அதிகவேதனையடைவாள். உத்தராம்சத்தில் கொஞ்ச வேதனையுண்டாகும், தாய்க்கு தோஷமுண்டாகும்.

(66) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி சந்திரன் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குப் பீடையும் கொஞ்ச பயமும் உண்டாகும், பாலாரிஷ்ட பீடையால் ஜாதகன் ஐந்து வருஷம் வரையில் கஷ்டமடைந்து, மாந்த சுரத்தாலும், வைசூரியாலும், சுரத்தாலும், விரணத்தாலும் பயமடைவான்.

(67) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி லக்கின பாவாதிபதி தன்னுச்ச ராசியிலிருந்து எட்டாம் பாவாதிபன் ஐந்தாம் பாவத்தில் இருந்து சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுக்குச் சகல அரிஷ்ட தோஷங்களும் விலகிச் சுகமடைவான், மத்தியாயுள் யோகமுடையவன், அறுபத்தொரு வயதுடையவன்.

(68) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி சூரியன் கேந்திரத்தில் பலத்துடன் கூடியிருக்க சனி ஒன்பதாமிடத்தில் இருந்தால் ஜாதகனுக்கு இரண்டு தகப்பன் என்று எண்ணப்படுகிறது, ஜாதகன் சுவீகாரமாவான், சுவீகார தகப்பன் நல்ல புகழுடையவன், சகோதர சௌக்கிய முடையவன், கல்வி அறிவுடைய விவேகி, தன் வித்தையில் சமர்த்தன், இரண்டு தாரமுடையவன், எழுதுவதில் சமர்த்தன், தேவப்பிராமண பக்தியுடையவன், உசிதமாகத் தெரிந்தவன், குணத்துடன் கூடினவன், விஷ்ணு பக்த மத ஆராசமுடையவன், விஷ்ணு, சிவ பக்தியுடையவனுவான்.

(69) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவத்திற்கு ஒன்பதில் சந்திரனிருந்தால் ஜாதகனுடைய சிறிய தகப்பன் கன்னியா தேவியைக் குலதேவதையாக

உடைய வம்சத்தில் ஜாதகன் ஜெனித்தவன், சேர்க்கவும், கலைக்கவும் சாமர்த்தியமுள்ளவன், வாசாலகன், சாதுரிய யுக்தியாய்ப்பேசுபவன், எப்பொழுதும் வியாபார ஜீவனமுடையவன், திரவியசம்பாதனையில் சமர்த்தன், வியாபார விருத்தியுடையவன், மணி, ரத்ன பரீக்ஷை செய்பவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், தன் ஜெனங்களிடத்திலும் பிரசித்தியுடையவன், சொர்ண ரத்ன, நல்லவஸ்திரம் முதலிய கிரய விக்கிரயத்தால் லாபமுடையவன், தீபாந்தர வஸ்துக்களால் பல வியாபார லாபமுடையவன், தன, தானியத்துடன் கூடிய ஸ்ரீமானவன், க்ஷேத்திர கிராமம் முதலிய சௌக்கியமுடையவன், கர்னாட அரசர்களால் சன்மானிக்கப்படுபவன், வெளிதேசங்களில் கொண்டாடப்பட்ட கீர்த்தியுடையவன், வாகனாதி நல்லயோகமுடையவன், பல பிரபுக்களாலும் தனமடைவான், பல தேசங்களிலும் புகழுடையவன், தனம், ரத்தினம் அதிகம் படைத்த பிரபு ஆவான், தன் உடன் பிறந்த சகோதரனால் எப்பொழுதும் சுகமுடையவன், சௌரியமும், கோபமும் கீர்த்தியுமுடையவன், தேவாலயம், குளம், விஷ்ணு கைங்கரியம் முதலிய தர்மம் செய்பவன், நந்தவனம், (பங்களா) முதலிய சுகபோகியாவான், புண்ணிய சித்தியுடையவன், விசேஷ விஷ்ணு பக்தியுடையவன், சுயம் தர்மகர்த்தாவாக ஆவான், புத்திர மூலம் சுகமுடையவனாயிருந்தாலும் சகோதரனுடைய புத்திரனால் சந்ததி விருத்தி உடையவன், எப்பொழுதும் தர்ம மார்க்கத்தில் பற்றுடையவன், வயோதிக வயதில் ஞானமுடையவன், ஜாதகனுடைய க்ஷேம திசையில் ஜாதகனுடைய ஸ்வீகார பிதா மரிப்பான்.

(70) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணம்சம்) ஆகி நான்காம் பாவாதிபன் தன் உச்சராசியிலிருக்க நான்காம் பாவத்தில் ராகு இருந்து சுககாரகனான சந்திரன் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகன் சிறிய தாய் விசேஷ சௌக்கிய முடையவள், சமர்த்தை, கடுத்த சொல்லுடையவள், புருஷப்பிரஜை இல்லாதவள், விதவையாகி துக்கிப்பவள், இவள் ஜாதகனுடைய ஐந்தாம் திசையில் மரிப்பாள், ஜாதகனுடைய பாட்டன் பொறுமையுடையவன், தேவப் பிராமண பக்தியுடையவன், சகோதர சௌக்கியமுடையவன், சாந்த சுபாவத்தையுடையவன், குணம் உடையவன், தன் வித்தையில் வல்லவன், எழுதுவதில் சமர்த்தன் ஆனவன்.

(71) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணம்சம்) ஆகி ஜாதகனுக்கு ஒன்பதாம் பாவத்தில் சனியிருந்தாலும், பார்த்தாலும் ஜாதக

னுடைய தகப்பன் அனுசாரத்துடன் கூடியவன், வியாபார ஜீவி, பல புண்ணிய வசத்தினுல் தனிகன், சொர்ண, ரத்ன பரீக்ஷை செய்பவன், கிரய விக்கிறையம் ஒழுக்கமாய்ச் செய்பவன், முத்து மணிப்ரவாளம் முதலிய பல லாபமுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், வியாபார விருத்தியுடையவன், பலவழிகளிலும் திரவிய சம்பாதனையுள்ளவன், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், ஆயினும் மத்திய, அந்திய வயதில் தனமுடைய வன், தன் ஜெனங்களிடம் பிரசித்தியுடையவன், விஷ்ணு கைங்கரிய தர்மமுடையவன், குளம், உத்தியானம் முதலிய தர்மம் உடையவன், தள்ளாத வயதில் தர்மம் செய்பவன், புத்திரன் மூலம் சுகமுடைய வன், கிழவயதில் அதிக சௌக்கிய முடையவன், சாந்தமுள்ளவன், ஜாதகனுடைய ஐந்தாம் திசையில் மரிப்பான்.

(72) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி நீசாம்சத்தில் இருந்து சகோதரகாரகன் சந்திரனுடன் கூடி சுய க்ஷேத்திரத்தில் இருக்க பதினோராம் பாவாதிபன் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குச் சகோதர பலம் அற்பமாகும், நீண்ட கால ஆயுளுடைய ஒரு மூத்த சகோதரனுடையவனும், பின் சகோ தரன் இல்லாதவனுமாவான், ஜாதகனுக்குச் சகோதரியும் அப்படியே இருந்தாலும், அவள் அற்பாயுளுடையவள், மாற்று சகோதரிகள் மூவர் இருப்பவர்கள், அவர்களில் ஒருத்தி அற்பாயுளுடையவள், பின்னொருத்தி விதவையாவள், மற்றொருத்தி சுகஜீவனமுள்ளவள்.

(73) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகி லக்கின பாவாதிபன் தன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் கன்னி தேவ தையைக் குலதெய்வமாக உடைய வம்சத்தில் ஜெனித்தவன், தேவப் பிராமண விசுவாசி, தியாகி, கெம்பீர புத்தியுடையவன், விஷ்ணு பக்தி மதாசார முடையவன், விஷ்ணு சிவ பக்தியுடையவன், வாசாலகன், பிரசங்கியானவன், எழுதுவதில் சமர்த்தன் சுயவித்தையில் வல்லவன், கர்ப்பத்திலிருந்து ஸ்ரீமானுனவன், மகாபோகி, பிதார்ஜித தன முடையவன்.

(74) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணும்சம்) ஆகிப் பத்தாம் பாவாதிபதி செவ்வாயின் வீட்டிலிருக்கப் பத்தாமிடத்தில் கேது இருந்தால் எப்பொழுதும் வியாபார ஜீவனமுடையவன், வியாபாரத் தால் திரவிய லாபமுடையவன், சொர்ண வியாபாரத்தால் லாபமுடை

யவன், பற்பல ரத்னபரீக்ஷை செய்பவன், ரத்னம், தானியம் நல் வஸ்திரம் முதலிய பல வியாபார லாபமுடையவன், பிராமணனால் சுக முடையவன், தன் சிறிய தகப்பனால் சௌக்கியமுடையவன், அரசாங் கத்தில் புகழுடையவன், வெளிதேசத்தில் தெளிவான கீர்த்தியுடைய வன், பதினாலாவது வயதில் அதிக சுபமுள்ளவன், சிறியதகப்பனால் சுவீகாரமாக எடுத்துக் கொள்ளப்படுவான்.

(75) ஜென்ம லக்கினம் தனுசு (வாருணம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் சந்திரனுடன் கூடி சுய க்ஷேத்திரத்தில் பலத்துடன் கூடி புத்திரகாரகனை குரு தன் உச்ச ராசியிலிருந்து சுக்கிரனால் பார்க் கப்பட்டால் ஜாதகன் ஆண் பிள்ளையின் சோகத்தால் தபிக்கப்பட்ட வனாகி அற்ப சந்தானமுடையவனாகி இரண்டு புத்திரன்களும், மூன்று புத்திரிகளும் ஆயுளுடையவர்களாகப் பெறுவான், அதிகம் பிறந்தா லும் மரித்துவிடும்.

(76) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 249-24 கலை முதல் பாகை 249-36 கலை வரையில்) ஆகி லக்கின பாவத்தில் சுக்கிரன் இருந்தாலும், லக்கினத்தைப் பார்த் தாலும், லக்கினாதிபன் கேதுவுடன் கூடியிருந்தாலும் பூர்வபாகத்தில் ஜெனித்த ஜாதகனுடைய தாய் விசேஷ பிரசவ வேதனையடைவள், உத்தராம்சத்தில் வேதனை கொஞ்சமாயிருக்கும், சூதிதோஷம் அதிக மிருக்கும்.

(77) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி சனி பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு மாந்த சுரத்தாலும், வைசூரியாலும், இரணத்தாலும், பயமுண்டாகும். ஜாதகனுடைய தாய்க்கும் கொஞ்சம் பயமுண்டாகும்.

(78) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்தில் மித்திராம்சத்தில் இருக்க எட்டாம் பாவாதிபன் நீச்ச ராசியிலிருந்து சூரியன், புதன் இவர்களால் எட் டாம் பாவாதிபன் பார்க்கப்பட்டு லக்கினம் தவிர்த்த கேந்திரத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகனுக்குச் சகல தோஷங்களும் விலகிச் சுக மடைவான், ஜாதகனுக்குப் பூர்ணாரம்ப வயதிருந்தாலும் ஜாதகன் அறுபத்தைந்தாவது வயதுவரை ஜீவித்திருப்பான்.

(79) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி சூரியன் புதனுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சௌக்

கியமுடையவன், தன் தகப்பனேவிட மேலான குணமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் சகோதரனில்லாதவன், ஒண்டியானவன், மாற்றுந்தாயின் பிள்ளை பின்ன சகோதரனுடையவன், ஜாதகனுடைய தகப்பன் அற்பாயுளுடையவனுவான்.

(80) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கல்வி, அறிவு உடைய விவேகியாவான்.

(81) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகிச் சூரியன், சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கன்னியா தேவியைக் குலதெய்வமாக உடைய வம்சத்தில் பிறந்தவன், தேவ பிராமண விஸ்வாஸ முடையவன், விஷ்ணு பக்த மதத்தை அடையவன், எழுத்து வித்தை அறிந்த சமர்த்தன், சுயவித்தையில் மிகவல்லவனுக இருப்பான்.

(82) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் ராகுவுடன் சனி கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சிநேகிதர்களை வஞ்சிக்கும் புத்தியுடையவன், லோபப் பிரகிருதியுடையவன், எப்பொழுதும் வியாபாரத்தால் ஜீவனமுடையவன், பிதுரார்ஜித தனமுடையவன், சொர்ண, ரத்ன பரீக்ஷை செய்பவன், கிறைய விக்கிறையத்தில் ஒழுக்கமுடையவனுயிருப்பன், பல ரத்தினங்களைப் பரிக்ஷை செய்பவன், சுயார்ஜிதம் சம்பாதிப்பவன், எப்பொழுதும் வியாபார விருத்தியுடையவன், பலஜாதி மனிதர்களாலும் தனமடைவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், பிரபுக்கள் பிரீதி விசேஷமுடையவன், தனலாபமும், நற்கீர்த்தியும் உடையவன், சூத்திரப்பிரபு மூலம் சௌக்கியமடைவான், பலபல வியாபாரம் செய்து தனப்பெருக்குடையவன், தன் ஜெனங்களிடத்தில் பிரசித்தியானவன், அயல் தேசத்தில் புகழும், கீர்த்தியும் உடையவன், வாகனம் முதலிய நல்ல லாபமுடையவன், சொர்ண, பூஷண, வஸ்திர லாபமுடையவன், வீடு, க்ஷேத்திரம் முதலிய விருத்தியுடையவன், விருத்தாப்பிய வயதில் தர்மத்தைக் கிரகிப்பவன், புத்திரனுல் சுகமுடையவன், விருத்தாப்பிய வயதில் விசேஷ சௌக்கியமுடையவன், தீர்த்த யாத்ரா பலன் சித்திக்கும், தடாக உத்யானம் முதலிய தர்மம் செய்பவன், விசேஷ விஷ்ணு பக்தியுடையவன், நல்ல பாத்திர மறிந்து ஒழுக்கத்துடன் தானம் செய்பவன், பிதா ஜாதகனுடைய விபத்தார திசையில் மரிப்பான்.

(83) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி மூன்றும் பாவத்தில் இருக்க ஏழாம் பாவத்தில் சுபக்கிரக மிருந்தால் ஜாதகனுடைய தாய் விசேஷ சௌக்கியமுடையவள், குணவதி, சாந்தமுள்ளவள், கணவனிடம் பக்தி, குணம் முதலியன உடையவள், வம்சவிருத்தியுடையவள், புத்திரனுக்கு இஷ்டமான தைச் செய்பவள், ஜாதகனுடைய க்ஷேம திசையில் தாய் மரிப்பாள், இறப்பதற்கு முன்பு வியாதியடைவாள்.

(84) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபனுடன் ஒன்பதாம் பாவத்தில் ராகு கூடியிருக்க சகோதர காரகன் சுக்கிரனுடன் கூடியிருந்தால் சகோதர சகோதரிகளை யுடையவன், ஜாதகனுக்கு மூன்று மூத்த சகோதரிகள் சுகத்துடன் கூடியவர்கள், ஜாதகனுடைய பின் சகோதரிகள் இரண்டு, மூன்றுபேர் யோகத்துடனும், சுகத்துடனும் கூடியவர்கள், மூன்றும் பாவத்தில் குரு இருந்தால் ஒரு பின் சகோதரனையுமுடையவன், அதிகம் பிறந்தாலும் ஜாதகனுக்கு இதற்குமேல் சகோதர சகோதரிகள் இருக்க மாட்டார்கள்.

(85) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி குரு ராகுவால் பார்க்கப்பட்டாலும், குரு ராகுவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் துராலோசனை செய்பவன், சிநேகிதர்களையும், தன் பந்துக்களையும் ரக்ஷிப்பவன், எழுதுவதில் சமர்த்தன் ஆவான்.

(86) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் செவ்வாயிருந்தாலும், இரண்டாம் பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகன் கொஞ்சம் பரஸ்திரீ சேர்க்கையுடையவன், சந்தன, புஷ்ப, வஸ்திர அலங்காரபிரியன், பணம் சம்பாதிப்பதில் சமர்த்தன் ஆவான்.

(87) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபனுடன் சூரியன் கூடியிருந்தால் ஜாதகன் வியாபார ஜீவனமுடையவன், சொர்ண, ரத்தின பரிக்ஷை செய்பவன், சீலமுடன் நிறைய விக்கிறையம் செய்பவன், முத்து, மணிப்ரவாளம் முதலிய பலவியாபாரமும் உடையவன், வியாபாரவிருத்தி செய்வதில் நிபுணன், அரசாங்கமூலம் பிரசித்தியுடையவன், சிவப்புத்தானியம், நல்வஸ்திரம் முதலிய பல வியாபாரமுடையவன் ஆவான். (தன்) பிரபுக்களிடம் விசேஷ பிரீதி யுடையவன், பல பிரபுக்களாலும் தனமடைவான்,

அயல் தேசத்தில் கீர்த்தியுடையவன், பெரிய பணக்காரன் ஆகிச் சுகியாவான்.

(88) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி மூன்றும் பாவம் சுபக்கிரகங்களால் அடையப்பட்ட ஜாதகனுக்குப் பெண் கொடுக்கும் மாமனார் விசேஷ சௌக்கியமுடையவனாவான்.

(89) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபன் சுபக்கிரகங்களுடன் கூடியிருக்க விரயபாவத்தைச் சுபர்கள் பார்த்தாலும், சுபர்கள் பன்னிரண்டாம் பாவத்திலிருந்தாலும் ஜாதகன் அந்தியத்தில் ஞானத்தை யடைந்து புண்ணிய லோகத்தை அடைவான்.

(90) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபன் சந்திரனுடன் கூடியிருக்க லக்கினத்தில் புதனும், சுக்கிரனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் ஜாதகன் பிறந்தகாலத்தில் கொஞ்சமான பிரசவ வேதனையடைவாள்.

(91) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி உத்தராம்சத்தில் சந்திரன் செவ்வாயால் பார்க்கப்பட்டு ஜெனித்தவனுடைய தாய்க்கு ஜாதகன் பிறந்த காலத்தில் பிரசவ வேதனை அதிகமுண்டாகியிருக்கும், சந்திரன் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குத் தோஷமும், பயமுமுண்டு. மாந்த சுரபயமும், சிசுக்களுக்குரிய ரோகமும் ஜாதகனுக்கு உண்டாகும்.

(92) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதியும், எட்டாம் பாவாதிபதியும் கேந்திரத்திலிருந்து, ஏழாம் பாவத்தில் சனியுமிருக்க புதனும், சுக்கிரனும் லக்கினத்தில் கூடியிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகப்பெற்றுச் சுகமுடையவனாவன், மத்திய வயதுடையவன், அறுபத்தைந்து வயது ஜீவித்திருப்பான். இருபது வயதுக்குமேல் கொஞ்சம் பீடையுண்டாகும். இருபத்தேழிலும் இப்படியே, ஜாதகனுக்கு முப்பத்தாறுவது வயதில் தேக பீடையும், பித்தவாயு மூலம் பீடையும், நாற்பதாவது வயதில் மேக ரோகமும், ஐம்பத்தாறுவது வயதில் அபமிருத்துவும் உண்டாகும், சாந்தியால் சௌக்கியமும் உண்டாகும், அவ்வக் காலங்களில் நல்ல புத்திமானானவன், சாந்தி செய்யவேண்டும். எண்ணெயுடன் கூடிய எண்ணெய்க்குடம், நெய் சனி சக்கிரம் முதலியவற்றை தானம் செய்து ஆயுள் ஹோமம் செய்தால் ஜாதகனுக்கு சுகமுண்டாகும்,

மேஷதிரிகோணத்தில் அல்லது விருஷப ராசியிலாவது அதின் திரிகோணங்களிலாவது கோச்சாரத்தில் சனி வரும் ஜாதகனுக்கு சமயப் பீடையுண்டாகும். மேற்சொல்லிய சனிப் பிரீதி செய்தால் சுகமுண்டாகும். தனக்குச் சமமான ஜன அரிஷ்டம் அல்லது தாய் தகப்பன் ஜெனங்களுக்குக் கெடுதி முதலியன உண்டாகும்.

(93) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகிச் சூரியன் இரண்டாம் பாவத்தை யடைந்திருந்தால் பாக்கியாதிபத்ய யோகத்தினுல் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சுகமுடையவனுவன், ஜாதகனுடைய பாட்டனைக் காட்டிலும் ஜாதகனுடைய தகப்பன் மேலான குணமுடையவன், தேவ பிராமண பக்தியுடையவன், கல்வி அறிவுடைய விவேகியாவான், ஜாதகனுடைய தகப்பன் சகோதரர்களில்லாதவன், விசேஷ விஷ்ணு பக்தி உடையவன், மத்துவாச்சார மதத்தை அடைபவன், அயலார்களுக்கு இங்கித மறிந்தவன், வல்லவன், அயலார்களின் ரகசியங்களை வெளிப்படுத்துவன், வாசாலகன், யுக்தியாய்ப் பிரசங்கம் செய்பவனுவான்.

(94) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தைப் பாபக்கிரகங்கள் பார்த்தாலும், ஒன்பதாம் பாவத்தில் பாபக்கிரகமிருந்தாலும் ஜாதகனுடைய பிதா இரண்டு தாரமுடையவன், சூரியன் கின்னராம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ராஜசேவை செய்து ஜீவிப்பவன், பிரபுக்களின் மூலமாகப் பிரசித்தி பெறுவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், காமீ, மத்திய, அந்திய வயதுக்களில் சௌக்கியமுடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியடைவன், உத்தியோகத்தினுல் தனம் சம்பாதிப்பவன், சூத்திரப்பிரபுவால் சௌக்கியம் அடைவன், பிரபு மூலம் காரிய அனுகூல முடையவன், நல்ல வாகனம் முதலிய யோகமுடையவன், பிரபுக்களால் சன்மானிக்கப்பட்டுக் கீர்த்தியடைவன், தன் அரசனுக்கு அதிக சுகமுண்டாகும், பல வழிகளிலும் தனம் சம்பாதிப்பவன், நீச அரசனிடத்தில் ராஜ காரியத்தில் சுதந்தரமுடையவன், பிரபல உத்தியோக ஜீவனமுடையவனுவன், நீசப் பிரபுவால் சுகம் உண்டாகும். சத்துரு பீடையும், மனஸ்தாபமும், யோக பங்கமும் உண்டாகி விசாரமடைவன், அதற்குப் பிறகு சௌக்கியமுண்டாகும். பிரபுமூலம் நல்லயோகமுடையவனுவான். அதன் மூலம் சௌக்கியம் உண்டாகும். உத்தரோத்தரமாகப் பிரபல முண்

டாகும். அரசாங்க ஜெனத்துவேஷம் உண்டாகும். அதனுல் கொஞ்சம் வியாகூலம் உண்டாகும். சத்துருவை அழிக்கும் யோகமுடையவன், சௌரிய, சாகஸ, கீர்த்தியுடையவன், எப்பொழுதும் ராஜவசியமுடையவன், ஆயுளுள்ளவரை யோகமுடையவன், விருத்தாப்பிய வயதில் புத்திரனுல் வெகு செயக்கியமுடையவன், ஏதோ கொஞ்சம் தர்ம சித்தியுண்டாகும். விருத்தாப்பிய வயதில் ஞானமுடையவன், ஜாதகனுடைய ராகு திசையில் ஜாதகனுடைய பிதா மரிப்பான்.

(95) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபன் கேந்திர பாவத்தில் சந்திரனுடன் கூடி செவ்வாயால் பார்க்கப்பட்டு காதாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் கொஞ்சம் சௌக்கியமுடையவளாவள். தாய் குணவதி, பொறுமையுள்ளவள், கணவனிடம் பக்தியுடையவள், அன்னதானம் செய்வதில் பிரியமுள்ளவள், நல்ல சாதுவானவள், புத்திரனுக்குப் பிரியமானதைச் செய்வாள், ஜாதகனுடைய இரண்டாம் திசையில் மரிப்பாள், சந்திரன் மங்களாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகனுடைய தாய் சுமங்கலியாகவே மரிப்பாள்.

(96) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி சனி கேந்திரத்தில் இருந்து சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டுச் சகோதர காரகன் சகோதர ராசியில் இருந்தால் ஜாதகனுக்கு சகோதர பலன் அற்பமாகயிருக்கும். ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரன் ஒருவன் தீர்க்காயுளுடையவன், அப்படியிருந்தாலும் மாற்ருந் தாய் பிள்ளையின் சகோதரனிருப்பன், ஒரு சகோதரி சுகமுடையவளாவள், அதிகம் பிறந்தாலும் மரித்துவிடும்.

(97) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி குரு பத்தாம் பாவத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் மூன்று பாஷைகளில் வல்லவன், நீச பாஷையில் அதிக கஷ்டமெடுத்துக் கொள்ளுபவன், அன்னிய பாஷைகளை நன்கு அறிபவன், எழுத்து எழுதுவதில் தேர்ச்சி பெற்றவன்.

(98) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் சூரியனிருந்தாலும், சூரியன் இரண்டாம் பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகன் வாசாலகனுகவும் சாதுரியமான யுக்திகளையுடையவனுகவும் இருப்பான், ஜாதகன் கொஞ்சம் பரஸ்திரீ கமனம் செய்பவன், போகி, சந்தனம், புஷ்ப வஸ்திரப் பிரியன், பாலிய

முதற்கொண்டே சௌக்கிய முடையவன், தாய் தகப்பனால் சுகமுடையவன், திவ்விய சம்பாதனையில் சமர்த்தன், தியாகி, கெம்பீர புத்தியுடையவன், ஐந்தாம் வயதில் அக்ஷர ஞானம் உண்டாகும். எட்டாம் வயதில் ஜாதகன் தாய் மரிப்பாள், தாய் இறந்த பின்பு மாற்றாந் தாய் யோகமுடையவன், தேக சௌக்கியமும், அதிகசுபமும் உடையவன். ஜாதகனுக்கு வித்யாப்பியாசமும், தகப்பனுக்குச் சுகமும், சகோதர வர்க்கத்தில் சுகமும், பன்னிரண்டு அல்லது பதினோராவது வயதில் வெகுவாக விவாகமு மடைபவன், தகப்பனாலும் அதிக சுகமுண்டாகும், ஜாதகனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அரசாங்க அதிகாரிகள் சிநேக முண்டாகும், ஜாதகன் பதினாறு வயதுக்குமேல் பிரசித்தியடைவன், இருபது வயதுக்குமேல் விசேஷமடைந்து இருபத்தைந்துக்கு மேல் நல்ல யோகமடைபவன், வாகனம், கீர்த்தி முதலிய லாபமுடையவன், மனைவி சௌக்கியமும், தனவரவும் உடையவன், யோக காலத்தில் இருபத்தேழாவது வயதில் ஜாதகனுடைய பிதா மரிப்பான், ஜாதகனுக்கு அதனால் கொஞ்சம் வியாகூலமடைந்து அதிக சிலவும் மனோ பீதியும் உண்டாகும். முப்பதாவது வயதுக்கு மேல் ஜாதகன் விசேஷ சௌக்கியமடைவன், ராஜாங்கத்தில் வேறு அரசனால் சுகமுண்டாகும், மிலேச்சப் (அரசாங்கத்தில்) பிரபுவிடத்தில் எழுத்தாளர்களுக்குத் தலைவனவன், பலதேசங்களிலும் புகழுடையவன், பல்லக்கு முதலிய வாகனமுடையவன், ஜாதகனுடைய சகோதரன் பிரபல யோகமுடையவன், பற்பல வழிகளிலும் தனமடைபவன், விசேஷ பிரபு பக்தியுடையவன், பிரபுவால் சன்மானிக்கப்படுபவன், (புத்திர லாபமும் உண்டாகும்) வைபவங்களுண்டாகும், ஜாதகன் நாற்பதாவது வயதில் நல்ல யோகமுடையவன், ஐம்பதாவது வயதில் வெகுயோகமுண்டாகும். ஜாதகன் ஆயுளுள்ளவரை யோகமுடையவனாகவேயிருப்பான்.

(99) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி இரண்டாம் திசை செவ்வாய் திசையாகி ஏழாம் பாவாதிபன் ஜென்ம காலத்தில் இருக்க அம்சத்தைக் கோசாரத்தில் சனி எப்பொழுது அடைகிறானோ அப்போது ஜாதகனுக்கு விவாகமுண்டாகும். மனைவி வெளுப்பு நிறமாயிருப்பவள், தன் கணவனிடத்தில் ஜாதகனுடைய மனைவி அன்புடையவளாவாள்.

(100) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி செவ்வாய் மூன்றாம் பாவத்தில் இருந்து, ஐந்தாம் பாவத்தில் கேது இருக்க புத்திரகாரகன் குரு சந்திரனுடன் கூடியிருந்தால்

ஜாதகனுக்கு முதலில் பெண் சந்ததியும், பிறகு ஆண் சந்ததியும் உண்டாகும், ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன், குரு கோச்சாசாரத்தில் விருஷபராசித் திரிகோணத்திலாவது ஜென்மகாலத்தில் குரு பார்வையிருக்கிற ராசிகளின் திரிகோணத்திலாவது குரு வரும் சமயம் ஜாதகனுக்குப் புத்திர புத்திரிகள் உண்டாவார்கள். இரண்டு ஆண் சந்ததியும், இரண்டு ஸ்திரீ பிரஜைகளும் தீர்க்காயுளுடையவர்களாக இருப்பார்கள், அதிகம் பிறந்தாலும் நஷ்டமடைந்து விடும்.

(101) ஜென்ம லக்கினம் தனுசு (சுமத்யாம்சம்) ஆகி பதினோராம் பாவாதிபதி, ஒன்பதாம் பாவாதிபதி, இரண்டாம் பாவாதி இவர்களில் யாராவது ஒருவர் சந்திரக்கிரக கேந்திரத்திலிருந்தால அல்லது குருவாவது சந்திர கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் தனம், புத்திரன் முதலிய லாபத்துடன் பிரம்மாண்டமான சாம்ராஜ்ய அதிபதியாவான்.

(102) ஜென்ம லக்கினம் தனுசு (சுப்ரபாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 240-36 கலை முதல் பாகை 240-48 கலை வரையில்) ஆகி முற்பாதியில் பிறந்தவன் ரூப முடையவன், புத்திமான் வாசாலகன், அழகான முகமுங் கண்களுடனுங் கூடினவன். அதிருஷ்டசாலி, தர்மாத்மா, கொஞ்சம் கருப்பு நிறமுடையவன், நல்ல ஆகிருதி உடையவன், சூட்டு தேகமுடையவன், மேதாவி, விஷ்ணு பக்த குலத்தில் பிறந்தவன், சங்கீதம் தெரிந்தவன், வஸ்திர அலங்காரப்பிரியன், பால் குடிப்பதில் பிரீதியுடையவன்.

(103) ஜென்ம லக்கினம் தனுசு (சுப்ரபாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்திற்குடைய சனி எட்டாமிடத்தைப் பார்ப்பதால் ஜாதகன் வாசாலகனுகவும், சாதுரியமுள்ளவனுகவும் இருப்பான், யுக்தா யுக்தம் தெரிந்தவன், பல கிராமங்களில் பிரசித்தியுடையவன், சம்ஸ்கிருதத்தைப் பிரியமாய்ப் பேசுவான், வேதசாஸ்திர மறிந்தவன், உஷ்ணமதிகமான கண்களையுடையவன், பல்வலியுடையவன்.

(104) ஜென்ம லக்கினம் தனுசு (சுப்ரபாம்சம்) ஆகி மூன்றும் பாவத்துக்குடைய சனி பதினோராமிடத்தில் இருந்தால் மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரனும் இல்லாதவன், இவனுக்கு இளைய சகோதரி ஒருத்தி வெகுகாலம் வரையிலும் சுமங்கலியாயிருப்பாள், அவள் புத்திர புத்திரியுடன் கூடினவள், நற்குணவதி கொஞ்சமாகப் பல்லில் ரத்தம் வடிதலும், காதில் நோயுடனும் இருப்பாள், ஜாதகன்

பராக்கிரமமுடையவன், ஸ்வதந்திரமுடையவன், அயலார்களுக்கு இதத்தை செய்வான்.

(105) ஜென்ம லக்கினம் தனுசு (சுப்ரபாம்சம்) ஆகி நான்காம் பாவத்துக்குடைய குரு தனக்கு ஏழில் இருக்கப்பட்ட சூரியனால் பார்க்கப்பட்டாலும், செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தாய் அற்ப வயதுடையவள், முப்பது வயதுடையவளேயாயினும் முன் ஜென்மாந்திர பாப விசேஷத்தினால் ஜாதகனுடைய பன்னிரண்டாம் வயதில் தாய்க்கு இருபத்தெட்டாம் வயதிலேயே சுவாஸ காசாதி நோயால் மரித்துவிடுவாள், ஜாதகனுடைய தாய் உடன் பிறந்த சகோதரருடையவள், ஜாதகன் மாற்றுந்தாயுடையவள், அவள் பாலியத்திலேயே விதவையாய் விடுவாள், ஜாதகன் பதினேழுவது வயதில் நிச்சயமாய் அடைவான், ஜாதகனுடைய மனைவி சகோதர சகோதரியுடையவள், ஜாதகனுடைய மனைவி கணவனிடம் அன்புடையவள். ரத்தம் போன்ற சிவந்த கருநிறமுடையவள், பித்த சூடு அதிகமான தேகமுடையவள், புத்திர, புத்திரிகளைப் பெறுபவள், கொஞ்சம் வாயுபீடையுடையவள், இதய நோயுடையவள், சிற்சில சமயங்களில் வயற்றிலும் குல்ம நோயுடையவள், பல்லில் ரத்தம் ஒழுகுபவள், கொஞ்சம் நேத்திரபீடையுமுடையவள், இடது காதில் கொஞ்சம் நோயுடையவள், பிரம்மத்தியான முடையவள், ஜாதகன் ஒரே மனைவியுடையவன், அவளால் வெகு காலம் சுகமுடையவன், வேறு சிலர் மறு மனைவிமூலம் ஜாதகன் பலனடைவான் என்று சொல்லுகிறார்கள்.

(106) ஜென்ம லக்கினம் தனுசு (சாங்கரியாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 255-48 கலை முதல் பாகை 256-00 கலை வரையில்) ஆகி ஒராம் பாவத்துக்குடைய குரு பத்தாமிடத்திலிருக்க ஒன்பதுக்குடையவன் லக்கின கேந்திரத்திலிருக்க ஸிம்மாசநாம்ச யோகத்தில் பிறந்தவன் சிம்மாசனமடைவான். ஸிம்மாசனும்சத்தில் பிறந்த ஷெ ஜாதகன் வெகு பாக்கியத்துடன் ஜெனங்களால் நியமிக்கப்பட்டுப் பிரபு லக்ஷணமமைந்து இருப்பான்.

(107) ஜென்ம லக்கினம் தனுசு (சாங்கரியாம்சம்) ஆகி லக்கினாதிபதியான குரு சனியால் பார்க்கப்பட்டாலும், சனி லக்கினத்தில் இருந்தாலும் ஜாதகன் யோகக் குறைவையும், தான்ய தனக்குறைவையும், வரவுக்கு மிஞ்சின செலவுடையவனாயும் இருப்பதுடன் பல்

வலியால் பீடிக்கப்பட்டும், பல்லில் ரத்தம் ஒழுக்குடையவனுகவும், பாலில் பிரியமுள்ளவனுகவும், மிருதுவாய்ப் பேசுபவனுகவும், இத மான சொல்லுடையவனுகவும் இருப்பான்.

(108) ஜென்ம லக்கினம் தனுசு (சாங்கரியாம்சம்) ஆகி மூன் ரும் பாவத்துக்குடைய சனி கேந்திரத்தில் இருந்து குரு பார்வை யுடன் கூடியிருந்தால் இரண்டாம் பாவத்தில் செவ்வாய் இருந்தாலும், இரண்டாம் பாவத்தைப் பார்த்தாலும், சத்தியவாதியாவான். கீழ்ப் பார்வையுள்ளவன், மூத்த சகோதரனுடன் கூடி மானியாகிப்பிற்காலத் தில் சகோதரனை விட்டு விடுவான். இரண்டு சகோதரிகளை யுடைய வன். ஒரு காலத்தில் சகோதரிக்கு நாசம் உண்டாகும், ஜாதகனு டைய மூத்த சகோதரன் ராஜயோகவான், இரண்டு தாரம் உள்ள வன், கொஞ்சம் வயிற்று நோயுடையவன், பிரபல உத்தியோக பாக் கியமுள்ளவன்.

(109) ஜென்ம லக்கினம் தனுசு (சாங்கரியாம்சம்) ஆகி பத் தாம் பாவத்தில் நான்காம் பாவத்துக்குடைய குரு பலத்துடன் கூடி யிருந்தால் ஜாதகனுடைய தாய் நீண்ட ஆயுளுடையவள், கணவனி டத்தில் பக்தியுள்ளவள், அவள் வாயு உபத்திரவமுள்ளவள்.

(110) ஜென்ம லக்கினம் தனுசு (சாங்கரியாம்சம்) ஆகி நான் காமிடத்தில் சனி கூடியிருந்தால் ஜாதகன் கொஞ்சம் சுவல்பமான சுகமுடையவன், மூன்று வாகனங்களுடையவன், பல்லக்குடைய வன், பூமி, கிரக, வாகன லாபமுடையவன், ஐயாயிரம் தனமுடைய வன், கொஞ்சகாலத்தில் இருதய நோயுடையவன், நற்கருமமுடைய வன், ஆசாரஹீனன்.

(111) ஜென்ம லக்கினம் தனுசு (சாங்கரியாம்சம்) ஆகி நான் காம் பாவத்துக்குடைய குரு தன்னுடைய உச்சத்தில் இருந்து மாதுருகாரகன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கொஞ்சகாலம் மந்தபுத்தியுள்ளவன், காலாந்தரத்தில் புத்திரனுடையவன், இரண்டு புத்திரர்களும், இரண்டு புத்திரிகளும் நீண்டகாலம் ஆயுளுள்ளவர்கள், இவர்கள் அதிகமாக இருந்தாலும் இவர்களுக்குச் சாந்தி செய்தால் புத்திரர்களுக்குச் சுகமுண்டாகும்.

(112) ஜென்ம லக்கினம் தனுசு (சாங்கரியாம்சம்) ஆகி ஏழாம் பாவத்துக்குடைய புதன் லக்கின கேந்திரத்தில் இருந்து, லக்கினத் தைச் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு பத்தொன்பதா

வது வயதிலாவது, இருபதாவது வயதிலாவது விவாகம் நடக்கும், ஒரே தாரத்துடன் கூடினவன்.

(113) ஜென்ம லக்கினம் தனுசு (சாங்கரியாம்சம்) ஆகிப் லக்கினத்தில் பிற்பாதியில் ஜெனித்தவனுக்கு லக்கினத்தில் சுக்கிரன் இருக்க அதி பாலியத்தில் விவாகம் நடக்கும், இரண்டாம்தாரம் இல்லை.

(114) ஜென்ம லக்கினம் தனுசு (சாங்கரியாம்சம்) ஆகி ஒன்பதாம்பாவத்துக்குடைய சூரியன் சுக்கிரனுடன் கூடி கேந்திரத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திம வயதுடையவன், தேவப் பிராமண பக்தியுடையவன், வைதீக ஆசாரமுடையவன், மானீ, தன தான்ய சமிருத்தியுடையவன், வாசாலகன், உத்தியோக ஜீவனன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுக்கு பாலியவயதிலேயே மரிப்பான்.

(115) ஜென்ம லக்கினம் தனுசு (துர்த்தராம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 262-00 கலை முதல் பாகை 262-12 வரையில்) ஆகி முன் பாதியில் ஜெனித்தவனுக்கு இரண்டாம் பாவத்துக்குடைய சனி தன் உச்சத்தில் இருக்க இரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் பிரியமான வார்த்தையுடையவன், இனிமையாய்ப் பேசுவான், பல பாஷைகளறிந்தவன், பிதுரார்ஜித சொத்துகளில்லாதவன், தான் சுயார்ஜிதமாய்ச் சம்பாதிப்பான், ஜென்ம தேசத்தைவிட்டு வெளி தேசத்தில் சஞ்சாரம் செய்வான்.

(116) ஜென்ம லக்கினம் தனுசு (துர்த்தராம்சம்) ஆகி லக்கின பாவமாகிய ஓராம் பாவத்தைச் சனி , செவ்வாய், சூரியன் இவர்கள் பார்க்க ஜாதகன் சுரம், வைசூரி முதலிய கண்டமுடையவன், பார்ப்பன ஸ்திரீயை அல்லது பரஸ்திரியைப் புணருவான்.

(117) ஜென்ம லக்கினம் தனுசு (துர்த்தராம்சம்) ஆகி ஜென்ம லக்கினாதிபதியான குரு புதனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் வேசி ஸ்திரீ லோலனுயிருப்பான். பதினாயிரத்துக்கு மேற்பட்ட தனமுடையவன், பிரபு லக்ஷணமுடையவன், கொஞ்சம் பித்த சூட்டு தேகி, தன தான்ய சமிருத்தியுடையவன், தாய்ப்பாட்டன் வீட்டில் பிறந்தவன், தாய் வழியிலேயே ஜாதகனுக்கு விவாகம் நடக்கும்.

(118) ஜென்ம லக்கினம் தனுசு (துர்த்தராம்சம்) ஆகி ஆறும் பாவத்துக்குடைய சுக்கிரன், சந்திரனுடன் கூடியிருந்தால் இரண்டு தாரமுடையவன், இரு மனைவியருடனும் கூடி வாழ்வான். மூத்த

மனைவி புத்திர பாக்கியமுள்ளவள், குணவதி, பிரம்ம ஞானமுள்ள வன்.

(119) ஜென்ம லக்கினம் தனுசு (துர்த்தராம்சம்) ஆகி மூன்று மிடத்தைச் சந்திரன் பார்த்தால் ஜாதகன் சகோதரர் இல்லாதவன், ஒருவனே, ஜாதகன் இளைய சகோதரி ஒருத்தியிருப்பாள், அவள் புத்திரனில்லாமையால் விபசாரம் செய்வாள், ஜாதகன் மாற்றுந் தாயின் பிள்ளையுடன் கூடியிருப்பான்.

(120) ஜென்ம லக்கினம் தனுசு (துர்த்தராம்சம்) ஆகி நான்காம் பாவத்துக்குடைய குரு நீச்சத்தில் இருந்தால் பாலியத்தில் ஜாதகனு டைய தாய் விநாசமடைவாள். ஜாதகன் ஜெனித்த மூன்றும் வரு ஷத்தில் தாய் மரிப்பாள், ஜாதகன் குதிரை வாகனமுடையவன், மூன்று வாகனமுடையவன், தேச கிராம ஆதிபத்தியத்தால் கொஞ் சம் தனமுடையவன், இடது காதில் சொற்ப நோயுடையவன், இரு தயத்திலும் கொஞ்சம் கொஞ்சம் பீடையுடையவன்.

(121) ஜென்ம லக்கினம் தனுசு (துர்த்தராம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்துக்குடைய செவ்வாய், பத்தாமிடத்தில் கேந்திரம் பெற்று கன்னியிலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் வெகு காலம் புத்திர னில்லாதவனுயிருப்பான். சம்சயமில்லை.

(122) ஜென்ம லக்கினம் தனுசு (துர்த்தராம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்திற் கெட்டில் புதனிருக்க, புதனுக்கிரண்டில் களத்திரகார கனுடன் சந்திரன் கூடியிருந்தால் மனைவிக்குப் பிறகு பலன் ஏற்படும், ஜாதகன் இரண்டு தாரம் உடையவன் என்று வேறு சிலரும் சொல்கி ருர்கள், முன் தாரம் ஒரே புத்திரியுடனுவது அல்லது மலடியாகவே வாவது (மரிப்பாள்), மூத்தவளை புத்திரனில்லாததால் ஒரு பக்ஷம் தள் ளியும் இரண்டாவது மனைவியால் புத்திர சம்பத்து முதலானதுகள் சகலமுமடைவான்.

(123) ஜென்ம லக்கினம் தனுசு (அம்புஜாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 249-48 கலை முதல் பாகை 250-00 கலை வரையில்) ஆகிப் பிறந்தவன் குள்ளமானவன், பருமனை தேகமுடை யவன், சிவ பூஜை செய்பவன், சிலேஷ்ம ரோகமுடையவன், விஷ்ணு பக்தியும் உள்ளவன்.

(124) ஜென்ம லக்கினம் தனுசு (அம்புஜாம்சம்) ஆகி இரண் டாம் பாவத்தில் செவ்வாய் சுக்கிரனுடன் கூடி இருக்கப் பிறந்தவன்

பணமுடையவனாகவும், காமியாகவும், அம்மை முதலிய சுர கண்டமுடையவன், ஸ்ரீமாது வித்தை கொஞ்சம் விசேஷமாகத் தெரிந்தவன், இரண்டாயிரம் தனமுடையவன், சம்பாதிப்பான். சூடாகப் புசிப்பான், சுத்தமுடையவன், ஞானி, தர்மம், புராணம் முதலியன தெரிந்தவன்.

(125) ஜென்ம லக்கினம் தனுசு (அம்புஜாம்சம்) ஆகி கேது மூன்றாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் இளைய சகோதரமில்லாதவன், மூத்தவள் ஒருவளையுடையவன், ஜாதகன் பணக்காரன், சிவப்பு நிறம் உள்ளவன், மூன்று தாரமுடையவன், ஜாதகனுடைய மூத்த குமாரன் இறந்து போவான், ஜாதகன் இரண்டு புத்திரியுடன் கூடியிருப்பான், மூத்த மனைவி கணவனுடன் நித்தியம் சண்டையிடுவாள், அவளுக்குப் பிள்ளையிருக்காது, பிறந்து மரிக்கும். அந்த மனைவி மூத்தவள் நீண்டகாலம் இருப்பாள். அவனுடைய இரண்டாவது மனைவி கருப்பு நிறமுள்ளவள், துர்மரணமாய் மரிப்பாள், மூன்றாம் மனைவி நற்குணம் நிறம்பினவள், புத்திரன், புத்திரிகளுடன் கூடினவள், ஜாதகனுடைய மூத்த அண்ணன் ராஜ உத்தியோகி, பயிர்த்தொழிலும் உண்டு. மாணதாக வரட்சியாலும், ரண தோஷத்தாலும் மூத்தவன் மரிப்பான்.

(126) ஜென்ம லக்கினம் தனுசு (அம்புஜாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதியாகிய குரு இரண்டாமிடத்தில் இருந்தால் ஜாதகன் தன் தாயையும், தகப்பனையும் தெய்வமாக பாவிப்பவன், தாய் பாலியத்தில் மரிப்பாள், அச்சமயம் ஜாதகன் தேசாந்திரத்தில் இருப்பான். அற்ப அம்மான் யோகமுடையவன், ஜாதகன் இரண்டு மூத்த சகோதரிகளையுடையவன்.

(127) ஜென்ம லக்கினம் தனுசு (அம்புஜாம்சம் ஆகி ஐந்துக்குடைய புத்திர பாவாதிபதி செவ்வாய், சனி க்ஷேத்திரமான மகரத்தில் இருந்தால் ஸ்திரீ பிரஜைகள் ஐந்து அல்லது மூன்று இருக்கும். புருஷப் பிரஜைகள் முன் ஜென்மாந்தர பாபத்தால் மரிக்கும், ஜாதகனுக்கு ஐந்து புத்திரியுடன் ஒரு புத்திரன் அல்லது இரண்டு புத்திரன் இருப்பார், இவற்றிற்குச் சாந்தி செய்யவேண்டும்.

(128) ஜென்ம லக்கினம் தனுசு (அம்புஜாம்சம்) ஆகி ஏழாம் பாவத்துக்குடைய புதன் சூரியனுடன் கூடியும், களத்திர காரகன் குசனுடன் கூடியிருந்தால் ஜாதகன் கருப்பு நிறமுள்ள ஒரே மனைவி

யுடன் கூடி இருப்பான். தன் பாரியாளுக்கு ஐந்து சகோதரம் உண்டு, அவர்களில் இருவர் ஸ்திரீகள், புருஷர்கள் மூன்றுபேர் ஆக ஐந்து சகோதரர்களில் கொஞ்சகால விசேஷத்தால் ஒரு புருஷ சகோதரன் மரணமடைவான். ஜாதகன் தன் பட்டணத்துக்குத் தெற்கில் குக்கிராமத்தில் மனைவியடைவான். ஜாதகனுக்கு இருபத்திரண்டு அல்லது இருபதாவது வயதில் விவாகம் நடக்கும்.

(129) ஜென்ம லக்கினம் தனுசு (அம்புஜாம்சம்) ஆகிச் ஒன்பதுக்குடைய சூரியன் புதனுடன் கூடி லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் குள்ள தேகமுடையவன், நல்ல அறிவாளி, ஞானி, நூல்களியற்றுபவன், இளைய சகோதரனுடன் கூடியிருப்பான், கெட்ட பிரபுவினிடம் சேவை செய்வான், கணித நிபுணன், மகா சாது, பிதுரார்ஜித மில்லாதவன், சுயார்ஜிதமாக சம்பாதிப்பான், கங்கா ஸ்நானம் செய்பவன், கங்கா யாத்திரை செய்து மூன்று தடவை சேது ஸ்தானம் செய்பவன், புண்ய சரீரி, புதையல் தனம் எடுப்பான், பூமி மூலம் தனம் கிடைக்கும்.

(130) ஜென்ம லக்கினம் தனுசு (——————) ஆகி புதன் எட்டாம் பாவத்திலிருந்து அவனுடைய ஜென்ம திசையாக ஆரம்பித்தால் பாலிய வயதில் ஜாதகனுக்கு பாலாரிஷ்டம் உண்டாகும். தாய், தகப்பன் இவர்களுக்குச் சுகமும், சகோதர உற்பத்தியும் உண்டாகும்.

(131) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி சந்திர லக்கினத்திலிருந்து ஐந்தாம் பாவாதிபதி ஜென்ம லக்கினத்தில் ஜெனன காலத்தில் இருந்து நவாம்சத்தில் விருஷப நவாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவம் சீக்கிரமாக ஆகும்.

(132) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி லக்கினத்திலிருந்து நான்காம் பாவாதிபதி மூன்றும் பாவத்திலும், நான்காம் பாவத்தில் சனியுமிருந்தால் ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்டம் உண்டாகும்.

(133) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி குருவும், சந்திரனும் பத்தாம் பாவத்தில் கூடியிருந்தாலும், ஒரே அம்சத்தில் இருந்தாலும், தாயானவள் ஏழே நாளில் மரண மடைவாள்.

(134) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்திலிருந்து நான்காம் பாவத்தில் சனி இருந்து கன்னியாம்

சத்தில் இருக்கப்பட்ட செவ்வாயால் சனி பார்க்கப்பட்டால் ஜாதகன் சகோதர சகோதரி இல்லாதவனாகிறான்.

(135) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி வாருணம்சத்தில் லக்கினத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மேற்குச் சமுத்திர தேசத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் காலத்தில் இந்த ஜாதகன் ஜெனித்தவன், இவனுடைய தகப்பன் சுகமுள்ளவனாகவும், தீர்க்காயுளுள்ளவனாகவும், தாய் சுகமில்லாதவளாகவும், தாய் வழிப்பாட்டியின் பாபத்தால் தாய் வழி வம்சம் க்ஷய மடையும்.

(136) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதியிருக்கிற பாவத்தில் செவ்வாயிருந்தாலும், சுபர்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தகப்பன் அத்தியந்த யோகமுள்ளவனாகவும், தர்மிஷ்டனாகவும், தாசியுடன் கூடினவனாகவும், பந்துக்களைச் சம்ரக்ஷிப்பவனாகவும், போகப்பிரியனாகவும், போகமுடையவனாகியும், அநேக பாரிவையகளையுடையவனாகவும், ராஜ யோகமுள்ளவனாகவும், சேனாதிபதியாகவும், அநேக சிநேகிதர்களையுடையவனாகவும், ராஜ சபையில் யுக்தியாயும், வாசாலகனாகவும், சாதுரியமாய்ப் பேசுபவனாகவும், சங்கீத நாடக சாமர்த்திய முள்ளவனாகவும், தெய்வானுக்கிரக முடையவனாகவும், அநேக சேனைகளுக்கு அதிபதியாகவும், தேசாந்தரத்திலும் கீர்த்தி உடையவனாகவும் ஆகிறான்.

(137) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி மூன்றாம் பாவத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் வித்தை, புத்தி இவையுள்ளவனாகவும், கொஞ்சம் காலம் சுதந்திரத்தினிராமலும், பிறகு சுதந்தரமான யோகமுடையவனாகவும் இருப்பான்.

(138) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதியும், ஒன்பதாம் பாவாதிபதியும், ஏழாம் பாவாதிபதியுடன் கூடி லக்கினத்தில் சுபாம்சத்தில் கூடியிருந்தாலும், ஏழாம் பாவத்திலாவது, மூன்றாம் பாவத்திலாவது, பன்னிரண்டாம் பாவத்திலாவது, இரண்டாம் பாவத்திலாவது, ஐந்தாம் பாவத்திலாவது, லாப பாவத்திலாவது, சுக்கிரனுடனும் கூடியிருந்தாலும் பிரக்கியாதியுடையவனும், எல்லா பூமிக்கும் அரசனாகவும், கொண்டாடப்பட்ட சேனாதி

பதியாகவும் ஆகி மிகப் பெரிதான கீர்த்தியுடையவனுகவும், யானை, தேர், குதிரைகள் அநேக ஆயிரம் உடையவனுகவும் இருப்பான்.

(139) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் பத்தாம் பாவாதிபதியுடன் கூடி களத்திரகாரகன் சுபவர்க்கத்திலிருந்தாலும், இரண்டு, மூன்று விவாகம் செய்து கொள்வான். தாசிகளின் சேர்க்கையுடையவன், தியாகம் செய்பவனுகியும், பிரதாபமுள்ளவனுகவும், இளம் வயதில் லோபகுணமும், யௌவன காலத்தில் கொடையாளியாகவும், நித்தியம் அன்னதானம் செய்பவனுகவும், எப்போதும் வெகுபேரைக் காப்பாற்றுபவனுகவும், சிநேகிதர்களையும் தன்னுடைய ஆப்த பந்துக்களையும், கொஞ்சம் பீடிப்பவனுயும், கொஞ்சம் பொறுமையுடையவனுயும், தேவாலயம், குளம், சத்திரம் முதலியவை கட்டி வைத்தும், பிராமணர்களை நிலைக்கச் செய்பவனுயும், புண்ணியத்தைச் சம்பாதிப்பவனுயும் ஆவான்.

(140) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி பாக்ய பாவாதிபதி லக்கின கேந்திரத்திலிருந்து லக்கினுதிபதியுடன் கூடியிருந்தாலும், லக்கினுதிபதியால் பாக்கியாதிபதி பார்க்கப்பட்டாலும், ஜாதகன் நித்தியம் நல்ல கர்மானுஷ்டானங்கள் செய்பவனுய் இருப்பான்.

(141) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி ஆரும் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் சத்துருக்களை அழிப்பவன், ரூபவான், பிரசன்னமான முகமுங் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, தர்மம் செய்வான், தேச தேசங்களிலும் கீர்த்தி உடையவன், அன்னிய பாஷை தெரிந்தவனுயும், மூன்று பாஷை எழுதத் தெரிந்தவனுகவும் ஆகிருன்.

(142) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதி ஒன்பதாம் பாவத்திற் குடையவனுடனும், பத்தாம் பாவாதிபதியுடனும் கூடி ராஜ பூஜ்பாம்சத்தில் இருந்தாலும், சுக்கிரனுடன்கூடி பாராவதாம்சத்தில் யிருந்தாலும், சந்திர கேந்திரத்தில்சுக்கிரனும் இருந்தாலும், ஜாதகன் லோகப்பிரசித்தியுள்ளவனுகவும், புத்திர, பௌத்ராதி விருத்தியுள்ளவனுகவும், புத்திரியுள்ளவனுகவும், ராஜயோகமுள்ளவனுகவும், இந்த யோகத்தில் பிறந்தவன் கோடி திரவியாதிகாரப் பிரபுவாயும் இருப்பான்.

(143) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சராம்சம்) ஆகி ஆரும் பாவாதிபதி விருச்சிக ராசியிலிருக்க மூத்திர கிருச்னம் முதலான ரோகமுடையவன், மர்மஸ்தான ரோகம் உள்ளவன், இதற்குப் பரி

காரமாகச் சூரிய யந்திரத்தைச் சக்கரம் செய்து தானம் செய்வதால் சுணமடையும், சுகமுண்டாகும்.

(144) ஜென்ம லக்கினம் தனுசு (குஞ்சாராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் அரசனுகவாவது, அரசனுக்குச் சமமாகவாவது ஜாதகன் ஆகிறான்.

(145) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 241-12 கலை முதல் பாகை 241-24 கலை வரையில்) ஆகி லக்கினுதிபன் கன்னியில் சந்திரனுடன் கூடி தாவஷஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகன் உஷ்ண தேகமுடையவன், காமீ, மெலிந்த தேகம், அழகிய முகமுடையவன், சாமார்த்தியன், வாசாலகன், ராஜ யோகமுடையவன், அதிருஷ்டசாலி, தருமாத்மா, சீமான், தீன ஜெனங்களுக்குப் பிரியன், சங்கீத நாடக மறிந்தவன், வாசனை, புஷ்பம், வஸ்திரம் இதுகளில் பிரியன், வேதாந்த ஞானமுடையவன், இங்கிதமறிந்தவன், உண்மை பேசுபவன், மிகுந்த அறிவாளி, எழுத்து எழுதுவதில் சமர்த்தன், தேவாலயம், தடாகம் முதலிய தர்ம காரியங்கள் செய்வான். பிராம்மணர்களை நிலை நிறுத்தி அன்னதானம் செய்வான், ஜெனங்களால் விரும்பத்தக்கவன், நீச்சப் பிரபுவால் சுகமடைவான், உத்தியோக ஜீவனம், வேறு பாஷைகள் அறிந்தவன், ராஜசேவையே முக்கியமாய்க் கருதுவான், அரசாங்க முத்திரை தரிக்கும் அதிகாரி, அனேக தேசங்களுக்கு அதிபதித் தன்மை வாய்ந்தவன்.

(146) ஜென்மலக்கினம் தனுசு (தனதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 249-24 கலை முதல் பாகை 249-36 கலை வரையில்) ஆகி ஏழாம் பாவாதிபன் குரூர நவாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாரம் நாசமடையும், உடனே மறு மணமுடிப்பான், விவாகத்துக்குப் பிறகு பாக்கிய முண்டு, மூத்தவளுக்குச் சந்ததியில்லை, உண்டாயினும் உடனே மரிக்கும், இளையவளுக்கு அதிக புத்திரர் உண்டாகி, மூன்று பெண்கள், மூன்று புத்திரர் தீர்க்காயுளுடையவராயிருப்பர், மற்றவர் நாசமுறுவர், சாந்தியால் புத்திரர் சுகமுண்டு, தாரம் பதிவிரதையானவள், புண்ணியசாலி, செல்வ சந்ததியில் பிறந்தவள், இரண்டாம் விவாகத்துக்குப் பிறகு அதிக பாக்கியம், புகழ், அனேக வியாபாரத்தால் பொருள், வர்த்தகஜீவனம், பொன், முத்து, பவழம் முதலிய பல வியாபாரம், பல ஜெனங்கள் நிறைந்த மகா நதிக்கரையில்

அனேக தேவாலயங்கள் நிறைந்ததுமான புண்ணிய க்ஷேத்திரத்தில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாயிலுள்ள வீட்டில் வசிப்பான். தார்மீகன், சூக்ஷ்ம புத்தியுடையவன், இங்கித மறிந்தவன், நிலையான விரதமுடையவன், மந்திர சாஸ்திரத்தில் ஆசையுடையவன், மாணி, மிக்க காமுகன் (ஸ்திரீலோலன்).

(147) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி லக்கினுதிபனுன குரு குரூர ஷஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகன் கொஞ்சம் கோபமுடையவன், அயல் பெண்டுகளின் சேர்க்கையுடையவன், தாமரை போன்ற கண்களுடையவன், சுதந்தரமுடையவன், எல்லோருக்கும் உதவி செய்வான், விஷ்ணு சங்கர பக்தியுடையவன், தேவப்பிராமணரை போஷிப்பான், அளவாய்ப் புசிப்பான், சுகபோக மனுபவிப்பான், அளவான தூக்கமுடையவன், வெகுஜாக்கிரதை யுடையவன், பத்தாயிரத்துக்கு அதிகமான தனமுடையவன்.

(148) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி லக்கினுதிபனுன குரு, ராகுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் நீச்சப் பிரபுவால் தனமுடையவனுவான்.

(149) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபன் கேதுவுடன் கூடி இருந்தாலும், ஜன்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபன் ஏழில் காள கூடாம்சத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு வைசூரி, சுர கண்டமுடையவன், நீச்ச பாஷை அறிந்தவன், மூன்று எழுத்துக்களில் சமர்த்தன், வேதசாஸ்திர மறிந்தவன்.

(150) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபன் சனி ஆகி காலாம்சத்தில் கேதுவுடனிருந்து, மூன்றும் பாவத்தில் சகோதரகாரகனுன குஜன் இருந்தால் ஜாதகனுக்கு இளைய சகோதரமில்லை, மூத்த சகோதரமுண்டு, கொஞ்சகாலம் மானியாக இருப்பான், ஒரு சகோதரி, நான்கு புத்திரர்களுடன் கொஞ்சகாலம் ஜீவித்திருப்பான்.

(151) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் குரு ஆகி கன்னியில் சந்திரனுடன் கூடினுலும், ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி நாலில் புதன், சுக்கிரன் இவர்கள் இருந்தாலும் ஜாதகனுக்கு விசேஷ வித்தை சுகமுண்டு, தன் ஜாதி வித்தை யற்றவன், அற்ப ஞானமுடையவன்.

(152) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் குரு ஆகி பத்தாம் பாவத்தில் இருந்து, புதன், சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மூன்று வாகனமுடையவன், குதிரை பல்லக்கு இவைகளுடையவன், அரசாங்க சேவையே பிரதானமாக வுடையவன், அனேக தேசங்களுக் கதிகாரியாயிருப்பான்.

(153) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி பத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகனுடைய தாய் புண்ணியம் செய்தவள், நற்குணமுடையவள், சகோதரரை நாசம் செய்வாள், புத்திர சோகமுடையவள், தீர்க்காயுளுடையவள், தன் பந்துக்களிடம் பிரியமுடையவள், விரதம், தியானம் முதலியன செய்வாள்.

(154) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் கேந்திரத்திலிருந்து, ஏழாம் பாவம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஏகக் களத்திரமுடையவன், அயல் பெண்டுகளின் சேர்க்கையுடையவன், பின்னல் பச்சாதாபப்பட்டு வைதீகாசாரங் கைக்கொள்வான்.

(155) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் கேந்திரத்தில் குருவுடனிருந்தால் ஜாதகன் புண்ணியவான், தீர்க்காயுளுடையவன்.

(156) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி பிதுர் ஸ்தானாதிபனான சூரியன் மேஷத்தில் உச்சனாயிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அதிக யோகவான், மத்திமாயுளுடையவன்.

(157) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி பத்தாமதிபனான புதன் கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாஸி, தாஸ ஜெனங்களால் நிரம்பப் பெற்றவன்.

(158) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்தில் பத்தாம் பாவாதிபன் குருவுடன் இருந்து பத்தாம் பாவத்தில் சந்திரன் இருந்து, மூன்றாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் சம்சாரத்தில் வைராக்கிய முடையவனாய், தியானத்தால் பரப்பிரம்மத்தினிடத்தில் பற்றுடையவனாவான், புண்ணிய கர்மம் செய்வான், எப்போதும் சந்நியாசி போன்றிருப்பான், உண்மையே பேசுவான், உலக அபவாத மறியாதவன், சுசியானவன், வணக்கமுடையவன், அனேக வாகனங்களுடையவன், சிம்மாஸன மேறத்

தருத்தவன், மிகுந்த பொருளுடையவன், சத்துரு இல்லாதவன், இனிமையாய் பேசுபவன், குணங்களை அறிபவன், மகாத்மா, அயலார் சொற்களைக் கேளாதவன், தன் புத்தியைக் கொண்டு எல்லா காரியங்களும் செய்வான், சபையில்காரியசித்தி அடைவான், பராக்கிரமமுடையவன்.

(159) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபனும், நாலாமதிபனும், கேந்திரம் திரிகோணம் உபஜெயம் முதலிய ஸ்தானங்களில் இருந்தாலும், தன் அம்சங்களில் இருந்தாலும், புதனுடன் கூடியாவது அன்றி பார்க்கப்பட்டாவது இருந்தாலும் ஜாதகன் ரஸவாதம் செய்வான்.

(160) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி லக்கினாதிபனும், நாலாம் பாவாதிபனும் சேர்ந்து புதனுடன் கூடியாவது, அன்றி பார்க்கப்பட்டாவது, பாக்கிய ஸ்தானமாகிய ஒன்பதில் இருந்தால் ஜாதகனுக்கு வித்தைலாபமுண்டு, அதிக பாக்கியமுடையவன், புதையல் எடுக்கும் மை செய்வான்.

(161) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி சுக்கிரன் ஏழாம் பாவத்தில் சூரியனுடன் கூடி இருந்தால் ஜாதகன் தெளிந்த வாக்குடையவன், ஜெனங்களை மையினால் மயக்குவான்.

(162) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் ராகு இருந்து குரு, சனி இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மகா ராஜ குலத்தில் பட்டமகிஷியிடம் பிறந்தவனாவான். சிவ பக்த குலத்துதித்தவன், ஹரிசங்கர பக்தியுடையவன், அழகன், அறிவாளி, வாசாலகன், பரந்த முகங்கண்களுடையவன், அதிருஷ்டசாலி, தருமாத்துமா, சிவந்து கருத்த மேனியான், பித்த தேகமுடையவன்.

(163) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி லக்கினாதிபனான குரு புதனுடன் கூடினால் ஜாதகன் பருத்த தேகமுடையவனாவான்.

(164) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் சிவந்த கண்கள், சூட்டுக் கண்கள், தந்தவாயு பீடை, சில சமயம் காது சூலை இத்தகைய பீடைகளையுடையவனாவான்.

(165) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபன் தன் வீட்டிலேயே இருந்தால் ஜாதகன் அதிக சகோதர

முடையவன், ஐந்து சகோதரர்கள், இரண்டு அல்லது அதிகமான சகோதரிகளும் இருப்பர்.

(166) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி சகோதர காரகனான செவ்வாய், சத்துரு பாவமாகிய ஆறும் பாவத்தில் நீச்சாம் சத்தில் பல மற்றவனாக இருந்தால் ஜாதகன் வாலிபத்திலேயே இரண்டு, மூன்று சகோதரர் அல்லது சகோதரிகள் மரிப்பார்கள்.

(167) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் புதனுடன் கூடி லக்கின கேந்திரத்தில் இருந்தாலும்; ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி மாதா காரகனான சந்திரன் பத்தாம் பாவத்திலிருந்து சனி மூன்றில் பலவானயிருந்தாலும் ஜாதகனுடைய தாய் சிவப்பு நிறங்கலந்த கருநிறமுடையவள், தாய் தீர்க்காயுளுடையவளா யிருப்பாள், இவனுக்குத் தாய்மார் மூவருண்டு, இருவருக்கு வமிச விருத்தி உண்டு. மூன்றும் தாய் வாலிபத்திலேயே புத்திர பாக்கியமற்றவளாய், அற்பாயுளுள்ளவளாய் மரிப்பாள்.

(168) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் ஆறும்பாவத்தில் நீச்சாம்சத்தில் பல மற்றவனயிருந்தாலும், ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் ராகு இருந்து, குரு, சனி இவர்களால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுக்குப் புத்திரனில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். ஏகாதசியில் கோதானம், அரசமரப் பிரதிஷ்டை, பொன் சந்தான கோபால மூர்த்திதானம் முதலிய சாந்தி செய்ய சந்ததி உண்டாகும்.

(169) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி குரு புத்திர ஸ்தானத்தையாவது, ஸ்தானாதிபனையாவது பார்த்தால் ஜாதகன் சாந்தியாதிகளால் சந்தான மடைவான், இரண்டு, மூன்று தடவை கர்ப்பம் தரித்து நாசமடையும், பின்னல் புருஷ சந்ததி உண்டாகும், முதல் கெர்ப்பம் இரட்டை கெர்ப்பம் தரிக்கும்.

(170) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் கேந்திரத்திலிருந்து, ஏழாம்பாவம் சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அதிக மனைவிகளுடையவன், அல்லது மூன்று தார முடையவன், மூன்று மனைவியரோடல்லாது போக மாதரின் சேர்க்கையையுமுடையவன், சாந்தி தானத்தால் புத்திரப் பேறுண்டாகும்.

(171) ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதிசாம்சம்) ஆகி சூரியன் மாதுர் ஷஷ்டியாம்சத்திலும், சுக்கிராம்சத்தில் சுக்கிரனுடன் கூடினல்

ஜாதகனுடைய பிதா மத்திமாயுளுடையவன், சிவந்தநிறம், அழகிய தேகமுடையவன், சகல நற்குணம் நிறம்பியவன்.

(172) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 258-12 கலை முதல் பாகை 258-24 கலை வரையில்) ஆகி குரு, வாருணம்சத்தில் சந்திரனுடன் கூடி குஜனால் பார்க்கபபட்டால் ஜாதகன் சகோதர உற்பத்தி நாசமுடையவன், பிரஸவகாலத்தில் மழை மூன்று நாள் விடாமல் பெய்யும்.

(173) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி லக்கினாதிபனான குரு, வாருணம்சத்தில் சுயக்ஷேத்திரத்திலிருந்து குஜனால் காணப்பட்டால் ஜாதகனுக்கு வாலிபத்திலேயே வைசூரிகண்டமுண்டு, இறந்தவன் மாதிரி ஆகிப்பிழைப்பான், மாந்த சுரம் முதலிய பீடை நேரும், பல்நோயுண்டாகும். இவன் பிதாவுக்குப் பந்து மூலம் பாக்கிய விருத்தியுண்டாகும், ராஜாங்கத்தில் நல்லபுகழ், வெகுமானம் முதலியவை பெறுவான்.

(174) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி குரு வாருணம்சத்திலிருந்து அதற்கு ஆறும்பாவாதிபனுடன் கூடினால் ஜாதகனுடைய சிற்றப்பனுக்கு அரிஷ்டமுண்டு, பிதாவுக்கு ராஜ உபத்திரவமுண்டாகும்.

(175) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி குரு வாருணம்சத்தில் குஜனால் பார்க்கப்பட்டு, ஐந்து பாவ்களுடன் இருந்து எட்டாம் பாவாதிபனுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு ஐந்தாவது வயதில் பெரிய ஆபத்துண்டாகும், பிறகு இளைய சகோதரத்துக்கு வைசூரி சுரநோயால் அரிஷ்டமுண்டாகும், ஒன்பதாம் வயதில் சகோதரன் பிறந்து பாலாரிஷ்டத்தால் மாணமடைவான்.

(176) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி சனி லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்குப் பின் சகோதரம் நாசமடையும், ஒரு சகோதரி மாத்திரம் இருப்பாள்.

(177) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி வாருணம்சத்தில் குரு இருந்தால் ஜாதகன் பதினெட்டாவது வயதில் பிதாவுக்குப் பாக்கிய விருத்தியுண்டாகும், வேறு அரசனால் சுகமடைவான். இவன் பிதா வைஷ்ணவ ஜனதுவேஷமுடையவன், அரசாங்கத்தில் அவமானத்தால் கிலேசமனுபவிப்பான், சகோதர உற்பத்தி நாசமடையும்.

(178) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி லக்கினத்தில் குருவும் நாலாம் பாவத்தில் சுக்கிரன் குஜாம்சத்தில் கேதுவுடனிருந் தால் ஜாதகன் மூன்று எழுத்துக்களில் வல்லவன், சங்கீத வித்தை அறிந்தவன், நாடகம், அலங்காரம், காவியம் இவைகளிலும், சங்கீதத் திலும் பிரியன், ஸம்ஸ்கிருதம் பிரியமாய் பேசுவான், தேவப்பிராமண பக்தியுடையவன்.

(179) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி மீனம்சத் தில் சுக்கிரன் உச்சனுயிருந்தால் ஜாதகன் எழுத்து வித்தையில் நிபு ணன், சில சமயம் மந்த புத்தியுடையவன்.

(180) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி வாருணம் சத்தில் குரு இருந்து குஜனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் வித்தைக் குத் தடையுண்டாகும், அரசாங்கத்தில் புகழுடைவான், நரவாகன யோகமுடையவன், இவன் தகப்பன் அரசாங்கத்தில் அதிக யோக முடையவன்.

(181) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் சிம்மாம்சத்தில் இருந்து சுக்கிரன் கும்பாம்சத்தில் இருந் தால் ஜாதகனுக்கு ஜென்ம தேசத்திலேயே விவாகம் நடக்கும். அல் லது வடக்கில் நடக்கும், ஏழாம் பாவாதிபனிருக்கும் அம்ச லக்கி னமோ அன்றி அதன் திரிகோண லக்கினங்களோ அன்றி ஏழாம் பாவாதிபன் பார்க்கும் லக்கினமோ ஜாதகனுடைய தாரத்தின் ஜென்ம லக்கினமாகும்.

(182) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி கும்பத்தில் மகராம்சத்தில் சனி இருந்து சுக்கிரன் கும்பாம்சத்திலிருந்து வாரு ணம்சத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு விவாகத்தடை உண்டாகும்.

(183) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி மாமனர் பாவமாகிய மூன்றும் பாவத்தில் பாவர் இருந்தால் ஜாதகனுடைய கன்னிகாதான காலத்திலே மாமனுருக்கு ஆபத்துண்டாகும்.

(184) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி மாமனர் ஸ்தானமாகிய மூன்றும் பாவத்தில் பாபர் இருந்து மூன்றும் பாவாதி பன் சுபாம்சத்திலாவது அன்றி சுபனுகவாவது, சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாவது அன்றி பலத்துடனுவது இருந்தால் ஜாதகன் மாமனுருக்கு மேற்கண்ட தோஷமில்லை, மாமனர் க்ஷேமமடைவான்.

(185) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி செவ்வாய் ஏழாம் பாவாதியுடன் கூடி மங்களாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாரம் சிவந்த நிறம், விவாகத்திற்குப் பிறகு சுகமுண்டு, தினந்தோறும் லக்ஷ்மி கடாக்ஷம் பெருகும், பசு, தன விருத்தியுண்டு, இவன் விவாகத்திற்குப் பிறகு ஜாதகன் நித்திய சம்பத்துடையவனும் வீட்டில் மங்களகரமடைவான்.

(186) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி குஜன் ஆரும் பாவத்தில் மேஷாம்சத்தில் மங்களாம்ச நாடியிலிருந்தால் ஜாதகனுடைய மாமனர் இருதார யோகமுடையவன், ஒரு அம்மான்தான் உண்டு.

(187) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி தாய் பாட்டன் ஸ்தானதிபதியாகிய அதாவது நாலுக்கு ஒன்பதாம் ஸ்தானமாகிய பன்னிரண்டுக்குடைய குஜன் மங்களாம்ச நாடியிலிருந்தால் ஜாதகனுடைய தாய் பாட்டன் தீர்க்காயுளுடையவன், அதிக சகோதரர் நாசமுடையவன், முதுமையில் புத்திர சோகமடைவான். கொஞ்சம் குடும்பஜீவனமுடையவன்.

(188) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி குரு வாருணம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பனைப் பெற்ற பாட்டி தீர்க்காயுளுடையவள், தாயும் தீர்க்காளுடையவளாயிருப்பாள், யோகமுடையவளாயுமிருப்பாள்.

(189) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி தகப்பனைப் பெற்ற பாட்டன் ஸ்தானமாகிய அதாவது ஒன்பதிற்கு ஒன்பதாம் ஸ்தானமாகிய ஐந்தாம் ஸ்தானதிபனை குஜன் மேஷாம்சத்தில் மங்களாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய பிதுர் பாட்டன் பிரசித்தமானவன், சகோதர சகோதரிகளுடையவன், விவாகத்திற்குப் பிறகு பாக்கிய மடைவான், சுகமுள்ளவன், காடுகளுக்கு இடையிலுள்ள பட்டணத்தில் ஆயுள் வரையில் சுகமுடையவனும் வாசம் செய்வான்.

(190) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம் ஆகி ஐந்தாம் பாவாதிபன் மேஷாம்சத்தில் புதனுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய பிதுர் பாட்டன் விரை பெருத்தவனுவான்.

(191) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் எட்டாம் பாவாதிபனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய், தந்தையர் அதி தீர்க்காயுளுடையவராவார், இருபது

வயதுக்குமேல் நல்ல பாக்கியமும், இருபத்தைந்து வயதில் நல்ல வாகனமும், பதினெட்டில் அதிக செல்வமும், தன் தகப்பனுடன் அதிக பாக்கியமும் அனுபவிப்பான்.

(192) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம் உத்திர பாகம்) ஆகி குரு வாருணாம்சத்திலிருந்தால் ஜாதகன் எட்டாம் வயதில் கிலேசமும், ஒன்பதாம் வயதில் மனஸ்தாபமு மடைவான்.

(193) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம் பூர்வபாகம்) ஆகி குரு வாருணாம்சத்தில் இருந்தால் ஜாதகன் எட்டு வயதுக்குமேல் சுகமும், தன் பிதாவுக்கு அதிக பாக்கிய விருத்தியுமுண்டாகும், பத்தாம் வயதில் உத்தியோகமும், பின்னால் தரித்திரமுமடைவான்.

(194) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி லக்கினத்தில் குரு நாலாம் பாவத்தில் சுக்கிரன், பத்து, ஒன்பது இந்த பாவாதிபர்களுடன் கூடினால் ஜாதகனுடைய பிதா வாகனங்கள் நிறைந்தவன், அரசாங்கத்தில் நல்ல புகழுடையவன், சகோதாருடையவன், ஆசையுடையவன், மூத்த சகோதாரில்லை, மூன்று சகோதார் தீர்க்காயுளுடையவராயிருப்பர், ஒரே ஒரு சகோதரிதானுண்டு.

(195) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி சனி மூன்றும் பாவத்தில் மகாரம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மந்த பாக்கியமுடையவன்.

(196) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் சந்திரன் லக்கினாதிபனுடன் கூடிய வாருணாம்சத்தில் * சக்கர யோகத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு இரண்டாம் திசையில் செல்வப் பெருக்குண்டாகும், ராஜயோகம் செய்யும் அல்லது அதற்குச் சமமான சுகமடைவான். தனம் சேரும், நரவாகனம், பூஷணம் முதலியனசேரும். பிரபலமான உத்தியோக ஜீவனமுடையவன், ஸந்தான உற்பத்தியுடையவன், சகோதரி பொருள் சேரும்.

(197) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி குரு வாருணாம்சத்தில் இருக்கும் சக்கர யோக ஜாதகன் பதினோறும் பாவாதிபன் திசையில் தன் தகப்பனுடன் யாத்திரை செய்வான், ஸேது யாத்திரை செய்வான், நாலாம் திசையில் தனமடைவான், ஐந்தாம்

* [சக்கரயோகம் இன்னது என்பதை ஜாதககணிதம் அரண்டாம் பாகம் என்னும் ஜாதக பலாபலகள் நிர்ணயம் ஆறுவது இத்தியாயம் இருபத்துமூன்றாவது விதியைப் பார்க்கவும்].

திசையில் அவ்விதமே, மூன்று தரம் ஸேதுஸ்நானம் செய்து கங்கா ஸ்நான பலனை அடைவான்.

(198) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி லக்கினத்திற்குப் பத்தாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் கங்கா ஸ்நான ஸ்வரூபமுடையவன், அப்படி இல்லாவிட்டால் மூன்றுதரம் ஸேது ஸ்நானம் செய்து அந்த பலனைச் சந்தேகமில்லாமல் அடைவான்.

(199) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி பாக்கியாதிபனும் கர்மாதிபனும் ஒன்றாய்க்கூடி எந்தராசியில் இருந்தாலும் ஜாதகன் மகாதான பலனடைவான், அக்கிராரப் பிரதிஷ்டை செய்து புகழ் எடுப்பான்.

(200) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி பாக்கியாதிபனை சூரியன் குமாரார்சத்திலும், பஞ்சமாதிபனை குஜன் மங்களாம்சத்திலுமிருக்க, வாருணம்சத்தில் ஜெனித்த ஜாதகன் முன்னால் சூத்திர ஜென்ம முடையவன், பின் ஜென்மமும் அவ்விதமே அடைவான், பிராமண ஜென்மமுடையவன், புகழுடையவன், புத்திரன் சொல் கேட்பான், ராஜச குணமுடையவன், சுகவான், இவன் பிதா கொஞ்சம் தாமஸகுணமுடையவன்.

(201) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி குரு லக்கினத்தில் வாருணம்சத்தில் இருந்து குஜனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் துஷ்ட நடவடிக்கையுள்ளவள், இரகஸ்யத்தில் பாபச் செய்கைகள் செய்வாள்.

(202) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்தில் குருவும், நாலாம் பாவத்தில் சுக்கிரனும், மூன்றில் பாவக்கிரகமும் இருந்தால் ஜாதகன் அரசாங்க முத்திரைதரிக்கும் அதிகாரியாய் அனேக தேசத்துக்குப் பிரபு ஆவான், எப்போதும் ராஜஸ குணமுள்ள நடவடிக்கையுடையவன், புகழுடையவன், புராணார்த்தங்கள் அறிந்தவன், தினந்தோறும் சிவ கைங்கரியம் செய்யும் சிவ பக்தனாவான்.

(203) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி சூரியன் விருச்சிகத்தில் குமாராம்சத்தில் இருக்கும் கால ஜாதகத்தில் ஜெனித்த ஜாதகன் ஹரிசங்கர பக்தியுடையவன், நித்தியம் நன்மார்க்கத்தில் நடப்பான், வைதீகாசாரம் கைகொள்வான், விசேஷமாக தேவி பக்தி

யுடையவன், புராணமறிந்தவன், ஜாதகனுடைய பிதாவும் இவ்விதமே பந்துவர்க்கத்தில் புகழெடுத்தவனாக இருப்பான்.

(204) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்திர்க்கேழாம் பாவாதிபதியாகிய சனி ராசியில் கும்பத்திலும், நவாம்சத்தில் சுய க்ஷேத்திரத்தில் மகர நவாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் உள்ளுக்குள்ளே கோபமுடையவன், தெளிந்த மனமுடையவன், இரு சிற்றப்பன்மார் அதிக கொடியராயிருப்பார், அவர்களில் ஒருவன் கொஞ்சம் புண்ணியம் செய்வான், தகப்பன் சகோதரி சுமங்கலியாயிருப்பாள், சுகமுடையவள், அதிக புத்திரருடையவள், அவள் மேன்மேலும் புத்திரயோகம் பிரபல்யமாயுடையவள், தாயாதி பாக்கியவசத்தால் சுகமுண்டு, ஜாதகன் நரவாகனம் பெறுவான்.

(205) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி வாருணாம்சத்தில் குரு இருந்து குமாராம்சத்தில் சூரியன் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சகோதரரில் ஒருவன் புத்திரனுடையவன், இரண்டாம் சகோதரன் மலடிக்கு நாயகனாவான், மற்றவன் மரிக்கும் சந்ததியுடையவன், ஆனால் அவன் காலாந்தரத்தில் சந்தான மடைவான் எனச் சிலர் சொல்லுகிறார்கள்.

(206) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் மங்களாம்சத்தில் சூரியன் புதனுடன் கூடி வாருணாம்சத்தில் ஜெனித்த ஜாதகன் அற்ப சந்ததி யோகமுடையவன்.

(207) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி லக்கினத்திற்கு மூன்றாம் பாவத்தில் சனி இருக்கும் வாருணாம்ச ஜாதகனுக்கு அனேக சந்ததி மரிக்கும், ஒரு புத்திரன் தீர்க்காயுளுடையவனாவான்.

(208) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி வாருணாம்சத்தில் குரு இருக்கும் சக்கரயோக ஜாதகனுடைய பிதாவின் சகோதரிக்குப் புத்திரயோகமுண்டு, இரு சிற்றப்பன்மார்கள் புத்திரனற்றவர்களாவார், ஜாதகனுக்கு இரு புத்திரர், இரு பெண்கள் தீர்க்காயுளுடையவராவார்.

(209) ஜென்ம லக்கினம் தனுசு (பிரபாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் மங்களாம்சத்திலிருக்கும் சக்கிரயோக ஜாதகன் இரண்டு தாரங்களிடமும் ஸந்ததி அடைவான், அதிக சந்தானயோகமுடையவன்.

(210) ஜென்ம லக்கினம் தனுசு (கோகிலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 246-00 கலை முதல் பாகை 246-12 கலை வரையில்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரம் இளைய சகோதரம், இருவரும் நாச மடைவர்.

(211) ஜென்ம லக்கினம் தனுசு (கோகிலாம்சம்) ஆகி சனி மேஷத்தில் இருந்தால் ஜாதகன் ஒருவனே, புத்திரமித்திருடன் கூடி-யவன், ஜாதகன் வாலிபத்தில் கிலேசத்தால் வருந்துவான், இவன் பிதா தேகத்தில் நோயுடையவனுய் அயலார் வீட்டில் வசிப்பான், பந்துக்கள் மூலம் சந்தோஷமடைவான், விவாகத்துக்குப் பிறகு சுக முண்டு, இருபது அல்லது இருபத்திரண்டில் பிதா அரிஷ்டமடைவான், பின்னுல் தாய்க்கு அரிஷ்டம் உண்டு, முப்பதுக்கு மேல் சுகமுண்டு.

(212) ஜென்ம லக்கினம் தனுசு (கோகிலாம்சம்) ஆகி சந்திரன் தனுசில் தனுசு அம்சத்திலிருந்து சனி மேஷத்தில் கோகிலாம்சத்திலிருந்தால் ஜாதகன் கந்தை, வைக்கோல் முதலியன விக்கிறையம் செய்து முப்பது வயதுக்குமேல் ஜீவனம் செய்வான்.

(313) ஜென்ம லக்கினம் தனுசு (கோகிலாம்சம்) ஆகி லக்கினத்தில் சந்திரன் ராகுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் மூர்க்கன், கோப குணமுடையவன். இருபத்தேழுக்கு மேல் சௌக்கியமடைவான், மூன்றும் திசையில் விவாகம் நடக்கும், புத்திரோற்பத்திக்குப் பிறகு சௌக்கிய மடைவான், நாலாம் திசை முடிவில் கிலேசமும், ஐந்தாம் திசையில் தனவரவு மடைவான், இவன் புத்திரனுக்கு விவாக சௌக்கியமுண்டு, ஆறும் தசாகாலத்தில் சுய புத்தியில் மாரகமடைவான்.

(214) ஜென்ம லக்கினம் தனுசு (கோகிலாம்சம்) ஆகி மேஷத்தில் சனி இருந்தால் ஜாதகன் புத்திர, புத்திரி சமர்த்தியாயுடையவன், ஆயுளுள்ளவரையில் நல்ல ஜீவனமுண்டு, வியாபார மூல ஜீவனம் நடக்கும்.

(215) ஜென்ம லக்கினம் தனுசு (ஸாகாதாம்சம்) ஆகி விருச்சிகத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்கு வாலிபத்திலேயே பிதா நாச முண்டு, பின்னுல் தாய் நாசமடைவாள், மூத்த சகோதரன் நாசத்தினுலே நடுவயதிலே ஜாதகன் வருந்துவான், இரு சகோதரிகள் தீர்க்காயுள், ஒருத்தி புத்திரனுடையவள், சுகமுடையவள், ஆந்திரப் பிரபுவின் துவாரா தேசத்தில் வாலிபத்தில் சுகமாயிருப்பான், பின்னுல்

வனுந்தரவாச மடைவான், குரும்பு புத்தியுடைய பிரபுவிடம் சேவக னாய் இருந்து ஜீவனம் செய்வான், இரு தாரத்திடமும் ஜாதகனுக்கு புத்திரனுண்டு.

(216) ஜென்ம லக்கினம் தனுசு (ஸாகாதாம்சம்) ஆகி விருச்சி கத்தில் சனி இருக்கும் கமலயோக ஜாதகன் மாத்வ வைதீக மூலமாய் நரவாகன யோகமுடையவன், நாலாம் திசையில் அதிக சௌக்கிய முண்டு, வயதின் மூன்று பாகத்தில் நடு கண்டத்தில் தனவரவு, பின் பாதியில் சுகவிருத்தி, கிராம லாபமுடையவன்.

(217) ஜென்ம லக்கினம் தனுசு (ஸாகாதாம்சம்) ஆகி சனி "தாவாக்னி" ஷஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகன் வாத தேகமுடை யவன், இரு தாரமுடையவன், பெருந்தன்மை வாய்ந்தவன், அரசாங் கத்தில் புகழ் பெற்றவன்.

(218) ஜென்ம லக்கினம் தனுசு (ஸாகாதாம்சம்) ஆகி குரு பர மேசாம்சத்திலிருந்து சனி, காதாம்ச நாடியில் இருந்தால் ஜாதகன் பாக்கிய யோகமுடையவன், விஷ்ணு சங்கர பக்தியுடையவன்.

(219) ஜென்ம லக்கினம் தனுசு (ஸாகாதாம்சம்) ஆகி காதாம் சத்தில் விருச்சிகத்தில் சனி இருந்தால் ஜாதகன் பருத்த தேகமுடை யவன், உயர்ந்த புத்தியுடையவன், மூர்க்க சுபாவமுடையவன், ஆசையுடையவன், கோபமுடையவன், சீக்கிரம் தெளியும் குணமுள் ளவன், முப்பத்தெட்டுக்குமேல் பாக்கியமுண்டு. நாற்பதில் சுகம், நல்ல வாகனம், நாற்பத்திரண்டில் புகழ், யோகமுடையவன், ஐந்தாம் திசையில் தாரபயம், அதிக புத்திரர் பிறந்து மரிப்பர், மூத்த சகோத ரன் தீர்க்காயுள், வாலிபத்தில் வயிற்றுவலி பீடை வரும், மரித்த சந்தா னம் அதிகமுண்டு, இரு சகோதரிகளுடையவன், சுகவான், மாற்றாந் தாய் சகோதரனுடன் கூடியவன், மானி, மாதா பிதாவைப் பக்தி யுடன் உபசரிப்பான், எப்போதும் வித்தைக்குத் தடையுண்டாகும்.

(220) ஜென்ம லக்கினம் தனுசு (முதகாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 259-48 கலை முதல் பாகை 260-00 கலை வரையில்) ஆகி நாலாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் தெற்கு வடக்கு வீதியில் சமுத்திரத்திற்கு சமீப தேசத்தில் பிறந்து வாசம் செய்வான்.

(221) ஜென்ம லக்கினம் தனுசு (முதகாம்சப் பூர்வபாகம்) ஆகி சந்திரன் குருவுடன் கூடி இருந்தால் ஜாதகன் கருத்த நடுத்தர தேக

முடையவன், போக மாதர் சேர்க்கையில் ஆழ்ந்திருப்பான், ரஜோ குணமுடையவன், எழுத்து எழுதுவதில் சமர்த்தன், இங்கித மறிந்தவன், குணம் கிரகிக்க வல்லவன், வர்த்தக வியாபார ஜீவனம் செய்வான். பிதுரார்ஜித தனம் நிரம்பியவன், அனேக தயாதி ஜெனங்களுடன் கூடியவன்.

(222) ஜென்ம லக்கினம் தனுசு (மூதகராம்சம் உத்தரபாகம்) ஆகி சந்திரன் குருவுடன் கூடி இருந்தால் ஜாதகன் கிராமத்திற்கு அதிகாரியாவான், விவசாய ஜீவனம், முன்பின் சகோதர மில்லாதவன், வாலிபத்திலேயே தரித்திரமடைவான், ஜென்ம வருஷத்திலேயே பிதா நாசமடைவான், ஜாதகன் அம்மான் வீட்டில் வாசமுடையவன், முன் பாகத்தில் ஜெனித்த ஜாதகன் முன் பின் சகோதம் நாசமுடையவன், ஜாதகன் ஜெனித்த பிறகு இவன் பிதா அதிபாக்கிய மடைவான், விசித்திரமான வீடு கட்டுவான், பிராமணர் மூலம் அதிக பாக்கிய மடைவான், தாது மூலமாகக் கிடைத்த ரச வஸ்துக்களை விருத்தி பண்ணுவான்.

(223) ஜென்ம லக்கினம் தனுசு (மூதகராம்சம்) ஆகி புதன் மூன்று, ஆறு, எட்டு இந்த பாவங்களில் சனி, சூரியன் இவர்களுடன் கூடியாவது, அன்றி பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் வாலிபத்திலேயே தாய் நாசமடைவள், மாற்றுந்தாய் யோகமுடையவன், இவன் பிதா தீர்க்காயுளுள்ளவளா யிருப்பாள், ரகஸ்யத்தில் காமதுரன், ஸ்திரீலோலன், இவன் தகப்பனுக்கு பதினைந்து அல்லது பதினாறு சகோதரரும், எட்டு சகோதரிகளுமுடையவனுவான், இருவர் அல்லது மூவர் நல்ல வாசமுடையவர், இரு சிற்றப்பன்மார் தீர்க்காயுளாய் புத்திர புரித்திரிகளுடன் கூடியவராவார், அவர்களில் ஒருவன் அதிக சந்ததியுடையவன், அவனுக்கு ஸ்திரீ சந்ததிகள் அதிகமுண்டு, ஜாதகனுடைய தகப்பன் சகோதரி ஒருவள் விதவையாகி தீர்க்காயுளுடையவளாவாள், மாற்றுந்தாய் சேர்க்கையால் புத்திரன் மூலம் விசாரமுடையவள், அதிருஷ்டம் முதிர்ந்த யோகத்தால் காலாந்தரத்தில் நற்புத்திரனை யுடையவளாவாள். உத்தராம்சம் ஆகிடில் இரு சிற்றப்பன்மார் தீர்க்காயுள்ளவராவர், காலாந்தரத்தில் மேக நோயால் மனைவியுடன் மரிப்பான்.

(224) ஜென்ம லக்கினம் தனுசு (மூதகராம்சம்) ஆகி மீனத்தில் சந்திரன் குருவுடன் கூடினல் ஜாதகன் கங்காஸ்நானம் செய்வான்,

நல்ல புண்ணியம் செய்தவன், காலாந்தரத்தில் சித்தசுத்தியுடையவன் ஆபத் சந்நியாச யோகமுடையவன்.

(225) ஜென்ம லக்கினம் தனுசு (முதகாம்சம் உத்தராம்சம்) ஆகி லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் எண்பத்தோருவது வயதில் மரணமடைவான், பாபமுடையவன், நோயால் வருந்துபவன், முன் செய்த வினையினால் பக்கவாதம், முதலிய பீடைகளுடையவன்.

(226) ஜென்ம லக்கினம் தனுசு (முதகாம்சம் பூர்வபாகம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் லோஹிதாம்சத்திலிருந்தால் ஜாதகன் சந்தானத்திற்காக வியாகூலமடைவான், காலாந்தரத்தில் நல்ல புத்திரனுடையவனாவான், சிற்றப்பன் புத்திரர்களுக்குப் பீடை நேரும்.

(227) ஜென்ம லக்கினம் தனுசு (முதகாம்சம்) ஆகி சூரியன் கலுஷாம்சத்திலிருந்து ஏழாம் பாவாதிபன் சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்க்காயுளுடையவனாயிருப்பான், வாலிபத்திலேயே தாய் நாசமடைவாள்.

(228) ஜென்ம லக்கினம் தனுசு (முதகாம்சம்) ஆகி கும்பத்தில் சூரியனிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வர்த்தக வியாபார ஜீவனம் செய்வான், கொஞ்சம் மூர்க்க குணமுடையவன், பின்னும் நியாயமாகச் சம்பாதித்த பொருளதிகமாகவுடையவன், பூர்வபாகத்தில் ஜெனித்த ஜாதகன் பிதுரார்ஜித தனம் நிறைந்தவனாவான், மூன்றும் திசையில் சுயார்ஜித மடைவான், நாலாம் திசையில் தன் பிரபலத்தன்மையால் நவரத்தினம் முதலிய லாபமடைவான், வடமேற்குத் திசையில் வியாபாரத்தில் தன விருத்தி உண்டாகும், சிற்றப்பன் மகன் மூலம் வீட்டில் பசு, தனம் விருத்தி உண்டாகும், உள்ளுக்குள் வியாகூலத்தால் கலகமும், பின்னால் சுகமுமுண்டாகும், கடன், விரோதம் இக்காரணங்களினால் வரவைக் காட்டிலும் அதிக செலவுண்டாகும், பத்தாயிரத்துக்கும் அதிகமான தனம் கிடைக்கும்.

(229) ஜென்ம லக்கினம் தனுசு (முதகாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் சூரியனுடன் கூடினால் ஜாதகன் அயல் ஸ்திரீ சம்பந்தமுடையவன், இரண்டு தாரமுடையவன், இருதாரத்திடமும் புத்திரனுடையவனாவான்.

(230) ஜென்ம லக்கினம் தனுசு (முதகாம்சம்) ஆகி குரு அமலாயோகத்திலிருந்தால் ஜாதகன் தேவப் பிராமண பக்தியுடைய வன், சிவபக்தி விசேஷமாகவுடையவன், தானதர்ம பாராயணன், கொடையாளி.

(231) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 241-12 கலை முதல் பாகை 241-24 கலை வரையில்) ஆகி ராகு கும்பத்தில் தனுசு அம்சத்திலாவது அன்றி மீனும்சத்திலாவது இருந்தால் ஜாதகன் யோகமுடையவன், ரோக முடையவன், மிகுந்த சூடும், துவர்ப்புமான வஸ்துக்களைப் புசிப்பான், இனிமையாயும், அழகாயும் பேசுவான், தாமஸ குணமுடையவன், நடு விலும் கடைசியிலும் சாத்துவிகனுயிருப்பான், வாலிபத்தில் தாமஸ செய்கையுடையவன், கண்ணேயப் பீடையுடையவன்.

(232) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி ராகு கும்பத் தில் தனுசு அம்சத்திலாவது அன்றி மீனும்சத்திலாவது இருந்து குஜ னல் பார்க்கப்பட்டால் ஜாதகன் ரோகமுடையவன், மத்திம வயது டையவன், கொஞ்சகாலம் துராசாரமுடையவனுய் நடுவயதில் நன் மார்க்கத்தில் இறங்குவான்.

(233) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி சுக்கிரன் கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் துராலோசனையில் புத்தியைச் செலுத்துவான், ருதுஸ்திரீ சேர்க்கைவுடையவன், காமி, சகோதரன் மனைவியை அனைவதில் பிரியன், கொஞ்சம் கெட்ட அபவாதமுடைய வன்.

(234) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி சூரியன் காமாம்சத்தில் இருந்து காளகூடாம்சத்தில் ராகு இருந்தால் ஜாதகன் ஆயுதத்தால் வெட்டுப்பட்ட ஆண்குறி, விரை இவைகளையுடையவன், யௌவனத்தில் தாரசோகம் முதலியன இருபத்துமூன்றுவது வயதில் நேரும், இருபத்துநான்காவது கடைசியில் இரண்டாவது விவாகம் நடைபெறும், விவாகத்துக்குப் பிறகு இவன் ஞானமார்க்கத்தில் இழி வான பிரசங்கங்கள் செய்வான்.

(235) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி குரு பிரம்ம ஞானும்சத்தில் லக்கினத்திற்குக் கேந்திரத்திரிகோண ஸ்தானங்களில்

இருந்தால் ஜாதகன் பரப்பிரம்ம தியானம் செய்யும் யோகியாவான், அபத் சந்நியாஸயோக முடையவனாவான்.

(236) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் ராகு அல்லது சூரியன் இருந்து, இரண்டாம் பாவத்தில் சந்திரன் குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் நற்கர்மத்தில் பெயரெடுத்தவனாவான், புண்ணியஞ் செய்தவனாவான், தனம் நிறம்பியவன், வேறு உலகிலும் சௌக்கிய முடையவனென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

(237) ஜென்ம லக்கினம் தனுசு (பங்கஜாம்சம் பூர்வபாகம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 254-36 கலை முதல் பாகை 254-48 கலை வரையில்) ஆகி எட்டாம் பாவாதிபன் நீச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் நல்ல ஆசார விசேஷமறிந்தவன், சீமான், ஜெனங்களுக்குச் சுகம் உண்டு பண்ணுவான்.

(238) ஜென்ம லக்கினம் தனுசு (பங்கஜாம்சம்) ஆகி லக்கினத்தில் குரு, குஜன், சனி இருந்தால் ஜாதகன் பிதாவைப் பெற்றபாட்டி தீர்க்காயுளுடையவள், வாலிபத்திலேயே பிதா நாசமுறுவன்.

(239) ஜென்ம லக்கினம் தனுசு (பங்கஜாம்சம்) ஆகி பிதா ஸ்தானாதிபனான சூரியன் உச்சஸ்தானமாகிய மேஷத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் ஆபத் சந்நியாச யோகமுடையவனாவான்; உத்திராம்சமானால் பிரசவித்தபின் ஜாதகனுடைய தாய் அரிஷ்டமடைவாள்.

(240) ஜென்ம லக்கினம் தனுசு (பங்கஜாம்சம் பூர்வபாகம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் ஏழாம் பாவ ராசியிலிருந்தால் ஜாதகனுக்கு ஒரு பெண் தீர்க்காயுளுடையவளாவாள்.

(241) ஜென்ம லக்கினம் தனுசு (பங்கஜாம்சம் உத்திராம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் ஏழாம் பாவ ராசியிலிருந்தால் ஜாதகனுக்குப் புத்திரனில்லை, ஜாதகன் அற்பாயுளுடையவன், சுகவான், கண்டம் நீங்கினால் தீர்க்காயுளுடையவனாவான், புத்திர நாசத்தால் வருந்துவான்.

(242) ஜென்ம லக்கினம் தனுசு (பங்கஜாம்சம் பூர்வபாகம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபன் ஏழாம் பாவ ராசியிலிருந்தால் ஜாதகன் இருநூறு தனமுடையவன், வியாபாரத்தால் ஜீவனம் செய்வான்.

(243) ஜென்ம லக்கினம் தனுசு (பங்கஜாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபன் சனி உச்சக்கிரகத்துடன் கூடி இருந்தால் ஜாதகன் முதுமையில் புத்திரன் மூலம் யோகமுடையவனுவான்.

(244) ஜென்ம லக்கினம் தனுசு (பங்கஜாம்சம் பூர்வபாகம்) ஆகி எட்டாம் பாவத்தில் பாபர் இல்லாதிருந்தால் ஜாதகன் எழுபத்தேழாவது வயதில் மரணமடைவான், மரணம் அவனுக்கு மீனமாசத்தில் வாய்க்கு மென்பர்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் தனுசு லக்கினத்திற்கு 244-விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட தனுசு லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் தனுசு லக்கின பலனின் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்று அறியவும்.

——:0:——

மகர லக்கின ஜாதகம்.

——(***)——

(1) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி லக்கினத்தில் குரு இருந்தாலும், அன்றி லக்கினத்தைக் குரு பார்த்தாலும், அன்றி லக்கினாதிபனான சனி தன்னுச்சஸ்தானமாகிய துலாத்தில் இருந்தாலும் ஜாதகன் கொடி சுற்றிப் பிறவான்.

(2) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி சந்திரன் விருச்சிகத்தில் நீச்சனாய், நீச்சாம்சத்திலிருந்தாலும், அன்றி ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி சனி ஆறும் பாவாதிபன் அம்சத்திலிருந்தாலும், ஜாதகன் பிறந்த வருஷத்திலே அம்மானுக்குக் கஷ்டம் வரும், பாக்கிய நாசமடையும், நீச்சாம்சத்தில் சந்திரன் இருக்கும் ஜாதகனுக்கு கொடி சுற்றிய தோஷத்தினாலே ஜாதகனுடை தாய் வர்க்கம் நாசமடையும், அல்லது அதிக ஆபத்து நேரிடும், பிதுர் வம்சம் அதிக சுகமடையும், ஜாதகனுடைய சிற்றப்பன் முதலியோர் அதிக சுகமடைவார்.

(3) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி மூன்றுகிரகங்கள் உச்சமாய் சந்திரன் தன் நீச்சஸ்தானமாகிய விருச்சிகத்திலிருந்தாலும், அன்றி குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் அதிக யோகவான்.

(4) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் லக்கினத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபன் அம்சத்தில் சுபராசியிலிருந்தால் ஜாதகனுக்குச் சொற்ப பாலாரிஷ்டமுண்டு, வெள்ளியால் சந்திரன் செய்து வெண்கலப் பாத்திரத்தில் ஸ்தாபித்து தானம் செய்ய சாந்தி உண்டாகும். ஒரு பலம் அல்லது சக்திக்கேற்றவாறு சூரிய யந்திர சூரியதானத்தால் ஆயுள் ஆரோக்கிய விருத்தி உண்டாகும், எட்டாம் பாவாதிபனுக்கு ஏற்ற மந்திர ஜெப ஹோமாதிகளால் சாந்தி செய்யவும், சூரியசாந்தி செய்ய பாலாரிஷ்ட தோஷமில்லை, சந்திர தானத்தால் சரீர புஷ்டி உண்டாகும், அம்மான் முதலியவருக்குச் சுகமுண்டு, ஜாதகன் தேகசுக முடையவனாவான், பலமில்லாதவன், கஷ்ட ஜீவனம், ஜாதகன் சகோதர சகோதரிகளுடன் கூடியவன்.

(5) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் இருக்கும் வீட்டுடைய பாவாதிபதி உச்சக்ஷேத்திரத்தில் பலவானுயிருந்தாலும் அன்றி, ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி குரு லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சுபாம்சத்திலிருந்தாலும் ஜாதகன் தீர்க்காயுளுடையவனுவான்.

(6) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி குரு லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில், பாபாம்சத்திலிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அற்பாயுளுடையவனுவான், நீச்சாம்சத்திலிருந்தால் மிக அற்பாயுளுடையவன்.

(7) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி சந்திரன் விருச்சிகாம்சத்தில் மிருதாவஸ்தையிலிருந்தாலும், சந்திரன் பாவரால் பார்க்கப்பட்டாலும், சந்திரனுக்கு சுபர் பார்வை இல்லாதிருந்தாலும், ஜாதகனுக்கு பாலாரிஷ்டமுண்டு.

(8) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி சந்திரன் குருவுடன் கூடியாவது அன்றி குருவால் சந்திரன் பார்க்கப்பட்டு இருந்தாலும், ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி சந்திரனுக்கேழில் சுபக்கிரகமிருந்தாலும் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டமில்லை.

(9) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி குரு லக்கினத்திற்கு ஏழாம் பாவத்திலிருந்து சூரியன் லக்கினத்தில் ஹாலஹலாம்சத்திலிருந்து, குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சிவந்து சமமான தேகமுடையவன், பரந்த கண்கள், அழகிய மூக்கு உடையவன், வாலிபத்தில் சுவாஸகாச நோயும், பாரிசவாயு பீடையுமுண்டாகும், ஜாதகனுடைய ஐந்தாவது வயதுக்குமேல் சுகமும், தேகபுஷ்டியுமடைவான், ஜாதகனுக்கு இரண்டாவது வயதில் அதிக ஆபத்து நேரிடும்.

(10) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி லக்கினுதிபன் தன் நவாம்சத்திலிருந்து, தன் உச்சஸ்தானத்தில் குஜனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு எட்டு வயதுக்குமேல் அதிக சுகமுண்டு, அதி பாலியத்தில் சுகமும், கஷ்டமும் சமமாக இருக்கும், அளவாய்ப் புசிப்பான், போகி, கொடையாளி, புகழுடையவன், சிவ பக்தன், எழுத்து வித்தையில் தேர்ந்தவன், பஞ்சாட்சரப் பிரியன், மானி, ஹரி சங்கா பக்தியுடையவன், பல மந்திரங்களில் ஆசையுடையவன், பரமசிவத்தினிடம் பக்தி பூண்டவன், தர்மவான், பரோபகாரம் செய்வான்,

பிதாவைவிட அதிக அறிவாளி, இரண்டு அம்மான்களுடையவன், இரண்டு பிதாக்களிடம் பக்தியுடையவன், தகப்பன் சகோதரி ஒருத்தி சுமங்கலியாய் அதிக புத்திரருடையவளாவாள்.

(11) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி குரு ஏழாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு மூன்று சிற்றப்பன்மார் தீர்க்காயுளுடையவராவார், ஜாதகனுக்கு மூன்று மனைவிகளும் தீர்க்காயுளுடையவராவர், ஜாதகனுடைய சிற்றப்பன்மார்களில் ஒருவன் மலடிக்குக் கணவனுவான், ஒருவன் வேறு மனைவியிடம் புத்திரனுடையவன், மற்றவன் அரசாங்கத்தில் சம்பந்தமுடையவனுவான், உள்ளத்திற் கூட உடையவன், லோபி, குணவான், பரோபகாரி, தேவப்பிராம்மணர்களைப் போஷிப்பான், ஜாதகனுக்கு இரு மனைவியரிடம் புத்திரருண்டு, முதுமையிலும் விவாகம் செய்து கொள்வான், ஜாதகனுடைய தந்தையும் அவ்விதமே, மூன்று சகோதாருடையவன், காலாந்தாத்தில் சகோதர விரோதமடைவான், பாக்கியப் பிரிவினல் துக்கமடைவான்.

(12) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி சனி துலாத்தில் மகராம்சத்தில் இருந்தால் ஜாதகன் ஜென்ம காலத்தில் தேசத்தில் மழை இல்லாமல் க்ஷாமமாகும்.

(13) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி சனி பத்தாம் பாவத்திலும், குரு ஏழாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் எழுதுகோல் கையில் தரிப்பான், சமர்த்தன், நாட்டிய கீதங்களில் பிரியன், துராலோசனையுடையவன், தன் பந்துக்களுக்குச் சகாயம் செய்வான், கணிதம் தெரிந்தவன், நீச்சரைச் சேவிப்பான், கிராமம், பூமி இதுகளுக்கு அதிபனுனவன், தேசாந்தாத்தில் பாக்கியமடைவான், உபாயத்தால் காரியசித்தி அடைவான், வனந்தரத்திலுள்ள பட்டிணத்தில் வாசம், ஜாதகன் இருமனைவியருடையவன், மானி, புத்திர புத்திரிகளுடையவன்.

(14) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி குரு தனுசு, கன்னி, இரண்டு, ஏழு இந்த இடங்களிலிருந்தாலும், அன்றி சுக்கிரனுடன் கூடியாவது சுக்கிரனல் பார்க்கப்பட்டாவது இருந்தாலும் ஜாதகனுக்கு இரு மனைவியர் நாசமடைவர், ஜாதகன் எருக்கஞ் செடியை விவாகம் செய்து விவாக பலனடைவான்.

(15) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி மூன்றுமதிபனுன குரு சதுஷ்டயமாகிய துலாத்தில் இருந்தால் ஜாதகனுக்கு நான்கு அல்லது ஐந்து சகோதாருண்டு, இருவர் மூத்தவராவார், ஒரு சகோதரி சுமங்கலியாய் இருப்பாள், இடையில் சகோதர நாசமடையும், சகோதர நாசத்தால் துக்கமடைந்த தாய் தீர்க்காயுளுடையவளாவாள், இரு வழிப்பாட்டிகளும் நாசமடைவர், ஜாதகனுடைய அம்மான் நாசத்தால் தாய் ஜாதகனுடைய தாய் துக்கமடைவாள்.

(16) ஜென்ம லக்கினம் மகரம் (காளிகாம்சம்) ஆகி சனி பன்னிரண்டாம் பாவாதிபன் அம்சத்தில் இருந்தால் ஜாதகன் அம்மானுக்கு இரு மனைவியர்களுண்டு, இருபத்தேழு வயதுக்குமேல் ஜாதகன் பாக்கியமடைவான், தன் பிரபலத்தால் தனவிருத்தி உண்டாகும்.

(17) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 280-48 கலை முதல் பாகை 281-00 கலை வரையில்) ஆகி லக்கினுதிபனுன சனி ஸுசிராம்சத்திலிருந்தால் ஜாதகன் அற்ப புத்திரருடையவனுவான்.

(18) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி மீனத்தில் சந்திரன் கேதுவுடன் கூடினுல் ஜாதகனுடைய தாய் கெட்ட நடவடிக்கையுள்ளவளாய் ரகஸியத்தில் சோரம் போவாள்.

(19) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி லக்கினுதிபனுன சனி, சுசிராம்சத்தில் குஜனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாயும், மூத்த சகோதரியும் சரீர தோஷமுடையவராவார்.

(20) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சந்திரன் விஷாம்சத்தில் மீனத்தில் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் சகோதரனுடன் சோரம் போவாள்.

(21) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சனி சுசிராம்சத்தில் கும்பத்தில் குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்குத் தாய் வர்க்கத்தில் தாரம் வாய்ப்பள்.

(22) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபன் மிதுனும்சத்திலிருந்து ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்து சந்திரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய சகோதரி அயலாரிடம் சோரம் போவாள்.

(23) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி லக்கினம் சிம்மாம்சமாயிருந்து அந்த பாவாதிபன் குஜனுடன் கூடினுல் ஜாதகனு

டைய தாய் கெட்ட நடவடிக்கையுள்ளவள், புருஷன் சொல்லைக் கேளாள், சோரம் போவாள்.

(24) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி நாலாமதிபனான செவ்வாய் ஞானவஸ்தையில் சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகன் தாய் தீர்க்காயுளுடையவள், ரகஸ்யத்தில் சோர நாயகனை யணைவாள்.

(25) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி லக்கினாதிபனான சனி, சுசிராம்சத்தில் சுகாதிபனான குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகன் தாய்வம்சத்தார் அதிக பாக்கியமுடையவராவார், இவன் பிதா அவர்களிடம் ஜீவனம் செய்வான்.

(26) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சுகாதிபனான குஜன் தனுசுக்கு ஒன்பதாமிட ராசியில் கும்ப நவாம்சையில் சனியுடன் இருந்து தனுசில் குரு இருந்தால் ஜாதகனுடைய தாய் பாட்டன் அதிக பாக்கியமுடையவன், அதிக புத்திரரும், செல்வமும் நிறைந்தவன், சகோதர சகோதரிகளுடன் கூடியவன், அரசாங்கத்தில் பிரசித்தன், நரவாகன யோகமுடையவன்.

(27) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சந்திரன் லக்கினத்திற்கு மூன்றாமிடத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், சகோதர சகோதரிகளுடையவள்.

(28) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி லக்கினாதிபனான சனி ராசியில் மீனத்திலும், நவாம்சத்தில் உச்சாம்சத்தில் குஜனுடனும் கூடி இருந்தால் ஜாதகன் தாய்க்கு ஏழு அல்லது எட்டு சகோதாருண்டு, இரண்டு அம்மான்கள் தீர்க்காயுளுள்ளவராயிருப்பார், மற்றவர் நாசமுறுவர்.

(29) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி நாலாமதிபனான குஜன், ரிஷபாம்சத்திலிருந்து லக்கினாதிபனான சனி, சுசிராம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் பாட்டன் பிரசித்தன், அக்கிராமத்தில் வசிப்பான்.

(30) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி மாதுலகாரகனான புதன் மகரத்தில் சூரியனுடன் கூடி, க்ஷயாவஸ்தையிலிருந்தால் ஜாதகனுடைய அம்மான் க்ஷயரோகமுடையவனாவான்.

(31) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சுகாதிபனான குஜன் ரிஷபாம்சத்தில் லக்கினாதிபனான சனியுடன் கூடி இருந்

தால் ஜாதகன் தாய்வம்சத்தில் க்ஷயரோகமுண்டு, ஜாதகனுடைய இரு அம்மான்மார் நாசமடைவார்.

(32) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சுகாதிப ஞன குஜன், ஜாராவஸ்தையில் சனியுடன் கூடி இருந்தால் ஜாதகன் தாய் புத்திரருடையவள், தன் குலத்தில் ரகசியத்தில் சோரம் போவாள், ஜாதகனுடைய இவன் மூத்த சகோதரியும் அத்தகைய கெட்ட குணங்கள் அமைந்தவளாய் இறந்த புத்திரனுடையவளா வாள், ஜாதகன் பிதா சகோதர சகோதரிகளுடன் கூடியவன்.

(33) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சிற்றப்பன் பாவாதிபஞன குஜன், சனி இவர்கள் ஜாராவஸ்தையில் இருந்தால் ஜாதகனுடைய சிற்றப்பன்மாரில் ஒருவன் ஜாரர்களுக்கும், சோரர் களுக்கும் தலைவனுவான், மேக சரீரமுடையவன், இறந்த சந்தான முடையவன், ஜாதகனுடைய இரு அம்மான்களில் ஒருவன் மலடிக்கு புருஷன் ஆவான்.

(34) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சூரியன் முகுந்தாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு நான்கு சிற்றப்பன்மாருண்டு, அவர்களில் மூவர் தீர்க்காயுளுடையவராயிருப்பார்கள், ஜாதகனுடைய பாட்டன் பிரசித்தன், ஜாதகன் சகோதர சகோதரிகள், சினேகிதர் கள் அதிகமாக வுடையவனுவான்.

(35) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபஞன சுக்கிரன் மகரத்தில் மிதுனும்சத்தில் ராஜ்ஜியாதிப ஞன பத்தாம் பாவாதிபனுடன் கூடினுல் ஜாதகனுடைய பாட்டன் ராஜ சேவை செய்பவனுவான், விதேசவாசம் செய்வான், விவகாரம் செய்வான், அக்கிராரத்தில் வசிப்பான், கொஞ்சம் உத்தியோகமுஞ் செய்வான்.

(36) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சந்திரன் லக்கினத்திற்கு மூன்றும் பாவத்திலும், நவாம்சத்தில் கும்பாம்சத்தி லும் கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்குச் சகோதரர் இருவர், சகோதரிகளிருவர் தீர்க்காயுளுடையவராயிருப்பார்கள், மற்றவர்கள் அந்தந்த மாரககாலத்தில் நாசமடைவார்கள்.

(37) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி ஒன்பது பத்து இந்த பாவாதிபர்கள் லக்கின பாவத்திலும், லக்கின பாவாதிப ஞன சனி, சுசிராம்சத்திலுமிருந்தால் ஜாதகன் இருபது வயதுக்கு

மேல் பாக்கிய மடைவான், மூன்றாவது திசையில் நல்ல புகழடைவான்.

(38) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் லக்கினத்தில் இரு சுபருடன் கூடினால் ஜாதகன் ஜென்ம வருஷத்தில் ஜென்ம திசையில் மரணத்துக்குச் சமானமாக கண்டமுண்டாகி ஜீவித்திருப்பான்.

(39) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி லக்கினாதிபனான சனி தன்னுச்ச அம்சத்தில் குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகன் அதிக விரையமுடையவன், கோபி, சீக்கிரம் தயவுடையவனுவான்.

(40) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி லக்கினாதிபனான சனி சுசிராம்சத்தில் இருந்தால் ஜாதகன் அரசாங்கத்தில் பிரபலமான உத்தியோகமும், புகழுமுடையவன், இருதார முடையவன், போகி, தன் கையால் சம்பாதித்த பொருளுடையவன், வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷ முடையவன்.

(41) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி லக்கினாதிபன் சுசிராம்சத்திலிருந்து லாபாதிபனான குஜனுடன் கூடினால் ஜாதகன் மூத்த சகோதரி தன் புருஷன் மூலமாக நல்ல பாக்கியமுடையவள், ஜாதகன் தீர்க்காயுளுடையவன், ஜாதகன் சகோதரனற்றவன், இறந்த சந்தான யோகமுள்ளவன், காலாந்தரத்தில் புத்திரனடைவான், போக சுகமுடையவன்.

(42) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி லக்கினாதிபனான சனி சுசிராம்சத்திலிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரியின் கணவனது தகப்பனூர் மூலம் அதிக பாக்கியமடைவான், சிறிய சகோதரியின் கணவன் கொஞ்சம் நோயாளி, அவனும் அதிக சந்தான யோகமுடையவன், கொஞ்சம் யோகமுடையவன், சுகவான்.

(43) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி மீனத்தில் கும்பாம்சத்தில் சந்திரன் இருந்து கும்பத்தில் சனி இருந்தால் ஜாதகன் ஜென்மதிசையில் மீனத்திற்குச் சனி வருங்காலத்தில் ஜென்ம தேசத்தில் அரசனுக்கு அரிஷ்டமுண்டாகும், அம்மானுக்கு நல்ல சந்தானமுண்டு, க்ஷயரோகத்தால் துக்கமடைவான், தாய் வம்சத்தில் பாக்கிய விருத்தி உண்டாகும், பிதா கொஞ்சம் சுகமடைவான்.

(44) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் சனி, ஒன்பதாம் பாவத்தில் ராகு, ஏழாம் பாவாதிபன் பாபருடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு மூன்ருவது திசையில் தாரத்திற்கு ஹானி உண்டாகும், உடனே விவாகம் சீக்கிரமாக நடைபெறும்.

(45) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி ஒன்பது, பத்து இந்த ஸ்தானுதிபர்கள் கேந்திரத்தில் எட்டாம் பாவாதிபனுடன் கூடினல் ஜாதகன் யோக பங்கமுடையவனும், அற்ப பாக்கிய சுகமுடையவனுமாவான், இருபத்து நான்கு வயதுக்குமேல் பாக்கியமுண்டாகும், இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் யோகமாயிருப்பான், எட்டு வருஷத்துக்குமேல் கிலேசமடைவான்.

(46) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி லக்கினுதிபனுன சனி சுசிராம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு அதிக சந்தானமுண்டு, அனேக சந்ததி மரிக்கும், இருவர் அல்லது மூவர் புத்திரர்கள் தீர்க்காயுளுடையவராவார்.

(47) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்து குஜனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் துஷ்ட சுபாவமுடையவன், எப்போதும் பரிகாசம் செய்பவரிடம் பிரீதியுள்ளவனுவான், குரூரமான செய்கையுடைய சுபாவமுள்ளவன், எப்போதும் பயங்கரமான காரியங்கள் செய்வான், நடனம், கானம் இவைகளில் பிரியன், சுகவான்.

(48) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி ராகு பாக்கியஸ்தானமாகிய கன்னியில் ரிஷபாம்சத்தில் இருந்தால் ஜாதகன் இருபது வருஷத்திற்குமேல் பாக்கியமடைவான், இருபத்து நான்குக்குமேல் சுகமடைவான். மூன்ருவது திசையில் புத்திரோற்பத்தி உண்டாகும், பின்னுல் பாக்கியம் குறைந்து கிலேசமடைவான்.

(49) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி சந்திரன் மீனத்தில் மதாம்சத்தில் இருந்தால் ஜாதகன் முப்பதாவது வயதில் கிலேசமடைவான், முப்பத்திரண்டில் தாயாதிகளுக்குள் சண்டை உண்டாகும், முப்பத்து நான்காவது வயதில் சுகமும், சீக்கிரத்தில் கிலேசமுமடைவான், இரண்டு, மூன்று தடவை ராஜத்துவேஷ மடைவான், சேர்த்த பொருள் நாசமடையும், குக்கிராமத்தில் வசிப்பான், தன்னிருப்பிடமிழந்து துக்கமடைவான்.

(50) ஜென்ம லக்கினம் மகரம் (விஷநாசாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுக்கு ஏழாவது திசாகாலத்தில் அதிக கிலேசமும், தரித்திரத் தன்மையுமடைவான், அரசாங்கத்தாருடன் துவேஷமடைவான், பின் பாதியில் சில சமயம் சுகமடைவான், சுப, அசுபபலன் சமமாக இருக்கும்.

(51) ஜென்ம லக்கினம் மகரம் (காந்தாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 276-12 கலை முதல் பாகை 276-24 கலை வரையில்) ஆகி லக்கினாதிபனான சனி, பன்னிரண்டாம் ராசியாகிய தனுசில் இருந்தால் ஜாதகன் சமுத்திரத்திற்கு அருகிலுள்ள பட்டிணத்தில் தெற்கு வடக்கு வீதியிலே பிறப்பும், வாசமும் உடையவனாவான்.

(52) ஜென்ம லக்கினம் மகரம் (காந்தாம்சம்) ஆகி சுக்கிரன் திரிம்சாம்சத்தில் இருந்தால் ஜாதகன் சிகப்பு நிறம், நடுத்தரதேகமுடையவன், ஸ்திரீ லோலன், தாமஸ குணமுடையவன், புத்திமான், நன்றாய்ப் பேசுவான், வேறுபாஷை அறிந்தவன், பொருள் சம்பாதிப்பதில சமர்த்தன், எப்போதும் ஈனர் சேவை செய்வான், போகமாதரையணைவதில் பிரியன், பல ஜாதிப் பெண்கள் சேர்க்கையுடையவன், பிறந்த வீடு நாசமடையும், ஜாதகன் அழகன், சமர்த்தன், தெளிந்த முகமுங் கண்களுடையவன், சங்கீதம், நாடகம் அறிந்தவன், வாசனை, புஷ்பம், வஸ்திரம் இவைகளில் பிரியனாவான்.

(53) ஜென்ம லக்கினம் மகரம் (காந்தாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபனான குரு, தன் உச்ச சுய க்ஷேத்திரங்களில் இருந்தால் ஜாதகன் இளைய சகோதரருடன் கூடியவன், பெருந்தன்மை வாய்ந்தவன், மூத்த சகோதரமில்லாதவன், நல்ல இடத்தில் வசிக்கும் சகோதரி ஒருத்தி பிரசவத்தால் அரிஷ்டமடைவாள், எல்லோருக்கும் மூத்த தம்பிக்கு பாலாரிஷ்டமுண்டு, காலாந்திரத்தில் நல்ல புத்திரனுடையவனாவான், பிறந்த கிரக தோஷத்தால் பாலாரிஷ்டமுண்டு.

(54) ஜென்ம லக்கினம் மகரம் (காந்தாம்சம்) ஆகி நாலாம் ஸ்தானாதிபனான குஜன் சிம்மாம்சத்தில் கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் இருபத்தோராவது வயதில் உத்திராயன காலத்தில் ஜாதகன் தாய் மரணமடைவாள்.

(55) ஜென்ம லக்கினம் மகரம் (காந்தாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் ஆறிலும், ஆறும் பாவாதிபன் எட்டிலும் இருந்தால்

ஜாதகன் பிதா கிரியையற்றவன், சூரியன் சிம்மாயனத்தில் வருங் காலத்தில் இவன் பிதா நாசமடைவான்.

(56) ஜென்ம லக்கினம் மகரம் (காந்தாம்சம்) ஆகி சுக்கிரன் சந்திராருடத்திலிருந்து லக்கினுதிபனுன சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் தனிகன், சீமான், அதிக தோழருடையவன், அனேக தாயாதிகளுடையவன், ஒன்பது சகோதாருடையவன், ஐந்து சகோதரிகளுண்டு, இவனுக்குத் தாய்மார் மூவராவார், சுகமுடையவன், ஜென்ம திசையில் சிற்றப்பனுக்கு அரிஷ்டமுண்டாகும், இவன் தாய்க்குச் சகோதரர் ஐவரில் இருவர் தீர்க்காயுளுடையவராயிருப்பார்கள், ஜாதகனுடைய தாய் அரிஷ்டத்திற்கு முந்தி ஜாதகனுடைய அம்மான் அரிஷ்டமடைவான்.

(57) ஜென்ம லக்கினம் மகரம் (காந்தாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் ஆறும் ராசியில் இருந்து சூரியனுடன் களத்திரகாரகனுன சுக்கிரன் கூடி இருந்தால் ஜாதகன் மனைவி கர்ப்பசிராவத்தால் வருந்துவான், அன்றிப் பிறந்தாலும் சிசுமரிக்கும்.

(58) ஜென்ம லக்கினம் மகரம் (காந்தாம்சம்) ஆகி சனி எட்டாமிடத்திலிருந்தால் ஜாதகனுக்கு ஜோதிடர் சாபகாரணமாக குழந்தைகள் மரிக்கும், எண்பத்தோர் பத சக்கரத்தைக் காலமறிந்தவனுக்குத் தானம் செய்ய சாந்தி உண்டாகும்.

(59) ஜென்ம லக்கினம் மகரம் (காந்தாம்சம்) ஆகி சூரியன் துலாத்தில் இருந்தால் ஜாதகனுக்குக் காலாந்தரத்தில் புத்திரப்பிராப்தி உண்டாகும்.

(60) ஜென்ம லக்கினம் மகரம் (சுந்தரியம்சம்) ஆகி குரு லக்கினத்தில் இருந்தால் ஜாதகன் நடுவயதில் பாக்கியமுடையவனுவான்.

(61) ஜென்ம லக்கினம் மகரம் (சுந்தரியம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் சந்திரன் ஏழாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் நீச்சப் பிரபு மூலத்தால் தனம் சம்பாதிப்பான்.

(62) ஜென்ம லக்கினம் மகரம் (சுந்தரியம்சம்) ஆகி ராகு ஏழாம் பாவத்தில் மீனும்சத்திலாவது அன்றி கன்னி, துலாத்திலாவது இருந்தால் ஜாதகன் தீர்த்தயாத்திரை, தேவதா உத்ஸவதரிசனம் இந்த பலன்களை அடைவான்.

(63) ஜென்ம லக்கினம் மகரம் (சுந்தரியம்சப்) ஆகி சந்திர லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன்

நித்தம் சுகமுடையவன், இருபத்தெட்டாவது வயதில் புதுவீடு கட்டு வான், விசேஷமாக பந்துவர்க்கத்தில் ருதுவான ஸ்திரீ சங்கம விருப்ப முடையவன்.

(64) ஜென்ம லக்கினம் மகரம் (சுந்தரியம்சம்) ஆகி சந்திரன் ஏழாம் பாவாதிபனைக் கூடி எட்டாம் பாவாதிபன் ஏழாம்பாவத்திலி ருந்தால் ஜாதகனுக்கு அவரவர் திசா அந்தர காலங்களில் அரிஷ்ட முண்டாகும், பிழைத்திடில் அறுபத்தொரு வயதுடையவனுவான், கோசாரத்தில் மிதுனத்தில் குரு வருங்காலம் தனம் சம்பாதிப்பான், சேனை, மந்திரி, ஜெனம் நேசமுடையவனும் அதன் மூலம் இஷ்ட சித் தியடைவான்.

(65) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 284-48 கலை முதல் பாகை 285-00 கலை வரையில்) ஆகி நாலாம் பாவாதிபன் ராகுவுடன் கூடினுல் ஜாதகன் தெற்கு வடக்கு வீதியில் கீழ்ப் பாகத்தில் வடக்கு வாயிலுள்ள வீட் டில் ஜெனனமாவான்.

(66) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் எந்த நவாம்சத்தில் எந்த ராசியம்ச திரிகோணத்தில் இருக்கிருனே அந்த நவாம்சத்திற் கேற்ற வீட்டு வாயிலில் ஜாதகன் ஜெனிப்பான்.

(67) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் பாபருடன் கூடினுல் ஜாதகனுக்கு வனந்தரத்திலுள்ள பட்டணத்தில் ஜெனனமாவது வாசமாவது உண்டாகும்.

(68) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம்) ஆகி லக்கி னத்திற்கு மூன்றும் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் சகோதர உற்பத்தி நாசமுடையவன், இளைய சகோதரனற்றவன், பிறந்தால் மரிப்பான், பூர்வபாகம் ஆனுல் மூத்த சகோதரன் ஒருவன் தீர்க்காயு ளுடையவனுயிருப்பான், அதிக சகோதரிகளுடையவன், சகோதரன் ஒருவனே உண்டு. உத்தராம்சம் ஆனுல் மூத்த சகோதரம் நாசமுடை யவன், இளைய சகோதரியும் மரிப்பாள், சகோதரர் அற்பம்.

(69) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம் உத்தராம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சூரியன், சனியின் அம்சத் தில் சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஜென்ம வருஷத்திலேயே இறப்பான், மூன்ருவது வயதில் சிற்றப்பனுக்கு

அதிக கிலேசமுண்டாகும், அரசன், மந்திரி இவர்களின் விரோதத்தால் சிறைச்சாலையில் அடைபடுவான், இடம் பெயரல், மனஸ்தாபம் இவைகள் உண்டாகும், ஐந்தாம் வயதில் அதிக பயமடைவான், சிற்றப்பனுக்கு அரிஷ்டம், இவன் தந்தை மந்திரி விரோதமுடையவன், பூர்வபாகமானால் தாய் தகப்பன் தீர்க்காயுள், வியாபார மூல ஜீவனம், அதிக தனம் சம்பாதிப்பான். உத்தராம்சம் ஆனால் இரண்டு, மூன்று தகப்பன் யோக முடையவன், பூர்வபாகத்தில் இரு சிற்றப்பன்மாரில் ஒருவன் இருதாரமுடையவனாவான்.

(70) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம்) ஆகி சிற்றப்பன் ஸ்தானாதிபனான செவ்வாய், சூரியனுடன் கூடியாவது பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் தகப்பன் சகோதர நாசத்தால் அதிகம் வருத்த மடைவான், சூரியன் அஷ்டகவர்க்கத்தில் எத்தனைப் பரல்களோ அத்தனை சிற்றப்பன்மார் தீர்க்காயுளாயிருப்பார்கள், பூர்வ பாகம் ஆனால் எல்லோருக்கும் மூத்த சகோதரன் பெரிய ரோகத்தால் வருந்துவான்.

(71) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபனான சந்திரன் மேஷத்தில் மிதுன நவாம்சத்திலிருந்தால் ஜாதகன் மூத்த சிற்றப்பன் மகன் இருதாரமுடையவன். உத்தராம்சமானால் தனம் சம்பாதிப்பதில் சமர்த்தன், முன் செய்த தீவினையினால் நடுவயதில் நோயால் வருந்துவான், எல்லோருக்கும் மூத்த தகப்பன் மனைவி பிதாமக வம்ச பாவத்தால் நோயால் வருந்துவாள், ஜாதகன் சிவந்து மெலிந்த தேகமுடையவன், எல்லோருக்கும் மூத்த தந்தையின் தம்பி அதிக புத்திரரும், பொருளும் நிறம்பியவனாவான், தாயாதிகளின் பொருளை அபகரிப்பான், பூர்வபாகம் ஆனால் எல்லோருக்கும் மூத்த பிதாவின் தம்பி சகோதரர்களை வஞ்சிப்பான், அவன் புத்திரர்களில் எவனாவது ஒருவன் தாயாதிகளின் பொருளை அபகரிப்பான், பித்த சுபாவமுடையவன், பாபி, கிரகசேஷ்டை பீடை யுடையவன், கெட்ட பிராமணனால் ஆரோக்கிய மடைவான், பயிர்த்தொழிலுடையவன், கொஞ்சம் ஸ்திரீலோலன், காமி, அனேக பெண்களை அணைந்ததனால் பாபமும், காலாந்தரத்தில் வியாதியுமுடையவனாவான், புத்திர புத்திரிகளுடையவன், இருதாரமுடையவன், இறந்த சந்தானமுடையவன், அரசாங்கத்தில் பிரசித்தன் மூன்று தாயுடன் கூடியவன், சுகமுடையவன், இரு சகோதரிகளுடையவன், பொருள் சம்பாதிப்பதில் சமர்த்தன், காலாந்திரத்தில் புத்திரப்பேறு யோகமுடையவன்,

சிற்றப்பனுக்கு இருபுத்திரருண்டு, தன் கோத்திரத்தில் இருவர் தத்து எடுப்பார்கள், ஒருவன் வெகு உயர்ந்த உன்னதமான பாக்கிய முடையவன், இவன் தந்தை தனிகன், சீமான், ஞாதிகளுக்குத் தனம் கொடுப்பான், ஜாதகன் நியாயமாகச் சம்பாதித்த பொருளு டையவன், இவன் தந்தையோ சிவந்த நிறமுடையவன், சகோதர சகோதரிகளுடன் கூடியவன், செவிடன், சந்தேக சுபாவமுடைய வன், ஜாதகன் தந்தை வாலிபத்தில் அயற் பெண்டுகளின் சேர்க்கை யாலான பாபமுடையவன், இவன் தகப்பன் சகோதரி ஒருத்தி நோயாளி, கிலேசமுடையவள், தரித்திரத்தால் வருந்துவாள், ஒரு புத்திரனுண்டு.

(72) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம்) ஆகி சிற்றப் பன் ஸ்தானாதிபனான குஜன், ரேகாம்சத்தில் ராகுவுடன் கூடி இருந் தால் ஜாதகன் சிற்றப்பன்மார் இருவர் அல்லது மூவர் நோயாளி களாயிருப்பார்கள், இவன் தந்தை புண்ணியம் செய்தவன், சிவபக் தன், புராணமறிந்தவன், சிவபூஜை செய்பவன், சகோதரர் மூலம் துக்க மடைவான், விசாரமுடையவன். உத்திராம்சம் ஆனால் ஜாதகன் சிற் றப்பன்மார் இருவர் புத்திரனில்லாததால் சஞ்சலப்படுவார்கள், ஆனால் அவர்களுக்கு ராஜயோகமுண்டு.

(73) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம்) ஆகி சிற்றப் பன் பாவமாகிய பதினோராம் பாவத்தைச் சுக்கிரன் பார்த்தால் ஜாதக னுடைய சிறிய தந்தை நல்ல வாகன யோகமுடையவனாவான்.

(74) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம் உத்தரபாகம்) ஆகி பிதா மகாதிபனான சுக்கிரன் ஸ்வக்ஷேத்திரத்தில் சூரியனுடன் கூடி நீச்சாம்சத்தில் இருந்தால் ஜாதகன் பிதா மகன் (பாட்டன்) பிர பலமானவன், மண்டலாதிபன், நரவாகன யோகமுடையவன், அனேக தேசங்களுக்குத் தலைவன், ஒரு சகோதரனுடன் கூடியவன், சுகமுடையவன், இருதாரமுடையவன், போகி, நாஸ்தீக ஆசாரமுடை யவன், விஷ்ணு கைங்கரிய தர்மம் செய்வான், அக்கிராரம் முதலிய தர்மம் செய்வான், விஸ்வாசமுடையவன், வைஷ்ணவப் பிரபுவைச் சேவிப்பான், வேறு கிரந்தத்தில் ஜாதகன் சிவபக்தியுடையவனென் றும், பிரபுக்கள் மூலம் அனேக கிராமங்களுக்கும் அதிபதித்தன்மை யுடையவனாவான் என்றும் இருபுத்திரர், இரு பெண்களுடன் கூடியவ னென்றும் காணப்படுகிறது, மேலும் ஜாதகனுடைய தகப்பன் சகோ

தரி ஒருத்தி வெகுகாலம் சுமங்கலியாய் இருப்பாள், இவள் ஜாதகனுடைய தகப்பன் மூலம் பாக்கியத்தாலும், கணவன் சுகத்துடனும் கூடியவளாவாள், காலாந்தரத்தில் தரித்திரமடைவாள், ஒருத்தி கிலேசமுடையவள், புத்திரசோகமுடையவள், சகோதர சோகத்தால் வருந்துவாள், பூர்வபாகத்தில் ஜாதகன் பிதா தீர்க்காயுளுடையவன், அனேக தாய்மார்களுடனும், புத்திருடனும், பொருளுடனும் கூடியவன், பெருந்தன்மை வாய்ந்தவன், குளம், தோட்டம் முதலிய தர்மம் செய்வான், சிவபூஜை செய்வான், புராணமறிந்தவன், நடுவில் பாக்கிய விருத்தியுண்டாகும், தேவப்பிராமண போஷகனுவான், புத்திர மூலம் சந்தோஷமும், மனைவி மூலம் கிலேசமு மடைவான், ஜாதகன் பிறப்பதற்கு முன்னமே பிதாமகனுன பாட்டன் நாசமடைவான், மாதாமகன் தரித்திரனுவான், இருதாரமுடையவன், சமர்த்தன், வேறு மனைவியிடம் புத்திரப்பேறு உண்டாகும். பூர்வபாகத்தில் இவன் தந்தை வாலிபத்திலே தன் வீட்டில் திருட்டுச் செய்கை செய்வான், கொஞ்சம் கெட்டவழியில் இறங்கியவன், பின்னுல் தாபமுடையவன், தர்மமுடையவன், அபவாதமுடைய மனைவியையுடையவன, சாது, சிலசமயம் மூர்க்ககுணமுடையவன், சிவபூஜை செய்வான், முதுமையில் புத்திரனுடன் சுகத்துடன் வாழ்வான், மூன்றுதரம் ஸேதுஸ்நானம் செய்து கெங்காஸ்நானபலனை அடைவான். இவன் தந்தை சுகமுடையவன், தனதான்யம் சமர்த்தியாக உடையவன், நகைவரவு, தன்னுடன் பிறந்த சகோதரர் பாக்கியமுடையவன், ஜாதகனுடைய பிதா மாதா தீர்க்காயுளுடையவராயிருப்பார்கள்.

(75) ஜென்ம லக்கினம் மகரம் (திரிலோக்யாம்சம்) ஆகி சுக்கிரன் லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் எட்டாம் பாவாதிபனுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு சுக்கிர திசையில் அதிக சுகம், வித்தியாப்பியாசம் முதலிய சுபம் உண்டாகும், ஜாதகனுக்குத் தனம் கிடைக்கும், சகோதரனுக்கு அரிஷ்டமுண்டாகும், இரண்டாம் திசையில் சுபபலன் நிச்சயமாக உண்டாகும், முன்பாதியில் அரச நேசமுடையவனுவான்.

(76) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 276-24 கலை முதல் பாகை 276-36 கலை வரையில்) ஆகி ஏழாம் பாவாதிபன் சர ராசியிலிருந்தால் ஜாதகன் கருத்த நிறமுடையவன், அக்கிராரத்தில் வசிப்பான்.

(77) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி சகோதர ஸ்தானுதிபனுன குரு சுக்கிரனுடன் கூடியாவது, பார்க்கப்பட்டாவது

இருந்தால் ஜாதகன் முன் பின் சகோதர மற்றவன், இரு சகோதரிக ளுடையவன், ஒருத்தி மாங்கலியத்துடன் சுமங்கலியாய் இருப்பாள். உத்திராம்சத்தில் பிறந்தவனுக்கு இரு சகோதரிகள் விதவைகளாவார்.

(78) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி மாதா ஸ்தானா திபனான குஜன் மிதுனாம்சத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் தீர்க்காயுளுடையவள், மூன்றும் திசா காலத்தில் ஏழாம் பாவாதிபன் புத்தியில் ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்டமுண் டாகும்.

(79) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி பாக்கியாதிப னான புதன், பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தன் மூன்றுவது திசையில் பிற்பாதியில் அதிக சௌக்கியமடைவான்.

(80) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி புத்திரஸ்தானா திபனான சுக்கிரன் மிதுனாம்சத்தில் சர லக்கினத்தில் இருந்தால் ஜாத கன் அற்ப சந்தான யோகமுடையவன். உத்திராம்சம் ஆனால் மூன் றுவது திசையில் காலாந்தரத்தில் புத்திரப் பேறு அல்லது வேறு தாரத்திடமாவது அடைவான்.

(81) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவா திபன் லோஹிதாம்சத்திலிருந்தால் ஜாதகன் அற்ப சந்தானமுடைய வன், இறந்த சந்தானம் அதிகம் உண்டாகும் யோகமுடையவன், பூர்வபாகம் ஆனால் முதுமையில் புத்திர சோகமடைவான்.

(82) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி வாகனாதிப னான குஜன் மிதுனாம்சத்திலிருந்து, சனியால் பார்க்கப்பட்டால் ஜாத கன் தன் புத திசையில் நல்ல வாகனமுடையவனாவான். உத்திராம் சம் ஆனால் அரசனைச் சேவிப்பான், நரவாகன யோகமுடையவன், சேனை, மந்திரி, ஜென சினேகிதமுடையவன், பிராமணன் மூலம் பொருள் வரவுண்டாகும், தனதான்யம் முதலிய லாபமுண்டாகும்.

(83) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம் பூர்வபாகம்) ஆகி ஜாதகன் சகட யோகமுடையவனானால் ஜாதகன் புத்திர நாசத்தால் வருந்துவான்.

(84) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி லக்கினத்திலி ருந்து ஒன்பதாம் பாவத்தில் பாபரிருந்து லக்கினாதிபன் இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் பிராணன் உள்ளவரையில் சுகவானாய் இருப்பான்.

(85) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் லக்கினுதிபனுன சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஜென்ம நக்ஷத்திரத்திற்கு இரண்டாவது நக்ஷத்திர திசா காலத்தில் பிதா அரிஷ்டமடைவான், பூர்வபாகம் ஆனுல் ஜாதகன் பிதா ஆபத்சந்நியாச யோகமுடையவனுவான், உத்தராம்சம் ஆனுல் தகப்பன் புத்திர கிரியையில்லாதவனுவான்.

(86) ஜென்ம லக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் இவ்வுலகில் புண்ணியாத்துமா, முடிவில் சுவர்க்க மடைவான். உத்திராம்சமானுல் பாப புண்ணிய பலன் சமமாகும், பூர்வபாகமானுல் அறுபத்திரண்டு வயது பரமாயுளுடையவனுவான்.

(87) ஜென்ம லக்கினம் மகரம் (துருவாம்சம் அதாவது லக்கின ஸ்புடம் பாகை 274-24 கலை முதல் பாகை 274-36 கலைவரையில்) ஆகி சனி கமலாம்சத்திலிருந்து லக்கினத்தில் பாபர் இருந்தாலாவது, அன்றி பார்த்தாலாவது ஜாதகன் சகோதரனற்றவனுவான்.

(88) ஜென்ம லக்கினம் மகரம் (துருவாம்சம் பூர்வபாகம்) ஆகி மிதுனத்தில் புதன் சூரியனுடன் கூடி இருந்தால் ஜாதகன் புத்திமானுகவும், சூரனுகவுமிருப்பான்.

(89) ஜென்ம லக்கினம் மகரம் (துருவாம்சம்) ஆகி சனி 'அபாம் பதி' ஷஷ்டியாம்சத்தில் இருந்தால் ஜாதகன் புத்திமான், எல்லாமறிந்தவன், சாத்துவிக குணமுள்ளவன், கோபமுடையவன், தர்மத்தை அழிப்பவன்.

(90) ஜென்ம லக்கினம் மகரம் (துருவாம்சம்) ஆகி சனி குரூர ஷஷ்டியாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தருமாத்மா, தன் காரியத்தில் கருத்துள்ளவன், உள்ளத்திற் கபடமுடையவன், காமி, பரந்த கண்களுடையவன். பராக்கிரமமுடையவன், சுதந்தரமுடையவன், இதரர்களுக்குத் துக்கந்தருவான், சீக்கிர கோபமுடையவன், தெளிந்த மனதுடையவனுவான்.

(91) ஜென்ம லக்கினம் மகரம் (துருவாம்சம்) ஆகி லக்ஷ்மி யோகமுடைய ஜாதகன் விவாகத்திற்குப் பிறகு சௌக்கியமடைவான், இருபது வயதுக்குமேல் சுகமுண்டு, சிற்றப்பனில்லை என்பர் சிலர்.

(92) ஜென்ம லக்கினம் மகரம் (துருவாம்சம்) ஆகி லக்கினத்திற்குச் சனி ஐந்தாம் வீட்டுக்கு ஐந்தாமிடத்தில் இருக்கும் விப்ர காலத்தில் ஜெனித்த ஜாதகன் காலாந்தரத்தில் தத்துப்புத்திரனால் புத்திரனடைவான்.

(93) ஜென்ம லக்கினம் மகரம் (துருவாம்சம் பூர்வபாகம்) ஆகி சந்திரன் கும்பத் திரிகோணத்திலிருந்து மிதுனம்சத்தில் சுபருடன் கூடினால் ஜாதகன் ராஜயோகமுடையவன், எழுத்து வித்தையில் தேர்ந்தவன், மண்டலாதிபன் வாயிலில் வேலை செய்பவருள் இவன் தலைவனாவான், இருபது வயதுக்குமேல் பாக்கியமடைவான், இவன் சுய பிரபலத்தால் தனம் வரும்.

(94) ஜென்ம லக்கினம் மகரம் (துருவாம்சம் பூர்வபாகம்) ஆகி பாக்கியாதிபனான புதன் பாபருடன் கூடினால் ஜாதகன் ராஜமுத்திரை தரித்தவன், பதினாயிரத்துக்கும் அதிகமான தனமுடையவன், மூன்று வாகன யோகமுடையவன், முடிவில் ஞானத்துடன் கூடி இருப்பான், அறுபத்தெட்டாவது வயதில் மரணமடைவான்.

(95) ஒராவது பாவம் மகரமாகில், ஜாதகன் நீண்டதேகமுடையவன், வாயு சரீரி, எப்பொழுதும் பாவத்தில் ஆசையுடையவன், தூர்த்தன், எப்பொழுதும் லோபச் செய்கையில் ஆசையுடையோன்.

(96) இரண்டாவது பாவம் கும்பமாகில் ஜாதகன் புஷ்பம், பழம், கிழங்கு இவைகளில் பிரீதியுடையவன், ஜலத்திலுண்டானவைகளால் தனப்பிராப்தி, உபகாரம் செய்பவன், சாமர்த்தியவான்.

(97) மூன்றாவது பாவம் மீனமாகில் ஜாதகன் பிறவியிலிருந்து தனவான், புத்திர மித்திரர்களுடன் கூடியவன், பிரியமாய்ப் பேசும் அழகிய மனைவியுடையான்.

(98) நான்காவது பாவம் மேஷமாகில் ஜாதகன் காற்கால் ஜீவனால் சுகம், தான் சம்பாதித்த வாகனம் முதலான யோகாதிகளுடன் கூடியவன்.

(99) ஐந்தாவது பாவம் ரிஷபமாகில் ஜாதகன் நல்ல அழகியும், காந்தியுடையவளும், சாமர்த்தியசாலியுமான பெண்ணை அடைவான்.

(100) ஆறாவது பாவம் மிதுனமாகில் ஜாதகன் ஸ்திரீகளுக்கு விரோதத்தை விருத்தி செய்வான், பாபியாகில் எப்பொழுதும் நீச ஜாதி ஸ்திரீகளை விரும்புவான்.

(101) ஏழாவது பாவம் கடகம் ஆகில் ஜாதகன் அழகியமனையாளுடையவன். குரூரனாகில் அயுதத்துடன் கூடியவள், சுபரிருக்கில் இரண்டு, மூன்று மனையாளுடையவனாவான்.

(102) எட்டாவது பாவம் சிங்கமாகில் ஜாதகன் வீட்டில் மரணமுண்டாகும், திருடனிடமிருந்தாவது, தேளாலாவது, பாம்பாலாவது விஷத்தால் மரிப்பான்.

(103) ஒன்பதாவது பாவம் கன்னியாகில் ஜாதகன் எப்போதும் அயலாரை அண்டுவதில் விருப்பமுள்ளவன், அதிகமாய்ப் பேசுபவன், குலாசார ஒழுக்கமற்றவன், பாசாண்டி (நாஸ்திகன்) தயையில்லாதவன்.

(104) பத்தாவது பாவம் துலாமாகில் ஜாதகன் வியாபாரத்தால் விசேஷ பொருள் பெருக்குடையவன், தர்ம சுபாவமுள்ளவன்; தயையுடன் கூடியவன், வினயத்துடன் பேசுபவன்.

(105) பதினோராவது பாவம் விருச்சிகமாகில் ஜாதகன் மந்திர யந்திரங்களில் தேர்ந்தவன், தந்திரத்தால் தனவரவுடையவன், நிலையில்லாதவன், கபடன்.

(106) பன்னிரண்டாவது பாவம் தனுசு ஆகில் ஜாதகன் அரசாங்கத்தால் தன வரவுடையவன், சத்துருக்கள் அழிவர், எப்போதும் வில்லட்பு பயிற்சிகளில் பிரியன்.

(107) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் சூரியன் லக்கின பாவத்திலிருந்தாலும், லக்கின பாவத்தைச் சூரியன் பார்த்தாலும், லக்கின பாவாதிபன் ஒன்பதாம் பாவத்தில் இருந்தாலும் ஜாதகனுக்கு பெரிய நதிப்பிராந்தியத்தில் பெரிய கிராமத்தில் அக்கிரகாரத்தில் ஜெனனம் நேரிடும். உத்தராம்சத்தில் ஜெனித்தவனுக்குத் தான் மூன்றுவது கர்ப்பத்தில் பட்டணத்தில் ஜெனனம் நேடும்.

(108) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி சந்திரன் குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் சந்திரன் பார்க்கப்பட்டாலும் நான்காம் பாவாதிபன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவ காலத்தில் வேதனை கொஞ்சமாக இருக்கும்.

(109) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் சூரியன் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்

பிரசவ காலத்தில் விசேஷ வேதனையடைவள், தாய்க்குப் பீடையும், ஜாதகனுக்குப் பாலாரிஷ்டமுங் கொஞ்சம் உண்டாகும், ஜாதகனுக்கு ஜென்ம திசையில் பாலரோகம் ஐந்தாண்டு வரையிலும் இருக்கும்.

(110) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருக்க ஒன்பதாம் பாவாதிபன் இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், ஜாதகனுடைய தகப்பன் தன் பிதாவை விட மேலான குணமுடையவன், விஷ்ணு, சிவ பக்தியுடையவன், நற்செய்கை, நல்ல ஆசாரம் முதலியன உடைய புண்ணியாத்துமா, பயிர்த்தொழில் செய்பவன், சுகி, சிலக்ஷேத்திரங்களில் பிரசித்தியுடையவன், அக்கிரகாரத்தில் வாசம் செய்பவன், பாலியத்தில் அற்பசுகமுடையவன், மத்திய அந்திய வயதுக்களில் பாக்கியமடைபவன், விருத்தாப்பிய வயதில் புத்திர யோகமுடையவன், பசு, க்ஷேத்திர முதலிய சமிருத்தியுடையவன். தன் ஜெனங்களிடம் பிரசித்தியுடையவன், (பஞ்சயக்ஞ) ஐந்து யாகமும் செய்பவன், ஜாதகனுடைய ஐந்தாம் திசையில் ஜாதகனுடைய பிதா மரிப்பான்.

(111) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகிச் சந்திரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும், தன் உச்சத்தில் குருவுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய தாய்க்குச் சுகமுண்டாகும்.

(112) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்)ஆகி சந்திரன் தன் உச்சத்தில் மகர நவாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் சாத்துவீக குணமுடையவள், தாய் வம்சவிருத்தியுடையவள், தன் குலத்தில் மேன்மையானவள், தாயினுடைய புண்ணிய வசத்தால் பாக்கியம் உண்டாகும், ஜாதகனுடைய ஐந்தாவது திசையில் தாய் மரிப்பாள்.

(113) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபன் வலுத்து இருக்கச் செவ்வாய் இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய சகோதரருக்குச் சுகமுண்டாகும், ஜாதகனுடைய பின் சகோதரரிருவர் சௌக்கிய முடையவர்களா யிருப்பார்கள், சிலர் ஜாதகனுக்கு மூன்று சகோதாருண்டென்று சொல்லுகிறார்கள், சகோதரிகள் சௌக்கிய முடையவர்கள், ஜாதகனுடைய பின் சகோதரர்கள் நல்ல யோகமுடையவர்கள், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவர்கள்.

(114) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகிச் சந்திரன் பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் ராஜனுகவாவது அல்லது அரசனுக்கு மேற்பட்ட தன முடையவனுகவாவது இருப்பான், நீச அரசனுடைய ராஜியத்தில் பிராமணனுல் நல்ல யோகம் அடைவான்; அரசாங்கத்தில் சுத்த பாபி (உலோபி) யாக இருந்துகொண்டு எல்லோருக்கும் பயத்தை உண்டுபண்ணுவான்.

(115) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி உச்சனுன சந்திரனுடன் குரு கூடி சகோதரஸ்தானத்திற்கு மூன்றுமிடத்திலிருந்தால் ஜாதகனுடைய இளைய சகோதரன் பிரசித்தியுடையவன், மேம்பாடான உத்யோக ஜீவனமுடையவனுவான்.

(116) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகிச் சந்திரன் ஜாராவஸ்தையிலிருந்தால் ஜாதகன் வியபிசார முடையவனுகவும், சூரனுகவும், சேர்க்கவும், கலைக்கவும் தைரியமுடையவனுக யிருப்பான், வேறு சகோதரனும் இப்படியே யிருப்பான், தனம் சம்பாதிப்பதில் சமர்த்தன், உத்தியோகத்தால் பொருள் சம்பாதிப்பான், க்ஷேத்திர, கிராம விசாரணை செய்பவனுவான்.

(117) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் விசேஷ சிவ பக்தியுடையவன், நல்ல ஆசாரச் செய்கையுடன் கூடியவன், தேவப் பிராமண பக்தியுடையவன்.

(118) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகிச் சூரியன் லக்கின கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் கொஞ்சம் குள்ளமானவன், தாமரைக் கண்களுடையவன், பல ஜாதி ஸ்திரீ சேர்க்கையுடையவன், கொஞ்சம் அனுசாரமுடையவன், துஷ்டர்களிடத்தில் துஷ்டபுத்தியுடையவன், குரூரமானவர்களிடத்தில் குரூரமாய் நடந்துகொள்வான், கொஞ்சமாய்ப் புசிப்பவன், மர்மமான மனமுடையவன், காமீ, அளவாய்ப் பேசுபவன், பெரியோர்களிடம் பிரியமுடையவன், (நல்லோரை அறிந்து) நல்வழியில் சிலவு செய்பவன், தியாகி, கெம்பீர மனதுடையவன், இருபத்தைந்து வயதிக்குமேல் பிரசித்தியும், முப்பது வயதுக்குமேல் நல்ல பாக்கியமும் அடைவன், ராஜாங்க ஜென சினேகத்தால் பிரபல உத்தியோக ஜீவன மடைவான், சகோதரனுல் சுகமடைவான், முப்பத்தைந்து வயதுக்குமேல் விசேஷ முடையவன், ஜென்ம திசையில் பாலரோகம் உண்டாகும், ஐந்து

வருஷம் கழித்து சுகமடைவான், ஆருவது வயதில் அக்ஷராப்பியாஸம் அடைவான், (பிராமண காலத்தில் ஜெனித்தவனுக்கு எட்டாவது வயதில் உபநயனம் நடக்கும்.) இரண்டாம் திசையில் ஜாதகனுக்கு விவாகம் நடக்கும், சிலர் மூன்ரும் திசையில் நடக்கும் என்றும் சொல்லுகிருர்கள், விவாகத்துக்குப் பிறகு சுபமும், பிரசித்தியும் பெறுவான், விபத் திசையின் பிற்பாதியில் சுயப் பிரபலமடைவான், ஜாதகன் தன் ஜென்ம தேசத்திலேயே விவாகமடைவான், ஜாதகன் மனைவி நல்ல ரூபவதியாயிருப்பாள்.

(119) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி லக்கின பாவத்திற்கேழில் பாபக்கிரக மிருந்தால் ஜாதகனுடைய மனைவிக்குப் பீடையுண்டாகும், ஜாதகன் அதினல் விசாரமடைவான், அந்த ஏழாம் பாவாதிபதி பாபக்கிரகத்துடன் கூடி ஜாதகத்தில் எவ்விடத்திலிருந்தாலும் ஜாதகன் இரண்டு மனைவி அடைபவன், அப்படி ஏழாம் பாவாதிபதி பாபருடன் கூடியும், லக்கினத்திற்கேழில் பாபக்கிரகமுமிருக்க ஜாதகன் ஒரே தாரத்துடனிருந்தால் ஜாதகன் மனைவி கர்ப்ப காலத்தில் சங்கா தோஷத்தால் பீடிக்கப்படுவள், ஏழாம் பாவத்தில் ராகு இருந்தால் கர்ப்பப்பையில் புழுக்களிருக்கும்.

(120) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் அல்லது ஒன்பதாம் பாவத்தில் சனியிருந்து வந்தியாம் சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் மனைவி மலடியாகிக் கிலேசமுற்றிருப்பாள், மேற்படி சனி குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் மனைவி வெகுகாலம் கடந்து பிரசவிப்பவள்.

(121) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்து குரு ஐந்தாம் பாவத்திலிருக்கச் சனி ஐந்தாம் பாவமல்லது ஒன்பதாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்குச் சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும், முன் ஜென்மாந்தரத்தில் மகாத்துமாவான ஜோதிஷ பிராம்மணனுடைய சாபத்தினல் ஜாதகனுடைய சந்ததிக்கு இடைஞ்சல் உண்டாகும், ஜாதகனுடைய ஏழாம் பாவத்தில் ராகு இருந்தால் அந்த தோஷத்திற்காக நாக சாந்தி செய்யவேண்டும், பிராம்மண சாபத்தின் பொருட்டுச் சாந்தியாக நாக சர்ப்பத்தை ஆபரணமாக பூண்ட (சிவாகாரமுள்ள) சிவ சொரூபமான சிவலிங்கத்தை நாகாபரணத்துடன் பிரதிமை செய்து சிவ கல்பத்திற்குச் சொன்ன விதிப்படி சொர்ணத்தால் செய்யப்

பட்ட முன் சொன்ன சிவலிங்கத்தை சிவபெருமானின் பிரதிமையை நன்றாக அறிந்த ஜோதிஷனைக் கொண்டே ஊழ்வினை யறிந்து நன்கு பூஜித்து ஜோதிஷனுக்காகத் தானம் ஜோதிடனுக்கே செய்ய வேண்டும், ஐந்தாம் பாவத்தில் சந்திரனிருந்தால் நல்ல புத்திமானுனவன், ஸ்ரீசந்தான கோபாலனையும் அர்ச்சித்துப் பூஜித்து தானம் செய்ய வேண்டும், வேறு சிலர் பர்வத ராஜன் புத்திரியான பார்வதி தேவியின் நாதனுன சிவபெருமானை அர்ச்சனை செய்து சுப்ரமணிய விரதமும், வெள்ளிக்கிழமை விரதமும், ஷஷ்டி திதி விரதமும், விதானையுடன் ஸந்தான கோபாலப் பிரதிமை தானமும் செய்து, நாக சாந்தியும், சேது முதலிய சமுத்திர ஸ்நாநமும், பலபல புண்ணிய தீர்த்த ஸ்நாநமும் செய்வதாலும், நாக சாந்தி செய்து ஸகல பூஷணங்களும் பூட்டப்பட்ட முன் சொன்ன சொர்ண சிவபெருமானின் லிங்கப் பிரதிமையை தானம் செய்வதாலும் சீக்கிரத்திலேயே நல்ல புத்திரனை அடைவான், இந்த சாந்தியை ஜாதகனுடைய ஐந்தாம் திசையில் செய்தால் நல்ல புத்திரனை ஜாதகன் அடைவான், ஒரே ஒரு புத்திரனும், ஒரு புத்திரி யல்லது இரண்டு புத்திரியுமாவது பிறப்பார், ஐந்தாம் திசையில் ஜாதகன் விசேஷ பாக்கியம் அடைவான்.

(122) ஜென்மலக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி ஜாதகனுக்கு நான்காம் திசையாக ராகு திசை வந்தால் அவன் திசையில் பூர்வபாகத்தில் அற்பசுகமும், பிராமணனுல் கொஞ்சம் சுகமும், அரசாங்கத்தில் பிரசித்தியும், நீச பிரபலகாலத்தில் ஜாதகனுக்கு யோகப் பிரபலமும், வியாபாரலாபமும், பிற்பாதியில் அதிகசுகமும், சகோதரனுடைய மேம்பாடும், மேற்படி திசை சுக்கிர புத்தியிலிருந்து ஜாதகனுக்கு நல்ல யோகமும், பூர்வபாகத்தில் சில கிராமாதிகாரமும், மத்திய பாகத்தில் கொஞ்சம் கஷ்டமும், ராஜ விரோதமும், சிறை வாசமென்கிற பயமும், நீச அரச விரோதத்துடன் உண்டாகும், ஜாதகன் சகோதரனுல் சுகமடைவான், பிறகு விரோதம் சரியாய் விடும், க்ஷேம திசையில் பிற்பாதியில் அனேக கிராமாதிகாரமும், உத்தியோக வாகன சித்தியும் நீச அரசனுல் உண்டாகும், பல தேசங்களில் பிரசித்தியும், அரசாங்கத்தில் பிரசித்தியும், சந்திர புத்தியில் விசேஷ மேம்பாடான உத்தியோகமும், சந்திர புத்தியைப் போலவே செவ்வாய்ப் புத்தியிலும் உண்டாகும், இந்த க்ஷேமதார திசையில் ஜாதகனுக்குப் புத்திரனில்லாத விசாரம் உண்டாகும்.

(123) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி ஐந்தாம் திசையாகக் குரு திசைவந்தால் ஜாதகனுக்கு அத்திசையில் யோகப் பிரபலமும், பல்லக்கு, ஆபரணம் முதலிய லாபமும், நீச அரசனால் சுகமும், பாக்கிய விருத்தியும், தன்னுடைய புக்தியில் லிங்க தானத்தால் கர்ப்பாதானமும், சகோதரப் பிரபல காலத்தில் அநேக கிராம அதிகாரமும், இரண்டு வாகனமும், அதிக சம்பத்தும், தன் புக்தியில் புத்திர லாபமும், சனி புக்தியில் நல்ல யோகமும், புத்திரன் பிறந்த பிறகு வாகன உத்தியோக பாக்கிய லாபங்களும், பல தேசங்களில் பிரசித்தியும், தன் தேசத்தில் கீர்த்தியும் உண்டாகும், தேவி கேஸரீயோகத்தில் ஜெனித்தவனுக்குக் குரு திசையில் விசேஷ சம்பத்தும், க்ஷேத்திர, கிராம அதிபதியாகி பசு, தானியம் முதலிய சமிருத்தி யுண்டாகும், க்ஷேம திசையிலும் இதுபோல் க்ஷேத்திரலாபமும், நல்ல யோகமும் உண்டாகும், யோககாலத்தில் தகப்பன் அரிஷ்டமும், கேது புக்தியில் சூரியனுடைய அந்தர காலத்தில் கொஞ்சம் கொஞ்சம் யோகபங்கமாகும், சீக்கிரத்தில் யோகப் பெருக்குண்டாகும், இந்த ஐந்தாம் திசையில் சுபமே நடக்கும், ஸாம்ராஜ்ப யோகத்தில் மகர லக்கினத்தில் பிறந்தவனுக்கு நல்ல பாக்கியமுண்டாகும், சந்திரன் சாம்ராஜ்யாம்சத்தில் இருந்தாலும், கேஸரீ யோகத்தில் பிறந்தவன் ஸ்திரீ போகமுடையவன், புண்ணிய நதிகள் தங்கள் (கிழக்கிலிருந்து மேற்கே போகும் ஆற்றுக்குப் பெயர்.) இவற்றில் ஸ்நாநம் செய்வதில் எண்ணம் கொண்டு யாத்திரை சுகமாய்ச் செய்பவனும், மாதுரியமானவற்றில் ருசியுடையவனும், சகோதரனுடன் ராஜ சேவியாகவும், பணக்காரனுகவும், தியாகியாயும், வாகனமுடையவனுகவும், பிரசித்தனுகவும், வைபவமுள்ளவனுகவும், புகழுள்ள மனைவியிடம் சுகமுள்ளவனுகவும், எப்போழுதும் அன்னதானம் செய்பவனும், வெகுமான ஜீவனமுடையவனும், கெம்பீரமும், இனிமையும் உள்ள அரசனைப் போலும் நல்ல புத்திரனை யுடையவனும், அரச சபையில் நன்கு பூஜிக்கப்பட்டவனும், சம அங்கமுடையவனும், புஷ்டியுடையவனும், நல்ல முகமுள்ளவனும், தயாளுவாகவு மிருப்பான். ஆயுளும் தனமும் உடையவன், பிரத்தியத்தார திசையில் எப்பொழுதும் சுபமும், எப்பொழுதும் சம்பத்துடையவனுகவுமிருப்பான், திசையின் முடிவில் சகோதரனுடன் கொஞ்சம் துவேஷமும், பிறகு கடும்பகையும் உண்டாகும்.

(124) ஜென்ம லக்கினம் மகரம் (சுப்பிரபாம்சம்) ஆகி ஆருவது திசையாகச் சனி திசை வந்தால் ஜாதகன் க்ஷேத்திரமூலம் அதிக சுக

முடையவனும், புத்திரனல் சம்பாத்திய முள்ளவனுகவும், உத்தம மான சம்பத்துடையவனுகவும், எப்பொழுதும் அன்னதானம் செய்ப வனுகவும், சந்தோஷமுள்ளவனுகவும், வீட்டில் தானிய வரவும், பசு விருத்தியும், இருபதாயிரம் தனமுள்ளவனுகவும், க்ஷேத்திர வியாபார தனமுடையவனுகவும், சனி திசை செவ்வாய் புக்தியில் தன் புத்திர னுக்குப் புதையல் தனம் கிடைத்தலும், தர்ம மார்க்கத்துடன் கூடி யும், * பஞ்சயெக்கிய பரனுகவும், குளம், உத்தியானம், தர்மம் முதலி யன செய்பவனும், தனுதிபன் திசையில் தன் புத்திரப் பிரபலமும், சனி திசை செவ்வாய் புக்தியில் மனைவி மரணமும், ஜாதகனுக்கு ராகு திசையில் மரணமும் உண்டாகும்.

(125) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி சுக்கிர திரிம்சாம்சத்தில் விப்பிர காலத்தில் ஜெனித்த ஜாதகன் தான் சீமந்த புத்திரனுக அல்லது இரண்டாவது கர்ப்பத்தில் ஜெனித்தவனுகவும், சுகமுடையவனுகவும், வெளுப்பு நிறமுடையவனுகவும், ஒண்டியாயும், சகோதா ஈனனுகவும் இருப்பான்.

(126) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி கேந்திரராசியிலிருந்து சுபாம்சத்தில் சுபரா லும் பார்க்கப் பட்டிருந்து, நான்காம் பாவாதிபதி தன் உச்சாம்சத்தில் இருக்க ஜெனித்த ஜாதகனுக்கு மஹா நதிப்பிராந்திய தேசத்தில் கிழக்கு மேற்கு வீதியில், வடக்குப் பாகத்தில் உள்ள சிவாலய சமீபமான தாய் வீட்டில் அல்லது நான்காம் பாவாதிபதி எந்த நவாம்சத்தில் எந்த ராசி (நாத) அம்சத்தில் கூடியிருக்கிருனே அந்த நவாம்சக்கிரகத் துக்குடைய (திக்கில்) வாயிற்படியுள்ள வீட்டில் ஜாதகனுடைய ஜெனனமானது சம்பவிக்கும். பூர்வபாகத்தில் பிறந்த ஜாதகனுடைய தாய் பிரசவ காலத்தில் கொஞ்சம் வேதனையுடையவள், ஜாதகன் வடக்குத் தெற்கு வீதியில் மேற்குப் பார்த்த வாயிற்படியுள்ள வீட் டில் ஜெனித்தவனுவன். பூர்வபாகத்தில் பிறந்தவனுக்குப் பாலாரிஷ் டம் இல்லையென்றும், உத்திராம்சத்தில் பிறந்தவனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டம் ஏற்படுமென்றும் எண்ணப்படுகிறது.

---

* பஞ்சமகா யெக்கிய மென்பது (1) தேவ யக்கியம். (2) பிதுர் யக்கியம். (3) பூத யக்கியம். (4) மநுஷ யக்கியம். (5) பிரம்ம யக்கி யம், என ஐந்து வகைப்படும். இது பஞ்சமகா எக்கிய மென்பதின் பொருள்.

(127) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்தில் சர ராசியில் கேந்திர ராசியிலிருக்கப் பிறந்தவனுக்குத் தாய் தகப்பன் தீர்க்காயுளுடன் தேகபுஷ்டியும், சுபமும் உள்ளவர்களாவர், தாய் வம்சத்தில் சுபமுள்ளவன், தகப்பன் வழிப்பாட்டி நாசமடையச் செய்பவன், மிருதுவான வசியமுள்ள தேகமுடையவன், தாமரை இதழ் போன்ற கண்களுடையவன், கொஞ்சமாய்ப் புசிப்பவன், மர்ம மனமுடையவன், கொஞ்சம் வாய்ப் பேச்சில் ஒழுக்குடையவன், குணமுடையவன், வைதீக ஆசாரமுடையவன், தர்மாத்துமா, கொஞ்சம் லோப குணமுடையவன், விசேஷ விஷ்ணு பக்தியுடையவன், வைஷ்ணவ ஆசார தர்மமுடையவன், திரவியசம்பாதனை யுடையவன், ஸ்ரீமான், சகோதரரில்லாதவன்.

(128) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகிச் சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், ஜாதகன் பிதா சகோதரக்குறைவுடையவன், மூன்று சகோதரிகளுடன் கூடியவன், தானம் கொடுக்கும் குணத்துடன் கூடினவன், வைதீக ஆசார தர்மமுடையவன், வேதாத்தியன சம்பத்துடையவன், நியாயத்துடன் சம்பாதித்து நல்ல ஜீவனமுடையவன். எப்பொழுதும் நல்ல ஆசாரச் செய்கையுடையவன், மத்திய வயதில் பாக்கிய முடையவன்.

(129) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சனியின் அம்சத்தை சூரியன் அடைந்திருந்தால் ஜாதகன் கொஞ்சம் மந்தபுத்தியுடையவன், புத்திரவான், தனவான், புத்திமானுகியும், மத்திய வயதுடையவனுகியும் இருப்பான்.

(130) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபன் செவ்வாய் இரண்டாம் பாவத்தில் ராசியிலும், நவாம்சத்தில் தன் உச்சாம்சத்திலும் இருந்து, புத, சுக்கிரர்களுடன் கூடியிருந்தாலும், புத சுக்கிரர்களால் செவ்வாய் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தாய் வெகுகாலம் ஜீவித்திருப்பாள், தன் தாய் கொஞ்சம் ரோக சரீர முடையவள், சகோதரருடன் கூடியிருப்பவள், தகப்பன் சௌக்கிய மில்லாதவளும், சகோதர நாசத்தால் துக்கிப்பவளுமாவாள், செவ்வாயைச் சனி பார்த்தால் தாய் வம்சத்தில் ஒரு கொலை தோஷம் ஏற்பட்டிருக்கும்.

(131) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி ஜாதகனுடைய தகப்பன் வழிப் பாட்டன் ஸ்தானதிபதியான ஐந்தாம் பாவாதிபனுன சுக்கிரன் புத நவாம்சத்தில் புதனுடன் கூடியிருந்து சனியால் பார்க்கப் பட்டிருந்தால் ஜாதகனுடைய பாட்டன் நீண்ட ஆயுளுடையவன், ஷை பாட்டன் பிரசித்தி பெற்றவன், சகோதரனில்லாதவன், கொஞ்சம் ரோகமுள்ளவன், புத்திரவிசனத்தால் பீடிக்கப் படுபவன், அயலாருக்குக் கொஞ்சம் உபகாரம் செய்பவன், பஞ்ச எக்கியம் செய்வான், நல்ல ஆசாரமுடையவன், தர்ம சாஸ்திரம் கற்றவன், ஆஸ்திகன், சத்தியமுடையவன், தர்மமறிந்தவன், லோப சுபாவமுடையவனுயிருந்தாலும் தர்மமுடையவன், பணம் சம்பாதிப்பதில் சமர்த்தன், ஸ்ரீமான், சாதுக்களுக்கு உபகாரம் செய்வான், (எதி,) பெரியோரிடம் பக்தியுடையவன், பாலிய சௌக்கியத்துடன் கூடினவன், மத்திய வயதில் சோகமுடையவன், அந்திய வயதில் சௌக்கியமும், சுபமுமுடையவன், புத்திரனுல் நல்ல சந்தோஷமுடையவன், பேரன் பிறப்பை பார்க்கும் சம்பிரம முடையவன், ஷை பாட்டன் நல்ல பரிசுத்த முடையவன், ஆபத் சன்னியாசத்தால் மரணத்தின் பிறகு பிரம்மலோகம் அடைவான், ஜாதகனுடைய சம்பத் திசையில் இந்த பாட்டன் மரித்துவிடுவான்.

(132) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கினுதிபதியாவது அல்லது சந்திரனுவது வர்க்கோத்தமத்தில் பதின்மூன்றுவது சோடசாம்ச பாகத்தில் இருக்கப்பிறந்த ஜாதகனுக்குக் கேந்திரத்திரிகோண உபசய ஸ்தானங்களில் அதாவது ஒன்று, நான்கு, மூன்று, ஆறு, பத்து, ஏழு, ஒன்பது, பதினென்று, ஐந்து முதலிய ஸ்தானங்களில் பலமுடையவர்களாக முன் சொன்ன லக்கினுதிபதியோ, சந்திரனே முன் சொன்ன கலாம்சபாகத்தில் இவர்களில் ஒருவரிருந்தால் ஜாதகன் நல்ல வித்துவானுகவும், நல்ல போகியாகவும், அரசனுகவும் இருப்பான்.

(133) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் லக்கின பாவத்தில் சுபக்கிரக மிருந்தாலும், லக்கின பாவத்தைச் சுபக்கிரகம் பார்த்தாலும் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை சொற்பமாயிருக்கும். உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவ வேதனை அதிகமாகவும், கொஞ்சம் சூதி தோஷபயமும், சந்திரன் பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டால் தாய்க்

குப் பீடை கொஞ்சமும், ஜாதகனுக்குப் பாலரோகபயமும், மாந்த சுர பயமும் உண்டாகும்.

(134) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்தில் பலத்துடனிருக்க, எட்டாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் சுபக்கிரகத்துடன் கூடியிருந்து, சுக்கிரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் எல்லா தோஷங்களும் விலகப்பெற்றுச் சுகமடைவான், ஜாதகன் மத்தியாயுள் யோகமுடையவன், அறுபத்தொரு வயது வரை ஜீவித்திருப்பான்.

(135) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகிச் சூரியன் லக்கின பாவத்தில் சுக்கிரனுடனும், ஒன்பதாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், ஜாதகனுடைய பாட்டனும் தீர்க்காயுளுடையவன், ஜாதகனுடைய தகப்பன் சாந்த சுபாவமுடையவன், குணமுடையவன், சகோதாருடன் கூடியவனுயிருந்தால் சகோதர க்ஷீனனுகி விடுவான், ஒண்டியாய் விடுவான், ஸ்ரீவைஷ்ணவ மதத்தை அடைபவன், தேவ பிராமண விசுவாசமுடையவன், தான் பிரசித்த விவேகமுடையவன், ஒன்பதாம் பாவாதிபன் சூரியனுடன் கூடியிருந்தால் சேர்க்கைக்குடைய புத்திமான், சேர்க்கவும், அழிக்கவும் சாமர்த்திய முடையவன், சிநேக துரோகம் செய்பவன், பரஸ்திரீ சேர்க்கையுடையவன், காமீ, அன்னிய ஸ்திரீ சேர்க்கையிலேயே புத்தியுடையவன், எழுதுவதிலும், தனம் சம்பாதிப்பதிலும் சமர்த்தன், பிதுரார்ஜித தனமுடையவன், அயலார்களுடைய ரகசியங்களை உடைத்துவிடுவான், வெளிதேசத்தில் பிரசித்தியுடையவன், மிலேச்ச அரசாங்கத்தில் பொக்கிஷ அதிகாரியாவன், அரசனுல் வெகுமானிக்கப்பட்டவன், பிரபல மேம்பாடான உத்தியோக சித்தியுடையவன், பிரபுப் பிரீதி விசேஷமாயுடையவன், வாகனம் முதலான நல்ல யோகமுடையவன், அரசனுக்கும், மந்திரிக்கும் சந்தோஷமானவன், தேவ க்ஷேத்திரத்தில் பிரசித்தமுடையவன், தான் தர்மகர்த்தா ஆவான், விஷ்ணு கைங்கரிய தர்மமுடையவன், விருத்தாப்பிய வயதில் தர்மபுத்தி யுடையவன், புத்திர மூலம் சுகமடைவான், கடைசி வயதில் ஞானமுடையவன், ஜாதகனுடைய மூன்ரும் திசையில் பிதா மரிப்பான்.

(136) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி செவ்வாய் லக்கினம் தவிர்த்து மற்ற கேந்திர திரி

கோணங்களிலிருக்க சந்திரன் நீச ராசியிலிருந்தால் ஜாதகன் தாய் மூலம் விசேஷ சௌக்கியமுடையவன், தாய் குணமுள்ளவள், சாது, கணவனுடைய மனம் கோணாமல் நடப்பவள், எப்பொழுதும் அன்ன தானம் செய்வதில் பிரீதியுடையவள், சகோதர சௌக்கியமுடைய வள், வம்சவிருத்தியுடையவளும், பாக்கிய முள்ளவளும், புத்திர புத் திரி யுடையவளும் ஆவாள், ஜாதகனுடைய விபத்தார திசையில் தாய் மரிப்பாள்.

(137) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி மூன் றும் பாவாதிபதி குரு சுயக்ஷேத்திரத்தில் இருந்து செவ்வாயால் பார்க் கப்பட்டால் ஜாதகனுக்கு இரண்டு மூத்த சகோதரர்கள் உண்டு, பின் சகோதரர்கள் இல்லை, இரண்டு சகோதரிகள் சௌக்கியத்துடனும், புத்திர புத்திரிகளுடனும் கூடி சுகத்துடன் இருப்பார்கள், ஜாதகனு டைய மூத்த சகோதரர்கள், நல்ல யோகமுடையவர்கள், மூத்த சகோதரன் அரசாங்கத்தில் பிரசித்தியுடையவர்கள், நீச அரசாங்கத் தில் வெளிதேசத்தில் கியாதியுள்ள கீர்த்திவுடையவன், எல்லா சகோ தரருக்கும் மூத்த சகோதரனுக்கு நேரிளைய சகோதரன் ஜாதகனுக்கு (நேர் மூத்தவன்,) மிலேச்ச அரசால் சுகமுடையவன், அந்த வழியாக எப்பொழுதும் பிரமுகர்களிடத்தில் கோபமும், சௌரியமும், கீர்த் தியுமுடையவன், அஸஹாய சமர்த்தன், பிரபுக்களுக்குப் பிரீதியை வளர்ப்பவன், தேசாந்தரத்தில் நற்கீர்த்தியுடையவன், அன்னிய அர சர்களுக்கு விரோத காரியம் செய்பவன், தன் அரசாங்க காரியத்தில் சமர்த்தன், வெகுதனமுடையவன், கீர்த்தியுடையவன், சுகமுடை யவன்.

(138) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி மாளவி யோகத்தில் புததிரிம்சாம்சத்தில் ஜெனித்த ஜாதகன் வெளுப்பு நிற முள்ளவன், நல்ல அறிவாளி, அதிருஷ்டசாலி, மேதாவி, பொறுமை யான சுபாவமுடையவன், சுகி, பாலியம் முதல் சௌக்கிய முள்ள வன், தாய் தகப்பன் சுகத்துடன் கூடினவன், விஷ்ணு பக்தி, மதம் இவற்றையுடையவன், மதாச்சாரமுடையவன், வைஷ்ணவ ஆசார முடையவன், தேவப்பிராமண பக்தியுடையவன், உபாயமுடையவன், (சதுரன்,) நான்குமறிந்தவன், கல்வியுடையவன், இனிமையாய்ப்

பேசுவான், வினயமுடையவன், தர்மத்தைப் பரிபாலிப்பான், அநேக சாஸ்திரங்களில் எப்பொழுதும் பிரியமுடையவன், நன்மை, தீமை யறிந்த விவேகி, குரு பக்தியுடையவன், நல்ல ஆசார செய்கையுடைய புத்திமான், நல்ல வழியில் நல்லோருக்குச் சீலமுடன் தானம் செய்ப வன், அதிகமான (உஷ்ண) சூட்டு வாயுவுடையவன்.

(139) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி லக் கின பாவத்துக்கு இரண்டாம் பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகன் காமியாயும், போகத்திலேயே புத்தியுடையவனாகவு மிருப்பான்.

(140) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி பத் தாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் ராஜ சேவை செய்து ஜீவிப்பவன், நீச அரசனிடம் எழுத்து மூலம் நல்ல ஜீவனமுடைய வன், அரசாங்கத்தில் சௌக்கியமுடையவன், இருபது வயதுக்கு மேல் விசேஷமடைபவன், எழுதுவதில் நல்ல ஜீவனத்துடன் அரசாங் கத்தில் பிரசித்தியுடையவன், இருபத்தைந்து வயதுக்குமேல் நல்ல யோகமுடையவன், வாகனமும், கீர்த்தியும் உண்டாகும், கஜானாதி காரியாவான், சகோதரனால் நல்ல (அதிக) யோகமுடையவன், எப் பொழுதும் அரசப் பிரீதியுடையவன், இருபத்தேழாவது வயதில் நல்ல பாக்கியவானாவான், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பலவழிகளி லும், தன சம்பாத்தியமுடையவன், முப்பது வயதுக்குமேல் நற் கீர்த்தியுடையவன், மேம்பாடான உத்தியோக சித்தியடைவன், சகோதரப் பிரபல யோகமுடையவன், முப்பத்து மூன்றாவது வயதில் மனைவியாதியும், தாய்க்குப் பீடையும், மனஸ்தாபமும், அதனால் வியா குலமும், முப்பத்து நான்காவது வயதில் தகப்பன் மரணமும், அச் சமயம் ஜாதகனுக்குத் தேக ஜாட்டியமும், தாய் தகப்பன் ஜெனங் களுக்கு நாசமும், அதனாலும் வியாகூலமும், முப்பத்தைந்தாவது வய தில் அதிக சுகமும், வாகனம் முதலிய நல்ல யோகமும், முப்பத்தெட் டில் ஜாதகனுக்குத் தேகபீடையும், நாற்பதாவது வயதில் நல்ல சுக மும், அரசனுடைய பிரீதி விசேஷமும், தனலாபமும், நற்கீர்த்தியும், நாற்பத்திரண்டாவது வயது வரை ராஜ, மந்திரியினால் விரோதமும், கெடுதியும் உண்டாகி அதற்குப் பிறகு சௌக்கியமுண்டாகி ஐம்பதா வது வயதில் நற்கீர்த்தியும், வாகனயோகமும், தனயோகமும் அடைந்து ஆயுளுள்ள வரையில் கீர்த்தியும், சுகமுமடைந்து வயோ திக வயதில் தர்ம புத்தியுடையவனாக இருப்பான், ஜாதகனுக்கு

ஜென்ம தார திசையில் பாலரோக பீடையும், தாய் தகப்பனுக்குச் சுகமும் உண்டாகும், ஐந்தாம் வயதில் ஜாதகனுக்கு கல்வி பயிலுதலுக்கு ஆரம்பமும், பத்தாவது வயதில், பதின்மூன்றும் வயதில் விவாகமும் அல்லது பதினான்கில் விவாகமும், இரண்டாம் திசையில் தகப்பனால் ஜாதகனுக்குச் சுகமும், எல்லோருக்கும் மூத்த சகோதரன் நல்ல யோகமுடையவனும், வெளி தேசத்தில் கீர்த்தியுடைவனுமாவான். தன் தகப்பன் நல்ல கீர்த்தியுடையவனும், ராஜாங்கத்தில் நல்ல யோகமுடையவனும், அரசனால் உண்டாக்கப்பட்ட கீர்த்தியுடையவனும், பிரபல உத்தியோக சௌக்கிய முடையவனும், வாகனம் முதலிய உத்தமமான சௌக்கிய முடையவனும் ஆவான், ஜாதகனுக்கு சம்பத் திசையில் (கேது திசையில்) சந்திரனுடைய புக்தி அல்லது செவ்வாய் புக்தியில் விவாகமும், ஜாதகனுடைய ஜென்ம பூமிக்கு வடக்கில் பாக்கிய விருத்தியுடையவளும், பதி பக்தியுடையவளும், வெளுப்பு நிறமானவளும், காலங்கடந்து புத்திரனைப் பிரசவிப்பவளுமான மனைவியை ஜாதகன் அடைவான்.

(141) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் நீச ராசியிலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டிருக்க சுக்கிரன் அதிமித்திராம்சத்தில் இருந்தால் ஜாதகன் ஒரே மனைவியுடையவன், விவாகத்திற்குப் பிறகு சௌக்கியமுடையவன், சுயப்பிரபலத்தால் பிரசித்தியடைவான், வீட்டில் லக்ஷ்மிகடாக்ஷமும், தசாந்தியத்தில் விசேஷ முடையவனாகவும், பிராமணனால் பிரசித்தியும், அரசாங்கத்தில் நல்ல யோகமுடையவனும், எழுதுவதில் ஜீவனமுடையவனும், சுக்ரகி திசையில் நல்ல யோகமுடையவனும், தனலாபமும், நல்ல வாகனமும், யோகமேன்மையுடையவனும் ஆவான்.

(142) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்திலிருக்கச் சூரியன் புதனுடன் கூடியிருந்து ஐந்தாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுக்குப் புத்திர சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும், ஐந்தாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன், குரு ஜாதகனுடைய புத்திர ஸ்தானத்திற்கு மரண ஸ்தானத்தை (எட்டாமிடத்தை) அடைந்திருந்தால் ஒன்றல்லது இரண்டு, மூன்று புத்திரர்கள் நாசமடைவார்கள், சந்திர சூரியப் (சக்கிர) பிரதிமைகளைத் தானம் செய்தால் ஜாதகனுக்குப் புத்திரப்பிராப்தி உண்டாகும்; குரு மீன ராசியின் திரிகோணத்தில் கோச்சாரத்தில் வரும் சமயம் அல்லது

ஜென்ம காலத்தில் குரு பார்க்கும் ராசிகளின் திரிகோணங்களிலாவது கோச்சாரத்தில் குரு வரும் சமயம் ஜாதகனுக்குப் புத்திரப்பிராப்தி உண்டாகும், இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரிகளும் நீண்டகால ஆயுளுடையவர்களா யிருப்பார்கள், அதிகம் பிறந்தால் மரித்து விடும்.

(143) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி இரண்டு கிரகங்கள் சுயக்ஷேத்திரத்தில் முப்பத்துநான்காவது அம்சத்தில் இருந்தால் ஜாதகன் நல்ல ஜீவனமுடையவன், சுய க்ஷேத்திரத்திலிருக்கும் இரண்டு கிரகமும் புத சுக்கிருடைய அம்சத்தில் இருந்தால் ஜாதகன் கிலேசமுடையவனாகவும், சகோதரத் துவேஷமும், கலகமுடையவனுமாகவுமிருப்பான்.

(144) ஜென்ம லக்கினம் மகரம் (மஞ்சுஸ்வநாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் திசை க்ஷேம திசையாக வந்தால் ஜாதகனுக்கு எட்டாம் பாவாதிபன் திசை சுய புக்தியில் தேகபீடையும், மனைவிக்குப் பீடையும், அதிகசிலவும், மனோவியாதியும், சந்திர புக்தியிலிருந்து சுகமும், புத்திர விருத்தியும், புத்திரவர்க்கத்தில் சுபமும், அத் திசையின் பிற்பாதியில் அரச விரோதமும், தன் பந்துக்களிடம் மனஸ்தாபமும் உண்டாகும், ஐந்தாம் திசையில் நற்கீர்த்தியும், நீச அரசனாலும் அவன் மூலம் பிரபுக்களாலும் எப்பொழுதும் அதிகசம்பத்தும், வாகனலாபமும், புத்திரப் பிரபலமும், முப்பதாயிரம் பொன்னுடைய தன முடையவனாகவும், விசேஷ அரசப் பிரீதியும், வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷமும், எம்பொழுதும் தர்ம வழியில் இருந்தும், ஆறும் திசை உத்தமமாகவும், தடாக, உத்தியான விஷ்ணு கைங்கரியம் முதலான தர்ம கைங்கரியங்களும் செய்து வயோதிகவயதில் புண்ணிய தீர்த்த யாத்திரையும், சுகாதிபன் திசையில் சௌக்கியமும், ஏழாம் பாவாதிபன் புக்தியில் மனைவி நாசமும், திசையின் முடிவில் வியாகூலமும், அடைவான், ஏழாம் திசையில் சுயபுக்தியில் ஞானத்தை அடைவான்.

(145) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் குரு இருந்தாலும், குரு லக்கின பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவ காலத்தில் வேதனை கொஞ்சமாயிருக்கும். உத்தராம்சத்தில் பிறந்தவன் தாய்க்கு வேதனை அதிகமாயிருக்கும், கொஞ்சம் பயமும், விசேஷ தோஷமும் உண்டு. நான்காம் பாவாதிபன் சனியுடன் கூடியிருந்தால் பாலாரிஷ்டத்தால் பீடையும், வைசூரியால் பயமும் உண்டாகும்.

(146) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி செவ்வாயுடன் கூடியிருக்க எட்டாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து குருவோடு சுக்கிரனும் சேர்ந்திருந்தால் எல்லா தோஷங்களும் விலகி ஜாதகன் சுகமடைவான், ஆயினும் ஜாதகன் பூர்ணாரம்ப வயதுடையவனாயினும் அறுபத்தொன்பது வயது வரை ஜீவித்திருப்பான்.

(147) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகிச் சூரியன் ராகுவுடன் கூடி ஒன்பதாம் பாவாதிபனுடனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சௌக்கியமுடையவன், ஜாதகனுடைய தகப்பன்வழிப் பாட்டனைக் காட்டிலும் மேலானவன். சகோதர சகோதரிகளை யுடையவன், விஷ்ணு பக்தி மதாச்சாரமுடையவன், தேவப்பிராமண பக்தியுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, தன் கல்வியில் வல்லவன், எழுதுவதில் சமர்த்தன், வேறு பாஷையிலும் சிரமப்படுவன்.

(148) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கொஞ்சம் தாமதமாகக் காரியங்களைச் செய்பவன், மூர்க்க சுபாவ முடையவன், கொஞ்சம் லோபகுணமுடையவன், சேர்க்கவும் கலைக் கவும் சாமர்த்திய முள்ளவன், வாசாலகன், அழகாய்ப்பேசுபவன், மேலான இங்கிதம் அறிந்தவன், மேதாவி, சிநேகிதர்களை வஞ்சிக்கும் புத்தியுடையவன்.

(149) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்திற்கு ஒன்பதில் சுக்கிரனிருந்து அந்த சுக்கிரனுடன் குருவும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் இரண்டு மனைவியையுடைய வன், இரண்டு தாரத்தினிடமும், புத்திரருடையவன், திரவிய சம்பா தனையில் சமர்த்தன், ஸ்ரீமானானவன், ஏழைகளுக்கிரங்குபவன், விசேஷ குரு பக்தி யுடையவன், நல்ல செய்கை, ஆசார புத்தியுடைய வன், சூரியன் கின்னராம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ராஜ சேவையால் ஜீவனம் செய்பவன், பாலியத்தில் அற்ப சுகவானாயிருந்து மத்திய அந்திய வயதுக்களில் வெகு சௌக்கிய முடையவனாவான், எழுதுவதால் நல்ல ஜீவன முடையவனும், அரசாங் கத்தில் பிரசித்தியுடையவனும், நீச அரசனிடம் எழுத்து மூலம் நல்ல யோகமும், நல்ல சௌக்கியமும், மத்திய அந்திய வயதுகளில் யோக

விருத்தியும், விசேஷமான பிரபு பிரீதியுடையவனும், அநேக கிராமங்களுக்கு அதிகாரியாகி பல வழிகளில் தனம் சம்பாதிப்பவனும், விசேஷ பீதியும், யோக பங்கமும், நல்ல யோகமுடைய ஐந்து சகோதரர்களையுடையவனும், அதிக விரயமும், மனோவியாதியும், ஜெயில்தண்டனை முதலிய பயமும், அரச கோபமும், சத்துருக்களால் பயமும், அதற்குப் பிறகுயோகவிருத்தியும், வெளிதேசத்தில் மட்டும் நற்கீர்த்தியும், பிரபல மேன்பாடான உத்தியோகத்தால் ஜீவிப்பவனும், தனலாபமும், அதிக சுகமுடையவனும் எப்பொழுதும் ராஜ வசியமுடையவனும், சௌரிய சாகசமுடையவனும், நீச பிரபு சமஸ்தானத்தில் எழுத்தாளர்களுக்கு அதிகாரியாகவும், பெரிய உத்தியோகமும், மூன்று வாகனமுடையவனும், தன் பிரபுவுக்கும் அதிக சுகமுடையவனாகவும், அதனால் சௌக்கியமும், ராஜகாரியத்தை நன்கு கவனிப்பவனும், தேசாந்திரத்தில் நற்கீர்த்தியும், எப்பொழுதும் தனம் சம்பாதிப்பவனும், மனைவி புத்திரன் முதலியவர்களுடைய சௌக்கியமும், வெளிதேசத்தில் கொண்டாடப்பட்ட கீர்த்தியும், ஐந்து வருஷம் நல்ல யோகமும், அதற்குப் பிறகு சுயதேச மடைந்து விசேஷமான ராஜப்பிரீதியை யடைந்து பெரிய உத்தியோகத்தால் ஜீவிப்பவனும், ராஜனுக்கு .மந்திரியுமாவான், விசித்திரமான வீடுகட்டுவான், லோகத்தில் பிரசித்தமான மிக்க கிர்த்தியுடையவன், பெரிய அரசாங்கத்தில் ஸர்வாத்யக்ஷாதிகாரமுடையவன், தன் ஜெனங்களிடம் நல்லயோக முடையவன், மூன்று வாகனமுடையவன், பற்பலதேசங்களில் புகழப்படுவான், பற்பல அரசர்களாலும் பிரபுக்களாலும் தனமடைவான், சொர்ணம், வஸ்திரம், அபரணம், முதலியனவும், நவரத்தினங்களும் அதிகமாயுள்ளவனும், புத்திரமூலம் சுகவிருத்தியுடையவனும், வயோதிகவயதில் புத்திரவிருத்தி யுடையவனும், தன்னுடைய புத்திரனுடைய முன் ஜென்மாந்திர பாபத்தினல் வயோதிகவயதில் புத்திர சோகமும் அடைவான், எப்பொழுதும் அன்னதானம் செய்பவனும், சந்தோஷமுடையவனும், நற்கதைகளை அதிகமாகக் கேட்பவனும், வயோதிக வயதில் விசேஷ யோகமுடையவனும், தேவப்பிராமண பூஜை செய்பவனும், நற்கீர்த்தியும், தனலாபமும், கிழவயதில் தர்மத்தை நன்கு கிரகிப்பவனுமான ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய க்ஷேம திசையில் மரிப்பான்.

(150) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சனியுடன் கூடியிருக்க நான்காம் பாவத்தில் சூரியன்

தன்னுச்சத்தில் புதன் ராகு இவர்களுடன் கூடியிருந்து சந்திரன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் கொஞ்சமான சுகமுடையவள், தாய் குணவதி, சாந்தமுடையவள், பதிபக்தியுடையவள், குணத்துடன் கூடியவள், வம்சவிருத்தியுடையவள், புத்திரனுக்குப் பிரியமானதைச் செய்பவள், ஜாதகனுடைய ஜென்ம திசையில் மரித்துவிடுவாள், சந்திரன் சனி மங்களாம்சத்தில் இருந்தால் தாய் சுமங்கலியாகவே மரிப்பாள்.

(151) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகிக் குரு சுக்கிரனுடன் சேர்ந்திருந்தால் ஜாதகன் மாற்றுந்தாய் யோகமுடையவன்.

(152) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி குரு ஐந்தாம் பாவாதிபதியான சுக்கிரனுடன் கூடி ஐந்தாம் பாவத்தில் இருக்க சகோதரகாரகன் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவன், மூத்த சகோதரனில்லாதவன், ஜாதகனுக்குப் பின் சகோதரன் ஒருவன் உண்டு, ஒரு சகோதரி சுகமுள்ளவனும், புத்திர புத்திரியுடனும், சுகத்துடனும் கூடியிருப்பாள். ஜாதகனுக்கு அதிகமான சகோதரர்களிருந்தாலும் மரித்து விடுவார்கள். மாற்றந் தாய் பிள்ளைகள் (மாற்று சகோதரர்கள்) நால்வர் அல்லது ஐவர்கள், சகோதரிகள் மூவர்கள் அல்லது நால்வர்கள் சுகமுடையவர்களாக இருப்பார்கள், ஜாதகனுடைய சகோதரன் நல்ல யோகமுடையவன், தகப்பனல் நல்ல யோகமடைவான், பயனற்ற கெட்ட தகாதவழியில் தன விரயம் செய்வான், காமி, போக ஸ்திரீயினுடைய சௌக்கிய முடையவன், சங்கீதப்பிரியன், போகி, வேசி ஸ்திரீகளுடைய சரசத்தில் பிரியமுடையவன்.

(153) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகிக் குருவுடன் கூட சுக்கிரனிருந்தாலும், சுக்கிரன் குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தன் மனைவியிடம் துவேஷமுடையவன், அதிக காமமுடையவன், தகப்பன் வார்த்தையைத் துரும்பாக மதித்து கடினமான தண்டனை செய்பவன், பிரதாபமுடையவன், நீச அரசனல் சௌக்கிய முடையவன், அனேக கிராம அதிகாரமுடையவன், பல தேசங்களிலும் பிரசித்தியுடையவன், வெளி தேசத்தில் நல்ல புகழுடையவன், வாகனம் முதலிய நல்ல யோகமுடையவன், தியாகம், போகம், தானம் முதலியன கொடுக்கல் வாங்கல் உடையவன், எப்பொழுதும் பொருள் தேடுவான், சாகசமுடையவன், துஷ்டபுத்தியுடையவன்.

(154) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகிச் செவ்வாயுடன் சனி சேர்ந்திருந்தாலும், சனியால் செவ்வாய் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் அற்ப ஆயுளுடையவன்.

(155) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி மாலிகா யோகத்தில் செவ்வாயின் திரிம்சாம்சத்தில் ஜெனித்தவன், வெளுப்பு நிறமுடையவன், நல்ல அறிவாளி, அதிருஷ்டசாலி, மேதாவி, சமதேகி, நல்லரூபமுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, தன் கல்வியில் வல்லவன், அன்னிய பாஷையில் அதிகமறிந்தவன், மூன்று பாஷையில் அதிகம் தெரிந்தவன்.

(156) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி செவ்வாயுடன் சனி சேர்ந்திருந்தாலும், சனியால் செவ்வாய் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகன் நீச பாஷையில் அதிக சிரமப்படுபவன், சேர்க்கவும் அழிக்கவும் கலைக்கவும் சாமர்த்தியமுள்ளவன், வாசாலகன், சாதுர்ய யுக்தியுடையவன், தேவப்பிராமண பக்தியுடையவன், விஷ்ணு பக்த மதத்தை அடைபவன், சங்கீதப் பிரியமுடையவன், காமீ, சந்தன வஸ்திர புஷ்பப் பிரியன், சிநேகிதர், தன் பந்துக்கள் இவர்களை ரக்ஷிப்பவன், குடும்பஸ்தன் ஜெனங்களைக் காப்பாற்றுபவன்.

(157) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி செவ்வாயுடன் சேர்ந்திருந்தால் ஜாதகன் கோபக்காரன், பராக்கிரமமுடையோன்.

(158) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபன் குருவுடன் கூடி சுயக்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் அரசாங்க உத்தியோகமுடையவன்.

(159) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் கேது இருக்கப் பிறந்தவன் எப்பொழுதும் நீசனிடம் தனக்குத் (தாழ்மையானவனிடம்) உத்தியோகம் செய்வான், அரசாங்கத்தில் புகழுடையவன், தகப்பன் மூலமாக நல்ல யோகமுடையவன், எழுதுவதில் சமர்த்தன், தன சம்பாதனையில் சமர்த்தன் ஐந்தாம் வயதில் அக்ஷராஞானமுடையவன், தகப்பனுக்கு சுகமும், தாய் தகப்பனால் ஜாதகனுக்கு சுகமும், பத்தாவது வயதில் அல்லது பதினோராவது வயதில் தாய் அரிஷ்டமும் உடையவன், பன்னிரண்டாம் வயதில் அல்லது பதின்மூன்றும் வயதில் விவாகத்தை யடைவான், ஏழாம் பாவாதிபதி இருக்கப்பட்ட அம்ச ராசியில் குரு கோச்சாரத்

தில் வரும்போது ஜாதகனுக்கு விவாகம் நடக்கும், தன் ஜென்ம பூமிக்கு (ஆக்கிநேய திக்கில்) தென் கிழக்கிலாவது, தெற்கிலாவது விவாகம் நடக்கும், மனைவி வெளுப்பு நிறமுடையவள், தன் மனைவி பதிபக்தியுடையவள், எப்பொழுதும் அன்னதானம் செய்வதில் பிரீதியுடையவள், புண்ணியவதி, சமர்த்தை, கடுத்த சொல்லுடையவள், புத்திரனிடம் பிரியமுள்ளவளா யிருந்தாலும் வம்சத்தில் பாக்கிய விருத்தியுடையவள்; ஜாதகன் விவாக மடைந்தபின்பு சௌக்கியமும், வீட்டில் லக்ஷ்மீகடாக்ஷமும் அடைவான், தகப்பனால் ஜாதகன் சுகம் அதிகமுள்ளவன், விசேஷ கல்விபயிலுவான், பதினைந்து அல்லது பதினாறுவது வயதில் சுயப் பிரபலமடைவான், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், அரசாங்க ஜென சிநேகமுடையவன், எழுதுவதில் சமர்த்தன், அதினால் நல்ல ஜீவனமுடையவன், பதினேழாவது வயதிலிருந்து விசேஷமுடையவன், இருபது வயதுக்குமேல் விசேஷ சுகமுடையவன், மனைவி சௌக்கியமும், அதிக சுபமும் உள்ளவன், வெளி தேசத்தில் யோகமுடையவன், ஆயினும் ஜாதகனுடைய தகப்பன் மேம்பாடான யோகமுடையவன், மேம்பாடான உத்தியோக லாபமும், நற்கீர்த்தியும் அரசப்பிரீதி விசேஷமும், இருபத்தாறுவது வயதில் புத்திரலாபமும் உடையவன், வாகனம் முதலிய நல்ல யோகமும், வெளிதேசத்தில் நல்ல கீர்த்தியும், இருபத்தொன்பதாவது வயதில் அல்லது முப்பதாவது வயதில் யோக விருத்தியும் உடையவன், புத்திரன் பிறப்பதால் சந்தோஷமும், தன் தேசத்தில் நல்ல பிரசித்தமான கீர்த்தியும், தன் அரசனுக்கு அதிக சுகமும், சுயதேசத்தில் சௌக்கிய முடையவனாவான், அந்த அரச வழியில் பிரமுகர்களால் எப்பொழுதும் பொக்கிஷஸ்தானத்தில் பிரசித்தியுடையவனாவான். ஜாதகன் பொக்கிஷத்துக்கு அதிகாரி, பிரபல உத்தியோக பாக்கியமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் கொண்டாடப்பட்ட புகழுடையவன், அரசாங்கத்தில் நற்பெயரெடுத்தவன், எழுத்தாளர்களுக்குத் தலைவனாகி லோகத்தில் அழிவில்லாத கீர்த்தியுடையவன், மூன்று வாகனமுடையவன், ஜாதகன் பிதா ராஜயோகமுடையவன், விசித்திரமான வீடு (கட்டுபவன்,) நிர்மாணம் செய்பவன், பற்பல தேசங்களிலும் நல்ல புகழுடையவன், பிதா மூலம் சுகாதிக முள்ளவனும், சுயார்ஜிதமும் சம்பாதிப்பவன், மூன்றுவாகன முடையவன், பற்பல பிரபுக்களாலும் சுகமுடையவன்; தனலாபமும் நற்கீர்த்தியு முடையவன், முப்பத்துமூன்றும் வயதில் வெகு பாக்கியமடைந்து ஐம்பத்து

மூன்றும் வயதில் நல்ல கீர்த்தியடைபவன், வீட்டில் சுப சோபனங்களும், புத்திர வர்க்கத்தில் சுபமும், முப்பத்தாறும் வயதில் கொஞ்சம் வியாகூலமும், முப்பத்தெட்டாம் வயதில் மனோபீதியும், வேறு அரசனால் சுகமும் உண்டாகும், ஜாதகன் தகப்பனுக்குச் சத்துரு பீதியும், வேறு அரசன் வந்ததும் சுகமும், ஜாதகனுக்கு விவாகமும், வீட்டில் லக்ஷ்மீகடாக்ஷமும், ஜாதகனுடைய தகப்பனுக்கு நாற்பதாவது வயதில் விசேஷ பாக்கியமும், விசேஷ அரசப் பிரீதியுமடைவான், ஜாதகன் தகப்பனுக்குத் தேக ஜாட்டியமும், அபமிருத்துபயமும் உண்டாகும், நாற்பத்து நாலாம் வயதில் ஜாதகன் தகப்பனுக்கு யோக விருத்தியும், மேம்பாடான உத்தியோகமும், அரசாங்கத்தில் நல்ல யோகமும், எழுதுவதால் நல்ல யோகமும், அரச காரியத்தில் சுதந்திரமுடையவனாகவும், ராஜ யோகமுடையவனும், ராஜ மந்திரியாகவும், ராஜ வல்லபனாகவும், பற்பல தேசங்களிலும் கீர்த்தியுடையவனாகவும், தன் புத்திர ஜாதகனுக்குப் பிரபலமும், ஜாதகனுடைய தகப்பனுக்கு வயோதிக வயதில் சுகமும், யோகமும், ஆயுளுள்ளவரையில் யோகமும் உண்டாகிப் பிதா விருத்தாப்பிய வயதில் தர்மத்தைக் கிரகிப்பவனுமாவான்.

(160) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி குருவுடன் கூடி சுய க்ஷேத்திரத்திலிருக்க, சூரியன், ராகு இவர்களுடன் புதன் கூடியிருந்தால் ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன்.

(161) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகிச் சுக்கிரனுக்குக் கேந்திரத்தில் சுக்கிரனிருக்குமிடம் தவிர்த்து மற்ற கேந்திரத்தில் குருவும், குரு இருக்கும் கேந்திரம் தவிர்த்து மற்ற கேந்திரத்தில் சுக்கிரனும் இருந்தால் ஜாதகன் ராஜ யோகமுடையவன், அரசனாகவாவது, அரசனுக்குச் சமமான தனிகனாக ஆவது இருப்பவன், சுக்கிரன் ராஜிய பூஜ்யாம்சத்தில் இரண்டாம் பாவத்திலாவது, ஐந்தாம் பாவத்திலாவது இருந்தால் மிக்க அதிக சம்பத்துடையவனாகவும், போகியாயும், எல்லா சுதந்தர அதிகாரமுடையவனும் ஆவான்.

(162) ஜென்ம லக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபன் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் அந்தியத்தில் ஞானமுடையவனாவான்.

(163) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் லக்கின பாவத்தில் குரு இருந்தாலும், லக்கின பாவத்தைக் குரு பார்த்தாலும் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவகாலத்தில் வேதனை சொற்பமாயிருக்கும். உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை அதிகமும், சூதி தோஷம் கொஞ்சமும் உண்டாகும், சந்திரன் சூரியனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் பயமும், ஜாதகனுக்கு மாந்தசுரம், அம்மைசுரம், இரணபயம் முதலியவற்றாலும் கொஞ்சம் பயமுண்டாகும்.

(164) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி மித்திர ராசியிலிருந்து புதன், சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டுக் கேந்திரத் திரிகோணங்களில் குரு இருந்தால் ஜாதகன் எல்லாத் தோஷங்களும் விலகிச் சுகமடைவான், பூர்ணாரம்ப வயதுடையவனாயிருந்தாலும் ஜாதகன் எழுபத்தேழு வயதுவரை ஜீவித்திருப்பான்.

(165) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சூரியனுடன் கூடி மாதுருகாரக சந்திரன் பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் விசேஷ சௌக்கியமுடையவள், தாய் குணவதி, சாந்தமுடையவள், கணவனுடைய மனதை அனுசரித்துநடப்பவள், அன்னதானம் செய்வதில் பிரீதியுடையவள், புண்ணியவதி, வம்சத்தில் பாக்கிய விருத்தியுடையவள், ஜாதகனுடைய சம்பத் திசையில் தாய் மரிப்பாள், சந்திரன் மங்களாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகனுடைய தாய் சுமங்கலியாக மரிப்பாள்.

(166) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபன் தன்னுச்சத்தில் லக்கினம் தவிர்த்து கேந்திரத்தில் பலத்துடன் இருந்து சகோதரகாரகன் சூரியனுடன் கூடி சுய க்ஷேத்திரத்தில் பலத்துடன் இருந்தால் சகோதர சௌக்கியமுடையவனாயினும் மூத்த சகோதரனில்லாதவன், தன் மூத்த சகோதரி ஒருத்தி அற்ப ஆயுளால் சீக்கிர காலத்திலேயே மரித்து விடுபவள், ஜாதகனுக்கு இளைய சகோதரர் மூவர் அல்லது நால்வர் சுகமுடையவர்களும், மூன்று சகோதரிகள் சௌக்கியத்துடனும், அதிகமிருந்தால் நாசமும் உண்டாகும், ஜாதகனுடைய இளைய சகோதரன் நல்ல யோகமுடையவன், ராஜாங்கத்தில் பிரசித்தியுடையவன், மற்ற ஒரு சகோதரன் வீட்டு வேலைகளில் சுதந்தரமுடையவன், க்ஷேத்திர கிராம விசா

ரீனயுடையவன், அவனுடைய சகோதரன் ராஜயோகமுடையவன், பொக்கிஷ ஸ்தானத்தில் பிரசித்தியாவன், மற்றவர்கள் நல்ல சுக ஜீவிகள்.

(167) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகி அதியோக ஜாதகத்தில் புததிரிம்சாம்சத்தில் ஜெனித்தவன் வெளுப்பு நிறமுடையவன், விசேஷ அறிவாளி, அதிருஷ்டசாலி, மேதாவீ, சமதேகி, நல்ல ரூபவான், பித்த சுபாவமுள்ள தேகமுடையவன், கொஞ்சம் வாயு (கோப) அதிகமுள்ளவன், கொஞ்சமாய்ப் புசிப்பவன், மர்மமான மனதுடையவன், காமீ, பாலியம் முதலிருந்தே சௌக்கியமுடையவன், கல்வியுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், வினயமுள்ளவன், தர்மத்தைக் கொண்டாடுபவன், விஷ்ணுபக்தி மத ஆச்சாரமுடையவன், தேவப்பிராமண பக்தியுடையவன்.

(168) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் சனி யிருந்தாலும், ஜாதகன் இரண்டாம் பாவத்தைச் சனி பார்த்தாலும் ராஜனுடைய ஜெனங்களுக்குத் துவேஷமான காரியம் செய்வான், சேர்க்கவும், கலேக்கவும் திறமையுடையவன், சாகசமுடையவன், பராக்கிரமமுடையவன்.

(169) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகிப் பதினோராம் பாவாதிபதி செவ்வாய் சுயக்ஷேத்திரத்தில் சூரியனுடன் கூடியிருக்க வித்தியாகாரகன் மித்திர ராசியிலிருக்கச் சுக்கிரன் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகன் வித்தியா சௌக்கிய மில்லாதவன், மூன்று பாஷைகளில் வல்லவன், வேறு பாஷைகளில் நல்ல அறிவுடையவன், அன்னிய பாஷைகளே விசேஷம் அறிந்தவன், எழுதுவதில் சமர்த்தன், நாடக அலங்கார காவியங்களில் பிரியன், சங்கீத மறிந்தவன், பரஸ்திரீ சேர்க்கை யிருந்தாலும், சந்தன, புஷ்ப, வஸ்திரப்பிரியன், சூரியன் கின்னராம்சத்தில் இருந்தால் அரசாங்க உத்தியோகத்தால் ஜீவனமுடையவன், பாலியத்திலிருந்தே புகழுடையவன், போகீ, தாய் தகப்பனுடைய சுகத்துடன் கூடியவன், அவர்களால் சௌக்கிய முடையவனாயிருந்தாலும் தன் தகப்பனும் நல்ல யோகமுடையவன், ஜாதகன் ஐந்தாம் வயதில் அக்ஷரஞானமுடையவன், ஜாதகனுக்கு வித்தியாப்பியாசமும், தகப்பனுக்குச் சுகமும் உண்டாகும், பதினைந்து அல்லது பதினாறுவது வயதில் அநேகமாக விவாகம் நடக்கும், சுயப்பிரபலமும், நல்ல யோகமும், ராஜாங்கத்தில்

பிரசித்தியும், எழுத்து மூலம் நல்ல ஜீவனமும், தகப்பனுக்கு மேம்பா டான யோகமும் உடையவன், ஜாதகன் நீச அரசாங்கத்தில் நீச கல்வியால் நல்ல யோகமும், இருபது வயதுக்கு மேல் நல்ல கீர்த்தியும், வாகனமும் உண்டாகும், இருபத்தைந்தாவது வயதில் பிரபல உத்தி யோக பாக்கியமும், நல்ல கீர்த்தியும், எப்பொழுதும் ராஜவசியமுடை யவனும், தனம் தேடுவதில் சமர்த்தனும், இருபத்தேழாம் வயதில் நல்ல சுகமும், முப்பதாவது வயதில் மனைவியாதியும் தாய்க்குப் பீடையும், மனஸ்தாபமும், முப்பத்து மூன்றும் வயதில் நற்கீர்த்தி லோகம் எல்லாம் கொண்டாடுதலும், வேறு அரசன் ஏற்பட்டு ஜாத கன் மூன்று வாகன முடையவனும், அதிக க்ஷேத்திர கிராமங்களுக்கு அதிகாரியாகி ஸ்ரீமானுகவும், அதிக தனம், ரத்தினம் முதலிய பிரபுவாக வும், முப்பத்தொன்பதாம் வயதில் பிதாவினுல் ஜாதகன் கிலேசமடை தலும், ஐம்பதாம் வயதில் மேலான புகழுடையவனும், பற்பல தேசங்களிலும் நற்புகழுண்டாகி ஆயுளுள்ளவரையில் யோகமுடைய வனுகவும், வயோதிக வயதில் புத்திரயோகமுடையவனும் ஆவான்.

(170) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் சனியுடன் கூடி சுய க்ஷேத்திரத்தில் புதனுடனும் கூடி யிருந்து புத்திரகாரகன் தன் உச்சராசியிலுமிருந்தால் ஜாதகன் புத்திர சௌக்கியம் உள்ளவன், ஜாதகனுக்கு மீனத்திரிகோணத்தில் கோச் சாரத்தில் குரு வரும் சமயம் புத்திர லாபமும், அல்லது ஜென்மகாலத் தில் குருவின் பார்வையுள்ள ராசிகளின் திரிகோணங்களிலாவது முன் சொன்னபடி குரு வரும் சமயம் ஜாதகனுக்குப் புத்திர புத்திரி லாப மும் உண்டாகும், மூன்று புத்திரர்களும், இரண்டு புத்திரிகளும் நீண்ட ஆயுளுடையவர்களா யிருப்பார்கள், அதிகம் பிறந்தாலும் மரித்து விடும்.

(171) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகிச் சுக்கிரனி ருக்கிற கேந்திரம் தவிர்த்து மற்ற கேந்திரத்தில் குரு இருந்தாலும், குரு கேந்திரத்தில் சுக்கிரனுடன் இருந்தாலும் ஜாதகன் ராஜயோகம் அடைவான், ராஜாவாக அல்லது அவனுக்குச் சமமான பணக்காரனு கவாவது சுகியாக இருப்பவன், விருத்தாப்பிய வயதில் வெகு யோக முடையவன், தன் புத்திரனும் ராஜயோகமுடையவன், அரசன் மூல மாகவே எழுத்தாளர்கள் அனைவர்க்கும் அதிகாரியாவன், வேலைக் காரர், சேவகர் முதலானேருடன் கூடினவன், லோகத்தில் மிக்க மேன்மையுள்ள கீர்த்தியுடையவன்.

(172) ஜென்ம லக்கினம் மகரம் (தனதாம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் லக்கின பாவத்தில் செவ்வாய் சந்திரனுடன் கூடி யிவர்களைக் குரு பார்த்தால் ஜாதகனுடைய தாய் பிரசவகாலத்தில் கொஞ்சமான வேதனையுடையவள், உத்தராம்சத்தில் ஜாதகனுடைய தாய்க்கு அதிக வேதனையும், கொஞ்சம் சூதி தோஷ பயமும் உண்டு, சந்திரன் குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் பயமும், ஜாதகனுக்கு ஐந்து வருஷம் வரை (கெடுதியும்,) அவதியும், மாந்த சுரத்தாலும், விரணத்தாலும், வைசூரி சுரத்தாலும் பயமுண்டாகும்.

(173) ஜென்ம லக்கினம் மகரம் (தனதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்தில் வலுத்திருக்க எட்டாம் பாவாதிபன் புதனுடன் கூடி எட்டாம் பாவத்தைச் சனி பார்த்துக் குருவும் கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஸர்வதோஷங்களினின்றும் மீண்டு ஜாதகன் சுக மடைவான், எழுபத்தைந்து வயது வரை பரமாயுளுள்ளவன், முப்பத்திரண்டாம் வயதில் தேக வியாதியும், நாற்பதிலும் அப்படியே வியாதியும், பித்த உஷ்ண வாயு பீடைகளால் ஸன்னி பாதசுரம் உண்டாகும், ஐம்பதாம் வயதில் விஷத்தால் பயமும், அறுபதாவது வயதில் அபமிருத்துவும், அப்போது எண்ணெய்க்குடம், நெய் முதலிய தானம் செய்து நவக்கிரகப் பிரீதியும்மிருத்தியுஞ் செய ஜபமுதலானதும் பதினுயிரம் சிவார்ச்சனையாலும், சொர்ணலிங்க தானத்தாலும், சனிப் பிரிதி செய்து நீல வஸ்திரதானம், இரும்புத் தண்டம் முதலான தானத்தால் அபமிருத்து விலகி தாய் தகப்பன் ஜெனங்களுக்கும், தனக்கு சமமான ஜெனங்களுக்கு அவதியும், ஜாதகனுக்கு தேகாரோக்கியமும், சுகமும் உண்டாகும்.

(174) ஜென்ம லக்கினம் மகரம் (தனதாம்சம் ஆகி சூரியனுடன் ஒன்பதாம் பாவாதிபதியான புதன் கூடி நீசராசியிலிருக்க ஒன்பதாம் பாவத்தைக் குரு பார்த்தால் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சௌக்கிய முடையவன், ஜாதகனுடைய தகப்பன் சகோதாருடன் கூடினவன் ஜாதகன் பிதாவுக்கு ஒரு சகோதரி நீண்ட ஆயுளுடையவள் உண்டு, ஜாதகனுடைய தகப்பனுக்கு ஒரு மாற்றுச் சகோதானும் உண்டு, ஜாதகன் தகப்பனுடைய சகோதரியானவள் வீட்டு வேலைகளில் சுதந்தரமுடையவள், இருந்தாலும் அந்த சகோதரி

சென்மாந்திர பாபத்தினுல் விதவையாகி துக்கத்தால் பீடிக்கப்படு பவள்.

(175) ஜென்ம லக்கினம் மகரம் (தனதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபன் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சிவ பக்தியுடையவன், தேவப்பிராமண விசுவாசி, விஷ்ணு சிவபக்தி யுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, சுவல்பமாயறிந்தவன், குண முடையவன், வித்தையில் வல்லவன், எப்பொழுதும் எழுதுவதில் சமர்த்தன்.

(176) ஜென்ம லக்கினம் மகரம் (தனதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதியான சுக்கிரன், ராகு, கேதுக்க ளுடன் கூடியிருந்தாலும், ராகு கேதுவால் பார்க்கப்பட்டிருந்தாலும், ஜாதகனுடைய தகப்பன் எதையும் கூட்டவும், கலைக்கவும் சாமர்த்திய முடையவன், அநேக வஞ்சனை செய்யும் புத்தியுடையவன், எப்போ தும் போக விஷயத்திலேயே மனமுடையவன், வேசி ஸ்திரீகளுடன் சரசமாடுவதில் பிரீதியுடையவன், சுக்கிரன் காமினியம்சத்தில் இருந் தால் ஜாதகனுடைய பிதா சம்போக காலத்தில் விநோதமானவன், சூரியன் ஸ்ரீதராம்சத்திலிருந்தால் வியாபாரத்தால் ஜீவனமுடையவன், சொர்ண, ரத்ன பரீக்ஷை செய்பவன், கிறைய விக்கிறையங்களில் ஒழுங்காய் நடப்பவன், தனம் சம்பாத்தியத்தில் சமர்த்தன், வியா பாரப்பெருக்குடையவன், பால்யம் முதல் கீர்த்தியுடையவன், போகி, வியாபாரத்தில் நான்கும் தெரிந்தவன், இரத்தினம், நல்ல வஸ்திரம், தானிய முதலிய பற்பல வியாபாரமுடையவன், மத்திய அந்திய வயதில் யோகமுடையவன், தனவான், கீர்த்தியுடையவன், சுக முடையவன், க்ஷேத்திர லாபமுடையவன், பயிர்த்தொழிலில் அதிக பலன் அடைபவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், தன் ஜெனங்களிடத்தில் நல்ல யோகமுடையவன், எப்பொழுதும் வியா பார விருத்தியுடையவன், நாலாவழிகளிலும் தனம் சம்பாதிப்பான், கொஞ்சம் தர்ம சித்தியுடையவன், சுகமான க்ஷேத்திர சௌக் கியமுடையவன், வியாபார விருத்தியும், தானிய சேர்க்கையால் லாபமும் உடையவன், வாகனம் முதலிய நல்ல யோக முடைய வன், வெளி தேசங்களில் கீர்த்தியுண்டாகும், தடாகம், உத்யானம் முதலிய தர்மம் செய்பவன், வயோதிக வயதில் தர்மத்தைச் செய்து புத்திரமூலம் சுகமடைந்து தேவதா பக்தி, குரு பக்தி இவற்றுடன் கூடினவன், தீர்த்தயாத்திரா பலனடைந்து கொண்டாடப்பட்ட கீர்த்

தியுடையவனாகி பேரன் தரிசனத்தால் சந்தோஷ மடைந்து நல்ல கீர்த்தியுடையவனுவான், ஜாதகனுடைய க்ஷேம திசையில் பிதா மரிப்பான்.

(177) ஜென்ம லக்கினம் மகரம் (தனதாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபன் சந்திரனுடன் கூடி தன்னுச்சத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டிருந்தால் நான்காம் பாவத்தில் சுக்கிரன் கேதுவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் தாய் மூலம் விசேஷ சௌக்கிய முடையவன், ஜாதகன் தாய் குணவதி, சாந்தமுடையவள், கணவனுடைய மனதை அனுசரித்து நடப்பவள், அன்னதானம் செய்வதில் பிரீதியுள்ளவள், புண்ணியவதீ, வம்சத்தில் பாக்கிய விருத்தியுடையவள், புத்திரனுக்குப் பிரியத்தைச் செய்பவள், ஆயினும் சமர்த்தை, கடுத்த பேச்சுடையவள், ஜாதகனுடைய க்ஷேமதிசையில் மரிப்பாள்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் மகர லக்கினத்திற்கு 177-விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட மகர லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் மகர லக்கின பலனின் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்று அறியவும்.

——:0:——

கும்ப லக்கின ஜாதகம்.

——(*⁎*)——

(1) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்த்துராம்சம்) ஆகி ஓராம் பாவத்தில் பிறந்தவன், சாத்துவீகன், குணம் நிறைந்தவன், பல பாஷைகளில் விசாரம் உள்ளவன்.

(2) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்த்தராம்சம்) ஆகி இரண்டாம் பாவத்துக்குடைய குரு பத்தாமிடமான கேந்திரத்தில் இருந்தால் வாசாலகன், சாதுரியமுள்ளவன், யுக்தியுடையவன், தெலுங்கு பாஷையில் கெட்டிக்காரன், சாகித்தியம் அறிந்தவன், லக்ஷணமுடையவன்.

(3) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்த்தராம்சம்) ஆகி ஓராம்பாவமாகிய லக்கின கேந்திரத்தில் கேது இருந்து ஏழில் செவ்வாயிருக்கப் பிறந்தவன், கொஞ்சகாலம் துராச்சாரபரன், வேசி ஸ்திரீ சேர்க்கையால் பாபம் செய்வான், நீச்ச ஸ்திரீ சங்கமமுள்ள பல ஜாதி ஸ்திரீ சேர்க்கையுள்ளவன்.

(4) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்த்தராம்சம்) ஆகி நீச்சனுகி சனி மூன்றும் பாவத்திலிருந்தால் முன்பின் சகோதரனில்லாதவன், மூத்த சகோதரி ஒருத்தி வெகு காலம் ஜீவித்திருப்பாள்.

(5) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்த்தராம்சம்) ஆகி பூர்வாம்சத்தில் பிறந்தவனுக்குப் புத்திரஸ்தானுதிபதி பத்தாமிடத்தில் குரு சந்திரனிருவருடன் கூடியிருந்து புத்திர ஸ்தானத்தைச் சனி பார்த்தால் ஜாதகனுடைய முதற் பிள்ளை நாசமடைவான், ஜாதகனுக்கு ஐந்து, ஆறு புத்திரனும், மூன்று பெண்களும் உண்டு, ஒரு பெண் பாலியத்தில் விதவையாகிக் கொஞ்சகாலத்தில் மரிப்பாள் என்றும், இரண்டாவது பெண் கர்ப்பத்தால் மரிப்பாள் என்றும், புத்திர சுகமென்றும், பெண்ணுல் சோகமும் உண்டாகுமென்றுஞ் சொல்லுவர்.

(6) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்த்தராம்சம்) ஆகி ஏழாமிடத்துக்குடைய சூரியன் ஒன்பதில் நீச்சமடைந்து ஏழாமிடத்தில் ராகு செவ்வாய் கூடியிருந்தால் ஜாதகன் பாலிய விவாகம் அடைந்து பல ஜாதி ஸ்திரீ புணர்ச்சியும் அடைவான்.

(7) ஓராவது பாவம் கும்பமாகில் ஜாதகன் நிலேயான புத்தியுடையோன், பிரியமாய்ப் பேசுகிறவன், அழகிய தேகமுடையவன்,

நல்ல சரீரம், அழகியமுகம், சித்தி உடையவன், புத்திரமித்திரர்களுக்கு நாயகன்.

(8) இரண்டாவது பாவம் மீனமாகில் ஜாதகன் தனதான்ய லாபம், மாதா பிதா சம்பாதித்த பொருள் சேரும் சந்தேகமில்லை.

(9) மூன்றுவது பாவம் மேஷமாகில் ஜாதகன் அன்னிய ஜாதி சிநேகம் செய்பவன், பரோபகாரம் செய்பவன், வித்தையுடையவன், அரசர்களால் வெகுமதிக்கத்தக்கவன்.

(10) நான்காவது பாவம் ரிஷபமாகில் ஜாதகன் நிச்சயமான சுகம், பலவிதமான போகாதிகள், விருத, நேம நிஷ்டையுடையவன்.

(11) ஐந்தாவது பாவம் மிதுனமாகில் ஜாதகன் குணத்துடன் கூடியதும், நல்ல நடவடிக்கை அழகுடன் கூடியதும், பலத்துடன் கூடியதுமான பெண் சந்ததி பிறக்கும்.

(12) ஆறுவது பாவம் கடகம் ஆகில் ஜாதகன் அரசர்க்கு நிகரான், அழகிய புத்திரர்களையுடையவன்.

(13) ஏழாவது பாவம் சிங்கமாகில் ஜாதகன் கொடூரமாய்ப் பேசும் மனைவியுடையவன், கண்ணழகன், சபல புத்தியுடையவன், பொய் பேசுபவன், அற்ப சந்ததி உடையவன்.

(14) எட்டாவது பாவம் கன்னியாகில் ஜாதகன் அயலூரில் மரணம், வீட்டில் மனைவி முதலியோர் அழுது கர்மங்களை விதிப்படி செய்வர்.

(15) ஒன்பதாவது பாவம் துலாமாகில் ஜாதகன் ஆசாரம் ஒழுக்கம், செய்கை இவற்றில் பெயரெடுப்பான், தேவர்களைப் பூஜித்தல், பிராமணரிடம் பக்தி இவையுடையவன், அதிதிகளை பூஜிப்பதில் விருப்பமுள்ளவன்.

(16) பத்தாவது பாவம் விருச்சிகமாகில் ஜாதகன் தயையற்றவன், பெரியோர், தேவர் அதிதிகள் இவர்களிடம் பக்தியற்றவன்.

(17) பதினோராவது பாவம் தனுசு ஆகில் ஜாதகன் தனவான், சமர்த்தன், வில்வித்தையில் வல்லவன், புத்திர பௌத்திரர்களுடன் கூடியவன்.

(18) பன்னிரண்டாவது பாவம் மகரமாகில் ஜாதகன் எப்போதும் ஆடுவதில் பிரியன், நதி, வாவி, தடாகம் முதலியவைகளில் தன விரயம்.

(19) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி லக்கின பாவாதிபன் பாபருடன் கூடி கேந்திரகோணங்களிலிருக்க, சந்திரன் பாபச் க்ஷேத்திரத்தை யடைந்திருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டம் உண்டாகும், முத்காம்சத்தில் சர லக்கினங்களில் பிறந்தவனுக்குப் பாலாரிஷ்டம் உண்டாகாது, சர லக்கினத்தில் முத்காம்சத்தில் உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு மரணச்சமமான அரிஷ்டம் உண்டாகி ஜீவிப்பான், வெகுவான அரிஷ்டத்தால் கெடுதலால் மூன்று வருஷம் வரை கஷ்டமுண்டாகும், முத்காம்சத்தில் சர லக்கினத்தில் பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டமுண்டாகிச் சீக்கிரமாக ஆரோக்கியமும், சௌக்கியமுண்டாகும், முத்காம்சத்தில் உபய லக்கினங்களில் ஜெனித்தவனுக்குப் பாலாரிஷ்டத்தால் மரணம் உண்டாகும்; ஸ்திர லக்கினங்களில் முத்காம்சத்தில் ஜெனித்தவன் சகோதரர்களோடு நாசமடைவான், மூன்றும் பாவத்தில் பாபரிருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் மரணமடைவன்.

(20) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சுபருடன் கூடி தன்னுச்சத்தில் அல்லது சுயக்ஷேத்திரத்தில் நான்காம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஜெனித்தவன்.

(21) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி சுக்கிரன் சுயக்ஷேத்திரத்தில் சுபருடன் கூடியிருந்தாலும், அல்லது குருவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் தன்னுடைய தாய் வீட்டில் பிறந்தவன்.

(22) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி தன்னுடைய நவாம்சத்தில் இருந்தால் ஜாதகன் பெரிய நதிப்பிராந்தியதேசத்தில் பட்டணத்தில் கிழக்கு மேற்குத் தெருவில் நாராசம் சமீபமாகவுள்ள வீட்டில் ஜெனித்தவன், உத்தராம்சத்தில் பிறந்தவன் தெற்கு பார்த்த வாயிற்படியுள்ள வீட்டில் பிறந்தவனாவான். சர லக்கினங்களில் நான்காம் பாவாதிபதி தன் நவாம்சத்தில் இருக்கும் போது ஜெனித்தவன், முன் சொன்ன லக்ஷணமுள்ள வீட்டில் ஜெனனமானவன், உபய லக்கினங்களில் மேலே சொல்லியிருக்கிற லக்ஷணப்படிக்குள்ள வீதியில் ஜாதகன் முன் சொல்லியிருக்கிற லக்ஷணப்படி உள்ள வீட்டில் குக்கிராமத்தில் ஜெனித்தவன், மீன லக்கினத்தில் பிறந்த ஜாதகனுக்கு ஒரு பக்கம் இடிந்து விழுந்துபோன வீட்டில் ஜெனனம் நேரிடும்,

ஸ்திர லக்கினத்தில் ஜெனனமால் ஜாதகன் வெகு சீக்கிரமாய்ப் பிரஸவ காலத்தில் பிரசவிக்கப்பட்டவன், ஜாதகனுடைய ஜென்ம லக்கினம் சர லக்கினமானால் ஜாதகன் கொஞ்சம் கொஞ்சம் துக்கமடைவன், உபயலக்கினத்தில் நான்காம் பாவாதிபன் முன் சொன்னபடி நான்காம் பாவத்திலிருக்கும்போது ஜெனித்தால் ஜாதகன் அதிக துக்கமடைபவன், ஸ்திர லக்கினத்தில் ஜெனனமானால் ஜாதகன் தாய் தீர்க்காயுளுடையவள், தாய் வம்சத்தில் சுபமுள்ளவள், ஜாதகனுடைய அம்மான் பிரபலமும் சுபமுமுடையவன்.

(23) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி பூர்வபாகத்தில் சனி கேந்திரத் திரிகோணங்களிலிருக்க, சுக்கிரன் குருவுடன் கூடி கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையவன், சனி பாபரால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் மத்திய ஆயுளடைவான்.

(24) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகிச் சூரியன் கேந்திர திரிகோணங்களிலிருந்து சுபராலும் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன்.

(25) ஜென்ம லக்கினம் கும்பம் (மூத்காம்சம்) ஆகி மூன்று, ஆறு, எட்டு முதலிய பாவங்களில் சூரியன் இருந்து, பாபக்கிரகங்களின் மத்தியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திய ஆயுளுடையவன், சகோதர சௌக்கியம் உடையவன், மூத்த சகோதரனுடன் கூடிய ஸ்ரீமான், இளைய சகோதர மில்லாதவன், ஜாதகன் தகப்பனுடைய சகோதரிகள் இருவர்கள் சுமங்கலியாய் மரிப்பார்கள். தன் தகப்பன் திடமுள்ளதும், காத்திரமுள்ளதுமான சரீரமுடையவன், அரசாங்கப் பிரசித்தியுடையவன்.

(26) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி பலத்துடனிருந்தால் ஜாதகன் தகப்பனைக் காட்டிலும் மேன்மையான குணமுடையவன், கெம்பீரமான நிறைந்த புத்தியுடையவன், கொஞ்சகாலம் சுதந்தரமில்லாதவன், பிறகு சுதந்தர பாக்கிய முடையவன், எப்பொழுதும் அநாசாரமுடையவன், பரஸ்திரீ சேர்க்கையால் பாபமுடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், அரசாங்க ஜென சிநேகமுடையவன்.

(27) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகிச் சந்திரனுக்கு மூன்றாமிடத்தில் சூரியனிருந்து, சூரியன் நின்ற ஸ்தானாதிபதி

தன் நவாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கர்ப்பத்திலி ருந்தே ஸ்ரீமானுனவன், போகி, தனிகன், கீர்த்தியுடையவன், சுக முடையவன், பாலியத்தில் சௌக்கிய அபிவிருத்தியுடையவன், மத் திய வயதில் கொஞ்சம் தரித்திரத்தை யடைவான், கொஞ்சகாலம் வரை ரேகாயோகத்தால் கஷ்டமும், பிறகு பாக்கியம் மேலும் மேலும் விருத்தியுடையவன்.

(28) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காரம்சம்) ஆகிப் பூர்வபா கதகில் சந்திரன் கேந்திரத்திரிகோணத்தை யடைந்திருக்க, நான்காம் பாவாதிபதி தன் நவாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க் காயுளுடையவள், தாய் வம்சத்தில் விசேஷ பாக்கியமுடையவள், தன் தாய் வெகுகாலம் ஜீவிப்பவள், தாய் வம்சத்தில் நல்ல பாக்கிய மும், அம்மான் பிரபலமும், சுபமும் உண்டாகும்.

(29) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காரம்சம்) ஆகித் தாய் வழிப்பாட்டன் ஸ்தானுதிபதியான சனி ஐந்தாம் பாவத்தில் வர்க் கோத்தமாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகனுடைய தாய் வழிப் பாட்டன் பிரசித்தனுகவும், மகாராஜானுக்கிரக மடைந்தவனுகவும், அன்ன நேமம் என்னும் விரதத்தை யுடையவனுக லோகத்தில் மிகப் பெரிய கீர்த்தியுடையவனுகவுமிருப்பான்.

(30) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காரம்சம்) ஆகி அம்மான் ஸ்தானுதிபனுன ஆறும் பாவாதிபன் சந்திரன் தன்னுச்சத்தில் கேந்திரத்தை யடைந்திருக்க, சுக பாவாதிபன் தன் வீட்டிலேயே யிருந்தால் ஜாதகனுடைய அம்மான் வெகுகாலம் ஜீவித்திருப்பவன், தன் தாய் குணமுடையவள், சுத்தமுள்ளவள், பதிபக்தியுடன் கூடியவள்.

(31) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காரம்சம்) ஆகிச் சனி வர்க் கோத்தமாம்சத்தை அடைந்திருந்து, நான்காம் பாவாதிபன் குருவு டன் கூடியிருந்தால் ஜாதகன் மத்திய ஆயுளுடையவன் என்று எண் ணப்படுகிறது; மத்திய வயதுடையவனுயினும் புத்திரனில்லாததால் அதிக சஞ்சலமடைவான்.

(32) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காரம்சம்) ஆகி லக்கினத் திற்கு மூன்றும் பாவத்தில் பாபக்கிரக மிருந்தால் ஜாதகனுக்குச் சகோதர உற்பத்தியை நாசம் செய்யும், ஜாதகனுடைய மூத்த சகோ தரன் நாசமடைவான், ஜாதகன் இளைய சகோதர யோகமுடையவன்,

ஒரு சகோதரனும், இரண்டு சகோதரிகளும் இருப்பார்கள், அவர்க ளில் ஒரு சகோதரி சௌக்கிய முடையவள், சுவர்ணபிம்பம் போன்ற காந்தியுடையவள், ஆபரண பூஷிதையானவள், மற்ற ஒரு சகோதரி விதவையாகி எப்பொழுதும் துக்கத்தால் பீடிக்கப்படுவாள்.

(33) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காராம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் புதனுடன் ராகு கூடியிருக்க அந்த பாவாதிபதி சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குச் சகோதர வர்க்கத்தில் அரிஷ்டமுண்டா கும், சகோதரர்கள் கிரகசங்கை தோஷத்தால் பீடிக்கப்படுவார்கள், அந்த தோஷத்துக்குச் சாந்தியாகப் புத்திமானானவன் சாந்தி செய்ய வேண்டியது, சொர்ணத்தால் செய்யப்பட்ட ராகுப் பிரதிமையை அர்ச்சித்து ஜோதிஷனுக்குத் தானம் செய்தும், ஞாயிற்றுக்கிழமை யில் விரதமும், அந்த விரத தினத்தில் ஆகாரமில்லாமல் ஒரு வருஷம் வரை அனுஷ்டித்தலும், புதப்பிரீதியும் செய்து இந்த மூன்று வித மான கல்பங்களால் சாந்தி செய்தால் சகோதரர்களுக்குச் சௌக்கிய முண்டாகும்.

(34) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காராம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் பிறந்த ஜாதகனுக்குக் குரு கேந்திரத் திரிகோணங்களில் இருந்தால் ஜாதகன் தனவானாகவும், பாக்கிய விருத்தியுடையவனாகவு மிருப்பவன், ஜாதகன் புத்திரனுடையவன், அறிவுடையவன், வித்தை சௌக்கியத்துடன் கூடினவன்.

(35) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் சுபருடன் கூடியோ, சுபரால் பார்க் கப்பட்டோ யிருந்து, லக்கின பாவாதிபனும் வர்க்கோத்தமாம்சத்தை யடைந்திருந்து, பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் பத்தாம் பாவாதிபதியால் வர்க்கோத்தமாம்சத்திலிருக்கப்பட்ட லக்கின நாதன் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் பதினாறு வயதுக்குமேல் சௌக்கியமும், சுயப் பிரபலமுமடைபவன், தனவரவுடையவன், அர சாங்கத்தில் புகழுடையவன், ஒன்பதாம் பாவாதிபதி திசையின் முடி வில் ஜாதகனுக்கு அரசாங்க ஜெனங்களின் நேசமும், வீட்டில் லக்ஷ்மீ விலாசமும் உண்டாகும்.

(36) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காராம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் சுக்கிரன் சுயக்ஷேத்திரத்திலிருக்க ஏழாம் பாவாதிபன் பலத்துடனிருந்தால் ஜாதகன் நல்ல மனைவி முதலிய சௌக்கிய

முடையவன், ஏழாம் பாவாதிபன் பாபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகன் இரண்டு தாரமுடையவன், ஆசையுடையவன்.

(37) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் மனைவி கொஞ்சம் ரோகமுடையவள், கிரக சங்கையால் பீடிக்கப்பட்டவள், ஸந்தான நாசத்தால் சோகத்தால் மிகவும் துக்கமுடையவள் என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

(38) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி எந்த லக்கினத்தில் பிறந்தாலும் ஜாதகனுக்கு லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் பாபக்கிரகமிருந்தால் விவாகம் என்று யத்தினப்பட்டால் அப்பாபகர்மத்தால் ஜாதகனுக்கு விவாகத்திற்கிடையூறு உண்டாகும். இரண்டு மூன்று தடவை பிரயத்தினப்பட்டும் பலனில்லாமல் ஆகிப் பிறகு விவாகயோகமடைவன், லக்கினத்திற்கு மூன்றுமிடம் (மாமனார் வீடு) பாபக்கிரகத்தால் அடையப்பட்டிருக்கிற ஜாதகனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் பெண்ணைக் கொடுக்கும் மாமனுருக்கு பெரிய விபத்துண்டாகும், மூன்றுமிடத்தில் பாபக்கிரகமிருந்தால் (தலைப்பிள்ளை) மரித்துவிடும்.

(39) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி யிருந்து சனி நின்ற ராசிநாதன் பாபருடன் சம்பந்தப்பட்டிருந்தால் ஜாதகன் காலாந்தரத்தில் நல்ல புத்திரனுடையவன், அல்லது வேறு மனைவியிடம் புத்திரனையடைவான்.

(40) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் குருவுடன் சுக்கிரன் விரயாம்சத்தில் கூடியிருந்தால் ஜாதகன் அற்ப சந்தானமுடையவன், ஒன்று அல்லது இரண்டோ மூன்றோ தீர்க்காயுளையடையும், மற்றவை நாசமாய்விடும், சந்திரனுக்குக் கேந்திரத்தில் குரு இருந்தால் ஸாம்ராஜ்ய கேஸரீ யோகத்தில் ஜெனித்தவனுக்கு சந்தானம் அற்பமாயிருக்கும்.

(41) ஜென்ம லக்கினம் கும்பம் (முத்காம்சம்) ஆகி குரு இருக்கப்பட்ட கேந்திரத்தில் சுக்கிரனிருந்தாலும், சுக்கிரன் இருக்கும் கேந்திரம் தவிர்த்து மற்ற கேந்திரத்தில் குரு இருந்தாலும், ஒருவருக்கொருவர் க்ஷேத்திரம் மாறியிருந்தாலும் ஜாதகன் பெரிய அரசனால் வெகுமானிக்கப்படுபவன், கொஞ்சகாலம் ரேகாயோகமிருந்து பிறகு பாக்கிய மடைவான்.

(42) ஜென்ம லக்கினம் கும்பம் (திரைலோக்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் பூர்வபாகத்தில் பிறந்தவனுக்குச் சமுத்திரப் பிராந்தியத்தில் பட்டணத்தில் ஜெனனமும், வாசமும் நேரிடும், ஜாதகன் நல்ல ஆகிருதி உடையவன், ஜாதகனுடைய தாய் கொஞ்சமான பிரசவ வேதனை அடைவாள். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு வனப்பிராந்திய குக்கிராமத்தில் ஜெனனம் நேரிடும், ஜாதகன் இரண்டு சகோதரிகளுடையவன், ஆசையுடையவன், மூத்த சகோதரனால் சுகமடைவன், ஜாதகனுடைய தாய் பிரசவத்தில் அதிக வேதனையடைவாள்.

(43) ஜென்ம லக்கினம் கும்பம் (திரைலோக்யாம்சம்) ஆகி சந்திரன் கன்யாம்சத்தில் மேஷ ராசியில் இருந்து, நான்காம் பாவாதிபன் தன் உச்சராசியை யடைந்திருந்தால் ஜாதகனுடைய தாய் வெகுகாலம் ஜீவித்திருப்பவள், தன் தாய் சம்பூர்ணமான குணமுடையவள், சகோதரருடன் கூடியவள், நல்ல பாக்கிய வம்சத்தில் உற்பவித்தவள், வம்சவிருத்தி யுடையவள், சுபத்தை யுடையவள், தாய் வம்சத்தில் விசேஷ சௌக்கியமும், ஜாதகனுடைய அம்மான் பிரபல சுகமுமுள்ளவன், ஜாதகன் தன் தகப்பனால் கொஞ்சம் சுகமுடையவன், அம்மானால் சௌக்கிய முடையவன், ஜாதகனுடைய தாயின் சகோதரி, பாக்கிய முடையவள், அவள் புத்திர புத்திரிகளுடன் கூடியவள்.

(44) ஜென்ம லக்கினம் கும்பம் (திரைலோக்யாம்சம்) ஆகி ஆறும் பாவாதிபதி சந்திரன் சுபாம்சத்தில் மூன்றுமிடத்தில் பலத்துடன் இருந்தால் ஜாதகனுடைய அம்மான் பிரபலமான ஆயுசுடையவன், ஜாதகனுடைய தகப்பன் வம்சத்தில் தரித்திர முடையவன்.

(45) ஜென்ம லக்கினம் கும்பம் (திரைலோக்யாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சுக்கிரன், கும்பாம்சத்தில் தன் உச்சராசியிலிருந்தால் தன் தகப்பன், மத்திம வயதுடையவன், விஷ்ணு, சிவபக்தியுடையவன், தேவபிராமண பக்தியுடையவன், அற்பசௌக்கியமுடையவன்.

(46) ஜென்ம லக்கினம் கும்பம் (திரைலோக்யாம்சம்) ஆகி சூரியன் கேதுவுடன் கூடியிருந்தாலும், கேதுவால் சூரியன் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகன் பிதா நிதான பாக்கிய முடையவன், ஜாதகன் பிதாவினுடைய வம்சத்தில் கொஞ்சம் வியாதியுடையவன், ஜாதகனுடைய மூன்றும் திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(47) ஜென்ம லக்கினம் கும்பம் (கிரைலோக்யாம்சம்) ஆகி ஏழாம் பாவாதி கேதுவுடன் கூடியிருந்தால் குரு இரண்டாம் பரியாயத்தில் கோச்சாரத்தில் கும்பராசியை அடையும்போது, அல்லது அதற்கு முன்பே மகரத்திலிருக்கும்போதேயாவது ஜாதகன் தன் பந்து வர்க்கத்தில் நன்கு பூஜிக்கப்பட்டுத் தன் மனைவி ரூபமுடையவளாக மாமனார் மாமியார் முதலானவர்களுடைய சௌக்கியத்துடன் விவாகத்தையடைவான்.

(48) ஜென்ம லக்கினம் கும்பம் (கிரைலோக்யாம்சம்) ஆகி பத்து, பதினொன்று, இரண்டு, ஒன்பதுக்குடைய இவர்கள் கூடி ஒரு ராசியில் பலத்துடன் கூடியிருந்தாலும், நேசபாவத்தை யடைந்திருந்தாலும் ஜாதகன் குதிரை, பல்லக்கு முதலியவை யுடையவனுயிருப்பான்.

(49) ஜென்ம லக்கினம் கும்பம் (கிரைலோக்யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதியும், நான்காம் பாவாதியும், ஒன்பதாம் பாவாதிபதியும், பத்தாமதிபதியும் லக்கினத்திலாவது, பத்திலாவது கூடி இருக்கின் ஜாதகன் வாகன லாபமுடையவன், சுக்கிரன் இவ்வாறு யிருந்தாலும் சதுரங்க பலமுடைய சதுரனுகவுமிருப்பவன்.

(50) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகிக் குரு லக்கினம் தவிர்த்துக் கேந்திரத்தில் விருஷபத்தில் உச்சாம்சத்தில் இருந்தாலும், அல்லது லக்கினத் திரிகோணத்தில் இருந்தாலும் ஜாதகன் இரண்டாவது கர்பத்தில் ஜெனித்தவன் அல்லது மூன்றுவது கர்பத்தில் ஜெனித்தவன், பின் சகோதரனில்லாதவன், பிறந்தாலும் மரித்து விடும், ஜாதகன் மூத்த சகோதரனுடன் கூடினவன், வேறு சிலர் ஒரு சகோதரி நீண்ட ஆயுளுடையவளாயிருப்பாளென்று சொல்லுகிறுர்கள்.

(51) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி நீச ராசியிலிருக்க நாம்காம் பாவாதிபதியும் நீச ராசியிலிருந்தால் ஜாதகன் வனப்பிராந்தியப் பிரதேசத்தில் குக்கிராமத்தில் ஜெனனமானவன்.

(52) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சந்திரனிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டம் உண்டு.

(53) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகி லக்கினம் தவிர்த்த கேந்திரத்தில் குரு விருஷப ராசியில் தன் உச்சாம்சத்தில்

இருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டம் சீக்கிரமாக நிவர்த்தியாகும், முன் புண்ணிய வசத்தால் சுகமுண்டாகும், ஜாதகனுடைய ஜென்ம திசையில் ஜாதகனுக்கு கொஞ்சம் பீடையும், இரண்டாம் திசையில் சுயபுக்தியில் பாலாரிஷ்டத்தால் கொஞ்சம் பீடையும் உண்டாகிச் சீக்கிரமாகவே நிவர்த்தியுமுண்டாகும், சம்பத் திசையில் தாய்க்குச் சுகமும், பிதுரு பீடையால் விசாரமும், ஜாதகனுடைய தகப்பனுக்கு மரணமும் உண்டாகி, சனி மிதுன ராசியில் கோச்சாரத்தில் வரும் சமயம் ஜாதகனுடைய தகப்பன் நிச்சயம் மரித்துவிடுவான், தகப்பனுடைய மரணத்தினுல் ஜாதகனுக்குப் பற்பல வழிகளிலும் மனோவாதையும், கஷ்டமும் உண்டாகும்.

(54) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்தில் இருக்க குரு நான்காம் பாவத்தில் சுபாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாய் குணமுடையவள், பாக்கியவம்சத்தில் பிறந்தவள், எப்பொழுதும் அன்னதானம் செய்வதில் பிரியமுள்ளவள், பந்துக்களுக்கு உபகாரம் செய்பவள், முன் பாபவசத்தால் கிலேசமுடையவள், வைதவ்விய வசத்தால் வீட்டிலேயே சதியாயிருப்பாள், ஜாதகனுடைய விபத்தார திசையின் கடைசியில் மரணத்தையடைவாள், தாய் வம்சத்தில் கொஞ்சம் சௌக்கியமும், கொஞ்சம் துக்கமும் உண்டாகும்.

(55) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகி குரு விருஷப ராசியில் சுதாம்சத்தை அடைந்திருந்தால் ஸாம்ராஜ்ய சகடயோகத்தில் ஜெனித்த ஜாதகன் சிவப்பு நிறமுடையவன், நல்ல ஆகிருதி உடையவன், (சூத்திர வம்சத்தில் ஜெனித்தவன்,) நல்ல மேதாவி, மூத்த சகோதரனை அடைபவன், சாத்துவீகன், அறிவாளி, ஞானி, நியாயவழியில் சம்பாதித்து நல்ல ஜீவனம் செய்பவன், நல்ல செய்கையும், எப்பொழுதும் ஆசாரமுமுடையவன், மத்திய வயதில் சௌக்கியமுடையவன், கொஞ்சம் காலம் ரேகாயோக பலனும், பிறகு சௌக்கியமும் உண்டாகும், இருபத்தைந்து வயதுக்குமேல் சுகமடைவான், (நான்காவது ஆச்ரமத்தை) சன்னியாசத்தை அடைவான், வயோதிக வயதில் ஞானம் நிறைந்தவனுவன், பாக்கிய யோகத்தையடைபவன்.

(56) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகிக் குரு சுபாம்சத்தில் கேந்திரத்தில் சுதாம்சத்தை யடைந்திருந்தால் ஜாதகன் வெளிதேசத்தில் சிஷ்யர் மூலம் விசேஷ சௌக்கியத்தையும், சுகத்தையும்

அடைபவன், அநேக சிஷ்யக் கூட்டங்களை உடையவன், வெளி தேசத்திலேயே வசிப்பவன், வடக்குத் திசையை யடைந்து பிரயாணங்கள் செய்து, அந்த தேசத்திலேயே சௌக்கியத்தையடைபவன், பற்பல வழிகளில் தனவரவுடையவன், அன்னதானம் செய்வதால் சுகமுடையவன், எப்பொழுதும் அன்னதானம் செய்யும் புண்ணியாத்துமா, சிவகைங்கரியம் செய்யும் புண்ணியமுடையவன்.

(57) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகி லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் ராகு இருந்து, அந்த ராகு சந்திரனுக்கு ஆரும்இடத்திலிருப்பவனுகவுமானல் அந்த ராகுவினுடைய திசையிலும், அந்தர் திசையிலும் விசேஷமான தனவரவுடையவனும், பதினுயிரத்துக்கு மேற்பட்ட தனமுடையவனுகவும், ராகு புக்தியில் விசேஷ சம்பத்தும், அநேக தர்மசித்தியும், சிவ தர்மத்தில் தீக்ஷையுடையவனும், ஏதோ கொஞ்சம் விஷ்ணுவுக்கும் தர்மம் செய்பவனுகவும், ஜாதகன் ஐந்தாம் திசையில் அதிக சுபமுடையவனும், தேசாந்திரத்திலும் விசேஷ கீர்த்தி உடையவனும், அரசனுல் கொஞ்சம் சுபமும், அநேக சிஷ்யர்களுடன் கூடியவனும், ஆஸ்தானத்தில் சௌக்கியமுள்ளவனுகவும், அன்றி அதியோகத்தில் பிறந்தவன் பிரசித்தனுயும், ஞான மார்க்கத்தில் விசேஷ அறிவுடையவனும் ஆவான்.

(58) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகி அம்ச லக்கினத்தில் சந்திரனிருந்து அதி யோகத்தில் ஜெனித்தவன் ஞானியாயும், சதா சத்துவகுணத்தையே பிரதானமாக உடையவனும், வெகு கீர்த்தியுடையவனும், ஐந்தாம் திசையில் குரு புக்தியில் யோகத்தையுடையவனும், சனி புக்தியில் கொஞ்சம் நோயுடையவனும், சீக்கிரம் சௌக்கியத்தையும் அடைந்து, அத்திசை முழுவதும் நல்ல பாக்கியமுடையவனுகவு மிருப்பான்.

(59) ஜென்ம லக்கினம் கும்பம் (சுதாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபன் சுபக்கிரகங்களால் நன்கு பார்க்கப்பட்டால் ஜாதகன் இந்த லோகத்தில் நல்ல புண்ணியாத்துமாவாகவும், அந்தியத்தில் ஞானத்துடனும் இருந்து பரலோகத்தையும், சுகத்தையும் அடைவான்.

(60) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் ஜென்ம லக்கினத்தில் புதனிருக்க, நான்காம் பாவத்தில் சந்திரனிருந்தாலும், நான்காம் பாவத்தை சந்திரன் பார்த்தாலும்,

காட்டுத் தேசத்தில் அக்கிரகாரத்தில் நதி தீரத்தில் ஜாதகனுக்கு ஜென னம் நேரிடும். உத்தராம்சத்தில் பெரிய கிராமத்தில் ஜெனனம் நேரி டும், ஜாதகன் நான்காவது கர்ப்பத்தில் அல்லது மூன்ருவதான கர்ப் பத்திலேயே ஜெனித்தவனுவான்.

(61) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி பூர்வபா கத்தில் சந்திரன் தன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் தாய்க்குப் பிரசவ வேதனை அற்பமாயிருக்கும், நான்காம் பாவாதிபன் செவ்வா யால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் உத்தராம்சத்தில் விசேஷ பாதை யடைவாள்.

(62) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி லக்கின பாவாதிபன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டபயம் உண்டாகும், ஜென்ம திசையில் இரண்டு, மூன்று வாரம் பாலரோகத்தால் பீடிக்கப்படுவான், லக்கினுதிபதிக்குச் சுபர் பார்வை யிருந்தால் அக்காலம் தாய்க்கு சுகமும், ஜாதகனுக்குச் சுக மும் உண்டாகும்.

(63) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி ஸ்திர ராசியில் லக்கின பாவத்திலேயே யிருக்க குரு லக்கி னத்திற்கு இரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு எழுபத்து மூன்று வயது பூர்ணமாக உண்டாகும், ஜாதகனுக்கு முப்பத்திரண் டாவது வயதில் தேக பீடையும், நாற்பதாவது வயதில் திரும்ப கொஞ்சம் பீடையும், ஐம்பத்தாருவது வயதில் சூலை நோயும், சாந்தி யால் சுகமும் உண்டாகும், எட்டாம் பாவாதிபதி நவாம்சத்தில் இருக் கப்பட்ட ராசியிலாவது, அந்த நவாம்சத்தின் திரிகோணத்திலாவது, சனி கோச்சாரத்தில் வருங்காலத்தில் தனக்குச் சமமான ஜெனங்க ளின் நாசமும், அல்லது தனக்குத் தேக பீடையும் உண்டாகும், சாந்தி செய்தால் சுக முண்டாகும்.

(64) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி சூரி யன் குருவுடன் கூடியிருக்க ஒன்பதாம் பாவத்தில் சுக்கிரன் இருந்தா லும், ஒன்பதாம் பாவத்தைச் சுக்கிரன் பார்த்தாலும், ஜாதகனுடைய பிதா சுகமுடையவன், சூரியன் ஷஷ்டி ராசியில் (ஸ்ரீநாதாம்சத்தை) விஷ்ணு அம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் பிதா விஷ்ணு பக்தி யுடையவன், தேவபிராமண விசுவாசமுடையவன், உத்தியோகத்தில் சமர்த்தன், நல்ல அறிவாளி, க்ஷேத்திர, வியாபாரம் கொஞ்சம் உடை

யவன், அற்பவித்தையுடையவன், அதிக தனமுடையவன், ஜாதகனுடைய மூன்றும் திசையில் பிதா மரணமடைவான்.

(65) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதியான சுக்கிரன் பலமுடையவனுகி மூன்றுமிடத்திலிருக்க சந்திரன் தன் உச்ச ராசியை அடைந்திருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சௌக்கிய முடையவள், தாய் குணவதி, சுத்தமுடையவள், சுத்தமான வம்சத்தில் பிறந்தவள், தாய் வம்சத்தில் கொஞ்சம் சுகமுடையவள், தாய் ஆயுளுடையவள், ஜாதகனுடைய மூன்றும் திசையில் மீனராசியின் அந்தியத்தில் சனி யிருக்கும்போது ஜாதகனுடைய தாய் மரிப்பாள், வேறு சிலர் மேஷம் முதலில் சனி வரும் சமயம் தாயின் மரணத்தைச் சொல்லுகிறுர்கள்.

(66) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகித் தனுச்சத்தில் இருக்கப்பட்ட செவ்வாயுடன் சனி கூடியிருந்து லக்கினத்திற்கு மூன்றில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவன், பின் சகோதரன் ஒருவன் ஆயுளுடனும், சகோதரி இல்லாதவனும் ஆவான்.

(67) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் வாதரோக பீடையுடையவன்.

(68) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி புதன் லக்கின பாவத்தில் இருந்தால் ஜாதகன் கல்வி அறிவுடைய விவேகியாவான், எழுத்துவித்தையில் நல்ல நிபுணன், விசேஷ விஷ்ணுபக்தியுடையவன், வேத சாஸ்திரங்களை விசேஷமாயறிபவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், கொஞ்சமான பிதுரார்ஜித முடையவன், சுயார்ஜிதம் விசேஷமாய் சம்பாதிப்பான்.

(69) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் அழகாய்ப் பேசுபவன், சாதுரியமான யுக்தியையுடையவன்.

(70) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகிப் பன்னிரண்டாம் பாவத்தில் சனி செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகன் ராஜாங்க உத்தியோகத்தால் ஜீவனம் செய்பவன், அந்த செவ்வாய் ராகு கேதுக்களுடன் கூடியிருந்தால் பன்னிரண்டாம் பாவத்திலேயே யிருந்தால் அயல் தேசத்தில் தனயோகமுடையவன், அரசாங்கத்தில்

பிரசித்தியும், அரசாங்க ஜெனங்களால் அடையப்படுபவனுமாவான், ஜாதகனுக்கு ஜென்ம திசையில் பாலரோகம் ஐந்து வயதுவரை அவதிப்படுத்தும், ஆரும் வயதில் அக்ஷராப்பியாசமும், (எட்டாம் வயதில் உபநயமும்) பதினாறு வயதுக்குப் பிறகு சுகமும், சுயப்பிரபலமும், தனவரவும் ஜாதகனுக்கு பதினேழு அல்லது பதினெட்டாவது வயதில் விவாகமும் உண்டாகும், ஜாதகன் ஜென்ம தேசத்திலேயே விவாகமும், மாமியார், மாமனார் சுகமும் உடையவன், தன் மனைவி ரூபவதி, பாக்கியவம்சத்தில் பிறந்தவள், விவாகத்திற்குப் பிறகு ஜாதகன் சுகமும், சுயப்பிரபலமும், விசேஷமும் உடையவன்.

(71) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி மூன்ரும் பாவம் ஜாதகனுக்கு மாமனார் பாவம் ஆகலால் அந்த மூன்ரும் பாவம் சுபக்கிரகங்களால் அடையப்பட்டிருக்கிற ஜாதகனுக்கு பெண் கொடுக்கும் மாமனருக்கு விசேஷ சுகமுண்டாகும், ஜாதகனுடைய மாமனருக்குப் பலதேசங்களிலும் புகழுண்டாகும், ஜாதகனுடைய மாமனர் பல்லக்கு முதலிய யோகமுடையவன், நீச அரசாங்கத்தில் மேம்பாடான உத்தியோக பாக்கியமுடையவன், தனதானியமுடைய ஸ்ரீமான், தாமத சுபாவமுடையவன், காமுகன், எப்பொழுதும் அனுசாரமுடையவன், யோகமுடையவன், தனமுடையவன், சுகமுடையவன்.

(72) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகித் தன்னுடைய உச்சராசியில் செவ்வாயிருந்து ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தத்து புத்திரன் மூலமாகச் சுகமடைபவன், மூன்ரும் திசையில் தன் குருப் பிரபல முடையவன், அவர் மூலம் ஜாதகன் அதிக சுபமடைவன், அநேக கிராமங்களுக்கு அதிகாரியாவான், இருபத்திரண்டாவது வயதில் பிரசித்தியும், சில கிராமங்களுக்கு அதிகாரியுமாவன், மூன்ரும் திசையில் பெரிய உத்தியோகசித்தியும், பிரபலமும் உண்டாகும், மூன்ரும் தசை சுயபுக்தியில் ஜாதகன் விவாகமடைவான்.

(73) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் குருவும், ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனும், இருந்தாலும், அல்லது ஒன்பதாம் பாவம், மூன்ரும் பாவம், பதினேராம் பாவம், பன்னிரண்டாம் பாவம் முதலிய இடங்களில் குரு சுக்கிரர்கள் கூடி மேற்குறித்த இடங்களில் எங்கு இருந்தாலும் சக்கரயோகமென்று சொல்லப்படுகிறது, அந்த சக்கிரயோகத்தில் பிறந்தவன்

சுகி, நல்ல வாசாலகன், நல்ல குமார சரீரமுடையவன், முப்பத்தைந்து வயதுக்குமேல் நல்ல கீர்த்தியுடையவன், அநேக க்ஷேத்திரம், தனம் முதலியன சம்பாதிப்பவன், முப்பத்தாறுவது வயதில் புதையல் லாப முடையவன், இருபதாயிரம் தனமுடையவன், லாபத்தோடு லாப மான தனமுடையவன், எப்பொழுதும் விஷ்ணு பூசையுடன் கூடிய வன், தேவப்பிராமணர்களை ரக்ஷிப்பவன், கொஞ்சம் லோப சுபாவ முடையவன், மனைவி, புத்திரன் முதலியவர்களையுடையவன், அவர்க ளுடன் கூடியிருப்பவன், இரண்டு புத்திரர்கள் வெகு ஆயுளுள்ளவர்க ளும் அப்படியே இரண்டு புத்திரிகளுமுடையவன்.

(74) ஜென்ம லக்கினம் கும்பம் (தனஞ்ஜயாம்சம் ஆகி பத்திர யோகத்தில் ஜெனித்தவன், புத்திரமூலம் விசேஷ சௌக்கியமுடைய வன், சாம்ராஜ்ய சகடயோகத்தில் ஜெனித்தவன் நல்ல பாக்கிய முடையவன் ஸ்திரீ போக முடையவன், பெரிய நதி, * (நதம்) முத லிய யாத்திரை செய்பவன், இனிமையான ஆகாரத்தைப் புசிப்பவன், சகோதரனுடன் கூடியவன், அரசனாலும் வணங்கக் கூடியவன், (அல் லது அரசனுடன் கூடவேயிருப்பவனென்றும் பொருள் ஆகிறது,) பணமுடையவன், தியாகி, வாகனமுடையவன், பிரசித்தியான வைப வமுடையவன், தன்னுடைய நல் மனைவியிடம் சுகமுடையவன், எப் பொழுதும் அன்னதானம் செய்யும் தாதா, வெகுமானிக்கப்பட்ட வன், நல்ல ஜீவனமுடையவன், கெம்பீரமாயும், இனிமையாயும், குளிர்ந்த வசனமும் உடையவன், நல்ல புத்திரனையுடையவன், ராஜ சபையில் நன்கு பூஜிக்கப்படுபவன், சம அங்க புஷ்டியுடையவன், நல் முகமுடையவன், நல்ல தயாளுவாயிருப்பவன்.

(75) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி பூர்வபாகத் தில் லக்கின பாவாதிபதி தன் உச்சாம்சத்தில் பதினோராம் பாவத்தில் இருந்து, நான்காம் பாவாதிபதி விருச்சிகராசியிலிருந்தால் ஜாதகனுக் குச் சமுத்திர சமீபத்தில் ஜாதகனுக்கு ஜெனனம் நேரிடும். உத்தராம் சத்தில் பிறந்தவனுக்கு நதி தீரத்தில் பட்டணத்தில் ஜெனனம் நேரி டும், தான் நான்காவதான கர்ப்பத்தில் அல்லது ஆறுவது கர்ப்பத் தில் ஜெனனமானவன், முன் பின் சகோதரனில்லாதவன், உண்டா னாலும் மரித்துவிடும்.

---

* (நதம்) என்பது கிழக்கிலிருந்து மேற்கே போகிற நதிக்குப் பெயர்.

(76) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி பூர்வாம்சத்தில் இரட்டை ராசியில் எட்டாம் பாவத்தில் சந்திரன் இருக்க லக்கின பாவத்தில் ராகு இருந்தாலும், லக்கின பாவத்தை ராகு பார்த்தாலும் ஜாதகனுடைய தாய் பிரசவகாலத்தில் வெகு வேதனையடைவாள், நான்காம் பாவத்தில் சுக்கிரனிருந்தாலும், சுக்கிரன் நான்காவது பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகனுடைய தாய் பிரசவகாலத்தில் அல்ப வேதனையடைவாள், பயமுண்டாகும், சந்திரன் குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும் பாலாரிஷ்ட தோஷம் நீங்கி விடும்.

(77) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி பதினோராம் பாவத்தில் சனி இருக்கப் பத்தாம் பாவாதிபன் சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் மத்தியாயுள் யோகமுடையவன், எழுபத்திரண்டு வயது பூர்ணமாக உடையவன், முப்பத்தாறுவது வயதில் தேக பீடையுடையவன், நாற்பதாவது வயதிலும் அப்படியே பீடை உண்டாகும், ஐம்பத்தாறுவது வயதில் அதே பீடையுண்டாகும், சாந்தி செய்தால் சுகமுண்டாகும்.

(78) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி சூரியன் வர்க்கோத்தமாம்சத்தில் ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களில் எங்கு இருந்தாலும், ஜாதகனுடைய பிதா சௌக்கியமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் தன் பிதாவைக்காட்டிலும் மேலான குணமுடையவன், ஜாதகனுடைய சிறிய தகப்பனும் சிவபக்தியுடையவன்.

(79) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி சுக்கிரன் நிர்மலாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் நிர்மலமானவன், (அல்லது ஒரு தோஷமும் இல்லாதவன்.)

(80) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி சூரியன் குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் சூரியன் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சிவபக்தியுடையவன், சூரியன் சாங்கரியாம்சத்தை அடைந்திருந்தால் சிவ (தத்துவத்தை) நிலைக்கச் செய்பவன், தேவி சக்தியினுடைய கிருபைக்குப் பாத்திரமானவன், மந்திர சாஸ்திரத்தை நன்கு கஷ்டப்பட்டுப் பயின்றவன்.

(81) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி சுக்கிரன் கேந்திரத் திரிகோணங்களில் இருந்து முப்பத்தேழாவது (சதாசிவ

கலா) அம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சிவத்தியானம் செய்து, யோகியாகி தெய்வானுக்கிரமடைவான்.

(82) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி சூரியன் பத்தாம் பாவாதிபனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ராஜ சேவை செய்வான், அரசனைவிட மேலான தனமுடையவன்.

(83) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி சூரியன் நீசக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் நீசராஜ்யத்தில் நல்ல யோகமடைந்து நீச ராஜாங்கத்தில் பொக்கிஷ சாலைக்கு அதிபதியானவன், அந்த சூரியன் சர ராசியில் இருந்தால் வெளிதேசத்தில் யோகமுடையவன், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், கேமத்துரும பலனை அடைந்தவன், மத்திய வயதில் யோகமுடையவன், தெய்வானுக்கிரகம் காரணமாக வார்த்திகத்திலும், மத்திய வயதிலும் அதிக சம்பத்துடையவனுவான், தன் பந்து ஜெனங்களை ரக்ஷிப்பவன், எப்பொழுதும் அன்னம் செய்பவன், சிவபக்தி செய்யும் ஜெனங்களுடன்கூடியவன்.

(84) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி சனி ஒன்பதாம் பாவத்துக்கு ஏழில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தியாகியாயும், கெம்பீர புத்தியுடையவனும், நல்ல ஆசாரத்துடன் கூடியவனும், மூன்று வாகன முடையவனும், எல்லாருக்கும் உபகாரம் செய்பவனும், சேர்க்கவும், கலைக்கவும் சாமர்த்திய முடையவனும், பலதேசங்களிலும் பிரசித்தியுடையவனும், பல்லக்கு முதலிய வாகனமுடையவனுமாயிருப்பான்.

(85) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி சூரியன் நீசக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் நீசவித்தையில் வல்லவன், நீச அரசாங்கத்தில் தனம் சம்பாதிப்பதில் கண்ணுடையவன், சுதந்தரமுடையவன், தடாகம், உத்தியானம் முதலிய தர்மம் செய்பவன், தேவாலயம் முதலிய தர்மம் செய்பவன், சாந்தியுடையவன், ஜாதகனுடைய க்ஷேம திசையில் மரிப்பான்.

(86) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்திற்கு ஏழாமிடத்தில் சனி யிருந்தால் ஜாதகனுடைய பிதா, ஆபத் சன்னியாச யோகமுடையவன், கோச்சாரத்தில் கன்னியா ராசித்திரிகோணத்தில் சனி வரும் சமயம், ஜாதகனுடைய தகப்பனுக்கு வியாதி உண்டாகும், சாந்தி செய்தால் சுகமடைவான், ஜாதக

னுடைய லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதியினுடைய தசையி லும் பிதாவுக்கு மரணம் உண்டாகும்.

(87) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி ஜாதகனு டைய (சிறிய தகப்பன் ஸ்தானாதிபதி) பதினோராம் பாவாதிபதியான குரு நீசராசியில் ஒன்பதாவது பாவாதிபதியின் அம்சத்தை அடைந்தி ருந்தால் ஜாதகனுடைய சிறிய தகப்பன் ஒருவன் வெகு ஆயுளையுடை யவன், இரண்டு தாரமுடையவன்.

(88) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்பாம்சம்) ஆகி ஜாதகனு டைய ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவத்திற்கு ஏழாமிடத் தில் ராகு இருந்தால் ஜாதகனுடைய சிறிய தகப்பன் வேறுமனைவியி டம் (இரண்டாவது மனைவியிடம்) நல்ல புத்திரனை அடைவான்.

(89) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி குரு ஜாதக னுடைய (ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டில்,) பதினோராம் பாவத்திற்கு இரண்டாமிடத்தில் சர ராசியில் குரு இருந்தால் ஜாதக னுடைய சிறிய தகப்பன் வெளி தேசத்தில் யோகமுடையவன், தன முடையவன், நீச்ச ராஜ்பத்தில் நீச அரசனால் நல்ல ஜீவனமுடைய வன், ஜாதகனுடைய ஐந்தாம் திசையில் சூரியபுக்தியில் விருச்சிகராசி யின் கடைசியில் அல்லது தனுசு ராசியின் முதலில் கோச்சாரத்தில் சனி இரண்டாம் பரியாயத்தில் வரும் சமயம் ஜாதகனுடைய சிறிய தகப்பன் மரணமடைவான்.

(90) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி ஜாதக னுக்கு சந்திரன் எட்டாம் பாவத்தில் இரட்டை ராசியிலிருந்து, சுக்கி ரன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுடைய தாய் சௌக் கிய முடையவள், ஜாதகனுடைய தாய் குணவதி, மேன்மையான வள், தெய்வ சிந்தையுடையவள், கணவனிடம் பக்தியுடையவள், சாத்துவீகி, அன்னதானம் செய்வதில் பிரீதி யுடையவள், குணமுடை யவள், நான்காம் பாவாதிபதி வர்க்கோர்த்தமாம்சத்தை அடைந்திருந் தால் ஜாதகனுடைய தாய் வம்சவிருத்தி யுடையவள், ஜாதகனுடைய க்ஷேம திசையில் சுக்கிர புக்தியில் இரண்டாம் பரியாயத்தில், மீனாந்தி யத்தில், அல்லது மேஷ ராசியில் சனி கோச்சாரத்தில் வரும் சமயம் ஜாதகனுடைய தாய் மரிப்பாள், அந்த திரிகோண ராசியில் தாய்க்குச் சமமான ஜெனங்களுக்குக் கெடுதியும், மகர ராசியின் அந்தியத்தில்

அல்லது கும்பராசியில் கோச்சாரத்தில் சனி வரும் சமயம் ஜாதகனுடைய (பிதாமஹி) தகப்பன் வழிப்பாட்டி மரணமடைவாள்.

(91) ஜென்ம லக்கினம் கும்பம் (ஜகத்யாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் லக்கினத்திற்கு மூன்றும் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு இளைய சகோதரனிரான், ஜாதகன் மூத்த சகோதரனுமில்லாதவன், இரண்டு சகோதரிகளை யுடையவன், ஜாதகனுடைய மூத்த சகோதரி ஒருத்தி பாலியத்திலேயே விதவையாய் விடுபவள், இரண்டாவது சகோதரி அற்பாயுளுடையவள், சுமங்கலியாகவே மரித்து விடுவாள், ஜாதகனுக்குச் சகோதரர்கள் உண்டானாலும் மரித்து விடுவார்கள்.

(பொது) எந்த லக்கினம்மானாலும், ஜாதகனுக்குச் செவ்வாய் வலுத்து மூன்றும் பாவத்தில் இருந்தால் அந்த ஜாதகனுக்குச் சகோதரனிரானென்று சர்வ நாடியிலும் சொல்லப்படுகிறது.

(92) ஜென்ம லக்கினம் கும்பம் (காமின்யாம்சம்) ஆகி லக்கினாதிபனான சனி பத்தாம் பாவத்தில் துலாம்சத்தில் இருந்தாலும், அன்றி ஜென்ம லக்கினம் கும்பம் (காமின்யாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் தன் வீட்டிலாவது, அன்றி தன் உச்சஸ்தானத்திலாவது இருந்தாலும், ஜென்ம லக்கினம் கும்பம் (காமின்யாம்சம்) ஆகி லக்கினத்திற்காவது, அல்லது சந்திரனுக்காவது கேந்திரத்தில் குரு இருந்தாலும் ஜாதகன் தீர்க்காயுளுடையவன்.

(93) ஜென்ம லக்கினம் கும்பம் (காமின்யாம்சம்) ஆகி லக்கினாதிபன் ஸ்திர ராசியில் இருந்தாலும், ஜென்ம லக்கினம் கும்பம் (காமின்யாம்சம் ஆகி எட்டாம் பாவாதிபன் இரட்டை ராசிகளில் இருந்தாலும் ஜாதகன் தீர்க்காயுளுடையவனாவான், எழுபது வயதுடைய பரமாயுள் ஜாதகனாவான், எட்டாம் பாவாதிபன் இருக்கும் அம்சத்திலாவது; அதன் திரிகோணத்திலாவது ஸ்புட யோகத்தில் (அதாவது கோசாரத்தில்) சனி வரும்போதும், எட்டாம் பாவாதிபன் பார்க்கும் ராசியில் சனி வரும்போதும் ஜாதகனுக்குக் கண்ட முண்டு, அல்லது தனக்குச் சமமான ஜெனமாவது நாசமுறும், ஜாதகன் சிவப்பு நிறம், அழகியமேனி, மெலிந்து நீண்ட பித்த தேகமுடையவனாவான்.

(94) ஜென்ம லக்கினம் கும்பம் (காமின்யாம்சம்) ஆகி லக்கினாதிபனான சனி விருச்சிகத்தில் துலாம்சத்தில் இருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் ரஜோகுணமுடையவன், பல பாஷை

களில் சமர்த்தன், மூன்று எழுத்துக்கள் அறிந்தவன், நீச்சரைச் சேவிப்பான், அதிக தனவான், சங்கீதம் நாட்டிய மறிந்தவன், வாசனைத் திரவியங்களிலும், புஷ்பங்களிலும் பிரியன், காவிய, நாடக, சார மறிந்தவன், வேதசாஸ்திரார்த்தங்களின் உண்மை அறிந்தவன், அரி சங்கர பக்தியுடையவன், தேவபிராமணரைப் போஷிப்பான், அளவாய்ப் புசிப்பான், யோகசாலி, தாதா, புகழுடையவன், அயலார் இங்கித மறிந்தவன், சமர்த்தன், வாசாலகன், சாதுர்யமான யுக்தியுடையவன், யுக்தா யுக்த விசேஷமறிந்தவன், பிராமணர்களைப் பணிவான், தேவாலயம், தடாகம், தோட்டம் முதலியன நிர்மாணம் செய்வான், அன்னதானம் செய்வான், தயையுடையவன், சாத்துவீகன், கோபமுடையவன், சீக்கிரம் தயை யுடையவனுவான், உண்மை பேசுவான், சுசியானவன்.

(95) ஜென்ம லக்கினம் கும்பம் (காமின்யாம்சம்) ஆகி ஏழாம் பாவ அம்சத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் வேறு களத்திரமுடையவன். பலஜாதி ஸ்திரீ சங்கமமுடையவன்.

(96) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்தராம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபன் பத்தில் இருந்தால் ஜாதகன் வாசாலகன், சாதுரியமான யுக்தியுடையவன், தெலுங்குவித்தையில் சமர்த்தன், சாக்ஷித்ய லக்ஷணமுடையவன்.

(97) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்தராம்சம்) ஆகி கேது லக்கின கேந்திரத்தில் இருந்தாலும், ஜென்ம லக்கினம் கும்பம் (துர்தராம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் குஜனிருந்தாலும் ஜாதகன் சிலகாலம் துராசாரமுடையவன், தாசி சங்கமம் முதலிய பாபகாரியம் செய்வான், நீச்ச ஸ்திரீ சேர்க்கையுடையவன், பலஜாதி பெண்களை யணைபவன்.

(98) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்தராம்சம்) ஆகி மூன்றும் ஸ்தானமாகிய மேஷத்தில் சனி நீச்சனுய் இருந்தால் ஜாதகன் முன் பின் சகோதரமற்றவன், ஒரு மூத்த சகோதரன் விவாகத்திற்குப் பிறகு அல்பாயுளுடையவனுய் மரிப்பான், இரண்டாவது மூத்த சகோதரன் தன் தமையன் இறந்ததும், சில காலத்தில் விவாகமில்லாமல் அல்பாயுளுடையவனுய் மரிப்பான், ஒரு சகோதரி, நல்லவளாய் சிரஞ்சீவியாய் இருப்பாள், இளையசகோதரமில்லை, பிறந்தாலும் நாசமாகும்.

(99) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்தராம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் புதன், குரு சந்திரனுடன் கூடி பத்தாம்பாவத்திலிருந்து,

புத்திரபாவமாகிய ஐந்தாம் பாவத்தைச் சனி பார்த்தால் ஜாதகன் மூத்த புத்திரன் மரிப்பான், ஐந்து அல்லது ஆறு புத்திரரும், மூன்று பெண்களுமுண்டு, ஒரு மூத்த பெண் வாலிபத்திலேயே விதவையாய் மரிப்பாள், இரண்டாம் பெண்ணும் சில காலத்தில் பயம் காரணமாக விசாரமடைவாள், பெண் வர்க்கம் சோகமுடையவராவார், புத்திரர் சுக ஜீவிகளாயிருப்பார்.

(100) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்தூராம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபனுன சூரியன், ஒன்பதாம் ராசியாகிய துலாத்தில் நீச்சனுயிருந்து ஏழாம் பாவத்தில் ராகு, குஜன் நின்முல் ஜாதகன் வாலிபத்திலேயே விவாகமில்லாமல் பலஜாதிப் பெண்களை அனுபவிப்பான்.

(101) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி விருச்சிகத்தில் குரு கன்னியாம்சத்திலிருந்து, புதன் தன் உச்ச நவாம்சத்திலிருந்து, விப்பரகாலத்தில் ஜெனித்த ஜாதகன் பிறவி முதல் செல்வவான், அதிக தனவான், வைசிய காலத்தில் ஜெனித்த ஜாதகன் வைசியருக்குறிய தொழிலுடையவனுவான், க்ஷத்திரிய காலத்தில் ஜெனித்தவனுமவ்விதமே க்ஷத்திரியதொழிலும், சங்கரகாலத்தில் ஜெனித்த ஜாதகன் அவ்விதமே சங்கரத் தொழிலுடையவனுவான்.

(102) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி குரு, வில்வம்பராம்சத்தில் திரிகோணத்திலாவது, அன்றி எட்டு, பதினென்று இந்த பாவங்களில் இருந்தால் ஜாதகன் பின் சகோதரனற்றவன், மாற்றுந்தாய் சகோதரமுடையவன், வெளுத்த நிறமும், அழகிய உருவமுமுடையவன், வித்தைக்குத்தடை உண்டாகும், சுகமுடையவன்.

(103) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி குரு, விருச்சிகத்தில் கன்னியாம்சத்திலிருந்தால் ஜாதகன் சமமான தேகமுடையவன், பெருமையுடையவன், தர்மம் செய்வான், சத்தியவான், தைரியவான், இங்கித மறிந்தவன், ஜெனங்களால் விரும்புத்தக்கவன், எழுதுபவன், விடர்களுக்குரிய செய்கையுடையவன், இனிமையான குரலுடையவன், புத்திமான், தினந்தோறும் அரசசேவை செய்வான், இவன் தகப்பன் வட்டி மூலம் ஜீவனம் செய்வான்.

(104) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி குரு மித்திர க்ஷேத்திரத்தில் புதாம்சத்தில் இருந்தால் ஜாதகன் எப்பொதும் அதிக காமமுடையவன், அரசசேவகனுவான், தனிகன் பிரசித்தஸ்தாபனை செய்வான், தாய், மக்கள் இவர்களிடம் பிரியமாய் இருப்பான்.

(105) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி ராகு, லக்கினத்திலிருந்து சூரியனால் பார்க்கப்பட்டால் ஜாதகன், வாயு பித்த ரோகபீடையுடையவன், காலாந்தரத்தில் பந்து ஜென விரோதமுடையவன், தன் தாய் மூலம் அதிக சோகமுடையவன், வாலிபத்தில் தகப்பன் அரிஷ்டமடைவான், அதனால் துக்கமடைவான், மாற்றாந் தாய் சகோதரனால் சுகமடைவான், பின்னால் விரோதமுண்டாகும், சூத்திரர் மூலம் பொருள் நாசமடையும்.

(106) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி விஸ்வம்பராம்சத்தில் குரு இருந்து, லக்கினத்தில் ராகு இருந்தால் ஜாதகன் பிதா பாவத் தொழில் செய்வான், சூத்திர ஆசாரத்தில் பிரியன், மூத்த மனைவியின் புத்திரனை விரோதிப்பான், சூத்திரர் தோழமை யுடையவன், வர்த்தகத்தில் அதிக ஜீவனம், அதிக தனம் சம்பாதிப்பான்.

(107) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம் பூர்வபாகம்) ஆகி குரு விஸ்வம்பராம்சத்திலிருந்தால் ஜாதகன் தன் உடன் பிறந்த சகோதரனற்றவன், சிலர் சகோதரி ஒருத்தி உண்டென்பர், இவன் தந்தையும், இவ்விதமே சகோதரதுக்கமுடையவன், மூத்த சகோதர நாசமுடையவன், பொருள் சம்பாதிப்பதில் சமர்த்தன், மாற்றாந்தாய்க்குப்பிறந்த மூத்த சகோதரமுடையவன், மாற்றாந்தாய்க்குப் பிறந்த சகோதரன் தீர்க்காயுளுடையவன், இரண்டு சகோதரிகளுடையவன்.

(108) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி லக்கினத்தில் ராகு இருந்து, பதினோராம் பாவாதிபன் பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் மூத்த சகோதரன் ராகுவைப் போல் பாபகரமான மனதுடையவன், மூத்த சகோதரன் காமியாயும், பலவானும், விஷயாதிகளில் அலைபவனும், சூத்திராசாரப் பிரியனுமாவான், மேலும் சத்தியம், சௌசமற்றவனும், கெட்ட சகவாசமுடையவனும், உஷ்ணக்கிராந்தி பீடை யுடையவனும், தகப்பன் சொல்லை அசட்டை செய்து அயலார் சொற்படி நடப்பவனும், எப்போதும், தாசி சொற்படி நடப்பவனும், மனைவியை விரோதிப்பவனும், பாபியாயுமிருப்பான்.

(109) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி மாற்றாந் தாயின் சகோதரன் ஸ்தானத்திற்கு ஐந்தாம் பாவாதிபன், ஐந்தாம் பாவத்தில் ரிஷபாம்சத்திலிருந்தால் ஜாதகன் பேதப் பிராதாவானவன் பிறந்து மரித்தும் சந்ததியுடையவன், சந்ததித்தடையுள்ளவன்,

பூர்வபாகமானல் மாற்ருந்தாய் சகோதரன் நல்ல புத்திரனுடையவனு னும் அந்த புத்திரன், முன் செய் தீவினையினுல் மரணமடைவான், அந்த பாபத்திற்குச் சாந்தியாக சேதுஸ்நானம், சிவபூஜை, ஷஷ்டி விரத உபவாசம் முதலியவைகளால் சந்ததியடைவான், வேறு கிரந் தத்தில் பேத சகோதரன், கோபாலப் பிரதிமை தானத்தால் புத்திரன டைவான் என்றும், சந்தான கோபால மூர்த்தியை மூன்று பலம் பொன்னுல் செய்து கல்பத்தில் சொல்லியபடி உபசாரம் முதலியவை களால் பூஜித்து தானம் செய்திடில் ஆயுள், ஆரோக்கியம், சந்தான விருத்தி கிடைக்கும் என்று கூறுகின்றது.

(110) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம் பூர்வபாகம்) ஆகி சூரியன் மஞ்சுஸ்வனும்சத்திலிருந்து குஜனுடன் கூடினுல் ஜாதகன் வாலிபத்திலேயே மாதா நாசமடைவாள், இவன் தந்தை சகோதரனற் றவன், புண் முதலிய உபத்திரவமுடைய சரீரமுடையவன், ஜென்ம திசையிலோ அல்லது இரண்டாம் திசையிலோ பிதாவுக்கு ஆபத்து நேரும்.

(111) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி சூரியன் மஞ்சுஸ்வனுச்சத்திலிருந்து, குரு விஸ்வம்பராம்சத்திலிருந்தால் ஜாத கன் ஜென்ம திசையில் பிதாவுக்குக் கிலேசமுண்டாகும், கடன் முத லிய உபத்திரவம் தரும், மூத்த மனைவியின் புத்திருடன் விரோத மடைந்து பாகமும் பிரித்துக் கொள்வான், சம்பாதித்த பொருளழி வால் அதிக துக்கமடைவான்.

(112) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி லக்கினத் திற்கு ஐந்தாம் பாவத்தில் குஜனிருந்து, ஒன்பதாம் பாவாதிபதி பாப ருடன் கூடி எந்தராசியிலாவது இருந்தால் ஜாதகன் தகப்பன் மரண காலத்தில் புத்திரன் தேசாந்தரம் சென்றிருப்பான்.

(113) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி சூரியன் மஞ்சுஸ்வனுச்சத்தில் இருந்தால் ஜாதகன் தந்தை சிறிய கிராமத்தில் வசிப்பான், ஜாதகனுடைய தகப்பன் அஜீர்ணம் முதலிய நோயால் தன் புத்திரனில்லாத காலத்தில் மரிப்பான்.

(114) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி குரு விஸ் வப்பராப்சத்தில் ஒன்பதாம் பாவாதிபனுக்குத் திரிகோண ஸ்தானங் களில் இருந்தால் ஜாதகன் பிதா யாத்திரை காலத்தில் மரணமடை வான்.

(115) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம் பூர்வபாகம்) ஆகி சந்திரன் குடிலாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் தாய் வம்சத்தில் அதிக பாபமுண்டு, தாய் சண்டைமூட்டும் குணமுடையவள், தாயின் சகோதரி துக்கமுடையவள், பாட்டன் ஒருவன் மகாபாபியாக இருப்பான்.

(116) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி மாதுலாதிபனை சந்திரன் குடிலாம்சத்திலிருந்து, புதனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு இரு அம்மான்கள் தீர்க்காயுளுடையவராவார், சிலர் அம்மான்கள் நாசமுறுவர் என்கின்றனர், ஜாதகன் தாய் துர்நடவடிக்கையுள்ளவள், சகோதர துக்கத்தால் வருந்துவாள், சக்களத்தி புத்திரனால் விரோத முடையவள், ஜாதகன் மாற்றுந்தாய் வாலிபத்திலே விதவையாவாள், தாய் தீர்க்காயுள், ஜாதகன் தாய்ப்பாட்டி வெகுகாலம் சுமங்கலியாய் இருப்பாள், மத்தியில் புத்திர சந்தோஷ முடையவள்.

(117) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி மாற்றுந் தாய்க்குப் பிறந்தவன் ஸ்தானாதிபன் கும்பாம்சத்திலிருந்து, சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மாற்றுந் தாய்க்குப் பிறந்த சகோதரி ஒருத்தி நீண்டகாலம் சுமங்கலியாய் இருப்பாள்.

(118) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி சூரியன் மஞ்சுஸ்வநாம்சத்தில் இருந்தால் ஜாதகன் மாற்றுந் தாய்க்குப் பிறந்த சகோதரி ஒருத்தி வாலிபத்திலேயே விதவையாவாள்.

(119) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி குடிலாம்சத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகன் மாற்றுந்தாய் மகள் இரட்டைப் பிள்ளை பெற்று அது நாசமடைவதனால் வருந்துவாள், அவள் கணவன் நோயாளியாயும், தன்னுடன் பிறந்த சகோதரனற்றவனுமாவான், நடுவில் பாக்கியமில்லாததால் ஏழ்மைத் தனத்தால் வருந்துவான், தன் பேத சகோதரி புருஷன் அரசாங்கத்தில் கவுரவமுடையவன், காலாந்தரத்தில் பாக்கிய விருத்தியுடையவன், புத்திரன் மூலம் அதிக பாக்கியமுடையவன், நரவாகனம், பூஷணம் முதலியன உள்ள யோக முடையவன், புகழுடையவன், சுகவான்.

(120) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி விஸ்வம்பராம்சத்தில் குரு இருந்தால் ஜாதகன் பேத சகோதரி ஒருத்தி சுகமுடையவளாயும், அற்ப புத்திரரை யுடையவளுமாவாள், ஜாதகன் பேதப் பிராதாவால் சுகமடைவான்.

(121) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி குரு, புதன் அம்சத்தில் தன் உச்சஸ்தானமாகிய கடகத்திலும், ராசியில் நீச்ச ராசியிலும் இருந்தால் ஜாதகன் மாற்றுந்தாய் மகளின் புத்திரன், புத்திரி, புத்திரர்களுடையவன், சுகமாயிருப்பான், ஜாதகன் இரண்டாம் திசையில் மாற்றுந்தாய் மகளின் சொத்தை இவன் அடைவான், ஜென்மதிசையில் ஜென்ம வருஷத்தில் தன் பேத சகோதரி ஒருத்தி அதிக துக்கத்தால் வருந்துவாள், மாற்றுந்தாய் மூலம் பேதப் பிராதாவுக்குத் துக்கம் நேரும்.

(122) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி சூரியன் மஞ்சுஸ்வனுப்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தன் புத்திரனை வஞ்சிப்பான், ஜாதகனுடைய தகப்பனுக்குப் பாபவசத்தால் இரண்டாம் திசையில் மரணம் நேரும், சந்தேகமில்லை.

(123) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி பதினோராம் பாவாதிபன் விஸ்வப்பராம்சத்திலிருந்து, லக்கின பாவாதிபன் ஏழாம் அம்சத்திலிருந்தால் ஜாதகன் எட்டு வயதுக்குமேல் சகோதர சித்த சுத்தியுடையவனுவான், அவன் மனைவி சூரிய விரதம் செய்வாள், செல்வமும் அனுபவிப்பாள், சகோதர சுகமுடையவள், வெகுகாலம் சுமங்கலியாயிருப்பாள்.

(124) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் மஞ்சுஸ்வனம்சத்திலிருந்தால் ஜாதகனுக்குக் கஷ்டம், தடை இவைகளுக்கு விமோசன முண்டாகும், தன் மாற்றுந்தாய் மகன், மனைவி முதலியவர் சுகமடைவர், சூரியவிரத உபவாசத்தாலும், துலா ஸ்நானம் முதலிய காரணத்தாலும், பேதப்பிராதாவுக்குச் சித்த சுத்தி உண்டாகும், அனேக அரிஷ்டநாசமுண்டு, அந்த விரதாதிகளில்லாவிடில் பேதபிராதா தரித்திரனுவான்.

(125) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி சூரியன் மாற்றுந்தாய் மகன் ஸ்தானத்திற்கு பஞ்சமத்தில் கேதுவுடன் கூடி இருந்து சுபர் பார்வை இல்லாதிருந்தால் ஜாதகன் கட்டுப்படுதலால் பீடை யுடையவனுவன், ஆசையுடையவன், சூத்திரர் மூலம் உண்டான பொருள் நாசத்தால் வருத்தப்படுவான், அந்த நாசத்திற்குப் பிறகு பேதப்பிராதாவிற்கு க்ஷேமம் தரவல்ல அதிக சுகமடைவான், எட்டு வயதுக்குமேல் அல்லது பத்தாம் வருஷத்தில் தன் தந்தையின் தோழனுன சூத்திரன் ஒருவன் நாசமடைவான், பேதப் பிராதாவிற்கு

அதற்குமேல் செல்வமும், பெருக்கமான ¹அதிக சுகபோகமுமுண்டு, பேத சகோதரி (மாற்றாந் தாய் மகள்) ஹானியடைவாள், அதற்கு முன் யோகமுண்டு.

(126) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபனை சுக்கிரன் நாலாம் பாவத்திலிருந்து, ஆறாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்கு நல்ல வித்தை கிடைக்கும், அனேக கிராமங்களுக்கு அதிகாரியாக இருப்பான், எழுத்து வித்தையில் சமர்த்தன், மூன்று எழுத்துக்களை நன்றாய்ப்படிப்பான், எப்போதும் ராஜயோகத்துடன் கூடியவன், விஷ்ணு சங்கர பக்தியுடையவன், (தன் மாற்றாந்தாய் மகன் மூலம் ஜாதகனுக்கு அரைஞாண் கட்டும் சடங்கு நடக்கும்.)

(127) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி குரு விஸ்வம்பராம்சத்தில் இருந்து, சூரியன் மஞ்சுஸ்வனம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு இரண்டாம் திசையில் சுயபுத்தியிலேயே விவாகம் நடைபெறும், ஆறாம் வயதில் அக்ஷராப்பியாசம், ஏழாம் வயதில் உபநயனம், பன்னிரண்டாம் வயதில் விவாகம் நடைபெறும்.

(128) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி சந்திரன் இரண்டாம் பாவத்தில் குடிலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் நேர்மையற்ற ஆலோசனையில் பிரியன், வாசாலகன், ராஜசேவை செய்வான், ராஜாங்கத்தில் நல்ல புகழுடையவன், கொஞ்சம் பாலாரிஷ்ட பயமும், வைசூரி, சுரகண்டமும் உண்டு.

(129) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி மீனத்தில் குரு இருந்து, சந்திரன் இரண்டாம் பாவத்தில் இருந்து குரு கேந்திர திரிகோணஸ்தானங்களில் இருந்தால் ஜாதகன் இருபதுவயதுக்குமேல் பத்து வருஷத்துக்குள் நல்ல வாகன யோகமுடையவன், தன் பிரபலத் தன்மையால் பதினாறு வயதிற்குமேல் கொஞ்சம் பிரசித்தியடைவான், இருபத்தோர் வயது முதல் விருத்தியடையும், பிரபலயோகமுடையவன், ஐந்து, பன்னிரண்டு, முப்பது இந்த வருஷங்களில் அவமிருத்தியு பயமுண்டு, சாந்தி செய்யவும்.

(130) ஜென்மலக்கினம் கும்பம் (சுகதாம்சம்)ஆகி குரு விஸ்வம்பராம்சத்தில் இருந்தால் ஜாதகன் இரண்டு தார யோகமுடையவன், சீமந்த சிசுநாசமடையும், பின்னால் உண்டாகும் சந்ததி தீர்க்காயுளாயிருக்கும், இருபத்துமூன்றில் புத்திரப்பேறு உண்டாகும், மறு மனைவியிடம்

இரண்டு, மூன்று தீர்க்காயுளுடனிருக்கும், அம்சாஷ்டக வர்க்கத்தில் குருவிடம் எத்தனைப்பரல்களோ அத்துணைச் சந்ததிஉண்டு, இருபெண்கள் தீர்க்காயுளுடனிருப்பர், அவ்விதமே புத்திர யோகமுமுண்டு.

(131) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி குஜன் லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் இருந்து, அந்த ஐந்தாம் பாவாதிபன் எட்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் காலாந்தரத்தில் புத்திரனடைவான், அவன் தீர்க்காயுளுடனிருப்பான், அவனுக்கு அனேக சந்ததிகள் மரிக்கும், அத்தோஷ பரிகாரத்திற்கு குமார விரதம் செய்யவும், ஸேதுஸ்நானத்திற்குப் பிறகு தீர்க்காயுளுடைய புத்திரனுடையவனுவான், சுகமடைவான்.

(132) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி குரு விஸ்வம்பராம்சத்திலிருந்து, சூரியன் மஞ்சுஸ்வனும்சத்திலிருந்தால் ஜாதகன் ஐம்பத்தாருவது வயதில் மரணமடைவான்.

(133) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தராம்சம்) ஆகி குரு ஸ்திர லக்கினத்தில் சனியுடன் கூடியாவது, அன்றி சனியால் பார்க்கப்பட்டாவது இருப்பின் ஜாதகன் மூத்த சகோதரமில்லாதவன், பின்சகோதரமுண்டு, செல்வவான், வாலிபத்திலே கிலேசத்திலே வருந்துவான், மூன்று தாரமுடையவன், ஆசையுடையவன், கோபி, சீக்கிரம் தெளிவடைவான், தினந்தோறும் வித்தை விருத்தியடைவான், இனிப்பு, துவர்ப்பு ரசத்தில் பிரியன், காமமுடையவன், தாயிடம் அன்புள்ளவன், தானம் செய்வான், யௌவனப் பெண்களுக்கு நாயகனுவான், பாதி பிதுரார்ஜ்ஜித சொத்துடையவனுவான், தம்பியிடம் அன்புள்ளவன், வாலிபத்திலே சிற்றப்பன் நாசமடைவான், வைசூரி, சுரகண்டமுடையவன், ரணத்தால் பீடிக்கப்பட்ட தேகமுடையவன், தந்தவாயு பீடையுடையவன், ராஜ சகுணமுடையவன், காமி, கொஞ்சம் சாத்துவீக குணமுள்ள காரியம் செய்வான், பொருள் சம்பாதிப்பதில் சமர்த்தன், சீமந்த சிசு நாசமடையும், ஜாதகனுக்கு வேறு தாரத்திடம் புத்திரவிருத்தி உண்டு, மூன்று பெண்களும், மூன்று புத்திரரும் தீர்க்காயுளுடையவரா யிருப்பார்கள்.

(134) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தராம்சம்) ஆகி லக்கினுதிபன் மோஹனும்சத்தில் இருந்து, எட்டாம் பாவம் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டபயமுண்டு, சாந்தியால் தீரும், லக்கினத்திற்கு ஆருவது ராசி முதலாக வரிசையாக கிரக

மிருக்கும் மாலிகா யோக முடையவனானால் ஜாதகன் யோகமுடைய வன், ரூபவான், குணவான்.

(135) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி கன்னி யில் சனி மீனத்தில் குரு இருந்தால் ஜாதகன் அற்ப சந்தானமுடை யவன், மரித்த சந்ததியுடையவன், ஜாதகனுக்கு ஒரு புத்திரனும், ஒரு பெண்ணும் தீர்க்காயுளுடையவராவார்.

(136) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபனான குஜன், துலாநவாம்சத்திலும், ராசியில்கேந்திர ராசியிலு மிருந்தால் ஜாதகனுக்கு இரு சகோதரிகள் தீர்க்காயுளுடையவராவார், சகோதரிகளில் ஒருவள் கிலேசமுடையவள்.

(137) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி குரு துர் துராம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு ஒரு சகோதரியும், ஒரு தம்பி யும் தீர்க்காயுளுடையவராவார், ஜாதகன் தூர்த்த ஸ்திரீ நாயகனாய் சுகியாய் இருப்பான், சந்தானத்தடை யுடையவன், சகோதரத் துவேஷத்துடனிருப்பான்.

(138) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி மீனத்தில் குரு இருந்தால் ஜாதகன் தருமாத்துமா, நல்ல பாக்கியமுடையவன், தர்மகாரியம் செய்வான், எப்போதும் நோயுடைய சரீரமுடையவன், சகோதாரிடம் பிரியமாயிருப்பான், ஒருவன் மூன்று களத்திர யோக முடையவன், அந்த சகோதரன் புத்திரனுடையவன், அச்சகோதரன் புத்திமான், பணம் சம்பாதிப்பதில் சமர்த்தன்.

(139) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி சந்திரன் சுதாம்சத்தில் சுயக்ஷேத்திரமாகிய கடகத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அம்மானுக்கு ஆயுள் விருத்தியுண்டாகும், வேறு கிரந்தத்தில் இவன் தகப்பனுக்குச் சகோதரனில்லை, வாலிபத் தில் பாக்கிய யோகமும், கிலேசத்தால் கஷ்டமுமடைவான், தகப்ப னுக்கு வாலிபத்திலே அம்மான் வீட்டில் வாசமுண்டு, பிதாவின் சகோதரி, சகோதர, சகோதரி சினேக மதிகமாவுடையவள் எனக் கூறுகின்றது.

(140) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி மாது லாதிபனான சந்திரன், சுதாம்சத்தில் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குத் தாய் வம்சம் விருத்தியதிகமாக உண்டு, இரு அம்மான் மார்களுண்டு.

(141) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி குரு துர் துராம்சத்திலிருந்து சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு ஒரே ஒரு அம்மான் தானுண்டு என்று சில கிரந்தத்தில் காணப்படுகிறது, சிலர் இரு அம்மான்களுண்டென்கின்றனர், சிலர் அம்மானே இல்லை என்கிறார்கள், தாய் பாட்டன் தீர்க்காயுளுடையவனாவான், சிலர் இரண்டு அம்மான்களும், தாய் சகோதரிகள் இருவரும் உண்டென் கின்றனர் ஒரு பெண் தீர்க்காயுளுடையவள், கொஞ்சம் நோயுடைய வள், தாய் சகோதரன் கிலேசத்தால் வருந்துவாள், காலந்தரத்தில் புத்திரயோகத்தால் அதிக பாக்கிய முடையவளாவாள்.

(142) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி மீனத்தில் கும்பாம்சத்தில் குரு இருந்து, தனுசில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் அதிக பாக்கியவான், தகப்பன் சகோதரி விவாககாலத்தில் இவன் அதியோகவானாய் இருப்பான், அது மூலம் பிரபலயோகமுடையவனா வான், நரவாகன யோகமுடையவன்.

(143) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி லக்கினாதி பன் மோகனம்சத்திலிருந்து, மீதுனத்தில் இருந்து சுபனால் பார்க்கப் பட்டால் ஜாதகன் ஜென்மதிசையில் அதிக பாக்கியமுண்டு, இரண் டாம் வருஷம் அதிக சுகமடைவான்.

(144) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி பாட்டன் பாவாதிபனான புதன், ஒன்பதாம் பாவத்தில் சூரியனுடன் கூடி இரண்டாம் பாவத்தில் குரு நின்றால் ஜாதகனுடைய பிதாமகன் (பாட்டன்) பாக்கியவான், சகோதரனுடன் கஷ்டப்பட்டு ஜீவிப்பான், ஒரு சகோதரி யுடையவன், சகோதர நாசமுடையவன், பாட்டனு டைய சகோதரன் மகன் சகோதர சகோதரிகளுடன் கூடியவன், தினந்தோறும் விவசாயத் தொழில் செய்வான், அக்கிராரத்தில் வசிப் பான், ஜாதகனுக்குப் பயிர் ஜீவனம், வித்தையில்லாதவன், நற்புத்திர னுடையவன், காலாந்தரத்தில் புத்திர சோகமும், முதுமையில் தார நாசமுமடைவான், பாட்டனுடைய சகோதரன் மகன் முதுமையில் கிலேச மனுபவிப்பான், பாட்டனுடைய சகோதரி ஒருத்தி புத்திர புத்திரிகளுடன் கூடியவளாய் ஜாதகன் பிறப்பதற்கு முந்தியே வித வைத் தன்மையும், மரணமும் அடைவாள்.

(145) ஜென்ம லக்கினம் கும்பம் (துர்துராம்சம்) ஆகி பதினோ ராம் பாவத்தில் சுக்கிரன், கதாப்சத்திலிருந்து, பன்னிரண்டாம் பாவா

திபன் மோகனும்சத்திலிருந்தால் ஜாதகன் மாதா மகன் (தாய்ப்பாட்டன்) தீர்க்காயுளுடையவனுவான், பாட்டியும் தீர்க்காயுளுடையவளாவாள், மாதா மகனுக்குத் தம்பி ஒருவன் தத்துபுத்திரனுடையவனுவான், அம்மான் ஒருவனே உண்டு, அம்மான் சகோதரிகள் மூவர் தீர்க்காயுளுடையவரா யிருப்பார்கள், ஜாதகன் இரண்டாம் திசையில் தன் அம்மான் வம்சத்தில் துக்கமும், மாதாமகனுக்கு மருமகன் அரிஷ்டத்தால் கிலேசமுமடைவான், தாய் சகோதரி சத்துருவினுல் மரணமடைவாள்.

(146) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்துராம்சம்) ஆகி மீனத்தில் குரு இருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் சகோதரி ஒருத்தி பெரும்பாட்டால் மரிப்பாள், இல்லாவிட்டால் அம்மான் மனைவியாவது மரிப்பாள், (தாய்ப்) பாட்டிக்கு அதன் மூலம் துக்கம் நேரிடும், மூன்ரும் திசையில் புத்திரநாச மடையும், இவன் தாய் தந்தையர் சோகமுடையவராவார்கள்.

(147) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்துராம்சம்) ஆகி சுகாதிபன் கதாம்சத்திலிருந்து நாலாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் மூன்ரும் திசையில் (தாய்ப்) பாட்டனுக்கு அரிஷ்டம், ஏழாம் பாவாதிபன் அம்சத்தில் திரிகோணங்களிலாவது, அல்லது ஏழாம் பாவாதிபன் பார்த்த ராசிகளிலாவது சனி வரும்போது (தாய்ப்)பாட்டன் நாசமடைவான், லக்கினுதிபன் அம்சத்தில் அதன் திரிகோண ஸ்தானங்களில் சனி ஸ்புடயோகத்தில் (கோசாரத்தில்) வரும்போது (தாய்ப்) பாட்டி நாச மடைவாள், அம்மானுக்குக் கஷ்டங்கள் நேரிடும்.

(148) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்துராம்சம்) ஆகி ஆரும் பாவத்தில் சந்திரனும், எட்டாம் பாவத்தில் சனியுமிருந்தால் ஜாதகனுக்கு இரண்டாம் திசையில் பெரிய ஆபத்தும், ஐந்து வருத்திற்கு மேல் இரண்டு வருஷம் கிலேசமுமடைவான், வாத அரிஷ்டபயமுண்டு, சாந்தி செய்தால் தீரும், தகப்பன் வம்சத்தில் அரிஷ்டமுண்டு, ஞாதிகள் குலத்தில் கிலேசம், பந்து வர்க்கத்தில் மனஸ்தாபம் தன் தகப்பன் தோழன் வர்க்கத்திலும் மனஸ்தாபம் நேரிடும், இரண்டாம் திசையில் அதிக வருத்தம் தரும் காரியங்கள் செய்வான்.

(149) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்துராம்சம்) ஆகி ஆரும் பாவாதி இருக்கும் ராசி முதல் மாலிகா யோக ஜாதகன் தரித்திர யோகமுடையவன், வாலிபத்தில் கிலேசமுடையவன்.

(150) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி எட்டில் பாவக் கிரகமிருந்து சுபர் பார்வை இல்லாமலிருந்தால் ஜாதகன் நிச்சயமாக தரித்திரத்தன்மை யடைவான்.

(151) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி எட்டாம் பாவத்தில் சனியும், இரண்டாம் பாவத்தில் குருவுமிருக்கும் தரித்திர மாலிகா யோக ஜாதகன் பாக்கிய முடையவன், வாலிபத்தில் கொஞ்சம் சுகமுடையவன், முதுமையில் அதிக தரித்திரமடைவான், நடு வயதில் பாக்கிய விருத்தியுண்டாகும், நாவாகன யோகமுடையவன்.

(152) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி பதினோராம் பாவத்தில் சுக்கிரனும், இரண்டாம் பாவத்தில் குருவுமிருந்தால் ஜாதகன் அனேக கெட்ட அழிவுள்ள யோகங்களிலிருந்தாலும் தனவானும், புகழுடையவனும், வாசாலகனும், அரசாங்கத்தில் புகழுடையவனும் இருப்பான், மூன்றும் திசையில் அதிக சுகமும், பின் பாதியில் விசேஷ பாக்கியமும், நித்திய சம்பத்தும், பெருமை புகழ், அதிக பாக்கிய மிவையுமுடையவனுயிருப்பான், ஜாதகனுடைய தகப்கன் சகோதரி புத்திர யோககாலத்தில் சுகமடைவாள், ஜாதகனுக்கு நான்கு, ஐந்து இந்த திசைகளில் சுபாசுப பலன்கள் அற்பம், ரோக யோகமுடையவனுவான், ஜாதகன் சேதுயாத்திரை தன் தந்தையுடன் செல்வான், நடுவழியில் புத்திரன் மூலமாக இரண்டுநாள் மனஸ்தாபமடைவர், அத்தோஷத்திற்குப் பரிகாரமாக பாற்குடம் தானம் செய்யவும், பின்னுல் சுகமடைந்து தன் தேசம் திரும்பியும் வருவான்.

(153) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் யாத்திரை செல்வான், புண்ணிய தீர்த்த பலனும், கங்காஸ்நான பலனுமடைவான்.

(154) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி குரு தூர்தூராம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்குக் கங்கா யாத்திரைதடைநேரும், மூன்று தரம் சேதுஸ்நானம் செய்து கங்காஸ்நான பலனை அடைவான்.

(155) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி பதினோராம் பாவத்தில் காதாம்சத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் நோயால் வருந்துவான், அக்னி மந்த பீடை யடைவான், மூன்று வருஷம் அடிக்கடி மேல்கண்ட பீடை அடைவான்.

(156) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்கு வைசூரி

சுரகண்டமுண்டு, கொஞ்சம் ஜன்னிபாத சுரபயமுமுண்டு, அதிசார பீடையடைவான்.

(157) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் கதாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய முப்பதாவது வயதில் பிதா மரண மடைவான், அல்லது முப்பத்து நான்கு, முப் பத்தைந்து இந்த வயதுக்களில் பிதாவுக்குப் பெரிய ஆபத்து நேரிடும்.

(158) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி பத்தாம் பாவத்திலாவது அன்றி இரண்டாம் பாவத்திலாவது குரு இருந்து, பதினோராம் பாவத்தில் சுக்கிரன் இருக்கும் மாலா யோகமுடைய ஜாதகன் பாக்கியவான், பெரிய ஆற்றங்கரையின் தேசத்தில் பட்ட ணத்தில் பாக்கியமனுபவிப்பான், வெளி தேசத்தில் யோகமுடையவ னுவான், போகமுடையவன், நீச்சப் பிரபுவை அண்டுவான், வர்த்த கர் சிநேகிதமுடையவன், ஆசையுடையவன், தியாகம் செய்வான், போக மனுபவிப்பான், மூன்ரும் திசையில் வாகனம் கிடைக்கும், புத் திரனடைவான், ஆனுல் நோயுடையவனுவான், நாலாம் திசையில் அதிக புகழெடுப்பான், இருபத்தாறு வயதுக்குமேல் அதிக தனம் சம் பாதிப்பான், அதிகமாக தோழனுன பிரபுவின் நாசத்தால் கிலேச மனுபவிப்பான், வேறு அரசனுல் பாக்கியம் கிடைக்கும், பெண்ணின் விவாகத்திற்குப் பிறகு புத்திரன் விவாகம் நடக்கும்.

(159) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி பன்னி ரண்டாம் பாவாதிபன் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பின் ஜென்மத்தில் முக்தியடைவான்.

(160) ஜென்ம லக்கினம் கும்பம் (தூர்தூராம்சம்) ஆகி லக்கினுதி பனுன சனி மோகனும்சத்தில் எட்டில் இருந்து குருவால் பார்க்கப் பட்டால் ஜாதகன் எழுபத்துநான்கு வயது அம்சாயுளுடையவனு வான், நாற்பத்தொன்பது அல்லது ஐம்பத்திரண்டில் மரணமடை வான், ஜீவித்திருந்தால் பாக்கியம் நாசமடையும்.

(161) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சூரியனின்ற பாவத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி நேர் கெதியில் இருந்தால் ஜாதகனுடைய தந்தை சம்பத்துடையவன், கருத்த நிறமுடையவன், நோயாளி, மெலிந்தவன், வாலிபத்தில் தரித்திரத்தால் வருந்தி பெரிய வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பான், இரு சகோதாருடன் கூடியவன், பெருந்தன்மை வாய்ந்தவன், பெரிய சகோதரம் பிரிவடைவான்.

(162) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபன் குருவால் பார்க்கப்பட்டாவது, கூடியாவது இருந்தால் ஜாதகனுடைய பிதா லக்ஷ்மி கடாக்ஷமுள்ளவன், செல்வவான், தர்ம மார்க்கத்தை அனுசரிப்பான், ஞானவழியில் செல்வான், நித்தியம் தந்திரமான செய்கைகளில் பிரியன், வைதீகாசாரமுடையவன், புத்திமான், வாலிபத்திலே மந்தமான செய்கைகளும், நடுவிலும், கடைசியிலும் சாத்துவீக செய்கைகளுமுடையவன், சுகமுடையவன், தடாகம், உத்தியாவனம் முதலிய தர்மம் செய்வான், அனேக தோழர்களுடையவன், பொருளுடையவன், உத்தரபாகம் ஆனுல் இவன் தந்தை சிவானுக்கிரகம் உள்ளவன், சாத்துவீகன், நற்குண நற்செய்கையுடையவன், வேதம், ஸ்மிருதி இவைகளறிந்தவன், யாசகர்களுக்கு உதவி செய்வான், எப்போதும் தர்மம் செய்வான்.

(163) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி பாக்கியாம்சத்தில் சுகாதிபன் பாபருடன் கூடினுல் ஜாதகனுடைய தந்தை இருதாரமுடையவன், அதிக புத்திரரும் பொருளும் நிறைந்தவன், அதிகமான தாயாதிகளுடன் கூடியவன், சுகவான், ஜாதகன் பாக்கியம் நிறைந்தவன், பிதுர் புண்ணியத்தால் சுகமடைவான்.

(164) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி எட்டாம் பாவத்தில் சந்திரன் பாபருடனிருந்து, சுபர் பார்வையில்லாதிருந்தால் ஜாதகன் பிதாவுக்கு அரிஷ்டமுண்டு.

(165) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சந்திர லக்கினத்திற்கு எட்டாம் பாவாதிபன் தன் சுவக்ஷேத்திரத்திலும், உச்சாம்சத்திலுமிருந்து இரு சுபருடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு பாலாரிஷ்டபயமில்லை.

(166) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சந்திரன் எட்டாம் பாவத்தில் விரயாம்சத்தில், இரு பாபிகளுடன் கூடி இருந்தால் ஜாதகனுகரு ஆயுட்பாவம் அற்பமாகும்.

(167) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம் உத்திராம்சம்) ஆகி சந்திரன் ராகுவுடன் கூடி ராசியில் இருந்து, அம்சம் மீனம் ஆனுல் ஜாதகனுக்கு பாலாரிஷ்ட பயமுண்டு.

(168) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் இருக்கும் ராசிநாதன் குருவுடன் கூடியாவது, குருவால் பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டபயமில்லை.

(169) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி மகா ஆரம் பத்திலும், கும்பத்தின் மத்தியிலும் சந்திரன் பன்னிரண்டாம் அம்சத்திலுமிருந்தால் பூர்வபாகத்தில் ஜெனித்த ஜாதகனுக்குப் பாலாரிஷ்டமுண்டு. உத்திரபாகம் ஆனல் பாலாரிஷ்டபயமில்லை, உத்திராம்சத்தில் இவன் தந்தை தீர்க்காயுள், மிருத்தியுஞ்ஜய ஜபம் பத்தாயிரம் உரு ஜெபித்து வஸ்திரதானம் செய்தால் மரணம் நேராது.

(170) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி பத்தாம் பாவத்தில் குரு மீனம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு பாலாரிஷ்ட பயமில்லை. உத்தாாம்சத்தில் முதல் பாகத்தில் ஜெனித்த ஜாதகன் இளைய சகோதர நாசமுடையவன், மத்திய கண்டத்தில் சகோதரி பர்த்தா நாசம் செய்யும், சகோதர பலயோகமுண்டு, புகழுடையவன், சகோதரர் நால்வர் அல்லது ஐவர் சகோதரர்கள் உண்டு, ஜாதகன் பண்டிதன், அதிக புத்திரர், பொருள் நிறம்பியவன், வீட்டு வேலையில் சுதந்திரமுடையவன், சிற்றப்பன் ஒருவன் தெளிந்த மனமுடையவன், ரகசியத்தில் காரியங்கள் செய்வான், சுகமுடையவன், காலாந்தரத்தில் சித்த சுத்தியுடையவன், அரசாங்கத்தில் புகழுடையவன், பந்து, மித்திரர், பொருள் நிறைந்தவன், பிதாவுக்கு அரிஷ்டம் முதலிய பாவம் செய்வான், எல்லோருக்கும் மூத்த சிற்றப்பன் ஒரு தாரமுடையவன், சுகி, கோபமுடைய மனைவியுடையவன், தர்மங்களின் ரகசியங்களறிந்தவன், வாலிபத்திலே தரித்திர மடைந்தவன், தன் கையால் சம்பாதித்த பொருளுடையவன், ஜாதகன் தன் சிற்றப்பனிடம் பிரீதியுடையவன், புத்திரன், புத்திரீகளுடன் கூடியவன்.

(171) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகிப் பத்தில் புதனுடைய நவாம்சத்தில் குரு கேந்திர ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் புண்ணியச் செய்கையுடையவன். ஆயுளாரோக்கிய விருத்தியுடையவன்.

(172) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி பாக்கியாதிபனான சுக்கிரன் பத்தாம் ராசியாகிய விருச்சிகத்தில் குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகன் எந்த நாடியில் பிறந்திருந்தபோதிலும் அதிக பாக்கிய பொருள் யோகமுடையவன்.

(173) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி பாக்கியாதிபனான சுக்கிரன், பத்தாம் ராசியாகிய விருச்சிகத்தில் லக்கினாதிபனான சனியுடன் கூடினால் ஜாதகனுக்கு ராஜயோக மில்லை, வியாபார ஜீவ

னம், அதிக தனம் சம்பாதிப்பான், எந்த சகோதரன் தகப்பனிடம் பிரீதியாயிருப்பானே அவனும், ஜாதகனும் சத்துருவாவானென்று சிலர் சொல்லுகிறார்கள், உத்தரபாகம் ஆனல் சிலசமயம் ஜாதகன் தம்பியிடம் பிரீதியுடையவனுக இருப்பான்.

(174) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம் ஆகி சகோதா ஸ்தானுதிபனுன குஜன் தன் உச்சாம்சத்தில் சுபருடன் கூடி இருந் தால் ஜாதகனுக்கு சகோதரர் எட்டுப் பேர்களுண்டு, அவர்களில் இரு வர் பிரபலமான புகழுடையவாாவார்கள், அரசனே நாயகனுக உடைய வாாவார்.

(175) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம் உத்திரபாகம்) ஆகி பத்தாம் பாவத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் பிறந்தது முதல் சம் பத்துடையவனுவான், மாற்ருந்தாய் புத்திர துவேஷமுடையவன்.

(176) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம் பூர்வபாகம் முன் பாகம்) ஆகி பத்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் தரித்திர னுவான்.

(177) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சந்திரன் இரண்டு பாபிகளுடன் கூடி இருந்தால் ஜாதகன் பாபமனதுடையவன், தகப்பன் சொல்லைக் கேளாதவன், ரகசியமாய் திருடுவான், யக்ஷி தேவி சித்தியுடையவன், எப்போதும் ரகஸ்ய காரியங்கள் செய்பவன், பாபத்தில் புத்தி செலுத்துவான்.

(178) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சந்திர லக் கினத்திலிருந்து குரு ஸ்தானம் சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் எந்த லக்கினத்தில் பிறந்திருந்தபோதிலும் ஞானவானுயும், பாக்கிய வானுகவும் இருப்பான்.

(179) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி குரு லக்கின அம்சாதிபனுகி சுக்கிரனுடனும், அங்காரகனுடனும் கூடினுல் ஜாதகன் பாக்கியவானுகவும், வியாபாரத்தில் தனவானுகவும், இரண்டாயிரம் தனத்திற்கு அதிகாரியாயும், தன் சிற்றப்பன் மகனுக்குப் பிரியனுமாக இருப்பான், உத்தரபாகம் ஆனுல் ஜாதகன் சிற்றப்பனுக்கு இருதார முண்டு. ஜாதகன் எப்போதும் பொருள் சம்பாதிப்பதிலேயே நோக்க முடையவன், உள்ளத்திற் கபடமுடையவன், நாலாம் திசையில் சகோதர விரோதமடைவான், இரண்டு அல்லது மூன்று வாரத்தில் பாகப்பிரிவினையாகும், மாற்ருந்தாய் மகன் செல்வவான், நல்லபாக்கிய முடையவன், மூன்றும் திசையில் சகோதரன் சந்தான மடைவான்

மாற்றாந்தாயின் பெண்ணின் புத்திரி வாலிபத்தில் பாக்கிய சுகத்துடன் கூடியவளாய் பின்னால் தரித்திர மடைந்து புத்திர புத்திரிகளுடன் கூடியவளாவாள், அவள் கெர்ப்பத்திலுதித்தவன் சாத்வீகன், சாந்தன், சகோதர சகோதரிகளுடன் கூடியவன், காலாந்தரத்தில் சகோதரன் மூலம் அதிக சௌக்கியமும், செல்வமுமடைவான்.

(180) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி மாதுலாதிபனான சந்திரன் இரு பாபருடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு அம்மான்மார் அதிகமாக உண்டு, இருவர் அல்லது மூவர் தீர்க்காயுளுடையவராயிருப்பார்கள், அம்மான்களில் ஒருவன் தேசாந்தரத்தில் மரிப்பான், ஒருவன் நோயாளியாயிருப்பான், (நாஸ்தீகர்களின்) ஆசாரமுடையவன், இவன் தாய் பாட்டன் செய்த பாபத்தினாலே தாய் வம்சம் அழியும், இவன் தாய் விவாகத்திற்குப் பிறகு புருஷன் மூலம் சுகமடைவாள், அம்மானுக்குக் கொஞ்சம் சுகமும், கொஞ்சம் கஷ்டமும் நேரிடும், இவன் தாய்க்குச் சகோதரர்கள் ஏழு அல்லது ஒன்பது பேர்கள் நிச்சயமாக உண்டு, இருவர் அல்லது மூவர் தீர்க்காயுளுடையவராவார்கள், அவர்களில் ஒருவன் நோயாளி, உத்தரபாகம் ஆனால் தாயின் சகோதரி மரிப்பாள், அம்மான் தரித்திரத்தால் கிலேசமுடையவனாய் ஜீவிப்பான்.

(181) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி லக்கினத்திலிருந்து பன்னிரெண்டாம் பாவத்தில் சனி இருக்கும் மீனாம்ச ஜாதகன் அம்மான் குலத்தில் ஒருவன் மனைவி துஷ்ட குணத்துடன் கூடியவளாவாள்.

(182) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி ஐந்தாம் ஸ்தானத்தில் குஜனிருந்து, குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய அம்மான்களுள் ஒருவன் புத்திர புத்திரிகளுடன் கூடியவன், ஒருவன் மரித்த புத்திரனுடையவன், மற்றவன் புத்திரனற்றவனென்று நிச்சயிக்கவும், இரண்டாம் திசையில் அம்மான் வயிற்று வலியால் பீடிக்கப்படுவான்.

(183) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம் உத்தரபாகம்) ஆகி மாமனார் ஸ்தானாதிபனான குஜன், இரு சுபருடன் கூடி இருந்தால் ஜாதகன் விவாகத்துக்குப் பிறகு சௌக்கியமடைவான், ஜாதகன் கருத்த நிறமுள்ள மனைவியுடையவனாவான்.

(184) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி லக்கினத்திலிருந்து பத்தாம் ஸ்தானமாகிய விருச்சிகத்தில் குஜனிருந்து, சுபக்கிர

கத்தால் பார்க்கப்பட்டாலும், கூடினாலும் ஜாதகன் நற்கர்ம, நற் செய்கை ஆசாரமுடையவன், பிதாவின் தர்மத்தைச் செய்வான், ஜாத கனுடைய தகப்பன் வழிப் (பாட்டன்) வம்சத்தில் அல்லது சிற்றப் பன் வம்சத்தில் கங்கா யாத்திரைப் பலனடைவான், (அழிந்ததை சீர் திருத்தல்) முதலிய தர்மம் செய்வான்.

(185) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி குஜன், பத் தாம் பாவம், ஏழாம் பாவம், லக்கின பாவம் இவைகளில் இருந்தால் ஜாதகன் பதிவிரதா ஸ்திரீக்குக் கணவனுவான், மனைவி லக்ஷ்மீகரம் பொருந்தியவள், அவனை விட்டுப்பிரியாள், ஜென்மமுதல் செல்வவான்.

(186) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சந்திரன் எட்டாம் பாவத்தில் சனி அம்சத்தில் இருந்து, லக்கினுதிபன் இருக் கும் பாவாதிபன் லக்கினத்திற்குக் கேந்திரத்திரிகோணங்களில் இருந்து சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தீர்க்காயுளுடையவன், பாபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அற்பாளுயுடையவன்.

(187) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சந்திரன் ஆறும் பாவத்திலும், அதன் திரிகோணத்தில் விருச்சிகத்தில் சனி குஜனுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு யமன யோகமென்பார்கள், இதில் இரட்டைப் பிறப்பாய் பிறப்பார்கள், ஜென்ம வருஷத்திலும், மூன்றும் வயதிலும் யமன யோக ஜாதகத்தில் பாலாரிஷ்டமுண்டு, பிழைப்பான்.

(188) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி ஆறும் பாவத்தில் சனியும், இரண்டாம் பாவத்தில் சந்திரனுமிருந்தால் ஜாத கனுக்கு பாலாரிஷ்டம் செய்யும், பிழைத்தால் பிதா நாசமுறுவன்.

(189) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சந்திரன், மிருத்யுவாவஸ்தையில் சத்துரு ராசியில் இருந்தால் ஜாதகன் ஆறு மாதத்தில் அரிஷ்ட மடைவான், தவறினுல் மூன்றும் வருஷம், ஆறும் வருஷம் மரணம் நிச்சயமாய் அடைவான்.

(190) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி ஆறும் பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகனுடைய ஆறும் வயது அல்லது எட்டாம் வயதில் மரணமடைவான், தவறினுல் இவன் தாய் தந்தை, சகோதரி இவர்கள் நாசமடைவார்கள்.

(191) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது பாப ருடன் கூடி தனுசில் இருந்தாலும் அல்லது பாபர்களால் பார்க்கப்பட்

டிருந்தாலும் ஜாதகன் நற்செய்கை செய்வான், புண்ணியவான், தனம் நிறம்பியவன், இவ்வுலகிலும், வேறு உலகிலும், சுகமுடையவன். உத்திராம்சத்தில் பிறந்திருந்தால் ஜாதகன் கண்ணேயுடையவன், அதிக பாக்கியம் நிறம்பியவன்.

(192) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது தனுசில் பாபருடன் கூடியாவது பார்க்கப்பட்டாவது இருப்பதுடன், சூரிய சந்திரரால் பார்க்கப்பட்டு, குரு பார்வை இல்லாதிருந்தால் ஜாதகன் நேத்திர வாயு பீடையுடையவன், அல்லது மூடியகண்களை யுடையவன்.

(193) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது தனுசில் பாபருன் கூடியாவது அன்றி பார்க்கப்பட்டாவது சிம்மநவாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு ராஜயோக முண்டு, பொக்கிஷ ஸ்தானத்திற்கு அதிகாரியாவான், இவனுக்குக் கண்களுக்குள் புழு உண்டு, பாலிபத்தில் காதில் பீடையுண்டு, சுபர் பார்வை இருந்திடில் ஜாதகன் ஆரோக்கியமுடையவன், மந்திர மூலிகைகளால் சுகமுடையவன், காது போக முடையவன்.

(194) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் கேது இருந்து சனியால் பார்க்கப்பட்டு, கன்னியாம்சத்தின் மத்தியில் சுபர் பார்வை இல்லாவிட்டால் ஜாதகன் காது நோயால் வருந்துவான்.

(195) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி மீனத்தில் சனி, அங்காரகனிருந்து கன்னியாம்சத்தில் கேது இருந்தால் ஜாதகன் திருட்டுச்செய்கை செய்ததில் காது அறுபடுவான்.

(196) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சந்திரன் சோராம்சத்தில் குஜனுடன் கூடி இருந்து சோராம்சத்தில் ஜெனித்த ஜாதகன் காதறுபடுவான், அப்படி இல்லாவிட்டால் நடுவயதில் வாயுவால் செவிடாவான்.

(197) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி சந்திரன் சோராம்சத்திலிருந்து குஜனால் பார்க்கப்பட்டு, சோராம்சத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு காதடியில் புண் உபத்திரவமுண்டாகும்.

(198) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது மீனத்தில் துலாம்சத்தில் குருவுடன் கூடியாவது அன்றி பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் வாசாலகன், பாபி, புணரத்தகாதவரைப் புணர்வான்.

(199) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கும்பராசித் திரிகோணத்தில் குரு, கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் பிராமண ஸ்திரீ சேர்கையுடையவன், பாபி, நடுவயதில் அரசனுக்குப் பிரியனுவான், சுகமுடையவன்.

(200) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி குரு குஜன் அம்சத்தில் குஜன் வீட்டில் கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் ஜீவ இம்சை செய்வான், பாபி, துஷ்ட புத்தியுடையவன்.

(201) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது மீனத்தில் துலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தார சுகமற்றவன், அயற் பெண்களின் சேர்க்கையுடையவன், காமி, மூத்திரக் கிருச்ர பீடை யுடையவன்.

(202) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது மீனத்தில் குஜாம்சத்தில் இருந்தால் ஜாதகன் மூத்திரதுவாரத்தில் பீடை யுடையவன்.

(203) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது மீனத்தில் குஜாம்சத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அவயவங் குறைந்த தன்மையை அடைவான்.

(204) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி குரு, குஜனுல் பார்க்கப்பட்டாலும், ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி குஜன், குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் சண்டையில் கத்தி தடுத்தலால் ஊமையாகி காது நுனியில் பீடையுடையவன், கொஞ்சம் விகாரமான காதுகளுடையவன்.

(205) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது பன்னிரெண்டாம் பாவத்தில் புதனம்சத்தில் இருந்து குருவுடன் கூடியாவது அன்றி பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் அரசன், குரு, பெரியோர், ஆசான் இவர்களுக்குத் துரோகம் செய்வான், மூத்த சகோதரர்களிடம் விரோதமுடையவனுவான்.

(206) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது கன்னியில் குருவுடன் கூடி இருந்தால் ஜாதகன் சகோதர நாசமுடையவன், பாலியத்தில் தரித்திரனுவான்.

(207) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது மீனத்தில் தனுசு அம்சத்திலிருந்து, சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் மனைவிக்குக் கொஞ்சம் அபவாதம் நேரிடும், ஜாதகன் தர்மவான், அதி

புத்திசாலி, வாலிபத்தில் அதிக துற்மார்க்கமான செய்கையுடையவன், சகோதர கிலேசத்தால் நித்தம் வருந்துவான், துர்நடவடிக்கையுள்ள ஸ்திரீயின் கணவனுவான், சுகமுடையவன்.

(208) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி மீன ராசி கேது, சனி இவர்களால் பார்க்கப்பட்டு, குருவின் பார்வை இல்லாம லிருந்தால் ஜாதகன் எந்த லக்கினத்தில் ஜெனித்தவனுனுலும் தன்னு டன் பிறந்த சகோதர சோக முடையவன்.

(209) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி கேது ஜென்ம லக்கினும்சத்திலிருந்து இருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மூத்த சகோதர நாசமுடையவன், காது நோய், காதின் சமீபத்தில் ரத்தப்பெருக்கு, புண் நோய் இதுகளுண்டு, அப்படியில்லாவிட்டால் காது நுனியில் நோயுண்டாகும், நித்தம் ராஜயோகத்துடன் கூடியவன், இறந்த சந்ததியுடையவன், புத்திரனில்லாதவன், ஞானமுடையவன், இவன் பெண்ணும் கண்ணேய் உடையவளாவாள்.

(210) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் லக்கினத்திலிருந்து சனி, அங்காரகன் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பல்லில் புண் முதலிய பயத்தால் பீடிக்கப் படுவான், கன்னங்களின் சமீபத்தில் பீடையுடையவன், இவன் மனைவி எப்பொழுதும் கர்ப்பசிராவம் முதலியவைகளினுல் கிலேச மடைவாள்.

(211) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி லக்கினத் திற்கு ஐந்தாம் பாவத்தில் சுக்கிரன் மீனும்சத்தில் குருவால் பார்க்கப் பட்டிருந்தால் ஜாதகன் காலாந்தரத்தில் புத்திரனடைவான், அல்லது வேறு மனைவியிடமாவது உண்டாகும், முன் செய்த புண்ணியவசத் தால் ஒரு புத்திரன் தீர்க்காயுளா யிருப்பான்.

(212) ஜென்ம லக்கினம் கும்பம் (குஹாம்சம்) ஆகி லக்கினத் திற்கு ஏழாம் பாவத்தில் குஜன் இருந்து பன்னிரெண்டாம் பாவாதிப னுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் மறு மணம் செய்து கொள்வான், வேறு மனைவியிடம் புத்திரப்பேறு அடைவான்.

(213) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி குரு, பாக் கியத்திரிகோணத்தில் 'கமலாகர' ஷஷ்டியாம்சத்தில் இருந்து சுக்கிரன் சனி இவர்களுடன் கூடியாவது, அன்றி சனி, சுக்கிரனிவர்களால்

பார்க்கப்பட்டாவது இருந்து, அதன் திரிகோணத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகன் சிவந்த நிறமும், அழகிய தேகமும் உடையவனுவான்.

(214) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம் பூர்வபாகம்) ஆகி நாலாம் பாவத்தில் மீனும்சத்தில் சூரியனிருந்தால் ஜாதகனுடைய தாய் தகப்பன் தீர்க்காயுளாயிருப்பார்கள்.

(215) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி சந்திரன் பதினோராம் பாவத்தில் சனியுடன் கூடி இருந்து, அந்த பதினோராம் பாவஸ்தானுதிபன் சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகன் மூத்த சகோதர நாசமுடையவன், இளைய சகோதரமில்லாதவன், பிறந்தால் மரிப்பான். உத்திராம்சம் ஆனுல் மூத்த சகோதரனுடன் கூடியவன், சுகமுடையவன்.

(216) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி புதன் சிம்மாம்சத்தில் மேஷத்தில் கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் நித்தம் விஷ்ணுபக்தியுடையவன், சகோதரனில்லாதவனுவான்.

(217) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி மேஷத்தில் புதன் கேதுவுடன் கூடியிருந்து, லக்கினத்தில் குஜனிருந்தால் ஜாதகன் தைரியமுடையவன், சூரன், செல்வம் நிரம்பியவனுவான்.

(218) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி சனி, குரூர ஷஷ்டியாம்ச பாகத்திலிருந்தால் ஜாதகன் உள்ளில் கபடமுடையவன், காமி, தாமரை போன்ற பறந்த கண்களுடையவன், சீக்கிரம் கோபமுடையவன், தெளிந்தமனதுடையவன், சமமான தேகமுடையவன், அழகானவன்.

(219) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி புதன் மேஷத்தில் கேதுவுடன் கூடி சிம்மாம்சத்திலிருக்கும் லக்ஷ்மி யோகமுடைய ஜாதகன் கொஞ்சம் மூர்க்ககுணமுடையவன், உள்ளில் கோபமுடையவன், தெளிந்த மனமுடையவன், அரசாங்க ஜனத்தோழமையுடையவன்.

(220) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி புதன் மேஷத்தில் சிம்மாம்சத்தில் இருந்தால் ஜாதகன் வாலிபத்தில் தரித்திரமடைந்து ஐந்து வயதுக்கு மேல் சுகமடைவான்.

(221) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி மீனும்சத்தில் சூரியன் இருந்தால் ஜாதகன் வாலிபத்தில் சக்கிரமுத்திரை அடையாளம் தரித்து, வைஷ்ணவாசாரங் கைக்கொள்வான்.

(222) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி மாதா ஸ்தானாதிபனான சுக்கிரன் சனி அம்சத்தில் குருவுடன் கூடி இருந்து, சந்திரன் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் தீர்காயுளுடைய வள், சனி கோசாரத்தில் ரிஷப பூர்வபாகத்தில் வரும்போது ஜாதக னுடைய தாய்க்கு அரிஷ்டம் நேரிடும்.

(223) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினத் தில் குஜனிருந்து, சுக்கிரன் சனியின் அம்சத்தில் குருவுடன் கூடி இருந்தால் ஜாதகன் மூன்று பாஷைகளில் வல்லவன், சங்கீத வித்தை யில் தேர்ந்தவன், காவ்யங்கள், நாடகங்கள், சாஸ்திரங்கள் முதலிய வைகளில் பிரியன், சங்கீதத்தில் அதிக விருப்புள்ளவன், சாத்துவீ கன், பிரியமாய்ப்பேசுவான், தேவப்பிராமணரிடம் பக்தியுடையவன்.

(224) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம் பூர்வபாகம்) ஆகி சுக்கிரன் குரு அம்சத்தில் இருந்து, குருவால் பார்க்கப்பட்டால் ஜாத கன் சிற்சில சமயங்களில் மந்தமான புத்தியுடையவன், ஜாதகன் பிதா வேதமறிந்தவன், நல்ல கேள்வி யுடையவன், குணமுடையவன், துஷ் டர்களிடம் துஷ்ட புத்தியுடையவன், சாதுக்களுக்கு சாத்துவீகன், இனியன், பிதாவின் பாக்கியமற்றவன், தன் கையால் சம்பாதித்த பொருளுடையவன், எல்லா சாஸ்திரங்களின் பொருளையும் விளக்க மாய் அறிந்தவன்.

(425) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி நாலாம்பா வாதிபன் ஞானம்சத்திலிருந்தால் ஜாதகன் எல்லோருக்கும் உபகாரம் செய்வான், பராக்கிரமத்தில் சந்தோஷ முடையவன், புகயுடையவன், நித்தம் நல்ல கதைகள் கேட்பான், சீமான், தீன ஜனங்களுக்குப் பிரி யன் இவைகளனைத்தும் தகப்பனால் உண்டாகும் பலனாகும். மாதா பிதா தீர்காயுளுடையவராயிருப்பார்கள், ஜாதகன் சிவந்த நிறம், நல்ல புத்திமான், லோகோபகாரத்தில் பற்றுடையவன், பஞ்ச யக்ஞம், முதலிய வைதீகசடங்குகள் செய்வான், ஆஸ்திகன், எல்லா தர்மங்க ளும் அறிந்தவன், தாதா, ஆழ்ந்த நேசமுள்ளவன்.

(226) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினாதி பன் சுசிராம்சத்திலிருந்து, சுக்கிரன் மகராம்சத்திலிருந்தால் ஜாதகன் உள்ளில் கோப முடையவன், தெளிந்த மனதுடையவன், கொஞ்சம் நிம்மதியுள்ள மனமுடையவனாவான்.

(227) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி குரு ஐந் தாம் பாவத்தில் சுபாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தேஜஸானுடைய

வன், புத்திமான், தெளிந்த முகமுடையவன், சாமார்தியசாலி, பயந்தவன், வித்தை புத்தியுடன் கூடியவன், சுகமுடையவன்.

(228) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி சனி லாப பாவத்தில் துலாம்சத்திலிருந்தால் ஜாதகன் சாஸ்திரங்களின் பொருளை விளக்கமாய் அறிந்தவன், அதிதிகளுக்கு நித்தம் பிரீதி செய்வான், தனவான், சுகமுடையவன். பூர்வபாகமானல் ஜாதகன் அனேக கிராமங்களுக்கு அதிகாரியானவன், இவன் தந்தை வெகு பாக்கியமுடையவன், நன்மார்க்கச் செய்கைகள் செய்வான், நல்ல புகழுடையவன், தர்மங்களைப் பரிபாலனம் செய்வான், பயிர், பசு இவைகளின் லாபமுடையவன், பூமிகள், கிராமங்கள் இவைகளுக்கதிகாரி, ஜாதகன் தகப்பனல் விசேஷ தனமடைவான்.

(229) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி குருவும், சுக்கிரனும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு ராசியில் இருந்தால் ஜாதகனுக்கு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தனமுடையவன், மூன்று புத்திரர்கள், மூன்று புத்திரிகள் தீர்க்காளுடையவரா யிருப்பார்கள், அதிகமும் உண்டாகும், சாந்தியால் புத்திர சுகமுண்டு.

(230) ஜென்மலக்கினம் கும்பம் (குந்தாம்சம்) ஆகி கடகத்தில் சனி இருந்தால் ஜாதகன் கிழக்கு மேற்கு வீதியில் தேவாலய சமீபத்தில் மூன்று அல்லது ஐந்தாவது கர்ப்பத்தில் உதித்தவனுவான்.

(231) ஜென்ம லக்கினம் கும்பம் (குந்தாம்சம்) ஆகி லக்கினதிபனன சனி, கேந்திரத்திரிகோண ஸ்தானங்களில் சுபக் கிரகத்துடன் கூடி இருந்தால் ஜாதகன் சீக்கிரம் கோபமுடையவன், தெளிந்த மனதுடையவன், சமமான சரீரமுடையவன், கொஞ்சமாய்ப் புசிப்பான், ஜலத்தில் பிரீதியுடையவன், மேதாவி, வெகுபாக்கியமுடையவன், தாய் தகப்பன் தீர்க்காயுளுடையவராவார், இரு சகோதாருடையவன், மூன்று சகோதரிகள் தீர்க்காயுளுடையவராவார், இவன் தந்தை இருதாரமுடையவன், பிதுர்பாக்கியம் அதிகமாகவுடையவன், தன் கையால் சம்பாதித்தப் பொருளுடையவன், பெருந் தன்மை வாய்ந்தவன், வேலையாட்களுடைய கிராமாதிகாரி, காலாந்தரத்தில் நல்ல பாக்கியமும், வாலிபத்தில் கஷ்டமும் அனுபவிப்பான், நடுவயதில் பாக்கியமுடையவன், முதுமையில் அதிக பாக்கியம், இரண்டாயிரத்திற்கு அதிகமான தனமுடையவன்.

(232) ஜென்ம லக்கினம் கும்பம் (குந்தாம்சம்) ஆகி பிதா ஸ்தானதிபனன சுக்கிரன் பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாம் பாவத்தில்

வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தந்தை இரு தாரமுடையவன், யாகம் சந்தேகமில்லாமல் செய்வான்.

(233) ஜென்ம லக்கினம் கும்பம் (குந்தாம்சம்) ஆகி லக்கினாதிபனான சனி பத்தாம் பாவ ராசியில் இருந்தால் ஜாதகன் பிறவி முதல் செல்வவானாக இருப்பான், எப்போதும் தரித்திரமே இல்லை.

(234) ஜென்மலக்கினம் கும்பம்(குந்தாம்சம் பூர்வபாகம்)ஆகி லக்கினத்தில் பாபிகள் கூடியாவது, பாபரால் லக்கினபாவம் பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் வைத்தியனாவான், மருந்து மூலம் ஜீவனமடைவான்.

(235) ஜென்ம லக்கினம் கும்பம் (குந்தாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபனான புதன், ஸ்திரீ காலத்தில் ஜெனித்த ஜாதகன் முதலில் பெண் சந்தானமடைவான், இதற்குச் சந்தேகமே இல்லை.

(236) ஜென்ம லக்கினம் கும்பம் (குந்தாம்சம்) ஆகி சுக்கிரன் மீனத்தில் நவாம்சத்திலும், சுபாம்சத்தில் தன் ராசியிலும் இருந்தால் ஜாதகன் நான்கு புத்திர யோகமுடையவன், புத்திரிகள் சந்தேகமில்லாமல் நாசமடைவர்.

(237) ஜென்மலக்கினம் கும்பம் (குந்தாம்சம்)ஆகி ஐந்தாம் பாவாதிபன் கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய தாரத்தின் கண்ணில் புழு உண்டாகும், கொஞ்சம் ரோகமுடைய களத்திரம் வாய்ப்பாள், விதிப்படி வருஷா விருதம், மாதா விரதாதிகளில் சாந்தி உண்டு.

(238) ஜென்ம லக்கினம் கும்பம் (குந்தாம்சம்) ஆகி லக்கினாதிபனான சனி, பாக்கிய பாவமாகிய ஒன்பதாம் பாவம் அல்லது இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் மூன்றும் திசையில் அதிக பாக்கியமுடையவன், ஐந்தாம் திசையில் சுபம் முதலானதுகள் நடக்கும்.

(239) ஜென்ம லக்கினம் கும்பம் (சுநிர்மலாம்சம் பூர்வபாகம்) ஆகி சந்திரன் சிற்றப்பன் ஸ்தானமாகிய பதினொன்றில் குருவுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு இரு சிற்றப்பன் மார்களுண்டு, ஒரு சிற்றப்பன் மரிப்பான்.

(240) ஜென்ம லக்கினம் கும்பம் (சுநிர்மலாம்சம்) ஆகி பிதா ஸ்தானாதிபனான சுக்கிரன், மகராம்சத்தில் குருவுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய தந்தை யோகவான், சுகமுடையவன், மண்டலாதிபதி

யோகத்தில் நரவாகன யோகமுடையவன், அதிக தேசங்களுக்கு அதிபன், அன்னதானம் செய்வான், நல்ல புகழுடையவன், விஷ்ணு கைங்கர்யம் செய்வான், அக்கிராரம் முதலிய தர்மம் செய்வான், சில காலம் ஸ்மார்த்தரிடம் பிரீதியுடையவனுவான், வைஷ்ணவாசாரங் கைக்கொள்வான்.

(241) ஜென்ம லக்கினம் கும்பம் (சுநிர்மலாம்சம் பூர்வபாகம்) ஆகி மீனும்சத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் சத்தியவாதி, பெரியோர்களிடம் பிரியமுடையவன்.

(242) ஜென்ம லக்கினம் கும்பம் (சுநிர்மலாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபனுன சூரியன் மீனும்சத்தில் ஸ்திரராசியில் இருந்து, களத்திர காரகனுன சுக்கிரன் குருவுடன் கூடி இருந்தால் ஜாதகன் ஒரே மனைவியுடையவன், அன்னிய ஸ்திரீ சேர்க்கையாலான பாப முடையவன்.

(243) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம் பூர்வபாகம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் கேதுவுடன் கூடி இருந்தால் ஜாதகன் புத்திரப் பேறுடையவன்.

(244) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி புத்திர ஸ்தானுதிபனுன புதன் மேஷத்தில் சிம்மநவாம்சத்திலிருந்து, ஐந்தாம் பாவத்தில் சுபர் இருந்தால் ஜாதகனுக்கு நான்கு புத்திரரும், இரண்டு பெண்களும் தீர்க்காயுளுடையவராவார், மற்றவர் நாச முறுவர்.

(245) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம் பூர்வபாகம்) ஆகி நாலாம் பாவாதிபன், மகராம்சத்தில் இருந்தால் ஜாதகன் நரவாகன யோகமுடையவன், சேனை, மந்திரி, ஜெனம் இவர்கள் நேசமுடையவன், அரசனுக்குப் பிரியமான சேவகனுவான்.

(246) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி லக்கினுதிபன் வர்க்கோத்தமாம்சத்திலிருந்தாலும் அல்லது தன்னுச்சஸ்தானமாகிய துலாத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் அத்துவைத மார்க்கத்திலிருப்பான், வேதாந்தத்திலிருப்பான், பரமாத்மாவை அறிந்தவனுவான்.

(247) ஜென்ம லக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி சூரியன் காள ஷஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகன் பன்னிரண்டாம் அதிபதிக் குறிய ஜாதிக்குத்தகுந்த லோகத்தை முடிவில் ஞானவானுகி அடைவான்.

(248) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி சுக்கிரன் குந்தாம்சத்திலிருந்து, சனியுடன் கூடியாவது, அன்றி சனியால் பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரமுடையவன், பெருந்தன்மை வாய்ந்தவன், பிதாவின் பாக்கியமில்லாதவன், மாற்றாந்தாய் மகனுடையவன், ஜாதகன் தந்தை மூன்று தாரமுடையவனாவான்.

(249) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் குந்தாம்சத்தில் சனியுடன் கூடியாவது பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் எப்போதும் விஷ்ணுபக்தியுடையவன், வைஷ்ணவாசாரமுடையவன்.

(250) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி பாக்கியாதிபனான சுக்கிரன், ஸ்திராம்சத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அரசாங்கத்தில் பிரசித்தமானவன், மூன்றுவாகன யோகமுடையவன், இவன் தந்தை நடுவயதில் பல்லக்கேறும் பாக்கியமுடையவனாவான், எப்போதும் தற்புகழ்ச்சியில் பிரீதியுடையவன், பரோபகாரம் செய்வான், இவன் தந்தைக்கு ஐந்து சகோதரர்களும், சகோதரிகள் இருவருமுண்டு.

(251) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி பதினோராம் ஸ்தானாதிபனான குரு, குஜனுடன் கூடியாவது குஜனால் பார்க்கப்பட்டாவதிருந்தால் ஜாதகன் பின் சகோதரமில்லாதவன், மூத்த சகோதரனுடையவன்.

(252) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி சுக்கிரன் பதினோராம் பாவத்திலிருந்து, குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் வனாந்தரத்திலுள்ள பட்டணத்தில் வசிப்பான், அருவருக்கத்தக்க பிரபுவைச் சேவிப்பான், இவன் தந்தை மூத்த சகோதர நாசத்தால் கிலேசமடைந்து வேறு தேசம் செல்வான், தென் தேசத்தில் வெகு பாக்கிய மடைவான், பெரிய அரசன் வாயிலில் பிராமண ஸ்நேகமடைவான், இவன் தந்தை ராஜ பூஜிதனாவான், சத்துருநாசத்திற்குப் பிறகு சுகமடைவான், நவவாகனம், அணி, அலங்காரம் முதலியன பெறுவான்.

(253) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி குந்தாம்சத்தில் சுக்கிரன் இருக்க, பிராமணகாலத்தில் ஜெனித்த ஜாதகன் குரூர அந்தரம் நீங்கி, இதர காலங்களிற் சுகமடைவான், தகப்பனுக்கு நல்ல பாக்கியமுண்டு.

(254) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி லக்கி னுதிபனுன சனி, தன்னுச்ச ராசியாகிய துலாத்தில் இருந்தால் ஜாதக னுக்கு அதிபால்யத்திலேயே விவாகம் நடக்கும், ஜாதகன் மறுதார யோகமுடையவன், மூன்று பாஷைகளில் சமர்த்தன், சங்கீதவித்தை அறிந்தவன், சமஸ்கிருதம் அறிந்தவன், பெருந்தன்மை வாய்ந்தவன், புகழுடையவன்.

(255) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபன் சத்துரு ராசியாகிய ஆரும் ராசியில் இருந்து, புதனுடன் கூடி குந்தாம்சத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் வீணை வித்தை அறிந் தவன், காந்தர்வயோகத்திலும், வீணை வாத்தியத்திலும், பிரியனுமா வான், அரசாங்கத்தில் நல்ல பாக்கியம் கிடைக்கும்.

(256) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி நாலம் பாவாதிபன் குந்தாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு ஆருவது திசையில் சுயபுத்தியில் தகப்பன் அரிஷ்டமடைவான்.

(257) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி நாலாம் பாவாதிபன் குந்தாம்சத்திலிருந்து, லாப பாவாமாகிய பதினோ ராம் பாவம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நாலாவது திசை யில் அதிக பாக்கியமடைவான், மூன்று வாகனயோகமுடையவன்.

(258) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஐந் தாம் பாவாதிபன் சூரியனுடன் கூடி குந்தாம்சத்தில் சுக்கிரன் இருந் தால் ஜாதகன் இருதாரயோகமுடையவன், சிலர் மூன்று தாரமுண் டென்பர், ஜாதகனுக்கு காலாந்தரத்தில் வேறுதாரத்திடம் புத்திரன் உண்டாகும்.

(259) ஜென்ம லக்கினம் கும்பம் (வைஷ்ணவியம்சம்) ஆகி ஐந் தாம் பாவத்தில் குரு இறந்த அவஸ்தையில் இருக்க மிருத்யுகாலாம் சத்தில் ஜெனித்த ஜாதகன் இறந்த சந்ததி அதிகமாகவுடையவன், விதிப்படி சாந்தி செய்யவும், ஐந்தாம் திசாகாலத்தில் குரூர வேதக் கிரக அந்தர காலத்தில் தேக ஜாட்டியமுண்டாகும், சாந்தி செய்ய நிவர்த்தியுண்டாகும், ஆருவது திசாகாலத்தில் முன் பாதியில் சௌக் கியமும், பின் பாதியில் யோக பங்கமும் உண்டாகும்.

(260) ஜென்ம லக்கினம் கும்பம் (சீதளாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் சகோ தர, சகோதரிகளுடன் கூடியவனுவான்.

(261) ஜென்ம லக்கினம் கும்பம் (சீதளாம்சம் உத்திராம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் முன்பின் சகோதரமில்லாதவனுவான்.

(262) ஜென்மலக்கினம் கும்பம் (சீதளாம்சம்) ஆகி சனி மிதுனத்தில் இருந்தால் ஜாதகன் புத்திரமித்திருருடையவன், வாலிபத்தில் கிலேசத்தால் வருந்துவான்.

(263) ஜென்ம லக்கினம் கும்பம் (சீதளாம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்கு தன் இரண்டாவது திசாகாலத்தில் விவாகம் நடக்கும், மூன்ருவது திசையில் பின் பாதியில் பிதா அரிஷ்டமடைவான்.

(264) ஜென்ம லக்கினம் கும்பம் (சீதளாம்சம்) ஆகி சனி, மிதுனத்தில் இருந்தால் ஜாதகன் புத்திர புத்திரிகள் சமர்த்தியாகவுடையவன், முப்பது வருஷத்திற்குமேல் சுகமுண்டு, இருநூறு தனத்திற்கு அதிகமாகவுடையவன், விவசாயத் தொழிலால் ஆயுளுள்ளவரை நல்ல ஜீவனம் செய்வான், அறுபத்தொன்பதாவது வயதில் மரணமடைவான், புண்ணியத்தால் பிழைத்தால் எழுபத்திரண்டில் மரணமடைவான்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் கும்ப லக்கினத்திற்கு 264-விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட கும்ப லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் கும்ப லக்கின பலனின் துடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்று அறியவும்.

———:0:———

மீன லக்கின ஜாதகம்.

(1) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்தில் இருந்து எட்டாம் பாவத்தில் இருக்கும் சனியால் பார்க்கப்பட்டு, லக்கினத்தைச் செவ்வாய் பார்த்தால் ஜாதகன் மகான், பிரபு, துக்க மடைந்த மனதுடையவன், அதிக செலவுடையவன, பந்துக்கள் பிரிவுடையவன், சமுசார சித்தமுடையவன், விரக்தியுமுடையவன், பரப்பிரம்மத்தினிடம் தியானமுடையவன், எப்போதும் உண்மையையே பேசுபவன், உலக நடையறியாதவன், வணக்கமுடையவன், அனேக வாகனங்கள், பொருள்களுடையவன், தேசாதிபதியாகி நிர்மலமான மனதுடையவன்.

(2) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி பத்தாவது பாவாதிபதி பத்தாவது பாவத்திலேயே பலவானுயிருந்தால் ஜாதகன் சிம்மாசன மடைவான், நியாயத்தை அனுசரிப்பவன், பிராமண பக்தி தேவபக்தி இவைகளுடையவன், சிவந்த நிறமுடைய சரீரமுடையவன், நல்ல வாலிப சரீரம் உடையவன்.

(3) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி சூரியன் துலா ராசியில் காள ஷஷ்டியம்சத்திலும், சந்திரன் துலா ராசியிலேயே சோமலதாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் அழகுடையவன், புத்திமான், வாச்சாலகன், அழகிய முகமும் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, மேதாவி, தர்மாத்துமா, ராஜயோகமுடையவன், சூட்டுத்தேகி, பலபாஷைகளறிபவன், சம்ஸ்க்ருதத்தைப் பிரியமாய்ப் பேசுபவன், ஜோதிட மறிவான், ராஜ முத்திராதிகாரி, தேசங்கள் அல்லது கிராமங்களுக்கு அதிபதி, கொஞ்சமாய்ப் புசிப்பவன், அதையும் சீக்கிரமாய் புசிப்பவன், போகி, சந்தன புஷ்ப வஸ்திரப்பிரியன், காவிய நாடக சார மறிபவன், வேதசாஸ்திர புராணமும் அறிபவன், விஷ்ணு பக்த குலத்தில் பிறந்தவன், ஹரி சங்கர பக்தி உடையவன், பல்லக்கு முதலிய யோகமுடையவன், பிரபல உத்தியோக பாக்கிய மடைபவன், இவனுடைய இரண்டாம் தெசையில் முற்பகுதியில் தன் ஜென்ம தேசத்திற்குத் தெற்கில் அல்லது வட மேற்கில் புண்ணிய க்ஷேத்திரத்தில் வசிப்பான், ஜாதகன் தன் சிறிய தகப்பனுக்குச் சுவீகார புத்திரனுவான், உத்தியோக மூலம் பல தேசங்களில் சஞ்சரிப்பான், நற்குண

முள்ளவன், எல்லோருக்கும் இதம் செய்பவன், சாத்துவீக குண முடையவன்.

(4) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி ஆறுவது பாவத்திலிருந்து, இரண்டாம் பாவம் குருவால் பார்க்கப்பட்டாலும், ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தைச் சனி, சூரியன், சுக்கிரன், சந்திரனிவர்கள் பார்த்தாலும், ஜாதகன் யுக்தா யுக்தம் தெரிந்தவன், விசேஷம் தெரிந்தவன், முக்கியமாய்ச் சாதுரியமான யுக்தியுடையவன். நான்கு பாஷைகளில் வல்லவன், எழுத்து எழுதுவதில் சமர்த்தன், ஆயினும், இரண்டாம் பாவத்தைச் சனி பார்த்தால் அந்த தோஷத்தால் ஜாதகனுடைய வித்தைக்குத் தடங்கலுண்டாகும், சொற்ப வித்தை யடைவான், அழகான கண்களுடையவன், குடும்பீ, தெண்டிக்கும் அதிகாரமுடையவன், பல் விளக்கும்போது பல்லிலிருந்து ரத்தம் வடியும், கொஞ்சம் தந்தவாயு உடையவன், சில சமயம் கொஞ்சம் கொஞ்சம் காது நோய் உடையவன், தானாக சுயார்ஜிதமாகப் பதினாயிரத்திற்கு மேற்பட்ட தனம் சம்பாதிப்பான், பிதுரார்ஜிதமான தனம் அல்பமாகவுடையவன், வீடு, பூமி முதலிய உடையவன், சீக்கிரத்தில் கோபிப்பவன், தெளிந்த மனதுடையவன், பச்சாத்தாப முடையவன்.

(5) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி மூன்றும் பாவத்தில் கேது இருந்து, அந்த கேது நின்ற ராசிநாதன் பாபருடன் கூடியிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரமுடையவன், இளைய சகோதரமில்லாதவன், ஜாதகனுடைய மூத்த சகோதரி ஒருத்தி இரண்டு புத்திரருடையவள், அவர்களில் ஒருவன் ராஜாங்கத்தில் அதிகாரமுடையவன், தனிகன், நல்ல அந்தஸ்தடைவான், ஜாதகனுடைய மேற்படி சகோதரி நல்ல அந்தஸ்தடைந்து பிறகு மரிப்பாள், அவளிறந்த இரண்டு மூன்று வருஷத்தில் அவள் கணவன் அற்பாயுளாய் மரித்துவிடுவான், அவளுடைய புத்திரர்களை இந்த ஜாதகன் காப்பாற்றுவான்.

(6) ஜென்ம லக்கினம் மீனம் (பாலாம்சம்) ஆகி மூத்த சகோதரஸ்தானாதிபதியாகிய சனி சூரியனுடன் கூடி துலா ராசியில் உச்சனாகியிருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் தான் புத்திரபாவமுள்ள ஜாதகனாயினும் மலடியின் கணவனாவான், இவனுக்குத் தன் தகப்பனிடமாவது, சகோதரனிடமாவது அன்பும், சிநேகிதமும் உண்டாகாது, சொற்ப உத்தியோக மூலம் ஜீவிப்பவன், தனமுடையவன், எழுத்து எழுதத் தெரிந்தவன், நோயால் வருந்துவான், சாந்தி செய்

தால் சுகமடைவான், ஜாதகனுடைய தாய் விசேஷ புண்ணியவதி, ஏழு பிரசவம் பிரசவிப்பவள், ஏழாவது பிரசவத்தினால் ஜாதகன் தாய் நோயுற்று மூன்று வருஷத்திற்குப் பிறகு மரிப்பாள், ஜாதகன் ஆறு வது கெற்பத்தில் ஜெனித்தவன். ஜாதகனுக்குப் பின் பிறந்த சிசுவும் மரித்து விடும், ஜாதகன் தன் சிற்றப்பனுக்குச் சுவீகார புத்திரனாகி சகோதரனில்லாத ஒண்டியாவான், வெளியில் திடமாகப் பேசுபவன், உள்ளுக்குள் கபடமாய் இருப்பவன், மனதில் தைரியமற்றவனாவான்.

(7) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி நான்காவது பாவம் குருவால் பார்க்கப்பட்டு நான்காவது பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் வீடு, தோட்டம், நிலம், பல்லக்கு முதலிய பாக்கியமுடையவன், கபட மில்லாதவன், அதிக போக முடையவன், நல்ல மனதுடையவன், கருணையுடையவன்.

(8) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதி பதி சந்திரன் துலா ராசியில் சூரியன், சுக்கிரன், சனி யிருவர்களுடன் கூடியிருந்து புத்திரகாரகனான குரு ராசியில் தனுசில் இருந்து நவாம் சத்தில் கன்னியில் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குப் பெண் சந்ததி தீர்க்காயுளுடையதாகும், புருஷ சந்ததி மரித்து விடும்.

(9) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி புத்திரகாரக னும், லக்கின பாவாதிபதியும் ஆகிய குரு, பத்தாவது பாவத்தில் பலத்துடனிருந்தால் ஜாதகனுக்கு முன் ஜென்மாந்திரத்தின் தோஷ மாகிய ஸ்திரீ தோஷத்தால் புத்திர சந்ததி உண்டாகாது, ஜாதகன் மனைவி முன் ஜென்மத்தில் சிசுவைக் கொலை செய்து துஷ்டநடவடிக் கையில் இருந்தவள், அந்த தோஷத்தால் இச்சென்மத்தில் ஜாதகனுக் குச் சந்ததி மூத்த மனைவியிடம் உண்டாகாது, வேறு மனைவியிடம் ஜாதகனுக்குச் சந்ததி உண்டாகும், அதற்குச் சாந்தியாக ஏகாதசியில் கோதானமும், அரசமரப் பிரதிஷ்டையும் செய்து மஞ்சளால் சிவலிங் கம் செய்து பூஜித்து, சிம்சுபார தானம், புத்திரகாமேஷ்டியாகம் முத லியவை செய்து, சொர்ணத்தால் செய்யப்பட்ட சந்தான கோபால மூர்த்தியைப் பூஜித்துத் தானம் செய்து, இத்தகைய தோஷத்தை நீக் கிய பின்பு காலாந்திரத்தில் ஜாதகன் இரண்டாவது மனைவியிடம் புத் திரனை யடைவான், ஜாதகன் அநேக தாரம் கைக்கொள்வான், சாந்தி செய்யாவிடில் புத்திரன் பிறந்து மரிக்கும், தனக்குப் புத்திரனில்லாத தோஷத்தால் ஜாதகனுடைய மூத்த மனைவி ஜலத்தில் விழுந்து துர்

மரணமாக மரித்து விடுவாள், ஜாதகன் ஒரு புத்திரனையும் நான்கு பெண்களையும், இரண்டாவது மனைவியிடம் வெகு கஷ்டத்தால் சேது ஸ்நாநாதிகள் செய்து அடைவான்.

(10) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி ஆருவது பாவாதிபதியாகிய சூரியன் எட்டாவது பாவத்தில் சந்திரன், சுக்கிரன், சனி இவர்களுடன் கூடியிருந்து ஆருவது பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் மேக ரோகத்தினுல் பீடையுடையவனுவன், மூத்திர கிருச்சனம், வெள்ளை, மேக நீர்பெருக்கு உண்டாகும், சில சமயம் ரக்தப்பெருக்கும் உண்டாகும், மறைவிட ரோகம், மூல ரோகம், வயிற்றுச் சூலை, சுரம், உஷ்ணபீடை, விரைவாதம் முதலியன உண்டாகும், தாயாதிகள் அதிக விரோதியாயிருப்பார்கள், ஆருவது பாவத்தைக்குரு பார்த்தால் மேற்படி வியாதிகள் சீக்கிரத்தில் நிவாரண முண்டாகும்.

(11) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி ஏழாவது பாவாதிபதி ஒன்பதாவது பாவத்தில் இருந்து, களத்திரகாரகனுகிய சுக்கிரன் சுயக்ஷேத்திரத்தில் இருந்தாலும், ஜென்ம லக்கினம் மீனம், (மாலாம்சம்) ஆகி புதன் விருச்சிக ராசியில் ராகுவுடன் கூடியிருந்து சிம்மராசியில் செவ்வாயிருந்து நவாம்சத்தில் செவ்வாயால் புதன் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் இருபத்தொன்றல்லது இருபத்திரண்டாவது வயதில் தன் வாசஸ்தலத்திற்கு வடக்கில் தூர தேசத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் தாயற்ற பெண்ணை மனப்பான், ஜாதகனுடைய மாமனுர் தீர்க்காயுளுடையவன், ஜாதகன் மாமனுருக்கு மூன்று தாரமுண்டு, அவருடைய முதலிருமனைவிகளுக்குச் சந்ததியுண்டாகாது, மூன்ருவது மனைவிக்கு புத்திரி புத்திரருண்டு, ஜாதகனுடைய மாமனுர் சிலகாலம் துராச்சாரமுடையவனுகி ருது ஸ்திரீ சம்மந்தமுடையவனுவான், பல ஜாதிப் பெண்களை அனைந்தவன், பின் வயதில் ஞானமடைந்து நன்னடவடிக்கை யுடனிருப்பான், ஜாதகனுடைய மாமனுர் ராஜ முத்திரைதரித்து அதிகாரியாவான், தேசக்கிராம அதிகாரியாவான், தனவான், மருமகனிடம் அன்பில்லாதவன், ஜாதகனும் அவ்விதமே மாமனுரிடம் பிரீதியற்றவன், மாமியார் நல்லவள், ஐந்து பெண்களை யுடையவள், அவள் அற்பாயுளாய் மரிப்பாள், ஜாதகனுடைய மாமனுரின் இரண்டாவது மனைவி கொஞ்சகாலம் ஜீவித்திருப்பாள், மாமனுர் தன் மூன்ரும் மனைவியுடன் சௌக்கியமாய் இருப்பார், ஜாதகனுடைய மனைவியின் சகோதரிகள் நால்வரும் நாசமடைவார்கள்.

(12) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி புதன் விருச்சிக ராசியில் ராகுவுடன் கூடி யிருந்தால் ஜாதகன் மனைவி கறுப்பு நிறமுடையவள், தாமச குணமுடையவள், மந்த சுபாவமுடையவள், பதி பக்தி உடையவள், நல்லவள், சிரம யோகத்தால் புத்திரனுடையவள், ஜாதகனும் வாலிபத்தில் பல ஜாதி ஸ்திரீகளையும், விதவை ஸ்திரீகளையும் அனுபவனுவான்.

(13) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஒரு மனைவியுடன் சிலது காலம் சுகமாய் வாழ்வான், பிறகு அவள் நதியிலாவது, கிணற்றிலாவது விழுந்து ஜலத்தினல் தூர்மரணமாய் மரிப்பாள், ஜாதகன் மறு வருஷத்தில் வேறு மணம் செய்து கொள்ளுவான்.

(14) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி சுக்கிரன் பாபிகளுடன் கூடியிருந்தால் ஜாதகன் சிலகாலம் துராச்சாரமுடையவன், பிறகு பச்சாதாபப்பட்டு பாபத்திற்குப் பயந்து வைதீக ஆச்சாரங்களைக் கொள்ளுவான், சிலர் ஜாதகன் இரண்டுதார யோகமுடையவன் என்று எண்ணுகின்றனர்.

(15) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் புதன் ராகுவுடன் கூடியிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும், ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி உத்தரபாகத்தில் ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டு சூரியன் துலா ராசியில் பாபருடன் கூடி நீச்சராசியிலிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் பூமி பாக்கியமுடையவன், ஜாதகனுக்கு இரண்டு தகப்பன்மார்கள் உண்டு, அவர்களில் ஜாதகனுடைய ஜெனன தகப்பன் தீர்க்காளுடையவன், ஜாதகனுடைய சுவீகார தகப்பன் ஜாதகனுடைய விவாகத்திற்குப் பிறகு யாத்திரை வழியில் சுரத்தால் மரிப்பான், சுவீகார தாய் தீர்க்காளுடையவள்.

(16) ஜென்ம லக்கினம் மீனம் (மாலாம்சம்) ஆகி குரு பத்தாவது பாவத்தில் இருந்து மேற்படி குரு நவாம்சத்தில் கன்னியில் கேதுவுடன் கூடியிருந்து பத்தாம் பாவம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நல்ல ஆச்சார மில்லாதவன், வேதாந்த ஞானமுடையவன், மானி, பிரபு, தண்டிக்கும் அதிகாரமுடையவன், தாஸி தாஸ ஜெனங்களுடன் கூடியவன், மூன்று வாகன யோகமுடையவன், அதிக பூமி தனமுடையவன், அதிக தர்மசிந்தை யுடையவன், சுகி, பல வழியில்

தனலாபமுடையவன், பத்தாம் பாவத்தில் குரு இருந்தால் தர்மத்தில் விசேஷ தனச்செலவு உண்டாகும்.

(17) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி நான்காவது பாவத்தில் புதன் சுயக்ஷேத்திரத்தில் சூரியனுடன் கூடியிருந்து பத்தாம் பாவாதிபதியாகிய குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நல்ல பாக்கியமுடையவன்.

(18) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி சந்திரன் புதனுடைய க்ஷேத்திரத்தில் இருந்து அந்த சந்திர லக்கின அதிபதியாகிய புதன் சுயக்ஷேத்திரத்தில் குந்தாம்சத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டு, விப்பிரகாலத்தில் ஜாதகன் பிறந்தால் விப்பிரனாக பிறந்து பிதுரார்ஜித தனத்தைச் சேர்ப்பான். க்ஷத்திரியகாலத்தில் இப்படியிருக்கப் பிறந்தவன், விஷ்ணு பக்தியடைவான், பெரிய அரசர்களை அடைவான், அல்லது பெரிய அரசனாவான், வைசியகாலத்தில் இப்படியிருக்கப் பிறந்தவன், அதிக வியாபார ஜீவனமுடையவன், 'தன தான்னிய லாபமடைவான், பிராம்மணருடைய சிநேகமுடையவன், சுகி, சூத்திரகாலத்தில் இப்படியிருக்க ஜெனித்தவன் ராஜ சேவை செய்வான், பூமி கிராம ஆதிபத்திய மடைவான், விவசாயம் செய்வான், பசு, தானியம் சமுர்த்தியா யுடையவன்.

(19) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதியாகிய புதன் சுயக்ஷேத்திரத்திலும் குந்தாம்சத்திலுமிருந்து ஆறுவது பாவாதிபதியான சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் பிறந்த வருஷத்தில் ஜாதகனுடைய தாய் தகப்பனுக்குக் குரூரமான சுரபீடையும், கிலேசமும் உண்டாகும்.

(20) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி நான்காவது பாவத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் விப்பிரகாலத்தில் பிறந்தவன், இளைய சகோதரமில்லாதவன், மூத்த சகோதரனுடன் கூடியவன், ஜாதகன் பெருந்தன்மையுடையவன், பிதுர் பாக்கிய சமுர்த்தி உடையவன், மாற்றாந்தாய்க்குப் பிறந்த பேத சகோதரனுடையவனாவான்.

(21) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதியாகிய புதன் நான்காம் பாவத்தில் குந்தாம்சத்திலிருந்தால் குருவால் பார்க்கப்பட்டாலும், குருவால் பார்க்கப்படாவிட்டாலும் ஜாதகன் ஹரி சங்கரபக்தி உடையவன், தேவப்பிராமண பக்தன், தாய்

தகப்பன் சுகமுடையவன், ராஜாங்கத்தில் பிரசித்தி அடைவான், மூன்று வாகனமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் தன் மத்திய வயதில் பல்லக்கு முதலிய வாகன பாக்கியமுடையவன், எப்போதும் தன்னைத்தான் புகழ்ச்சி செய்து கொள்ளுவான், எப்போதும் பரோப காரம் செய்பவன், ஐந்து உடன் பிறந்த சகோதரர்களும், இரண்டு சகோதரிகளுமுடையவன், புத்திமான், தன் மூத்த சகோதரன் பிரிவால் ஜாதகனுடைய தகப்பன் வருந்துவான், பிறகு ஜாதகனுடைய தகப்பன் வெளி தேசம் செல்வான், தெற்கில் அதிக பாக்கிய மடைவான், பெரிய அரசன் வழியில் பிராம்மண சிநேகமும் அடைவான், காட்டிலாவது பட்டிணத்திலாவது வசிப்பான், வைஷ்ணவ துவேஷ மூலமாக ஜாதகனுடைய தகப்பன் கிலேசமுடையவனுவான்.

(22) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி குந்தாம்சத்தில் புதன் சுயக்ஷேத்திரத்திலும், அம்சத்தில் மகா நவாம்சத்திலும் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஜாதகன் பிறந்த நான்காவது வயதில் மனோ துக்கத்தை யடைவான், பிறகு பாக்கிய விருத்தியை யடைவான், ஜாதகனுடைய இரண்டாம் தெசையில் ராஜயோகமும், சத்துரு நாசமும் அடைவான்.

(23) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் சந்திரனிருந்து கேசரீ யோகத்தில் பிறந்த ஜாதகனுடைய தகப்பன், தாய், தாய் வழிப்பாட்டி முதலானவர்கள் தீர்க்காயுளுடையவர்களாயிருப்பார்கள்.

(24) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி புதன் சுயக்ஷேத்திரத்தில் சூரியனுடன் கூடியிருந்து, புதன் குந்தாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தாய் வழிப்பாட்டி தீர்க்காயுளுடையவளாயிருப்பாள், ஜாதகன் இரு அம்மான்களுடையவன்.

(25) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி ஏழாவது பாவாதிபதி குந்தாம்சத்தில் சுயக்ஷேத்திரத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குப் பத்து வயதுக்குமேல் பன்னிரண்டு வயதுக்குள் விவாகம் நடக்கும் என்று சிலரும், இன்னஞ் சிலர் அதிக பாலியத்திலேயே விவாகம் நடக்கும் என்று சிலரும் செல்லுகின்றனர், ஜாதகன் அதிக சம்பத்துடைய குலத்தில் நல்ல மனைவியை சுகமாய் விவாகஞ் செய்வான், காவிய நாடக சாரமறிபவன், மூன்று பாஷைகளில்வல்லவன், தேவபாஷை தெலுங்கு இந்த பாஷைகளில் கவியாவன்.

(26) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி சூரியன் புதனுடைய க்ஷேத்திரத்தில் அம்புஜாம்சத்திலும், புதன் சுயக்ஷேத்திரத்திலேயே குந்தாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு நான்காவது திசையில் லக்கினாதிபன் புக்தியில் விசேஷ பாக்கிய முண்டாகும், வீட்டில் லக்ஷ்மீகடாக்ஷ முண்டாகும், ஜாதகன் வெகு தனத்தையும், புத்திரரையும், ராஜயோகத்தையும் அடைவான், மேலும் அதுமுதல் தொடர்ந்து பத்து வருஷம் நல்ல யோகமுண்டாகும்.

(27) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி சூரியனுடன் கூடி ஏழாம் பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகன் இரண்டு மனைவியையுடையவன் என்று சிலரும் இன்னஞ் மூன்று மனைவியை யுடையவன் என்றும் சொல்லுகின்றனர்.

(28) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் தன் உச்சாம்சத்தில் இருந்து ராசியில் மிதுனத்திலும் அம்சத்தில் மகரத்திலும் இருக்கப்பட்ட புதனும் மேற்படி பத்தாம் பாவாதிபதியும் ஒருவரை ஒருவர் நவாம்சையில் பார்த்துக் கொண்டால் ஜாதகன் எப்பொழுதும் அன்னதானம் செய்யும் புண்ணியவான், தன் தகப்பனைவிட அதிக பாக்கியமடைவான்.

(29) ஜென்ம லக்கினம் மீனம் (குந்தாம்சம்) ஆகி குரு கன்னியா ராசியில் அல்லது தன்னுடையதான மீன ராசியில் அம்சத்தில் மீனத்தில் இருந்தாலும், தன் உச்சாம்சத்தில் சனி மேஷ ராசியிருந்தாலும் ஜாதகன் இறுதியில் பிரபல புண்ணியலோக மடைவான், புதன் குந்தாம்சத்தில் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பனும் புண்ணியலோகமான இந்திர லோகமடைவான், ஜாதகனுடைய தகப்பன் இரு சகோதாருடையவன், சுகவான்.

(30) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி மேஷத்தில் சிம்மாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தன் மதத்தை விரோதிப்பான், தன் மதத்தில் நிலைத்திரான்.

(31) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி மேஷத்தில் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் எப்பொழுதும் விஷ்ணு பக்தியில் ஆசையுடையவன், உடன் பிறந்த சகோதரனில்லாதவன்.

(32) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி மேஷ ராசியில் சூரியனுடன் கூடியிருந்து மிதுன ராசியில் செவ்வாயுமிருந்

தால் ஜாதகன் தீரன், சூரன், நல்ல புத்திமான், தேசாந்திரத்தில் பாக்கியமடைவான், சூதுடையவன், அனேகரை வஞ்சிப்பவன்.

(33) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி மேஷ ராசியில் ஷஷ்டியம்சமாகிய அபாப்பதியம்சத்தில் இருந்தால் ஜாதகன் யாகம் செய்வான், தன் காரியத்தில் நோக்கமுடையவன், எல்லா மறிந்தவனுவான், சாத்துமீகன், கோபமுடையவன், மர்மத்தை பேதிப்பான், தாமசகுணமுடையவன்.

(34) ஜென்ம லக்கினம் மீனம் (சமலாம்சம்) ஆகி சனி மேஷ ராசியில் குரூர ஷஷ்டியம்சத்தில் கமலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் அருவருக்கத்தக்க புத்தியுடையவன், உள்ளத்தில் கபடமுடையவன், கோபமுள்ளவன், காமீ, தாமரை இதழ்போன்ற விசாலமான கண்களுடையவன், அயலாருக்குத் துக்கந்தருபவன், சீக்கிரம் கோபமுடையவன், உடனே கோபத்திலிருந்து தெளிவடைவான், மெலிந்த தேகமுடையவன்.

(35) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் ராகு இருந்து இரண்டாம் பாவத்தில் சனி ராசியில் மேஷத்திலும், அம்சத்தில் சிம்ம நவாம்சத்திலும் இருந்து லக்ஷ்மீ யோகமுண்டானுல் ஜாதகன் கொஞ்சம் மூர்க்க சுபாவமுடையவன், உள்ளத்தில் கோபியாயினும் தெளிந்த மனதுடையவன், அரசன் மற்ற அரசாங்க ஜெனம் சகலமானவருக்கும் சினேகமுடையவன், பிதுரு பாக்கியமில்லாதவன், தனது சிற்றப்பனுல் பாக்கியமடைவான், சுயார்ஜிதமாய்ச் சம்பாதிப்பான், செல்வம் நிறைய உடையவன்; நடுவயதில் சோகமடைவான்.

(36) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி மேஷ ராசியில் சிம்மாம்சத்தில் இருந்தால் பாலியவயதில் ஜாதகன் தரித்திரமடைவான், முப்பதாம் வயதில் விசேஷபாக்கிய மடைவான், வாததேகி, மூர்ச்சை வாயு உடையவன், சகோதரியால் கிலேசமடைவான், ஆசையுடையவன், அங்கவீனமுள்ள புத்திரனை யுடையவனுவான், அல்லது இரட்டைப்பிள்ளை பிறந்து அவை நாசமுறும்.

(37) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி செவ்வாயின் க்ஷேத்திரத்தில் புதனுடன் கூடியிருந்து செவ்வாயின் அம்சத்திலேயே சனி யிருந்தால் ஜாதகன் தன் தாய் சௌக்கியமில்லாதவன், தனக்கிளைய சகோதரி நாசமுடையவன், கோப சுபாவமுடையவன், ஆசையுடையவன், தாய் வழிப்பாட்டன் மதத்தை அடைவான், பாலி

யத்தில் விஷ்ணு பக்த மதத்தை அடைந்துப் பிறகு தந்தையின் மதத்தைப் பின்பற்றுவான், விவாகத்திற்குப் பிறகு சுகமடைவான், இருபது வருஷத்திற்குமேல் சுகமுண்டாகும், ஜாதகனுடைய அம்மான் மரித்த பிறகு ஜாதகன் தன் தகப்பன் வீட்டில் வசிப்பான், ஜாதகன் மூன்று சிற்றப்பன்களையுடையவன், அவர்கள் தீர்க்காயுளுடனிருப்பார்கள், இரு அம்மான்கள் யோகமுடையவர்களாய் இருப்பார்கள், ஜாதகனுடைய தாயின் சகோதரி பாக்கிய முடையவள், ஜாதகனுடைய சிற்றப்பன் இருமனைவியருடையவன்.

(38) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி மேஷத்தில் கமலாம்சத்தில் சனி யிருந்தால் ஜாதகன் நான்கு சிற்றப்பன்களை உடையவன், இவர்களில் இருவர் புத்திரனில்லாதவர்கள், மற்ற இருவர் புத்திர பௌத்திர விருத்தி உடையவர்கள், ஜாதகனுடைய தாயின் சகோதரி தன் கணவனுடைய பாக்கியமுடையவள், அந்தப் பாக்கியத்தையும் தன் தனத்தையும் ஜாதகன் அடைவான், தன் தாயின் சகோதரி ஜாதகன் பிறந்த வருஷத்தில் மரிப்பாள், அதனால் ஜாதகனுடைய தாய் மனக்கிலேசமடைவாள், ஜாதகன் நல்ல பாக்கியவான் என்று பலராலும் சொல்லப்படுவான்.

(39) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி லக்கினத்திற்கு நான்காம்பாவத்தில் செவ்வாய் இருந்தாலும் அல்லது உச்சக்கிரகத்துடன் கூடியிருந்தாலும் ஜாதகன் பிறந்த வருஷத்தில் தாயின் உறவினர் வம்சத்தில் உபத்திரவமும், சோகமும், கலஹமும் உண்டாகும், ஜாதகன் தாய் வழிப்பாட்டி தீர்க்காயுளுடையவள், ஜாதகனுக்கு ஒரு சிற்றப்பனும் தீர்க்காயுளுடையவனுயிருப்பான்.

(40) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி பதினோராவது பாவத்திற்கு ஐந்தாமிடத்ததிபதி நீச்ச அம்சத்தில் தன் உச்சராசியில் இருந்தால் ஜாதகனுடைய சிறிய தகப்பனுடைய புத்திரன் கிலேசமடைவான், நோயுறுவான், காமீ, மலட்டு ஸ்திரீ சேர்க்கை யுடையவன், ஜாதகனுடைய சிறிய தகப்பன்களில் ஒருவன் இரு மனைவியரை உடையவன், ஒரே புத்திரனையுடையவன், தீர்க்க வயதுடைய இரண்டு பெண்களையும் உடையவன், இவர்களைவிட அதிகம் புத்திரி புத்திரர் ஜாதகனுடைய சிற்றப்பனுக்குப் பிறந்தாலும் அவர்கள் மரித்து விடுவார்கள்.

(41) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி பதினோராவது பாவத்திற்குப் புத்திர ஸ்தானுதிபதியாகிய சுக்கிரன் நீச்சாம்சத்தில்

தன் உச்சராசியில் இருந்தால் ஜாதகனுடைய சிறிய தகப்பன் துராச்சாரமுடையவன், அரசாங்கத்தில் பிரசித்தி உடையவன், அவன் மந்த புத்தியுள்ள புத்திரனுடையவன், காமீ, புத்திரனிடத்தில் பற்றுதலுடையவன், இடையூறுடையவன், அவனுடைய தத்து புத்திரனும் நாசமடைவான்.

(42) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி நான்காவது பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுடைய வீட்டில் கலஹம் நடக்கும், விரோதமுண்டாகும், தகப்பனுக்குக் கொஞ்சம் பீடை முதலிய பயமுண்டாகும், ஜாதகனுடைய விவாகத்திற்குப் பிறகு ஜாதகனுடைய மனைவியின் தாய் மாத்திரம் நாசமடைவாள், இவன் மாமனர் மூன்று விவாகம் செய்து கொள்வான், இவன் சிற்றப்பன் அதிக சௌக்கிய முள்ளவன், தன் சகோதரனுக்கு ஏற்படும் கிலேசத்தால் கிலேசமடைவான்.

(43) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி இரண்டு கிரகங்கள் உச்சராசியிலிருந்து சனி நீச்சனுப் இருந்தால் ஜாதகனுடைய சிற்றப்பன் பெண் ஒருவன் அற்ப புத்திரருடையவள், இவள் சோரம் போவாள், தரித்திரத்தன்மை யடைந்து நடுவயதில் கணவன் நாசமுடையவளாவாள், ஜாதகனுடைய சிற்றப்பன் தன் மனைவிக்கு அடங்கியிருப்பான், அவன் கலங்கமுடைய ஸ்திரீக்குப் புருஷனுவான், ஜாதகனுடைய சிற்றப்பன் மனைவி மிக்க காமமுடையவள், பெண்களைப் பிரசவிப்பாள்.

(44) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி கமலாம்சத்தில் மேஷராசியிலிருந்து சந்திரன் ஜென்ம லக்கினத்திலிருந்தால் ஜாதகன் நல்ல மனைவியும், அதிக தனமும் அடைவான், இவன் மனைவி வம்சத்தில் அபவாதம் நேரிடும், ஜாதகன் மனைவியின் சகோதரன் பாப காரியங்கள் செய்வான், சூத்திர ஸ்திரீக்கு அடங்கி ஜாதிப் பிரஷ்டனுகி சூத்திரச் செய்கைகளைச் செய்வான், காலாந்திரத்தில் தரித்திரனுவான், இவன் தன் பிதாவுக்குச் செய்த துரோகத்தால இவனுக்குப் புத்திர சந்தானம் உண்டாகாது.

(45) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சுக்கிரன் ராசியில் மீனத்திலும், நவாம்சத்தில் நீச்சாம்சத்திலும் இருந்து ஏழாவது பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுடைய மனைவியின் சகோதரி துஷ்ட நடவடிக்கையுடையவளாகி சோரம் போவாள், கிலேசமுடையவள், துஷ்டச்செய்கை யுடையவளாவாள்.

(46) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி மேஷத்தில் சிம்மாம்சத்திலிருந்து மீன ராசியில் சந்திரனும் குருவும் விருச்சிக ராசியிலும் இருந்து, அம்சத்தில் சந்திரனும் குருவும் மீன நவாம்சத்தில் இருந்தாலும், ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி தனுசு நவாம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்குச் சந்தேகமில்லாமல் விசேஷ பாக்கிய முண்டாகும்.

(47) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சந்திரன் சுப ராசியில் சுபாம்சத்திலிருந்து சுபராலும் பார்க்கப்பட்டால் ஜாதகன் லக்ஷ்மீயோக மடைந்து ஸ்தானாதிபத்திய முடையவனுவான், ஆசையுடையவன், அரசாங்கத்தில் நல்ல ஜீவன முடையவனுவான், நாற்பது வயதுக்குமேல் மிகவும் விசேஷ பாக்கிய மடைவான்.

(48) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி லக்கினத்திலிருந்து ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டாலும், குருவால் எட்டாம் பாவாதி பார்க்கப்படாமலிருந்தால் ஜாதகன் மனைவி நாசமுடையவன்.

(49) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி லக்கின திரிகோணத்தில் குரு இருந்து எட்டாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் லக்கின ராசி திசையில் மரணத்திற்குச் சமமாகிப் பின்பு பிழைப்பான், தன் தகப்பன் அதிக தரித்திரத்தையும், கஷ்டத்தையும் அடைவான், ஜாதகனுடைய சிறிய தகப்பன் விவாகத்தினுல் சுகமடைவான், தாயாதிவர்க்கத்தால் கிலேசமடைவான்.

(50) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி கேந்திரராசியிலிருந்து ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டாலும், இரண்டாம் பாவாதிபதி திசையில் ஜாதகன் தன நாசமடைவான்.

(51) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி மூன்றுவது பாவாதிபதியாகிய சுக்கிரன் ராசியில் தன்னுடைய உச்சஸ்தானத்திலும், அம்சத்தில் நீச்சாம்சத்திலுமிருந்தால் அத்திசையில் ஜாதகனுடைய தாய் வம்சத்தில் ஒரு ஸ்திரீ மரணமடைவாள், தாய் வழிப்பாட்டன் மரணமடைவான், தாய் வமிசத்திற்கு அதிக ஆபத்து நேரிடும், பிதாவமிசத்திலும் தரித்திரத் தன்மை நேரிடும், ஜாதகனுடைய சிற்றப்பனுக்குக் கொஞ்சம் சுகமுண்டாகும்.

(52) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி நான்காவது பாவத்தில் செவ்வாய் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் பூமி, கன்று, காலி, கிரகம், க்ஷேத்திரம் இவைகள் நாசமுடையவன், கொஞ்சம் சுரம் முதலிய உபத்திரவமுடையவன், விவாகத்திற்குப் பிறகு சௌக்கிய மடைவான்.

(53) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபன் ஐந்தாமிடத்திலிருக்க அவன் பத்தாமாதிபதியான குரு வால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஐந்தாம் பாவாதிபதி திசையில் முதலிலேயே அரசாங்கத்தில் பிரவேசிப்பான், புத்திரலாபமடை வான், மேற்படி திசையில் இரண்டு, மூன்று வருஷம் விசேஷ பாக்கிய மனுபவிப்பான், இவன் தந்தை அரிஷ்டமடைவான்.

(54) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி ஐந்தாவது பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் மீனம்சத்திலிருந்து குருவால் பார்க் கப்பட்டால் அந்த ஐந்தாம் பாவாதிபதியின் திசையில் ஜாதகன் விசேஷ சௌக்கியமும், அரசாங்கத்தில் சுபம் முதலானவைகளும் அடைவான்.

(55) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி நான்காம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் முப்பத்துநான்கு வயதிற்கு மேல் கிலேசத்தையடைவான்.

(56) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி மேஷத்தில் சூரியனும் பத்தாம் பாவத்தில் ராகுவும் இருந்தால் ஜாதகனுக்கு ஆறு வது ராசிநாதன் திசையில் தரித்திரத்தினால் பீடையும், மனக்கிலேச மும், அரசாங்கத்தில் அவமானமும் நேரிடும்.

(57) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி ஆறும் பாவா திபன் உச்சராசியில் பாக்கியாம்சத்தில் புதனுடன் கூடியிருந்தால் ஆறும் ராசியாதிபன் திசையில் மூன்றுவது பாகத்தில் ஜாதகன் நல்ல பாக்கியத்தையடைவான், திசையின் மத்தியில் மனஸ்தாபமும், திசை யின் முதலில்சிற்றப்பன் மரணமும், ராஜத்துவேஷ மூலமாகத் துன்ப மும், பெரிய வியாகூலமும், புத்திரியின் துக்க நாசம் முதலியவை உச்ச சூரியன் திசைபலன் என்று சொல்லப்படுகிறது, திசையின் முடிவில் புத்திரியின் விவாகமும், சுபசோபனமும், சினேகிதர்களால் சுகமும் அடைவான், மேலும் உச்சக்ஷேத்திரத்தில் இருக்கப்பட்ட சூரியனின் திசையில் மூன்றும் பாகம் விசேஷமென்றும், திசையின்

மூன்று பாகத்தில் ஜென்ம லக்கின மீனம் (கமலாம்சம்) ஆகி சூரியனுடைய உச்சராசியாகிய மேஷத்தில் சனி நீச்சனாகியிருக்க அவனுடன் கூடிய சூரிய திசையில் முன் இரண்டு பாகத்தில் பலன் நாசமுறும், மேலும் இரண்டாவது பாகத்தின் முடிவில் ஆரம்பித்து மூன்றும் பாகம் முடிய சத்துருநாசமும், மூன்றும் பாகமத்தியில் சத்துருவுக்கு அபஜெயமும், ஜாதகனுக்கு யோகமும், கீர்த்தியும் உண்டாகும், அன்றி மேற்படி ஆறுவது பாவாதிபன் திசையில் ஆறுவது பாவாதிபதி நவாம்சையில் இருக்கும் ராசியை சனியாவது ராகுவாவது கோட்சாரத்தில் அடையும்போது ஜாதகனுக்குச் சத்துரு ஜெனங்களால் பீடை உண்டாகும்.

(58) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி மேஷத்தில் கமலாம்சத்தில் இருந்தால் ஆறும் பாவாதிபன் திசையில் ஜாதகனுக்கு (பிராம்மண) வைஷ்ணவன் மூலமாக துவேஷ மேற்படும்.

(59) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி மேஷத்தில் புதன் இருந்து கன்னியா ராசியதிபதி திசையானது வந்தால் அந்த திசையில் ஜாதகன் வெகு பாக்கியம் அடைவான்.

(60) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தில் புதனும், விருச்சிகராசியில் குருவும் இருந்து மேற்படி குரு தன் அம்சத்தில் பூர்ணபலத்துடனிருந்தால் ஜாதகன் பல்லக்கு வாகன முதலிய அடைவான்.

(61) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி லக்ஷ்மியோகத்தில் தன்னுச்ச ராசியில் எட்டாம் பாவாதிபதி நீச்சாம்சத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மத்திய வயதடைவான், தாயாதிகளால் பீடையடைவான், தன் புத்திரனுக்கும் பீடை உண்டு, குரூரமாதத்தில் ஜாதகனுடைய மனைவிக்குப் பீடையுண்டாகும், மேலும் எட்டாம் பாவாதிபதி திசையில் மூன்றுவது பாகத்தில் பெரிய ஆபத்து ஜாதகனுக்கு உண்டாகும், இவைகள் சீக்கிரமாக நிவர்த்தியாகும், மேற்படி திசையின் முன் பகுதியில் புத்திர அபிவிருத்தியும் உண்டாகும், எட்டாம் பாவாதிபதி திசையின் சந்தி காலத்தில் ஜாதகனுடைய ஜெனங்களுக்கு மரணாதிகளும், பத்தாம் பாவாதிபதியின் திசையில் எட்டாம் பாவாதிபதி புக்தியில் ஜாதகனுக்கு மரணமும் நேரிடும்.

(62) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி லக்ஷ்மீயோகத்தில் கேந்திரத்தில் இருக்கப்பட்ட ஒன்பதாம் பாவாதிபதியின் திசை

யில் ஜாதகனுக்குப் புத்திரப் பிரபலமும், சுகமும் விசேஷ பாக்கியமும் உண்டாகும்.

(63) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி லக்ஷ்மீயோகத்தில் எழாம் பாவத்தில் ஜென்ம காலத்தில் ராகு இருந்து பத்தாம் பாவாதிபதி திசையில் நடந்தால் ஜாதகனுக்கு அந்த திசையில் ஆபத்துண்டாகும், அவனுடைய திரிகோணாதிபதிகளின் திசையில் ஜாதகன் இறந்த மாதிரியாகிப் பிழைப்பான்.

(64) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி சனி சுதாஷஷ்டியம்சத்தில் சராசியில் கடகத்தில் இருந்தாலும், ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி நான்காவது கேந்திரத்தில் சனியிருந்தாலும் ஜாதகன் வெளுப்பு நிறமுடையவன், நல்ல ஆகிருதி உடையவன்.

(65) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி ஐந்தாவது பாவத்தில் சனி சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் கறுத்த மேனியுடையவன், நல்ல ஆகிருதி உடையவன்.

(66) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி சனி சர (கடக) ராசியில் இருந்தாலும், நான்காம் கேந்திரத்திலிருந்தாலும், ஜாதகனுக்கு வித்தையும், புத்தியும், நல்ல சம்பத்தும், சுகமும் உண்டாகும்.

(67) ஜென்மலக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி சனி, கேது இவர்கள் கடக ராசியில் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பாலியத்தில் அத்தியந்த கிலேசமடைவான், ஜாதகனுடைய தகப்பன் பின் சகோதரனில்லாதவன், ஜாதகனுடைய தகப்பனுடைய மூத்த சகோதரன் நாசமடைவான், ஜாதகனுடைய தகப்பன் வேறு தேசத்தில் பாக்கிய யோகமடைவான், இரண்டு சகோதரிகளுடையவன், மூன்று மனைவியருடையவன், ஆசையுடையவன், வாதம் நிறைந்த தேகமுடையவன், சுயார்ஜிதம் சம்பாதிப்பவன், பல்லக்கு முதலான வாகனமுடையவன், வைஷ்ணவன் காரணமாக அதிக விசாரமடைவான், அரசாங்கத்திலும் விரோதமடைவான்.

(68) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி சுக்கிரன், சனி, கேது இவர்கள் கூடி ஒரே ராசியில் இருந்து சனி சீதளாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் வைஷ்ணவனுடைய விரோதியாவான், அதனால் வியாகூலமடைந்து கிராமம், பூமி, தனம் இவைகள்

நாசம் அடைவான், ஜாதகன் பிறப்பதற்கு முந்தியே மனஸ்தாபம், துக்கம் முதலியன அடைவான், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகன் பிறந்த பிறகு மூன்றரை வருஷம் வரையில் கிலேசமடைவான், தன் நாற்பதாவது வயது வரையில் கிலேசமும், பின்னால் பாக்கிய விருத்தியும், ஜாதகனுடைய ஜென்ம திசையில் கடைசியில் அடைவான்.

(69) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி சீதளாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் சீதள ஜுரத்தினாலும், அதிசாரத்தாலும் பீடிக்கப்படுவான், ஜாதகனுடைய ஜென்ம திசையில் ஜாதகனுக்குச் சகோதர உற்பத்தியும், சகோதர நாசமும் ஜாதகனுடைய தகப்பனுக்குப் பல வழிகளால் வியாகூலமும், மனஸ்தாபமும், வைசூரி சுரகண்டம் இவைகளுமுண்டாகும், அதற்குச் சாந்தியாக எள் நிறைந்த பாத்திரதானம் செய்தால் ஜாதகனுடைய தகப்பனுக்கு ஆரோக்கிய முண்டாகும், மேலும் லக்ஷ்மி பிரதிமை செய்து அதை ருத்திரயாமள விதிப்படி தானமும் செய்து, பிறகு வெண்கலப் பாத்திரத்தில் நான்குபடி நெய்விட்டு நான்கு விற்கடை பொன்னால் செய்த தகட்டை அந்த நெய்யில் போட்டு நான்கு விற்கடை சொர்ணத்தை தக்ஷிணையாக வேறே கொடுத்து அந்த நெய் பாத்திரத்தை வேதமோதியவனும், ஏழையும், குடும்பியும் ஆன ஜோதிஷ பண்டிதனுக்கு தானம் செய்தால் அரசாங்கத்தில் அதிக சுபமும், சத்துரு நாசமும் முதலிய உண்டாகி ஆயுளும், ஆரோக்கியமும் உண்டாகும்.

(70) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சுக்கிரன் பாபிகள் இருவருடன் கூடியிருந்தால் சொர்ணத்துடன் கூடிய நெய்யைத் தானம் செய்தால் வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷ முண்டாகும், ஜாதகனுடைய ஐந்தாவது வயதிற்கு மேல் விசேஷ பாக்கியமடைவான், நான்காவது வயதில் கடைசியிலிருந்தே கொஞ்சம் சுகமுண்டாகும், ஐந்தாவது வயதிலிருந்து பலன் சுபாசுபமாக கலந்து நடந்து வரும், ஜாதகன் ஜென்ம திசையில் ஜென்ம தேசத்தில் உபத்திரவத்தால் ஜாதகனுடைய தகப்பன் அவதியும், ஜென்ம திசையில் கடைசியில் வெளி தேசத்தில் பாக்கிய விருத்தியும் அடைவான், இரண்டாம் திசையில் பாக்கிய விருத்தியும், சுகமும் ஜாதகனுடைய பேத சகோதரனுக்கு தன விருத்தியும் உண்டாகும்.

(71) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் சனி சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்

பன் ஜாதகனுடைய ஜென்ம தார திசையில் வெளிதேசத்தில் பாக்கிய மடைவான், சுய தேசத்தில் அல்ப பாக்கியமும், வெளி தேசத்தில் அதிகமும் அடைவான்.

(72) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி கடகராசியில் சனி சீதளாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய இளைய சகோதரன் நாசமுறுவான், ஜாதகனுடைய மாற்றாந்தாயின் மகளான பேத சகோதரியில் கணவன் அரசாங்கத்தில் பிரசித்தி அடைவான், மிக்க பாக்கிய மடைவான், சிலகாலம் பொறுத்து ஜாதகனுடைய பேத சகோதரியின் மாமனர் மரித்து விடுவார்.

(73) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி கடக ராசியில் சீதளாம்சத்தில் சனியும், கன்னியா ராசியில் சந்திரன் மகாமாயாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் இரண்டு தீர்க்காயுளுள்ள சகோதரிகளும், இதேபோல இரண்டு சகோதரர்களுமுடையவன், ஜாதகனுடைய மாற்றாந்தாய்க்குப் பிறந்த சகோதரன் தீர்க்காயுளுடனிருப்பான், சுக மடைவான், அவன் மனைவி காக மலடியாவாள், ஜாதகன் காலாந்திரத்தில் சற்புத்திரனை அடைவான், ஜாதகனுடைய இரண்டாம் திசையில் இவனுடைய மூத்த சகோதரியின் கணவனுக்குச் செல்வப் பெருக்குண்டாகும், அவனும் சுகமுடையவனுவான்.

(74) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி லக்கினத்திற்கு எழாம் பாவத்தில் சந்திரனிருந்து மகாமாயாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு மகாமாரி மூலம் (பெரியம்மையால்) பய முண்பாகும், வாலிபத்தில் சகோதர நாசமடைவான், ஜாதகனுடைய தாய்ப்பாட்டி நீண்ட ஆயுளுடையவள், ஜாதகனுக்கு இரு அம்மான்களுண்டு, அவர்களில் ஒருவன் நாசமுறுவான், மற்றவன் தீர்க்காயுளடைவான்.

(75) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி சனி கடக ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஆபத்துச் சன்னியாச யோகமடைவான்.

(76) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் இருந்து குரு கேந்திர திரிகோணத்தில் இருந்தால் ஜாதகன் பல்லக்கு, வாகனம், ராஜயோகம் முதலானவைகளை அடைவான், இருபத்தேழு வயதுக்குமேல் விசேஷ பாக்கியமும், வீட்டில் தனம், தானியம், பசு முதலிய விருத்தியும், பிரபல உத்தியோகமும், அரசாங்கத்தில் நல்ல புகழும் அடைவான்.

(77) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி கன்னியா ராசியில் சந்திரனிருந்தால் ஜாதகன் ராஜயோகத்தைத் தன் மத்திய வயதில் அடைவான், அக்கிரகாரப் பிரதிஷ்டை செய்வான், எப்போதும் ராஜோபசாரமடைவான்.

(78) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி லாபாதிபனான சனியின் அம்ச திரிகோண ஸ்தானங்களில் சனி சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகன் தன் நாலாம் திசையில் ராஜயோகமடைவான், அப்போது ஜாதகனுக்கு இரண்டாவது விவாகம் நடக்கும்.

(79) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி ஐந்தாமதிபனான சந்திரன் ஏழில் கன்னியா ராசியில் இருந்தால் ஜாதகன் பெண் சந்ததி அதிகமாகவுடையவன், ஆண் சந்ததி இரண்டு அல்லது மூன்று உண்டு, ஜாதகன் இரு தாரங்களிடமும் நல்ல சந்தான மடைவான்.

(80) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபனான சந்திரன் கன்னியாராசியில் மகராம்சத்தில் இருந்தால் ஜாதகன் வைசூரி சுரம் கண்டு நாசமடைந்த தன் புத்திரர்களுக்காக வருந்துவான். ஜாதகனுடைய சகோதரன் கொஞ்சம் சுக முடையவனாவான்.

(81) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி சுக்கிரன் சனியுடன் கூடி இருந்து ஏழாம் பாவாதிபன் பதினோராம் ராசியாகிய மகர நவாம்சத்திலிருந்தால் ஜாதகன் ஜீவனுள்ளவரையில் நல்ல செல்வமனுபவிப்பான், யோகமாசத்தில் புண் முதலிய காயமடைவான்.

(82) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி பன்னிரண்டாம் பாவாதிபன் கடக ராசியில் தன் உச்ச அம்சத்திலும், குரு ராசியில் தன் சுய க்ஷேத்திரமாகிய தனுசிலும், அமிசையில் தன்னுச்சாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுக்குப் புண்ணிய லோகம் கிடைக்கும், ராஜயோக மடைவான், சில காலம் எம வேதனையும் படுவான், அதற்கு மேல் புண்ணிய லோகமடைவான், பின்னால் உத்தம ஜென்மத்தில் பிறப்பான்.

(83) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி லக்கினாதிபனான குரு ஏழாம் பாவத்திலிருந்து, லக்கினம் குஜனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தனது முப்பதாவது வயதிற்கு மேல் பாக்கியமடைவான், நோயற்ற உறுதியான தேகமுடையவன்,

(84) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம் பூர்வபாகம்) ஆகி சந்திரன் மேஷத்தில் இந்திராம்ச நாடியில் இருந்தால் ஜாதகன் அழகானவன், புத்திமான், வாசாலகன், தெளிந்த முகமும் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, தருமாத்மா, ராஜயோக முடையவன், சிவந்த நடுத்தர தேகமுடையவன், குள்ளமான தேகமுடையவன் போல் தோன்றுபவன்.

(85) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கினாதிபனான குரு குஜனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பிதுரார்ஜித பாக்கியமுடையவன், துஷ்டர்களிடம் துஷ்டபுத்தியும், குரூரர்களிடம் குரூர செய்கையுமுடையவன், எல்லோருக்கும் உபகாரம் செய்வான், சௌக்கியமுடையவன், சந்தோஷமுடையவன், புகழுடையவன், நித்தம் நல்ல கதைகள் கேட்பான், சீமான், தீனர்களுக்குப் பிரியன், குதிரை ஏறுவதில் சாமார்த்தியசாலி, அனேக சேனை குதிரைகளுக்கு நாயகன், சிஷ்டாசாரமுடையவன், காரிய சித்தியுடையவன், வேறு அரசனிடம் ராஜமுத்திரை தரித்து அதிகாரியாயிருப்பான்.

(86) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம் பூர்வபாகம்) ஆகி சகோதர ஸ்தானாதிபனான சுக்கிரன் தனுசில் கடகாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரம் நாசமடையும், இளைய சகோதரன் யோக முடையவனாவான், ஜாதகன் இரு சகோதரிகளுடையவனாவான்.

(87) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம் உத்தரபாகம்) ஆகி சுக்கிரன், தனுசில் கடகாம்சத்திலிருந்தால் ஜாதகன் மூன்று சகோதரிகளுடன் கூடியவன், ஒரு சகோதரி நல்ல வாசமுடையவள், பால்யத்தில் அவளுக்கு தரித்திர முண்டாகும், ஒருத்தி புத்திர பாவத்தில் விசாரமுடையவள், அவளது கர்ப்பப்பையில் அதிக நோய், வயிற்றுவலியால் பீடைகளுண்டாகும், அந்த பாபத்திற்குச் சாந்தி செய்தால் தீரும்.

(88) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம் பூர்வபாகம்) ஆகி ஒன்பதாம் பாவ அம்சத்தில் குஜனிருந்தால் ஜாதகன் மூன்று சகோதரனுடையவன், சுகமுடையவன்.

(89) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி பாக்கியாதிபனான செவ்வாய் ரிஷப ராசியிலிருந்து, எட்டாம் பாவாதிபனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் யானை முதலிய ஐச்வரிய பாக்கிய முடையவனாவான்.

(90) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி லக்கினம் நான்கு, இரண்டு, ஒன்பது, பத்து இந்த பாவாதிபர்கள் நான்கு, ஒன்பது, பத்து இந்த ஸ்தானங்களில் இருந்தால் ஜாதகனுக்கு வாகன சுகமுண்டு.

(91) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி குரு நான்காம் பாவத்தில் இருந்து, சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பல்லக்கு வாகனமுடையவன், பூமண்டலாதிபனுவான், சபைத்தலைவனுவான், சிம்மாசனத்திலிருப்பான், சதுரங்க சேனையைக் காப்பாற்றுபவனுவான்.

(92) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி கன்னியா ராசியில் குரு புஷ்கராம்சத்தில் குஜனுடன் கூடி இருந்து ராஜ்யாதிபனுன சந்திரன் இரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் சாமரயோக முடையவனுவான், இருபத்திரண்டு வயதுக்கு மேல் சுகமடைவான், புகழுடையவன், நல்ல புத்திரர், தாரம், பாக்கியம் இவைகளுடையவன், ஸ்ரீமான், பிரசித்தன், மகான், பல்லக்கு முதலிய வைபவங்களுடன் வீட்டில் எப்போதும் செல்வமுடையவன், பண்டிதன், சௌரிய பராக்கிரமமுடையவன், வேறு தேசங்களில் புகழுடையவன்.

(93) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி ராஜ்ய ஸ்தானுதிபனுன சந்திரன் இரண்டாம் பாவத்தில் சிம்மாம்சத்தில் இருந்தால் ஜாதகன் 'காஹள' யோகமுடையவனுவான், இதன் பலன் வெகு தனதான்னியம் சமூர்த்தியாகவுடையவன், கந்தம் மாலை முதலியன அணிவான், சூரியனுக்கு நிகரான காந்தியுடையவன், புகழுடைய அரசனுவான் இவைகளெல்லாம் காஹள யோகத்தின் பலன்களாகும்.

(94) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம் பூர்வபாகம்) ஆகி தனுசு ராசியில் மேஷாம்சத்தில் சூரியனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மூன்று சகோதரருடையவனுவான்.

(95) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி ராசியில் சூரியன் தனுசில் இருந்து, அம்சத்தில் மேஷத்திலிருந்தால் ஜாதகனுடைய பிதா தேசாந்தரம் சென்று சமஸ்காரம் அடையாதவனுவான், வயது இருபது அல்லது இருபத்திரண்டில் ஜாதகனுக்குப் பிதா அரிஷ்டமடைவான், அவன் பெரிய அரசனைப் போய்ப் பார்த்து வந்து கொண்டிருப்பான், தன் தகப்பன் அரிஷ்டத்திற்கு முன்னம் ஜாதகன் தாய் அரிஷ்டமடைவான்.

(96) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி சூரியனும், குஜனும் சேர்ந்து ராஜ்ய ஸ்தானமாகிய ஐந்தாம் பாவத்தில் இருந்தாலும் அன்றி, ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி பத்து அல்லது நான்கு இந்த பாவங்களை குஜன் பார்த்தாலும் ஜாதகன் எப்போதும் காமமுடையவன், எப்போதும் நோயுடையவன், ஜாரன், திருடர்களில் உயர்ந்தவனுவான், காவியம், அலங்காரம், நாட்டியம் இவைகளில் பிரியனுவான், சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவன், உதாரகுணமுடையவன், உண்மை பேசுவான், கந்தம், மாலை, வஸ்திரம் இவைகளில் பிரியனுவான், பன்னிரண்டு வயதுக்குமேல் பாக்கியமும், பதினாறு வயதுக்கு மேல் செல்வப் பெருக்கு முண்டாகும், பல ஜாதிப்பெண்களை அணைபவன், எப்போதும் போகமாதர் சேர்க்கையுடையவன், எப்போதும் புணர்ச்சியில் விருப்பமுள்ளவன்.

(97) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி சூரியன் தனுசு ராசியில் காலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் மகாராஜ சபை நடுவில் வாசாலகனுக இருப்பான், சாமார்த்தியமான யுக்தியுடையவன், முடியாததையும், தெய்வானுக்கிரகத்தினுல் முடிப்பதில் சாமார்த்தியவானுவான், பத்தாயிரம் குதிரைகளுக்கதிகாரி, இரண்டு லக்ஷம் பொன்னுடையவன், ராஜ்யாதிகாரத்துடன் கூடியவன், அதிக சௌக்கிய விருத்தி வீட்டிலுடையவனுவான், தனதான்னியம் நிறம்பப் பெற்றவன், புகழ், பெருமையுடையவன்.

(98) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி குரு கன்னியில் ராசியிலும், நவாம்சத்தில் சிம்மாம்சத்திலிருந்து, ஐந்தாம் பாவாதிபன் இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் புத்திரி புத்திரர்களுடையவன், மூன்று புத்திரர், இரு பெண்களுடையவனுவான்.

(99) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி ஆரும் பாவாதிபனுன சூரியன் எட்டாம் பாவாதிபனுடன் கூடி ஆரும் பாவாதிபன் குஜனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் சத்துருக்களை அழிப்பவனுகவும், பராக்கிரமமுடையவனுகவும், சொல்ப தாயாதி ஜெனங்களுடன் கூடியவனுமாவான்.

(100) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி ஆரும் பாவாதிபன் சுக்கிரனுடன் கூடினுல் ஜாதகனுடைய தகப்பன் போக பாக்கியமுடையவனுவான்.

(101) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் ஏழாம் பாவாதிபதி ராசியில் தனுசில் இருந்து துலா நவாம்சத்திலி

ருந்தால் ஜாதகனுக்குத் தான் பிறந்த ஊருக்குத் தெற்கில் விவாகம் நடக்கும் என்று மனு சொல்கிறார். உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு ஜென்ம பூமியிலேயே தன் ஊரிலேயே விவாகம் நடக்கும் என்றும், பூர்வபாகத்தில் பிறந்தவனுக்கு இருமனைவியர் உண்டு என்று வேறு சிலரும் சொல்கிறார்கள்.

(102) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபனான புதன் துலாம்சத்தில் ஸ்திரராசியில் இருந்து காரகனான சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகன் இரு தாரயோகமுடையவனா வான், முப்பத்தொன்பதாவது அல்லது முப்பத்தைந்தாவது வயதில் தாரம் அரிஷ்டமடைவான், ஜாதகனுக்கு இருதாரத்திடமும் புத்திரர் உண்டாவார்கள்.

(103) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபனான சுக்கிரன், ஆறாம் பாவாதிபனுடன் கூடி இருந்தால் பூர்ணாயுளுடையவனாவான்.

(104) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி கர்மாதிப னான குரு ஏழாம்பாவத்தில் இரண்டாம் பாவாதிபனுடன் கூடி இருந் தால் ஜாதகன் சத்கர்ம ஆசாரமுடையவனாவான்.

(105) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி ஆறாம்பாவா திபன் பத்தாம் ராசியில் இருந்து, நவாம்சையில் கேந்திராம்சத்தில் இருந்தால் ஜாதகன் பேரிகை, மிருதங்கம் முதலிய வாத்தியங்களுடன் ராஜ முத்திரை தரித்தவனாவான்.

(106) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி ராஜ்ய ஸ்தானாதிபனான சந்திரன் இரண்டாம் பாவத்தில் சிம்மாம்சத்திலிருந் தால் ஜாதகன் மண்டலாதிபன் வாசலில் எல்லோருக்கும் (தலைவனாய்) மேலான அதிகார முடையவனாவான்.

(107) ஜென்ம லக்கினம் மீனம் (வசுதாம்சம்) ஆகி கர்மாதிப னான குரு ஏழாம் பாவாத்திலிருந்து, பாக்கியாதிபனான குஜனால் பார்க் கப்பட்டால் ஜாதகனுக்கு புண்ணிய பாப பலன்கள் சமமாக இருக்கும், இந்த உலகில் புண்ணியாத்துமாவாவான், முடிவில் சுவர்க்கமடை வான், ஆயுளுள்ளவரையில் பாக்கிய மனுபவிப்பான்.

(108) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி சனி கடகத் தில் கமலாம்சத்திலிருந்தால் ஆறாம் பாவாதிபதி திசையில் வைஷ்ண வர்களுடன் துவேஷ மடைவான்.

(109) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்து நவாம்சத்தில் தன் நவாம்சத்தில் பலத்துடன் இருந்தால் ஜாதகன் பல்லக்கு முதலிய வாகன பாக்கியமடைவான்.

(110) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி தன்னுச்ச ராசியில் இருந்து நவாம்சத்தில் நீச்ச மடைந்து இருக்க குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மத்தியவயதடைவான்.

(111) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதி திசை வந்தால் ஜாதகன் அந்த திசை காலத்தில் தன் புத்திரன் மூலமாக விசேஷ சுகத்தையும், பாக்கியத்தையுமடைவான்.

(112) ஜென்ம லக்கினம் மீனம் (கமலாம்சம்) ஆகி ஏழாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுக்குப் பத்தாம் பாவாதிபதி திசையில் பெரிய ஆபத்துண்டாகும், அந்த பத்தாம் பாவாதிபதி திசையே ஜென்ம திரிகோணாதிபதி திசையானால் ஜாதகன் மரணத்துக்குச் சமமான கெண்டமடைந்துப் பிழைப்பான்.

(113) ஜென்ம லக்கினம் மீனம் (சுகதாம்சம்) ஆகி ஜென்ம லக்கினாதிபதியாகிய குரு ராகுவுடன் கூடி யிருக்க ஜெனித்தவன், சிவந்த நிறமுள்ளவன், மெல்லிய தேகமுடையவன, குள்ளமானவன், மகா மானி, ராஜ லக்ஷணமுடையவன்.

(114) ஜென்ம லக்கினம் மீனம் (சுகதாம்சம்) ஆகி இரண்டாம் பாவத்தை மூன்று கிரகங்கள் பார்த்தால் ஜாதகன் நான்கு வித்தைகளில் வல்லவன், பல பாஷை யறிபவன், தானாகவே சாஸ்திரங்களுக்குத் தத்துவார்த்தம் செய்பவன், இங்கித மறிபவன், வெகு தனமுடையவன், நீச்ச அரசனிடம் உத்தியோகமும், பணம் சம்பாதிப்பான், பூமி, க்ஷேத்திரம், பசு முதலிய சமிர்த்தியுடையவன், தகப்பனால் சம்பாதித்த விசேஷ பாக்கியமுடையவனாவான்.

(115) ஜென்ம லக்கினம் மீனம் (சுகதாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபதி லாப பாவத்தில் இருந்து சகோதரகாரகன் எட்டாமிடத்தை யடைந்து இருந்தால் இவனுக்கு மூத்தவன் ஒருவன், பிறந்த ஒரு வருஷத்துக்குள் மரிப்பான், இவனுக்கு இளையவர்கள் ஐந்து அல்லது நான்கு பேர்கள் இருப்பார்கள், மூன்று சகோதரிகள் இருப்பார்கள், அவர்களில் மூத்தவள் விதவையாய் பாலியத்திலேயே மரிப்பாள், மற்ற இருவரும் தீர்க்க ஜீவிகளாயிருப்பார்கள்.

(116) ஜென்ம லக்கினம் மீனம் (சுகதாம்சம்) ஆகி தனுசில் சந்திரனும், புதனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்க ஆயுளுடையவள், ஜாதகனுடைய அம்மான் பாக்கியவான், அவன் பயிர், வியாபாரத்தால் ஜீவன் செய்வான்.

(117) ஜென்ம லக்கினம் மீனம் (சுகதாம்சம்) ஆகி நான்காமிடத்தில் சனி இருந்தால் ஜாதகன் மூன்று வாகனமுடையவன், வீடு, பூமி முதலியன சமிருத்தியாயுடையவன், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தன முடையவனுவான்.

(118) ஜென்ம லக்கினம் மீனம் (சுகதாம்சம்) ஆகி புத்திரபாவத்துக்குடைய சந்திரன் புதனுடன் கூடி சனியால் பார்க்கப்பட்டு புத்திர காரகனுன குரு, ராகு, செவ்வாயிவர்களுடன் கூடி எட்டாமிடத்தில் இருக்க புத்திர அபாயமுள்ள ஜாதகன் புத்திர சந்ததிக்குத் தத்து எடுப்பான், முதலில் இரண்டு புத்திரர்கள் பிறந்து மரித்து விடுவார்கள், பிறகு ஒரு பெண் பிறக்கும், அதுவும் சில தினத்தில் மரித்து விடும், முன் ஜென்மாந்திரத்தில் ஜாதகன் விஷ்ணு ஆலய தனத்தைத் திருடியும், தர்க்காலயத்தில் அதிகாரம் செய்து அந்த பணத்தையும், வெகுவாய் அபகரித்த அந்த ஜென்மாந்தர தோஷத்தால் அற்ப வயதில் இறந்து விடுகிற பிள்ளைகளைப் பெறுகிருன், இந்த தோஷ நிவிருத்திக்கு சாந்தி செய்து, ஏகாதசியில் கோதானம் செய்து அரசப்பிரதிஷ்டைசெய்து, சொர்ண சந்தான கோபாலப் பிரதிமை தானம் செய்து, சிம்சுமார தானமும் செய்து, சேதுஸ்தானம் செய்து, மிருத சஞ்சீவி ஹோமமும் செய்து, சந்திரப் பிரதிமை தானம் செய்தால் காலாந்திரத்தில் புத்திரனுண்டாவானென்று சிலரும், இன்னும் சிலர் வேறு மனைவிடம் புத்திரப்பிராப்தி உண்டாகும் என்றும் சொல்லுகிறார்கள், முன் சொன்ன சாந்தி செய்தால் இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரியும் தீர்க்காயுசுடையவர்களா யிருப்பார்கள், அப்படிச் சாந்தி செய்யாவிடில் புத்திரர்கள் பிறந்து பிறந்து மரிப்பார்கள்.

(119) ஜென்ம லக்கினம் மீனம் (சுகதாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி புதன் பத்தாமிடத்தில் இருந்து சனியின் பார்வை யடைந்து, சந்திரனுடன் கூடி யிருந்தால் ஜாதகனுக்குத்தான் பிறந்த பதினெட்டு வயதில் அல்லது அதற்குப் பிறகாவது விவாகம் ஆகும்.

(120) ஜென்ம லக்கினம் மீனம் (சுகதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகிய செவ்வாயானவர் குரு, ராகு இவர்களுடன் கூடி

இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ராஜயோகத்தால் தனத்தைச் சம்பாதிப்பவன், பூர்ணுயுளுடையவன், நீச்ச அரச சபையில் ஆயுளுள்ள வரையில் யோகமுடையவன், காவிய, நாடக தத்துவமறிந்தவன், வேதசாஸ்திரமறிந்தவன், சம்ஸ்கிருதத்தைப் பிரியமாய்ப் பேசுபவன், விஷ்ணு, சிவபக்தியுடையவன், தெலுங்கு பாஷையிலும் சாகித்தியம் செய்வதிலும் தேர்ச்சி யுள்ளவன், அநேக ஆயிரம் தனமுடையவன், பிரபு லக்ஷணமுடையவன், புத்திரி புத்திர சமிருத்தியுடையவன்.

(121) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம் ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்தில் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் பூர்வ பாகத்தில் ஜெனித்தவனுக்கு வடக்குத் தெற்கு வீதியில் மேற்குப்பாகத்தில் உள்ள வீட்டில் நதிப்பிராந்தியத்திலுள்ள அக்கிரஹாரத்தில் ஜெனனம் நேரிடும். உத்தராம்சத்தில் ஜெனித்தவனுக்குக் கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப் பக்கத்திலுள்ள வீட்டில் ஜெனனம் நேரிடும்.

(122) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி புதன் சுயக்ஷேத்திரத்தில் சூரியன், ராகு இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் பிரசவகாலத்தில் அற்ப வேதனையுடையவள். உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை அதிகமாயிருக்கும்.

(123) ஜென்மலக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகி லக்கினபாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்ட பயமுண்டாகும்; லக்கினபாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு பாலாரிஷ்ட நிவர்த்தியுண்டாகும்.

(124) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபன் ஸ்திர ராசியில் இருக்கச் சனி சுயக்ஷேத்திரத்தில் இருந்து லக்கினம் தவிர்த்த மற்றக் கேந்திரத்தில் குரு இருந்தால் ஜாதகன் பூர்ணுயுள் யோகமுடையவன், சுகமுடையவன், தாய் தகப்பனுக்குச் சுகமும், ஜாதகனுக்குத் தேக புஷ்டியும் உண்டாகும், ஜென்ம திசையில் இரண்டு, மூன்று வாரம் பாலரோகத்தால் விசேஷபயம் உண்டாகி சீக்கிரத்தில் ஆரோக்கியமும் சுகமும் உண்டாகும்.

(125) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகிச் சந்திரன் ஒன்பதாம் பாவத்தை அடைந்து அம்சத்தில் நீசனுகியிருந்தாலும், அல்லது பத்தாம் பாவத்தை அடைந்திருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் தனவானுயிருந்தாலும் போக முடையவனுயிருப்பான், அர

சாங்கத்தில் நன்கு பூஜிக்கப்படுவான், அரசாங்க ஜென நேசமுடைய வன், கூட்டவும், கலைக்கவும் சாமர்த்தியமுடையவன், ராஜதரிசன முடையவன், அநேக கிராம அதிகாரமும், வாகனமும், கீர்த்தியும் உண்டாகும், துஷ்டர்களுக்கு துஷ்ட புத்தியுடையவனாகவும், குரூரமானவர்களுக்கு குரூர கிருத்தியமுடையவனாகவும், பாலியத்தில் அற்ப சுகமுடையவனாகவும், காமியாயும் இருப்பான், ஜாதகனுடைய சிறிய தகப்பனும் ராஜ வல்லபனாகவும், மத்திய, அந்திய வயதுகளில் யோக முடையவனாகவும் இருப்பான், பூர்ண ஆயுளுடைய தகப்பன் ஜாதகனுடைய ஆறும் திசையில் நான்காம் பாவாதிபன் புக்தியில் சுய அந்தரத்தில் அல்லது கேது புக்தியில் கோச்சாரத்தில் தனுசு ராசியில் சனி வரும்போது கார்த்திகை, பங்குனி, ஆடி முதலான மூன்று மாதங்களில் ஜாதகனுடைய தகப்பன் மரண மடைவானென்று சிலரும், வேறு சிலர் இச்சமயம் ஜாதகனுடைய தகப்பனுக்குப் பீடையுண்டாகும், சாந்தி செய்தால் சுகமுண்டாகும் என்றும், அதற்குப் பிறகு ஒன்பதாம் பாவாதிபதியினுடைய திசையில் கோச்சாரத்தில் சந்திர லக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் சனி வந்த பிறகு, ஜாதகனுடைய பிதா மரணமடைவானென்றும் சர்வநாடியிலும் சொல்லுகிறார்கள்.

(126) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகிச் சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருக்க ஒன்பதாம் பாவாதிபன், மூன்றும் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பிரசித்தமானவன்.

(127) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகிச் சூரியன் கேந்திரத் திரிகோணங்களிலிருந்து புதனுடனும், ராகுவுடனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன், ராஜஸ கிர்த்யங்களையுடையவன், விஷ்ணு சிவ பக்தியுடையவன், தேவபிராமண பக்தியுடையவன், சூரியன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கொஞ்சம் அனுசாரம் உடையவன், சூரியனுக்குக் குரு பார்வையிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பாக்கிய யோகமுடையவன், க்ஷேத்திரமூலம் சுக முடையவன், வாசாலகன், தனமுடையவன், தானிய சேர்க்கை யுடையவன்.

(128) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகிப் புதன் கன்னியில் ராசியில் வர்க்கோத்தமாம்சத்திலிருக்க, சந்திரன் கும்பாம்சத்தையடைந்து, நீச ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தாய் விசேஷ சௌக்கிய முடையவள், குணமுடையவள், சாந்த முடையவள், பந்

தூக்களைப் பூஜிப்பவள், நல்லவம்சத்தில் பிறந்தவள், அன்னதானம் செய்வதில் பிரீதியுடையவள், சாது, தன் குலத்தில் பாக்கியசாலியான வள், முன் ஜென்மாந்தர பாபசேஷத்தால் மரிக்கப்பட்ட குழந்தை களைப் பெறுபவள், ஜாதகனுடைய க்ஷேம திசையில் சந்திர லக்கினத் திற்கு எட்டாமிடத்தைக் கோச்சாரத்தில் சனி அடையும்போது க்ஷேமதார திசையில் புத புக்தியில் ஜாதகனுடைய தாய் மரிப்பாள், கன்னியாராசியில் புதன் வர்க்கோத்தமத்தில் இருந்தால் சுமங்கலியா கவே மரிப்பவளாவாள்.

(129) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகி அமலாயோ கத்தில் ஜெனித்தவன் பிராமண ஜென்மம், தனமுடையவன், சூரன், மேதாவீ, கலஹப்பிரியன், சண்டையில் பிரியமுள்ளவன், வாயுநிறைந் ததேகமுடையவன், சமகாத்திரமுடையவன், நல்லரூபமுடையவன்.

(130) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகிப் பத்தாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரமான லக்கின பாவத்தையடைந்திருந்தா லும், அல்லது பத்தாம் பாவத்தையடைந்திருந்தாலும், புதன் வர்க் கோத்தமாம்சத்தை யடைந்திருந்தால் ஜாதகன் க்ஷேத்திரமூலம் சுக முடையவன், தனமுடையவன், பிதுரார்ஜித தனத்துடன் கூடியவன், சுயார்ஜிதமும் சம்பாதிப்பவன், திட்டமாய்ப் புசிப்பவன், மர்மமான மனமுடையவன், கொஞ்சமான நித்திரையுடையவன், அதிக ஜாக்கி ரதையுள்ளவன், தேவபிராமணவிசுவாச முடையவன், தர்மபுத்தியுடை யவன், உதார புத்தியுடையவன், விஷ்ணு சிவபக்தியுடையவன், பரோ பகாரமான காரியங்களைச் செய்பவன், கொஞ்சம் கெட்டவழியில் செலவு செய்பவன், நல்வழியில் விசேஷமாய்ச் செலவு செய்பவன், க்ஷணத்தில் கோபிப்பவன், தெளிந்த மனமுடையவன், கொஞ்சம் தாமதமாக வேலை செய்பவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், தன முடையவன், தானிய சேர்க்கை செய்வான், அரசாங்கத்தில் பிரசித்தி யுடையவன், தகப்பன் மூலமாக நல்ல யோகமடைபவன், பற்பல கிரா மங்களிலும் பிரசித்தியுடையவன், வாகனம் முதலிய நல்ல யோக முடையவன், சேர்க்கவும் அழிக்கவும் வல்லவன், தகப்பனால் நல்ல யோகமுள்ளவன், மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரனு மில்லாதவன், சகோதரிகளை யுடையவன், ஒரு சகோதரி அல்பாயுசு உடையவள், லக்கினத்திற்கு மூன்றும்பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுக்குச் சகோதரர் உற்பத்தியானாலும் அந்த சகோதரம் நாசம் ஆய்விடும், ஒரு சகோதரி தீர்க்க ஆயுளுடையவள், வைதவ்வியத்தை

யடைந்து சகோதரனுடன் துக்கிப்பவள், இந்த ஜாதகனுக்கு இதற்கு மேல் அதிக சகோதரம் பிறந்தாலும் மரித்துவிடும்.

(131) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி சந்திரன் கும்பாம்சத்தில் தன் நீச ராயிலிருந்து புத்திர காரகனான குருவும் நீசனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு இரண்டு அல்லது மூன்று ஆண் குழந்தைகள் தீர்க்காயுளுடனிருக்கும், ஸ்திரீ சந்ததியும் இப்படியே யிருக்கும், மற்றவை நாசமடையும்.

(132) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகி லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் செவ்வாய் இருந்து பாபியான சந்திரனுடன் கூடியிருந்தாலும், நீசமடைந்திருக்கிற சந்திரனால் செவ்வாய் பார்க்கப்பட்டாலும், பதினோராம் பாவாதிபதி பலத்துடனிருந்தால் ஜாதகன் தெய்வயோகம் அடைந்து தனத்தையடைவான்.

(133) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகி சுக்கிரன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் சுக்கிரன் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் பரதார கமனம் செய்பவன், புதையல் தனத்தை அறிபவன், அதை அடைபவன் ,நாற்பது வயதுக்குமேல் புதையல் தனத்தை ஜாதகன் அடைவான், செவ்வாய் திசை ஆறுவது திசையாக வந்து அந்த செவ்வாய் திசை வந்து ஐம்பத்தாராவது வயதுமானால் அந்த வயதில் ஜாதகன் ஜயதுர்க்கையினுடைய அருளையடைபவன், ஜயதுர்க்காதேவி பிரதிமையைத்தானம் செய்து, ஐம்பத்தாறுவது வயதில் புதையல் தனத்தையடைவான், ஜாதகனுடைய ஐம்பத்துநான்காவது வயதில் சனியும், சூரியனுடன் கூடி லக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் இருக்கும்காலத்தில் செவவாய் திசையில் கேது அந்தரகாலத்தில் ஜாதகனுடைய பிதா மரிப்பான், ஜாதகன் இருபத்துநான்கு வயதுக்குமேல் சுகத்தையும், புத்திர பௌத்திர அபிவிருத்தியையுமுடையவன், புத்திர வர்க்கத்தில் சுபமுடையவன், ஐம்பதாம் வயதில் தனதானியமுடையவன், ஐம்பத்தாறுவது வயதில் நல்ல யோகமுடையவன், இருபதாயிரம் தனமுடையவன், நல்ல புத்திரன், தனம், தான்னிபம் முதலியன உடையவன், அநேக க்ஷேத்திர தனமுடையவன், அறுபதாவது வயதில் அபமிருத்து உடையவன், சாந்தியால் சுகமடைபவன், எழுபதாவது வயதில் ஜ்ர பீடை யுடையவன், சாந்தியால் சுகமுண்டாகும், எழுபதாவது வயதில் அச்சமயம் ஜாதகனுடைய மனைவி மரிப்பாள், எண்பத்திரண்டாவது வயதில் ஜாதகன் மரணமடைவான்.

(134) ஜென்ம லக்கினம் மீனம் (தனதாம்சம்) ஆகி விருச்சிக ராசியில் சந்திரன் கும்பாம்சத்தில் லக்கினத்திற்குக் கோணங்களிலி ருந்தால் தனதாம்சத்தில் பிறந்தவனுக்கு ஜென்ம திசையில் அற்ப சுகமுண்டாகும், ஸம்பத்தார திசையில் விப்ரகாலத்தில் பிறந்தவனுக்கு விவாகமும், வேறு சிலர் மூன்றும் திசையில் விவாகம் நடக்கும் என் றும் சொல்லுகிருர்கள், ஜாதகனுடைய ஜென்ம பூமிக்கு மேற்கிலா வது, நைருதி மூலையிலாவது விவாகம் நடக்கும், மனைவி வெளுப்பு நிற முள்ளவள், நல்ல ரூபமுடையவள், சாதாரண கிரஹஸ்தன் வீட்டில் பிறந்தவள், பதிவிரதை, சாது, சுபமுடையவள், வம்சவிருத்தியுடைய வள். ஜாதகன் விபத் திசையில் முற்பாதியில் தேசாந்தரம் செல்வான், சுபதேசத்திலேயே பாக்கிய முடையவனுவான், க்ஷேம திசையின் முடியில் தாய் மரணமடைவாள்.

(135) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாப்சப்) ஆகி லக்கின பாவாதிபதி குரு தனுசு அம்சத்தில் இரண்டாம் பாவத்தில் இருக்க பூர்வபாகத்தில் ஜெனித்தவனுக்கு தூர்க்காரண்ணியப் பிரதேசத்தில் மேட்டுப் பிரதேச பட்டணத்தில் தேவாலயத்துடன் கூடிய பட்டணத் தில் ஜெனனம் நேரிடும். உத்திராம்சத்தில் பிறந்தவனுக்கு நதிப்பிராந் தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஜெனனம் நேரிடும், பூர்வபாகத் தில் ஜெனித்தவனுக்கு பின் சகோதரர்கள் நால்வரும் அப்படியே நான்கு சகோதரிகளும் அல்லது அதிக சகோதரிகளும் உண்டாவார் கள், உத்திராப்சத்தில் பிறந்தவனுக்கு அயுளுடைய ஒரு மூத்த சகோ தரனும், சில இளைய சகோதரர்களும், இளைய சகோதரிகளும் உண்டு.

(136) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகிச் சந்திரன் லக்கின கேந்திரத்தில் இருந்து, ஐந்தாம் பாவத்திலிருக்கும் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் பிரசவகாலத்தில் சீக்கிரமாக வேதனையடைந்து சீக்கிரப்பிரசவிப்பாள், சந்திரன் சனியால் பார்க்கப் பட்டால் உத்திராம்சத்தில் ஜெனித்தவனுடைய தாய்க்கு விசேஷ வேதனையுண்டாகும், கொஞ்சம் சூதி தோஷபயமுண்டாகும், பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்குச் சூதிதோஷ பயமுண்டாகாது, சந்திரன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதக னுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டமுண்டாகும், சந்திரனைச் சுபர் பார்க் கின் ஜாதகனுக்குச் சுகமுண்டாகும்.

(137) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி சூரியன்

செவ்வாயுடன் கூடித் தன்னுச்சாம்சத்தில் இருக்கப்பட்ட குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் நீண்ட ஆயுளுடையவன்.

(138) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் புதனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விஷ்ணுபக்தி யுடையவன்.

(139) ஜென்மலக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்திற்கு ஐந்தாமிடத்தில் சந்திரனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன்.

(140) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் புதனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் எழுத்துமூலம் நல்ல ஜீவனமுடையவன்.

(141) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவத்தில் சூரியனும், செவ்வாயும் கூடியிருந்தாலும், அல்லது சூரிய னும், செவ்வாயும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டாலும், ஜாதக னுடைய தகப்பன் சூத்திரப் பிரபுவால் சுகமடைவன், அரசாங்க ஜென சிநேகத்தால் தன் தகப்பன் விசேஷ சௌக்கியத்தை அடைவன், ஜாதகனுடைய பிதா பாலிய வயதில் அற்பசுகமுடையவன், காமீ, மத்திய வயதில் யோகமுடையவன், அந்திய வயதில் புத்திரன் மூல மாகப் பல்லக்கு முதலான பாக்கியமுடையவன், புத்திர புத்திரி சுகத் துடன் கூடியவன், வயோதிக வயதில் புண்ணிய சேர்க்கையுடைய வன், எப்பொழுதும் விஷ்ணு பக்தியுடையவன், தனதானியத்துடன் கூடியிருப்பவன், ஜாதகனுடைய க்ஷேம திசையில் அல்லது ஐந்தாம் திசையில் சுய புக்தியில் ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவான்.

(142) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருக்க, நீச்சாம்சத்தில் குருவின் வீடான லக்கினத்தில் குரு வீட்டில் சந்திரனிருக்க ஜாதகனுடைய தாய் விசேஷ சௌக்கிய முடையவள், குணமுள்ளவள், பொறுமை யுடையவள், கணவனுடைய மனதை அனுசரித்து நடப்பவள், ரூப லக்ஷணத்துடன் கூடியவள், வம்சத்தில் பாக்கிய விருத்தியுடையவன், ஜாதகனுடைய நான்காம் திசையில் கேது புக்தியில் சனி மிதுன ராசி யில் கோச்சாரத்தில் சஞ்சார காலத்தில் ஜாதகனுடைய தாய் மரண மடைவாள்.

(143) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி மேஷாம்

சத்தில் செவ்வாய் எட்டாம் பாவத்தையடைந்து, குருவால் செவ்வாய் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு அநேக சகோதரர்கள் உண்டு.

(144) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி சுக்கிரன் குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் சுக்கிரன் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகனுக்கு அநேக சகோதரிகள் உண்டு, ஜாதகனுக்கு மூன்று சகோதரர்கள் அல்லது நான்கு சகோதரர்கள் உண்டு, சகோதரிகளும் அப்படியேயாவது அல்லது அதிகமாகவாவது இருப்பார்கள், ஜாதகனுடைய சகோதரர்களில் எவனாவது ஒருவன் அரசாங்கத்தில் பிரசித்தியடைபவன், ஒருவன் இரண்டு மனைவிகளையடைபவன், மற்றவர்கள் சுக ஜீவிகளாயிருப்பார்கள்.

(145) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி புததிரிம்சாம்சத்தில் அமலா யோகத்தில் ஜெனித்தவன் பித்தம் நிறைந்த தேகமுடையவன், வெண்மை நிறமுள்ளவன், நல்ல வடிவுடையவன், வாயு கொஞ்சம் அதிக முள்ளவன், சம அங்கமுடையவன், அறிவாளி, தீரன், அரசலக்ஷணத்துடன் கூடியவன், மிருதுவான வசியமுள்ள சரீரமுடையவன், சாது, தாமரை இதழ் போன்ற கண்களுடையவன், புதன் ஸாரஸ்வதாம்சத்தில் இருந்தால் வித்தையுடையவன், அறிவாளியாவன்.

(146) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் வாசாலகன், சாதுரிய புத்தியுடையவன், மூன்று பாஷைகளில் வல்லவன், அன்னிய பாஷைகளில் மேலான சிரமப்படுபவன், நாடக அலங்கார காவியங்களைப் பிரியமாய்ச் சொல்பவன், அதிகம் தெரிந்தவன், நீசாம்சத்தில் லக்கினத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் நீச வித்தையில் வல்லவன், எழுதுவதில் நல்ல நிபுணன், சேர்ப்பதிலும் கலைப்பதிலும் பிரியமுடையவன், லக்கினத்திற்கு பதினோராம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் தியாகியாயும், கெம்பீர முடையவனும், புத்திமானாகவுமிருப்பன்.

(147) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபனும், சந்திரனும் அம்சத்தில் நீசமடைந்திருக்கப்பட்ட சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நீசராஜியத்தில் நீச பிரபுவால் நல்ல சுகமான ஜீவனத்தை யடைவன், வித்தியா மூலம் நல்ல யோகமுடையவன், தமிழ் பாஷையில் விசேஷ அறிவுடையவன், கப்பல் வியாபா

ரம் செய்யும் பிரபுவால் பிரபல உத்தியோக மடைவன், நீச அரசன் மூலமாக எப்பொழுதும் பிரமுகனுகி மந்திராலோசனே சொல்வதில் மேன்மையுடன் கூடியிருப்பன்.

(148) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி ஐந்தாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்திலிருந்து நீசாம்சந்திலிருக்கப்பட்ட சனியால் பார்க்கப்பட்டு, குரு செவ்வாயின் க்ஷேத்திரத்தை யடைந்திருந்தால் ஜாதகனுடைய தலைப்பிள்ளை (சீமந்த சிசு) மரித்துவிடும், ஜாதகனுக்கு முதலில் பெண் குழந்தையும், பிறகு ஆண் குழந்தையும் பிறக்கும்.

(149) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி புதன் புத்திரஸ்தானத்திலிருந்தாலும், அல்லது புத்திரஸ்தானத்திற்கு எழிலிருந்தாலும், புத்திர பாவம் சனியால் பார்க்கப்பட்டு, புத்திரகாரகனை குரு செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு மரித்த குழந்தைகள் பிறக்கும், அல்லது குழந்தைகள் பிறந்து பிறந்து மரித்துவிடும், அந்த தோஷ பரிகாரத்தின் பொருட்டு சிம்சுமார தானமும், சந்தான கோபாலப் பிரதிமைதானமும் செய்தால் ஜாதகனுக்குப் புத்திரப் பிராப்தி உண்டாகும், ஜாதகனுடைய க்ஷேமதாரா திசையில் சுயபுக்தியில் சிம்மத்தில் அல்லது கன்னியில் கோச்சாரத்தில் குரு வரும் சமயம் தோஷ பரிகாரம் செய்தால் ஜாதகனுக்குப் புத்திர உற்பத்தியுண்டாகும், தீர்க்காயுளுடைய இரண்டு புத்திரர்களும், மூன்று புத்திரிகளும் உண்டாவார்கள், அதிகம் பிறந்தாலும் லக்கினத்தில் சந்திரனுள்ள ஜாதகனுக்கு என்ன பலன் சொல்லியிருக்கிறதோ அதே பலன் தான் உண்டாகும், க்ஷேமதாரா திசையில் ஜாதகனுக்குத் தன் அரசனுடன் விரோதம் உண்டாகும், ஜாதகனுக்குத் தேக பீடையுண்டாகி சீக்கிரம் குணமாகிவிடும், க்ஷேமதிசையில் பூர்வபாகத்தில் இப்பலனும், பிற்பாதியில் விசேஷ சுகமும் உண்டாகும். முப்பது வயதுக்குமேல் ஜாதகன் யோகமுடையவன், முப்பத்திரண்டாவது வயதில் அநேக எவலாளர்களை உடையவன், உத்திராம்சத்தில் பிறந்த ஜாதகனுக்கு முப்பத்தைந்து வயதுக்குமேல் யோகமுண்டாகும், கப்பல் வியாபாரப் பிரபு மூலம் ஜாதகன் வாசாலகனுகி சாதுரிய யுக்தியுடையவனுவான், கும்ப ராசியில் சனி கோச்சாரத்தில் வரும் சமயம் ஜாதகனுடைய க்ஷேம திசையில் வேறு அரசன் எற்பட்டு அவர் மூலம் எப்பொழுதும் பிரமுகனுகி பன்னிரண்டு வருஷம் காலம் யோகமடைவான்.

(150) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி சந்திரன் நீசாம்சத்தில் லக்கின கேந்திரத்திலிருக்க, அந்த பாவாதிபன் வலுத்து லக்ஷ்மி ஸ்தானமான ஐந்தாவது பாவத்தை யடைந்திருந்தால் ஜாதகன் லக்ஷ்மி யோகத்தை அடைவான். லக்ஷ்மி யோகத்தில் பிறந்தவன், வாசாலகன், சுகமுடையவன், நல்ல வாலிப சரீரமுடையவன், எப்பொழுதும் விஷ்ணுபக்தியுடன் கூடியவன், மஹா தனிகன், கர்ப்பத்திலிருந்தே ஸ்ரீமானனவன், சுக்கிரன் பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் அழகான சொர்ணம், இரத்தினம் முதலிய ஆகார லக்ஷ்மியை உடையவன், கிரீடை யுடையவன், சந்தோஷ முடையவன், நாட்டியம், சங்கீதம் முதலிய எல்லாவற்றிற்கும் முதலில் நிர்ப்பவன், தாயாதி துவேஷகலாபமுடையவன், நிலேயான புத்தியுடையவன், நல்ல அரசர்களால் நன்கு சந்தோஷத்துடன் நன்கு கொண்டாடப்பட்டு வெகுமானிக்கப்பட்டவன், நல்ல குணத்தை யுடையவன், நல்ல செய்கைகளுக்குச் சமுத்திரம் போன்றவனுயிருப்பவன், லக்ஷ்மி யோகத்தில் பிறந்தவன், முப்பத்தைந்து வயதுக்குமேல் சுகமடைவன், இருபதாயிரம் தனமுடையவன், அநேக கிராம அதிகாரங்களையுடையவன், பெரிய அரசன் மூலமாக ஸர்வாதிகாரமுடையவன், நாற்பது வயதிற்குமேல் சௌக்கிய மடைபவன், அயல் தேசத்தில் அரச சேவை செய்பவன், அந்த தேசத்தில் கொஞ்சகாலம் வாசம் செய்பவன், நல்ல யோக்கியதையுள்ளவன், சந்தோஷத்துடன் கூடினவன், அயல் தேசத்தில் விசேஷ சௌக்கியமுடையவன், அநேக இரத்தினம், தனம் முதலியவற்றைச் சம்பாதிப்பவன், மூன்று வாகனங்களுண்டாகும்.

(151) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி ஐந்தாம் தாராதிபதி சூரியனுகி அந்த சூரியன் ராசியில் நீச்சத்தையடைந்து நவாம்சத்தில் உச்சத்திலிருந்தால் அந்த திசையில் ஜாதகனுக்கு விசேஷ சௌக்கியமுண்டு, நீச அரசாங்கத்தில் பிரதானமானவனுக இருப்பான், பற்பல தேசங்களிலும் பிரசித்தியும், ஜெனனதிசையிலிருந்து ஐந்தாம் திசையில் அதிக சம்பத்தும் அடைவான்.

(152) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி தன் உச்சத்தில் நீசாம்சத்தில் மூன் பாராவின்படி செல்லப்பட்ட சூரியன், அல்லது மற்ற கிரகங்களும் இருந்தால் அந்த திசையில் ஜாதகனுக்குத் துக்கமும், உச்சராசியில் நீசாம்சத்தில் கிரகங்களிருந்தால் ஜாதகனுக்குச் சுகமும் அடைவான்.

(153) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி எட்டாம் ராசியை அடைந்திருக்கும்போது எட்டாம் ராசி முதலாய்க் கிரகங்கள் வரிசையாய் இருக்கப்பட்ட கிரக மாலிகாயோகத்தில் எட்டாம் பாவத்தில் பாபக்கிரகமிருந்தால் ஜாதகன் மிலேச்ச அரசனுடைய அதிகார முத்திரை தரித்து, அவரால் பிரமுகனுவான், ஐந்தாம் திசையில் ஐந்துவருஷம்வரை யோகமுண்டாகும், புத்திரன் மூலமாகவும் நல்ல யோகமடைவன், ஐந்தாம் திசையில் அநேகக்ஷேத்திரம் தனம் இவைகளை அடைவான், புது வீடு கட்டுவான், புண்ணிய க்ஷேத்திரத்தில் வாசும் செய்வான், எப்பொழுதும் திருப்தியான இஷ்டான்ன போசனமுடையவன், நிரந்தரமான அன்னதானம் செய்வான், உடன் பிறந்த சகோதரனுல் பூமி, வியாபாரத்தில் லாபமடைவான், ஜாதகனுக்கு ஐந்தாவது திசையில் பிற்பாதியில் யோகபங்கம் உண்டாகும், சத்துரு விருத்தியுண்டாகும், மனஸ்தாபமுண்டாகும், இரண ரோகத்தால் பீடையுண்டாகும், சூரியப் பிரீதிக்கு ஜபம் செய்தால் இரண சாந்தியுண்டாகும்.

(154) ஜென்மலக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி சந்திரன் வலுத்து, லக்கினகேந்திரத்தில் இருக்க ஆருவதாக அந்த சந்திர திசை வந்தால் அந்த திசையில் ஜாதகனுக்கு ராஜயோகம் உண்டாகும், நல்ல கீர்த்தியுண்டாகும், அரசாங்கத்தில் பிரதானமானவனுவன், பேரிகை, சங்கம், மிருதங்கம் முதலானவை உடையவன், அரச முத்திரை, கொடை, சாமரம் முதலியவற்றுடன் கூடி அநேக சைனியங்களுக்கு நாயகனுவன், வாகனமேறுவதில் வல்லவன், ராஜகாரியத்தில் வெகு தூரந்தரன், பற்பல தேசங்களிலும் கீர்த்தியடைந்து சந்திர திசையில் நல்ல கீர்த்தியுமடைவன்.

(155) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி பத்து, ஒன்பது, எட்டு, பதினென்று முதலிய பாவங்களில் சூரியன் முதலிய எல்லாக் கிரகங்களும் இருந்தால் கேந்திராதியோகம் என்ற யோகம் உண்டாகும், இந்த அதியோகத்தில் பிறந்தவன், ஆயுளுள்ளவரையில் சுகியாயிருப்பான்; ஸ்ரீமானுவான், பிரசித்தமான பிரபுவாகயிருப்பன், குதிரை, பல்லக்கு, வாகனம் முதலிய வைபவங்களுடையவன், எப்பொழுதும் வீட்டில் சம்பத்துடையவன், நல்ல புத்திரன், நல்ல மனைவி, பாக்கியம் இவற்றுடன் கூடினவன், சந்திரனுடைய காந்தியைப்போல் பிரகாசிக்கப்பட்ட கீர்த்தியுடையவன், பிரபாவமுடையவன், சௌரியமுள்ளவன், கோபமுடையவன், தேசாந்திரத்தி

லும் கீர்த்தியுடையவன், மேல் சொன்ன ஆருவது திசையில் முழுவதிலும் நல்ல யோகமுடையவன், புத்திரனுல் நல்ல யோகமும், தர்மச் செய்கையும் உடையவன், வாவி, கிணறு, தடாகம் வெட்டுதல், அக்கிரகாரம், தேவாலய பிரதிஷ்டை செய்தல் முதலிய தர்மத்தைச் சந்திரதிசையில் செய்வான், லக்ஷத்துக்கு மேற்பட்ட தனத்தையும், சம்பத்தையும் அடைவான்.

(156) ஜென்ம லக்கினம் மீனம் (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி லக்கினத்தில் வர்க்கோத்தமாம்சம் அடைந்தாலும், அல்லது தனது சுய நவாம்சத்தில் இருந்தாலும், அல்லது செவ்வாயினுல் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் அத்வைதமென்கிற சாஸ்திர மார்க்கத்தால் உண்மையான வேதாந்த நிஷ்டையை அடைந்து உண்மையான சொரூபமுள்ள பரமாத்மாவை அறிவான்.

(157) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி ஜென்ம லக்கினத்தில் அல்லது சுபக்ஷேத்திரத்தில் லக்கின பாவாதிபதி சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குப் பெரிய நதிப்பிராந்தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஜெனனம் நேரிடும். உத்தராம்சத்தில் பிறந்த ஜாதகனுக்குச் சிறிய கிராமத்தில் ஜெனனம் நேரிடும், பூர்வ பாகத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவத்தில் அதிகவேதனையும், உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்குப் பிரசவ வேதனை கொஞ்சமாகவும் இருக்கும்.

(158) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி சந்திரன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தாய்க்குக் கொஞ்சம் பயமும், பீடையும் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டமும், பாபர் சேர்கையால் கஷ்டமும், சுபர் சேர்க்கையால் சுபமும் உண்டாகும், சாந்தி செய்தால் சுகமுண்டாகும், குரு பார்வையிருந்தால் சௌக்கியமும், தாய்க்கு ஆரோக்கியமும் உண்டாகும்.

(159) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி லக்கின பாவாதிபதி இவர்கள் வலுத்து இருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுள் யோகமுண்டாகும், ஜாதகனுடைய தாய் தகப்பனுக்கு ஆரோக்கியமும் தேக சௌக்கியமும் உண்டாகும்.

(160) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன் ராசியிலிருக்க, கேந்திரத்திலாவது பதினோராம் பாவத்திலாவது சூரியனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் வெகு ஆயுளுடையவன், உடன்பிறந்த சகோதரர்களுடன் கூடியவன், பாவி

யத்தில் கிலேசமும் தரித்திரமுமடைந்தவன், மத்திய வயதில் பாக்கிய மடைந்தவன்.

(161) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம் ஆகிப் பதினோராம் பாவத்தில் சூரியன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விஷ்ணு பக்தியுடையவன், வைதிக ஆசாரமுடையவன், எப்பொழுதும் வேத சாஸ்திர விசாரமுடையவன்.

(162) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி குருவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சகல சாஸ்திர தத்துவங்களை அறிந்தவன், கல்விமூலம் நல்ல கீர்த்தியுடையவன், எல்லோருக்கும் உபதேசம் செய்பவன், அரசாங்கத்தில் நன்கு பூஜிக்கப்படுபவன், உலகத்தில் நல்ல பெயரும் புகழுமுடையவன்.

(163) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபன் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தன் பிதாவைக்காட்டிலும் அதிக வயது அடைபவன்.

(164) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி நிர்மலாம்சத்தில் சர ராசியில் பதினோராம் பாவத்தில் சூரியன் இருந்து இரண்டாம் பாவாதிபதியான செவ்வாய் சாமதாம்சத்தில் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சாஸ்திரத்தைச் செய்பவனுகவும், நல்ல வாசாலகனுகவும், நிர்மல சுபாவமுடையவனுகவும், தன் பிதாவின் சுகமுடையவனும், யாவராலும் எங்கும் பூஜிக்கப்பட்டவனுகவும் இருப்பான்.

(165) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து, சந்திரன் கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், குணவதி, சாந்தமுடையவள், பாக்கிய வம்சத்தில் பிறந்தவள், சகோதரர்களுடன் கூடியவள், வம்சத்தில் பாக்கிய விருத்தியுடையவள், தாய் வம்சத்தில் விசேஷ சௌக்கியமுடையவள், ஜாதகனுடைய அம்மான் பிரபலமும் சுபமும் உடையவன்.

(166) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி தாய் வழிப்பாட்டன் ஸ்தானுதிபதியான சனி, கேந்திர திரிகோணங்களில் சுபாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் வழிப்பாட்டன், வெகு ஆயுளுடையவன், உலகத்தில் பிரக்யாதியான கீர்த்தியுடையவன்,

இரண்டு தாரமுடையவன், போகி, கல்வி மூலம் நல்ல கீர்த்தியுடைய வன்.

(167) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி ஜாதக னுடைய அம்மான் ஸ்தானாதிபதியான சூரியன், புதனுடன் கூடி பதினோராம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய அம்மான் பிரபல முடையவன், சுகமுடையவன், ஜாதகனுக்கு தாய் வம்சத்தில் விசேஷ சுகமுடையவன்.

(168) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி நான் காம் பாவாதிபதி புதன், பதினோராம் பாவத்தில் பலத்துடனிருக்க, இரண்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் சுயக்ஷேத்திரத்தில் குரு, சந்திரனிவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் சகல சாஸ்திரங் களையும் கற்றறிபவன், வேதாந்த பரிசீலனை யுடையவன், கேந்திரத்தி லாவது கோணங்களிலாவது குரு இருந்தாலும் சாரதாம்சத்திலிருந் தாலும் ஜாதகன் ஆறு சாஸ்திரங்களிலும் வல்லவன், ஸ்ரீமான், ஸார ஸ்வதாம்சத்திலிருந்தால் அறிவுடையவன், நல்ல போகமுடையவன், ராஜாதி ராஜர்களால், வெகுமானித்துப் பூஜிக்கப்படுபவன், ஸம்ஸ்கிருத பாஷையில் பிரசண்ட கவியாயும், அரசனால் வணங்கக்கூடியவனாகவும், தன் குலத்தில் பிறந்தவர்களில் பிரசித்தனாகவும் இருப்பான்.

(169) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி ஒரு ராசியில் சூரியனும், புதனும் கூடியிருந்து லக்கின பாவாதிபதியுடனும் கூடி ஒரே ராசியில் அல்லது ஒரே அம்சத்தில் இருந்தாலும், தன் உச்ச ராசிகளில் குருவும் சூரியனுமிருந்தாலும், தேவகுரு மட்டும் தன் உச்ச ராசியில் பலத்துடனிருந்தாலும் ஜாதகனுக்குப் பண்டித யோகமுண் டாகும், பண்டிதயோகத்தில் யார் யார் ஜெனிக்கிறார்களோ அவர்கள் மகான்களாகவும், பண்டிதர்களாகவும், (பிராம்மணனால், பிராம்மண சிரேஷ்டனாகவும்) அரசர்களுடைய இஷ்டப்படி சாஸ்திரம் பார்ப்பவர்க ளாகவும், வித்துவான்களாகவும், பணமுடையவர்களாகவும், அரசர் களுடைய கூட்டங்களால் துதிக்கப்படுபவர்களாகவும், கோப்தாவாக வும், ஞானமுடையவர்களாகவும், தர்ம சீலர்களாகவுமிருப்பார்கள்.

(170) ஜென்ம லக்கினம் மீனம் (பிராம்ஹியம்சம்) ஆகி ஒன்ப தாம் பாவத்திலாவது, பத்தாம் பாவத்திலாவது, சுபாம்சத்தில் தேவ குரு இருந்து பாபக்கிரகங்களின் பார்வையடையாமலு மிருந்தால் ஜாதகன் நல்ல அறிவாளியாயும், தர்மசீலனாகவுமிருப்பான்.

(171) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீ தராம்சம் பூர்வபாகம்) ஆகி சுயக்ஷேத்திரத்தில் லக்கின பாவாதிபதியும், லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனியுமிருந்தால் ஜாதகன் பெரிய கிராமத்தில் அக்கிரகாரத்தில் இரண்டாவதாக அல்லது மூன்ருவது பிள்ளையாக ஜெனிப்பான், ஜாதகன் பின் சகோதரர்களுடையவன், சகோதரியில்லாதவன், உத்தராம்சத்தில் பிறந்தவன் சகோதர சகோதரிகளையுடையவன்.

(172) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீ தராம்சம்) ஆகி சந்திரன் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் அதிக பிரசவ வேதனை யடைவாள், பூர்வபாகத்தில் அற்ப பீடையும். உத்தராம்சத்தில் அற்ப பிரசவ வேதனையும் உண்டாகும். குருவின் பார்வை சந்திரனுக்கு யிருந்தால் அச்சமயம் தாய்க்குத் சுகமும், சௌக்கியமும் உண்டாகும்.

(173) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீ தராம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்குத் தாய் மூலம் தோஷ முண்டாகும், அந்த ராசியிலேயே ஐந்தாமிடத்தில் சுபாம்சத்தில் சனி யிருந்தால் சாந்திமூலம் ஜாதகனுக்குச் சௌக்கிய முண்டாகும்.

(174) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீ தராம்சம்) ஆகி லக்கினம் தவிர்த்த கேந்திரத்தில் பத்தாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகப்பெற்று சுகமடைவான்.

(175) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீ தராம்சம்) ஆகி சுக்கிரன் தன் உச்ச ராசியிலிருக்க, பத்தாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் நிச்சயமாக ஜாதகனுக்கு வயது எழுபதாகும், ஒரு சமயம் புண்ணிய வசத்தால் அதற்குமேல் ஜீவித்திருந்தால் எழுபத்தேழு வயது வரை யிருப்பான்.

(176) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீ தராம்சம்) ஆகி லக்கின பாவத்தில் சூரியனுடன் புதன் கூடியிருக்க செவ்வாய் தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமுடையவன், வேதமறிந்தவன், ஸ்ரீமான், விஷ்ணு சிவபக்தியுடையவன், வைதீகாசாரமுடைய புண்ணியாத்மா, திரவியம்சம்பாதித்து மேன்மையான சுகமுடையவன், பிராமண கிராமத்தில் நன்கு பூஜிக்கப்படுபவன், தன் பிதாவிற்கு கிராமத்தில் கிராம புரோகிதன் என்ற பெயர், யாகாதிகள் செய்விப்பவர், கிராமத்தில் மேன்மையானவர், செவ்வாய் சனியுடன் கூடியிருந்தா

லும், சனியால் செவ்வாய் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தகப்பன் குரூரமான கிருத்தியங்களையுடையவன், ஜாதகனுடைய மூன்றும் திசையில் செவ்வாய் புத்தியில் ஜாதகனுடைய பிதா மரிப்பான்.

(177) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீதராம்சம்) ஆகி சந்திரன் தன் உச்ச ராசியிலிருக்க புதன் நீச்ச ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தாய் அல்பாயுசு உடையவள், தாய் குணவதி, பொறுமையுடையவள், கொஞ்சம் ரோகத்துடன் கூடியவள், பதிவிரதை, சுபமுள்ளவள், சாது, வம்சவிருத்தியுடையவள், ஜாதகனுடைய மூன்றும் திசையில் ஜாதகனுடைய தாய் மரணமடைவாள்.

(178) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீதராம்சம்) ஆகி சுக்கிரன் தன் உச்சராசியிலிருக்க, மூன்றும் பாவத்திற்கு ஒன்பதில் செவ்வாய் இருந்தால் ஜாதகன் இரண்டு இளைய சகோதரர்களை யுடையவன், மூத்த சகோதரனில்லாதவன், சகோதரிகளில்லாதவன், ஜாதகன் பிரசித்தியுடையவன்.

(179) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீதராம்சம்) ஆகி மீனராசியில் புதன் காளகூடாம்சத்திலிருந்து, சுக்கிரன் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய மனைவி அற்பமான பாக்கியமுடையவள், அற்பாயுசுடையவள்.

(180) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீதராம்சம்) ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகனுக்கு புத்திர சந்ததி உண்டாகாது, ஜாதகனுக்குக் கடவுளிடம் பக்தி மட்டும் உண்டாகும், அம்சாவதாரமானவன், பாலியத்திலேயே ஞான விசேஷமடைவான்.

(181) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீதராம்சம்) ஆகி லக்கின கேந்திரத்தில் சுக்கிரனிருந்து, அந்த சுக்கிரனிருக்கிற கேந்திரம் நீங்கிய மற்ற கேந்திரங்களில் குரு இருந்து, லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் அம்சாவதாரமடைவான், ஞானியாவான், தத்துவவிவேக மடைவான்.

(182) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீதராம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி நீச்ச மடைந்து, ஏழாம் பாவம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு "ப்ரவஜ்ரா" என்கிற சன்னியாசி யோகமேற்படும், அல்லது ஜாதகனுடைய மனைவி நாசமடைவாள்.

(183) ஜென்மலக்கினம் மீனம் (ஸ்ரீதராம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்திலிருக்க ஜாதகன் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தால் வெளுப்பு நிறமுடையவன், குணத்துடன் கூடினவன், சாத்துவீகன், அறிவாளி, ஞானி, விஷ்ணு சிவ பக்தியுடையவன், விசேஷ விஷ்ணுபக்தி உடையவன், சமதேகி, நல்ல ரூபமுடையவன், நல்ல அறிவுடையவன், நன்மையுடையவன், அழகுடையவன், விஷ்ணுவைத் தியானம், பாராயணம் முதலியவை செய்பவன், பாலியத்தில் குருவின் கிருபைக்குப் பாத்திரமானவன், தெய்வானுக்கிரகயோகமுடையவன், அம்சாவதாரன் என்று புகழுடையவன், யோகமுடையவன், பாலியத்தில் ஞானம் விசேஷமாயுள்ளவன், விஷய போகத்தை வெறுத்தவன், நல்ல பரிசுத்தாத்மா, ஜிதேந்திரியன், பக்தியுடைய ஜெனங்களை சேர்த்துக் கொள்ளுபவன், வயதின் மத்தியில் குருவாவன், அவனுக்கு யத்தினமில்லாமல் ஞானசித்தியுண்டாகும், விஷ்ணுபக்த ஜெனங்களால் அடையப்படுவான், பற்பலதேசங்களிலும் பிரசித்தியுடையவன், தீன ஜெனங்களுக்குப் பிரியமானவன், விஷ்ணு கீர்த்தனங்களைப் பாடும் புண்ணியாத்மா, தெய்வானுக்கிரக சித்தியுடையவன், சனி பிரம்மஞானம்சத்தில் இருந்தால், பிரம்மத்தியான முடையவனாகவும், தபோநிதியாகவும் இருப்பான், ஐந்தாம் வயதில் அக்ஷரஞான மடைபவன், விப்ரகாலத்தில் பிறந்த எட்டாம் வயதில் பிராமண கர்மமடைபவன், பன்னிரண்டாம் வயதில் அவனுக்கு விவாகமுண்டாகும், பதினெட்டாம் வயதில் அவன் தாய் மரிப்பள், இருபதாம் வயதில் ஜாதகனுடைய மனைவி மாணமடைவாள், இருபத்தைந்தாம் வயதில் ஜாதகனுடைய தகப்பன் மாணமடைவான், இருபத்தைந்து வயதுக்குமேல் ஜாதகனுக்கு கீர்த்தியும், பற்பல தேசங்களில் புகழும் உண்டாகும், ஜாதகன் முப்பது வயதுக்குமேல் நல்ல யோகமடைவான், பற்பல கிராமங்களிலும் சஞ்சாரம் செய்வான், அனேக சிஷ்யக் கூட்டங்களுடையவன், தன்னுடைய முப்பத்தைந்தாவது வயதில் நல்ல வாகனமடைவான், அரசாங்கத்தில் நன்கு பூஜிக்கப்படுவான், அரசனும் மற்ற இதரமான ஜெனங்களாலும் வணங்கப்படுபவன், ராமநாம விரதமுடையவன், விஷ்ணுபக்த ஜெனங்களுடன் கூடியவன், எப்பொழுதும் அன்னதானம் செய்பவன், புண்ணியாத்மா.

(184) ஜென்மலக்கினம் மீனம் (ஸ்ரீதராம்சம்) ஆகி மீனத்தில் சுக்கிரன் கந்தர்வாம்சத்திலிருந்து, லக்கினத்தில் புதனிருந்தால் ஜாதகன் புள்ளாங்குழல் பாட்டின் ரசமறிவான், தெய்வ யோகமடைவான்,

நல்ல கீர்த்தனங்களைச் செய்வான், அன்ன நேம மென்கிற விரத முடையவன், நல்ல மார்க்கத்தில் நல்லவர்களால் சம்பாதிக்கப்பெற்று நல்ல மனதுடன் கொடுக்கப்படும் திரவியத்தைப் பெற்று அதன் மூலம் ஜீவிப்பவன், அனேக சிஷ்ய கூட்டங்களை உடையவன், குடை, சாமரம் முதலிய விருதுகளுடன் கூடியவன், ஆயுளுள்ளவரையில் வைபவத்துடனும் நல்ல ஜீவனமுடையவனுமிருப்பான்.

(185) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீதாராம்சம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் அல்லது ஏழாவது பாவத்தில் அல்லது ஒன்பதாவது பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் தன் மனைவி புத்திரனிவர்களை இழந்து விடுவான், அல்லது இவர்களை விட்டுப் பிரிந்து விடுவான், அன்றி சர ராசியில் ஷெ கிரகம் மேற்சொன்னபடி இருப்பின் ஜாதகன் நானாதேசங்களிலும் சஞ்சரிப்பான், ஸ்திர ராசியில் மேற்படி கிரகம் மேற்சொன்னபடி இருப்பின் ஜாதகன் பிறந்த ஊரில் மட்டும் பிரசித்தியும், உபய ராசியிலானால் ஜாதகன் தன் தேசத்திலும், பிரசித்தியும் அடைவான், வெளி கிராமங்களில் சஞ்சரித்து விஷ்ணு பக்த ஜெனங்களுக்குத் தலைவனாகி பதினேழாவது வயதில் தாயை இழந்து விடுவான்.

(186) ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீதாராம்சம்) ஆகி ஏழாவது பாவாதிபதி காளகூடாம்சத்திலிருந்து ஏழாவது பாவம் சனியால் பார்க்கப்பட்டாலும், ஜென்ம லக்கினம் மீனம் (ஸ்ரீதாராம்சம்) ஆகி பூர்வபாகத்தில் பிறந்தவனுக்குச் சுக்கிரன் சூரியனுடன் கூடியிருந்தாலும், ஜாதகன் மனைவியால் சௌக்கியமடையமாட்டான், இப்படியிருந்து, உத்தரபாகத்தில் பிறந்த ஜாதகன் பரஸ்திரீ சேர்க்கை செய்பவனாவான், மனைவி மரித்த பின்பு, விஷய போகங்களில் வெறுப்படைந்து ஞானியாகிப் பற்பல தேசங்களிலும் சஞ்சாரம் செய்வான், கல்வியுடையவன், புத்திமான், சூரியனைப்போல் தேஜசுடையவனாவான், இருபது வயதுக்குமேல் குருவின் அருளடைந்து வல்லவனாக பற்பல ஆகமங்களில் தேர்ந்து வயோதிக வயதில் ஞானியாவன், அரசனால் பூஜிக்கப்படுவான்.

குறிப்பு :—இந்தப் புத்தகத்தில் மீன லக்கினத்திற்கு 186-விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள சுமார் 1,000-க்கு மேற்பட்ட மீன லக்கின விதிகள் நான்காம் பாகம், ஐந்தாம் பாகம் முதலிய பாகங்களில் மீன லக்கின பலனின் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்று அறியவும்.

அத்தியாயம்-13

கடின பதங்களின் விளக்கம்.

ஆரூடம் அல்லது லக்கின ஆரூடம் அல்லது ஆரூட லக்கினம் அல்லது பத லக்கினம் என்பது லக்கினுதிபதி லக்கினத்தி லிருந்து எத்தனையாவது வீட்டிலிருக்கின்ருரோ அத்தனை வீடு லக்கினுதிபதி இருக்கும் வீட்டில் இருந்து எண்ண வருகின்ற வீடே ஆகும். உதாரணமாகத் தனுசு லக்கினத்திற்கு ஐந்தாவது வீடாகிய மேஷத்தில் குரு இருந்தால் ஆரூட லக்கினம் என்பது சிம்மம் ஆகும். ஏனென்ருல் லக்கினுதிபதியாகிய குரு மேஷத்திலிருப்பதால் லக்கினம் முதல் மேஷம் வரையிலும் எண்ண ஐந்து வீடாகும். லக்கினுதிபதியாகிய குரு இருக்கும் வீடாகிய மேஷத்திலிருந்து, மேலே எண்ணிவந்த ஐந்து வீட்டை எண்ண சிம்மம் வரும். ஆகையால் சிம்மம்தான் ஆரூட லக்கினமாகும். லக்கினத்திற்கு அதாவது லக்கினபாவத்திற்கு ஆரூடம் இருப்பது போலவே ஒவ்வொரு பாவத்திற்கும் ஆரூடம் உண்டு; அதாவது தனுரூடம், சகோதர ஆரூடம், மாதுராரூடம், புத்திராரூடம், களத்திராரூடம், பாக்கியாரூடம், பிதுராரூடம் போன்ற முதலிய ஆரூடங்கள் உண்டு. ஒரு பாவத்திற்கு ஆரூடம் அறிய வேண்டுமானுல் அந்த பாவத்தையே லக்கினமாகப் பாவித்து லக்கின ஆரூடம் கண்டு பிடிப்பது போல அந்த பாவத்திற்குக் கண்டுபிடிக்க வருகின்ற வீடே அந்த பாவத்தின் ஆரூடமாகும். உதாரணமாகத் தனுசு லக்கின ஜாதகத்தில் குரு மேஷத்திலிருந்தால், இதற்கு மாதுரு ஆரூடம் கணிப்போம். தனுசு லக்கினத்திற்கு மாதுருபாவம் மீனம் ஆகும். ஆகையால் மீனத்தை லக்கினமாகப் பாவிக்கவும். இப்படி பாவிக்க இந்த மீன லக்கினுதிபதியாகிய குரு மேஷத்தில் அதாவது மீனத்திலிருந்து இரண்டாவது வீட்டிலிருக்கின்ருர். ஆகையால் மேஷத்திலிருந்து இரண்டு வீடு எண்ண ரிஷபம் வரும். ஆகையால் இந்த ரிஷபமே மாதுரு ஆரூடமாகும். தனுசு லக்கின ஜாதகத்தில் சூரியன் மகரத்தில் இருந்தால் இந்த ஜாதகத்திற்குப் பிதுராரூடம் அறிவோம். பிதுர் ஸ்தானம் தனுசிலிருந்து ஒன்பதாவது வீடாகிய சிம்மம் ஆகும். சிம்மத்திற்கு அதிபதியாகிய சூரியன் மகரத்தில் அதாவது சிம்மத்தில் இருந்து ஆருவது வீட்டில் இருக்கின்ருர். ஆகையால் இந்த ஆறு வீடு மகரத்திலிருந்து எண்ண வருகின்ற மிதுனமே பிதுரு ஆரூடமாகும். இவ்விதமாகவே ஒவ்வொரு பாவத்திற்கும் ஆரூடம் கண்டறியவும்.

"உபபதம்" அல்லது "உபபத லக்கினம்" என்பது பன்னிரண்டாம் பாவத்தின் ஆரூடம் ஆகும். சிலர் "உபபதம்" அல்லது உபபத லக்கினம் என்பது ஏழாம் பாவத்தின் ஆரூடம் என்கின்றார்கள், ஆனால் இது சரியானதென்று தோற்றவில்லை.

கதலிமலடி கதலிவந்தியா என்றால் ஒரு ஸ்திரீ ஒரேதரம் பிரசவித்துப் பின்னால் பிரசவிக்காமல் இருத்தல்.

காகமலடி, காகவந்தியா என்றால் ஒரு ஸ்திரீ குழந்தைகளைப் பெற்றும் அக்குழந்தைகள் இறந்து விடுவதினாலும், அல்லது வேறுவிதத்தால் அக்குழந்தைகள் தன்னை விட்டுவிட்டுப் போய் விடுவதாலும் குழந்தைகள் இல்லாமல் இருப்பது.

காலச்சக்கிர தானம் என்பது சனிக் கிரகச சக்கிரம் தானம் செய்தல்.

கான வித்தை என்பது (இராகம்) சங்கீத வித்தை. கானம் என்றால் இசைப் பாட்டு.

கிரகசங்கைஎன்பது பிசாசு பாதை, காற்று பிடிப்பதால் உபத்திரவம்.

கீர்வானபாஷை என்பது சமஸ்கிருத பாஷை.

சகோதரப்பிராதா என்பது உடன் பிறந்த சகோதரன்.

சங்காதோஷம் என்பது பேய், பிசாசு முதலிய காற்று தோஷம்.

தாந்திரிகன் என்பது கலைவல்லோன், நூல் வல்லோன்.

தாந்திரீக ஜுரம் என்பது ஜன்னி சம்பந்தமான ஜுரம்.

நிதனம் என்பது எட்டாமிடம்.

நைதனதார திசை என்பது ஏழாவது திசை.

பரமமைத்திரதிசை என்பது ஒன்பதாவது திசையாகும்.

பிதாமகி என்பது தகப்பனைப் பெற்ற பாட்டி, பிதுர்வழி பாட்டி.

பிதாமகன் என்பது தகப்பனைப்பெற்றபாட்டன், பிதுர்வழிபாட்டன்.

பிதுருவ்வியன் என்பது சிறிய தகப்பன்.

பிரத்தியத்தார திசை என்பது ஜெனன காலத்திய திசையிலிருந்து எண்ண ஐந்தாவது திசையாகும், அதாவது ஐந்தாந்திசை.

பிர பிதா மகன் என்பது தகப்பனுக்குப் பிதுர்ப் பாட்டன்.

பிருஹத்பீஜம் என்பது பெரியவிரை, இது வாய்வு நோயால் உண்டாவது.

பிராதா என்பது சகோதரன்.

பின்ன சகோதரன் என்பது மாற்றுந்தாயின் பிள்ளை.
பின்ன சகோதரி என்பது மாற்றுந்தாயின் புத்திரி.
புத்திர ஸமஸ்கார மில்லாதவன் என்பது புத்திரனால் தனக்கு தகன கிரியைகள் நடைபெறுதவன்.

பேத சகோதரன் என்பது மாற்றுந்தாயின் பிள்ளை, மாற்றுந் தாய்க்குப் பிறந்த சகோதரன்.
பேத சகோதரி என்பது மாற்றுந்தாயின் புத்திரி.
பேதமாதா என்பது மாற்றுந்தாய்.

மத்திம அற்பாயுள்:—என்பது மத்திய ஆயுளில் அற்பாயுள் என்பதாம். ஆயுள் அற்பாயுள், மத்திமாயுள், பூர்ணுயுள் என்று மூன்று வகைப்படும். இந்த ஒவ்வொரு ஆயுளிலும் அற்பம், மத்திமம், பூர்ணம் என்று மூன்று விதம் உண்டு. அதாவது அற்பத்தில் அற்பம், அற்பத்தில் மத்திமம், அற்பத்தில் பூர்ணம், மத்திமத்தில் அற்பம், மத்திமத்தில் மத்திமம், மத்திமத்தில் பூர்ணம், பூர்ணத்தில் அற்பம், பூர்ணத்தில் மத்திமம், பூர்ணத்தில் பூர்ணம் என்று ஆகும்.

மாதாமகன் என்பது தாயைப்பெற்ற பாட்டன், தாய்வழிப்பாட்டன்.
மாதாமகி என்பது தாயைப்பெற்றப் பாட்டி, தாய்வழி பாட்டி.
மாதுலன் என்பது அம்மான்.
மிருதபுத்ராம்சம் என்பது புத்திரநாசத்தையுண்டாக்கும் அம்சம்.
மிருதாவஸ்தை என்பது மாணுவஸ்தை.
மைத்திரதிசை என்பது எட்டாவது திசை.
யமளாம்சம் என்பது இரட்டை யம்சங்களாகிய 2, 4, 6, 8-வது நவாம்சங்கள்.

ரேகாயோகம் என்பது தரித்திரயோகம்.
வாரஸ்திரீ என்பது போகமாது, வைப்பாட்டி,தேவடியாள்,வேசி.
விபத்தாரதிசை என்பது மூன்றுவது திசை.
ஜலாம்சம் என்பது கடக, கன்னி, மகர, மீன நவாம்சங்கள்.
ஜன்மதாரதிசை என்பது ஜாதகன் ஜனித்த நக்ஷத்திர திசை.
ஜாரன் என்பது சோரன், திருடன்.
ஸம்பத்தாரதிசை என்பது இரண்டாந்திசை.
ஸாதகத்தாரதிசை என்பது ஆறுவது திசை.
க்ஷேமதார திசை என்பது நான்காந்திசை.

யோக விளக்கம்.

(இப்புத்தகத்தில் உபயோகப்படுத்தியுள்ள யோகங்களின் விவரம்.)

அமலாயோகம்– ரிஷப	லக்கினத்தில்	125-வது	அயிட்டம் பார்க்கவும்.
இந்திர யோகம்–கன்னியா	,,	102-	,,
கர்த்தரி யோகம்–கடக	,,	87	,,
கர்த்தரி யோகம்–சிம்மம்	,,	169	,,
காஹன யோகம்–கடக	,,	51	,,
கேந்திராதி யோகம்–கடக	,,	50- 154-வது	,,
கேந்திராதி யோகம் துலா	,,	42	,,
	,,	88	,,
	,,	85	,,

கேசரி யோகம்–சந்திர கேந்திரத்தில் குரு இருத்தல்.

சாமர யோகம்–கடக லக்கினத்தில் 49-வது அயிட்டம் பார்க்கவும்.

சாமரயோகம் என்பது ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனிருப்பதால் எற்படுகிற ஒருவித யோகம்.

சாம்ராஜய கேசரி யோகம் என்பது சந்திரனுக்கு ஒன்றில் பத்தில் குரு இருப்பது.

சாம்ராஜ்ய சகடயோகம் என்பது பத்தாமாதிபதி ஒன்பதிலிருந்து சந்திரன் பத்தாமாதிபதிக்கு ஆறில்இருந்தால் ஏற்படும் ஒருவித யோகம்.

சுப யோகம்–கடக	லக்கினத்தில்	121-வது	அயிட்டம் பார்க்கவும்.
பண்டிதயோகம்-ரிஷப	,,	229	,,

மங்களயோகம் என்பது சந்திர கேந்திரத்தில் செவ்வாயிருப்பது.

மதங்க யோகம் என்பது குரு தன் உச்சராசியிலாவது, மேஷத்திலாவது சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஏற்படுகிற ஒருவித யோகம்.

மாளவி யோகம்–கடக	லக்கினத்தில்	154–	அயிட்டம் பார்க்கவும்.
லக்கினுதி யோகம் ரிஷப	,,	221	,,

லக்கினுதி மாலிகா யோகம் என்பது லக்கினம் முதலாக கிரகங்கள் வரிசையா யிருப்பதால் ஏற்படும் மாலிகா யோகம்.

லட்சுமியோகம்–ரிஷப	லக்கினத்தில்	224-வது	அயிட்டம் பார்க்கவும்.
ஸ்ரீ சந்திரிகா யோகம்	,,	222	,,
ஸ்ரீ யோகம் சிம்ம	,,	78	,,

அத்தியாயம்-14

விளக்கமும், குறிப்புகளும், திருத்தமும் முதலியன.

☞ (1) இப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு அயிட்டத்தைப் படித்தவுடனே அந்த அயிட்டம் விஷயமாக இங்கு ஏதாகிலும் விவரம் சொல்லி இருக்கிறதா என்று பார்த்து இதில் சொல்லிய விவரத்தையுங் கவனித்து அந்த அயிட்டத்திலுள்ள விஷயத்தை அறிய வேண்டும். இது அவசியமானது.

(2) நாடிக் கிரந்தங்களில் உபயோகப் படுத்தப்பட்டுள்ள மூலக் கிரந்தங்களின் விதிகள் அந்த மூலக்கிரந்தங்களில் கொடுக்கப்பட்ட பிரகாரமே நாடிக்கிரந்தங்களில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன. சந்தற்பத்திற்குத் தகுந்தாப்போல ஒரு ஜாதகத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு அந்த ஜாதகத்தின் பலாபலன்களை நிர்ணயஞ் செய்வதற்காக இவ்விதிகள் பூராவாகவாவது அல்லது அந்த ஜாதகத்திற்குப் பொருந்தும்படியாய் தேவையான வரையிலுமாவது உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன. அல்லது யாதொரு ஜாதகத்தையும் உதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் விதிகள் மாத்திரம் நாடிக்கிரந்தங்களில் பலாபலன்கள் சொல்லுவதற்குக் காரணங்களாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட விதிகளைத் திரட்டி இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஜாதகத்தைக் கொடுத்து அந்த ஜாதகத்திற்காக உபயோகப் படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கு மாத்திரம் இந்த "விளக்கத்தில்" இராசிச் சக்கிரத்தில் கிரகம் இருக்கும் நிலையை "இங்கு குரு மீனத்தில் இருக்கின்றார்" "இங்கு சனி விருச்சிகத்தில் இருக்கின்றார்" என்று விபரமாகச்சொல்லி இருக்கிறது. உதாரண ஜாதகம் கொடுக்காமல் காரணங்களாகப் பொதுவாகக் கொடுக்கப்பட்ட விதிகள் ஏற்கெனவே துல்லிபமானவை. அவைகள் மிகவும் உபயோகமுள்ளவை. ஆயினும் உதாரண ஜாதகத்தில் கொடுத்துள்ளதைப் போலவே இராசிச்சக்கிரத்தின் கிரக நிலையும் நாம் எடுத்து ஆராய்ச்சி செய்கின்ற ஜாதகத்திலுள்ளதைப்போலவே அமையுமானால் மேற்சொல்லியபடி பொதுவாகக் கொடுக்கப்பட்டுள்ள விதிகளில் சொல்லிய பலாபலன்கள் இன்னும் துல்லிபமானவைகளாகவிருக்கும். இந்தக் காரணத்தை முன்னிட்டே அந்தந்த அயிட்டத்திற்கு இந்த "விளக்கத்தில்" "இங்கு குரு மீனத்தில் இருக்கின்றார்," "இங்கு சனி விருச்சிகத்தில் இருக்கின்றார்" "இங்கு குருவுஞ் சுக்கிர

னும் ரிஷபத்திலிருக்கின்றுர்கள்'' என்று விளக்கிக்காட்டி யிருக்கின்றது. உதாரணமாக மேஷலக்கின ஜாதகத்தில் 51-வது அயிட்டத்தில் ''ஒன்பதாம் பாவாதிபதி சனி செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப்பலன் ஒரு உதாரண ஜாதகத்தில் சொல்லி இருக்கின்றது. அந்த உதாரண ஜாதகத்தில் ஒன்பதாம் பாவாதிபதி மீனத்திலிருக்கின்றுர். ஆகையால் நாம் எடுத்துக்கொண்டு பரிசீலனை அல்லது ஆராய்ச்சி செய்யும் மேஷலக்கின ஜாதகத்தில்கூட ஒன்பதாம் பாவாதிபதி மீனத்திலிருந்தால் இந்த 51-வது அயிட்டத்தில் சொல்லியபலன் இன்னம் துல்லியமாகவிருக்கும் என்று அறியவும்.

(3) ''மேஷராசி'' அல்லது ''மேஷத்தில், ''ரிஷபராசி'' அல்லது ''ரிஷபத்தில்'' என்று இருந்தால் இராசிச்சக்கிரத்தில் மேஷத்தில், ரிஷபத்தில் என்று அறியவும். ''மேஷாம்சம்'' ''ரிஷபாம்சம்'' என்று இருந்தால் நவாம்சச்சக்கிரத்தில் மேஷம் ரிஷபம் என்று அறியவும் இவ்விதமாகவே மற்ற பத்துராசிகளுக்கும் அறியவும்,

மேஷ லக்கினம் ஜாதகம்:—(பக்கம் 1—முதல் 36 வரையிலும்)

அயிட்டம் நெம்பர்	விவரம்.
(2)	இங்கு யுக்மாம்சம் என்பது மிதுன நவாம்சம். யுக்மம் என்றுல் இரட்டை என்றும் அர்த்தமுண்டு. பூர்வபாகம் உத்திரபாகம் என்பவை ஒரு நாடி அம்சத்தை இரண்டு சமபாகமாகப் பங்கிடவருகின்றமுதல் பாகத்திற்குபூர்வ பாகம் அல்லது பூர்வாம்சம் என்றும், இரண்டாவது பாகத்திற்கு உத்திரபாகம்அல்லது உத்திராம்சம் என்றும் பெயர்.
(14)	இரண்டாயிரத்திற்கு அதிபதி என்பது மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் யோகம் என்பதாம்.
(44)	இங்கு சனி வர்கோத்தமாம்சம் என்பது சனி விருச்சிக ராசியில் வர்கோத்தமாம்சத்தி லிருக்கின்றுர்.
(51)	இங்கு ஒன்பதாம்பாவாதிபதி மீனத்திலிருக்கின்றுர்.
(52)	ஷை
(53)	52-வதும் 53-வதும் ஒரே அயிட்டமாகச் சேர்த்துவாசிக்கவும். ஆகையால் 53-ல் உள்ள ஜென்மலக்கினம் மேஷம் (அபலாப்சய்) ஆகி என்பதை எடுத்துவிடவும்.

அயிட்டம் நெம்பர். } விவரம்.

(54) இங்கு துரப்பகாவஸ்தை என்பது நாடி அம்சங்களில் ஒன்ருகிய துர்பகாம்சத்தை அடைந்திருத்தல். இந்தப்பலன் கரிகாம்சத்திற்கும், துர்ப்பகாம்சத்திற்கும் பொருந்தும்.

(55) இங்கு "துலாம்சக்கிரகம்" என்பது துலா நவாம்சத்தி லுள்ள கிரகம்.

(63) இங்கு ஒன்பதாம் பாவாதிபதி இராசியிலும் கும்பராசியி லேயே இருக்கின்ருர்.

(64) இங்கு இரண்டாம்பாவாதிபதி இராசியிலும் துலாராசியி லிருக்கின்ருர்.

(67) லிங்கதானம் என்பது சிவலிங்கதானம்.

(70) இங்கு இரண்டு தாய்கள் என்பது ஜாதகனைப் பிரசவித்த தாய் ஒருவள், ஜாதகனை வளர்த்தத்தாய் ஒருவள் ஆக இரண்டு தாய்கள்.

(72) பாவச்சக்கிர ரீதியாய் ஒன்பதாம் பாவாதிபதி குருவாகவேயாகிலும் அல்லது வேறு கிரகமாகவாகிலும் வாக்கூடும். குருவே ஒன்பதாம் பாவாதிபதியாகப் பாவச்சக்கிரத்தில் நேரிட்டால் குரு கூட எந்த கிரகமும் கூடி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒன்பதாம் பாவாதிபதி வேறு கிரகமாகப் பாவச்சக்கிரத்தில் நேரிட்டால் அந்த ஒன்பதாம் பாவாதிபதி குருவுடன் குருவுக்கு உச்சஸ்தானமாகிய கடகத்தில் கூடி இருக்கவேண்டும் என்று அர்த்தம். இந்தப் புத்தகத்தில் பலாபலன்களைப் பாவச்சக்கிர ரீதியாய்க் கிரகங்களின் நிலையைக் கவனித்துச் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆகையால் இந்தப் புத்தகத்தில் இங்கு நேரிட்டதைப் போலவே அனேக விடங்களில் பாவாதிபதியுடன் சேர்ந்திருத்தல் என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனித்து வாசிக்கவும்.

74 இங்கு குரு கடகராசியில் புஷ்காராம்சத்தி லிருக்கின்ருர்.

79 இங்கு "பாபர்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அசலிலும் "பாபர்" என்றே சொல்லப்பட்டிருக்கின்றது.

118 இங்கு குரு கடகராசியிலிருக்கின்ருர்.

அயிட்டம் நெம்பர்	விவரம்.
119	இங்கு யுக்மாம்சம் என்பது மிதுன நவாம்சம் ஆகும்.
125	இங்கு குரு கடகராசியி லிருக்கின்றார்.
132	இங்கு மூன்றும் பாவாதிபதி சிம்ம ராசியிலிருக்கின்றார்.
133	இங்கு ஸ்திரராசி என்ற ஸ்திரராசி விருச்சிக ராசியாகும்.
134	"சனியால் பார்க்கப்பட்ட சூரியன் பிரபாம்சத்தில் கும்பாம் சத்தில் இருந்து" என்பதற்கு பதிலாக "சூரியன் பிரபாம் சத்திலிருந்து கும்பாம்சத்திலுள்ள சனியாலும், குருவா லும் பார்க்கப்பட்டால்" என்று வாசிக்கவும் "அந்த கும் பாம்சத்தில் ராகு இருந்து பாபக்கிரகங்களால் பார்க்கப் பட்டால்" என்பதற்குப் பதிலாக "ராகு சூரியனுடன் இருந்து சூரியன் பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால்" என்று வாசிக்கவும்.
142	"குரு தன்னுச்ச ராசியிலாவது மேஷாம்சத்திலாவது இருந் தாலும்" என்பதற்குப் பதிலாக "குரு தன்னுச்ச ராசியிலா வது மேஷத்திலாவது" என்று வாசிக்கவும்.
156	இங்கு சந்திரன் மேஷராசியில் உச்சாம்சமாகிய ரிஷப நவாம்சத்திலிருக்கின்றார்.
168	"சந்திர திசையின் முடிவின் ...... நிச்சயமாய் மரணமடை வாள்." என்பதை எடுத்து விடவும்.
170	"புத்திரபாவத்தில்" என்பதை எடுத்து விடவும். "சாந்தி யந்திரதானம்" என்பதற்குப்பதிலாகச் "சாந்தியாகச் சூரி யயந்திர தானம்" என்று வாசிக்கவும்.
177	"ஆயிரத்துக்கு அதிகமான பணமுள்ளவன்" என்பதற்கு பதிலாக "ஆயிரத்துக்கு அதிகமாகச் சம்பாதிப்பவன்" என்று வாசிக்கவும்.
197	"துருவநாடி" என்பதை "துருவாம்சம்" என்று வாசிக்க வும்.

ரிஷப லக்கினம் ஜாதகம் (பக்கம் 37 முதல் 82-வரையிலும்.),

2	"எழு அங்கங்கள்" என்பது எழுவித இராஜ சின்னங்கள் அல்லது அடையாளங்கள்,

அயிட்டம் நெம்பர். } விவரம்.

3 இங்கு சனி ரிஷபராசியிலிருக்கின்றார்.

6 இங்கு சந்திரன் குருவுடன் மகரத்திலிருக்கின்றார்.

7 " "

10 இங்கு குரு மூன்றுமிடத்திலிருக்கின்றார்.

16, 17 இங்கு 17-வது அயிட்டத்தை எடுத்துவிட்டு 16-வது அயிட்டத்தில் "மூன்றுமதிபன் பாபருடன் கூடினால்" என்பதற்குப் பதிலாக "மூன்றுமதிபன் பாபருடன் கூடியிருந்து மூன்றில் சூரியனிருந்தால்" என்று வாசிக்கவும்.

25 இங்கு சனிராசிச் சக்கிரத்தில் விருச்சிகத்தி லிருக்கின்றார்.

30 இங்கு சிற்றப்பன்மார் என்பது ஜாதகனுக்குச் சிற்றப்பன் மார் என்று அர்த்தம்.

32 இங்கு "சனி குஜனுடன்" என்பதற்குப் பதிலாகச் "சனி சுக்கிர குஜனுடன்" என்று வாசிக்கவும். "பிதுர் ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தை" என்பதற்குப்பதிலாக "புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடத்தை" என்று வாசிக்கவும்.

33 "ஒன்பதாமிடத்தை" என்பதற்குப் பதிலாக "ஐந்தாமிடத்தை" என்று வாசிக்கவும்.

48 "அரிஷ்டம், ஜலகண்டம்நேரும்" என்பதற்குப் பதிலாக "ஜலகண்டத்தால் அரிஷ்டம் நேரிடும்" என்று வாசிக்கவும்.

49, 50, 51 இங்கு சந்திரன் விருச்சிகத்தில் நிர்மலாம்சத்தி லிருக்கின்றார்.

57, 58 இங்கு சந்திரன் மிதுனராசியில் துலாம்சத்திலிருக்கின்றார்.

61 இங்கு சனி ராசிச்சக்கிரத்தில் மேஷத்திலிருக்கின்றார்.

66 இங்கு சூரியன் இராசிச்சக்கிரத்தில் மிதுனத்தி லிருக்கின்றார்.

67 இங்கு ஏழாம்பாவாதிபன் இராசிச்சக்கிரத்தில் மேஷத்திலிருக்கின்றார்.

73 இங்கு ஐந்தாம்பாவாதிபதி இராசிச்சக்கிரத்தில் மிதுனத்தில் சுக்கிரனுட னிருக்கின்றார்.

75 இங்கு சூரியன் இராசிச் சக்கிரத்தில் மிதுனத்திலிருக்கின்றார்.

அயிட்டம் நெம்பர் } விவரம்.

76 இங்கு சூரியனும் சந்திரனும் மிதுனத்திலிருக்கின்றார்கள்.

82 இங்கு நான்காம்பாவாதிபதி கும்பத்திலிருக்கின்றார்.

91 இங்கு "மிதுனம்சத்தில்" என்பதற்குப் பதிலாக "கன்னியாம்சத்தில்" என்று வாசிக்கவும்.

94 இங்கு ஐந்தாம்பாவாதிபன் மீனத்திலிருக்கின்றார்.

95 இங்கு சந்திரன் சிம்மராசியிலும் சனி விருச்சிக ராசியிலுமிருக்கின்றார்கள்.

102 இங்கு பத்தாம் பாவாதிபன் விருச்சிகத்திலிருக்கின்றார்.

106—125 நாடியாம்சம் அசல் கிரந்தத்தில் கொடுக்கப்படாமல் இருப்பதால் இங்கு டாஷ் என்ற கோடு போடப்பட்டிருக்கின்றது.

108 இங்கு நான்காம் பாவாதிபதியும் ராகுவும் மீனத்திலிருக்கின்றார்கள்.

145 "லக்கின தன பாவாதிபதிகள் உச்சராசியிலிருக்க" என்பதற்குப்பதிலாக "லக்கினபாவாதிபதி தனஸ்தானத்தில் அல்லது தன் உச்சராசியிலிருக்க" என்று வாசிக்கவும்.

148 பாவச்சக்கிர ரீதியாய் எட்டாம் பாவாதிபதி குருவாக வரலாம் அல்லது வேறு கிரகமாகவும் வரலாம். ஆகையால் எட்டாம் பாவாதிபதியும் குருவும் வெவ்வேறாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

170 இங்கு குரு மூன்றாமிடத்திலிருக்கின்றார்.

194 இங்கு சந்திரன் விருச்சிகத்திலிருக்கின்றார்.

199 "ஸ்திராவஸ்தை" என்பது இங்கு "ஸ்திர ராசியிலேயே இருத்தல்" என்று அர்த்தம்.

202 "சந்திரதிசை சனி புக்தியில் ஜாதகனுடைய பிதா மரிப்பான்" என்பதை எடுத்து விடவும்.

204 இங்கு செவ்வாய் கன்னியா ராசியிலிருக்கின்றார்.

205 இங்கு சந்திரன் மகரத்திலிருக்கின்றார்.

212, 213, 214 இங்கு சந்திரன் மகரத்தி லிருக்கின்றார்.

238 "ஒரு சகோதரியுடன் கூடினவள்" என்பதற்குப் பதிலாக "ஒரு புத்திரியுடன் கூடினவள்" என்றுவாசிக்கவும். "பிறகு

அயிட்டம் நெம்பர் | விவரம்.

சுக்கிர தெசை" என்பதில் "பிறகு" என்பதை எடுத்து விடவும். "தன்னுடைய சுக்கிரதெசை கேது புத்தியில் இருபத்தாறுவது வயதில் குறையுண்டாகும். "என்பதற்குப் பதிலாகத்" தன்னுடைய சுக்கிரதெசை கேது புக்தியில் இருபத்தைந்தாவது வயதில்" என்று வாசிக்கவும். இங்கு சந்திரன் கேட்டை 4-ல் இருக்கின்றார். சுக்கிர தெசையில் கேது புக்தி வருகிற காலத்தில் முதல் மனைவி மரிப்பாள்.

மிதுன லக்கின ஜாதகம் (பக்கம் 83 முதல் 126 வரையிலும்.)

10 இங்கு சூரியன் மிதுனத்திலும் குஜன் கடகத்திலுமிருக்கின்றார்.

12 "ஏழாபதிபன் நீச்சனாய்" என்பதற்குப் பதிலாக "மாதுரு ஆரூடாதிபதி நின்ற ராசிநாதன் நீச்சனாய்" என்று வாசிக்கவும்.

29 இங்கு எழாமதிபனாகிய குரு சுயக்ஷேத்திரத்தில் சுய நவாம்சையில் இருக்கின்றார்.

36 "இங்கு குரு ஐந்தாம்பாவத்தில் மிதுனம்சத்தில் இருந்து குஜனால் பார்க்கப்படுகிறார்.

38 இங்கு "குரு துலாம்சத்திலிருந்து" என்பதற்குப் பதிலாக "குரு துலாராசியில் சுராம்சத்திலிருந்து" என்று வாசிக்கவும்.

40 இங்கு பத்தாம்பாவாதிபன் துலாத்திலிருக்கின்றார்.

50 இங்கு "தன்னுச்சராசி நீங்கலாக" என்பதற்குப் பதிலாக "தன்னுச்சராசியும் சுராசியும் நீங்கலாக" என்று வாசிக்கவும்.

60 "இரண்டு ஜாதிஸ்திரீ" என்பது "துவி ஜாதி" என்ற பிராமண ஜாதி ஸ்திரீ.

61 இதில் "ஜென்மலக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி" என்பதை எடுத்து விட்டு மீதியை 60-வது அயிட்டத்துடன் சேர்த்து வாசிக்கவும். 60-வது, 61-வது அயிட்டங்களை ஒரே அயிட்டமாகப் பாவிக்கவும்.

அயிட்டம் } விவரம்.
நெம்பர். }

63 இங்கு "ஜென்மலக்கினம் மிதுனம் (கமலாம்சம்) ஆகி" என்பதை எடுத்துவிட்டு மீதியை 62-வது அயிட்டத்துடன் சேர்த்து வாசிக்கவும். 62-வது 63-வது அயிட்டங்களை ஒரே அயிட்டமாகப் பாவிக்கவும்.

75 "இங்கு சுக்கிரதெசையில் ராகு புக்தியில்" என்பதை எடுத்துவிடவும்.

101 சாம்ராஜ்ய சகடயோகம் என்பதைப்பற்றி இதில் சேர்த்துள்ளயோக விளக்கம் என்பதைப் பார்க்கவும்.

113 "வழி வழியாக யோகபங்கம்" என்பதற்குப் பதிலாக "வழி வழியாகப் பின் வயதில் யோகபங்கம்" என்று வாசிக்கவும்.

114 "கதாம்சாவஸ்தையில்" என்பது கதாம்சத்தி லிருப்பது என்ற அர்த்தம், இப்புத்தகத்தில் அவஸ்தை என்றுஅனேக இடங்களில் உபயோகப்படுத்தியிருக்கிறது. இங்கு அவஸ்தை என்றால் "அதில் இருத்தல்" என்று அர்த்தங் கொள்ளவும்.

150 "இங்கு ஜாதகனுக்கு ஜென்மம்" என்பது "ஜாதகனுக்கு மறு ஜென்மம்" ஆகும்.

208 "சாதன வருஷத்துக்குப் பிறகு" என்பதைச் "சாயன வருஷத்திற்குப் பிறகு என்று வாசிக்கவும். சாயனவருஷத்திற்குப் பிறகு என்றால் பதினேழாவது வயதிற்குப் பிறகு என்று அர்த்தம்.

கடக லக்கின ஜாதகம் (பக்கம் 127 முதல் 168 வரையிலும்.)

2 இங்கு சூரியன் புதனுடன் மிதுனத்திலிருக்கின்றார்.

16 இங்கு சந்திரன் கன்னியிலிருக்கின்றார்.

23 இங்கு "அந்தியகாலத்தில் பிறக்கும் இவன் மகனே சிசுவாய் இருப்பான்" என்பதற்குப் பதிலாகத் "தனக்கு அந்திய காலத்தில் பிறக்கும் தன் மகன் ஜாதகன் மரணகாலத்தில் வேறு கிராமத்தில் குழந்தையாய் இருந்து வசிப்பான்" என்று வாசிக்கவும்.

அயிட்டம் } விவரம்.
நெம்பர். }

24 இங்கு சந்திரன் விருச்சிகத்திலிருக்கின்றார்.

25 இங்கு சூரியன் விருச்சிகத்தி லிருக்கின்றார்.

30 இங்கு சூரியன் விருச்கிகத்திலும் கேது தனுசிலும் இருக் கின்றார்கள்.

33 இங்கு சூரியன் விருச்சிகத்தி லிருக்கின்றார்.

45 "நிதனம்" என்றால் எட்டாம் பாவம்.

48 இங்கு பாவஸ்புட ரீதியாய் நாலாம் பாவாதிபன் சுக்கிரனாக வாகவேவரலாம் அல்லது வேறு கிரகமாகவும் வரலாம். ஆகையால் சுக்கிரனுடன் கூடினால் என்று சொல்லி இருக் கிறது.

57 இங்கு குரு மகரத்திலிருக்கின்றார்.

67 இங்கு சுக்கிரன் கடகத்திலிருக்கின்றார்.

107 வந்தியாம்சம் என்பது ஷஷ்டியம்சத்திலுள்ள ஒற்றை ராசி யில் 42-வது இரட்டை ராசியில் 19-வது அம்சமாகிய "வம்சக்ஷயாம்சம்" என்பது.

135 இங்கு ஸூதாஷஷ்டி யம்சத்தில் குரு இருந்து சந்திர சுக் கிரனுடன் கூடி இருக்கவேண்டும்.

138 இதில் "புததிரிம்சாம்சத்தில் ஜெனித்தவன்" என்பதை எடுத்து விடவும். "ரூபலக்ஷணம் முதல் சுகத்தை அடைகி றான் என்பது வரையிலுமுள்ளதை எடுத்து விடவும்.

147 இங்கு எட்டாம் பாவாதிபன் சிம்மத்திலிருக்கின்றார்.

150 "சனி விருச்சிகாசியிலிருக்கும் சமயம்" என்பதற்குப் பதி லாக "சனி விருச்சிக ராசிக்கு வருஞ் சமயம்" என்று வா சிக்கவும்.

164 சாதனாதி தெசை என்பது ஆறாவது தெசையாகும்.

சிம்ம லக்கின ஜாதகம் (பக்கம் 169 முதல் 212 வரையிலும்.)

5 இரண்டாயிரம் தன முடையவனாவான் என்பது இரண்டா யிரம் ரூபாய் சம்பாதனை யுடையவன்.

7 இங்கு ராகு சிம்மத்தில் கன்னியாம்சத்திலிருக்கின்றார்.

9 இங்கு குருவும் ராகுவும் சிம்மத்திலிருக்கின்றார்கள்.

அயிட்டம்
நெம்பர்.

விவரம்.

15 இங்கு சந்திரன் துலாத்திலிருக்கின்றூர்.

36 இங்கு சந்திரன் தனுசில் இருக்கின்றூர். மேஷத்திரிகோணத்திலாவது என்பது மேஷத் திரிகோண மாதத்திலாவது என்று வாசிக்கவும். அதாவது மேஷத்திற்குத் திரிகோண ராசிகளாகிய மேஷம், சிம்மம். தனுசு இவைகளுக்குரிய மாதங்களாகிய சித்திரை, ஆவணி, மார்கழிமாதங்களாகும்.

62 இங்கு முதலில் சொல்லியபலன் பூர்வாம்ச பலன் என்று யூகிக்கவும். பின்னல் சொல்லியது உத்தராம்சபலன்.

64 இங்கு (காளாம்சம் அதாவது லக்கினஸ்புடம் பாகை 140-24-கலை முதல் பாகை 140-36 கலை வரையிலும்) என்பதற்குப் பதிலாக (மாயாம்சம்) என்று வாசிக்கவும் இங்கு குரு காளாம்சத்திலிருக்கின்றூர்.

65 (காளாம்சம்) என்பதற்குப் பதிலாக (மாயாம்சம்) என்று வாசிக்கவும். சனியுடன் என்பதற்குப் பதிலாக சனிஎன்று வாசிக்கவும். "செவ்வாய் மூலம்" என்றூல் "செவ்வாயால்" என்று அர்த்தம்.

66 (காளாம்சம்) என்பதற்குப் பதிலாக (மாயாம்சம்) என்று வாசிக்கவும்.

85 இங்கு "லக்கின பாவாதிபதி செவ்வாயுடன் கூடியிருந்து எட்டாம் பாவாதிபதி தனபாவத்திலிருந்து குருவுடன் கூடியிருந்தால்" என்பதற்குப் பதிலாக "லக்கினுதிபதி குருவுடன் கூடியிருந்து எட்டாம் பாவாதிபதி இரண்டிலிருந்தால்" என்று வாசிக்கவும். இங்கு பாவச்சக்கிர ரீதியாய் எட்டாம் பாவாதிபதி குருவாகவாகிலும் வேறு கிரகமாக வாகிலும் வரலாம்.

88 இங்கு சூரியனும் சனியும் இரண்டாம் பாவத்திலிருக்கின்றூர்கள். "தண்டனையுடையவன்" என்பதற்குப் பதிலாக "தண்டனை செய்பவன்" என்று வாசிக்கவும்.

166 "குரு செவ்வாய் வானவர் சூரியன்" என்பதற்குப்பதிலாக "குருவானவர் செவ்வாய் சூரியன்" என்று வாசிக்கவும்.

183 எடுத்து விடவும்.

அயிட்டம் நெம்பர். விவரம்.

195 "மூன்றும் பாகத்தில்" என்பதற்குப் பதிலாக "மூன்றுந் தெசையில் மூன்றும் பாகத்தில் என்று வாசிக்கவும்.

199 இங்கு "ஸரஸ்வதாம்சத்தில் பதினோராம் பாவாதி" என்பதற்குப் பதிலாக "ஸரஸ்வதாம்சத்தில் இருந்து, பதினோராம் பாவாதி" என்று வாசிக்கவும்.

கன்னியா லக்கின ஜாதகம் (பக்கம் 212 முதல் 254 வரையிலும்.)

14 "சகோதரிகள் மூவர்" என்பதற்குப் பதிலாகச் "சகோதரிகள் இருவர் சகோதரர்கள் மூவர்" என்று வாசிக்கவும். ஸுஷோனாம்சத்தி விருந்தால்" என்பதற்குப்பதிலாக "ஸுஷோராம் சத்திலிருந்தால் என்று வாசிக்கவும்.

15 கானவித்தை என்பது சங்கீத வித்தை.

18 "குரு தெசையில் ராகுபுத்தியில் ...... சிலறும் சொல்லுகிறூர்கள்" என்பதை எடுத்துவிடவும்.

19 "ஒன்பதுக்குடையவன்" என்பதிற்குப் பதிலாக "ஒன்பதுக்கு ஆரோடாதிபன்" என்று வாசிக்கவும். மத்திம அல்பாயுள் என்பது மத்திமவயதில் அற்பாயுள் ஆகும். இப்புத்தகத்தில் கொடுத்துள்ள கடினமான பதங்களின் விளக்கம் என்பதைப் பார்க்கவும். "ராகுதெசைசனி புக்தியில் ஜாதகனுடைய தகப்பன் நிச்சயமாய் மரிப்பான்" என்பதை எடுத்து விடவும்.

23 இங்கு "ஜென்மலக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி" என்பதை எடுத்து விட்டு, 22-வது, 23-வது அயிட்டங்களை ஒன்றுய்ச் சேர்த்து ஒரே அயிட்டமாக வாசிக்கவும். "நீண்டகாலாயிருக்கிற" என்பதை "நீண்ட காலமாயிருக்கிற" என்று வாசிக்கவும். "குஜபாகத்தில், செவ்வாயின் அம்சத்தில்" என்று அர்த்தம்.

30 இங்கு "ஜென்மலக்கினம் கன்னி (காந்தாம்சம்) ஆகி" என்பதை எடுத்துவிட்டு 29-வது, 30-வது அயிட்டங்களை ஒன்றுய்ச் சேர்த்து ஒரே அயிட்டமாக வாசிக்கவும்.

38 "பத்தினியுடனும், தாயுடனும் புத்திரியுடனும் புத்திரனுடனும் சகோதர" என்பதிற்குப் பதிலாக "மாற்றுந்தாய் சகோதர என்று வாசிக்கவும்.

அயிட்டம் நெம்பர். } விவரம்.

58 "சுபாம்சத்தில் குருவும் சந்திரனும் கூடி யிருந்தாலும் அல்லது ஒருவரை ஒருவர்" என்பதற்குப் பதிலாகச் "சுபாம்சத்தில் செவ்வாய் இருந்து அவருடன் குருவும் சந்திரனும் கூடி யிருந்தாலும் அல்லது அவரைப்" என்று வாசிக்கவும்.

70 "இருந்தால் பாட்டன்" என்பதை "இருந்தால் தாய்வழி பாட்டன்" என்று வாசிக்கவும். பன்னிரண்டாம் பாவம் தாய்வழி பாட்டன் ஸ்தானம் என்று அறியவும்.

75 "விரையபாவத்திலிருந்தாலும் ஆறும் பாவத்திலிருந்தாலும்" என்பதற்குப் பதிலாக "விரையபாவத்திலிருந்து ஆறும் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் அல்லது பதினோராம் பாவத்திலிருந்தால்" என்று வாசிக்கவும்.

116 சிறிய தகப்பன் ஸ்தானம் பதினோராம் பாவம் ஆகும். "ஜாதகனுடைய மனைவியின்" என்பதற்குப்பதிலாக "ஜாதகனுடைய தகப்பனுடைய மனைவியின்" என்று வாசிக்கவும். "அதாவது மாமனார்" என்பதை "அதாவது பாட்டனார் என்று வாசிக்கவும்.

133 "சகோதர ஸ்தானாதிபதி கேந்திர திரிகோணங்களிலிருக்க" என்பதற்கு பதிலாகச் "சகோதர ஸ்தானாதிபதியாகிய செவ்வாய் பதினொன்றிலும் கேந்திர திரிகோணங்களிலுமிருக்க" என்று வாசிக்கவும்.

184 காதாம்சாவஸ்தையில் இருந்தால் என்பது காதாம்சையில் இருத்தல் என்று அர்த்தம். காதாம்சம் என்பது ஒரு நாடி அம்சம்.

192 ராஜ்ய பூஜ்யாம்சம் என்பது இங்கு பத்தாவது ராசி அம்சமாகிய மிதுன அம்சமாகும்.

193 இங்கு குரு சிம்மத்திலிருக்கின்றார்.

துலாலக்கின ஜாதகம் (பக்கம் 255 முதல் 298 வரையிலும்.)

1 "சுக்கிரன் லக்கினத்திலிருக்க மேஷத்தில் செவ்வாய் சூரியன் இவர்கள் இருந்து பார்த்தால்" என்பதற்குப் பதிலாகச் "சுக்கிரன் மேஷத்திலிருந்து, செவ்வாய் இரண்டாமிடத்திலிருந்து சூரியனைப் பார்த்தல் என்று வாசிக்கவும்.

அயிட்டம் நெம்பர்.	விவரம்.
8	சர்ப்பராசி என்பது எட்டாம் ராசி, அதாவது பிதுர் காரகன் எட்டாம் பாவத்திலிருப்பது.
40	மிருத புத்ராம்சம் என்பது ஷஷ்டியம்சத்திலுள்ள வம்சக்ஷயாம்சம்.
41	இங்கு புதன் பத்தாம் பாவத்திலிருக்கின்றார்.
68	ஜாதகனுடைய அம்மான் ஸ்தானம் ஆறும் பாவம். அதற்குப் புத்திரஸ்தானம் என்பது லக்கினத்திலிருந்து ஆறும் பாவத்திற்கு ஐந்தாம் பாவமாகிய பத்தாம் பாவமாகும்.
98	இங்கு சுக்கிரன் லக்கினத்திலிருக்கின்றார்.
99	இங்கு குரு ரிஷபத்திலிருக்கின்றார்.
100	இங்கு சுக்கிரனும் புதனும் லக்கினத்திலிருக்கின்றார்கள்.
106	இங்கு குருவும் சூரியனும் கும்பத்திலிருக்கின்றார்கள். ஆறு சகோதரர்கள் என்பதை ஆறு சகோதரிகள் என்று வாசிக்கவும்.
137	"புதனும் பிதுர் காரகனான சூரியனும் கூடி" என்பதற்குப் பதிலாகப் "பிதுர் காரகனான சூரியன்" என்று வாசிக்கவும். "பின்சகோதரமுண்டு, ஜாதகனுடைய மாற்றாந்தாயின் பொருளுடனும் சகோதரன் மனைவியுடனும் கூடியவனாவான்" என்பதற்குப் பதிலாக "பின்ன சகோதரமுண்டு, ஜாதகனுடைய மாற்றாந்தாயின் பொருளுடனும் சகோதரன் சகோதரிகளுடனும் கூடியவனாவான்" என்று வாசிக்கவும்.
148	இங்கு சனி மகரத்திலிருக்கின்றார்.
152	இங்கு சந்திரன் தனக்கு நீச்சஸ்தானமாகிய விருச்சிகத்தில் ராகுவுடன் கூடி இருக்கும் போது சந்திரன் மகராம்சத்தில் இருக்கவேண்டும் என்று அர்த்தம்.
162	இங்கு சனி சிம்மத்திலிருக்கின்றார்.
168	இங்கு "சனி" என்பதற்கு பதிலாகக் "குரு என்று வாசிக்கவும். இங்கு குரு மேஷராசியில் மேஷாம்சத்தில் வர்க்கோத்தமாம்சத்தி லிருக்கின்றார்.

அயிட்டம் நெம்பர்.	விவரம்.
179	179-வது அயிட்டம் 178-வது அயிட்டத்தின் துடர்ச்சி ஆகையால் 178, 179-வது அயிட்டங்களை ஒன்றுய்ச் சேர்த்து வாசிக்கவும். 179-வது அயிட்டத்தில் "இந்தப் பலன்" என்று சொல்லியுள்ளது 178-வது அயிட்டத்தில் சொல்லியுள்ள பலன் ஆகும்.
180	இங்கு ஏழாம்பாவாதிபன் மிதுனத்திலிருக்கின்ருர்.
199	இங்கு சனி கன்னியிலிருக்கின்ருர்.

விருச்சிக லக்கின ஜாதகம் (பக்கம் 299 முதல் 338 வரையிலும்.)

3	"நாலாமதிபன் ஒன்பதில்" என்பதற்குப் பதிலாக "நாலாமதிபனுடன் கூடி" என்று வாசிக்கவும்.
5	இங்கு மூன்றுமதிபனும் குருவும் விருச்சிகத்தி லிருக்கின்ருர்கள்.
48	"அதற்கு பதினோராமிடத்தில்" என்பதற்குப் பதிலாக "அதற்கு ஆரூடத்தில்" என்று வாசிக்கவும்.
52	இங்கு சூரியன் துலாத்திலிருக்கின்ருர்.
53	இங்கு சுக்கிரன் சிம்மத்திலும் குஜன் மகரத்திலு மிருக்கின்ருர்.
54	இங்கு குருவும் புதனும் விருச்சிகத்திலிருக்கின்ருர்கள்.
55	இங்கு கேது மீனத்திலிருக்கின்ருர்.
58	இங்கு நாலாம் பாவாதிபதியான சனி கடகத்திலிருக்கின்ருர்.
63	இங்கு சுக்கிரன் சிம்மத்திலிருக்கின்ருர்.
102	இங்கு ராஜ்ஜிய கிரகத்திலிருந்து என்பது ராஜ்ஜியஸ்தானமாகிய பத்தாமிடமாகும்.
128	"ராகு தெசையில் தாய்ப்பீடையும் குரு திசையின் கடைசியில் மரணமும் உண்டாகும்" என்பதை எடுத்து விடவும்.
143	"ஐந்தில் சந்திரனிருந்து லக்கினத்திற் கிரண்டாமிடத்திலிருக்கும் செவ்வாயால் சந்திரன் பார்க்கப்பட்டால்" என்பதற்குப்பதிலாக "ஏழில் சந்திரன் செவ்வாயுட னிருந்தால்" என்று வாசிக்கவும்.

அயிட்டம் நெம்பர் விவரம்.

144 இந்த அயிட்டத்தைப் பூராகவும் எடுத்து விடவும்.

145 "பாவாதி குருவால்,, என்பதற்குப் பதிலாக "பாவாதிபதி யாகிய குருவால்" என்று வாசிக்கவும். "லக்கினத்திற்கு ஆறிலும் குருவுக்கு ஆறிலும் சந்திரனு மிருந்தால்" என்ப தற்குப்பதிலாகத் "தனஸ்தானத்திற்கு ஆரூடத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதி பதினொன்றிலிருந்தால்" என்று வாசிக்கவும்.

தனுசு லக்கின ஜாதகம் (பக்கம் 338 முதல் 388 வரையிலும்)

18 இங்கு ஒன்பதாம்பாவாதிபனும் புதனும் விருச்சிகத்தி லிருக்கின்றார்கள்.

19, 20,23 இங்கு குரு மீனத்திலிருக்கின்றார்.

24 இங்கு சனி விருச்சிகத்திலிருக்கின்றார்.

26 இங்கு கேது நான்காம் பாவத்திலிருக்கின்றார்.

46 இங்கு சந்திரன் கடகத்திலும் சுக்கிரன் மீனத்திலு மிருக் கின்றார்கள்.

47 "கூடி பூமிஸ்தானத்தை" என்பதற்குப்பதிலாகக "கூடி ஜெனன காலத்தில் இருக்கக் குரு பூமிஸ்தானத்தை" என்று வாசிக்கவும். பூமிஸ்தானம் என்பது நான்காம் பாவ மாகும்.

49 இங்கு குரு கும்பத்திலிருக்கின்றார்.

53 "புதன் எட்டாம் பாவத்தில் இருக்கச் சூரியனுடன் கேது கூடி" என்பதற்குப் பதிலாக "புதன் எட்டாம் பாவத்தில் சூரியன் கேதுவுடன்" என்று வாசிக்கவும். "சந்திரன் காதாம்சாவஸ்தையிலிருந்தால்" என்பதற்குப் பதிலாகச் சந்திரன் கும்பத்தில் காதாம்சாவஸ்தையி லிருந்தால்" என்று வாசிக்கவும். "காதாம்சாவஸ்தை" என்பது நாடி அம்சங்களில் ஒன்றாகிய காதாம்சத்தில் இருத்தல் என்று அர்த்தம்.

55 "புதனுடன் கூடி," என்பதைப் "புதனுடன் கூடி யிருக்க" என்றும், "பூர்ணபலத்துடன் கூடி" என்பதைப் "பூர்ணபலத்துடன் கூடியிருக்க" என்றும் வாசிக்கவும்.

அயிட்டம் }
நெம்பர். }

விவரம்.

92 இங்கு லக்கினபாவாதிபதியும் எட்டாம் பாவாதிபதியும் பத்தாமிடத்திலிருக்கின்றார்கள்.

99 "இரண்டாம்திசை செவ்வாய் திசையாகி" என்பதை எடுத்துவிடவும். இங்கு ஏழாம் பாவாதிபன் ஜென்ம காலத்தில் லக்கினத்தில் இருக்கின்றார். நவாம்சச் சக்கிரத்தில் எந்த ராசியில் ஏழாம் பாவாதிபன் இருக்கின்றாரோ அந்த ராசியில் கோட்சாரத்தில் சனி வரும்போது விவாகமுண்டாகும் என்று தாத்பரியம்.

111 "இவர்கள் அதிகமாக இருந்தாலும்" என்பதற்குப்பதிலாக "இவர்களுக்குமேல் புத்திர புத்திரிகள்" என்று வாசிக்கவும்.

112 "ஏழாம் பாவத்துக்குடைய புதன் லக்கின கேந்திரத்தில் இருந்து லக்கினத்தைச்" ஏன்பதற்குப் பதிலாக "தார ஆரூடாதிபதி கேந்திரத்திலிருந்து தார ஆரூடம்" என்று வாசிக்கவும். "ஆரூடம்" என்பதை நிர்ணயிக்கும் மார்க்கம்" கடின பதங்களின் விளக்கம் என்பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

138 பத்தாம் பாவாதிபதியும் ஏழாம் பாவாதிபதியும் ஒரே கிரகமாகிய புதனே அல்லாமல் பாவச்சக்கிரத்தில் வெவ்வேறு கிரகமாகவும் வரக்கூடும், ஆகையால் பத்தாம் பாவதிபதி ஏழாம் பாவாதிபதியுடன் கூடி என்று சொல்லி இருக்கின்றது.

139 " " "

167 "கேந்திரத்திலிருந்தாலும் ஜென்ம லக்கினம் தனுசு (க்ஷிதி சாம்சம்) ஆகி" என்பதற்குப் பதிலாக "கேந்திரத்தில் இருந்து" என்று வாசிக்கவும். "பலவானு யிருந்தாலும்" என்பதற்குப் பதிலாக "பலவானுயிருந்தால் என்று வாசிக்கவும்.

171 "மாதுர் ஷஷ்டியாம்சத்திலும் சுக்கிராம்சத்தில்" என்பதற்குப் பதிலாக "மாதுர்ய ஷஷ்டியாம்சத்திலிருந்து சுக்கிராம்சத்திலுள்ள" என்று வாசிக்கவும். மாதுர்ய ஷஷ்டியாம்சம் என்பது அமிர்தாம்சம் என்று வைத்துக்கொள்ளவும்.

அயிட்டம் நெம்பர்.	விவரம்.
192	இங்கு குரு லக்கினத்திலிருக்கின்றார். ஒன்பதாம் வயதில் மனஸ்தாபமு மடைவான் என்பது ஜாதகன் அல்லாமல் ஜாதகனுடைய தகப்பன் மனஸ்தாபமு மடைவான் என்பது.
193	இங்கு குரு லக்கினத்திலிருக்கின்றார். "பத்தாம் வயதில் உத்தியோகமும்" என்பதற்குப் பதிலாகப் "பத்தாம் வயதில் ஜாதகனுடைய தகப்பன் உத்தியோகமும் என்று வாசிக்கவும்.
196	"கூடிய வாருணம்சத்தில்" என்பதற்குப் பதிலாகக் "கூடி குரு வாருணம்சத்திலிருக்க" என்று வாசிக்கவும்.
200	இங்கு சூரியனும் செவ்வாயும் ரிஷபத்திலிருக்கின்றார்கள். "வாருணம்சத்தில்" என்பதற்குப் பதிலாகக் "குரு வாருணம்சத்தில் இருக்க" என்று வாசிக்கவும். இங்கு குரு லக்கினத்திலிருக்கின்றார்.
203	"சூரியன் விருச்சிகத்தில் குமாராம்சத்தில் இருக்கும் கால ஜாதகத்தில்" என்பதற்குப் பதிலாக "சூரியன் ரிஷபத்தில் குமாராம்சத்தில் இருந்து காலன் என்னும் சனி விருச்சிகத்திலிருக்க" என்று வாசிக்கவும்.
206	இங்கு ஐந்தாம் பாவாதிபன், சூரியன், புதன் இவர்கள் மூவரும் கூடி ரிஷபத்திலிருக்கின்றார்கள். "வாருணம்சத்தில் ஜெனித்த ஜாதகன்," என்பதற்குப் பதிலாகக் "குரு வாருணம்சத்திலிருக்க ஜெனித்த ஜாதகன் என்று வாசிக்கவும்.
207	"வாருணம்ச ஜாதகனுக்கு" என்பதற்குப் பதிலாக "வாருணம்சத்தில் குரு இருக்கும் ஜாதகனுக்கு" என்று வாசிக்கவும்.
208	இங்கு சூரு தனுசில் இருக்கின்றார்.
215, 219	"ஸாகாதாம்சம்" என்பதை "காதாம்சம்" என்றுமாற்றவும்.
225	"எண்பத்தோருவது வயதில்" என்பதற்குப் பதிலாக "கேது தெசை நடக்குங்காலத்தில் பெரும்பாலும்" என்று வாசிக்கவும்.

அயிட்டம் நெம்பர். | விவரம்.

233 இங்கு சுக்கிரனும் கேதுவும் சிம்மத்திலிருக்கின்றார்கள்.

242 "இருநூறு தனமுடையவன்" என்பது இருநூறு ரூபாய் சம்பாதிப்பான் என்று அறியவும்.

மகர லக்கின ஜாதகம் (பக்கம் 389 முதல் 431 வரையிலும்)

7 இங்கு சந்திரன் விருச்சிகத்திலிருக்கின்றார். மிருதாவஸ்தை என்பது ஷஷ்டியம்சத்திலுள்ள மிருதாம்சம்.

9 "ஆகிகுரு" என்பதற்க்குப்பதிலாக" ஆகி சனி பத்திலிருந்து குரு என்று வாசிக்கவும்.

17, 19 இங்கு சனி கும்பத்திலிருக்கின்றார்.

22 இங்கு ஒன்பதாம் பாவாதிபன் மகரத்திலிருக்கின்றார். இராகுவைச் சந்திரன் பார்க்கின்றார்.

23 அந்தப்பாவாதிபன் என்பது லக்கின பாவாதிபதியாகிய சனி.

24 ஞானவஸ்தையில் சுக்கிரனுடன்" என்பதற்க்குப்பதிலாக "ஜாராவஸ்தையில் சனியுடன்" என்று வாசிக்கவும்.

26 "குஜன் தனுசுக்கு ஒன்பதாமிடராசியில் கும்பநவாம்சையில் என்பதற்க்குப்பதிலாகக் "குஜன் கும்பராசியில்" என்று வாசிக்கவும்.

28 "சனி ராசியில் மீனத்திலும்" என்பதற்க்குப்பதிலாக "சனி மீனத்திற்க்கு ஆரூடத்திலிருந்து" என்று வாசிக்கவும்.

29 இங்கு குஜனும் சனியும் கும்பத்திலிருக்கின்றார்கள்.

31 இங்கு சனி கும்பத்திலிருக்கின்றார்.

32 இங்கு குஜனும் சனியும் கும்பத்திலிருக்கின்றார்கள்.

33 இங்கு குஜனும் சனியும் கும்பத்திலிருக்கின்றார்கள். "இரு அம்மான்களில் ஒருவன்" என்பதற்க்குப்பதிலாக "இரு சித்தப்பன்மார்களில் ஒருவன்" என்று வாசிக்கவும்.

34 இங்கு சூரியன் மகரத்திலிருக்கின்றார்.

35 இங்கு பாவச்சக்கிர ரீதியாய் ஐந்தாம் பாவாதிபதியும் பத்தாம் பாவாதிபதியும் ஒரே கிரகமாகிய சுக்கிரனுமல்லாமல் வெவ்வேரு கிரகமாகவும் வரக்கூடும்.

அயிட்டம் நெம்பர். } விவரம்.

36 இங்கு ராசிச்சக்கிரத்தில் சந்திரனும் கேதுவும் மூன்றாம்பாவத்திலிருக்கின்றார்கள்.

37 இங்கு சனி கும்பத்திலிருக்கின்றார்.

39 இங்கு சனியும் குஜனும் கும்பத்திலிருக்கின்றார்கள்.

40, 41, 42, 46 இங்கு சனி கும்பத்திலிருக்கின்றார்.

56 சந்திர ராரூடம் என்பது சந்திரனிருக்கும் ராசிக்கு ஆரூடம் என்று அர்த்தம்.

74 இங்கு சுக்கிரன் நீச்சாம்சத்திலிருப்பதால் சுக்கிரன் சுயக்ஷேத்திரமாகிய ரிஷபத்தில் ஒன்பதாவது அம்சத்தில் இருக்கவேணுமே தவிர சுயக்ஷேத்திரமாகிய துலாத்தில்கூட இருக்கமுடியாது,

81 "ஜென்மலக்கினம் மகரம் (காலாம்சம்) ஆகி" என்பதை எடுத்துவிட்டு, 80-வது 81-வது அயிட்டங்களை ஒன்றாய்ச்சேர்த்து வாசிக்கவும். அதாவது 81-வது அயிட்டத்தை 80–வது அயிட்டத்தின் தொடர்ச்சியாகப்பாவிக்கவும்.

123 இங்கு குரு ரிஷபத்திலிருக்கின்றார்.

124 இங்கு சனி கன்னியிலிருக்கின்றார்.

142 இங்கு ஐந்தாம் பாவாதிபதி, சூரியன், புதன் இவர்கள் மூவரும் லக்கினத்திலிருக்கின்றார்கள்.

144 இங்கு எட்டாம் பாவாதிபதியாகி சூரியன் மகரத்திலிருக்கின்றார். ஐந்தாவது திசாநாதனாகிய சந்திரன் விருச்சிகத்திலிருக்கின்றார். ஆறாந்தசாதிபதியாகிய செவ்வாய் ரிஷபராசியிலிருக்கின்றார். ஏழாந்தசாதிபதியாகிய ராகு மேஷத்திலிருக்கின்றார்.

150 இங்கு சனி மிதுனத்திலும் சந்திரன் மீனத்திலுமிருக்கின்றார்கள்.

152 இங்கு சனியுஞ் செவ்வாயும் மிதுனத்திலிருக்கின்றார்கள்.

153 இங்கு குருவுஞ் சுக்கிரனும் ரிஷபத்திலிருக்கின்றார்கள்.

156, 157 இங்கு செவ்வாயுஞ் சனியும் மிதுனத்திலிருக்கின்றார்கள்.

159 "ஜென்மலக்கினம் மகரம் (பங்கஜாம்சம்) ஆகி" என்பதை எடுத்து விட்டு மீதியை 158-வது அயிட்டத்துடன்

அயிட்டம் } விவரம்.
நெம்பர் }

சேர்த்து வாசிக்கவும். அதாவது 158-வது 159-வது அயிட்டங்களை ஒரே அயிட்டமாக பாவிக்கவும்-

160 இங்கு ஐந்தாம் பாவாதிபதியும் குருவும் ரிஷபத்திலிருக்கின்றூர்கள்.

162 இங்கு குருவுஞ் சுக்கிரனும் ரிஷபத்திலிருக்கின்றூர்கள்.

169 சனியும் சுக்கிரனும் எட்டாம் பாவத்திலிருக்கின்றூர்கள்.

173 இங்கு எட்டாம் பாவாதிபனும் புதனும் எட்டாம்பாவத்திலிருக்கின்றூர்கள்.

175 ஒன்பதாம் பாவாதிபதியும் சூரியனும் எட்டில் இருக்கின்றூர்கள்.

கும்ப லக்கின ஜாதகம் (பக்கம் 432 முதல் 479 வரையிலும்.)

27 ரேகாயோகம் என்பது தரித்திரயோகம்.

40 இங்கு விரையாம்சம் என்பது லக்கினத்திற்குப் பன்னிரண்டாவது அம்சமாகிய மகராம்சம் ஆகும்.

109 "மாற்ருந்தாயின் சகோதரன் ஸ்தானத்திற்கு ஐந்தாம் பாவாதிபன் ஐந்தாம் பாவத்தில் ரிஷபாம்சத்தில்" என்பதற்குப் பதிலாக "மாற்ருந்தாய் சகோதரன் (அதாவது பேதப்பிராதா) ஸ்தானத்திற்கு ஐந்தாம் பாவாதிபன் லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் மிதுனத்தில் ரிஷபாம்சத்திலிருந்தால்" என்று படிக்கவும். மாற்ருந்தாய் சகோதரன் (அதாவது பேதப்பிராதாவின்) ஸ்தானம் என்பது பதிஞேராம் பாவம் ஆகும். மாற்ருந்தாயின் ஸ்தானம் என்பது ஏழாம் பாவமாகும். மாற்ருந்தாய் சகோதரன் ஸ்தானத்திற்கு ஐந்தாம் பாவம் என்பது லக்கினத்திற்கு மூன்ரும் பாவம் ஆகும்.

115, 116 இங்கு சந்திரன் மீனத்திலிருக்கின்றூர்.

117 "பிறந்தவன் ஸ்தானுதிபன் கும்பாம்சத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டால்" என்பதற்குப்பதிலாக "பிறந்தவன் ஸ்தானத்தின் ஆரூடாதிபன் கும்பாம்சத்திலிருந்து சனியுடன் கூடியிருந்தால்" என்று வாசிக்கவும். மாற்ருந்தாய்க்குப் பிறந்தவன் ஸ்தானம் என்பது பதிஞேராம் பாவமாகும்.

அயிட்டம் நெம்பர்	விவரம்.
118	இங்கு சூரியன் சிம்மத்திலிருக்கின்றார்.
119	இங்கு சந்திரன் மீனத்திலிருக்கின்றார்.
120	இங்கு குரு விருச்சிகத்திலிருக்கின்றார்.
121	"குரு புதன் அம்சத்தில் தன் உச்சஸ்தானமாகிய கடகத்திலும் ராசியில்" என்பதற்க்குப்பதிலாக "குரு புதனுடைய அம்சத்திலிருந்து புதன் தன் உச்சஸ்தானமாகிய கன்னியிலும் அம்சையில்" என்று வாசிக்கவும்.
122	இங்கு சூரியன் சிம்மத்திலிருக்கின்றார்.
123	இங்கு குரு விருச்சிகத்திலிருக்கின்றார். "ஏழாம்அம்சத்திலிருந்தால்" என்பதற்குப் பதிலாக "ஏழாம்பாவ அம்சத்திலிருந்தால்" என்று வாசிக்கவும்.
124	இங்கு ஏழாம்பாவாதிபன் சிம்மத்திலிருக்கின்றார்.
125	மாற்றுந்தாய்மகன் ஸ்தானத்திற்குப் பஞ்சமம் என்பது லக்கினத்திற்கு மூன்றாம்பாவம் ஆகும். ஆகையால் இந்த மூன்றாம்பாவத்தின் ஆரூடத்தில் கேதுவும் சூரியனும் இருக்கவேண்டும் என்று அர்த்தம்.
126	"ஆகி ஒன்பதாம் பாவாதிபனான சுக்கிரன் நாலாம்பாவாத்திலிருந்து ஆறும்பாவத்தில் சனி இருந்தால்" என்பதற்க்குப் பதிலாக "ஆகி நான்கு ஒன்பதாம் பாவாதிபனான சுக்கிரன் ஆறும்பாவத்தில் சனியுடன் இருந்தால்" என்று வாசிக்கவும்.
129	இதைப்பூராகவும் எடுத்துவிடவும்.
130	இங்கு குரு விருச்சிகத்திலிருக்கின்றார்.
157	இங்கு சுக்கிரன் தனுசில் இருக்கின்றார்,
169	"இங்கு பன்னிரண்டாம் அம்சத்திலிருந்தால்" என்பது அம்சாசக்கிரத்தில் பன்னிரண்டாம் ராசியாகிய மகாராசியிலிருத்தல் என்பதாம்.
174	இங்கு குஜன் விருச்சிகத்திலிருக்கின்றார்.
177	இங்கு சந்திரன் எட்டாமிடத்திலிருக்கின்றார்.
180	இங்கு சந்திரன் எட்டாமிடத்திலிருக்கின்றார்.
182	அம்மான் ஸ்தானம் என்பது ஆறும்பாவம் ஆகும். இங்கு இரண்டாம் திசை என்பது ஜாதகனுக்கு இரண்டாம் திசை ஆகும்.
183	இங்கு குஜன் விருச்சிகத்திலிருக்கின்றார். மாமனார் ஸ்தானம் என்பது மூன்றும் பாவமாகும். அதாவது களத்திரத்

அயிட்டம் நெம்பர். } விவரம்.

திற்குப் பிதுர்ஸ்தானமாகிய அதாவது ஏழுக்கு ஒன்பதாம் பாவமாகிய மூன்ரும் பாவமாகும்.

221 இங்கு சூரியன் ரிஷபத்திலிருக்கின்ருர்

222, 223 இங்கு சுக்கிரன் மிதுனத்திலிருக்கிருர்.

224 ,, ,,

225 இதில் "ஜென்மலக்கினம் கும்பம் (நிர்மலாம்சம்) ஆகி" என்பதை எடுத்து விடவும். மீதியை 224-வது அயிட்டத்துடன் சேர்த்து வாசிக்கவும். அதாவது 224-வது 225-வது அயிட்டங்களை ஒரே அயிட்டமாகப் பாவிக்கவும்.

236 சுக்கிரன் நவாம்சச் சுக்கிரத்தில் மீனத்திலும் அல்லது இராசிச்சக்கிரத்தில் தன் ராசியில் சுப நவாம்சத்திலும் இருக்கவேண்டும் என்று அர்த்தம். [கின்ருர்.

241 இங்கு சூரியன் சுகஸ்தானமாகிய நான்காம் பாவத்திலிருக்

242 இங்கு சூரியன் ரிஷபத்திலிருக்கின்ருர். [கின்ருர்கள்.

243 இங்கு ஐந்தாம் பாவாதிபனும் கேதுவும் மேஷத்திலிருக்

245 இங்கு நான்காம் பாவாதிபன் மிதுனத்திலிருக்கின்ருர்.

247 இங்கு சூரியன் ரிஷபத்திலிருக்கின்ருர்.

248 இங்கு சுக்கிரன் தனுசில் இருக்கின்ருர்.

249 இங்கு நான்காம் பாவாதிபன் தனுசிலிருக்கின்ருர்.

253 இங்கு சுக்கிரன் தனுசிலிருக்கின்ருர்.

மீன லக்கின ஜாதகம் (பக்கம் 480 முதல் 520 வரையிலும்.)

88 இங்கு குஜன் கன்னியிலிருக்கின்ருர். ஒன்பதாம் பாவ அம்சம் என்பது குஜன் இருக்கும் ராசியில் "ஒன்பதாவது நவாம்சம் ஆகும்" அதாவது கன்னியா நவாம்சத்தில் கன்னியில் குஜன் இருக்கின்ருர்.

149 ஆகிபுதன் புத்திர ஸ்தானத்திலிருந்தாலும் அல்லது புத்திரஸ்தானத்திற்கு ஏழிலிருந்தாலும் என்பதற்குப் பதிலாக "ஆகி புத்திரஸ்தானத்திற்கு ஆரூடத்தில் புதன் இருந்து" என்று வாசிக்கவும். "அதிகம் பிறந்தாலும் லக்கினத்தில் சந்திரனுள்ள ஜாதகனுக்கு என்னபலன் சொல்லியிருக்கிறதோ அதே பலன் தான் உண்டாகும்" என்பதற்குப் பதிலாக "அதிகம் பிறந்தாலும் இறந்துவிடும். சந்திர லக்கின ரீதியாய்ப் பார்க்கும்போதுகூட சந்திரலக்கிலனத்திற்கு மேற்படி கிரக அமைப்பு இருந்தால் லக்கின ரீதியாய்ப் பார்க்கும்போது என்னபலன் சொல்லி இருக்கிறதோஅதேபலன்தான் உண்டாகும்" என்று வாசிக்வும்.

மூன்ரும் பாகம் முற்றிற்று.

C. G. ராஜன் **B. A.**, *(MATHEMATICS)*, அவர்களால்
செய்யப்பட்ட ஜோதிட புத்தகங்கள் முதலியன.

வெளியாகி விட்டது ! (தமிழில்) *வெளியாகி விட்டது !!*

6300 வருஷ ஸ்புடம்.

நவக்கிரக ஸ்புட கணனம்

இராஜ ஜோதிட கணிதம்

என்னும்

சித்தாந்த இராஜ சிரோன்மணி

(கிரக கரணம்)

C. G. ராஜன் B. A. அவர்களால் செய்யப்பட்டது.

இந்தப் புத்தகத்தின் உதவியால் கலியுகம் பிறப்பதற்கு முந்தி 98-வது வருஷம் முதல் கலியுகம் 6202-வரைக்கும் உள்ள காலங்களில் எந்த காலத்திற்காகிலும் கிரகஸ்புடங்கள் சுலபமாகவும், துல்லிபமாகவும் கணக்கலாம். கிரக ஸ்புடங்களைக் கணிக்க அனேக வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கணித மார்க்கங்களை விளக்கும் பொருட்டு ஒவ்வொரு கிரகஸ்புடம் செய்யும் வழியை உதாரணத்தால் விளக்கிக் காட்டியிருக்கிறது. கணிதத்தைச் சுலபமாக்க வேண்டிய மார்க்கங்களையும் அனுஷ்டித்திருக்கிறது. நமது பழைய வானசாஸ்திர மார்க்கங்களால் துல்லிபமான ஸ்புடம் அடைய முடியாமல் இருப்பதால் துல்லிபமான ஸ்புடங்கள் அடய வேண்டியதற்காகச் செய்ய வேண்டிய மார்க்கங்களையும் இந்த புஸ்தகத்தில் அனுஷ்டித்து இருக்கிறது. மேலே சொல்லிய கிரகஸ்புட வாக்கியங்களுமன்றி அடியிற் கண்ட விஷயங்களும் இந்த புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன :— அவை (1) நட்சத்திர ஹோரா மணி 8-வாக்கியங்களுடன், (2) கிரகணம் சம்பவிக்குமா இல்லையா என்பதைத் தீர்மானஞ் செய்தல், (3) தற்காலத்தில் அனுஷ்டானத்தில் உள்ள பலவிதமான மணி மிணிட்டுகள், (4) அயனும்சம், (5) லகுஜா கணிதம், (6) அங்க கணிதம், (7) தசாம்ச கணிதம், (8) கிராந்தி கணிதம் முதலிய கணிதங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது ஆனந்த போதினி சுத்த திருக் கணித பஞ்சாங்க கணிதரான **C. G.** ராஜன் **B. A.** அவர்களால் செய்யப்பட்டது. 564 பக்கங்கள் அடங்கியது. ராயல் சயிசில் கலிகோ பைண்டு செய்தது. அழகிய கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. கொஞ்சம் பிரதிகளே தயாராகி இருக்கின்றன.

தமிழில் விலை ரூ. 5 0 0. இங்கிலீஷில் விலை ரூ. 5 0 0.

கிடைக்குமிடம்:—C. விஸ்வநாதம் அண்டு கோ.,
நெ. 7, வெங்கடேச மேஸ்திரி தெருவு,
சௌக்கார்பேட்டை போஸ்ட், மதறாஸ்.

ஜாதக கணிதம்

என்னும்

ஜோதிட கிரக சட்பலம் அயுள் கணிதம்

(இரண்டாம் பதிப்பு)

இதில் தச வர்க்கம், கிரக சட்பலம், கிரகங்களின் வலிவின் தாரதம்மியம், பாவச்சக்கிரம், துவாதச பாவ பலம், உச்சபலம், திக்குப் பலம், பட்ச பலம், கிரக யுத்தபலம், ஹோராபலம், அயனபலம், கிரக திருஷ்டி பலம் முதலிய 24-வித பலங்கள் ஆயுள், இவைகளை வெகு சுலபமாகக் கணிக்க அநேக வாக்கியங்களும் (Tables) குளிகாதி ஐவர் ஸ்புட கணனமும், பிராண ஸ்புடம், தேக ஸ்புடம், மிருத்யுஸ்புடம், உதாரணங்களும் கொடுக்கப்பட் டிருக்கின்றன. கிரகங்களின் வலிவை அனுசரித்து பலாபலன் அறிவதற்கும், ஆயுள் கணிதத்தில் அரணம் செய்வதற்கும், பிருஹத்ஜாதகம், ஸ்ரீபதி ஜாதக கர்மபத்ததி, கேசவ ஜாதக கர்மபத்ததி, பல தீபிகை, இவைகளைச் சுலபமாயும் நன்றாயும் அறிவதற்கும் இப்புத்தகம் மிகவும், உபயோகமாகும். இதை யாவரும் பிறருடைய உதவியின்றித் தாமே படித்துத்தெரிந்து ... ளலாம். இது கெவர்ன்மென்ட்டு டெக்ஸ்ட்டு புக் கமிட்டிய... (Text book Committee) லைப்ரரி (Library உபயோகத்திற்காக ... காரஞ் செய்யப்பட்டது. இது ஆனந்த போதினி சுத்த திருக் க... பஞ்சாங்க கணிதரும், பிருஹத்ஜாதகத்தின் பதிப்பாசிரியரும், ந... கஸ்புட கணனமாகிய இராஜ ஜோதிட கணிதம், ஜாதக க... இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயம் என்ற ... தகத்தின் ஆசிரியருமாகிய, **C. G.** ராஜன் **B. A.**, (*Mathema*... அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்...

318-பக்கம் உடையது. தபால் செலவு பிரத்தியேகம்.

இதன் விலை ரூ. 2—...

ஜாதக கணிதம்

இரண்டாம் பாகம்

என்னும்

ஜாதகப் பலாபலன்கள் நிர்ணயம்.

இதில் கிரக சட்பலம், துவாதச பாவபலம், ஜாதக கணித... முதல் பாகத்தின் முன்னுரையில் குறித்துள்ள உச்சபலம், தி... பலம், பட்சபலம், கிரகயுத்தபலம், ஹோராபலம், அயனபலம்... திருஷ்டிப்பலம் முதலிய 24-வித பலங்கள் முதலிய கிரக, பாவ ... களை அநுசரித்துப் பலன்கள் சொல்லப்பட் டிருக்கின்றன. ...

கிடைக்குமிடம்:—**C.** விஸ்வநாதம் அண்டு கோ.,

நெ. 7, வெங்கடேச மேஸ்திரி தெருவு,

சௌக்கார்பேட்டை போஸ்ட், மதருஸ்.

ஜாதக கணிதம் பிரகாரம் கிரகசட்பலம், பாவபலம் முதலியவைகளைக் கணிக்கச் சந்தர்ப்பப்படாதபோது சாதாரண வழிபிரகாரம் கிரகங்களின் பலத்தை யூகித்துப் பலாபலன் நிர்ணயஞ் செய்யும் மார்கத்தையும் கொடுத்திருக்கிறது. மிகவும் புராதீனமான சிறந்த கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விஷயங்களில் மிகவும் அவசியமாயும் சிறந்ததாயும் உள்ள விஷயங்களையும் விதிகளையும் இப்புத்தகத்தில் கொடுத்திருக்கின்றது. சில நாடிக் கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளையும் இந்தப் புத்தகத்தில் கொடுத்திருக்கின்றது. இது ஜாதகப் பலாபலன் சொல்லுவதற்கு மிகவும் உபயோகமானது. இது ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும், நவக்கிரக ஸ்புடகணனமாகிய இராஜ ஜோதிட கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியரும், பிருஹத்ஜாதகத்தின் பதிப்பாசிரியருமாகிய C. G. ராஜன், B. A. (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 416 பக்கம் உடையது.

இதன் விலை ரூ. 2—12—0.

தபால் செலவு அணா 7-0-0 பிரத்தியேகமானது.

ஜாதக சிரோன்மணி

என்னும் வராஹமிஹிரருடைய

பிருஹத்ஜாதகம்

இது தமிழில் சுலபமான வசனநடையில் எழுதப்பட்டது. இதில் விசேஷ வியாக்கியானங்களும் கஷ்டமான விடங்களில் உதாரணங்களும், வாக்கியங்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆயுர்தாய அத்தியாயமாகிய ஏழாவது அத்தியாயம் மிகவும் தெளிவாக உதாரணங்களுடன் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆயுளைச் சுலபமாகக் கிரகங்களின் வலிவை அனுசரித்து நிர்ணயிக்கும் விதி பிரத்தியேகமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இராஜ யோகம், கிரக யோகம் நாபச யோகம், சங்கிய யோகம் முதலிய போக அத்தியாயங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் இதர கிரந்தங்களிலிருந்து விஷயங்கள் எடுத்து தேவையானவிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது கெவர்ன்மென்ட்டு டெக்ஸ்ட்டு புக் கமிட்டியாரால் (Text Book Committe) லைப்பரரி (Library) உபயோகத்திற்காக அங்கீகாரஞ் செய்யப்பட்டது. இது ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும், ஜாதக கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியரும், நவக்கிரக ஸ்புட கணணமாகிய இராஜ ஜோதிட கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியருமாகிய, C. G. ராஜன் B. A. (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 318-பக்கம் உடையது. தபால் செலவு பிரத்தியேகமானது.

இதன் விலை ரூ. 2—0—0.

கிடைக்குமிடம்:—C. விஸ்வநாதம் அண்டு கோ.,
நெ. 7, வெங்கடேச மேஸ்திரி தெரு,
சௌகார்பேட்டைபோஸ்ட், மதறாஸ்.

தெசாபுத்தி சிந்தாமணி

இப்புத்தகத்தில் பல அருமையான ஜோதிட கிரந்தங்களிலிருந்து சாராம்சத்தை எடுத்து ஒன்ருகச் சேர்த்து ஒழுங்காக அமைத்து எழுதி இருக்கின்றது. ஜாதக பலா பலன்களைச் சொல்ல வேண்டுமாணல் அப்பலன்கள் நடைபெரும் காலம் முக்கியமானது. இக்காலத்தை தெசா புக்தி அந்திரம் என்ற கிரக பலன்கள் நடக்கும் காலத்தைக் குறிக்கின்ற ஜோதிடப் புத்தகங்களால் அறியவேண்டுமே ஒழிய வேறே வழி ஒன்றும் கிடையாது. இப்படிப்பட்ட புத்தகங்களில் இப்புத்தகம் மிகவும் அருமையானது. இப்புத்தகம் பலாபலனைச் சொல்லத் துணிகின்ற ஒவ்வொரு ஜோதிடரிடத்திலும் இருக்க வேண்டியது அவசியம். மற்றப் புத்தகங்களைப் போல் இராமல், இப்புத்தகத்தில் தெசா புக்தி பலன்களைக் கிரகங்கள் இராசியிலும், பாவச் சக்கிரத்திலும் இருக்கும் நிலையையும், அவைகளுடன் சம்மந்தப்பட்ட கிரகங்களையும், அவைகளைப் பார்க்குங் கிரகங்களையும் அநுசரித்து, விபரமாகவும், விஸ்தாரமாகவும் சொல்லி இருக்கின்றது. இது மிகவும் ஜோதிட அனுபோகமும், பயிற்சியுமுள்ள சேந்தமங்கலம். கோமடம். ஜோதிடர் ஸ்ரீனிவாச அய்யங்காரால், சில ஜோதிடர்களின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்டு, **C. G.** ராஜன் **B. A.** *(Mathematics)* அவர்களால் பார்வையிடப்பட்டது. அழகிய கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 212 பக்கம் உடையது. தபால் செலவு பிரத்தியேகமானது.

இதன் விலை ரூ. 1—8—0

ஸ்ரீ ராமஜெயம்
ஸ்ரீ ஷண்முக விலாஸ் ... சாலை,
M. S. வெங்கடசுப்ரமண்ய ஜோஸ்யர்.
மன்னார்குடி.

தெசாரிஷ்ட நிவாரணி

இதில் தெசாபுக்தி அந்திர காலங்களில் சம்பவிக்கும் வியாதி, கஷ்டம் முதலிய கெட்ட பலன்களை நிவர்த்திக்கச் செய்யவேண்டிய நவக்கிரக சாந்திகளின் விபரத்தை விஸ்தாரமாகச் சொல்லி இருக்கிறது. இது ஜோதிடர்களுக்கும், மற்றவர்களுக்கும் மிகவும் அவசியமானது. இது சேந்தமங்கலம். கோமடம். ஜோதிடர் ஸ்ரீனிவாச அய்யங்காரால், எழுதப்பட்டு **C. G.** ராஜன் **B. A.** *(Mathematics)* அவர்களால் பார்வையிடப்பட்டு, கிளேஸ் காயிதத்தில் அச்சிட்டிருக்கிறது.

86 பக்கம் உடையது, தபால் செலவு பிரத்தியேகமானது.

இதன் விலை ரூ. 0—6—0

கிடைக்குமிடம்:—C. விஸ்வநாதம் அண்டு கோ.,
நெ. 7. வெங்கடேச மேஸ்திரி தெருவு,
சௌகார்பேட்டை போஸ்ட், மதருஸ்.